அநாதிநம.

# தேம்.பாவணி

## முதற்காண்டம்:

வீரமாமுனிவர்

அருளிச்செய்த

இக்காப்பியம்

அவரதுகையெழுத்துப்பிரதிக்கொப்பப்
புதுவையிலெழுந்தருளியிருக்கும்
மகாகனம்பொருந்திய ஆண்டவரும்
அப்போஸ்தொலிக்குவிக்காரியுமாகிய
கிளெமேன்சு பொனாந்
துரிசிப்பாரென்றும்
நாமதேயங்கொண்டிருக்கிற
மேற்றிராணியாரவர்களநுமதியில்
உ. ரோமாபுரியினின்றுவந்த
உத்தாரத்தின்படியே

௲அ௱௫௰௧ம். ௵
புதுவையிற் சன்மவிராக்கினிமாதாகோயிலைச்சேர்ந்த
அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது.

கடவுள் - துணை

# இக்காப்பியத்தைப்

பிரசித்தப்படுத்தியவர்ரால்

# முகவுரை.

உயர்வானுலவுஞ் செஞ்சுடரோ னெங்கணுந்தன்றெண்
கதிர்வீசியாவர்க்கும்விளங்காநிற்க வதனைத்தெளிவித்துக்காட்
டுவதவசரமில்லாததுபோ லித்தேசமெங்கும்படர்ந் தெவ்வி
டத்து மத்தியந்தஞானவொளிவீசு மிவ்வுத்தமகாப்பியத்தை
ஸ்துதித்துப்பாராட்டவேண்டுவதில்லையே. இதுவேநிகராக்
கல்விப்புலமைமுதலியதிறங்களாற் கற்றுவல்லபுலவருண் ம
காபேர்பெற்றுவிளங்கிய வித்துவசிரோமணியாகிய வீரமா
முனிவர்க்கெய்த பெருங்கீர்த்திப்பிரபலியத்துக்கு முக்கிய
காரணமாயிற்று. தேனினும்முதினுமினிய விதன்பாக்கள்பு
லவர்முதலியாவர்க்கு மிக்கவின்பம்பயப்பதுமன்றி யவற்று
ட்புதைந்த விருத்தாந்தங்கள் மாறுவிருப்பும் வியப்புமாமே.
தேம்பாவணியில்விளக்கப்படுகின்ற பிரதானவர்த்தமான
ங்கள் பல்காப்பியங்களி லடங்கிடவற்றைப்போற் கட்டுக
தைகளாயிராமற் சத்தியவேதாகமங்களினின்றெடுத்த வுண்
மைநிறைந்தசரித்திரங்களென்பதுறுதி அவற்றிற்கடுத்த பற்
பலவரலாறுகள் ஆகிர்தவென்னுநகரத் ததிசயபுண்ணியங்க
ளால்விளங்கின மரியென்னுங்கன்னியாஸ்திரீக்குத் தேவமா
தாகாட்டியருளின காட்சிப்புத்தகத்தினின்று தாமெடுத்துக்
கொண்டதாக வீரமாமுனிவர் தங்காப்பியப்பாயிரத்திலறிவி
த்திருக்கின்றார்.

ஆயினுந்தாம் விவரிக்கின்றவர்த்தமானங்களை வாசாலபுலமை யணியலங்காரங்களால்வருணித்துச்சிறப்பித்த லெத்தேசங்களிலும் புலவர்கட்குத்தரவும் வழக்கமுமாமே. வீரமாமுனிவ ரித்தன்மைப்பட்ட வணியலங்காரங்களைத் தாமருளிச்செய்த காப்பியத்திற்பிரயோகித்தது சிறப்பன்றி யதிலடங்கிய வர்த்தமானங்களினுண்மைக்கு விரோதமன்று. இவ்வாறே பரமநாத னவதரிக்குப் புதுமைகாண வாசையினாற் சீக்கிரமாய்ச் சூரியன் கடலைவிட்டெழும்பக் கோபித்துத் தூண்டிய கடிவலமிழ்ந்திய தன் குதிரைகள்சினந்து தீப்பொறிகளைவிட்டா லென்னக்கீழ்த்திசை சிவந்ததென்று வீரமாமுனிவர் ௭ம். படலம் ௨௰ம் விருத்தத்தில் வரைந்துதந்த துருவகமொழியவேறல்ல. இதனைவாசித்துச்சூரியனுக்குத்தேருங் குதிரைகளுமுண்டென் றறிவீனர்நினைப்பாரொழிய நல்லறிவுடையோர் சூரியற்குத்தலைவனாகிய சம்மனசென்னும்வானோ னிப்புதுமையைக் காணக்கொண்ட பேராசையை யிவ்விதவுவமையிற் காப்பியனார்காட்டக்கருதினாரென் றுள்ளபடியுணர்வார்கள். அவ்வண்ணமேமற்றவுருவகங்களையுமுணரத்தகும்.

அஞ்ஞானிகளோவெனிற் றம் புலவரியற்றிய கதைகளையுமுவமையுருவகங்களையு முண்மையெனநம்பினதனா லஞ்ஞானவிருளளவின்றி மண்டிமொய்த்ததைக் காண்கின்றோம். மூர்த்தப்புலவர்பஞ்சபூத நவக்கிரகங்களையு மிவைமுதலியபடைப்புப்பொருட்களையும் வருணித்துப்பாராட்டுகையிலுருவகமாக வவற்றைவானோருருவமாய்ப் பாவித் தவற்றிற்குப் பொருந்தாத்தெய்வீகவிலக்ஷணங்களை நியாயமறச் சாட்டிப்போற்றினதனா லுயிரில்லாவஸ்துக்கள் மதியீனமனிதராற் றெய்வமாகவெண்ணவு மாராதிக்கவும்பட்டன.

மீளவுங் கவிஞர்ராசரையு மவர்கள்புத்திரர் மனைவிகள் வைப்பாட்டிகளையுஞ் செயவீரர்முதலியவர்களையுந் துதித்துவருகையி லவர்களை மட்டின்றியுயர்த்தித் தேவர்களாகப்பாராட்டி மனிதர்க்கில்லாத தெய்வவல்லமைமுதலிய பரமவரங்களுடையவர்களாகவருணித்து அவர்களைக்குறித் ததிசயமுள்ளகதைகளைக்கட்டினதனா லவர்களுமறிவீனர்களுக்குத் தேவர்களானார்கள். அதனாலல்லோ வித்தேசத்தில்முப்பத்துமுக்கோடி தேவர்களிருக்கிறதாக வெண்ணப்பட்டார்கள். அக்கட்டு

கதைகளிற் புத்திக்கொவ்வாப் பற்பலவிஷயங்கணிறைந்திரு
ப்பினு மனுஷரிடத்துச் சகிக்கரிய பாவாக்கிரம நடக்கைக
ளத்தேவர்களைக்குறித்து விவரிக்கப்படினு மவர்களுக்குள் ப
கை விரோதஞ் சண்டை யபசெயமுதலியகுறைகளுந் தெய்
வீகவிலக்ஷணகுணங்களுக்குப் பரிச்சேதம்பொருந்தா மற்ற
த்துர்க்குணங்களு மவர்கள்சரித்திரத்தில்விளங்கினும் பலரி
தெல்லாம் யோசியாம லத்தன்மைப்பட்ட தேவர்களை யிந்
நாளினு மாராதிக்கக்காண்கின்றோம்.

வீரமாமுனிவ ரவ்வகைப்பட்ட கேட்டுக்குரிய வக்கிரமவ
பத்தங்களெல்லா நீக்கிச் சிறந்தகவிகளில் மெய்யங்கடவுளைப்
புகழ்ந்து மனுஷரட்சணியத்துக்குச் சுதனாகியசர்வேசுர
னருளிச்செய்த மனுஷாவதாரத்தையு மெண்ணற்றவதிசயந
ன்மையுபகாரங்களையுங்காட்டி மெய்ம்மறையின் பிரதானவ
ர்த்தமானங்களைத்தெளிவிக்கின்றார். அவற்றைவருணிக்க வவர்
தம் புலமைத்திறத்தாற் பாவித்துக்கூட்டிவைத்த வதிசயவ
ரலாறுகள்முதலிய சிறப்பெல்லாஞ் சத்தியத்துக்கொத்துப்
பொருந்தினவொழிய வேறல்ல.

அவர் நூற்றிருபத்திரண்டுவருஷத்துக்குமுன் செய்துதந்
தவுத்தமகாப்பிய மிந்நாள்வரையி லச்சிற்பதியாதிருப்பினு
ம் பற்பலகைப்பிரதிகளா யித்தேசமெங்கும்பரம்பிற்று. ஆ
யினு மற்றைக்கையெழுத்துப்புத்தகங்களில் வழங்காநிற்பது
போ லவற்றிலும் பலபிழைபுகுந்ததனாலுஞ் சுத்தப்பிரதிகி
டைத்தலருமையாகவிருந்ததனாலு மநேகர்தேம்பாவணியெ
ப்போ தச்சிற்பதிப்பிக்கப்படுமோவென்று மவாவுற்றிருக்
கையி லவ்வரிய செந்தமிழ்சிறந்த திருக்காப்பியத்தைத் தக்க
படி யச்சிற்பதிப்பதி லுள்ளாகும் பிரயாசைக்குஞ் செல்லு
ம்பெருஞ்செலவுக்கு மியாவருமச்சமுற்றிருந்தார்கள். அவ்
வாறிருக்க நாஞ்சர்வேசுரனனுக்கிரகத்தைநம்பி யதற்குத்
துணிவுற்றோம். வீரமாமுனிவர் கையெழுத்துப்பிரதி (Mr.
Walter Elliot) வல்ட்டர் எலியாட் டென்னும் மேன்மை
பொருந்தியவுபகார சற்குணமுடைய துரையவர்களிடத்தி
ருந்ததையறிந்து நாங்கேட்டதின்பேரி லவர் மிக்கதாக்ஷி
ணியாய்த்தயைசெய் ததனை யச்சிற்பதிப்பிக்க விரவலாகவ
னுப்பினார்.

உ

# முகவுரை.

அப்பிரதி வீரமாமுனிவர் கையெழுத்தென்பதற்குண்டா
கிய பற்பலவத்தாட்சிகளல்லாதே யதினெழுத்துவிதமு மவ
ர்கிறுக்கி. வரிகின்றெழுதின பலகவிகளுமுனைகளு மாற்றின
வோர்படலப்பெயரும் எட்டிஞேரத்திற் சீமைப்பாஷை
யெழுத்தா லெழுதித்தந்த வேதாகமவுதாரணங்களு மிவை
முதலிய பலதிருட்டாந்தங்களு மதற்குறுதியாமே.

ஆனா லவர்நாளி லுயிர்மெய் நெடிலாகிய எகார ஒகாரவெ
ழுத்துக்களின்கொம்பு சுழிக்குமுறையு மெய்யெழுத்துக்க
ளையோர் புள்ளியாற்குறிக்குமுறையு மிவைமுதலியவெழுத்து
க்களின் விசேஷகுறிப்புகளும்வழங்காமையா லிவையெல்லா
மவர்கையெழுத்துப்பிரதியிற்கிடையாது. இவ்வுத்தமகாப்பி
யம்யாவர்க்கு மிகத்தெளிவு மெளிதுமாம்பொருட் டிக்கால
த்தச்சுப்பதிப்புப்புத்தகங்களில் வழங்காநின்றமுறையை யி
திலும் வழங்குவிக்கத்துணிந்தோம். அதனாற் சொன்மாற்ற
ம் பாட்டிசைமாற்றம்வாராதபடி மிகவெச்சரிக்கையாய்
அவ்வவச்சந்தத்துக்குரிய சீர்த்தன்மையு மெண்ணிக்கையும
ன்றி யர்த்தமு நிதானித்துக் கவிகள்யாவு மலகிட்டோம்.

மீளவு மிக்காப்பியத்துள்ள சந்தங்களெல்லாந் தடையி
ன்றி யாவருமெளிதிற்பாடும்பொருட் டிம்முகவுரைமுடிவி
லவற்றினட்டவணையைத்தருவோம். அதி லவ்வோர் ச
ந்தச்சீர்ப்பேரு மெண்ணிக்கையும் மிக்கதீர்க்கமுஞ் சுருக்க
முமாகக்காட்டுவோம். அதனா லவ்வவச்சந்தத்து விருத்தங்
களுக்குத்தக்கபேர் தானாய்விளங்கும். அஃதெவ்வாறெனில்
மூச்சீரடிநான்கு-வஞ்சிவிருத்தமென்றும், நாற்சீரடிநான்
கு-கலிவிருத்தமென்றும், ஐஞ்சீரடிநான்கு-நெடில்விருத்த
மென்றும், அறு-எழு-அல்லது எண்சீரடிநான்கு-ஆசிரிய
விருத்தமென்றுந்தெரியலாம். அப்படி அவ்வவ்வண்ணத்து
ச் சீர்த்தன்மையு மெண்ணிக்கையும் விருத்தப்பேருந் தெரி
யப்படுவதால் அவ்வவற்றிற்குப்பொருந்துமிராகமுமறியலா
ம். அவ்வட்டவணையில் விளங்குவதுபோற் சிலவிருத்தவரு
க்கங்களை வெவ்வேறுவிதமா யலகிடவும் பாடவுங்கூடும். அ
வற்றிற்குப் பொருந்திய பிரதானவிதங்களை யதிலேகுறிப்
போம்.

அத்தியந்தவின்பமு நல்லுணர்வும்பெறுவிக்கு மிக்காப்பிய மெளிதிற்கல்லாதவரும் வாசித்துணர்தற்பொருட்டு அ. ஆ. ரோக்கியசாமிபிள்ளை செய்த பதவுரையைப்பார்வையிட்டு முதல்நான்குபடலங்களுக்குக் கூட்டிவைத்தோம். அதைக்கொண்டு கவிகளின்பதங்களைப் பகுத்தறிதற்குப் பழகினபின்னர் யாவருஞ்செய்யுளோடு வீரமாமுனிவர்தந்தருளிய உரைவழியாக மற்றப்படலங்களைக்கண்டுபிடிக்கலாமெனக்கருதி யிப்பிரபந்தம் பெருகி மிகவிலையேறாதபடிக்கு யாவற்றிற்கும் பதவுரையிடா துவிடுத்தோம்.

அரியசெய்யுட்களுக்குச் சிலவிடத்துப் பலவர்த்தங்களும் பதவுரைகளும்பொருந்தலாமென் றியாவர்க்குந் தெரியுமே. அதனாலல்லவோ திருவள்ளுவர்குறளுக்கு நானாவிதவுரைகள் வெளிப்பட்டன. ஆதலாலிப்பிரபந்தத்துச் சிலவிடத்தில் வேறுபதவுரைபொருந்துமென் றியாதாமொருவர்க்குத்தோன்றுமேயாகில் அதிசயமல்ல. அப்படி பதவுரைவேறுவிதமாகத்தக்க சிலவிடங்களை நாமே யிக்காண்டத்தின்முடிவிற்குறிப்போம்.

## விருத்தங்களையலகிடற்கறியத்

### தக்கவிபரம்.

இயற்சீர் - வெண்சீர் - வஞ்சிச்சீர் - இம்மூவகைச்சீர் விசேஷமாய் விருத்தங்களில்வழங்கும். அவைகள் தத்தம்மீற்றசைகளாற் குறிக்கப்படுகிற ஐந்தினமாகவகுக்கப்படும். அவ்வினங்களையு மவற்றிலொவ்வொன்றைச்சேர்ந்த சீர்களையு மவைகள்கொண்ட அசைகளையு மிங்கேகாட்டுவோம்.

| | | | |
|---|---|---|---|
| மா | தேமா, | (நேர், நேர்,) | — —. |
| | புளிமா, | (நிரை, நேர்,) | ∪ ∪ — |
| விளம் | கருவிளம், | (நிரை, நிரை,) | ∪ ∪ ∪ ∪ |
| | கூவிளம், | (நேர், நிரை,) | — ∪ ∪ |

## விருத்த... விபரம்.

| | | | |
|---|---|---|---|
| காய் | தேமாங்காய், | (நேர், நேர், நேர்,) | — — — |
| | புளிமாங்காய், | (நிரை, நேர், நேர்,) | ∪ ∪ — — |
| | கருவிளங்காய், | (நிரை, நிரை, நேர்,) | ∪ ∪ ∪ ∪ — |
| | கூவிளங்காய், | (நேர், நிரை, நேர்,) | — ∪ ∪ — |
| மாங்கனி | தேமாங்கனி, | (நேர், நேர், நிரை,) | — — ∪ ∪ |
| | புளிமாங்கனி, | (நிரை, நேர், நிரை,) | ∪ ∪ — ∪ ∪ |
| விளங்கனி | கருவிளங்கனி, | (நிரை, நிரை, நிரை,) | ∪ ∪ ∪ ∪ ∪ ∪ |
| | கூவிளங்கனி, | (நேர், நிரை, நிரை,) | — ∪ ∪ ∪ ∪ |

அவ்வவச்சந்தத்து முதலடியி லெவ்வினத்துச்சீர்கள்வந்ததோ, அச்சீர்களெவ்வரிசையில்வந்ததோ வச்சந்தத்துச் சகலவிருத்தங்களி னடிகளிலு மவ்வினச்சீ ரவ்வரிசையில் வருவதேமுறை. ஆயினுஞ் சிலசந்தங்களிலோரினத்துச்சீர்கள் தம்முண்மாறிவருதலுண்டு. அஃதெவ்வாறெனி லோரடியிற்றேமாவந்தவிடத்து மற்றவடியிற்புளிமாவும், கூவிளம்வந்தவிடத்துக் கருவிளமும்வரும். தேமாங்காய்வந்தவிடத்துப் புளிமாங்காயும்-கருவிளங்காயும்- கூவிளங்காயும்வரலாம். அவ்விடங்களிற்சீரினத்துக் குறிப்பசைமாத்திரஞ் சந்தங்களினட்டவணையில்வைக்கப்படும். சிலசந்தங்களிலோவெனி லொரோதன்மைச்சீ ரெல்லாவடிகளிலும் ஒரோரிடத்து மாறாமல் வரும். அவ்விடத்து அச்சீரின்விசேஷப்பேர் முழுதுமட்டவணையில்வைத்திடப்படும்.

ஒற்றடுத்துவருகின்றகுறில் கவிக்குப்பொருந்தினபடி குறிலாகவு நேரசையாகவு மெண்ணப்படுகிறதுண்டு. குறில்தனித்துவரின் நேரசையாகும். குறிலிணைந்த நெடிலோவெனி லதனோடு நிரையசையாகும.

# சந்தங்களினட்டவணை.

| பக்கம், | விருத்தம். | பாயிரம். |
| --- | --- | --- |
| ௫ | ௧ | விளம், மா, தேமா, விளம், மா, தேமா. |

## ௧-வது. நாடடுப்படலம்.

| | | |
| --- | --- | --- |
| ௰௩ | ௧ | மா, கூவிளம், விளம், விளம், மா.<br>விளங்கனி, விளம், விளம், மா. |
| உ௧ | ௰௬ | மா, கூவிளம், மா, கூவிளம்.<br>விளங்கனி, மா, கூவிளம்.<br>விளங்கனி, விளங்கனி. |
| ௩௰ | ௩௬ | விளம், விளம், மா, கூவிளம்.<br>விளம், விளம், விளங்கனி. |
| ௪௧ | ௫௮ | காய், காய், காய், காய். (இடைமடக்கு) |
| ௪௫ | ௬௪ | விளம், கூவிளம், கூவிளம், கூவிளம், கூவிளம், கூவிளங்காய். |
| ௫௧ | ௭௪ | மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.<br>விளங்கனி, கூவிளம், கூவிளம்.<br>மா, மா, விளம், கூவிளம். |

## உ-வது. நகரப்படலம்.

| | | |
| --- | --- | --- |
| ௫௬ | ௧ | விளம், மா, தேமா, விளம், மா, தேமா. |
| ௬௪ | ௰௬ | விளம், விளம், மா, கூவிளம்.<br>விளம், விளம், விளங்கனி. |
| ௭௫ | ௩௯ | விளம், மா, விளம், மா, விளம், விளம், மா. |
| ௮௩ | ௫௧ | விளம், கருவிளம், கருவிளம், புளிமா. |
| ௮௮ | ௬௧ | மாங்கனி, புளிமாங்கனி, புளிமாங்கனி, புளிமா. |

## ௩-வது. வளன்சனித்தபடலம்.

| பக்கம், | விருத்தம். | |
|---|---|---|
| ௯௪ | ௧ | விளம், விளம், மா, கூவிளம்.<br>விளம், விளம், விளங்கனி. |
| ௯௮ | ௯. | மா, கூவிளம், விளம், விளம், மா.<br>விளங்கனி, விளம், விளம், மா. |
| ௱௯ | ௩௨ | விளம், மா, தேமா, விளம், மா, தேமா. |
| ௱௰௫ | ௪௪ | விளம், விளம், மா, கூவிளம்.<br>விளம், விளம், விளங்கனி. |
| ௱௨௰ | ௫௩ | தேமா, காய், மா, தேமா, காய். |

## ௪-வது. பாலமாட்சிப்படலம்.

| | | |
|---|---|---|
| ௱௨௬ | ௧ | மா, கூவிளம், மா, கூவிளம்.<br>விளங்கனி, மா, கூவிளம்.<br>விளங்கனி, விளங்கனி. |
| ௱௩௨ | ௰௬ | மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.<br>விளங்கனி, கூவிளம், கூவிளம். |
| ௱௩௬ | ௨௪ | கருவிளம், கருவிளம், புளிமா, கூவிளம், க<br>ருவிளம், கருவிளம், புளிமா, கூவிளம்.<br>கருவிளம், கருவிளம், கருவிளங்கனி, கருவி<br>ளம், கருவிளம், கருவிளங்கனி. |
| ௱௩௮ | ௨௭ | விளம், மா, தேமா, விளம், மா, தேமா. |
| ௱௪௯ | ௪௭ | தேமா, மா, கூவிளம், தேமா, புளிமாங்காய். |
| ௱௫௪ | ௫௭ | மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.<br>விளங்கனி, கூவிளம், கூவிளம். |

## ௫-வது. திருமணப்படலம்.

| | | |
|---|---|---|
| ௱௫௯ | ௧ | மா, கூவிளம், விளம், விளம், மா.<br>விளங்கனி, விளம், விளம், மா. |
| ௱௬௩ | ௰௬ | மா, மா, காய், மா, மா, காய் |
| ௱௬௭ | ௨௬ | காய், காய், காய், காய், மா, தேமா. |
| ௱௭௨ | ௩௯ | விளம், விளம், மா, கூவிளம்.<br>விளம், விளம், விளங்கனி. |

பக்கம், விருத்தம்.

௱௭௭ ௫௫ மாங்கனி, கூவிளம், கூவிளங்காய்.
மா, புளிமா, புளிமா, புளிமா.

௱௮௩ ௭௭ மாங்காய், தேமா, புளிமாங்கனி, தேமா, தேமா
மாங்காய், தேமா, புளிமாங்கனி, கூவிளங்காய்.
மா, புளிமா, புளிமாங்கனி, தேமா, தேமா.
மா, புளிமா, புளிமாங்கனி, கூவிளங்காய்.

௱௮௯ ௮௭ மாங்கனி, கூவிளம், கூவிளங்காய்.
மா, புளிமா, புளிமா, புளிமா.

௱௯௩ ௱௰௩ மா, கருவிளம், மா, கருவிளம், மா, கருவிளம், விளம்.

௱௯௮ ௱௨௮ கருவிளம், தேமா, கூவிளங்காய், கருவிளம், தேமா, கூவிளங்காய்.

௨௱௩ ௱௪௩ விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்காய், விளங்காய், தேமா, புளிமா.
விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்கனி.

௨௱௯ ௱௫௰ விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளங்காய். (இஃது - இடையிடையெதுகைபற்றிவந்தது)

௯-வது. ஈரறம்பொருத்துபடலம்.

௨௱௰ ௧ காய், காய், காய், காய்.

௨௱௰௭ ௨௪ கூவிளம், விளம், மா, கூவிளம்.
கூவிளம், விளம், விளங்கனி.

௨௱௨௰ ௩௪ விளம், மா, விளம், மா, விளம், விளம், மா.

௨௱௨௪ ௪௫ மா, மா, காய், மா, மா, காய்.

௨௱௩௰ ௫௮ மா, கூவிளம், விளம், விளம், மா.
விளங்கனி, விளம், விளம், மா.

# சந்தங்களினட்டவணை.

## ௭-வது. ஐயர்தோற்றுபடலம்.

| பக்கம், | விருத்தம். | |
|---|---|---|
| ௨௩௫ | ௧ | விளம், மா, தேமா, விளம், மா, தேமா. |
| ௨௪௪ | ௨௯ | மா, (†) தேமா, மா, தேமா, மா, தேமா, விளம்.<br>விளங்காய், விளங்காய், விளங்காய், விளம்.<br>(இஃதந்தாதி.) |
| ௨௪௮ | ௪௪ | மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.<br>விளங்கனி, கூவிளம், கூவிளம். |
| ௨௫௩ | ௬௰ | விளம், மா, தேமா, விளம், மா, தேமா. |
| ௨௫௭ | ௭௪ | விளம், விளம், மா, கூவிளம்.<br>விளம், விளம், விளங்கனி. |

## ௮-வது. ஐயநீங்குபடலம்.

| | | |
|---|---|---|
| ௨௬௫ | ௧ | காய், காய், காய், காய், மா, தேமா. |
| ௨௭௩ | ௨௰ | விளம், விளம், மா, கூவிளம்.<br>விளம், விளம், விளங்கனி. |
| ௨௮௰ | ௪௪ | காய், காய், மா, தேமா, காய், காய், மா, தேமா. |
| ௨௮௯ | ௬௩ | புளிமா, கருவிளம், கருவிளம், கருவிளம், புளிமா, கருவிளம், கருவிளம், கருவிளம். |
| ௨௯௩ | ௭௨ | விளம், கூவிளம், கூவிளம், கூவிளம், கூவிளம், கூவிளங்காய். |
| ௨௯௭ | ௮௨ | மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.<br>விளங்கனி, கூவிளம், கூவிளம். |

## ௯-வது. மகிழ்விணைப்படலம்.

| | | |
|---|---|---|
| ௩௱௨ | ௧ | கூவிளம், விளம், கூவிளம், விளம். |
| ௩௱௬ | ௰௪ | மா, மா, மா, மா, மா, மா. |
| ௩௱௰௨ | ௩௨ | மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.<br>விளங்கனி, கூவிளம், கூவிளம். |

(†) இச்சந்தத்து-௪௧-ம். விருத்தத்தில், ௨-ம். சீராகப்புளிமாவந்தது.

| பக்கம், | விருத்தம். | |
|---|---|---|
| ௩௨௰ | ௫௮ | மா, மா, கூவிளம், தேமா, புளிமாங்காய். |
| ௩௨௪ | ௭௧ | விளம், மா, தேமா, விளம், மா, தேமா. |
| ௩௨௯ | ௮௪ | விளம், விளம், மா, கூவிளம்.<br>விளம், விளம், விளங்கனி. |
| ௩௩௨ | ௯௫ | விளம், மா, தேமா, விளம், மா, தேமா, |
| ௩௩௨ | ௯௬ | விளம், விளம், மா, கூவிளம்.<br>விளம், விளம், விளங்கனி. |
| ௩௩௯ | ௱௰௮ | விளம், மா, தேமா, விளம், மா, தேமா. |

௰-வது. மகவருள்படலம்.

| | | |
|---|---|---|
| ௩௪௮ | ௯ | காய், காய், காய், காய். |
| ௩௫௩ | ௨௧ | மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.<br>விளங்கனி, கூவிளம், கூவிளம். |
| ௩௫௯ | ௪௩ | மா, மா, மா, மா, மா, மா. |
| ௩௬௫ | ௫௮ | காய், காய், மா, தேமா, காய். |
| ௩௭௨ | ௭௬ | விளம், விளம், மா, கூவிளம்.<br>விளம், விளம், விளங்கனி. |
| ௩௭௬ | ௯௨ | மா, கூவிளம், மா, கூவிளம்.<br>விளங்கனி, மா, கூவிளம்.<br>விளங்கனி, விளங்கனி. (†) |
| ௩௮௧ | ௱௧ | மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.<br>விளங்கனி, கூவிளம், கூவிளம் |
| ௩௮௬ | ௱௨௪ | தேமா, கூவிளம், தேமா, கூவிளம், தேமா,<br>கூவிளம், கூவிளம்.<br>கூவிளங்கனி, கூவிளங்கனி, கூவிளங்கனி,<br>கூவிளம். (*) |
| ௩௯௰ | ௱௩௫ | மா, மா, காய், மா, மா, காய். |

(†) இவ்வாறலதே-௱௪, ௱௫, ௱௬, ௱௭-ம். விருத்தத்தில்- ஓர் -என்பது -ஒர் -எனக் குறுகவேண்டும்.

(*) இவ்விதத்திற்கு-௱௨௯-ம். விருத்தத்தில்-பாரோடு-என்பது பாரொடு-எனவரல்வேண்டும்.

## ௧௧-வது. காட்சிப்படலம்.

| பக்கம், | விருத்தம். | |
|---|---|---|
| ௩௯௭ | ௧ | மா, தேமா, தேமா, தேமா, மா, தேமா, கூவிளம்.<br>விளங்காய், கூவிளங்காய், விளங்காய், கூவிளம். |
| ௪௱௧ | ௰௫ | மா, கூவிளம், கூவிளம், கூவிளம்.<br>விளங்கனி, கூவிளம், கூவிளம். } அந்தாதி |
| ௪௱௭ | ௩௫ | காய், காய், மா, தேமா, காய், காய், மா, தேமா. |
| ௪௱௨௰ | ௫௮ | மாங்கனி, கூவிளம், கூவிளங்காய்.<br>மா, புளிமா, புளிமா, புளிமா. |
| ௪௨௬ | ௮௰ | தேமா, தேமா, கூவிளம், தேமா, புளிமாங்காய். |
| ௪௨௮ | ௮௭ | மா, கூவிளம், விளம், விளம், மா.<br>விளங்கனி, விளம், விளம், மா. |
| ௪௩௯ | ௱௧ | காய், காய், காய், காய், மா, தேமா. |

## ௧௨-வது. மகனேர்ந்தபடலம்.

| | | |
|---|---|---|
| ௪௪௩ | ௧ | மா, மா, காய், மா, மா, காய். |
| ௪௪௯ | ௰௩ | விளம், மா, தேமா, விளம், மா, தேமா. |
| ௪௫௫ | ௨௮ | விளம், விளம், மா, கூவிளம்.<br>விளம், விளம், விளங்கனி. |
| ௪௬௰ | ௪௪ | மா, கூவிளம், விளம், விளம், மா.<br>விளங்கனி, விளம், விளம், மா. |
| ௪௬௫ | ௫௮ | விளம், மா, விளம், மா, விளம், விளம், மா. |
| ௪௭௨ | ௭௨ | விளம், மா, தேமா, விளம், மா, தேமா. |
| ௪௭௫ | ௮௰ | வெண்பாப்போலவந்தவிருத்தங்கள். (இடைமடக்காகவுமந்தாதித்தொடையாகவும்பாடியிருக்கின்றன). |
| ௪௭௬ | ௮௩ | விளங்காய், கூவிளங்காய், கூவிளங்காய், தேமா. |
| ௪௭௯ | ௯௨ | விளம், மா, தேமா, விளம், மா, தேமா. |

# பாவுரைப்பதிகம்.

## ஆசிரியம்.

தேம்பாவணியெனச் செயிர்றவ்வதரி
காம்பாவருளுள் கடவுளைவளர்த்த
வுயர்கைத்தாதையென் றுடைவளத்துரிவளன்
பெயர்பெறுஞ்சூசை பெரும்பயன்சரிதை
செய்யுளுமுரைத்த செய்யுளோடிசைப்படச்
செய்யுணிரைபிறழாத் தெளிவுரைவழங்க [னுங்
வொருபெயராற் பற்பொருளு மொருபொருளாற் பற்பய
கருதிக்கவிஞர்தங் கவியியல்பெனினு
மீண்டுவிரியு மிதுவெனவஞ்சி
வேண்டொருபொருளால் விளம்புதுமுரையே
மற்றவைமகிழ்வுறக்
கற்றவருணர்க
மீண்டுகல்லாரும் விளைபயனுறவுரை
யீண்டுவெளிப்பொருளா யியம்புவகருத்து
வாடாநறுமலர் வகுத்தவணியெனும்
வீடாமதுக்கவி வீக்கியவணியெனுந்
தேவுலகேற்றுந் தேம்பாவணியெனும்
பூவுலகறியப் புகழ்கதைப்பெயரொன
பொய்யறப்புரையறப் புரைதரும்வினையற
மெய்யறத்தனைவரும் விருப்புறிவீடுற
வதையுகுஞ்செவ்வழி யாசறவிளக்கவிக்
கதையுகுத்துரைத்த காரணமிதுவென

மூவுலகாளு முதல்வனிரங்கிப்
பூவுலகளிப்பப் புதல்வனென்றவனை
மற்றவர் முறையில மலர்மணம்விடுமெனக்
கற்றவர்வியப்புறக் கன்னிவழுவில்
விஃ பெருந்தீன்றன ளிணையடிதடவி
யன்பெழுத்தேற்றி யடிபணியியற்றிய
வானோர்க்கரசா
வீனோர்க் கொருதாய்
பேரருட்கடலாய்ப் பெரும்புகழ்மரியென்பாள்
தேரருட்காட்டச் சிறப்பொடுமுன்னுள்
வான்வாழ்மொழியொடு மலருமிழ்மதுவெனத்
தான்வாழுவப்பொடு தந்ததிருக்கதை
மறைமொழிவாயினன் மலிதவத்திறைவ
னிறைமொழிக்குரவ னிகரிலகேள்வியன்
வீரமாமுனியென்போன் வியன்றமிழாக
நீளாமுலகெழ நீர்த்துளைத்தவனென
ஞசைசேயத்திய துளிமதுப்பூங்கொடி
மாசையொளிமடல் வகுத்தநறுமல
ராற்றுநாறுசே னம்மூன் றிறைஞ்சிக்கொய்
தாற்றுநாறுசே னம்மூன் றுபாவா
யாற்றுவணிநிரைக் கம்மலர்விசித்தென
வாற்றுபடலமா யருங்கதையளவென
நான்மறைமறைய நவின்றவித்திருக்கதை
நூன்மறைகாட்டு நுணங்கியவழியென
பொய்யாக்குணத்தனி பொலிந்தமெய்க்கடவுளை
நையாக்கருத்தொடு நயப்புறவடைதலும்
அறம்பொருளின்பமீங் காலேநுகர்தலுந்
திறம்பிலவீடு செல்கதியெய்தலும்
பொழிந்தமதுவொடு புவனத்தேவர்க்கு
மொழிந்தவிக்கதைதரு முப்பயனிவையென

ஆகையான்-

வானோர்துதிப்ப வான்மேற்றந்தே
மீனோர்கதியுற விசைத்தனவழியென

மூவுலகேற்ற முதிரருட்கிழத்தி
பூவுலகறியப் புகன்றகாதை
நூற்கடற்கடந்து நுனித்ததென்மலையுறி
நாற்கடற்கவியொடு நறுந்தமிழாக
நீட்டப்பயனென விருப்பொடுகனியக்
கேட்டவனைவருங் கிளர்வினைப்பகைகெட
பெரும்பயனுறும்படி பேதைமொழியுட
னரும்பயனுணர்ந்துரை யறைகுதுநானே
உவர்வாய்கடறரு மொளிமணிகொண்டெனத்
துவர்வாய்கைக்குமென் சொல்லுரையொருவா
தென்றரும்விரைமலர்த் தேம்பாவணியை
வான்றருமறத்தணி வனப்பெனவுளத்தணிந்
தின்புறக்கேட்பவு மேற்றநல்லறத்
தன்புறவேட்கவு மனைவருஞ்செய்காற்
றேன்முகத்தலர்ந்த தேவதிருக்கதை
கான்முகத்தினிய கனியெனப்பழுத்தே
யிவ்வுலகிடரற விருவினையரிந்தபின்
னவ்வுலகரும்பய னளிக்குமென்றுணர்கத்
தேழுகத்தலரணிச் சிறப்புறவுணர்ந்த
[illegible]முகத்துரையது பதிகமுற்றும்.





அர்ச். - சூசையப்பரே
எங்களுக்காகவேண்டிக்கொள்ளும்.

# பாயிரம்.

சீரியவுலகமூன்றுஞ் செய்தளித்தழிப்பவல்லாய்
நேரியவெதிரொப்பின்றி நீத்தவோர்கடவுடூய
வேரியகமலபாதம் வினையறப்பணிந்துபோற்றி
யாரியவளன்றன்காதை யறமுதல்விளங்கச்சொல்வாம்.

## இதனதுபதப்பொருள்.

சீரிய -.சிறந்த, உலகமூன்றும் - பரலோக பூலோக பாதாள மென்னு மூன்றுலகங்களையும், செய்து-படைத்து, அளித்து-காத்து, அழிப்ப - அழிப்பதற்கு, வல்லாய்-வல்லமையுண்டாய், நேரிய-நேராகிய, எதிர்-தனக்கெதிரும், ஒப்பு-இணையும், இன்றி-இல்லாமல், நீத்த-அளவைக்கடந்த, ஓர்-ஒன்றாகிய, கடவுள்-கடவுளினது, தூய-பரிசுத்தமாகிய, வேரிய-தெய்வமணநாறும், பாதம்-திருவடிகளாகிய, கமலம்-தாமரைகளை, வினை-(நமது) வினைப்பிணி, அற-முழுதுங்கெட, போற்றி-வாழ்த்தியும், பணிந்து-பணிந்தும், ஆரிய-வடமொழியால், வளன்றன்-சூசையென்னும்வளனது, காதை - கதையை (கேட்போர்க்கு), அறமுதல்-அறமுதலியபொருட்கள், விளங்க-எளிதிற்றெளிய, சொல்வாம்-சொல்வோம். என்றவாறு.

உரை. — இச்செய்யுள் தெய்வவணக்கமுஞ் செயப்படு பொருளுமுணர்த்தியதனாற் சிறப்புப்பாயிரமாம். என்னை - தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளு மெய்தவுரைப்பது சிறப்பாகும்-என்பது சூத்திரமாதலின், பெருஞ்சிறப்ப மைந்தவுலகங்கண்மூன்றையும் படைத்தளித்தழிப்ப வல்லமையுண்டா யொன்றானுந்தனக்கெதிரொப்பின்றிப் பிரமாணத்தறியுமளவைக்கடந்துநின்ற தேவகுணங்களி னுயர்ந் தொன்றாகிய மெய்யங்கடவுளினது தெய்வமணநாறுந் திரு வடித்தாமரைகளை யெமதுவினைப்பிணிமுழுதுங்கெட வாக்

காற் றணிவுதோன்றவாழ்த்தியு மெய்யாற்பணிவுதோன்றப்
பணிந்துமெவற்றினும் விழுமியோனாகிய சூசையென்னும்
வளனதுதிருக்கதையைக்கேட்போர்க் கறமுதனாற்பொருளு
மெளிதிற்புலப்படச் சொல்வாமென்க. (க)

தேவுலகிறைஞ்சுஞ்சூசை தேன்மலர்க்கொடியைப்பூ
மூவுலகனைத்துமெஞ்சா முறையொடுநிழற்றுநாதன் [த்து
பூவுலகெய்தியன்ன பூநிழற்கொடுங்கிச்சாய்ந்த
யாவுலகனைத்தும்வாழ்த்து மிருங்கதையியம்பல்செய்வாம்.

இ-ள். தேவுலகு-தெய்வவுலகம், இறைஞ்சும்-வணங்கும், சூசை-சூசைமா முனி, தேன்-தேனைப்பொழிந்த, மலர்-மலரையுடைய, கொடியை-கொடியை, பூத்து-பூத்து (அடைந்து), எஞ்சா-குறையாத, முறையொடு-முறையோடு, மூவுலகனைத்தும்-மூவுலகெல்லாவற்றிற்கும், நிழற்றும்-நிழலைச்செய்யும், நாதன்-கடவுள், பூவுலகு-பூவுலகில், எய்தி-வந்து, அன்ன-அந்த, பூ-பூக்கொடியினது, நிழற்கு-நிழலுக்கு, ஒடுங்கி-ஒதுங்கி, சாய்ந்த-சாய்ந்ததாக, யாவுலகனைத்தும்-உலகங்களெல்லாம், வாழ்த்தும்-துதிக்கும், இரும்-உயர்ந்த, கதை-சரித்திரத்தை, இயம்பல்செய்வாம்-உரைப்போம். எ-று.

உரை.—தேவுலகத்தில் வணங்கப்பட்டசூசை தேனைப்
பொழிந்த மலரைப்பூத்தகொடியையடைந்து குறையாதமு
றையோடுலகமூன்றிற்கு நிழல்செய்யுநாதன் பூவுலகில்வந்த
ப்பூங்கொடிநிழலிலொதுங்கிச்சாய்ந்ததாக வுலகங்களெல்லா
ம்வாழ்த்து முயர்ந்தசரித்திரத்தை யுரைப்பாமென்க. (உ)

வளஞ்செயும்வரங்கடம்மால் வரைவிலவளர்வமைந்த
வுளஞ்செயுமரிய மாட்சி யுடையவனாயதன்மை
நளஞ்செயும்வடநூலோர்க ணவின்றிவற்சூசையென்ப [தே
தளஞ்செயுந்தமிழ்ச்சொல்லானு மவன்வளனென்பதொத்

இ-ள். வளம்-செல்வத்தை, செயும்-செய்யும், வரங்கடம்மால்-வரங்களால், வரைவில-அளவில்லாத, வளர்வு-வளர்வானது, அமைந்த-பொருந்திய, உளம்-மனது, செயும்-செய்யும், அரிய-அருமையாகிய, மாட்சி-பெருமையை, உடையவனாயதன்மை - உடையவனாகக்கொள்ள, நளஞ்செயும் - விரித்த, வடநூலோர்கள்-வடநூலோர், இவன்-இவனை, சூசையென்ப-சூசையென்று, நவின்று-சொல்லி, தளஞ்செயும்-நிறைந்த, தமிழ்ச்சொல்லானும்-தமிழ்ச்சொல்லாலும், அவன்-அவனை, வளனென்பது-வளனென்பதும், ஒத்து-ஒக்கும். எ-று.

உரை.—வளர்ந்தவரங்களா லளவில்லா தரியமாட்சிமை
யுடைத்தவனாகக்கொள்ள விரிந்த வடநூலோரிவனைச் சூசை

யென்பதும் - நிறைந்ததமிழ்ச்சொல்லா லவனேவனென்ப
து மொக்குமென்க. (௩)

கூசையுற்றனவரங்கட் டூய்கடல்கடக்கவில்லா
லோசையுற்றெழுகமிர்த முடைகடலென்ன நண்ணிப்
பூசையுற்றதனை நக்கப் புக்கெனவுளத்தைத் தாண்டு
மாசையுற்றாமனேனு மருங்கதையறைய லுற்றேன்.

இ-ள். கூசை - குசையென்பவர், உற்றன-அடைந்த, வரங்கள்-வரங்களென்னும், தூய-பரிசுத்தமாகிய, கடல்-சமுத்திரத்தை, கடக்க-(என்றால்) கடக்க, இல்லால்-கூடாதாயினும், ஓசையுற்று-ஒலிகொண்டு, எழுகு-எழும், அமிர்தமுடை-அமிர்தமுடைய, கடலென்ன-கடலென்று, நண்ணி-அணுகி, பூசை-வணக்கத்தை, உற்று-கொண்டு, அதனை-அதை, நக்க-(சிறியன்) நக்க, புக்கென-(அக்கடலிற்) புகுந்ததுபோல், உளத்தை-என்மனதை, தாண்டும்-தாண்டிய, ஆசை-ஆசையை, உற்று-அடைந்ததினால், ஊமனேனும்-ஊமையானாலும், அரும்-அரிய, கதை-சரிதையை, அறையலுற்றேன்-உரைக்கத்தொடங்கினேன்: எ-று.

உரை. — குசையடைந்தவரங்களென்னுந் தூயகடலையென்றாற் கடக்கக்கூடாதாயினு மோசைகொண்டோடு மமிர்தகடலென்றணுகி வணக்கத்தோடதைச்சிறியனக்க வக்கடலிற்புகுந்ததுபோல வென்மனத்தைத் தாண்டியவாசையினாலூமையானாலு மருங்கதையை யுரைப்பத் தொடங்கினேனென்க. (௪)

முறையடுத்தருநூலோருண் மூழ்கியவுவப்பிலன்ன
துறையடுத்தள்ளியுண்ணுந் துணிவிலானென்னைநோக்கிற்
குறையெடுத்தனையென்றன்னார் கொடுஞ்சினத்துருக்கன்றோ
பறையெடுத்துலகங்கேட்பப் பழித்தெனை நகைக்கன்றோ.

இ-ள். முறை-முறையை, அடுத்து-அடுத்த, அரும-அரிய, நூலோர்-நூலுடையோர், உள்-நடுக்கடலினுள், மூழ்கிய-மூழ்கின, உவப்பில்-களிப்பினால், அன்ன-அந்த, துறை-துறையை, அடுத்து-சேர்ந்து, அள்ளி-(அவ்வமிர்தத்தைக்கையால்) அள்ளி, உண்ணும்-உண்கின்ற, துணிவிலான்-துணிவில்லாதவனாகிய, என்னை-என்னை, நோக்கில்-கண்டால், குறை-குறையே, எடுத்தனையென்று-எடுத்தாயென்று, அன்னார்-அவர்கள், என்னை-அடியேனை, கொடும்-கொடிய, சினத்து-கோபத்தால், உருக்கல்-உருக்குதல், நன்றோ-நல்லதோ, பறையெடுத்து-பறையையெடுத்து, உலகம்-உலகத்திலுள்ளோர், கேட்ப-கேட்க, எனை-என்னை, பழித்து-பழித்து, நகைக்கல்-நகைத்தல், நன்றோ-நல்லதோ. எ-று.

உரை. — முறைபோகிய நூலையுடையோர் தமக்கடவி ன்மூழ்கிக்களித்தபோதந்தத்துறையையடுத்துள்ளேபுகுந்து மூழ்கத்துணிவில்லாம ஞனவ்வமிர்தத்தைக்கையாலள்ளியுண் டதுகண்டாற் குறையே யெடுத்தாயென் றவர்களடியேனைக் கோபித்தால்நல்லதோ,பறையெடுத் துலகங்கேட்கவென்னை ப்பழித்து நகைத்தால் நல்லதோவென்க. (ரு)

வண்டமிழினிதிற்கேட்ட மடக்கிளிகிளற்றும்புற்சொற்
கொண்டுமிழ்ந்துரைப்ப நூலோர் குறையெனக்கேளார்கொல்
லோ [ன
வுண்டமிழ்துமிழ்ந்தாலென்ன வுலகொருங்காள்வாள்சொன்
பண்டமிழ்துண்டியான்புற் பாவொடுகக்கக்கேட்பார்.

இ-ள். வண்-தெளிந்த, தமிழ்-தமிழை, இனிதில்-இன்பமாய், கேட்ட-கேட்ட, மடக்கிளி-மடமையுள்ளகிளி, கிளற்றும்-சொல்லும், புற்சொற்கொண்டு-(தனது)புன்சொல்லால், உமிழ்ந்து-உமிழ்ந்து, உரைப்ப-சொல்ல, நூலோர்-நூலோர்கள், குறையென-அதுகுறையென்று, கேளார்கொல்லோ-கேளார்களோ, அமிழ்து-அமிர்தத்தை, உண்டு-புசித்து, உமிழ்ந்தாலென்ன-உமிழ்ந்ததுபோல, உலகு-உலகம், ஒருங்கு-எல்லாம், ஆள்வாள்-ஆளு மரியென்பவள், சொன்ன-உரைத்த, பண்டு-பூர்வ, அமிழ்து-(கதையென்னும்) அமிர்தத்தை, உண்டு-புசித்து, யான்-நான்,புற்பாவொடு-புன்பாவினால், கக்க-(அதை) கக்கும்போது,கேட்பார்-(அந்நூலோர்) கேட்பார். எ-று.

உரை. — நல்லதமி ழின்பமாய்க்கேட்டமடக்கிளி தன்பு ன்சொல்லா லதையுமிழ்ந்துரைக்குங்கால் நூலோரதுகுறை யென்று கேளார்களோ, அமிர்தமுண் டுமிழ்ந்தாற் போல வுலகெலாமாளு மரியென்பவள்சொன்ன பூர்வத்தில்வழங்கி ய கதையென்னு மமிர்தத்தையுண்டு நானதையென்புன்பா வினாற்கக்கும்போ தந்நூலோர்கேட்பாரென்க. (கூ)

அடவியால்வனப்பில்வாய்ந்த வாகிர்தவெனுநகர்க்கு
புடவியா லவ்வைநீத்த புகழ்வரத்துயர்ந்தகன்னி [ட்
நடவியார்தவத்திலோங்கி நாதனையீன்றுடானைத்
தடவியார்புரப்போற்றித் தகவுடைத்திருத்தாளன்றே.

இ-ள்: அடவியால்-(சூழ்ந்த)சோலைகளால், வனப்பில்-வடிவோடு; வாய்ந்த-இருந்த, ஆகிர்தவெனும்-ஆகிர்தவென்னும், நகர்க்குள்-நகர்க்குள்ளே, புடவியால்-பூவுலகில், உவமை-ஒப்பை, நீத்த-நீக்கிய, புகழ்-புகழப்பட்ட, வரத்து-வரங்களினால், உயர்ந்த-உயர்ந்த, கன்னி-கன்னி(ஒருத்தி), நடவி-நடந்து (அடைந்த), ஆர்-நிறைந்த, தவத்தில்-தவத்தால், ஓங்கி-உயர்ந்து, நாதனை-(அவதரித்த)கடவுளை, ஈன்றாள்-பெற்றதாயுடைய, தாளை-பாதத்தை, தடவி-வருடி, ஆர்வு-அன்பு, உயர-உயர, போற்றி-துதித்து, தகவு-தன்மை, அடைந்து-அடைந்து, இருந்தாள்-இருந்தாள். எ-று.

உரை. — மரியென்பவளிக்கதைசொன்னவா றுரைப்பத் தொடங்கினார். சோலைகள்சூழவடிவோடுவளர்ந்த ஆகிர்த வென்னு நகரினுள்ளே பூவுலகிலொப்பில்லாது புகழப்பட் டவரங்களினாலுயர்ந்த கன்னியாய் நடந்தடைந்தநிறைதவத் தோங்கி நாதனைப்பெற்றதாயுடையபாதத்தைத் தடவி யன்பு யரப்போற்றிப் பெருமையடைந் திருந்தா ளொருத்தி யெ ன்க. (௭)

பொறையுழிசிறப்பில்வாய்ந்த புலன்றவிர்காட்சிதன்னா
லறைமொழியினிமைகான்ற வருளவிழ்வாயினாளே
நிறைமொழிமாந்தர்பூத்த நீர்மையோடொழுகல்செய்து
மறைமொழிவாய்மைகாட்டு மாண்புடையறத்தினாளே.

இ-ள். பொறையுழி-பூமியிடத்தில், சிறப்பில்-சிறப்பாய், வாய்ந்த-நின்ற, புலன்-ஐம்பொறிகள், தவிர்-நீங்கிய, காட்சிதன்னால்-காட்சியினால், அறை-சொல்லும், மொழி-சொல்லின், இனிமை-இன்பத்தை, கான்ற-உமிழ்ந்த, அருள்-கிருபை, அவிழ்-மலர்ந்த, வாயினாள்-வாயையுடையாளாகி, நிறைமொழிமாந்தர்-முனிவர், பூத்த-மலர்ந்த, நீர்மையோடு-குணத்தோடு, ஒழுகல்செய்து-தானுநடந்து, மறைமொழி-வேதவாக்கியத்தின், வாய்மை-உண்மையை, காட்டும்-காண்பிக்கும், மாண்புடை-பெருமையுள்ள, அறத்தினாள்-அறத்தையு டையவளாயிருந்தாள். எ-று.

உரை. — இந்நிலத்திற் சிறப்பாய்நின் றைம்பொறிகளைக் கடந்தகாட்சியினாற் சொல்லின்பத்தையுமிழ்ந்த தயைகாட்டு ம் வாயுடையாளாகி முனிவரைப்போலத் தானுமொழுகி வே தத்தினுண்மையைக்காட்டும் பெருமையுள்ள வரத்தைக்கொ ண்டிருந்தாளாமென்க. (௮)

சீதருளுடுக்களூடு திங்களைப்போலக்கன்னி
மாதருளரியமாண்பால் வயங்கினாளன்றித்தன்னிற்
கோதருள்குறையற்றும்பர்க் குழுவினுக்கெந்தையண்ட
மீதருள்காட்சிபூத்து வேதியர்க்கொளியேபோன்றாள்.

இ-ள். சீது-குளிர்ச்சியை, அருள்-தரும், உடுக்கள்-நட்சத்திரங்களின், ஊடு-நடுவே (திரியும்), திங்களைப்போல-சந்திரனைப்போல, கன்னிமாதருள்-கன்னிகளுக்குள்ளே, அரிய-அருமையாகிய, மாண்பால்-மாட்சிமையோடு, வயங்கினாள்-விளங்கினாள், அன்றி-அதுவுமன்றி, தன்னில்-தன்னிடத்து, கோது-குற்றமானது, அருள்-தரும், குறை-குறையும், அற்று-இல்லாமல், உம்பர்-வானவர்களின், குழுவினுக்கு-கூட்டத்துக்கு, எந்தை-ஆண்டவன், அண்டமீது-மோட்சத்தில், அருள்-கிருபையை (செய்யும்), காட்சி-காட்சியானது, பூத்து-உண்டாகி, வேதியர்க்கு-குருக்களுக்கு, ஒளியே-ஓர்விளக்கே, போன்றாள்-ஒத்தாள். எ-று.

உரை.—குளிர்ந்தநட்சத்திரங்கணடுவேதிரியுஞ் சந்திரனைப்போலப் பலகன்னிகளுக்குள்ளே யரியமாட்சிமையோடு விளங்கினாளதுவுமன்றித் தன்னிடத்துக் குற்றமுங் குறையுமில்லாமல் வானவர்க்காண்டவன் மோட்சத்திற்கொடுக்குங் காட்சிபோலிவளடைந்துகுருக்களுக்கோர்விளக்குபோ லிருந்தாளாமென்க. (௧)

இளங்கொடிமாட்சிகாட்ட வினியதன்னாமத்தந்து
வளங்கொடுநட்புகாட்ட வரைவில்வரங்களீந்தாள்.
விளங்கொளியுடுத்தமேனி வெண்மதிமிதித்தபாத
முளங்குடுசூட்டுஞ்சென்னி யுடையவள்பரமதாயே.

இ-ள். இளம்-இளமையாகிய, கொடி-(வஞ்சிக்) கொடியையொத்தகன்னியின், மாட்சி-மாட்சிமையை, காட்ட-காட்டுதற்கு, இனிய-இன்பமாகிய, தன்-தனது, நாமம்-பெயரை, தந்து-கொடுத்து, வளம-மாட்சிமையை, கொடு-கொண்டு, நட்புகாட்ட-அன்புகாட்ட, வரைவில்-அளவில்லாத, வரங்கள்-வரங்களை, ஈந்தான்-(இவளுக்கு) தந்தான், விளங்கு-விளங்குகின்ற, ஒளி-சூரியனை, உடுத்த-அணிந்த, மேனி-மேனியும், வெண்-வெள்ளிய, மதி-பிறையை, மிதித்த-மிதித்த, பாதம்-பாதமும், உளங்குடு-நட்சத்திரங்கள், சூட்டும்-சூழ்ந்த, சென்னியுடையவள்-சிரசுமுடையவளாகிய, பரமதாய்-பரமதே வதாய். எ-று.

உரை.—இவ்விளங்கன்னியின் மாட்சிமைகாட்ட வின்ப மாயிவட்குமரியென்னுந்தன்னாமத்தைத்தந்துவளர்ந்தவன்பு

காட்ட வளவின்றி வரங்களையிவளுக்குத்தந்தாள். சூரியனையுடுத்தமேனியும் பிறையைமிதித்தபாதமு மீன்களைச்சூழ்ந்த சென்னியுமுடைய பரமதேவதாயென்க. (௰)

இன்னவைமகளுந்தாயு மிணையென நடத்தும்வேலை
பன்னவையறுந்தன்பூமான் பழங்கதையுரைத்துரைத்த
வன்னவையெவருங்கேட்ப வவைவரைகென்றாடாயுஞ்
சொன்னவைமகளுமன்ன துணிவொடுவரைந்திட்டாளே.

இ-ள். மகளும்-மகளும், தாயும்-தாயும், இணையென-போல, இன்னவை-இதெல்லாம், நடத்தும்வேலை-நடத்தும்போது, தாயும்-தாயானவளும், பல்-பல, நவை-குற்றம், அறும்-அற்ற, தன்-தனது, பூமான்-பத்தாவின், பழங்கதை-பழையகதையை, உரைத்து-சொல்லி, உரைத்த-சொன்ன, அன்னவை-அவைகளை, எவரும்-எல்லோரும், கேட்ப-கேட்க, அவை-அவைகளை, வரைகென்றாள்-எழுதென்றாள், சொன்னவை-சொன்னவைகளை, மகளும்-மகளும், அன்ன-அந்த, துணிவொடு-துணிவுடன், வரைந்திட்டாள்-எழுதிவைத்தாள். எ-று.

உரை. — மகளுந்தாயும்போல விதெல்லா நடத்தும்போது தாயானவள் குற்றமில்லாததன்பத்தாவின் பழங்கதையைச் சொல்லிச் சொன்னதை யெவருமறிய வதையெழுதென்றாள். சொன்னபடி மகளுமெழுதிவைத்தாளென்க. (௰௧)

வருந்தியநசையானானும்வரைந்தவைவரைந்துகாட்டத்
திருந்தியதமிழ்ச்சொல்லில்லாற் செவிப்புலன் கைப்பநல்லோர்
பொருந்தியகுறைகணோக்கிற் புணர்ந்தமட்கலத்தைப்பாரா
தருந்தியவமுதுநன்றே லருந்தியோடருந்தல்செய்வார்.

இ-ள். வருந்திய-பிரயாசப்பட்ட, நசையால்-ஆசையோடு, நானும்-நானும், வரைந்தவை-அவளெழுதினவைகளை, வரைந்துகாட்ட-எழுதிக்காட்ட, திருந்திய-திருத்தமான, தமிழ்ச்சொல்-தமிழ்ச்சொல், இல்லால்-இல்லாமையால், நல்லோர்-கற்றோர், செவிப்புலன்-தஞ்செவி, கைப்ப-கசப்புற, பொருந்தியகுறைகள்-உள்ளகுறைகளை, நோக்கில்-கண்டால், புணர்ந்த-ஏந்திய, மட்கலத்தை-மட்பாத்திரத்தை, பாரா-பாராமல், அமுது-(அதிலுள்ள)அமிர்தம், அருந்திய-உண்பதற்கு, நன்றேல்-நல்லதானால், அருந்தியோடு-ஆசையோடு, அருந்தல்செய்வார்-அருந்தக்கடவார். எ-று.

உரை. — வருந்தியாசையோடு நானுமவளெழுதினதை யெழுதிக்காட்ட நல்லதமிழ்ச்சொல்லில்லாமையாற் கற்றோர்

தஞ்செவி கசபபுற உள்ளகுறைகளைக்கண்டா லேந்தியமட்
பாத்திரத்தைப்பாராம லதிலுள்ளவமிர்த முண்பதற்கினிய
தாறு லாசையோடருந்தக்கடவரென்க. (௰௨.)

சீரியமறைநூற்பூண்ட செழுந்தவத்தரியமாட்சி
நேரியவுளத்திலோங்கி நேமிகாத்தவனைக்காத்து
வேரியங்கொடியோன்காதை விளம்பவக்கொடிவிள்பைம்பூ
வாரியனூரிற்றேம்பா வணியெனப்பிணித்தல்செய்வாம்.

இ-ள். சீரிய-சிறந்த, மறைநூல்-வேதநூல், பூண்ட-அணியாகச்சூடிய, செழும்-செழிய, தவத்து-தவத்தின், அரிய-அருமையாகிய, மாட்சி-பெருமை, நேரிய-மிகுந்த, உளத்தில்-நெஞ்சில், ஓங்கி-உயர்ந்து, நேமி-உலகத்தை, காத்தவனை-காத்த(நாதனை), காத்து-காத்தோம்பி, வேரி-மணமுள்ள, அம்-அழகிய, கொடியோன்-கொடியையடைந்தவன்(ஆகியசூசையின்), காதை-சரித்திரத்தை, விளம்ப-உரைப்ப, அக்கொடி-அந்தப்பூங்கொடி, விள்-மலர்ந்த, பைம்-மிருதுவாகிய, பூ-மலரை, ஆரியனூரில்-ஆரியனல்லூரிலே, தேம்பா-வாடாத, அணியென-மாலையாக, பிணித்தல்செய்வாம்-கட்டல்செய்வோம். எ-று.

உரை. — சீர்கொண்டவேதநூலணியாகச் சூழ்ந்த நற்றவத்தி னரியபெருமைநிறைந்தவுளத்திலோங்கி மூவுலகத்தைக் காத்தளித்தநாதனைத் தானோர்கைத்தாதையாகக் காத்தோம்பி மணங்கமழும் பூங்கொடியுயர்த்தசூசையின்சரித்திரத்தையுரைப்ப வத்தப்பூங்கொடிவிண்ட நன்மலரைக்கொண் டாரியனல்லூரிலே வாடாமாலையாகக் கட்டல்செய்ததென்க. (௰௩)

பாயிரமுற்றும்.

# தேம்பாவணி.

## முதலாவது.

## நாட்டுப்படலம்.

### வேறு.

புள்ளுலாம்விசும் பிடைதொறும்பொரும்படைபொரு
வெள்ளுலாமழை வெண்கொடியுருக்கொடுவிளங்கித் [வ
தெள்ளுலாந்திரை திளைப்பவுண்டெழுந்துயர்பரந்து
வள்ளுலாங்கரு மதகரியினமெனத்தோன்ற.

இ-ள். புள்-பறவை, உலாம்-உலாவும், விசும்பு-வானத்தின், இடைதொறம்-இடங்கள்தோறும், பொரும்-பொருதும், படை-படையை, பொருவ-ஒப்ப, வெள்-வெண்மையாக, உலாம்-உலாவும், மழை-மேகங்கள், வெண்-வெள்ளிய, கொடி-கொடிகளின், உருக்கொடு-உருவத்தைக்கொண்டு, விளங்கி-தோன்றி, உலாம்-உலாவும், தெள்-தெளிந்த, திரை-கடல்நீரை, திளைப்ப-நிறைய, உண்டு-குடித்து, எழுந்து-எழுந்து, உயர்-உயர, பரந்து-பரவி, வள்-வலியோடு, உலாம்-உலாவும், கரும்-கரிய, மதகரி-மதயானைகளின், இனம்-கூட்டம்போல, தோன்ற-தோன்றும். எ-று.

(க-ரை.)—நாடு-சூதேய நாடு, பறவையுலாவும் வானத்திலெழுந்தபடைபோல் வெள்ளைமேகங்கள் வெண்கொடி போலத் தோன்றியபின்பு தெளிந்தகடற்றிரைநிறையவுண்டெழுந்துபரவி வலிகொள்கரியமதயானைகள்போலத்தோன்றுமென்க.

போர்புறங்கொடு பொருந்தலருரத்திறேய்த்தொளிர்
சீர்புறங்கொடு திசைதொறுமிருளறமின்னி [வேற்
வார்புறங்கொடு வளர்முரசொலியெனவதிர்ந்து
நீர்புறங்கொடு நீன்முகில்முழங்கினமாதோ.

இ-ள். போர்புறங்கொடு-போர்க்களத்தில், பொருந்தலர் பகைவருடைய, உரத்தில்-மார்பில், தேய்த்து-தேயப்பட்டு, ஒளிர்-ஒளிர்கின்ற, வேல்-வேலின், சீர்புறங்கொடு - தன்மையாக, திசைதொறும் - திசைகளெங்கும், இருளற-இருள்கெட, மின்னி-மின்னி, வார்புறங்கொடு-வார்கொண்டு (கட்டிய), முரசு-முரசின், வளர்-வளர்ந்த, ஒலியென-ஓசைபோல, அதிர்ந்து-அதிர்ந்து, நீர்புறங்கொடு-நீரைக்கொண்ட, நீல்-கரிய, முகில்-மேகங்கள், முழங்கின-சத்தித்தன. எ-று. மாது-ஓ, இவ்விரண்டும்அசை.

உரை. — போர்க்களத்திற் பகைவர்மார்பிற் றேயப்பட்டொளிகொள்வேல்போலவெங்குமிருளறமின்னிவார்கட்டிய முரசின்வளர்ந்தவோசைபோலதிர்ந்து நீர்கொண்டகரிய மேகங்கள் முழங்கினவென்க. (உ)

படையெனச்செருப் பகைதரப்படர்ந்தனவல்லாற்
கடையெனச்செறி கருணையோடுஞற்றியவள்ளர்
கொடையெனச்செழுங் குன்றொடுவயின்றொறுங்குளிர
மிடையெனச்சொரி வியன்முகில்வரைவிலபொழிய.

இ-ள். செரு-போரில், பகை-பகையை, தர-செய்ய, படையென-படையுருவாய், படர்ந்தன-படர்ந்தன, அல்லால்-அல்லாமல், கடையென-கடைசியிலே, செறி-மிகுந்த, கருணையோடு-கிருபையினால், உஞற்றிய-முயற்சிசெய்த, வள்ளர்-வள்ளியோருடைய, கொடையென-ஈகைபோல, செழும்-செழிய, குன்றொடு-மலையோடு, வயின்றொறும்-இடங்கடோறும், குளிர-குளிர்ச்சியுற, மிடையென-நிரையாக, சொரி-சொரியும், வியன்-தடித்த, முகில்-மேகங்கள், வரைவில-அளவின்றி, பொழிய-பொழிவன. எ-று.

உரை. — பகைசெய்யப் படையுருவாய்ப்படர்ந்ததல்லாற் கடைசியிலே கருணைகொண்டவள்ளியோரீகைபோல மலையோடிடங்கடோறுங்குளிர நிறையாக வளவின்றிமழைபொழிவனவென்க. (ரு)

படித்தநூல்வையயன்படவிரித்துரைப்பவர்போ
ற்டித்தநீன்முகில் தவழ்தலை பொலிந்தபொன்மலையே
குடித்தநீரொலாங் கொப்புளித்தமுதெனவருவி
யிடித்தருவொலி யெழத்திரையெறிந் துருண்டிரிய.

இ-ள். படித்த-கற்ற, நூல்-கல்விநூல், அவை-சபைக்கு, பயன்பட-பயனுக, விரித்து-விரிந்து, உரைப்பவர்போல்-சொல்பவர்போல, நடித்த-புடைத்த, நீல்-கரிய, முகில்-மேகம், தவழ்-தவழும், தலை-உச்சி, பொலிந்த-உயர்ந்த, பொன்மலை-செல்வமலை, குடித்த-தான்குடித்த, நீரொலாம்,-தண்ணீரெல்லாம், கொப்புளித்து-கொப்புளித்தமையால், அமுதென-அமுதமொத்த, அருவி-அருவி, இடித்து-மோதி, அரு-மாருத, ஒலி-ஓசை, எழ-கிளம்ப, திரை-அலையை, எறிந்து-விசி, உருண்டு-புரண்டு, இரிய-ஓடும். எ-று.

உரை. — படித்தநூலெவர்க்கும் பயனுகவிரித்துரைப்பார்போ லடர்ந்தகருமுகில் தவழ முயர்ந்தமலை தான்குடித்த தண்ணீரெல்லாங் கொப்புளித்தமையா லமுதாகியவருவியோ சைமிகவுங்கிளம்பத் திரைகொண்டோடுமென்க. (௪)

புள்ளிமால்வரை பொன்னுலகிடத்தெடுத்துய்த்த
வுள்ளிவான்விடும் வடமெனத்தாரைகளொழுக
வெள்ளிநீண்டடர் விசித்ததைப்பிடித்தெனச்சூழத்
துள்ளிவீழுயர் தூங்கியவருவியின்றோற்றம்.

இ-ள். புள்ளி-செல்வமுடைய, மால்-உயர்ந்த, வரை-மலையை, எடுத்து-தூக்கி, பொன்னுலகிடத்து-பொன்னுலகத்தில், உய்த்தல்-சேர்க்க, உள்ளி-எண்ணி, வான்-வானம், விடும்-விட்ட, வடமென்-வடக்கயிறுகள்போல, தாரைகள்-மழைத்தாரைகள், ஒழுக-விழவே, வெள்ளி-வெள்ளியாலாய, நீண்-நீண்ட, அடர்-சங்கிலிகளால், விசித்து-(அம்மலைபெயராதபடிக்கு) கட்டி, அதை-அதனை, பிடித்தென-(பூமி) பிடித்துக்கொண்டதுபோல், சூழ-(அம்மலையைச்) சூழ, துள்ளி-துள்ளி, வீழ்-விழும், உயர்-மேலே, தூங்கிய-சொரிந்த, அருவியின்-அருவியினது, தோற்றம்-தோற்றமாம். எ-று.

உரை. — செல்வமலையையெடுத்துப் பொன்னுலகிற்சே ர்க்கவேண்டுமென்று வானத்தினின்றுவிட்ட வடக்கயிறுகள் போல மழைத்தாரைகள்விழவே மலையைச்சூழத், துள்ளிவீ ழுமருவியோவென்று லம்மலைபெயராதபடிக்கு வெள்ளிநீ ண்டசங்கிலி சூழக்கட்டி யதைப்பூமிபிடித்துக்கொண்டது போலத்தோன்றுமென்க. (௫)

ஒண்ணுரைத்தெரியுமிழ்ந்தவிரினமணிவரன்றித்
தெண்ணுரைத்தெழுந் திரைத்திரள் வயின்றொறும்புகுந்து
வண்ணுரைத்தெதிர் வதிந்தெலாஞ்சாய்த்தலைகொடுபோய்ப்
புண்ணுரைத்தடக் கொள்ளைசெய்பொருந்தலர்போன்றே.

இ-ள். ஒள்-ஒளி, நுரைத்து-எழுந்து, எரி-கதிரை, உமிழ்ந்து-கக்கி, அவிர்-விளங்கும், இனம்-பலசாதியாகிய, மணி-இரத்தினங்களை, வரன்றி-வாரிக்கொண்டு, நுரைத்து-நுரைத்து, எழும்-எழும், தெள்-தெளிந்த, திரை-வெள்ளத்தினது, திரள்-பெருக்கு, வயின்றொறும்-எவ்விடமும், புகுந்து-நுழைந்து, வண்-வல்லமை, நுரைத்து-உண்டாகி, எதிர்-எதிரில், வதிந்தெலாம்-இருந்தெல்லாம், சாய்த்து-சாடி, அலை-அலைகளை, கொடுபோய்-கொண்டுபோய், புண்ணுரைத்து-புண்படுத்தி, அட-கொன்று, கொள்ளைசெய்-கொள்ளையிடும், பொருந்தலர்-பகைவரை, போன்று-போலத்தோன்றும். எ-று.

உரை. — ஒளியெறிந்த பலமணிகளைவாரிக்கொண்டு நுரையெழத் திரைகொண்டெங்கும் புகுந்தவெள்ளந் தன்வல்லமையாலெதிர்ந்ததெல்லாஞ் சாய்த்துக்கொண்டுபோய்ப் புண்படுத்திக்கொன்று கொள்ளையிடும்பகைவர் புகுந்ததுபோலத்தோன்றும். (௬)

விரைகிடந்தசை வீயுமிழ்மதுவினாற்பெருகி
நிரைகிடந்தெழுஞ் சோலையுங்கழனியுநிறைப்ப
வரைகிடந்திழி வளம்புனலெங்கணுமுலவல்
திரைகிடந்துயிர் சீர்த்துறுப்புலரவியபோன்றே.

இ-ள். கிடந்து-(முல்லைநிலத்தில்) கிடந்து, அசை-(வெள்ளத்தினால்) அசையும், விரை-வாசனையுள்ள, வீ-மலர்கள், உமிழ்-சொரிந்த, மதுவினால்-தேனினால், பெருகி-(ஆறு)பெருகி, நிரை-(மருதநிலத்து)நிரையாய், கிடந்து-நின்று, எழும்-உயர்ந்த, சோலையும்-சோலைகளும், கழனியும்-வயல்களும், நிறைப்ப-நிறைக்க, வரை-குறிஞ்சிநிலத்தில், கிடந்து-நின்று, இழி-இறங்கின, வளம்-வன்மையாகிய, புனல்-சலம், எங்கணும்-எங்கும், உலவல்-ஓடல், திரை-சலத்தில், கிடந்து-இருந்து (வரும்), உயிர்-உயிர், சீர்த்து-சிறப்புடைத்தாகி, உறுப்பு-உறுப்பெல்லாம், உலரவிய-புகுந்தது, போன்று-போலும். எ-று.

உரை. — குறிஞ்சிநிலத்தைவிட்டுவந்தபிற்பாடு முல்லைநிலத்திற்கிடந்தவாசமலர் வெள்ளத்தினாலசைந்து விடுந்தேனினாலாறுபெருகி மருதநிலத்தினிரையாய்நிற்குமுயர்ந்தசோலைகளும் வயல்களுநிறைய வப்புனலெங்குமோடத் தண்ணீரால்வருமுயிர் நன்றாயுறுப்பெலாம்புகுந்ததுபோலும். (௭)

அஞ்சிலாவெதி ரடுக்கியகல்லெலாங்கடந்தே
யெஞ்சிலாவெழி லிமைத்தநீண்மருதமுநீக்கித்
துஞ்சிலாநதி துடர்ந்தகல்கருங்கடனோக்கல்
விஞ்சையாரெலாம் வெறுத்துவீடிவறியபோன்றே.

இ-ள். எதிர் - எதிரே, அடுக்கிய-அடுக்கப்பட்ட, கல்லெலாம் - கல்லுகளையெல்லாம்-அஞ்சிலா-அஞ்சாமல், கடந்து-தாண்டி, எஞ்சிலா-குறைவில்லாத, எழில்-அழகு, இமைத்த-பிரகாசித்த, நீள்-நீண்ட, மருதமும்-மருதநிலத்தையும், நீக்கி-விட்டு, துஞ்சிலா-நில்லாமல், துடர்ந்து-தொடர்ந்தோடி, நதி-அவ்வருவி, அகல்-அகன்ற, கரும்-கரிய, கடல்-கடலை, நோக்கல்-நோக்கிப்போகல், விஞ்சையார்-அறிவுடையோர், எலாம்-(இங்கே) எல்லாத்தையும், வெறுத்து-வெறுத்து, வீடு-மோக்ஷமொன்றே, இவறிய-நாடியது, போன்று-போலே (தோன்றும்). எ-று.

உரை. — குறிஞ்சிமுதலங்கங்கே வழியிலெதிர்த்த கல்லுக் கஞ்சாமலுங்கடந்து மருதத்திலுள்ளசெல்வத்திற் காசைப் படாமலுநில்லாதுபோ யோயாமலோடி யவ்வருவியகன்றகடலைநோக்கிப்போகல் அறிவுடையோ ரிங்கெல்லாத்தையும்வெறுத்து மோட்சமொன்றேதேடுமாப்போலே தோன்றும். (௮)

மலையினேரறல் மலியநாற்றிணையருந்தியபின்
னலையினேருற லவனிதன்மகர்க்கெலாமூட்டி
முலையினேருறி விஞ்சுபால்முடுகலி லுடுத்த
கலையினேருறிக் களிப்பொடுசிந்துவபோன்றே.

இ-ள். மலையில்-மலையினின்று, நேர்-வரும், அறல் - தண்ணீரை, மலிய-நிறைய, நாற்றிணை-நிலநான்கும், அருந்தியபின்-உண்டபின்பு, அலையில்-கடலில், நேர்-நேரே (போய்), உறல்-சேர்தல், அவனி-பூமியானது, முலையின்-(தன்) முலையில், உறி-சுரந்து, நேர்-வந்த (பாலை,) தன்-தன்னுடைய, மகர்க்கெலாம்-மக்களுக்கெல்லாம், ஊட்டி-அருந்தி, விஞ்சு-மிஞ்சிய, பால்-பாலானது, முடுகலில்-முடுகையில், உடுத்த-தானுடுத்த, கலையின்-சீலையின், நேர்-மேலே, உறி-விழ, களிப்பொடு-மகிழ்ச்சியோடு, சிந்துவ-சிந்தியது, போன்று-போலும். எ-று.

உரை. — மலையினின்று விழுந்தண்ணீரை நிறையக் குறிஞ்சி முல்லை மருத நெய்தலென்னு நிலநான்கு முண்டபின்பு கடலிற்போகவே பூமியானது தன்முலைப்பால் தன்மக்கட்கெல்லாநிறையவூட்டிப் பின்னையுமிஞ்சிப் பாலோடவின்றுடுத்தசீலைமேலின்பமாய்ச்சிந்தியதுபோலுமென்க. (௯)

செறியுலாம்புனல் சிறைசெய்துபயன்படவொதுக்கி
வெறியுலாமலர் மிடைந்தகல்வயல்வழிவிடுவார்
பொறியுலாம்வழி போக்கிலதியல்படவடக்கி
நெறியுலாவற நேரவைநிறுத்தினர்போன்றே.

இ-ள். செறி - நிறைந்து, உலாம் - ஓடும், புனல் - சலத்தை, சிறைசெய்து - மறித்து, பயன்பட - பயனுக, ஒதுக்கி - ஒதுக்கி, வெறி - மணம், உலாம் - வீசும், மலர் - மலர்கள், மிடைந்து - நிறைந்து, அகல் - விரிந்த, வயல்வழி - வயலிடத்து, விடுவார் - விடுவோர், பொறி - ஐம்பொறிகள், உலாம்வழி - போம்வழியே, போக்கிலது - போக்காமல், இயல்பட - குணப்பட, அடக்கி - அடக்கி, அறம் - தருமம், உலாம் - உலாவும, நேர் - செவ்வையான, நெறி - வழியே, அவை - அவைகளை, நிறுத்தினர்போன்று - நிறுத்துபவர்போலும். எ-று.

உரை. — நிறையோடும்புனல் பயனுகவொதுக்கி மணமலர்நிறைந்த வயலிடத்துவிடுவார் ஐம்பொறிகள் தாம்போம் வழியேபோக்காமலடக்கிப் பெரியோரறத்தைப் புண்ணியவழியேநிறுத்துவதுபோலுமென்க. (௰)

உவர்க்குந்தாழ்கட லுடுத்தகல்விரிதலைஞால
மெவர்க்குந்தாயென வெண்ணிலாக்கிழிபடவுழு
மவர்க்குந்தாவுண வளித்தலேநோய்செய்வார்க்குதவி
தவர்க்குந்தாவருந் தருமமென் றியற்றுதல்போன்றே.

இ-ள். உவர்க்கும் - கைக்கும், தாழ் - ஆழ்ந்த, கடல்-கடலை, உடுத்து-(ஆடையாகத்)தரித்து, அகல்-அகன்று, விரி-விரிந்த, தலை-இடத்தையுடைய, ஞாலம்-பூமியானது, எவர்க்கும்-யார்க்கும், தாயென-தாயென்று, எண்ணிலா-எண்ணாமல், கிழிபட-(நெஞ்சு)கிழிபட, உழுமவர்க்கும்-உழுபவர்க்கும், தான்-(பூமி)தான், உணவு-உணவை, அளித்தலே-கொடுத்தலே, நோய்-துன்பத்தை, செய்வார்க்கு-செய்பவருக்கு, உதவி-உதவியாகிய, தவர்க்கும்-தவத்தோர்க்கும், தாவரும்-அரிய, தருமம்-தருமத்தை, என்று-எப்பொழுதும், இயற்றுதல்-செய்தல், போன்று-போலும். எ-று.

உரை. — உவர்க்கடலுடுத்த வகன்றபூமி யெவர்க்குந்தா யென்றுபாராமல் நெஞ்சுகிழிபட வுழுமவர்க்கும் பூமியுண வுகொடுத்தலே தின்மைசெய்வார்க்கு நன்மைசெய்யுந்தவத் தோர்க்கு மரியதருமம்போலுமென்க. (௰௧).

கூர்விளைத்தருட் குருவிதிபோன்றொன் றுகோடி
நீர்விளைத்தநெல் நிரம்பெனவித்தினரிட்ட
வேர்விளைத்தபற் கடைச்சியர்குரவையாடியபல்பாற்
றேர்விளைத்தவோர் சிறப்பெழும்விழாவணிபோன்றே.

இ-ள். கூர் - மிகுந்த, அருள் - தயையை, விளைத்து-செய்த, குரு - குருவின், விதி-விதியை, போன்று-போல, நீர்-சலம், விளைத்த-விளைவித்த, நெல்-செந்நெல், ஒன்று-ஒன்றே, கோடி-கோடியாக, நிரம்பென்-நிறையக்கடவதென்று, வித்தினர்-விதைப்பவர், இட்ட-கூப்பிட, ஏர்-அழகு, விளைத்த-உள்ள, பல்-பல, கடைச்சியர்-மருதநிலப்பெண்கள், குரவை - கூத்து, ஆடு - ஆடுகின்ற, இயல்பால்-தன்மையால், தேர்-தேரோட்டம், விளைத்த-வழங்கிய, ஓர் - ஒப்பற்ற, சிறப்பு - சிறப்பு, எழும்-உண்டாகும், விழாவணி - திருநாளின்லங்காரம், போன்று-போலத்தோன்றும். எ-று.

உரை. — மிகுந்ததயையுள்ளகுருவின்விதிபோல நீரில்விளைந்த செந்நெல்லொன்றே கோடியாகக்கடவதென்றுவிதைப்பவர் கூப்பிட வழகியகடைச்சியர் கூத்தாடியதன்மையாற் றேரோடிவழங்கிய திருநாள்போலத் தோன்றுமென்க. (௩௨)

நோக்கவின்புள நுகரவொண்முளரியோடாம்ப
னீக்கலாதெவ நீர்மலர்களையெனக்கட்ட
லாக்கமாக்கினு மறனிழந்தாவதுகேடென்
றூக்கமாண்பின ரொருங்கவையொழிக்குதல்போன்றே.

இ-ள். நோக்க - கண்டபோது, இன்பு-இன்பத்தை, உளம் - மனம், நுகர-அநுபவிக்க, ஒண்-அழகிய, முளரியோடு-தாமரையோடு, ஆம்பல்-அல்லியும், நீக்கலாது-விடாமல், நீர்மலர் - நீரிலிருக்குமற்றமலர்களை, எலாம்-எல்லாமும், களையென-களையென்று, கட்டல்-பறித்தல், ஆக்கம் -இலாபத்தை, ஆக்கினும்-செய்தாலும், அறன்-புண்ணியத்தை, இழந்தாவது-இழந்துண்டாவது, கேடென்று - பொல்லாங்கென்று, ஊக்க-திடமுள்ள, மாண்பினர் - பெருமையுடையவர், ஒருங்கு-முழுதும், அவை-அவைகளை, ஒழிக்குதல்போன்று - ஒழித்தல்போலும். எ-று.

உரை. — கண்டபோதின்பம்பயக்குந்தாமரையு மாம்பலும்விடாமல் மற்ற நீர்மலரெல்லாமுங் களையெனப்பறித்தல் பயன்றந்தாலும் புண்ணியமில்லாதது கேடென்றுதுணிந்து பெரியோரதையொழிக்குதல்போலும். (௩௩)

பூரியார்திருப் போறலைபசியகூழ்நிறுவி
நீரினர்தலை நேரநேர்வளைவொடுபழுத்த
வாரமானுநெல் லறுத்தரிகொண்டுபோயங்கட்
பேரிதாமெனக் களித்தனர்போர்பலபுனைவார்.

இ-ள். திரு - செல்வமடைந்த, பூரியார் - நீசர்களை, போல்-போல, பசிய-பசுமையாகிய, கூழ்-பயிர், நிறுவி-நின்று, நீரினர் - நற்குணமுடையோர், தலை - தலையை, நேர - போல, நேர் - முன்னே, வளைவொடு - வளைவோடு, பழுத்த-பழுத்த, ஆரம்-முத்தை, மானும்-போலும், நெல்-செந்நெல்லை, அறுத்து - அறுத்து, அரி-அரியாய், கொண்டுபோய்-கொண்டுபோய், அங்கண்-அவ்விடத்தில், இது-இதுவே, பேராமென-பேராகுமென்று, களித்தனர்-சந்தோஷித்தவர், போர்பல-பலபோராக, புனைவார்-செய்வார். எ-று.

உரை. — செல்வமடைந்தநீசர்போலப் பசும்பயிர் தலையெடுத்தபின் பெரியோர்தலைபோலவளைந்து முத்துபோலப்பழுத்த செந்நெல்லறுத் தரியாய்க்கொண்டுபோ யங்கணிதுவேபேரென்று பலபோராகச்சேர்ப்பார். (௰௪)

மெய்கலந்தபொய் விலக்கிமெய்கொள்பவர்வினைபோ
வைகலந்தநெல் பகட்டினாற்றெளித்துவைமறுத்துக் [ல்
கைகலந்தடுத் தேற்குனர்க் களித்தபின்களித்துத்
துய்கலந்தநெல் லுண்கவுமீகவுந்தொகுப்பார்

இ-ள். மெய் - மெய்யோடு, கலந்த - சேர்ந்த, பொய்-பொய்யை, விலக்கி-நீக்கி, மெய்-மெய்யை, கொள்பவர்-கொள்பவருடைய, வினைபோல் - செய்கைபோல், வை-வைக்கோல், கலந்த-கலந்த, நெல்-நெல்லை, பகட்டினால்-கிடாக்களினால், தெளித்து-துவைத்து, வை-வைக்கோலை, மறுத்து-நீக்கி, கை-கையோடுகை, கலந்து - கலந்து, அடுத்து-நெருங்கிநிற்கும், ஏற்குனர்க்கு-இரவலர்க்கு, அளித்த-கொடுத்த, பின்-பின்பு, களித்து-மகிழ்ந்து, துய்கலந்த-பரிசுத்தமாகிய, நெல்- நெல்லை, உண்கவும்-புசிக்கவும், ஈகவும்-கொடுக்கவும், தொகுப்பார்-எடுத்துச்சேர்ப்பார். எ-று.

உரை. — ஒருபொருளின் மெய்யும்பொய்யுங் கலந்திருந்தாற் பொய்யைநீக்கி மெய்யைக்கொள்ளும் பெரியோரைப்போல வைக்கோல்கலந்தநெல்லைக் கிடாக்களைவிட்டடித்து வைக்கோலைநீக்கிக் கைகலந்துநிற்கு மிரவலர்க்குக்கொடுத்

து மற்றநெல்லுண்கவுங் கொடுக்கவுமெடுத்துச் சேர்ப்பா ரென்க. (௫௫)

## வேறு.

ஈதலோடிசை யினியவாழ்வுக
ளாதலோடற னழிவிலாக்கினர்
காதலோடுடல் கடியநாள்வர
வீதலோடுறும் வீட்டில்வாழ்வரே.

இ-ள். ஈதலோடு-(பிறர்க்கு) கொடுத்தலோடு, இசை - இசையும், இனிய-இனிமையாகிய, வாழ்வுகள்-வாழ்வுகள், ஆதலோடு-ஆனதினால், அழிவில்-கெடுதலில்லாத, அறன்-தருமத்தை, ஆக்கினர்-செய்தவர், காதலோடு-இன்பத்தோடு, உடல்-தம்முடலை, கடிய-விட, நாள்வர-நாள்பட, வீதலோடு-மரணத்தால், உறும் - அடையும், வீட்டில்-மோக்ஷத்தில், வாழ்வர்-வாழ்வார். எ-று.

உரை.— பிறர்க்கீகலுந் தான்வாழ்தலு மிசைந்தமையாற் குறையாதறத்தைச்செய்தவ ரின்பமாய்த் தம்முடலைவிட்ட நாளாகிச் சாகும்பொழுது மோக்ஷத்தில்வாழ்வாரென்க. (௫௬)

மறமொடாகுல மலிந்ததீதெலாம்
புறமொடாகையின் பொருவிலாவள
றறமொடான்றகு தேயநாடமை
திறமொடாண்மையைச் செப்பச்சீரதோ.

இ-ள். மறமொடு-பாவத்தோடு, ஆகுலம் - துன்பம், மலிந்த-மிகுந்த, தீதெலாம் - பொல்லாங்கெல்லாம், புறமொடு-புறத்து, ஆகையின் - நின்றதினால், பொருவிலா-ஒப்பில்லாது, வளர்-வளரும், அறமொடு-அறத்தினால், ஆன்ற-மாட்சிமையுள்ள, குதேயநாடு-குதேயநாட்டில், திறமொடு-திறத்தோடு, அமை - பொருந்திய, ஆண்மையை- ஆண்மையையும், செப்ப - சொல்ல, சீரதோ-எளிதோ. எ-று.

உரை.— பாவத்தோடு துன்பஞ்செய்யும் பொல்லாங்கெல்லாம் புறத்துநின்றதினா லொப்பில்லா வளரு நல்லறத்தின் மாட்சிமையுள்ள குதேயநாட்டில் வழங்குந்திறமு மாண்மையுஞ்சொல்லலரிதே. (௫௭)

மிடியிலார்நயன் விளைவில்மாற்றுவான்
முடியிலார்கனிப் பொறைபொறுமுயன்
றடியிலாருயி ரமைந்தநீர்தொழக்
கடியிலார்மரம் வளைதல்காணுமே,

இ-ள். மிடியில் - தரித்திர நாளிலே, ஆர் - தானநுபவித்த, நயன் - நன்றியை, விளைவில் - நல்லகாலம்வந்தபோது, மாற்றுவான் - மாற்றுதற்கு, முடியில் - உச்சியில், ஆர் - நிறைந்த, கனி - கனிகளின், பொறை - பாரத்தை, பொறு - பொறுத்தால், முயன்று - முயற்சிசெய்து, அடியில் - (முன்) னடியிலே, ஆருயிர் - (தனக்குப்) பொருந்தியவுயிராக, அமைந்த - வந்த, நீர் - சலத்தை, தொழ - வணங்க, கடியில் - நந்தனவனத்தில், ஆர் - நிறைந்த, மரம் - மரங்கள், வளைதல் - வணங்குதல் (போல,) காணும் - தோன்றும். எ-று.

உரை.— தரித்திர நாளிலே தனக்குச்செய்தநன்றி நல்லகாலந்தனக்குவந்தபோது மாற்றவேணுமென்றதுபோல வுச்சியினிறைந்த கனிப்பாரத்தைப்பொறுமல் வளைந்தகொம்பு முன்னடியிலே தனக்குயிராகவந்த தண்ணீரைவணங்கினது போலத்தோன்றும். (௰[illegible])

ஆலையார்புகை முகிலென்றார்ப்பெழச்
சோலையார்மயில் துள்ளிமாங்குயில்
மாலையாரிருள் விரும்புமாக்கள்காண்
மேலையாரென மெலிந்துதேம்புமால்.

இ-ள். ஆலை - ஆலையிடத்து, ஆர் - உண்டாகிய, புகை - புகையும், ஆர்ப்பு - ஆர்ப்பும், முகிலென்று - மேகம்போல, எழ - எழும்ப, சோலை - சோலைகளில், ஆர் - உள்ள, மயில் - மயில்கள், துள்ளி - துள்ளி (யாட), மாங்குயில் - மாங்குயில்கள், மாலை - இரவு, ஆர் - பொருந்திய, இருள் - இருளை, விரும்பும் - இச்சிக்கும், மக்கள் - மனிதரை, காண் - கண்ட, மேலையாரென - பெரியோர்போல, மெலிந்து - இளைத்து, தேம்பும் - வாடுமாம். எ-று. ஆல் - அசை.

உரை.— ஆலையிடத்துக்கிளம்பும்புகையு மார்ப்பும் மேகமென்றுதோன்றிச் சோலைகடோறு மயில்கள் துள்ளியாடக்

குயில்களோவென்று விருளைவிரும்புந்தீயாரைக்கண்ட பெரியோர்போல் மெலிந்துவாடுமாம். (௰௯)

மல்லவிள்ளலர் மலிர்ந்தகான்றொறும்
புல்லவன்பறாப் பொருதுகாரண
மில்லதொல்லெனக் குறும்புளீர்ந்தபோ
ரல்லதில்லதோ ரமரந்நாட்டிலே.

இ-ள். மல்ல-செழுமையாக, விள்-பூத்த, அலர்-மலர்கள், மலிந்த - மிகுந்த, கான்றொறும் - வனந்தோறும், புல்ல-பொருந்த, அன்பு-நேசம், அறா-விடாமல், பொருதுகாரணம்-போர்செய்காரணமும், இல்லது - இன்றி, ஒல்லென-ஒல்லென்னுமொலியோடு, குறும்புள்-காடைகள், ஈர்ந்த-செய்த, போர்-சண்டை, அல்லது-அன்றி, ஓர்-ஒரு, அமர்-சண்டையும், இல்லது-இல்லை, அந்நாட்டில்-அந்தநாட்டில். எ-று.

உரை.— பூத்தகானத்திலெங்கு மன்புவிடாமற் பொருது காரணமுமின்றிக்காடைகள்செய் போரன்றிப்போரில்லையந் நாட்டிலென்க. (உ௰)

தீயெழத்தகர் சினந்துதாக்குப
மீயெழத்துகள் விரைந்துபின்றும
நோயெழப்பகை நுதலுமொன்னலர்
வாயெழச்செயும் வணக்கமானுமே.

இ-ள். தீயெழ-தீப்பறிய, தகர்-கடாய்கள், சினந்து-கோபித்து, தாக்கு ப-தாக்க, மீ-மேலே, துகளெழ-தூசியெழ, விரைந்து-விரைந்து, பின்றும-பின்வாங்கல், நோய்-(மன)நோய், எழ-உண்டாக, பகை-பொல்லாங்கு, நுதலும்-நினைக்கும், ஒன்னலர்-பகைவர், வாயெழ - வாயினின்றுபுறப்பட, செயும்-செய்யும், வணக்கம்-வணக்கத்தை, மானும்-போலும். எ-று.

உரை.— தீப்பறியக் கிடாய்கள் சினந்துதாக்க மேலே தூசியெழவிரைந்துபின்வாங்கலே பொல்லாப்புநினைத்த பகைவர்சொன்னவாய்வணக்கம்போலுமென்க. (உ௧)

வேர்ப்பெழக்கயல் விழியர்கைவளை
யார்ப்பெழக்கடை தயிரிலாயநெய்
கூர்ப்பெழத்துயர் குறுகமேலற
மேர்ப்பெழச்செய்வோ ரியல்புமானுமே.

இ-ள். வேர்ப்பு-வேர்வை, எழ-கிளம்ப, கைவளை-கைவளையல்களின், ஆர்ப்பெழ-சத்தமெழும்ப, கயல்-கயல்(போன்ற,)விழியர்-விழியையுடையமாதர்கள், கடை-கடைந்த, தயிரில்-தயிரின்மேல், ஆயநெய்-உண்டானநெய், கூர்ப்பு-மிகுந்த, துயர்-துன்பம், எழ-வந்தபோது, குறுக-(அத்துன்பம்) குறைய, மேல்-மேலான, அறம்-அறத்தின், ஏர்ப்பு-முயற்சி, எழ-தோன்ற, செய்வோர்-செய்பவருடைய, இயல்புமானும்-தன்மைபோலும். எ-று.

உரை.— வேர்வையெடுக்கக் கைவளையார்ப்ப மாதர்கள்கடைந்த தயிரின்மேல் நெய்கிளம்பவே துன்பம்வந்தபோது மேலறந்தோன்றச்செய்யும் பெரியோர்போலுமென்ப. (௨௨)

கழையிருல்பனை கனிகடேங்கல
ருழையிருவிய தேறலுண்டபின்
மழையிருவிய மதுவினூங்கினி
திழையிருவழ கிளம்புள்பாடுமால்.

இ-ள். கழை-கரும்பும், இருல்-இருட்டும், பனை-பனையும், கனிகள்-கனிகளும், தேங்கு-தென்னமும், அலர்-மலரும், உழையில்-இவைகளிடத்துநின்று, தாவிய-விழுந்த, தேறல்-தேனை, உண்டபின் - உண்டபின்பு, மழையில்-நீரில், தாவிய-பாய்ந்த, மதுவின் - அத்தேனினும், நாங்கு-மிகவும், இனிது-இனிதாய், இழை-கலந்து, இரு-மாருமல், அழகு-அழகிய, இளம் - சிறிய, புள்-பறவைகள், பாடும்-பாடும். எ-று. ஆல்- அசை.

உரை.— கரும்பு மிருட்டும் பனையுங் கனிகளுந் தென்னமரமு மலரு மிவையிடத்தில்விழுந் தேனையுண்டபின் னத்தேனினுமினிதா யழகியபறவைகள் பாடுமென்ப. (௨௩)

உண்டகன்றகன் றுள்ளிமேதிகள்
மண்டவன்புறி வழிந்தபாற்றிரள்
கொண்டவன்னமே குடித்தலரவது
கண்டதங்குள களவிதாமரோ.

இ-ள். உண்டு-பாலுண்டு, அகன்ற-பிரிந்த, கன்று-கன்றை, உள்ளி-நினைத்து, மேதிகள்-எருமைகள், மண்டி-மிக, அன்புறீ-அன்புற்று, வழிந்த-பொழிந்த, பால்-பாலை, திரள்கொண்ட-திரண்ட, அன்னம்-அன்னங்கள் (வந்து), குடித்தலாலது-குடித்தலே, அங்கு-அங்கே, கண்டது-கண்டது, இது-இதுவே, உள-உள்ள, களவு-களவு, ஆம்-ஆகும். எ-று. அரோ-அசை.

உரை.— பாலுண்டுபிரிந்த கன்றைநினைத்தவெருமைகளன்போடுபொழியும்பாலை யன்னம்வந்துகுடித்தலே யங்கே கண்டகளவிதுவல்லாதே யில்லையென்ப. (௨௪)

குயிலினத்தொடு கொம்பிலார்கிளி
பயிலினத்தொடு ஞிமிறும்பாடவே
துயிலினத்தொடு விரித்ததோகைகொள்
மயிலினத்தொடு மகளிராடுமால்.

இ-ள். குயில்-குயில், இனத்தொடு-இனத்தோடு, கொம்பில்-கொம்புகளில், ஆர்-நிறைந்த, கிளி-கிளிகளும், ஞிமிறும்-வண்டுகளும், பயில்-பேசுமாப்போலே, இனத்தொடு-கூட்டத்தோடு, பாடவே-பாடவே, துயிலினத்தொடு-ஆடைகள்போல, விரித்த-விரித்த, தோகை-தோகையை, கொள்-கொண்ட, மயில்-மயில்களின், இனத்தொடு-கூட்டத்தோடு, மகளிர்-மாதரும், ஆடும்-ஆடுவர். எ-று. ஆல்-அசை.

உரை.— குயில்களோடுகொம்புகளினிறைந்த கிளிகளும்வண்டும்பேசுமாப்போலேபாடவே நல்லாடைபோலத் தோகையைவிரித்த மயில்களோடு மாதருமாடுவார். (௨௫)

காசிலம்புவ களித்தபுள்ளினம்
வீசிலம்புவ மிடைந்ததும்பிகள்
பாசிலம்புவ சிலம்பப்பண்புகழ்
நாசிலம்புவ சிலம்புநாடெலாம்.

இ-ள். களித்த-களிகூர்ந்த, புள்-பறவைகளின், இனம்-கூட்டத்தால், கா-காடுகள், சிலம்புவ-ஒலிக்கவும், மிடைந்த-மொய்த்த, தும்பிகள்-வண்டுகளால், வீ-மலர்கள், சிலம்புவ-ஒலிக்கவும், பா-பாட்டுகள், சிலம்புவ-ஒலிக்கவும், பண்-வீணைகள், சிலம்ப-ஒலிக்கவும், புகழ்-புகழும், நா-நாக்கு, சிலம்புவ-ஒலிக்கவும், சிலம்பும்-ஒலிக்கும், நாடு-நாடு, எலாம்-எல்லாம். எ-று.

உரை.—களிகூர்ந்தபறவைகளாற்காடொலிக்கவும் வண்டுகளால் மலர்களொலிக்கவும் பாட்டுகளொலிக்கவும் வீணைகளொலிக்கவும் புகழுநாக்கொலிக்கவு மொலிக்குநாடெல்லாம். (உ௬)

மூட்டிரட்டின மூரண்டகர்பெடை
பெட்டிரட்டின குயில்பிளிர்ந்தமுத்
திட்டிரட்டின கரும்பின்பீன்றகள்
விட்டிரட்டின வீயினங்களே.

இ-ள். மூரண்-பலங்கொண்ட, தகர்-கிடாய்கள், மூட்டு-மூட்டுதலால், இரட்டின-ஒலித்தனவும், பெடை-பெட்டையை, பெட்டு-தேடி, குயில்-குயில்கள், இரட்டின-ஒலித்தனவும், பிளிர்ந்த-குமிழ்ந்த, முத்து-முத்தை, இட்டு-இட்டு, கரும்பு-கரும்புகள், இரட்டின-ஒலித்தனவும், இன்பு-இனிமையை, ஈன்ற-தரும், கள்-தேனை, விட்டு-பொழிந்து, வீ-மலர்களின், இனங்கள்-வருக்கங்கள், இரட்டின-ஒலித்தனவும். எ-று.

உரை.—கிடாய்கள்மூட்டி யொலித்தனவும் பேடைதேடிக்குயில்களொலித்தனவு முத்திட்டுக்கரும்புகளொலித்தனவு மினியதேனைப்பொழிந்து மலர்களொலித்தனவுமென்ப. (உ௭)

நிழலிற்கண்சிறை படுத்துநீண்பொழில்
குழலிற்பூச்சிறை படுத்துங்கோதையார்
கழலிற்காற்சிறை படுத்துங்காந்தர்நீர்
விழலிற்றான்சிறை படுத்தும்வேலியே.

இ-ள். நீண்-நீண்ட, பொழில்-சோலைகள், நிழலில்-நிழலால், கண்-கண்ணுக்கு, சிறைபடுத்தும்-சிறைசெய்யும், கோதையார்-மாதர்கள், குழலில்-மயிரினால், பூ-மலர்களுக்கு, சிறைபடுத்தும்-சிறைசெய்யும், காந்தர்-புருஷர், கழலில்-காலணியால், கால்-காலுக்கு, சிறைபடுத்தும்-சிறைசெய்யும், வேலி-மருதவேலி, நீர்-தண்ணீர், விழலில்-விழுகையில், தான்-தான், சிறைபடுத்தும்-(அதை) சிறைசெய்யும். எ-று.

உரை.—சோலைகள் நிழலாற் கண்ணுக்குச்சிறைசெய்வனவு மாதர்கள்தம்மயிரினான் மலர்களுக்குச்சிறைசெய்வனவு மக்கள் காலணியாற்காலுக்குச்சிறைசெய்வனவு மருதவேலி விழுந்ததண்ணீருக்குத் தான்சிறைசெய்வனவுமென்ப. (உ௮)

துன்னவிற்சிறை படுத்தத்தேரமிலா
லன்னபற்சிறை யல்லதில்லையால்
பொன்னநற்சிறை யன்னப்புள்ளுறை
மன்னவர்க்கிறை வழங்குநாட்டிலே.

இ-ள். துன்-நெருங்கிய, அல்-இருண்ட, இல்-வீட்டில், சிறைபடுத்த-சிறைசெய்ய, தேரம்-குற்றக்காரர், இலால்-இல்லாமையால், அன்ன-அப்படிப்பட்ட, பல்-பல, சிறை-சிறைச்சாலைகள், அல்லது-அல்லாதே, இல்லை-வேறில்லை, பொன்-பொலிவுள்ள, அம்-அழகிய, நல்-நல்ல, சிறை-இறகுள்ள, அன்னப்புள்-அன்னப்பறவைகள், உறை-இருக்கும், மன்னவர்க்கு-அரசர்களுக்கு, இறை-அரசனானவன், வழங்கும்-ஆளும், நாட்டில்-அந்நாட்டில். எ-று. ஆல்-அசை.

உரை.— சிறையில்வைக்கக்குற்றக்காரரில்லாமையாற் சொன்னசிறைச்சாலைகளல்லாதேவேறில்லை யழகிறகுவிரித்த வன்னங்களிருக்கு மரசர்க்கரசனாளும்நாட்டிலே. (உக)

வாய்ந்தசெந்நெலை மறுகும்பண்டியு
மாய்ந்தமெல்லிலை யமையும்பண்டியும்
பாய்ந்தபூகவொண் பழம்பெய்பண்டியும்
வேய்ந்ததீங்கனி விம்மும்பண்டியும்.

இ-ள். வாய்ந்த-கிடைத்த, செந்நெலை-செந்நெல்லை, மறுகும்-(சுமந்து) உருண்டுவரும், பண்டியும்-வண்டிகளும், ஆய்ந்த-ஆய்ந்த, மெல்லிலை-வெற்றிலை, அமையும்-நிறைந்த, பண்டியும்-வண்டிகளும், பாய்ந்த-உயர்ந்த, பூக-கமுகின், ஒண்-அழகிய, பழம்-கனிகள், பெய்-போட்ட, பண்டியும்-வண்டிகளும், வேய்ந்த-அழகிய, தீம்-இனிய, கனி-கனிகள், விம்மும்-நிறைந்த, பண்டியும்-வண்டிகளும். எ-று.

உரை.— செந்நெலைச்சுமக்கும்வண்டிகளு மாய்ந்தவெற்றிலைகொண்டுவரும்வண்டிகளு முயர்ந்தகமுகின்பாக்குள்ள வண்டிகளு நல்லினியகனிகள்நிறைந்தவண்டிகளுமென்க. (உஉ)

பன்னுந்தெங்கிள நீர்பெய்பண்டியுந்
துன்னுந்தீங்கழை சுமக்கும்பண்டியு
மின்னுந்தேன்செறி வீபெய்பண்டியு
மன்னுந்தேசுபன் மணிகொள்பண்டியும்.

இ-ள். பன்னும்-நெருங்கிய, தெங்கிளநீர்-தெங்கிளநீர், பெய்-போட்ட, பண்டியும்-வண்டிகளும், துன்னும்-நிறைந்த, தீம்-தித்திப்புள்ள, கழை-கரும்புகளை, சுமக்கும்-சுமக்கும், பண்டியும்-வண்டிகளும், மின்னும்-விளங்கும், தேன்-தேன், செறி-நிறைந்த, வீ-மலர்களை, பெய்-போட்ட, பண்டியும்-வண்டிகளும், மன்னும்-நிலைபெற்ற, தேசு-பொன்னும், பல்-பல, மணி-இரத்தினங்களும், கொள்-கொண்டுவரும், பண்டியும்-வண்டிகளும். எ-று.

உரை.— நெருங்கிய தெங்கிளநீர்போட்டவண்டிகளு நிறையக் கரும்புகளைச்சுமக்கும் வண்டிகளுந் தேனைப்பொழியு நன்மலருள்ளவண்டிகளும் பொன்னு நவமணியுங்கொண்டுவரும்வண்டிகளுமென்க. (௬௧)

துளித்ததேறலைத் துவலைசோலைசூழ்
களித்தநாடெலாங் கசடில்வாழ்வுறச்
சுளித்தமள்ளர்கள் தூண்டுமேற்றினந்
திளைத்தபண்டிகள் நெருங்கித்தேயுமால்.

இ-ள். தேறலை-தேனை, துவலை-மழையாக, துளித்த-பெய்யும், சோலை-சோலைகள், சூழ்-சூழும், களித்த-களிப்புள்ள, நாடெலாம்-அந்நாடெல்லாம், கசடு-குறைவு, இல்-இன்றி, வாழ்வு-வாழ்வை, உற-அடைய, சுளித்த-கோபித்த, மள்ளர்கள்-பள்ளர்கள், தூண்டும்-செலுத்தும், ஏற்று-கடாக்களின், இனம்-கூட்டம், திளைத்த-நிறைந்த (இழுத்த), பண்டிகள்-வண்டிகள், நெருங்கி-(தம்முள்) நெருங்கி, தேயும்-தேய்வன. எ-று. ஆல்-அசை.

உரை.— தேனைப்பெய்யுஞ்சோலைகளாற் சூழப்பட்டவந் நாடெல்லாங்களித்துக் குறையொன்றின்றிவாழ விவ்வண்ணமே கோபித்தபள்ளர் தூண்டுங்கடாக்களிழுத்தவண்டிகள்தம்முள் நெருங்கித்தேயுமென்க. (௬௨)

பாய்ந்ததேங்கதின் பழங்கள்வீழ்தலால்
வாய்ந்தவாழைமா வருக்கையாசினி
சாய்ந்ததீங்கனி சரிந்ததேன்புனல்
தோய்ந்தவாயெலா மினிமைதோய்ந்தன.

இ-ள். பாய்ந்த-உயர்ந்த, தேங்கதின்-தென்னமரங்களின், பழங்கள்-நெற்றுகள், வீழ்தலால்-(பழுத்து) விழவே, வாய்ந்த-வளர்ந்த, வாழை-வாழையிலும், மா-மாவிலும், வருக்கை-பலாவிலும், ஆசினி-ஆசினிப்பலாவிலும், சாய்ந்த-சாய்ந்த, தீம்-இனிய, கனி-கனிகள், சரிந்த-சொரிந்த, தேன்-தேனும், புனல்-ஆறாக, தோய்ந்த-பாய்ந்த, வாய்-இடங்கள், எலா-எல்லாம், இனிமை-இன்பமே, தோய்ந்தன-தோய்ந்தன. எ-று.

உரை.— உயர்ந்ததேங்காய்பழுத்துவீழவே வளர்ந்த வாழைப்பழமு மாம்பழமும் பலாப்பழமு மாசினிப்பழமுஞ் சாய்ந்து நசுங்கிச் சொரிந்ததேனுமாறுபோலோடி யெங்குமின்பமேதோய்ந்ததென்ப. (௩௫)

வளைந்தளித்தருங் கடலின்வாழ்வளை
யுளைந்தளித்தமுத் தொருங்குமற்றெலாந்
திளைந்தளித்தலிற் றிருவென்றாண்டகை
விளைந்தளித்தவை விருந்தென்றாமரோ.

இ-ள். வளைந்து-(பூமியைச்)சூழ்ந்து, அளி-குளிர்ச்சி, தரும்-பொருந்திய, கடலின்-கடலில், வாழ்-வாழும், வளை-சங்கு, உளைந்து-நொந்து, அளித்த-தந்த, முத்து-முத்தும், ஒருங்கு-ஒன்றாக, மற்றெலாம்-மற்றயாவையும், திளைந்து-நிறைய, அளித்தலில்-(அந்நாட்டார்)கொடுத்தமையால், ஆண்டகை-ஆண்டவன், திருவென்று-செல்வமாகவென்று, விளைந்து-உண்டாக்கி, அளித்தவை-(அவர்களுக்குந்) தந்ததெல்லாம், விருந்தென்றாம்-(பிறர்க்கு)விருந்தாகும். எ-று. அரோ-அசை.

உரை.— குளிர்ந்தகடலில் வாழுஞ்சங்குளைந்து பெற்றமுத்துமுதலியாவையு நிறைய வந்நாடர் தானமாய்க்கொடுத்த வினாண்டவன் செல்வமாக வவர்களுக்குத்தந்ததெல்லாம் பிறர்க்குவிருந்தாகச்செய்வார். (௩௬)

பொறையினோடிகல் பொதிர்ந்தபொன்மணி
யுறையினோடிக லுவந்திடுங்கொடை
மறையினோடிகல் முனிவர்மாண்புவான்
முறையினோடிகல் முயன்றநாடெலாம்.

இ-ள். பொறையினோடு-மலையோடு, இகல்-ஒக்கும், பொதிர்ந்த-குவிந்த, பொன்-பொன்னும், மணி-மணியும், உறையினோடு-மழையோடு, இகல்-ஒக்கும், உவந்திடும்-மகிழ்ந்திடும், கொடை-கொடையும், மறையினோடு-வேதத்தோடு, இகல்-ஒக்கும், முனிவர்-முனிவர்களின், மாண்பு-மாட்சிமை, வான்-வானுலகத்தின், முறையினோடு-முறையோடு, இகல்-ஒக்கும், முயன்ற-முயற்சியடைந்த, நாடெலாம்-அந்நாடெல்லாம். எ-று.

உரை.— மலைபோலுங் குவிந்தபொன்னுமணியு மழைபோலுங்கொடுக்குங்கொடையும் வேதத்தைப்போலு முனிவர் நடக்குமாட்சியும் வானுலகம்போலுங்களிகூர்ந்தவந்நாடெல்லாம். (௫௫).

## வேறு.

காமலர்பெடைதழீ யன்னங்கண்படுந்
தேமலர்த்தடந்தழீச் சினைகணீட்டிய
பூமலர்ப்பொழில்தழீப் பொலிந்தபொற்பெழுந்
தூமலர்வயல்தழீத் துளங்குநாடதே.

இ-ள். *காம்-ஆசை, மலர்-மிகுந்து, பெடை-பெட்டையை, தழீ-தழுவி, அன்னம்-அன்னப்பக்ஷிகள், கண்படும்-தூங்கும், தேம்-வாசனையுள்ள, மலர்-மலர்கள்பூத்த, தடம்-குளங்களை, தழீ-(அக்குளங்களைத்)தழுவி, நீட்டிய-நீண்ட, சினைகள்-கொம்புகளில், பூ-பூக்கள், மலர்-மலர்ந்த, பொழில்-சோலைகளை, தழீ-(அச்சோலைகளைத்)தழுவி, பொற்பு-அழகு, எழும்-விளங்குகின்ற, தூ-பரிசுத்தமாகிய, மலர்-பூக்கள், பொலிந்த-நிறைந்த, வயல்-வயல்களை, தழீ-(அவ்வயல்களைத்)தழுவி, துளங்கு-விளங்கும், நாடதே-நாடதுவே. எ-று.

*காமம்-என்னுமொழி-இடைகுறைந்து, காம்-எனவாயிற்று.

உரை.— ஆசையோடுபேடையைத்தழுவி யன்னந்தூங்கும்வாசமலர்பூத்தகுளங்களை அக்குளங்களைத்தழுவி நீண்ட கொம்புகளிற் பூ மலர்ந்தசோலைகளை அச்சோலைகளைத் தழுவி யழகியபூநிறைந்தவயல்களை அவ்வயல்களைத்தழுவி விளங்குநாடதே. (௫௬)

ஓலைகள்கிடந்தநீண் கமுகொடும்பனை
பாலைகள்மாமகிள் பலவுசுள்ளிகள்
*கோலைகள்சந்தனங் குங்குமம்பல
சோலைகள்கிடந்தன தொகுப்பவண்ணமோ.

இ-ள். ஓலைகள்-ஓலைகள், கிடந்த-(விரிந்து)நின்ற, நீண்-நீண்ட, கமுகொடும்-கமுகமரத்தோடு, பனை-பனையும், பாலைகள்-பாலையும், மா-மாவும், மகிள்-மகிளும், பலவு-பலாவும், சுள்ளிகள்-மராமரமும், கோலைகள்-இலந்தையும், சந்தனம்-சந்தனமரமும், குங்குமம்-குங்குமமுமுள்ள, பல-பல, சோலைகள்-தோப்புகள், கிடந்தன-இருந்தன, தொகுப்ப-தொகுத்துச்சொல்ல, வண்ணமோ-தகுமோ. எ-று. *கோல்-என்பது, ஐகாரசாரியைபெற்று, கோலை-எனவாயிற்று.

உரை.— ஓலைவிரிந்தகமுகும் பனையும் பாலையு மாவு மகிளும் பலாவு மராமரமு மிலந்தையுஞ் சந்தனமரமுங் குங்குமமுமுள்ளபலசோலைகள்தொகுத்துச் சொல்லத்தகுமோ. (௫௭)

தேன்வளரலங்கலைச் சிறைசெய்கூந்தலோ
கான்வளர்சண்பக மலர்ந்தகாவுகள்
வான்வளர்துளிநலம் வழங்குங்கொண்டலோ
தேன்வளரொலிக்கொடு தேன்பெய்சோலையே.

இ-ள். தேன் - தேன், வளர் - மிகுந்த, அலங்கலை - பூமாலையை, சிறைசெய்-சூழ்ந்த, கூந்தலோ-கூந்தலென்பவோ, கான்-வாசனை, வளர்-மிகுந்த, சண்பகம் - சண்பகங்கள், மலர்ந்த - மலர்ந்த, காவுகள் - சோலைகளே, வான்-வானில், வளர்-உண்டாகும், நலம்-நன்மையாகிய, துளி-மழை, வழங்கும்-பெய்யும், கொண்டலோ-மேகமென்பவோ, வளர்- எழும்பும், தேன்-வண்டுகளின், ஒலிக்கொடு-ஓசைகொண்டு, தேன்-தேனை, பெய்-பொழியும், சோலையே-சோலைகளே. எ-று.

உரை.— தேனைப்பொழிந்தமாலைசூழ்ந்த கூந்தலென்பவோ வாசமலர்நிறைந்த சண்பகச்சோலைகளே மழைபெய்யும்மேகமென்பவோ வண்டுகளோசையெழும்பத் தேனைப்பொழியுஞ்சோலைகளே யென்க. (௫௮)

தோடணிகவினொடு தூங்குங்குண்டல
நீடணிமதிமுக நிழல்செய்மாதரோ
கோடணியெழுதருங் கோலப்போதொடு
சேடணிகனிநலந் திளைத்தசோலையே.

இ-ள். தோடு-காதோலை, அணி-அணிந்த, கவினொடு-அழகோடு, தூ
ங்கும்-ஆடும், குண்டலம்-குண்டலமும், நீடு-மிகுந்த, அணி-அணி
களும் (சூ
ழ்ந்த), மதி-சந்திரன்போன்ற, முகம்-முகமாய், நிழல்செய்-விளங்கும், மாத
ரோ-மாதரென்பவோ, கோடு-கொம்புகள், அணி-பூண்ட, எழுதரும்-எழு
துதற்கரிய, கோல-அலங்காரமுள்ள, போதொடு-பூவோடு, சேடு-அழகு,
அணி-பொருந்திய, கனி-கனிகளின், நலம்-இன்பமும், திளைத்த-நிறைந்த,
சோலையே-சோலைகளே. எ-று.

உரை.—காதோலையுங் குண்டலமும் பலவணிகளுஞ்சூழ்ந்
த சந்திரமுகமாய்விளங்கு மாதரென்பவோ வெழுதற்கரிய
வழகுள்ளபூவுங் கனிகளுநிறைந்த சோலைகளேயென்க. (௧௬)

நீனிரைத்தெழுதிய படத்தினேருடு
மேனிரைத்தெழுதிய விசும்பின்றோற்றமோ
கானிரைத்தெழுந்தளிர் காழகத்துயர்
தேனிரைத்தவிழ்மலர் திளைத்தசோலையே.

இ-ள். நீல்-கரிய, படத்தின்-படத்தின், மேல்-மேலே, நிரைத்து-ஒழு
குபடுத்தி, எழுதிய-எழுதினதை, நேர்-போல, விசும்பின்-வானத்திலே, நிரை
த்து-நேர்படுத்தி, எழுதிய-தீட்டிய, உடு-மீன்களின், தோற்றமோ-தோற்ற
மென்பவோ, கான்-காடுகள், நிரைத்து-நேரவளர்ந்து, எழும்-எழுந்த,
காழகத்து-கருமையுடைய, உயர்-மிகுந்த, தளிர்-துளிர்களின் (நடுவே), தே
ன்-மது, நிரைத்து-நிறைந்து, அவிழ்-மலர்ந்த, மலர்-பூக்கள், திளைத்த-நிறை
ந்த, சோலையே-சோலைகளே. எ-று.

உரை.—கரியபடத்தின்மேலெழுதினாற்போல் வானத்தி
லெழுதிய மீன்களென்பவோ கொம்புகள் நேரவளர்ந்து
ட்டகருந்துளிர்கள்நடுவே தேனிறைந்த பூமலர்ந்த சோலைக
ளேயென்க. (௧௭)

அப்புறத்தமுதுணுஞ் சிறைப்பொற் பார்ந்தபுள்
ளிப்புறத்தலர்கள்கொய் யிளைஞர்வாண்முகம்
முப்புறத்தெழுதிய முகைகள்காட்டிய
தப்புறச்சித்திரக் கூடஞ்சோலையே.

இ-ள். அப்புறத்து-அந்தப்பக்கத்திலே, அமுது-சுவையை, உணும்-உண்ணும், பொற்பு-அழகு, ஆர்ந்த-பொருந்திய, சிறை-சிறகுகளை யுடைய, புள்-பறவைகளையும், இப்புறத்து-இந்தப்பக்கத்திலே, அலர்கள்-மலர்களை, கொய்-அறுக்கும், இளைஞர்-இளைஞர்களின், வாள்-வடிவுள்ள, முகம்-முகங்களையும், முப்புறத்து-மூன்றுபக்கத்திலேயும், எழுதிய-அழகெழுதிய, முகைகள்-(பலவகை)மலர்களையுந், அப்பு-பொலிவு, உற-பொருந்த, காட்டிய-காண்பித்த, சித்திரக்கூடம்-சித்திரக்கூடம் (போலும), சோலையே-சில சோலைகளே. எ-று.

உ-ரை. — அந்தமுகத்திலே பலவகைமதுவையுண்ணுமழகியவண்ணச்சிறகுப்பறவைகளைக்காணவு மிந்தமுகத்திலே மலர்களையறுக்கு மிளைஞர்வடிவுளமுகத்தைக்காணவு மூன்றுமுகத்திலேயு மழகெழுதியபலவகைமலர்களைக்காணவு நல்ல சித்திரக்கூடம்போலுஞ் சிலசோலைகளே. (௪௧)

கயிற்றுணைகலனெனக் கம்பிறூங்கலர்
குயிற்றுணை குயில்வுங் குழல்வண்டூதவு
மயிற்றுணை யுலவிவந் திரட்டமற்றெலாம்
பயிற்றுணை களிமணப் பந்தர்சோலையே.

இ-ள். கயில்-பின்கொக்கி, துணை-சோடாய்ப்பூட்டிய, கலனென-ஆபரணத்தைப்போலே, கம்பில-கொம்பிலே, அலர்-மலர்கள், தூங்கு-தொங்கவும், குயில்-குயில்கள், துணை-சோடாய், குயிலவும்-கூவவும், வண்டு-வண்டுகள், குழல்-நாகசுரம், ஊதவும்-ஊதவும், மயில்-மஞ்ஞைகள், துணை-சோடாய், உலவிவந்து-உலாவிவந்து, மற்று-மற்றப்(பறவைகள்), எலாம்-எல்லாம், பயில்-கூடியும், துணை-துணையாக, இரட்ட-சத்தமிட, களி-களிகூர்ந்த, மணப்பந்தர்-கலியாணப்பந்தல் (போலும்), சோலையே-சிலசோலைகளே. எ-று.

உ-ரை. — பூட்டியகலனைப்போலக் கொம்பிலே மலர்கள் தூங்கவுங் குயில்கள் சோடாய்க்கூவவும் வண்டுகள் நாகசுர மூதவு மயில்கள் சோடாயுலாவிவந்து மற்றப்பறவை கூப்பிட

வு மேரலைசகிளம்பக் களிகூர்ந்த கலியாணப்பந்தல் போலு
ஞ் சிலசோலைகளே. (௪௨)

முதிர்செயுங்கனிமலர் மொய்த்துத் தூங்கலோ
டுதிர்செயும்பழந்துண ரொளிசெய்குப்பையாற்
கதிர்செயுமுடிகலன் கழிந்தமன்னவர்
பொதிர்செயுந்துறவிடம் போலுஞ்சோலையே.

இ-ள். முதிர்செயும்-முதிர்ந்த, கனி-கனிகளும், மலர்-மலர்களும், மொய்த்து-நெருக்கி, தூங்கலோடு-தூங்குதலுமன்றி, உதிர்செயும்-உதிர்ந்த, பழம்-பழங்களும், துணர்-மலர்களும், ஒளிசெய்-விளங்கும், குப்பையால்-குப்பையாகக்கிடத்தலால், கதிர்செயும்-பிரகாசிக்கின்ற, முடி-தமமுடிமுதல், கலன்-பலவணிகளை, கழிந்த-கழற்றியெறிந்த, மன்னவர் - அரசர்கள்பலரும், பொதிர்செயும் - மிகுந்த, துறவு-துறவின், இடம்போலும் - இடத்தைப்போலும், சோலையே-சிலசோலைகளே. எ-று.

உரை. — முதிர்ந்தகனிகளு மலர்களுங் கொத்துக்கொத்தாய்த் தூங்கவும், உதிர்ந்தபழங்களு மலர்களுங் குப்பையாய்க் கிடந்துவிளங்கவும், அரசர்பலருந் தம்முடிமுதல்பலவணிகளைக்கழற்றியெறிந்து முற்றியதுறவோடுகிடக்கு மிடம்போலுஞ் சிலசோலைகளே. (௪௩)

வானிறத்தகரினங் கலையின்மானினந்
தூனிறத்துயரிய தூரியத்தின
நீனிறப்பகட்டின நெடிதுழற்றலிற்
கோனிறச்சிலம்பநற் கூடஞ்சோலையே.

இ-ள். வால்-வெள்ளிய, நிறம்-நிறத்தையுடைய, தகர்-ஆட்டுக்கிடாக்களின், இனம்-கூட்டமும், கலையின்மானினம்-கலைமான்களின்கூட்டமும், தூ-தூய, நிறத்து-நிறத்தையுடைய, உயரிய-உயர்ந்த, தூரியத்து-பொலிவெருதுகளின், இனம்-கூட்டமும், நீல்-கரிய, நிறம்-நிறத்தையுடைய, பகட்டு-எருமைக்கிடாக்களின், இனம்-கூட்டமும், நெடிது-நெடுங்காலம், உழற்றலில்-தம்முட்பொரவே, கோன்-அரசர், இற-முடியச் (செய்யும்), சிலம்ப-சிலம்பத்து, நல்-நல்ல, கூடம்-கூடம்போலும், சோலையே-சிலசோலைகளே. எ-று.

உரை. — வெள்ளைக்கிடாய்களுங் கலைமான்களுந் தூயநிறமாயுயர்ந்த பொலிவெருதுகளுங் கரியவெருமைக்கிடாக்க

ளு நெடுங்காலத்துத் தம்முட்பொரவே அரசர்சிலம்பக்கூ டம்போலுஞ் சிலசோலைகளே. (௪௪)

கருகருவெனவொர்பால் காடைப்புள்ளினம்
ஞுருஞுருவெனவொர்பா னயந்ததோகைகள்
புருகுருவுதலொடு புள்பல்லோதையா
லருதுருவுணர்வுகு மரங்கஞ்சோலையே.

இ-ள். ஓர்பால்-ஒருபக்கத்தில், கருகருவென-கருகருவென்று, காடைப்புள்ளினம்-காடைப்பறவைகளும், ஓர்பால்-ஒருபக்கத்தில், ஞுருஞுருவென-ஞுருஞுருவென்று, நயந்த-இன்பங்கொண்ட, தோகைகள்-மயில்களும், புரு-புருக்களும், குருவுதலொடு-கூவுதலுடன், புள்-(மற்ற)பறவைகள்(இடுகிற), பல்-பல, ஓதையால்-ஓசையால், அருது-ஓயாமல், உரு-வாராத, உணர்வு-உணர்வு, உகும்-உண்டாகும், அரங்கம்-பள்ளிக்கூடம் (போலும்), சோலையே-சில சோலைகளே. எ-று.

உரை.—ஒருபால் கருகருவென்று காடைகள்கூப்பிடவு மொருபால் ஞுருஞுருவென்று மயில்களொலிக்கவும் புருக்க ள்முதற்பறவை பற்பல வோதையெழும்பவு மோயாமல் வாராதவுணர்வுபடிக்கும் பள்ளிக்கூடம்போலுஞ் சிலசோலைகளே. (௪௫)

மேல்வளரலர்ப்படம் விரித்துவீணைசெய்
பால்வளர்சுரும்பிசை பாடமாங்குயில்
வால்வளர்மயினடங் காணமற்றைப்புள்
சால்வளர்நாடகசாலைசோலையே.

இ-ள். மேல்-மேலே, வளர்-மலர்ந்த, அலர்-பூவால், படம்-மேற்கட்டி, விரித்து-விரித்திருக்க, சுரும்பு-வண்டுகள், பால்-இன்பம், வளர்-மிகுந்த, இசை-இசையோடு, வீணைசெய்-வீணைவாசிக்க, மாங்குயில்-மாமரத்திலிருக்குங்குயில்கள், பாட-பாட, வால்-தோகை, வளர்-நீண்ட, மயில்-மயில்கள், நடம்-(ஆடும்)கூத்தை, மற்றை-மற்ற, புள்-பறவைகள், காண-பார்த்திருக்க, சால்-மிகவும், வளர்-பெரிய, நாடகசாலை-நாடகசாலை (போலும்), சோலையே-சில சோலைகளே. எ-று.

உரை.—மேலேமலர்ந்த பூவால் மேற்கட்டிவிரித்திருக் க வண்டுகளினிய விசைகளால் வீணைவாசிக்கக் குயில்கள்பா

டத் தோகைமயில்களாடுங்கூத்தை மற்றப்பறவை பார்த்திருக்கப் பெரியநாடகசாலைபோலுஞ்சிலசோலைகளே. (௪௬)

காலெடுத்தடுத்தெதிர்த் தொளிக்கலாப நீள்
வாலெடுத்துப்பக மாறமஞ்ஞைகள்
கோலெடுத்தஞ்சனக் கோலக்காருகம்
மேலெடுத்தாரியக் கூத்துவிக்குமால்.

இ-ள். கால்-காலை, எடுத்து-தூக்கி, அடுத்து-கிட்டிப்போய், எதிர்த்து-எதிராய்வந்து, ஒளி-விளக்கமாகிய, கலாபம்-தோகை, நீள்-நீண்ட, வால்-வாலை, எடுத்து-தூக்கி (விரித்து), மஞ்ஞைகள்-மயில்கள், பகம்-அழகாக, மாற-(பலகூத்து) விகற்பங்களையாட, அஞ்சன-மைபூசின, கோல-உருவமுள்ள, காருகம்-கருங்குரங்குகள், மேலெடுத்து-மேலேறி, கோலெடுத்து-கொம்புகளைப்பிடித்து, ஆரியக்கூத்து-ஆரியக்கூத்து, விக்கும்-ஆடும். எ-று. ஆல்-அசை.

உரை.—காலைத்தூக்கிச் சோடாய்ப்போகவு மெதிராய்வரவுந் தோகைவாலைத் தூக்கிவிரிக்கவும் பலகூத்துவிகற்பங்களையாடி மயில்கள்திரியவே அஞ்சனம்பூசினமுகமாய்க்கருங்குரங்குகள் மேலேகொம்புகடோறுந் தூங்கவும் பாயவுமாரியக்கூத்தாடுமென்க. (௪௭)

கூடநின்றோடைதன் குவளைக்கண்டிறந்
தோடநின்றலைந்தலைந் தொருமித்தோரிடம்
நாடலின்னகைத்தென நனைத்தமுல்லைநீ
டாடலினாவித்தென் றலர்ந்தகாந்தளே.

இ-ள். ஓடை-(அச்சோலையையடுத்த) பொய்கையும், கூட-கூட, நின்று-நின்று(பார்க்க), குவளை-குவளையென்னும், தன்-தனது, கண்டிறந்து-கண்ணைத்திறந்து, ஓடநின்று-ஓடாமனின்று, அலைந்தலைந்து-அலைந்தலைந்து, ஒருமித்து-ஒன்றாகி, ஓர்-ஒரு, இடம்-இடத்தை, நாடில்-தேடுகையில், முல்லை-முல்லை, நகைத்தென-சிரித்ததுபோல, நனைத்த-அரும்புகள்மலர்ந்தன, நீடு-நெடுங்காலம், ஆடலில், கூத்தாடுகையில், நாவித்தென்று-கொட்டாவிவிட்டாற்போல, காந்தள்-கார்த்திகைப்பூக்கள், அலர்ந்த-மலர்ந்தன. எ-று.

உரை.—அச்சோலைபடுத்த பொய்கையுங் கூடநின்றுபார்க்கக் குவளையென்னுந் தன்கண்டிறந்து தனக்கிடந்தேடி

யப்பாலோடாம லலைந்தலைந்து திரிவதுபோலக் கனாயிலே
யலைகள்மோதமோத வுள்ளே யிடமுங்கிடையாதென்று கண்
டமுல்லை சிரித்ததுபோலுந் தன்னரும்புகள் மலர்ந்துபூத்த
து. கூத்துநெடுங்காலத்துமுடியாமற் சலிப்பினாற்கொட்டா
வி விட்டதுபோலத் தோன்றுங் கார்த்திகைப்பூமலர்ந்த
தெங்க. (௪௮)

தோகைகொண்மயிலென மாதர்தோன்றலின்
வாகைகொண்டாரென மயிலொடுங்கலாற்
சாகைகொண்டெனையபுள் சிரித்ததன்மைபோ
லோகைகொண்டொலிதர வொலிக்குநாடெலாம்.

இ-ள். தோகை-தோகையை, கொள்-கொண்ட, மயிலென-மயிலைப்போல, மாதர்-சிலமாதர்கள், தோன்றலின் - வந்ததினால், வாகைகொண்டாரென-செயங்கொண்டார்களென்று, மயில்-மயில்கள், ஒடுங்கலால்-ஒடுங்க, சாகைகொண்டு-கொம்புகளிலிருக்கும், எனையபுள்-மற்றப்பறவைகள், சிரித்ததன்மைபோல-சிரித்தாற்போல, ஓகைகொண்டு-களிப்போடு, ஒலிதர-கூப்பிட, ஒலிக்கும்-ஒலிக்கும், நாடெலாம்-நாடெல்லாம். எ-று.

உரை.— அத்தரவாயிலே தோகைமயில்போல வங்கண் சிலமாதர்கள் வந்ததினு விவரமாக செயங்கொண்டதுகண்டு நாணிய மயில்களொடுங்கக் கொம்புகளிலிருக்கும் மற்றைப் பறவை யிதைக்கண்டு சிரித்தாற்போல வினிதாய்க்கூப்பிட வொலிக்கு நாடெல்லாம். (௪௯)

உதித்தன்கதிரென வுவந்தமாங்குயில்
துதித்தெனப்பாடியொண் ணனந்தன் றாய்நடை
விதித்தெனமுன்னடந் தனதம்மெல்லடி,
பதித்தெனநடந்தனர் பனிகொள்கோதையார்.

இ-ள். கதிர்-சூரியன், உதித்தன-உதித்தது, என-என்று, உவந்த-களிகூர்ந்த, மாங்குயில்-மாங்குயில்கள், துதித்தென-துதித்தாற்போல, பாடி-பாட, ஒண்-அழகிய, அனம்-அன்னம், தன்-தனது, தாய்-பரிசுத்தமான, நடை-நடையை, விதித்தென-(அம்மாதருக்கு) படிப்பித்தாற்போல, முன்-முன்னே, நடந்தது-நடந்தது, தம்-தங்கள், மெல்-மெல்லிய, அடி-பாதத்தில், பதித்தென-(அந்நடை) பதித்ததாச்சதென்றதுபோல, நடந்தனர்-நடந்துபோனார், பனி-குளிர்ச்சியை, கொள்-கொண்ட, கோதையார்-மாதரித்தமாதரே. எ-று.

உரை.—இவர்கள் வந்ததினு லிருண்டசோலையிற் சூரியனுதித்ததென்று களிகூர்ந்தகுயில்கள் துதித்தாற்போலப்பாடவும் அன்னங்க ளிம்மாதர்க்குத் தந்நடைகாட்டிப் படிப்பித்தாலென்ன மெள்ளமுன்னடந்துபோ யிந்நடையெங்கள்பாதத்துப் பதித்ததாச்சுதென்றதுபோல நடந்துபோனர் குளுந்தமாலைநரித்த மாதரோ. (௩௰)

இன்னிறப்பிறைக்கதிர் திரட்டியீட்டெருப்
பன்னிறத்தலர்ந்தபூப் படர்ந்தகாவிடைக்
கொன்னிறத்தலர்ந்தெனக் கொய்துகொய்துதா
மின்னிறத்தடவிசூழ் விரும்பியேகுவார்.

இ-ள். இன்-இனிய, நிற-நிறத்தையுடைய, பிறை-சந்திரனுடைய, கதிர்-கிரணத்தை, திரட்டி-கூட்டி, ஈட்டெரு-தொகுத்ததுபோல, பல்-பற்பல, நிறத்து-நிறமாய், அலர்ந்த-மலர்ந்த, பூ-பூவெல்லாம், படர்ந்த-விரிந்த, காவிடை-காட்டிடத்து, கொன்னிறம்-வீணனிறமாய், அலர்ந்தென-பூத்ததென்று, கொய்துகொய்து-அறுத்தறுத்து, தாம்-தாமே, மின்-மின்னல்களின், நிறத்து-நிறமாய், அடவி-சோலையை, சூழ்-சூழ, விரும்பி-விரும்பி, ஏகுவார்-திரிவார். எ-று.

உரை.—சந்திரன்கதிரைத் திரட்டிவைத்ததுபோலப் பற்பலநிறமாய் மலர்ந்தபூவெல்லாம் வீணிலே காட்டிடத்துக் கிடந்ததென்று அறுத்தறுத்துத் தாமேமின்னல்கள்போல வச்சோலைசூழ விரும்பித்திரிவார். (௩௧)

கொள்ளைகண்டளியினங் கூவென்றோதையுங்
கிள்ளைகண்டினைவபோற் கீயென்றோதையும்
வள்ளைகொண்டினிதிசை மறலப்பாடினர்
வெள்ளைகொண்மளபல நிறத்தவீகொய்வார்.

இ-ள். கொள்ளை-கொள்ளையை, கண்டு-கண்டு, அளியினம்-வண்டினம், கூவென்-கூவென்னும், ஓதையும்-ஓசையும், கிள்ளை-கிளிகள், கண்டு-கண்டு, இனைவபோல்-இதற்கிரக்கிருற்போல, கீயென்-கீயென்னும், ஓதையும்-ஓசையும், மறல-மயங்க, வள்ளைகொண்டு-வள்ளையென்னும்பாட்டால், இனிது-இனிய, இசை-இராகமாக, பாடினர்-பாடி, வெள்ளைகொண்டு-வெள்ளைமுதல், உள-உள்ள, பலநிறத்த-பலநிறத்தையுடைய, வீ-மலர்களை, கொய்வர்-பறிப்பார்கள். எ-று.

உரை. — சர்வகொள்ளையாகுதென்று கண்டவண்டுகள் கூவென்னு மோசையு மிதற்கிரங்கினாற்போலக் கிளிகள் கீகீ யென்னு மோசையு மயங்க வள்ளைப்பாட்டுபாடி வெள்ளை முதற்பலநிறமாய மலர்களைக்கொய்வார். [வள்ளைப்பாட்டு மாதர்பாட்டு] (௫௨)

ஐயமணிபவளமுத் தம்பொனிற்றெலாம்
பம்மணிபெறவரும் படலைகோர்த்தெனப்
பொம்மணிமலரெலாம் புணர்பொன்னூலினாற்
றம்மணியிணையெனத் தார்பிணிக்குவார்.

இ-ள். ஐ-அழகிய, மணி-மணிகளும், பவளம்-பவளமும், முத்தம்-முத்தும், பொன்-பொன்னும், இற்றெலாம்-இவையெல்லாம், அணிபெற-அழகுபெற, பம்மு-பொருந்தக்கட்டும், அரும்-அரிய, படலை-மாலையாக, கோர்த்தென-கோர்த்ததுபோல, பொம்மு-மிகுந்த, அணி-அழகுள்ள, மலரெலாம்-மலர்களெல்லாம், புணர்-பொருந்த், பொன்னூலினால்-பொன்னூலாலே, தம்-தம்முடைய, அணி-அழகுக்கு, இணையென-இணையாக, தார்-மாலையாய், பிணிக்குவார்-கட்டுவார். எ-று.

உரை. — அழகியமணிகளும் பவளமு முத்தும் பொன்னு மிவையெல்லாம் வடிவுள்ளவணியாகக் கோர்த்ததுபோல முதிர்ந்தவழகுள மலரெல்லாம் பொன்னூலாலே தம்முடைய வழகிணையாக மாலையாய்க்கட்டுவார். (௫௩)

பிணித்ததார்விரலின்மேற் பிரளக்காட்டுவா
ரணித்தகா துனதென விசலியார்த்தபின்
றணித்தபூணொட் * கலஞ் சவிக்கிலுத்தங்கள்
பணித்தபூம்புகைக்குழல் படியச்சூடுவார்.

இ-ள். பிணித்த-கட்டின, தார்-மாலையை, விரலின்மேல்-விரல்மேல், பிரள-சுழல, காட்டுவார்-காட்டுவார், உனது-உன்னுடையது, அணி-அலங்காரம், தகாது-தகாது, என-என்று, இசலி-(தம்முள்)இசலியிட்டு, ஆர்த்தபின்-கூப்பிட்டபின்பு, பூண்-ஆபரணங்கள், தணித்த-தூக்கும், ஒள்-அழகிய, கலம்-மார்பிலேயும், சவி-அழகுடைய, இலுத்தங்கள்-மணிக்கட்டுகளிலேயும், பூம்புகை-வாசப்புகைகள், பணித்த-தோய்த்த, குழல்-மயிர்களிலேயும், படிய-பொருந்த, சூடுவார்-அணிவார். எ-று. அகலமென்னுமொழி-முதற்குறைந்து-கலமெனவாயிற்று.

உரை. — கட்டினமாலைவிரல்மேற் சுழலக்காட்டி யுன்னு நல்லதல்லதென்று தம்முள்ளிசலிக்கூப்பிட்டபின்பு மதை யாபரணங்கள் தூங்குமார்பிலேயு மணிக்கட்டிலேயும் வாசப்புகைகள்தோய்ந்த மயிர்களிலேயும் படியச்சூடுவாரென்க. (௫௪)

முருகுவிம்மியமலர் குடைந்துமூழ்குதேன்
பருகுவிம்மியவளி பசிதவிர்ந்தபின்
னருகுவிம்மியதென வலர்கொய்மங்கைய
ருருகுவிம்மியகளிப் புயிர்த்துப்பாடுவார்.

இ-ள். முருகு-வாசனை, விம்மிய-நிறைந்த, மலர்-மலரை, குடைந்து-கிண்டி, மூழ்கு-உள்ளேகிடக்கும், தேன் - தேனை, பருகு-உண்ணும், விம்மிய-நெருங்கிய, அளி-வண்டுகள், பசி-பசியானது, தவிர்ந்தபின்-ஆறினபின், அருகு-அதினருகே, விம்மியதென-கூப்பிட்டதுபோலவே, அலர்-மலர்களை, கொய்-அறுத்த, மங்கையர்-மாதரும், உருகு-உருகி, விம்மிய-மிகுந்த, களிப்பு-சந்தோஷத்தை, உயிர்த்து-வாய்விட்டு, பாடுவார்-பாடுவார். எ-று.

உரை. — வாசனைநிறைந்த மலரைக்குடைந் துள்ளேகிடக்குந்தேனையுண்ணு நெருங்கியவண்டுகள் பசியாற்றினபின்ன தினருகேநின்று கூப்பிடும்போலவே மலர்களையறுத்தெடுத் தமாதருமுருகிக் கொண்டகளிப்பு வாய்விட்டுக்கொப்புளித்தாலென்னப்பாடுவார். (௫௫)

பூமலிசேக்கைமேற் பொலிந்துநூற்படி
பாமலிபதத்தறம் பழிச்சிப்பங்கயத்
தேமலிசேக்கைமேற் சிறந்தவோதிம
நாமலியினிதிசை நாணப்பாடுவார்.

இ-ள். பூ-மலர்கள், மலி-நிறைந்த, சேக்கைமேல்-மெத்தைமேல், பொலிந்து-இருந்து, நூற்படி-நூலின்படியே, பா-பாவினம், மலி-நிறைந்த, பதத்து-சொற்களால், அறம்-புண்ணியத்தை, பழிச்சி-புகழ்ந்து, தேம்-வாசனை, மலி-நிறைந்த, பங்கய-தாமரையாகிய, சேக்கைமேல்-சயனத்தின்மேல், சிறந்த-சிறப்புற்றிருந்த, ஓதிம-அன்னத்து, நா-நாவின், மலி - மிகும், இனிது - இன்பமான, இசை - ஓசையே, நாண-நாணும்படி, பாடுவார் - பாடுவார். எ-று.

உரை. — மலர்மெத்தைமேலிருந்து நாற்படிமேற்பாடிப் புண்ணியத்தைப்புகழ்ந்து தாமரைமெத்தைமேலிருந் தன்னம் பாடுமோசையேநாண வின்பமாய்ப்பாடுவார். (ருசு)

ஆம்பல்வாய்நறும்விரை யவிழ்த்துவிள்ளிய
வாம்பல்வாய்மலர்ந்தன வணங்கையாரினி
தாம்பல்வாய்க்குரலுட னாய்ந்துவெண்மதி
யாம்பல்வாய்திருந்துணர் வறைந்துபாடுவார்.

இ-ள். ஆம்பல் - மதுவின், வாய்-வழியாய், நறும்-சுகந்த, விரை-வாசனையை, அவிழ்த்து-விட்டு, விள்ளிய-மலர்ந்த, ஆம்பல்-அல்லி (போன்ற), வாய்-தம்வாயை, மலர்ந்தன - திறந்த, அணங்கையார் - மாதர், இனிது-இனிதாய், ஆம்பல்வாய் - வீணையினிடத்து (உண்டாகும்), குரலுடன் - ஓசையைப்போல, ஆய்ந்து-ஆராய்ந்து, வெள்-வெள்ளிய, மதியாம்பல் - சந்திரனொளிவை, வாய்-பொருந்தியதுபோல, திருந்து-தேர்ந்த, உணர்வு-உணர்வுகளை, அறைந்து-சொல்லி, பாடுவார்-பாடுவார். எ-று.

உரை. — மதுவின்வழியாய் வாசனைவிட்டு மலர்ந்தவாம்பலைப்போலுந் தம்வாய்மலர்ந்தமாதரினிதாய் வீணையினோசைபோல வாராய்ந்துசந்திரனொளிவுபோலத் தேர்ந்தவுணர்வுகளைச்சொல்லிப்பாடுவார். (ருஎ)

## வேறு.

விண்புதைத்தமலர்ப்பணைவாய் விரைகுளித்ததேனொ
　　ழுகிக்
கண்புதைத்தவிருட்பொழில்கொள் களிகூர்ந்தநாடிதுவே
களிகூர்ந்தநாடிதுவேல் கண்கடந்தகவினொடி
நளிகூர்ந்தநயனல்கும் வானுலகநாடேமோ.

இ-ள். விண்-மேகத்துள்ளே, புதைத்த-புதைக்கப்பட்ட, மலர்-மலர்ந்த, பணை-கொம்புகளின், வாய்-இடத்து, விரை-மணம், குளித்த-படிந்த, தேன்-தேனானது, ஒழுகி-பெய்து, கண்-கண்ணை, புதைக்கும்-மறைக்கும், இருள்-இருண்ட, பொழில்-சோலைகளை, கொள்-கொண்டு, களிகூர்ந்த-மகிழ்ந்த, நாடு-நாடு, இதுவே-இதுவே, களிகூர்ந்த-(இப்படி) களிகூர்ந்த, நாடதுவேல்-நாடிதுவென்றால், கண்-கண்ணுக்கு, கடந்த-மேவிட்ட, கவினொடு-அழகுகொண்டு, நளிகூர்ந்த-குளுந்த, நயன்-இன்பத்தை, நல்கும்-கொடுக்கும், வானுலகம்-வானுலகத்தை, நாடேமோ-தேடாமலிருப்போமோ. எ-று.

உரை.—மேகத்துள்ளே புதைக்கப்பட்ட மலர்ந்தகொம்புகடோறு மணக்குந்தேனைவிட்டுக் கண்ணைப்புதைக்குமிருளைப்படர்ந்த சோலைகள்சூழ்ந்து களிகூர்ந்தநாடிதுவே. இப்படிகளிகூர்ந்தநாடிதுவென்றாற் கண்கட்டிந்தவழகுகொண்டு குளிர்ந்தவின்பங்கொடுக்கும் வானுலகந் தேடாமலென்ன. (௫அ)

நிழன்மூழ்கும்பூம்பொழில்கண் ணிறமதுகானின்பமலர் குழன்மூழ்குமிசைதுவைப்பக் கோடருஞ்சீர்நாடிதுவே [ற் கோடருஞ்சீர்நாடிதுவேல் கோடுதனக்கொள்புறத்திமைப் வாடருஞ்சீர்மல்கியெழும் வானுலகநாடேமோ.

இ-ள். நிழல்-நிழலால், மூழ்கும்-மறையும், பூம்பொழில்-பூஞ்சோலைகளில், கண்-கண்ணுக்கு, நிறம்-நிறமும், மது-(வாய்க்கு) மதுவும், கான்-(மூக்குக்கு) வாசனையும், இன்பமலர்-(உடலுக்கு) இன்பமுமல்லாமல், குழன்மூழ்கும்-காதின்பத்தின்மூழ்கும்(வீணைபோலே), இசை-(பறவை)யோசை, துவைப்ப-கிளம்பவே, கோடு-குறைதற்கு, அரும்-அரிய, சீர்-செல்வமுடைய, நாடிதுவே-நாடிதுவே, கோடு-குறைதற்கு, அரும்-அரிய, சீர்-செல்வமுடைய, நாடிதுவேல்-நாடிதுவென்றால், கோது-குறை, என-என்று, கொள்-கொண்டு, புறத்து-புறத்தில், இமைப்ப-(மீன்கள்) விளங்க (தள்ளி), வாடரும்-வாடாத, சீர்-செல்வங்கள், மல்கி-நிறைந்து, எழும்-உயர்ந்த, வானுலகம்-வானுலகத்தை, நாடேமோ-தேடாமலிருப்போமோ. எ-று.

உரை.—நிழல்செய்யும் பூஞ்சோலைகளிற் கண்ணுக்கு நிறமும் வாய்க்குமதுவு மூக்குக்குவாசமு முடலுக்கின்பமுங் காதுக்கு வீணைபோலப் பறவையோசையுங்கிளம்பவே கோடாதசெல்வமுடையநாடிதுவே. கோடாதசெல்வமுடைய நாடிதுவென்றாற் குறையென் றுள்ளேயிருக்கவொட்டாமல் மீன்களைப்புறத்தில் விளங்கத்தள்ளி வாடாத செல்வங்களைக் கொண்டவானுலகந்தேடாமலென்ன. (௫௯)

படநாகந்தோலுரித்த பான்மையின்கலுழ்பெருஞ்சித் தடநாகந்தூங்கருவி தாவழ்கார்நாடிதுவே தாவழகார்நாடிதுவேல் தரங்கமிலாதருட்பவ்வம் வாவழகார்திருநிலைத்த வானுலகநாடேமோ.

இ-ள். படம்-படத்தைவிரித்த, நாகம்-பாம்பு, தோல்-தன்சட்டையை உரித்த-கழற்றிய, பான்மையின்-தன்மைபோலே, கல்-கல்லுக்கு, ஊடு-உள்ளே, உரிஞ்சி-உரிஞ்சி, தடம்-உயர்ந்த, நாகம்-மலையிலே, தூங்கும்-தூங்கிவீழும், அருவி-ஆறு, தாவும்-பாயும், அழகு-அழகு, ஆர்-நிறைந்த, நாடு-நாடு, இதுவே-இதுவே, தாவு-கொண்ட, அழகு-அழகு, ஆர்-நிறைந்த, நாடிதுவேல்-நாடிதுவென்றால், தரங்கம்-அலை, இலாத-இல்லாமல், அருள்-கருணையையுடைய, பவ்வம்-கடல், வாவும்-பாயும், அழகு-வடிவு, ஆர்-நிறைந்த, திரு-செல்வம், நிலைத்த-நிலைகொண்ட, வானுலகம்-வானுலகத்தை, நாடேமோ-தேடாமலிருப்போமோ. எ-று.

உரை. — படம்விரித்தபாம்பு தன்றோலையுரித்ததுபோலக் கல்லுக்குள்ளேயுருஞ்சி யுயர்ந்தமலையிலே தூங்கிவிழு மாறுபாய்ந் தழகுநிறைந்தநாடிதுவே. கொண்டவழகினு னிறைந்தநாடிதுவென்று லலையில்லாத கருணைக்கடல்பாய்ந்து வடிவுநிறைந்த செல்வ நிலைகொண்ட வானுலகந்தேடாம லென்ன. (௬௰)

பகைதீர்ந்துசண்பகத்தின் றண்ணிழற்கீழ்ப்பள்ளிவர
மிகைதீர்ந்துபுறத்தெவர்க்கும் வேட்கைசெயுநாடிதுவே
வேட்கைசெயுநாடிதுவேல் விரிகாலத்தியிழ்குன்று
வாட்கைசெயுநிலைமையுள வானுலகநாடேமோ.

இ-ள். பகை-பகையானது, தீர்ந்து-நீங்கினமையால், சண்பகத்தின்-சண்பகவிருக்ஷத்தின், தண்-குளிர்ந்த, நிழல்-நிழலின், கீழ்-கீழே, பள்ளி-நித்திரை, வர-வரவே, மிகை-துன்பங்கள், தீர்ந்து-நீங்கினமையால், புறத்து-புறத்தியிலுள்ள, எவர்க்கும்-எல்லாருக்கும், வேட்கை-ஆசை, செயும்-வருத்துவிக்கும், நாடிதுவே-நாடிதுவே, வேட்கை-ஆசையை, செயும்-வருத்துவிக்கும், நாடு-நாடு, இதுவேல்-இதுவென்றால், விரி-நெடும், காலத்து-காலத்திலும், இயிழ்-இன்பம், குன்று-குறையாத, வாட்கை-வாழ்வை, செயும்-பெறுவிக்கும், நிலைமையுள-குணமுள்ள, வானுலகம்-பரலோகத்தை, நாடேமோ-தேடாமலிருப்போமோ. எ-று.

உரை. — பகையில்லாமையாற் குளிர்ந்தசண்பகத்தினிழலிலேகிடந்து நன்னித்திரைவரவே துன்பங்க ளிங்கில்லாமையாற் பிறர்க்கெல்லா மாசைவருத்துவிக்கு நாடிதுவே. ஆசைவருத்துவிக்கு நாடிதுவென்று லெக்காலமு மின்பங்குறையாதவாழ்வு செய்யுங் குணமுள்ள வானுலகந்தேடாமலென்ன. (௬௧)

நக்களவாய்நயன்கொண்ட நாட்டுநலநாடியகால்
மக்களவாமேனலங்கொள் வானுலகநாடேமோ
வானுலகநாடேமேல் மன்னுயிர்மன்னயன்வெஃகக்
கானுலகங்காட்டுநல மக்கவலைமாற்றுவதோ.

இ-ள். நக்கு-நக்கத்தக்க, அளவாய்-அளவாக, நயன்கொண்ட-நன்மைகளைக்கொண்ட, நாட்டு-நாட்டின், நலம்-செல்வத்தை, நாடியகால்-தேடினபோது, மக்கள்-மனிதருடைய, அவா-ஆசைக்கு, மேல்-மேலும், நலம்-செல்வங்களை, கொள்-கொண்ட, வானுலகம்-வானுலகத்தை, நாடேமோ-தேடாமலிருப்போமோ, வானுலகம்-வானுலகத்தை, நாடேமேல்- தேடாதிருப்போமானால், மன்னு-நிலைபெற்ற, உயிர்-உயிர்கள், மன்-நிலைபெற்ற, நயன்-இன்பத்தை, வெஃக-விரும்பியதினால், கான்-காடு (சூழ்ந்த), உலகம்-இவ்வுலகம், காட்டும்-காண்பிக்கும், நலம்-நன்மை, அக்கவலை-அத்தவாசையை, மாற்றுவதோ-ஆற்றுமோ. எ-று.

உரை.— நக்கத்தக்க தளவாகநன்மைகளைக்கொண்ட நாட்டுச்செல்வத்தைத்தேடினபோது மக்களாசைக்குமேலுஞ் செல்வங்களையுள்ளவானுலகந் தேடாமலென்ன? வானுலகந் தேடாதேபோனா லழியாதவுயிர்களழியாத வின்பம்விரும்பியதினாற் காடுசூழ்ந்த விவ்வுலகங்காட்டுநன்மை யத்தவாசையாற்றுமோவில்லையென்றார். (௩௨)

பண்கனிந்தநரம்புளரிப் பாணிசைகள்பாடலெனக்
கண்கனிந்தகவினல்லார் களிகூர்ந்தின்னதும்பலவுந்
தண்கனிந்ததேனிசையாற் சாற்றலொடுபலநாளும்
விண்கனிந்தவின்புண்பார் விழைவோங்கவந்நாடே.

இ-ள். கனிந்த-இன்பமுள்ள, பண்-வீணையின், நரம்பு-நரம்புகளை, உளரி-தடவி, பாணிசைகள்-இசைப்பாட்டுகளை, பாடலென-பாடினதுபோல, கண்-கண்ணுக்கு, கனிந்த-இன்பஞ்செய்யும், கவினல்லார்-நல்லழகுடையார், களிகூர்ந்து-சந்தோஷித்து, இன்னதும்-இதையும், பலவும்-பல்லவையும், தண்-குளிர்ந்த, கனிந்த-இன்பமுள்ள, தேன்-தேனையொத்த, இசையால்-ஓசையால், சாற்றலொடு-பாடவே, பலநாளும்-பலநாளும், விண்-வானுடைய, கனிந்த-முதிர்ந்த, இன்பு-இன்பத்தை, உண்பார்-அநுபவிப்பார், அந்நாடு-அந்நாடெல்லாம், விழைவு-களிப்பில், ஓங்க-ஓங்கவே. எ-று.

உரை.— வீணையின்பமாயிப் பாடினதுபோலக் கண்ணுக் கின்பஞ்செய்யு மழகுடையார் களிகூர்ந் திதையும் பலவுங்

குளிர்ந்த தேனின்பத்தோடே பாடியதினுற் பலநாளும் வா
ளுடையவின்ப மநுபவிப்பா ரந்நாடெல்லாங் களிகூரவே.
(௯௩)

## வேறு.

தேயமுழங்கினவாலைகள் பண்டிக டேயமுழங்கினபா
வாயமுழங்கினவார்புகழ்சங்குக ளாயமுழங்கினமேற்
பாயமுழங்கினமேடகமின்புனல் பாயமுழங்கினநீர்
தோயமுழங்கினமேதிகடெண்டிரை தோயமுழங்கிழையார்

இ-ள். தேய-தேயவே, ஆலை-ஆலைகளும், முழங்கின-முழங்கின, பண்டிகள்-வண்டிகளும், தேய-தேயவே, முழங்கின-முழங்கின, பா-பாட்டுகள், ஆய-ஆகிய, ஆர்-நிறைந்த, புகழ்-புகழ்களும், முழங்கின-முழங்கின, சங்குகள்-சங்குகளும், ஆய-அத்தன்மையாகவே, முழங்கின-முழங்கின, மேல்-மேலே, மேடகம்-ஆட்டுக்கடாக்களும், பாய-(ஒன்றோடொன்று) பாயவே, முழங்கின-முழங்கின, மின்-மின்னலும், புனல்-மழையில், பாய-பாயவே, முழங்கின-முழங்கின, நீர்-தண்ணீரிலே, மேதிகள்-எருமைகளும், தோய-தோய்ந்துவிழவே, முழங்கின-முழங்கின, தெண்-தெளிந்த, திரை-நீரில், இழையார்-ஆபரணங்களையுடையமாதர்களும், தோயவே-தோய்ந்துவிழவே, முழங்கு-முழங்கின. எ-று.

உரை.—தேயவே யாலைகளும் வண்டிகளு முழங்கின, பாவாகவே நிறைந்தபுகழ்களுஞ் சங்குகளு முழங்கின, பாயவே கிடாய்களுந்தியுமுழங்கின, தண்ணீரிலே தோய்ந்துவிழவே யெருமைகளு மாதர்களு முழங்கினவென்க. (௯௪)

கான்றிரள்சிந்தியசோலையிபஞ்செறிகான்மலர்சிந்தியதீ
தேன்றிரள்சிந்தியபூதரளஞ்செறி தீம்புனல்சிந்தியவான் [ந்
மீன்றிரள்சிந்தியமானவளஞ்செறி வேய்மணிசிந்தியபா
லான்றிரள்சிந்தியசீரொவையுஞ்செறியார்பொழில்சிந்தியதே

இ-ள். சோலை-சோலைகள், திரள்-மிகுந்த, கான்-வாசனை, சிந்திய-வீசின, இபம்-கொம்புகள், செறி-மிகுந்து, கான்-வாசனைபொருந்திய, மலர்-புட்பங்களை, சிந்திய-சொரிந்தன, பூ-மலர்கள், தீம்-இனிய, தேன்-தேனை, திரள்-மிகுதியாய், சிந்திய-பொழிந்தன, தீம்-இனிய, புனல்-மழை, செறி-அடர்ந்து, தரளம்-முத்து(போல), சிந்திய-பெய்தன, வான்-வானம், மீன்றிரள்-நட்சத்திரகணங்களை, சிந்திய-விடுத்தது, மான-போல, வளம்-அழகு, செறி-நிறைந்து, வேய்-அலங்கரிக்கும், மணி-நவமணிகள், சிந்திய-(எங்கும்) பரவின, ஆன்றிரள்-பசுக்கூட்டங்கள், பால்-பாலை, சிந்தின-சொரிந்தன, செறி-நிறைந்து, ஆர்-இருக்கின்ற, பொழில்-சோலைகள், சீரொவையும்-செல்வங்களெல்லாம், சிந்தியதே-சிந்தின. எ-று.

உரை. — சோலைகளிடத்தில் வாசனையுங் கொம்புகளிடத்தில் மலர்களு மலரிடத்திற்றேனும் வானிடத்தில் மீன்கள்போல வெங்கு நவமணிகளும் பசுக்களிடத்திற் பால்முதலிய சுவைகளுங்கொண்டு செல்வநிறைந்த நாடதுவே. (சுரு)

ஆலையின்வாயுளதேனகலுந்தரு வார்மலர்வாயுளதேன்
சோலையின்வாயுள்தேனொடு தூறிய தூய்கனிவாயுளதேன்
மாலையின்வாயுளதேனளிவந்த விறாலதின்வாயுளதேன்
வேலியின்வாயுளதேரியசெந்நெல் விளைக்குவபாயினவே.

இ-ள். ஆலையின்-ஆலைகளின், வாய்-இடத்தில், உள-உள்ள, தேன்-தேனும், அகலும்-விரிந்த, தரு-மரங்களில், ஆர்-பொருந்திய, மலர்வாய்-மலர்களிடத்து, உள்-உள்ள, தேன்-தேனும், சோலையின்வாய்-சோலையிடத்து, உள-உள்ள, தேனொடு-தேனோடு, தூறிய-சிதறிய, தூய்-பரிசுத்தமாகிய, கனி-கனிகளின், வாய்-இடத்தில், உள-உள்ள, தேன்-தேனும், மாலையின்-மாலைகளிடத்து, உள-உள்ள, தேன்-தேனும், அளி-வண்டுகள், வந்த-வந்துசூழ்ந்த, இறாலதின்-தேன்கூட்டின், வாய்-இடத்து, உள-உள்ள, தேன்-தேனும், வேலியின்-வயலின், வாய்-இடத்து, உள-உள்ள, தேரிய-முதிர்ந்த, செந்நெல்-செந்நெல்லை, விளைக்குவ-விளைவிக்கும்படியாய், பாயின-பாய்வன. எ-று.

உரை. — ஆலைகளிடத்திலு மரங்கள்பூத்த மலரிடத்திலுஞ்சோலையிலுள்ள பனைமுதலியனவிடத்திலுங் கனிகளிடத்திலு மாலைகளிடத்திலும் வண்டுசூழ்ந்த விறாட்டிடத்திலுமுள்ள தேனெல்லாம் வயலிடத்திற் செந்நெல்விளையும்படி பாய்வனவென்க. (சு[illegible])

பானழகேதனிகாட்டியபங்கய நானமுயங்கழகே
மீனழகேதனிகாட்டியவிண்டவிர் வீயினமண்டழகே
தேனழகேதனிகாட்டியதெண்டுளி மாரிசெறிந்தழகே
வானழகேதனிகாட்டுபளிங்கென வாவிவழங்கழகே.

இ-ள். பானு-சூரியனது, அழகு-அழகை, நானம்-வாசனை, முயங்கு-சூழ்ந்த, பங்கயம்-தாமரை, அழகு-அழகு, தனி-மிகவும், காட்டிய-காட்டு[illegible] மீன்-நட்சத்திரங்களின், அழகு-அழகை, விண்டு-மலர்ந்து, அவிர்-விளங்கு[illegible] வீ-மலர்களின், இனம்-வருக்கங்கள், மண்டு-நெருங்கும், அழகு-அழகு, த[illegible] மிகவும், காட்டிய-காட்டும், செறிந்து-நெருங்கிப் (பெய்யும்), மாரி-மேக[illegible]

ன், தெண்-தெளிந்த, துளி-துளிகளின், அழகு-அழகை, தேன்-(சொரிந்த) தேன், அழகு-அழகு, நனி-மிகவும், காட்டிய-காட்டும், வானழகு-வானுள்ள வழகை, நனி-மிகவும், காட்டு-காட்டுகின்ற, பளிங்கென-கண்ணாடிபோல, வாவி-குளங்களின், அழகு-அழகு, வழங்கு-வழங்கும். எ-று.

உரை. — சூரியனழகைத் தாமரையழகுகாட்டவு மீன்களழகைமற்றநீர்மல ரழகுகாட்டவு மேகத்துளியழகைச் சொரிந்ததேன்காட்டவும் வானுள்ளவழகைக்காட்டுங் கண்ணாடி போலுங் குளங்களுடைய வழகென்க. (௬௭)

காரொடுநேர்பொருதும்பொறையேபொழி காரொடு
கைபொருதுந் [ம்
தாரொடுநேர்பொருதுங்கலனேதட மாரொடுதார்பொருது
பாரொடுநேர்பொருதுஞ்சகடேநளிர் பாவொடுபாபொரு
துஞ் [ருதும்.
சீரொடுநேர்பொருதும்பொழிலேசெழு வீடொடுசீர்பொ

இ-ள். பொறை-மலை, காரொடு-மேகங்களோடு, நேர்-ஒப்ப, பொருதும்-பொருதும், கை-(கொடுப்போர்)கையே, பொழி-பெய்யும், காரொடு-மழையோடு, பொருதும்-பொருதும், கலன்-பொன்னணிகள், தாரொடு-மாலைகளோடு, நேர்-ஒப்ப, பொருதும்-பொருதும், தார்-அம்மாலைகள், தட-அகன்ற, மார்பொடு-மார்போடு, பொருதும்-பொருதும், பாரொடு-பூமியோடு, சகடு-வண்டிகள்; நேர்-ஒப்ப, பொருதும்-பொருதும், நளிர்-குளிர்ந்த, பாலொடு-பாலோடு, பா-பாவினிமை, பொருதும்-பொருதும், சீரொடு-செல்வங்களோடு, நேர்-ஒப்ப, பொழில்-நாடு, பொருதும்-பொருதும், செழும்-செழிய, சீர்-(அந்நாட்டுச்)செல்வம், வீடொடு-வீட்டுச்செல்வத்தோடு, பொருதும்-பொருதும். எ-று.

உரை. — மலையுச்சி மேகங்களோடுபொருதவுங் கொடுப்போர்கையே மழையோடு பொருதவும் பொன்னணிகள்மாலைகளோடுபொருதவு மம்மாலைகள் மார்போடுபொருதவும் பூமியோடுவண்டிகள்பொருது நடக்கவுங் குளிர்ந்தபாலோடு பாவினிமைபொருதவு நான்கொள்ளாத தொன்றுண்டோ வென்றதுபோலச் செல்வங்களோடுநாடுபொருதவு மந்நாட்டுச்செல்வம்வீட்டுச்செல்வத்தோடுபொருதுமென்க. (௬௮)

காலையொளிர்ந்துளிமொட்டிதழ்விண்ட கடிக்கமலத்த
விசின்
சூலையுளைந்தொளிர்முத்துசொரிந்தவளைக்குலநின்றிரிய
மாலையுறைந்துளிபொற்சிறைவந்தது தற்கருவென்றடைகாத்
தாலையுளைந்திழியிக்கிடுமின்ப மவித்திசைபாடினவே.

இ-ள். காலை-காலமே, ஒளிர்ந்துளி-(சூரியன்)பிரகாசித்தபோது, மொட்டு-அரும்புகளின், இதழ்-இதழ்கள், விண்ட-மலர்ந்த, கடி-வாசனைபொருந்திய, கமலம்-தாமரைமலராகிய, தவிசின்-மெத்தைமேல், சூலை-சூலால், உளைந்து-நொந்து, ஒளிர்-விளங்கும், முத்து-முத்துக்களை, சொரிந்த-பொழிந்த, வளைக்குலம்-சங்கினங்கள், நின்று-அம்முத்துக்களினின்று, இரிய-சாய்ந்து போக, மாலை-சாயங்காலம், உறைந்துளி-வந்தபோது, பொன் - அழகிய, சிறை - இறகையுடைய அன்னப்புள், வந்து-வந்து, அது - அம்முத்துக்கள், தற்கருவென்று-தன்கருவென்று, எண்ணி-கருதி, அடைகாத்து-அடைகாத்து, ஆலை-ஆலையிடத்து, உளைந்து-நைந்து, இழி-இறங்குகின்ற, இக்கு-கருப்பஞ்சாறு, இடும்-தரும், இன்பம்-இன்பத்தை, அவித்து-விட, இசைபாடின-இன்னிசையாய்ப்பாடின. எ-று.

உரை. — காலமேயரும்புகளைமலர்ந்த வாசத்தாமரை மெத்தைமேற் சூலுளைந்து சங்குகள் விளங்கு முத்துக்களை யீன்றப்பால்சாய்ந்துபோகச் சாயுங்காலத்தி லன்னம்வந்து கண்டமுத்து தன்கருவென்றெண்ணி யடைகாத்துக் கருப்பஞ்சாற்றின்பத்தி லு மினிதாய்ப்பாடுமென்க. (கா சு)

காவிடைமாதவர்கந்தமவிந்தன கஞ்சமிடைந்தனமே
பூவிடைதேனளிகொம்புமலிந்து புகன்றமடங்கிளிகள்
நாவிடைபாவினநங்கையினன்கையி னம்புநரம்புளயாழ்
யாவிடையாயினுமென்றுமருந்தயை யெந்தையைவாழ்த்தி
[னவே.

இ-ள். காவிடை-காட்டிடத்தில், மாதவர்-முனிவரும், கந்தம்-வாசனை, மவிந்தன-மிகுந்த, கஞ்சம்-தாமரையிடத்தில், மிடைந்து-நெருங்கிய, அனம்-அன்னங்களும், பூவிடை-மலரிடத்தில், தேனளி-தேன்வண்டுகளும்; கொம்பு-கொம்பிடத்தில், மலிந்து-நிறைந்து, புகன்ற-பேசின, மடம்-மடமையுள்ள, கிளிகள்-கிளிகளும், நாவிடை-நாக்கிடத்தில், பாவினம்-பலபாட்டும், நங்கையின்-மாதர்களின், நன்-அழகிய, கையின்-கையிடத்தில், நம்பு-விரும்பும், நரம்புள-நரம்புகளுள்ள, யாழ்-வீணைகளும், யாவிடையாயினும்-எவ்விடத்தும், என்றும்-எக்காலத்தும், அரும்-அரிய, தயை-தயையுள்ள, எந்தையை-ஆண்டவனை, வாழ்த்தினவே-வாழ்த்தினவாமே. எ-று.

உரை. — காட்டிடத்தில் முனிவரும் வாசத்தாமலிடத்தி லன்னமு மலரிடத்தில்வண்டுகளுங் கொம்பிடத்திற்பேசுங் கிளிகளும் - நாக்கிடத்தினியபாவும் - மாதர்கையிடத்தில்வீணைகளும் எவ்விடத்துமெக்காலத்து மரியதையையுள்ளவாண்டவனைவாழ்த்திய வோசைகிளம்பிற்றென்க. (௭௰)

அறத்திறரும்புகழொண்புகழென் வடும்பகைநின்
றனர்கொல்
திறத்திறரும்புகழ்வஞ்சனையென்று தெளிந்தமனஞ்சிதைய
மறத்திறருங்களிதன்பெனவந்து மயங்கிவழங்குமெலாம்
புறத்திறருங்களிபொன்றிலவுண்டன பொன்பொழில்பொ
[ங்கினவே.

இ-ள். அறத்தில்-அறத்தால், அறும்-வரும், புகழ்-புகழே, ஒண்-நல்ல, புகழென்ப-புகழென்றும், அடும்-கொல்லும், பகை-பகையாய், நின்றனர்-நின்றவரை, கொல்-கொல்லும், திறத்தில்-வல்லமையால், அறும்-வரும், புகழ்-இசை, வஞ்சனையென்று-வஞ்சனையென்றும், தெளிந்த-தேர்ந்த, மனம்-உள்ளம், சிதைய-கெட, மறத்தில்-பாவத்தால், அறும்-வரும், களி-இன்பம், அன்பென் - அன்பமென்றும், வந்து-வந்து, மயங்கி-மயங்கி, வழங்கும்-நடக்கும், எலாம்-எல்லாம், புறத்தில்-புறத்து (நீக்கி), அறும்-வரும், பொன்ற-முடிவு, இல்-இல்லாத, களி-களிப்பை, உண்டன-புசித்த, பொன்-அழகிய, பொழில்-அந்நாடு, பொங்கின-ஓங்கின. எ-று.

உரை. — அறத்தினால்வரும்புகழே நற்புகழென்றுந் தன்பகைகொல்லுந் திறத்தினால்வரும்புகழ் வஞ்சனையென்றுந் தெளிந்தவுள்ளத்தைக் கெடுக்கும் பாவத்தினால்வருமின்பத்துன்பமென்று மயக்குவிக்குமெல்லாம் புறத்துநீக்கி முடியாத களிகூர்ந் தந்நாடோங்கினவென்க. (௭௧)

எல்லைநிகழ்த்தியவெல்லெனவெல்லையி லெந்தைநிகழ்த்தி
யநூல்
வில்லைநிகழ்த்தியமெய்மறையின்விதி யுண்மைநிகழ்த்தியநா
யொல்லைநிகழ்த்தியவொண்ணறமொன்றிய வுள்ளநிகழ்த்திய
சீர் [ரோ.
சொல்லைநிகழ்த்திய நுண்மையறிந்தவர் சொல்விநிகழ்த்துவ

இ-ள். எல்லை-சதிரை, நிகழ்த்திய-விட்ட, எல்லென-சூரியனைப்போல, எல்லை-அளவு, இல்-இன்றி, எந்தை-என்பிதா, நிகழ்த்திய-உரைத்த, நூல்-நூ

வின், வில்லை-ஒளியை, நிகழ்த்திய-விளங்கச்செய்த, மெய்-மெய்யான், மறையின்-வேதத்தின், விதி-விதிகளின், உண்மை-சத்தியத்தை, நிகழ்த்திய-விளக்கிய, தூய்-பரிசுத்தமாக, ஒல்லை நிகழ்த்திய-விரைந்துசெய்த, ஒண்-நல்ல, அறம்-அறங்கள், ஒன்றிய-இசைந்த, உள்ளம்-மனம், நிகழ்த்திய-கொண்ட, சீர்-செல்வங்களுக்குரிய, சொல்லை-சொற்களை, நிகழ்த்திய-கொன்ன, நுண்மை-நுட்பத்தை, அறிந்தவர்-அறிந்தகற்றோர், சொல்லி-சொல்லி, நிகழ்த்துவரோ-நடத்துவாரோ. எ-று.

உரை — கதிர்விட்ட சூரியனைப்போல முடிவின்றி யென்பிதாவுரைத்த நூலின்றெளிவுடைய மெய்யான வேதவிதிகளின் படியே விரைந்துசெய்த நல்லறங்களைக்கொண்ட மனத்தினுள்ள செல்வங்களைச் சொல்லருமையறிந்தகற்றோர் சொல்லுவாரோ. (௭௨)

ஆற்றவருந்தில நல்லறமல்லது மல்லவையில்லையெனு
மாற்றவருந்துயரில்லதுமுண்மயல் மல்கலுமில்லையெனு [ச
வேற்றவருந்துதியொல்லொலியல்லது மெள்ளலுமில்லையெனு
சாற்றவருந்தினுமொல்லுமருந்தமி ழுஞ்சமமல்லதுவே.

இ-ள். ஆற்ற-செய்ய, வருந்தில-வருத்தமில்லாத, நல்-நல்ல, அறமல்லதும்-அறங்களொழிய, அல்லவை-தீவினைகள், இல்லை-இல்லை, மாற்ற-நீக்க, அரும்-அரிய, துயர்-துன்பங்கள், இல்லதும்-இல்லாமல், உள்-மனதின், மயல்-மயக்கம், மல்கலும்-பெருகுதலும், இல்லை-இல்லை; ஏற்ற-துதிப்ப; அரும்-அரிய, துதி-புகழினது, ஒல்லொலி-ஒல்லென்னுமொலி, அல்லதும்-அல்லாதே, எள்ளலும்-இகழ்ச்சியும், இல்லை-இல்லை, சாற்ற-(இதெல்லாஞ்)சொல்ல, வருந்தினும்-வருந்தினாலும், அரும்-அரிய-, தமிழும்-தமிழ்முதலாய், ஒல்லும்-பொருந்தும், சமம்-உவமை, அல்லது-அல்ல. எ-று. எனு-எண்ணிடைச்சொல்.

உரை — வருந்தாமற்செய்த நல்லறங்களொழியத் தீவினையொன்றில்லை, தள்ளப்படாத துன்பங்களில்லாமலுள்ளமயக்கமுமில்லை, புகழ்வோரல்லாதே யிகழ்ச்சிசொல்லுவாருமில்லை, இதெல்லாஞ்சொல்லவருந்தினாலுமருந்தமிழ்முதலாயொத்த தல்லதெனக. (௭௩)

## வேறு.

பூமலிந்த பொருத்தரும்பொற்பெலாம்
பூமலிந்து பொருத்தியபொற்பினால்
நாமலிந்த நசைக்குயர் நாடினு
நாமலிந்த விசைக்குயர் நாட்டே.

இ-ள். பூ-பூவுலகம், மலிந்த-நிறைந்த, பொருத்து-தம்முட்சேர்த்தற்கு, அரும்-அரிய, பொற்பு-அழகு, எலாம்-எல்லாம், பூ-மலர், மலிந்து-மிகுந்து, பொருத்திய-(அந்நாடிற்) சேர்த்த, பொற்பினால்-அழகினால், நாம்-நாம், மலிந்து-நிறைந்த, நசைக்கு-ஆசைக்கு, உயர்-மேலும், நாடினும்-(வருத்தித்) தேடினும், நா-நாக்கில், மலிந்த-நிறைந்த, இசைக்கு-சொல்லுக்கு, உயர்-மேற்பட்ட, நாடதே-நாடதுவே. எ-று.

உரை.—பூவுலகங்கொண்ட தம்முட்சேர்க்கப்படாத வழகெல்லா மலர் நிறைந்தநாட்டில் மிகுதிசேர்ந்ததினால் நாங்கொண்ட நிறைந்தவாசைக்குமேலும்வருந்தித்தேடினு நாக்கிசைந்த நிறைந்தசொற்குமேலு நின்றநாடதுவே. (எச)

வண்டுரைத்து மலர்ந்தலர்ப்புண்ணலால்
வண்டுரைத்து மலர்ந்தகப்புண்ணிலால்
வண்டுரைத்து மயக்கிலநாடலை
வண்டுரைத்து மயக்குறுநாடதே.

இ-ள். வண்டு-வண்டுகள், உரைத்து-ஒலித்து, அலர்-மலர்களை, மலர்ந்து-குடைந்து(படுத்திய), புண்ணலால்-புண்ணல்லாமல், வண்டு-அம்பு, உரைத்து-தைத்து, மலர்ந்து-பிளந்த, அக-மார்பின், புண்ணிலால்-புண்ணில்லாமல், வண்டு-குற்றம், உரைத்து-பட்டு(ஆய), மயக்கு-மனமயக்கம், இல-இன்றி, அலை-கடலை, நாடு-நாடிய, வண்டு-சங்குகள், உரைத்து-ஒலித்த, மயக்கு-ஓசைமயக்கமொன்றே, உறும்-அடையும், நாடதே-நாடதுவே. எ-று.

உரை.—வண்டுகளொலித்து மலர்களைக்குடைந்து படுத்திய புண்ணல்லாமல்அம்புதைத்துப் பிளந்தமார்பின் புண்ணில்லையே,குற்றத்தினாலாய மயக்கமின்றிக் கடலைநாடிய சங்குகளோசையொன்றே மயங்கிமுழங்குநாடதுவே. (எரு)

மாலைமாறி வயங்கியமாமதி
மாலைமாறி வயங்கியமாதர்கள்
மாலைமாறிய கற்புடைமார்புறை
மாலைமாறிய கற்புடைமாண்பரோ.

இ-ள். மாலை-இரா, மாறி-நீக்கி, வயங்கிய-விளங்கிய, மாமதி-முழுமதியினை, மாலை - இயல்பை, மாறி - விட்டு, வயங்கிய-விளங்கிய, மாதர்கள்-பெண்கள், மாலை-மயக்கம், மாறிய-நீங்கிய, கற்புடை-கற்புடைய, மார்பு-மார்பிலே, உறை-இருக்கும், மாலைமாறிய-மாலையாகக்கட்டப்பட்ட, கற்புடை - முல்லைப்பூவினது, மாண்பர்-அழகொத்தவர்கள். எ-று. ஓகாரம்-ஈற்றசை.

உரை. — இரவினிருளைமாற்றி விளங்கிய முழுமதிகுணத்தைமறைத்து விளங்குகின்றமாதர்கள் மயக்கமில்லாத கற்புடையமார்பிலே தூங்கு மாலையாகக்கட்டப்பட்ட முல்லைப்பூவழகொத்தாரோவென்க. (எசு)

மாசிகற்கு வழங்கியவம்பிலார்
மாசிகற்கு வழங்கியவன்பினர்
தேசிகத்திணை சீர்வரைத்தோளினர்
தேசிகத்திணை சீர்வரைத்தோதுமார்.

இ-ள். மாசு-குற்றத்திறல் (எதிர்க்கின்ற), இகற்கு-பகைவர்க்கு, வழங்கிய-வழங்கும், அம்பு-அம்பு(முதலியவாயுதம்), இலார்-இல்லாதவர்களாய், மாசு-மேகத்தின், இகற்கு-தன்மைக்கு, வழங்கிய-வழங்கும், அன்பினர்-அன்புடையாராகி, தேசிகத்து-பொன்னுடைய, சீர்-சிறப்புபொருந்திய, வரை-மலையை, இணை-ஒத்த, தோளினர்-புயங்களையுடையவீரர், தேசிகத்து-(கொண்ட) புகழ்ச்சிக்கு, இணை-சரியாகிய, சீர்-சிறப்பை, வரைத்து-எழுதி, ஓதுமார் - சொல்வார்(எவரோ). எ-று.

உரை. — குற்றத்திறல்வழங்கும் பகைவர்மேலே தொடுத்தவம்புமுதலிய வாயுதமின்றி மேகத்தின்றன்மையாகவழங்குமன்புடையராகிப் பொன்மலையொத்த புயங்களையுடையவீரர்கொண்ட புகழ்ச்சிக்குச்சரியா யெழுதிச்சொல்வா ரெவரோ. (எஎ)

அல்லதில்லை யருந்தவமாய்த்திரு
வல்லதில்லை யருந்தவளித்தலாற்
புல்லதில்லை புனைந்தறமாட்சியாற்
புல்லதில்லை புனைந்தனவாழ்க்கையால்.

இ-ள். அருந்தவமாய் - அருந்தவத்தினால், அல்லது - இருளானதும், இல்லை - இல்லை, அருந்த - உண்க, அளித்தலால் - கொடுத்தலால், திரு - செல்வம், அல்லது - இல்லாதவரும், இல்லை - இல்லை, புனைந்து - கொண்ட, அறம் - அறத்தின், மாட்சியால் - மாட்சிமையால், புல்லது - புன்மையும், இல்லை - இல்லை, புனைந்தன - நிறைந்த, வாழ்க்கையால் - வாழ்வுகளினால், புல்லது - குறையும், இல்லை - இல்லை. எ-று.

உரை. — அருந்தவத்தினலங்கேயிருளுமில்லை, எவரும் நிறையவுண்கவளித்தலாற் செல்வமில்லாருமில்லை, கொண்டவறத்தின்மாட்சிமையாற் புன்மையுமில்லை, அங்கேவாழ்வெல்லா நிறைந்ததினாற் கூட்டவேண்டியது மில்லையென்க. (எஅ)

இருளகன்றவி ரெல்வினைபோலெலா
விருளகன்றவி ரில்வினையோரெலா
மருளகன்றகைப் பாருமிலாமையா
லருளகன்றகைப் பாரலதில்லையே.

இ-ள். இருள் - இருள், அகன்று - நீக்கி, அவிர் - விளங்கும், எல் - சூரியனது, வினை - தொழிலை, போல் - போல, இருள் - மனமயக்கம், எலா - எல்லாம், அகன்று - தவிர்ந்து, அவிர் - விளங்கும், இல்வினையோர் - இல்வாழ்வார், எலாம் - எல்லாரும், அருள் - (செய்யுந்) தயை, அகன்ற - ஒழிந்த, கைப்பாரும் - முனிப்பாரும், இலாமையால் - இல்லாததினால், அருள் - கொடை, அகன்ற - மிகுந்த, கைப்பார் - சிறந்தோர், அலது - அல்லாது, இல்லை - இல்லை. எ-று.

உரை. — இருளை நீக்கி விளங்கும் பருதிபோல மனமயக்கத்தையெல்லாந்தவிரு மில்வாழ்வாரெல்லாருஞ் செய்யுந்தயையொழிந்து முனிப்பாருமில்லாததினு லீகைகொடுக்க மனங்கொண்ட பெருமையோரல்லாது மில்லையென்க. (எகூ)

வேயுமுத்த மிடைந்தனவேலிவாய்
வேயுமுத்த மிடைந்தனவேலைவாய்
வாயுமுத்த மலிந்தனதீங்கழை
வாயுமுத்த மலிந்தனவாயெலாம்.

இ-ள். வேயு-மூங்கிலிடத்து, முத்தம்-முத்துகள், மிடைந்தன-நிறைந்தனவும், வேலி-வயலின், வாய்-இடத்து, வேயும்-உண்டாகும், முத்தம்-செந்நெல்முத்துகள், மிடைந்தன-நிறைந்தனவும், வேலைவாய்-கடலிடத்து, வாயும்-உள்ள, முத்தம்-பெருமுத்துகள், மலிந்தன-(அங்கே) நிறைந்தனவும், தீம்-இனிய, கழை-கரும்பிடத்து, வாயும்-உள்ள, முத்தம்-முத்துகள், மலிந்தன-நிறைந்தன, வாயெலாம்-எவ்விடத்தும். எ-று.

உரை. — மூங்கிலிடத்து முத்துகள்நிறைந்தனவும் வயலிடத்துச் செந்நெல்முத்துகள் நிறைந்தனவுங் கடலிடத்துள்ளபெருமுத்துகளங்கேநிறைந்தனவுங் கரும்பிடத்துள்ளமுத்துகள் நிறைந்தனவுமாகையி லிடமெல்லா முத்துகளே மலிந்தனவென்க. (அய)

செல்வின்மாரி திளைத்தெனவள்ளியோர்
செல்வின்மாரி திளைத்தனவண்மையே
சொல்வின்மாரி சொரிந்தெனவேதிலாச்
சொல்வின்மாரி சொரிந்தனவேதியார்.

இ-ள். செல்வின்-மேகங்களினின்று, மாரி-மழை, திளைத்தென-சொரிவது போல, வள்ளியோர்-அளவின்றிக்கொடுப்போரிடத்து, செல்வின் - சென்றால், வண்மை - ஈகை, மாரி-மழையாக, திளைத்தன-சொரியும், சொல்வின்மாரி-தேன்மழை, சொரிந்தென-பொழிவது(போல), ஏது-குறை, இலா- இல்லாத, சொல்வின்மாரி- சொன்மழையை, வேதியார் - குருக்களே, சொரிந்தன-பொழிவார். எ-று.

உரை. — மேகங்கள்பொழிந்த மழைபோல வள்ளியோரைச்சென்று னிறையக்கொடுப்பார், தேன்மழைபொழிந்தது போலக் குறையில்லாதவித்திகளைக் குருக்களே பொழிவாரென்ப. (அக)

வாவியங்கய மல்கிய நாண்மலர்
வாவிபங்கய மல்கிய மாண்பெனப்
பாவியங்கிய லாட்பய னூகையாற்
பாவியங்கிய யாப்பயன் சால்புரோ.

இ-ள். வாவு-அகன்ற, இயம்-கொம்புகளிடத்து, அயம்-நீர்க்குளிர்ச்சி, மல்கிய-நிறைந்த, நாண்மலர்-புதுமலர்களே, வாவி-குளங்களிடத்து, மல்கிய-நிறைந்த, மாண்பு-அழகுள்ள, பங்கயமென-தாமரைபோலவே (குளிர்ந்து தோன்ற), அங்கு-அங்கே, பாவி-பாவிகள், இடரா-பொருந்தாத, பயனுகையால்-தன்மையாலகையால் (அந்நாட்டுச் செல்வத்தையுரைப்ப), பா-கவிகளில், இயங்கிய-தங்கிய, பயன்-பயன்களுக்குள்ளே, யா-எது, சால்பு-தகுதியாம். எ-று. அரோ-அசை.

உரை. — அகன்றகொம்புகளிடத்துக் குளிர்ச்சிநிறைந்த மலர்களே குளங்களிடத்து நிறைந்ததாமரைபோலவே குளிர்ந்து தோன்ற அங்கேபாவிகளில்லாமையா லந்நாட்டுச்செல்வத்தையுரைப்பக் கவிகளாற்சொல்லப்பட்ட பயன்களுக்குள் ளெதுபொருந்துமென்ப. (௮௨)

பாரணிந்த வணிக்கலப் பான்மையாற்
சீரணிந்த செழுந்தட நாட்டிடை
மாரணிந்தணி மாமணி மானிய
வேரணிந்த நகர்க்கியலேற்றுவாம்.

இ-ள். பார்-பூவலகம், அணிந்த-அணிந்த, அணிக்கலம்-ஓராபரணத்தின், பான்மையால்-தன்மைபோல, சீர்-செல்வங்களை, அணிந்த-அணிந்து (வாழும்), செழும்-செழுமையுள்ள, தட-விசாலமாகிய, நாட்டிடை-அந்நாட்டிடத்து, மார்-(பூமிதன்) மார்பிலே, அணிந்து-அணிந்த, அணி-அழகுள்ள, மா-பெரிய, மணி-மணியை, மானிய-ஒத்த, ஏர்-அழகு, அணிந்த-உள்ள, நகர்க்கு-அந்நகர்க்குரிய, இயல்-இயல்பினை, ஏற்றுவாம்-புகழ்ந்து சொல்வோம். எ-று.

உரை. — பூவலகிற்கோராபரணம்போலச் செல்வங்களை யணிந்துவாழுமந்நாட்டிலேயிருக்கு நகரோவென்றூற் பூமி தன்மார்பிலேயணிந்த வேரழகுள பெரியமணியேபோலத் தோன்றி யழகணிந்த வந்நகரியல்பினைப்புகழ்ந்து இனிச்சொல்வாம். (௮௩)

நாட்டுப் படல முற்றும்.

ஆகவிருத்தம் - ௬௩.

# இரண்டாவது

# நகரப்படலம்.

## வேறு.

மெய்வ்வழிமறைநூனீங்கி வியனுலகினிதென்றின்று
வவ்வழிவுற்றதென்ன வதித்தெமை யளித்துக்காக்கச்
செவ்வழியுளத்த தூயோன் றெரிந்தமா நகரிதென்று
விவ்வழிபின்னருண்டோ வெருசலேநகரைவாழ்த்த.

இ-ள். மெய்-மெய்யான, மறைநூல்-வேதநூலின், வழி-நெறியை, நீங்கி-விட்டு, வியன்-பெரிய, உலகு-உலகத்தோர், இனிதென்று-இன்பமென்று(செய்த), இன்று-பாவத்தினால், வவ்வு-வந்த, அழிவு-அழிவை, உற்றது-உற்றார், என்ன-என்றமைபால, வதித்து-வசித்து, எமை-நம்மை, அளித்து-காத்து, காக்க-இரட்சிக்க, செவ்-செவ்வையாகிய, வழி-முறைமையின், உளத்த-உணர்வுள்ள, தூயோன்-தூயோன்(ஆகியகடவுளே), தெரிந்த-தெரிந்த, மா-பெரிய, நகர்-நகர், இதென்றால்-இதுவென்றால், இவ்-இந்த, வழி-வழிக்கு, பின்னர்-பின்பு, எருசலேம்-எருசலேமென்னும், நகரை-நகரத்தை, வாழ்த்த-வாழ்த்துதற்கு, உண்டோ-(வேறேவழி)யுண்டோ. எ-று.

உரை.— மெய்யானவேதவிதிகளைவிட்டுப் பூவுலகத்தோரின்பமென்று செய்தபாவத்தினா லழிவுற்றாரென்றறிந்து நம்மைக்காத்தளிக்க வளையாதவுணர்வுள்ள தூயோனாகிய கடவுளே தெரிந்தநகரிதுவென்று விதற்குப்பின்னர் எருசலேமென்னு நகரைவாழ்த்த வேறேவழியொன்றுண்டோ? (க)

ஆனையுடையநாத னவனியுண்மனுவாய்த் தாய்தன்
றளிரிணை தாங்கிற்றென்னத் தாழவானவருமாக்கள்
கோளிரிணையுடைவான் வீட்டைக் குறுகவும்வழியீதென்றால்
மீளிவரு வருத்திநாடி வியனகர்புகழ்வராரோ.

இ-ள். ஆள்-அடிமையாக, எனையுடைய-என்னைக்கொண்ட, நாதன்-நாதன், அவனியுள்-பூவுலகத்தில், மனுவாய்-தானுமனிதனாகி, தூய்-பரிசுத்தமாகிய, தன்-அவனுடைய, தாளிணை-இரண்டுபாதத்தையும், தாங்கிற்றென்ன-(இந்நகர்)தாங்கினதிறால், வானவரும்-வானோர், தாழ-இறங்கவும், மாக்கள்-மானிடர், கோளினையுடை-மீனுள்ள, வான்வீட்டிடை-வான்வீட்டில், குழுகவும்-சேரவும், வழியீதென்றால்-வழியிதுவென்றால், பின்-பின்னையும், வருத்தி-வருந்தப்பட்டு, இனை-உவமைகளை, நாடி-தேடி, ஆரோ-எவரோ, வியன்-அகன்ற, நகர்-இந்நகரை, புகழ்வர்-புகழ்வார். எ-று.

உரை.— அடிமையாக வென்னைக்கொண்டநாதன் பூவுலகிற் றானுமனிதனாகி யவன்பாதத்தை யிந்நகர்தாங்கினதிறால் வானோரிறங்கவு மானிடர் மீனுள்ளவானுயர்வீட்டிலேறவும் வழியிதுவென்றுப் பின்னையும்வருந்தியுவமைகளைத்தேடி யெவரோ விவ்வகன்றநகரைப் புகழ்வாரென்க. (௨)

விட்புலன்கன் றுவாய்த்த வீட்டிடைவழங்குமாட்சி
கட்புலன்கன் றதென்னக் கருதியோருவமைகாட்ட
மட்புலனிணங்குமின்ன மாநகரிணையென்றோதி
யுட்புலன்கடந்தநாத னுயர்நகர்புகழுமாறே.

இ-ள். விண்-வானமென்னும், புலன்-இடத்தை, அகன்று-கடந்து, வாய்ந்த-இருக்கும், வீட்டிடை-மோக்ஷத்திலிடத்து, வழங்கும்-வழங்கும், மாட்சி-மாட்சிமை, கண்-கண்ணென்னும், புலன்-புலனை, அகன்றதென்ன-கடந்ததென்று, கருதி-நினைத்து, ஓர்-(அதற்கு)ஒரு, உவமைகாட்ட-உவமையைக்காட்டவேணுமென்று, மண்-பூவுலகமாகிய, புலன்-இடத்தில், இணங்கும்-இருக்கும், இன்ன-இந்த, மா-பெரிய, நகர்-நகரை, இணையென்று-ஒத்ததென்று, ஓதி-சொல்லி, உட்புலன்-உள்ளறிவை, கடந்த-கடந்த, நாதன்-நாதன், உயர்-உயர்ந்த, நகர்-(எருசலேம்) நகரை, புகழுமாறு-புகழுந்தன்மையாம். எ-று.

உரை.— வான்மேலுயர்ந்தவீட்டில் வழங்கு மாட்சிமை கண்ணைக்கடந்ததென்று நினைத் ததற்கோ ருவமைகாட்டவேணுமென்று பூவுலகிலிருக்கு மிம்மாநகரை யவ்வீட்டிற் கொத்ததென்றுசொல்லி நினைத்தவளவைக்கடந்தநாதன் எருசலேநகரைப் புகழ்ந்தானென்க. (௩)

நவ்வியங்கதிர்கொள்சூட்சி நாயகன்முதல்வானோருஞ்
செவ்வியமதுரச்சொல்லாற் சீரியகாட்சியோரு
மவ்வியமகன்றுதேறு மருந்தவத்தோருஞ்செய்த
குவ்வியபுகழ்பின்னுண்டோ கூறவுமூகையானே.

இ-ள். நவ்வியம்-தெளிந்த, கதிர்-கதிர்களையுள்ள, சூட்சி-உணர்வை, கொ ள்-கொண்ட, நாயகன்முதல்-நாயகன்முதலாய், வானோரும்-வானோர்களும், செவ்விய-நல்ல, மதுர-மதுரமுள்ள, சொல்லால்-சொற்களால், சீரிய-சிற ந்த, காட்சியோரும்-காட்சியுடையோரும், அவ்வியம்-மனக்கோட்டம், அக ன்று-நீங்கி, தேறும்-தேறிய, அருந்தவத்தோரும்-அரியதவத்தையுடையவரு ம், செய்த-சொன்ன, குவ்விய-நிறைந்த, புகழ்-புகழ்களின், பின்-பின்பு, மூ கை-ஊமையாகிய, யான்-நான், கூறவும்-சொல்லவும், உண்டோ-வேறேது ண்டோ. எ-று.

உரை.— தெளிந்தகதிர்களையுள்ள வுணர்வுகொண்டநாயக ன்முதலாய வானோர்களு நல்லமதுரமுள்ளசொல்லாற் சிறந் தகாட்சியுடையோரு மனக்கோட்டமின்றித் தேறியவருந்த வத்தோரு மிவரெல்லாருஞ் சொன்ன நிறைந்த புகழ்களின் பின்பு மூமைநான்சொல்ல வேறேதுண்டோ? (௪)

தேனகவினியவன்பார் திருவினோ னருளிற்சித்தும்
மீனகவிருளைச்சீய்க்கி வெயிற்குழாமுயிர்த்தசெந்நீர்
தானகமுடியாய்ச்சூடித் தமனியநகரம்பூண்ட
வானகநகவொண்மாட்சி வகுத்துரைப்பரியவாறே.

இ-ள். அக-உள்ளத்தில், தேன்-மதுவினும், இனிய-இனிதாகிய, அன்பு-தயை, ஆர்-நிறைந்த, திருவினோன்-செல்வன் (ஆகியகடவுளே), அருளில்-அ ருளினால், சிந்தும்-சித்திய, மீன்-மீனினும், நக-விளங்க, இருளை-இருளை, சீய்க கி-நீக்கும், வெயில்-சூரியன், குழாம்-கூட்டங்கள், உயிர்த்த - உதயமானது போல், செந்நீர்-(திவ்விய)விரத்தத்தை, தான்-தான், நக-இன்பமாய், முடி யாய்-முடியாக, சூடி-சூடியதினால், தமனியநகரம் - அப்பொன்னகரே, பூண் ட-சூழ்ந்த, வானகம்-வானத்திலும், நக-விளங்க, ஒள்-ஒளிபொருந்திய, மா ட்சி-மாட்சிமையை, வகுத்து-வகைப்படுத்து, உரைப்பு-உரைப்பது, அரியவா றே-அரிதே. எ-று.

உரை.— மதுவினுமினிய தயையினிறைந்த செல்வநாயகக டவுளே யருட்புரிந்து சித்திய மீனினும்விளங்கி யிருளை நீக்

குந்திவ்வியவிரதத்தைத் தானின்பமாய்முடியாகச் சூடிய
திரு வட்பொன்னகரோ சூழ்ந்தவானத்திலுமுயர்ந்தமாட்சி
வகையுறுத்துரைப்பவரிதே. (௫)

பயனினான்மறைநாலொக்கும் பகலினைமணியாலொக்கு
வியனினாலுலகமொக்கும் வேலியாற்கன்னியொக்கும் [ம்
முயலினாலலையையொக்கு முனிமுனியொன்னார்க்கொக்கும்
நயனினாலுயர்வீடொக்கு நகரினையொக்கும்வீடே.

இ-ள். பயனினால்-(இந்நகரோவர்க்குத்தந்த) பயனால், மறைநால்-வேத நாலை, ஒக்கும்-ஒக்கும், மணியால்-(விளங்கும) மணிகளால், பகலினை - பகலையே, ஒக்கும - ஒக்கும், வியனினால் - விரிவினால், உலகமொக்கும்-உலகத்தையொக்கும, வேலியால்-மதிட்காவலினால், கன்னியொக்கும் -(அழியாத)கன்னியையொக்கும்,முயலினால்-(வருவார்போவார்) முயற்சியினால், அலையையொக்கும்-கடலையொக்கும், ஒன்னார்க்கு-தன்பகைவர்க்கு, முனி-முனிவரது, முனி-கோபத்தை, ஒக்கும்-ஒக்கும், நயனினால்-நன்மைகளினால், உயர்-உயர்ந்த, வீடொக்கும் - மோக்ஷத்தலத்தையொக்கும, நகரினை-இந்நகரையும், வீடே-அம்மோக்ஷமே, ஒக்கும்-ஒக்கும். எ-று.

உரை:—இந்நகரோவர்க்குந் தந்தபயனினால்வேதமேயொக்கும் விளங்குமணிகளாற் பகலேயொக்கு மகலத்தினாலுலகெல்லாமொக்கு மதிட்காவலினா லழியாதகன்னியேயொக்கும் வருவாரும் போவாரும் நெருங்கிச் சாய்தலினாற் கடலேயொக்குந் தன்பகைவர்க்கு முனிவர்கோபமேயொக்கு நன்மைகளினா லுயர்வீடொக்கு மிந்நகரையும் வீடுதானொக்குமென்க. (௬)

பொற்றங்குமுலகந்தன்னைப் பொங்கிருங்கடல்சூழ்ந்
விற்றங்குமிரவிகாலும் வெயிற்பிழம்பனையநாறிச் [தென்ன
செற்றங்குமலையினோங்கிச் சேணுறுமதிலைச்சூழ்ந்த
வெற்றங்குமலையைமாறியிகன்றகலகழித்தோற்றம்.

இ-ள். பொன்-பொன், தங்கும்-இருக்கும், உலகந்தன்னை - உலகத்தை, பொங்கு-பொங்குகின்ற, இரும்-பெரிய, கடல்-கடலானது, சூழ்ந்தென்ன-சூழ்ந்ததுபோல, வில்-ஒளி, தங்கும்-பொருந்திய, இரவி-சூரியன், காலும்-வீசும், வெயில்-கதிர்களின், பிழம்பு-திரளை, அனைய-ஒப்ப, நாறி-தோன்றி, செல்-மேகங்கள், தங்கும்-தரிக்கும, மலையின்-மலையினும், ஓங்கி-உயர்ந்து, சேண்-வானத்தில், உறும்-புகுந்த, மதிலை-மதில்களை, சூழ்ந்த - சுற்றிய, எல்-ஒளிவு, தங்கும-உள்ள, அலையை-அலைகளை, மாறி-மாறி, இகன்று-எதிர்த்து, அகல்-அகன்ற, அகழி-அகழியின், தோற்றம்-காட்சி. எ-று.

உரை. — பொன்னுலகத்தைப் பெருங்கடல்சூழ்ந்ததே போல விளங்குஞ்சூரியன்விட்ட கதிர்த்திரளொப்ப வொளிர்ந்து மேகங்கள்தரிக்கு மலைபோலுயர்ந்து வானத்திற்புகுந்த மதில்களைச்சூழ்ந்த வொளிவுள்ளவல்லிகளை மாறியவகன்றவ்கிளின்வடிவென்க. (எ)

பூவுலகியல்பன்றம்பொற் பொலிமணி நகரம்பொன்
தேவுலகுரிதென்றங்கட் டெளிந்துபுக்கிடுமென்றாழி [னார்
தாவுலகிருத்தவெள்ளித் தாடளையிட்டதேபோற்
கோவுலவிஞ்சிசூழ்ந்த குவளைநீள்கழித்தோற்றம்.

இ-ள். பூவுலகு-பூமியே, இயல்பன்று-(தனக்குத்)தகுதியல்லவென்று, அம்பொன்-அழகிய, பொலி-உயர்ந்த, மணிநகரம்-மணிநகரே, பொன்-செல்வம், ஆர்-நிறைந்த, தேவுலகு-தேவுலகம், உரிதென்று-தனக்குரியதென்று, தெளிந்து-கண்டு, அங்கண்-அவ்விடத்தில், புக்கிடுமென்று-புகுந்துசேருமென்று (அஞ்சி அதை), ஆழி-கடல், தாவு-சூழ்ந்த, உலகு-இவ்வுலகில், இருத்த-நிறுத்த, வெள்ளி-வெள்ளியாலாய, தளை-விலங்கை, தாள் - காலிலே, இட்டதே போல்-இட்டதுபோல, கோ-வானத்தில், உலவு-எழுந்த, இஞ்சி-மதிலை, சூழ்ந்த-சூழ்ந்த, குவளை-குவளை (பூத்த), நீள்-நீண்ட, அகழி-அகழியின் தோற்றம், தோற்றமாம். எ-று.

உரை.— பூமியேதனக்கொத்தநிலமல்லவென் றுயர்ந்தமணிநகரே தனக்குரியதலமென்றுந் தேவவுலகிற்புகுந்து சேருமென்றஞ்சி யதைக்கடல்சூழ்ந்த விவ்வுலகில்நிறுத்தவேணு மென்று வெள்ளிவிலங்கு காலிலேயிட்டதுபோலத் தோன்றும் வானத்திலெழுந்த மதிலடியிலே சூழ்ந்தகுவளைபூத்த நீளகிலென்க. (அ)

சீரியார்நட்புவேர்கொள் சீரெனநிலத்திற்றாழ்ந்து
பூரியார்நட்புபோலப் புணர்ந்தசைவலமேலாடி
நாரியாரழகுகாண நாணியகமலமிங்கண்
வேரியார்தழைப்பூத்து வெறியெறியகழித்தோற்றம்.

இ-ள். சீரியார்-பெரியோருடைய, நட்பு-நேசம், வேர்கொள்-வேர்கொள்ளும், சீரென-தன்மைபோல், நிலத்தில்-பூமியில், தாழ்ந்து-(அல்லவின்றுமாழமாய்த்)தாழ்ந்த, பூரியார்-நீசருடைய, நட்புபோல-நேசத்தைப்போல, பு

கைத்த-அதித்தலந்த, கைவலம்-பாசி, மேலாடி-மேலேயாடிக்கொண்டு, நா ரியார் - மாதர்களுடைய, அழகுகாண-அழகைக்கண்டு, நாணிய-நாணமடை ந்த, கமலம்-தாமரை, இக்கண்-இதிலே, வேரி-வாசனை, ஆர் - பொருந்திய, இதழை-இதழ்களை, பூத்து-விரித்து, வெறி-வாசனை, எறி-விடும், அகழி-அவ்வ கழியின், தோற்றம்-தோற்றமாம். எ-று.

உரை.— பெரியோர்கொண்ட நட்புத்தாழ்ந்து வேர்கொண்டதுபோல வவ்வகழுமாழமாய்த்தாழ்ந்து நீசர் நட்புபோலவதிலேயுள்ளபாசி மேலாடிக்கொண்டு மாதர்களழகு கண்டு நாணியதாமரை நகர்க்குள்ளேயிராமவிதிலேவாசவித ழ்களைவிரித்து வாசனைவிடுமவ்வகழியென்க. (௯)

ஈரும்வாளெயிற்றின்கூன்வெண் ணிளம்பிறைதோன்ற வூனைச்
சோரும்வாய்விரித்துக்கட்டீச் சொரிதரவகழிதாழ்ந்து [தி
பேரும்வாயுருக்கொண்டன்று பேய்க்குலம்வெருவுய்த்தெய்
தூரும்வாயென்னவங்கண் ணுழக்கியவிடங்கரீட்டம்.

இ-ள். ஈரும்-அறுக்கும், வாள்-வாள்போலவும, கூன்-வளைந்த, வெண்-வெள்ளிய, இளம்பிறை-இளம்பிறைபோலவும், எயிற்றின்-பற்களோடு, தோன்ற-தோன்றவும், ஊனை-இறைச்சியை, சோரும்-சொரியும், வாய்-வாயை, விரித்து-விரித்து, கண்-கண்வழியாக, தீ-நெருப்பை, சொரிதர-சொரியவும், அகழி-அந்தவகழியை, தாழ்ந்து-ஆழமாய், பேரும்வாய் - பேர்க்குமிடத்து, பேய்க்குலம்-பேயினங்கள், உரு-உருவத்தை, கொண்டு-கொண்டு, அன்று-அப்பொழுது, வெருவு-பயம், உய்த்து-வருத்திவித்து, எய்தி-வந்து, ஊரும்வாயென்ன-திரிவனபோலத்(தோன்றும்), அங்கண்-அவ்விடத்தே, உழக்கிய-கலக்கிய, இடங்கர்-முதலைகளின், ஈட்டம்-கூட்டமே. எ-று.

உரை.— அறுக்கும்வாள்போலவும் வளைந்தவெள்ளிளம்பிறைபோலவும், பல்லுக்கள்தோன்றவு மிறைச்சிசொரியும் வாய்விரித்துக் கண்வழியாக நெருப்புசொரியவு முன்னுளிலே யந்தவகழியைத் தாழப்பேர்க்கும்போது நரகமட்டுஞ்சென்றங்கேகிடக்கும்பேய்களுருவோடே பயம்வருத்திவித்து வந்துதிரிவனபோலத்தோன்று மங்கேபொருதுமுதலைகள் கூட்டமே. (௰)

ஓவவிற்றெழிற்பூமாதே யுவந்தநாட்செறிந்தகற்றை
தூவவிற்பகல்செய்பைம்பொற் சுடர்முடிசூழ்ந்ததென்ன
வாவவிற்கிளர்நன்றுட்கொண் டடிகடம்மனத்தைக்காக்குங்
காவவிற்கதுவிடாத கனகமாமதிளின்றோற்றம்.

இ-ள். ஓவல்-ஒழிவு, இற்று-அற்ற, எழில்-அழகுள்ள, பூ-பூமியாகிய, மாது-பெண், உவந்த-களிகூர்ந்த, நாள்-நாளிலே, செறிந்த-நிறைந்த, கற்றை-கதிரை, தூவவில்-பொழிந்ததால், பகல்-ஒளியை, செய்-செய்யும், பைம்-பசுமையாகிய, பொன்-பொன்னுற்செய்யப்பட்டு, சுடர்-விளங்குகின்ற, முடி-முடியை, சூழ்ந்து-சூழ்ந்தது, என்ன-போலத் (தோன்றும்), ஆவவில்-ஆசைக்கு, கிளர்-மேற்பட்ட, நன்று-நன்மையை, உட்கொண்டு-உட்கொண்டு, அடிகள்-தவத்தோர், தம்-தங்கள், மனத்தை-உள்ளத்தை, காக்கும்-காக்கும், காவவில்-காவலினுல், கதுவிடாத-விரியாத, கனகம்-பொன்னுலான, மா-பெரிய, மதிளின்-மதிலினது, தோற்றம்-காட்சி. எ-று.

உரை.— ஒழியாதவழகுள்ள பூமிதான் களிகூர்ந்தநாளிலே நிறைந்தகதிரைப்பொழிந்து பகல்செய் பசும்பொன்முடியைச்சூழ்ந்ததுபோலத்தோன்று மாசைக்குமே னிறைந்த நன்மையுட்கொண்டு தவத்தோர் தம்மனத்தைக்காக்குந் தன்மையினுல் விரியாதபொன்மதிளின்வடிவென்க. (௰௧)

காரணிபசும்பொற்குன்றின் காட்சிபோன்மதிளைச்சூ
சீரணியனைத்துஞ்சேர்த்த செழுநகர்திறந்தவாயில் [ழ்ந்து
பேரணியெவையுமீட்டிப் பின்னவையுவப்பிற்காட்டப்
பாரணிப்பேழையாரும் பயன்படத்திறந்தபோன்றே.

இ-ள். கார்-மேகங்கள், அணி-சூழ்ந்த, பசும்பொற்குன்றின் - பசும்பொன்மலையின், காட்சிபோல்-தோற்றம்போல, மதிளைச்சூழ்ந்து-மதிளைச்சூழ்ந்து, சீர்-செல்வமும், அணி-சிறப்புமாகிய, அனைத்தும்-எல்லாம், சேர்த்த-சேர்த்துக்கொண்ட, செழும்-செழிய, நகர்-நகரம், திறந்தவாயில்-திறந்தவாசல், பார்-பூமியானது, பேர்-பெரிதாகிய, அணி-அணிகள், எவையும்-எல்லாம், ஈட்டி-கூட்டி, பின்-பின்பு, யாரும்-எவரும், பயன்பட-பயனடைய, அவை-அவைகளை, உவப்பில்-களிப்போடு, காட்ட-காண்பிக்க, அணிப்பேழை-தனதணிப்பேழையை, திறந்தபோன்று-திறந்ததுபோலத்தோன்றும். எ-று.

உரை. — மேகங்கள் சூழ்ந்த பொன்மலைபோல மதிளைச்சூழ்ந்து செல்வமெல்லாமுள்ளே சேர்த்துக்கொண்ட நகர் திறந்தவாசலோவென்றுற் பூமியானது நல்லபெரிதணிகளை

லெல்லாங் கட்டியபின் னெவர்க்கும்பயனாக வருதலை யாசை யோடுகொட்டத் தனதணிப்பேழையைத் திறந்ததுபோலத் தோன்றும். (௰௨)

நீதிநன்முறைகளோதி நீண்டுவீடெய்திவாழ்க
வீதியிதென்னக்காட்டி விரித்தநண்ணருநூல்வேத
மாதிவந்துரைப்பவாய்ந்த வருத்தியோடலர்ந்தவாயே
சோதிபெய்யறத்தின்பண்பாற் சுடர்நகர்திறந்தவாயில்.

இ-ள். நீதி-நீதியின், நல்-நல்ல, முறைகள்-முறைகளை, ஓதி-உரைத்து, வீடு-வான்வீட்டில், எய்தி-சேர்ந்து, நீண்டு-நீளித்து, வாழ்க-வாழ, வீதி-வழி, இது-இதே, என்ன-என்று, காட்டி-காண்பித்து, விரித்த-விரிந்த, நண்-நட்பமாகிய, அரும்-அரிய, நூல்-நூலுடைய, வேதம்-வேதத்தை, ஆதி-கடவுள், வந்து-வந்து, உரைப்ப-சொல்ல, வாய்ந்த-உண்டாகிய, அருத்தியோடு-ஆசையோடு, அலர்ந்த-மலர்ந்த, வாயே-அவன்வாயே(போலும்), சோதி-கதிரை, பெய்-விடும், அறத்தின்-நல்லறத்தின், பண்பால்-தன்மையால், சுடர்-விளக்கும், நகர்-நகரோ, திறந்த-திறந்த, வாயில்-வாசல். எ-று.

உரை:— நீதியின்முறைகளையோதி வான்வீட்டிலெப்பொழுதும்வாழ வழியிதேயென்றுகாட்டி விரிந்தவரிய நாலுடை வேதத்தைக் கடவுள்வந்துசொல்ல வவனாசையோடுதிறந்த தன்வாயேயபோலுங் கதிரைவிடு நல்லறத்தினால் விளங்குநகரோ திறந்தவாசலென்க. (௰௩)

மீனிகர்வயிரத்தூண்கள் விண்புகநிரைத்துவாய்ந்த
யானிகரனைத்துநீக்கு மெரிமணிக்கோபுரத்தின்
வானிகர்நிறுவுஞ்சென்னி வைத்தபொற்றசும்பின்றோற்றங்
கோனிகர்நகரஞ்சூடுங் குளிருஞ்சுடர்மகுடம்போன்றே.

இ-ள். மீனிகர்-நட்சத்திரங்கள்போல (விளங்கும்), வயிரத்தூண்கள்-வயிரத்தூண்களை, விண்-வானத்தில், புக-பாய, நிரைத்து-ஒழுங்குபடவைத்து, வாய்ந்த-இருந்த, யா-எந்தெந்த, நிகர்-உவமை, அனைத்தும்-எல்லாம், நீக்கும்-கடந்த, எரி-கர்த்தியுள்ள, மணி-மணியாற்செய்யப்பட்ட, கோபுரத்தின்-கோபுரத்தினது, வான்-வானத்துக்கு, நிகர்-சரியாக, நிறுவும்-நிற்கும், சென்னி-உச்சியில், வைத்த-வைத்த, பொன்-பொன்னாற்செய்த, தசும்பின்-குடத்தின், தோற்றம்-தோற்றமானது, கோனிகர் நகரம்-(மற்றநகர்க்கு) இராசமாநகரமென்று, சூடும்-சூடின, குளிரும்-குளிர்ந்த, சுடர்-கதிரைவிடும், மகுடம்-முடியை, போன்று-போலும். எ-று.

உரை.— மீன்கள்போல்விளங்கும் வயிரத்தூண்களை வானத்திற்பாய வொழுங்குபடவைத்துப் பல்லுவமையெலாங் கடந்துவிளங்கு மணியாற்செய்தகோபுரத்தினுச்சி வானத்தின்மேலெழும்பி யதிலேவைத்த பொற்குடமோவென்றால் மற்றநகர்க்குள்ளே பிதுவிராசமாநகரென்று சூடின சூழ்ந்த கதிரைவிடு முடியோவுமென்க. (௰௪)

இட்டநூல்வழாமையோடி யெல்லையிலோங்கும்வீதி
சுட்டநூலறிஞர்கல்வித் தணிவொடுவளர்ந்தமாடஞ்
சட்டநூல்வீரர்கற்பின் றகைநலார்முறையுமற்ற
வட்டநூல்வழாமையோடு மலிநலங்கிளக்கலுற்றேன்.

இ-ள். இட்ட-போட்ட, நூல்-நூலானது, வழாமை-சாயாமல், ஓடி-ஓடி, எல்லை-அளவு, இல்-இன்றி, ஓங்கும்-நீண்ட, வீதி-வீதிகளும், சுட்ட-காட்டத்(தக்க), நூல்-நூலுடைய, அறிஞர்-அறிவுடையோர், கல்வி-கல்வியின், அணிவொடு-அணிவுபோல, வளர்ந்த-(உயர)வளர்ந்த, மாடம்-மாளிகைகளும், சட்டநூல்-பலபடைக்கலத்தடுத்த நூலுடைய, வீரர்-வீரர்களும், கற்பின்-கற்பினது, தகைநலார்-தகைமையுள்ளமாதர்களது, முறையும்-முறைமையும், வட்டம்-சக்கரமாகிய, நூல்-நீதிநூல், வழாமை-சாயாமல், ஓங்கும்-வளரும், மலி-(அங்கே)நிறைந்த, மற்ற-மற்ற, நலம்-நன்மை(எல்லாம்), கிளக்கலுற்றேன்-இனிச்சொல்வோம். எ-று.

உரை.— போட்டநூல்சாயாமலெல்லையின்றிநீண்டவீதிகளுங் காட்டத்தக்கநூலெல்லாமுடையோர் படித்தகல்விக்குள்ள அணிவுபோ லுயரவளர்ந்தமாடங்களும் பலபடைக்கலத்தடுத்தநூலுடையவீரர்களுங் கற்பின்றகைமையுள்ள மாதர்களுஞ் சக்கரநீதிநூல்சாயாம லங்கேநிறைந்த மற்றநன்மையெல்லா மினிச்சொல்வாம். (௰௫)

## வேறு.

மழைத்தலைவிலகுப வளர்ந்தமாடங்க
ளிழைத்தலையரிதினி விழைத்தவெண்சுதை
பிழைத்தலையறத்தொளி பிளிரவெள்ளியந்
தழைத்தலைமலைக்குழாத் தயங்குந்தன்மையே.

இ-ள். மழை-மேகங்கள், தலை-உச்சியை, விலகுப-விலக, வளர்ந்த-உயர்ந்த மாடங்கள்-மாளிகைகளின், இழை-அலங்காரமுள்ள, தலை-உச்சியில், அரிதின்-அரிதாய், இழைத்த-பூசின, வெண்சுதை-வெண்சாந்து, பிழைத்தலை-குறையை, அறுத்து-நீக்கி, ஒளி-ஒளியை, பிலிர-விடவே, அம்-அழகு, தழைத்த, வெள்ளி-வெள்ளியாகிய, தலை-உச்சியையுடைய, மலை-மலைகளின், குப்பரம்-கூட்டம், தயங்கும்-விளங்கும், தன்மை-தன்மையாம். எ-று.

உரை.— மேகங்கள்விலக வளர்ந்தமாளிகைகடோறு நல்லுச்சியி லரிதாய்ப்பூசின வெண்சாந்து குறையின்றியொளிவிடவே வெள்ளியுச்சிமலைகள் கூட்டமாய்விளங்கினதுபோலத்தோன்றும். (௰சு)

பயிற்றியமுகிலிடை பரந்தபான்மதி
வெயிற்றியங்கியவென வெந்தகிற்புகை
யயிற்றியவெயிலுமி ழரியமாமணி
குயிற்றியமாடங்கள் குளிரநாறுமே.

இ-ள். பயிற்றிய-பழகிய, முகிலிடை-(இள)மேகத்திடத்து, பரந்த-பரவிய, பால்-வெண்மையாகிய, மதி-சந்திரன், வெயில்-ஒளியை, தியங்கியவென-வீசுதல்போல, வெந்து-வெந்த, அகிற்புகை-அகிலம்புகையை, அயிற்றிய-உண்ட, வெயில்-ஒளியை, உமிழ்-விடும், அரிய-அருமையான, மாமணி-நவமணி, குயிற்றிய-பதிக்கப்பட்ட, மாடங்கள்-மாளிகைகள், குளிர-இன்பமாக, நாறும்-தோற்றுவன. எ-று.

உரை.— இளமேகத்திற்பரந்த திங்களதினின் றொளியை விடுவதுபோல் வெந்தவகிலம்புகையினுள் வெயில்செய்யு நவமணிபதிக்கப்பட்ட மாளிகையெல்லா மினிதாய்விளங்குவனவென்க. (௰எ)

புலையினர்மனவினை வளைவில்பொன்னங்காற்
றலையினர்மனவினைத் தரித்தபூங்கொடி
கலையினர்மனவினை வெளிறுகான்றுக
முலையினர்மனவினை முயன்றங்காடுமால்.

இ-ள். புலையினர்-நீசர்களுடைய, மனவினை-மனதைப்போல, வளைவு-கோணல், இல்-இல்லாத, பொன்-பொன்னுலாய, அம்-அழகிய, கால்-கம்பத்தின், தலையின்-உச்சியிலே, ஆர்-இருக்கும், மனவினை-புடவையால், தரித்த-ஏற்றிய, பூ-அழகிய, கொடி-கொடிகளே, கலையினர்-கற்றோர்களுடைய, மனவினை-மனம்போல, வெளிறு-வெள்ளைநிறத்தை, கான்று-கக்கி, உக-விட, முலையினர்-மாதர்களுடைய, மனவினை-மனம்போல, முயன்று-எந்நேரமுமசைந்து, அங்கு-அங்கே, ஆடும்-ஆடும். எ-று. ஆல்-அசை.

உரை. — நீசர்மனம்போல வளையாதபொற்காம்புச்சிவிலேபொன்னாற்செய்த நற்கொடிகளே கற்றோர்மனம்போல் வெள்ளையாய்த்தோன்றி மாதர்மனம்போல வெந்நேரமுமசைந்தாடுமென்க. (௰அ)

கோதகன் றளிக்குவா ரருத்திக்கொள்கைபோற்
றீதகன் றருந்திரு நுகரச்சென்மினென்
றேதகன் றணிக்குலத் திலங்குமாடங்கள்
மீதகன் றசைகொடி விளிப்பமானுமே.

இ-ள். கோது-குறை, அகன்று-நீங்கி, அளிக்குவார்-கொடுப்போரது; அருத்தி-ஆசையின், கொள்கைபோல்-தன்மைபோல, தீதகன்று-தீதில்லாது, அரும்-அரிய, திரு-செல்வங்களை, நுகர-அநுபவிக்க, சென்மினென்று-வாருங்களென்று, ஏது-குற்றம், அகன்று-நீங்கி, அணிக்குலத்து-மணிகளால், இலங்கும்-விளங்கும், மாடங்கள்-மாடங்களின், மீது-மேல், அகன்று-விரிந்து, அசை-அசையும், கொடி-கொடிகள், விளிப்ப-அழைப்பது, மானும்-போலத்தோன்றும். எ-று.

உரை.— குறையாமற் கொடுப்போராசைபோலத் தீதில்லா தருஞ்செல்வங்களையநுபவிக்கவாருங்களென்று மணியால்விளங்குமாடங்கள்மே லசையுங் கொடிகளெல்லாரையுமழைப்பதுபோலத்தோன்றும். (௰௯)

பேர்த்தனபருதிபோய்ப் பெருகுமாயிரா
போர்த்தனவிருளறத் தயங்கும்பொன்மணி
கோர்த்தனதரளமேற் கொழுமுந்தோரண
மார்த்தனமுகிலிடை யவிர்வில்மானுமே.

இ-ள். பருதி-சூரியன், பேர்த்தன - பேர்ந்து, போய்-போய், பெருகு-பெருகி, மாய்-மறைக்கும், இரா-இரவு, போர்த்தன-மொய்த்த, இருள்-இருள், அற-நீங்க, தயங்கும்-விளங்கும், பொன்-பொன்னும், மணி-மணிகளும், கோர்த்தன - கோர்த்த, தரளம்-முத்துகளும், மேல்-மேலே, கொழுமும்-மிகுத்துதாங்கும், தோரணம்-தோரணங்கள், ஆர்த்தன-சத்தித்த, முகிலிடை-மேகத்தில், அவிர்-விளங்கும், வில்-வில்லை, மானும்-போலும். எ-று.

உரை. — சூரியன்கன்றுபோய்ப் பெருகிய விராமொய்த்தவிருளைநீக்க விளங்கும் பொன்னுமணிகளு முத்துக்களுங்

கோர்த்து மேற்றாங்குந்தோரணங்கள் மேகத்திற்றோன்றும் வில்லுப்போலுமென்ப. (௨௰)

தேனொடுஞிமிறொடுஞ் செறிந்ததும்பிகள்
வானொடுவழங்கிய் மலர்செய்தோரணங்
கானொடுவழிந்ததேன் களித்துமேய்ந்தபின்
ஆனொடுமிசையொடு மூஞ்சலாடுமால்.

இ-ள். தேனொடும்-தேன்வண்டோடும், ஞிமிறொடும்-கருவண்டோடும், செறிந்த-கலந்த, தும்பிகள்-பலவகைவண்டுகளும் (வந்து), வானொடு-வானத்தில், வழங்கிய - உலாவிய, மலர் - பூவால், செய்-செய்த, தோரணம்-தோரணங்களினின்று, கானொடு-வாசத்தோடு, வழிந்த-ஒழுகிய, தேன்-மதுவை, களித்து-சந்தோஷித்து, மேய்ந்தபின்-உண்டபின்பு, ஆனொடும்-அழகோடும், இசையொடும்-இசைகளோடும், ஊஞ்சலாடும்-மேலூஞ்சலாடும். எ-று. ஆல்-அசை.

உரை — வான்மேற்கட்டின பூந்தோரணங்களினின்றொழுகியவாசமதுவை வண்டுகள்பலபலவகையும்வந்து மேய்ந்தபின் ஒளிவுமிசைகளும்விட்டு மேலூஞ்சலாடுமென்க. (௨௧)

கரியினங்கரியொடுங் கவினம்பூண்டுபாய்
பரியினம்பரியொடும் பரியைப்பூட்டிய
வெரியினமணிசெறி யெமத்தேர்களு
நெரியினெருங்குப நெரிந்தவாயெலாம்.

இ-ள். கரியொடும்-யானைகளோடு, கரியினம்-யானைகளும், கவினம்-கடிவாளம், பூண்டு-பூட்டி, பாய்-பாயும், பரியொடும்-குதிரைகளோடு, பரியினம்-குதிரைகளும், பரியை-குதிரையை, பூட்டிய-கட்டிய, எரி-ஒளிவிடும், இனமணி-நவமணி, செறி-பதித்த, எம்-பொன்னாலான, தேர்களும்-தேர்களும், நெரியின்-சாய்ந்தன, நெரிந்த-சாய்ந்த, வாயெலாம்-இடமெல்லாம், நெருங்குப-நெருக்கும். எ-று.

உரை. — யானைகளோடியானைகளுங் கடிவாளம்பூட்டிப் பாயுங் குதிரைகளோடு குதிரைகளுங் குதிரையிழுத்த வொளி நவமணிபதித்த பொற்றேர்களுஞ்சாயவே சாய்ந்தவிடமெல்லா நெருங்குமென்ப. (௨௨)

பேரொலிமுரசொலி பிளிர்ந்தசங்கொலி
தேரொலிமதமழை சிதறியானைக
ளூரொலியிவுளிக ளொலிமயங்கிமேற்
காரொலிக்கடலொலி கலங்கவிம்முமால்.

இ-ள். பேரொலி-பெரியசத்தமாய், முரசொலி-முரசொலியும், பிளிர்ந்த-ஒலித்த, சங்கொலி-சங்கொலியும், தேரொலி-தேரொலியும், மதமழை-மதமழையாக, சிதறி-பெய்து, யானைகள்-யானைகள், ஊர்-நடக்கும், ஒலி-ஒலியும், இவுளிகளொலி-குதிரைகளொலியும், மயங்கி-கலந்து, மேல்-மேலே, காரொலி-மேகத்தின்முழக்கமும், கடலொலி-கடலின்முழக்கமும், கலங்க-மயங்க, விம்மும்-கிளம்பும். எ-று. ஆல்-அசை.

உரை.—முரசுஞ்சங்குந் தேருமதயானைகளுங் குதிரையினமு முழங்கியவோசை மேகத்தின்முழக்கமுங் கடலின்முழக்கமு மயங்கக்கிளம்புமென்க. (உ௩)

பொதிர்படுமணியொலி பொருனர்சாய்தலோ
டெதிர்படுமுடியொலி யிரங்கியாழொலி
கதிர்படுஞ்சிலம்பொலி கழல்குலாவொலி
யதிர்படும்வெருவற வினிதிலார்த்தன.

இ-ள். பொதிர்-மிகுந்த, மணி-மணியாபரணங்கள், படும்-ஒன்றோடொன்றுபடுகின்ற, ஒலி-ஓசையும், பொருனர்-அரசர், சாய்தலோடு-(நெருங்கிச்)சாய்தலினால், எதிர்படும்-எதிர்பட்ட, முடி-முடிகளின், ஒலி-ஓசையும், இயாழ்-வீணைகள், இரங்கு-சத்திக்கும், ஒலி-ஓசையும், கதிர்படும்-விளங்குகின்ற, சிலம்பொலி-(மாதர்களின்) சிலம்பொலியும், கழல்-(ஆடவர்காற்) கழல், குலவு-ஆடும், ஒலி-ஒலியும், அதிர்படும் - அதிர்படும, வெருவு-பயம், அற-நீங்க, இனிதில்-இனிதாய், ஆர்த்தன-முழங்கின. எ-று.

உரை.—மணியாபரணங்களோசையவு மரசர்சாய்ந்த நெருக்கத்தில் முடிகளொன்றோன்றோடு டிடபடவும், வீணைகள் வாசிக்கவுஞ் சிலம்போடு மாதர்கள் நடக்கவு மாடவர்காற்கழலோடு நடக்கவுங் கிளம்பிய வோசைகளதிர்ப்பின்றி யினிதாய்முழங்குமென்க. (உ௪)

நெரிந்தனகுடைகொடி நிரையைச்செய்யவார்
செரிந்தனகலனொடு மிரும்பொன்மாமுடி
யிரிந்தனவயின்றொறுந் தெளிந்ததண்பகல்
புரிந்தனபுரியெலாம் பொருவில்வாழவே.

இ-ள். நெரிந்தன-(நெருங்கிச்) சாய்ந்த, குடை-குடைகளும், கொடி-கொடிகளும், நிரையைச்செய்ய-இருளைச்செய்ய, ஆங்கு-அவ்விடத்து, எரிந்தன-விளங்கிய, கலனொடு-அணிகளோடு, இரும்-மிகுந்த, பொன்-பொன்னலாய, மா-பெரும், முடி-முடிகளும், திரிந்தன-சாய்ந்த, வயின்றொறும்-இடமெல்லாம், தெளிந்தன-விளங்கின, நண்பகல்-உச்சிப்பகலை, புரிந்தன-செய்தன (அதனால்), பொருவு-ஒப்பு, இல்-இன்றி, வாழ-வாழும், புரியெலாம்-அம்மாபுரமெல்லாம். எ-று.

உரை.—நெருங்கிச்சாய்ந்த குடைகளுங் கொடிகளுமிருளைச்செய்ய விளங்கியவணிகளும் பொன்முடிகளுஞ் சாய்ந்தவிடமெல்லாம் பகலைச்செய்யு மதினாலெதிரின்றிவாழு மம்மாபுரமே. (உரு)

சங்கிடவிம்மிய தாளமோடியை
கொங்கிடவிம்மிய கோதையார்மது
பொங்கிடவிம்மிய வளிபொசித்திசை
யங்கிடவிம்மிய வின்பமந்நகர்.

இ-ள். சங்கு-சங்குகள், இட-தந்த, விம்மிய-நிறைந்த, தாளமோடு-முத்துவடங்களோடு, இயை-பொருந்தி, கொங்கிட-வாசனைவிட, விம்மிய-மவிந்த, கோதை-மாலைகள், ஆர்-நிறைந்த, மது-மதுவை, பொங்கிட-நெருங்க, விம்மிய-மிகுந்த, அளி-வண்டுகள், பொசித்து-உண்டு, இசை-இசைகள், இயங்கிட-பாட, இன்பம்-இன்பம், விம்மிய-மலிந்தன, அந்நகர்-அந்தநகரமெல்லாம். எ-று. இயங்கிட என்பது-யங்கிடவெனமுதற்குறையாயிற்று.

உரை.—சங்குகள்தந்த நிறைந்தமுத்துவடங்களோடியைந்து தூங்கும் வாசனைமலிந்த மாலைகள்பொழியு மதுவை நெருங்கினவண்டுகளுண்டிசைகள்பாட வின்பமலிந்தன நகரெல்லாம். (உசு)

நாறியநானமு நறுமகிற்புகை
யூறியகானமு முரைத்தசந்தமும்
வீறியமதுமலர் மிடைந்தவாசமுந்
தேறியவெறியொடு செறிந்தவந்நகர்.

இ-ள். நாறிய-மணக்கும், நானமும்-கஸ்தூரியும், நறும்-சுகந்த, அகிற்புகை-அகிற்புகையில், ஊறிய-ஊறின, கானமும்-மணமும், உரைத்தசந்தமும்-உரைத்தசந்தனமும், வீறிய-மிகுந்த, மது-தேன், மிடைந்த-நிறைந்த, மலர்-மலரின், வாசமும்-வாசனையும், தேறிய-முதிர்ந்த, வெறியொடு-மணத்தோடு, செறிந்த-கூடிய, அந்நகர்-அந்நகரமெல்லாம். எ-று.

உரை. — வாசக்கஸ்தூரியு மகிற்புகையி லாறுமணமு முளொத்தசந்தனமு நிறை மதுபொழிந்த மலர்வாசமுமாகிக் கூடி யினிதாய்மணக்கு நகரெல்லாம். (உஎ)

பூந்துறைத்தெரியல்கள் பொழிந்ததேறலுங்
காந்துறைத்தசும்பிடை கமழுநீரமுந்
தேந்துறைக்குங்குமத் தெளிந்தசுண்ணமு
மாந்துறைத்திரள்மணத் தார்ந்தவந்நகர்.

இ-ள். பூந்துறை-மலர்த்தொடையலாகிய, தெரியல்கள்-மாலைகள், பொழிந்த-சொரிந்த, தேறலும்-தேனும், காந்துறை-அழகுள்ள, தசும்பிடை-பொற்குடங்களில், கமழும்-பரிமளிக்கும், நீரமும்-பன்னீரும், தேந்துறை-வாசனையுள்ள, குங்கும-குங்குமமுதலியவற்றாலாய, தெளிந்த-தேறிய, சுண்ணமும்-சுண்ணமும், ஆம்-ஆகிய, துறைத்திரள்-இவையெல்லாஞ் (செய்யும்), மணத்து-வாசனையால், ஆர்ந்த-நிறைந்தன, அந்நகர்-அந்தநகரெல்லாம். எ-று.

உரை. — பூமாலைகள்விடுந்தேனும் பொற்குடங்களிற்பன்னீரு நற்குங்குமமுதற் பலவுங்கூட்டிச்செய்த சுண்ணமுமாக விவையெல்லாஞ்செய்யும்வாசனையா னிறைந்தன நகரெல்லாம். (உஅ)

தேசுசூழ்செந்துகிர் திருந்துங்காலின்மேற்
காசுசூழ்தமனியக் கம்பலந்திரைத்
தூசுசூழ்நித்திலந் துதைந்தகுஞ்சுகள்
பாசுசூழ்மணிச்சுவர் படுக்குமாடமும்.

இ-ள். தேசு-பொன், சூழ்-சூழும், செம்-சிவந்த, துகிர்-பவளத்தால், திருந்தும்-திருத்தமாகிய, காலின்மேல்-தூண்கள்மேல்(விரித்த), காசு-மணி, சூழ்-சூழ்ந்த, தமனிய-பொன்னாலாகிய, கம்பலம்-மேற்கட்டியும், திரைத்தூசு-திரைச்சீலைக்கு, சூழ்-சூழத்தூங்கும், நித்திலம்-முத்துகள், துதைந்த-நெருங்கிய, குஞ்சுகள்-குஞ்சங்களும், சூழ்-சூழும், பாசு-பச்சைநிற, மணி-மணிகளாலெடுத்த, சுவர்-சுவருள்ள, படுக்கும்-படுக்கும், மாடமும்-வீடுகளும். எ-று.

உரை. — பொன்னாற்சூழப்பட்ட செம்பவளத்தூண்கள் மேல்விரித்த மணிபதித்த பொன்மேற்கட்டியுந் திரைச்சீலைக்குச்சூழத்தூங்கு முத்துக்குஞ்சங்களு முள்ளிருக்கப் பச்சைமணிகளாலெடுத்த சுவருள்ளபடுக்கை வீடுகளே. (உகூ)

பொருந்தலருரத்தொளி பொசித்தவாளொடும்
விருந்தமர்புள்ளினம் விழைந்தவேலொடும்
வருந்தமர்கடந்தவில் மழுவினேடுமற்
றிருந்தமர்ப்படைக்கல மிருக்குமாட்டும்.

இ-ள். பொருந்தலர்-பகைவர், உரத்து-மார்பிற் (பாய்ந்து), ஒளி-ஒளி யை, பொசித்த-உண்ட, வாளொடும்-வாளுடனேயும், விருந்து-விருந்து, அம ர்-(தமக்கு) அமரச்செய்தமையால், புள்ளினம்-கழுகுமுதற்பறவைகள், விழை ந்த-விரும்பும்-வேலொடும்-வேலுடனேயும், வருந்து-வருந்தி, அமர்-போரை, கடந்த-கடந்த, வில்-வில்லும், மழுவினேடு-குலத்தோடு, அமர்-போருக்கு, இருந்து-உதவியாகவிருந்த, மற்று-மற்ற, படைக்கலம்-ஆயுதங்கள், இருக்கு ம்-இருக்கும், மாட்டும்-சாலைகளும். எ-று.

உரை.—பகைவர்மார்பிற்பாய்ந் தொளியுண்டவாளுந் த ம்க்குவிருந்துசெய்தமையாற் கழுகுமுதற் பலபறவைவிரு ம்பும்வேலும் வருந்திப் போர்கடந்தவில்லுங் குலமு மற் றுப்போர்க்குதவியபடைக்கலமிருக்குஞ்சாலைகளென்க. (௬௰)

நீன்மணிமரகத நித்திலந்துகிர்
வேன்மணிவயிரங் கோமேதகம்மிளிர்
பான்மணிபரும்வயிடூரியம்படர்
வான்மணிமாணிக்கம் வைக்குமாட்டும்.

இ-ள். நீன்மணி-நீலமணியும், மரகதம்-மரகதமும், நித்திலம்-முத்தும், துகிர்-பவளமும், வேல்-வேலைப்போலேகூரிய, மணி-மணியாகிய, வயிரம்-வயி ரமும், கோமேதகம்-கோமேதகமும், மிளிர்-ஒளிர்கின்ற, பான்மணி-புட்பரா கமும், பரும்-பருத்த, வயிடூரியம்-வயிடூரியமும், மாணிக்கம்-மாணிக்கமும், ப டர்-பரவிய, வான்-மிகுந்த, மணி-இந்தவமணிகள், வைக்கும்-வைத்திருக்கு ம், மாட்டும்-சாலைகளும். எ-று.

உரை.—நீலமு மரகதமு முத்தும் பவளமும் வயிரமும் கோமேதகமும் புட்பராகமும் வயிடூரியமு மாணிக்கமு மி ந்தவமணியிருக்குஞ் சாலைகளென்க. (௬௧)

ஒன்னலரிறைகொணர்ந் துற்றவம்பொனுந்
துன்னலர்மலைவயிற் றுதைந்தபைம்பொனு
மின்னலர்புனல்கொணர் மிடைந்தசெம்பொனு
மின்னலர்நிதியெலா மிருக்குமாடமும்.

இ-ள். ஒன்னலர்-பகைவர், இறை-இறையாக, கொணர்ந்துற்ற-கொண்டுவந்த, அம்-அழகிய, பொனும்-பொன்னும், அலர்-மலர்கள், துன்னு-நிறைந்த, மலை-மலையின், வயின்-இடத்து, துதைந்த, நிறைந்தெடுத்த, பைம்பொனும்-பசும்பொன்னும், மின்-மின்னி, அலர்-விரிந்த, புனல்-ஆறு, கொணர்-கொண்டுவந்த, மிடைந்த-மிகுந்த, செம்பொனும்-செம்பொன்னும், அலர்-நிறைந்த, இன்-இந்த, நிதியெலாம்-பொன்னெல்லாம், இருக்கும்-இருக்கும், மாடமும்-சாலைகளும். எ-று.

உரை.—பகைவர்பணிந் திறையாகக்கொண்டுவந்தபொன்னு மலையிலெடுத்தபொன்னு மாற்றிலேவந்தபொன்னு மிவையெல்லாமிருக்குஞ் சாலைகளென்க. (௫௨)

அவ்வியமொழித்தரு ளளிக்குமாமறை
திவ்வியமதுர நூல் செப்புஞ்சாலையு
நவ்வியவுணர்வுறி யெவையுநாடியுள்
வவ்வியபலகலை வகுக்குஞ்சாலையும்.

இ-ள். அவ்வியம்-மனக்கோட்டத்தை, ஒழித்து-நீக்கி, அருள்-அருளை, அளிக்கும்-பயக்கும், மா-பெருமைபொருந்திய, மறை-வேதத்தின், திவ்விய-திவ்வியமும், மதுர-மதுரமுமான, நூல்-நூல்களை, செப்பும்-போதிக்கும், சாலையும்-சாலைகளும், நவ்விய-நல்ல, உணர்வு-உணர்வினை, உறி-உற்று, எவையும்-எல்லாத்தையும், உள்-உள்ளே, நாடி-ஆராய்ந்து, வவ்விய-கொண்ட, பலகலை-பலகல்விகளை, வகுக்கும்-படிப்பிக்கும், சாலையும்-சாலைகளும். எ-று.

உரை.—மனக்கோட்டமின்றி யருளைப்பயக்கும் வேதத்தின் திவ்வியமதுரமான நூல்களைப்போதிக்குஞ் சாலைகளு நல்லுணர்வினைக்கொண் டெல்லாத்தையுமாராய்ந்த பலகல்விகளைப்படிப்பிக்குஞ் சாலைகளுமென்க. (௫௩)

பெற்றியார்குனில்கவண் பெரும்வில்நேமியோர்
குற்றிலாக்குறிப்படக் குழுமுஞ்சாலையும்
வெற்றியாரலங்கல்வாள் முதல்பல்வேற்படை
பற்றிலார்வெருவுறப் பழக்குஞ்சாலையும்.

இ-ள். பெற்றி-நன்று, ஆர்-உள்ள, குனில்-குறுந்தடிகளும், கவண்-கவணும், பெரும்வில்-பெரும்வில்லும், நேமி - சக்கராயுதமும், ஓர் -ஒரு, குற்றிலா-குறையுமில்லாத(மற்றவெறிபடைகளும்), குறிப்பட-குறிப்படப்(பழகி), குமுறும்-முழங்கும், சாலையும்-சாலைகளும், வெற்றி-வெற்றியை, ஆர்-உடைய, அலங்கல்-மாலைகள் (சூழ்ந்த), வாள்முதல்-வாள்முதலிய, பல்-பல, வேற்படை-கைவிட்டெறியாதபடைச் (சிலம்பத்தில்), பற்று-அன்பு, இலார்-இல்லாதவர், வெருவுற-அஞ்ச, பழக்கும்-பழக்கும், சாலையும்-சாலைகளும். எ-று.

உரை. — நல்லகுறுந்தடிகளுங் கவணும் பெரும்வில்லுஞ் சக்கராயுதமு மற்றவெறிபடைகளுங் குறிப்படப்பழகி முழங்குஞ்சாலைகளும் வெற்றிமாலைசூழ்ந்த வாள்முதற் பலகைவிட்டெறியாத படைச்சிலம்பத்திற் பகைவரஞ்சப் பழகுஞ் சாலைகளுமென்க. (௫௪)

கானலகனியினுங் கனிந்தயாழொடு
தேனலபல்லியந் திளைக்குஞ்சாலையும்
பானலமொழித்தபாப் பாடியாடிவிண்
மேனலமெனவொலி விம்முஞ்சாலையும்.

இ-ள். கான்-வாசனையுள்ள, நல-நல்ல, கனியினும்-கனிகளினும், கனிந்த-இனிய, யாழொடு-வீணையோடு, தேன்-தேனினும், நல-இன்பமான, பல்லியம்-பலவாச்சியங்கள், திளைக்கும்-முழங்கும், சாலையும்-சாலைகளும், பானலம்-பாலினது, நலம்-இனிமையை, ஒழித்த-கடந்த, பாப்பாடி-பாவைப்பாடி, ஆடி-ஆடி, விண்-வானின், மேல்-மேலான, நலமென-மகிழ்ச்சிபோல, ஒலி-ஓசை, விம்மும்-முழங்கும், சாலையும்-(நாடக)சாலைகளும். எ-று.

உரை. — வாசநற்கனிகளினு மினியவீணைமுத லின்பமானவாச்சியங்கள்முழங்குஞ்சாலைகளு மினிதாய்ப் பாடியாடிவான்மகிழ்ச்சிபோலமுழங்குநாடகசாலைகளும். (௫௫)

மாற்றரசினமிறை வணங்குஞ்சாலையும்
வேற்றரசினந்திறை விசிக்குஞ்சாலையு
மேற்றரசினமினி திருக்குஞ்சாலையும்
போற்றரசினத்துமான் பொருத்துஞ்சாலையும்.

இ-ள். மாற்றரசு-முன்பகைத்தவரசர்களுடைய, இனம்-கூட்டம்(வந்து), இறை-இராசாவை, வணங்கும்-வணங்குகின்ற, சாலையும்-சாலையும், வேற்று-மற்ற, அரசு-அரசர்களுடைய, இனம்-கூட்டம், திறை-இறை, விசிக்கும்-கட்டும்,

சாலையும் - சர்வையும், ஏற்று-துதித்த, அரசினம் - அரசர்கூட்டம், இனிது - இன்பமாக, இருக்கும்-இருக்கும், சாலையும்-சாலையும், போற்று - வணங்கின், அரசு-அரசர், இனத்து-கூட்டத்துக்கு, மாண்-வெகுமானங்களை, பொருத்தும்-பொருந்தச்செய்யும், சாலையும்-சாலையும். எ-று.

உரை. — முற்படகைத்துப் பின்படக்கின வரசர்வத் திராசாவை வணங்குஞ்சாலையு மற்றவரசரிறைகொடுக்குஞ் சாலையும் வணங்கின வரசர்பின்பிருக்குஞ்சாலையு மவர்களுக்குவெகுமானங்களைச்செய்யுஞ்சாலையுமென்க. (௫௬)

ஆமுறைமுகிலென வளிக்கும்வான்பொருள்
மீமுறைதிருந்திட விரும்பியாவருந்
தாமுறையிடமெலாந் தருமச்சாலையா
யேமுறைசிறந்ததோர் சாலையில்லையே.

இ-ள். உறை-மழை, ஆம்-ஆகிப்பெய்யும்,முகிலென-மேகங்கள்போல்,வான்-மிகுந்த, பொருள்-பொருளெல்லாம், அளிக்கும்-கொடுக்கும், மீ - மேலான, முறை-முறைமை, திருந்திட-செவ்வையாக, விரும்பி-ஆசித்து, யாவரும்-எல்லாரும், தாம்-தாங்கள், உறை-இருக்கும், இடமெலாம்-வீடுகளெல்லாம், தருமச்சாலையாய்-தருமச்சாலையாய் (வழங்கினமையால்), ஏம்-பொன் (தரும்), உறை - இடங்களல்லாதே, சிறந்தது - விசேஷமான, ஓர்-ஒரு, சாலை-சாலையும், இல்லையே-இல்லையே. எ-று. ஏமம்-என்பது-ஏம்-என-இடைக்குறையாயிற்று.

உரை. — உள்ள துளிகளைப்பெய்யு மேகங்கள்போலமிகுதியும் பொருளெல்லாங்கொடுக்கு முறைமையாசைபோடெல்லாருந் தாமிருக்கும்வீட்டிலே வழங்கினதன்மையா லவனவன்வீடுதருமச்சாலையா யங்கேசொன்ன சாலைகளுமல்லாதே விசேஷித்தருமச்சாலையில்லையே. (௫௭)

பணிச்சுவர்ச்சாலையும்பவளப்பந்திக்கால்
தணிச்சுவர்ச்சாலையுந் தரளக்கொத்துடை
மணிச்சுவர்ச்சாலையும் வளைத்ததேவமா
வணிச்சுவர்க்கோயிலை யறையலாமரோ.

இ-ள். பணி-ஆபரணங்கள்சூழ்ந்த, சுவர்-சுவர்களுள்ள, சாலையும்-சாலையும், பந்தி-நிரையாய்நிறுத்தின, பவள-பவளத்தாற்செய்த, கால்-தூணுடே, தணி-பருத்த, சுவர்-சுவருள்ள, சாலையும்-சாலையும், தரள - முத்துகளின்,

கொத்துடை-குஞ்சங்களுள்ள, மணி-மாணிக்கத்தாலாய, சுவர்ச்சாலையும்-சுவருள்ளசாலையும், வளைத்த-சூழ்ந்த, அணி-அணிகளால், சுவர்-சுவரொடுத்த, மா-பெருமைபொருந்திய, தேவகோயிலை-தேவாலயத்தியல்பினை, அறையலாம்-இனிச்சொல்வோம். எ-று. அரோ-அசை.

உரை. — ஆபரணங்கள்சூழ்ந்த சுவர்களாற்சாலையு நிரையாய்நிறுத்தினபவளத்தூணோடு மலைபோல்வளர்ந்த சுவர்ச்சாலையு முத்தக்குஞ்சங்கள் தூக்கின மாணிக்கச்சுவர்ச்சாலையு மிவையெல்லாஞ்சூழநிற்ப வணிகளாற்சுவரொடுத்த தேவாலயத்தியல்பினை யினிச்சொல்வாம். (ருஅ)

## வேறு.

மண்ணியமுடியோமுடியின்மாமணியோ வானிடைவயங்குசெஞ்சுடரோ [கொலோயாதோ
புண்ணியவுடலத்துயிர்கொலோமுகமோ பொலமுகக்கண்
கண்ணியவளவற்றிடமெலாநிறைந்த கடவுடானுறைந்தருள்காட்டப் [மே.
பண்ணியவம்மாநகரிடைப்பகலைப் பழித்தெரிபரந்தவாலய

இ-ள். மண்ணிய-அலங்கரித்த, முடியோ-மகுடமோ, முடியின்-அம்மகுடத்திலிருக்கும், மாமணியோ-மாணிக்கமோ, வானிடை-வானத்தில், வயங்கும்-ஒளிரும், செஞ்சுடரோ-சூரியனோ, புண்ணிய-புண்ணியஞ்செய்யவெடுத்த, உடலத்து-உடலிலுள்ள, உயிர்கொலோ-உயிரோ, முகமோ-(அவ்வுடலிலுள்ள)முகமோ, பொல-அவ்வழகிய, முக-முகத்திலிருக்கும், கண்கொலோ-கண்ணோ, யாதோ-ஏதோ, கண்ணிய-கருதிய, அளவு-அளவெல்லாம், அற்று-கடந்து, இடமெலாம்-(மூவுலகிற்குள்ள)விடங்களெல்லாம், நிறைந்த-நிறைந்திருக்கும், கடவுடான்-கடவுள்தான், உறைந்து-விசேஷமாயிருந்து, அருள்காட்ட-தன்றயைகாட்ட(வந்த), அம்மாநகர்- அந்தவிராசமாபுரத்தின், இடை-நடுவில், பண்ணிய- செய்த, பகலை-சூரியனை, பழித்து-இகழ்ந்து, எரி-ஒளி, பரந்த- நிறைந்த, ஆலயமே-தேவாலயமே. எ-று. கொல்- ஒ - இரண்டும், ஐயவிடைச்சொல்.

உரை. — அலங்கரித்த முடியோ வம்முடியிலிருக்கு மாமணியோ வான்மேலொளிருஞ் சூரியனோ புண்ணியஞ்செய்யவெடுத்தவுடலி னுயிரோ அவ்வுடலின் முகமோ அவ்வழகிய முகத்திற்கண்ணோ வேதோ கருதிய வளவெல்லாங்கடந்து மூவுலகிற்குள்ளவிடங்களெல்லா நிறைந்திருக்குங் கடவுள் விசே

ஷிமாயிருந்து தன்றலைகாட்டவந்த விராசமாபுரத்தெவிற்பக
லினும்விளங்கிச்செய்யப்பட்டதேவாலயமே. (௩௯)

பொற்பொதிர்வயிரக்கான்மிசைபவளப் போதிகை
பொருத்தியதொருபால் [யொருபா
விற்பொதிர்துகிர்க்கான்மரகதமணியால் விளங்கியபோதிகை
லெற்பொதிர்நிதிக்காலமைந்தபோதிகையா யினமணியிடத்தி
யதொருபால் [ண்டீப்நிலையே.
செற்பொதிர்மின்னின்மின்னிமுன்னிரையிற் செறிந்தபன்ம

இ-ள். ஒருபால்-ஒருபக்கத்தில், பொன்-பொன், பொதிர்-மிகுதியாயிசைந்த, வயிர-வைரத்தாலாய, கால்-தூணின், மிசை-மேல், பவளப்போதிகை-பவளப்போதிகை, பொருத்தியது-இசைக்கப்பட்டது, ஒருபால்-ஓர்பக்கத்தில், வில்-ஒளி, பொதிர்-மிகுந்த, துகிர்-பவளத்தாற்செய்த, கால்-தூண்மேல், மரகதமணியால்-மரகதமணியாற் (செய்து), விளங்கிய-பிரகாசிக்கின்ற, போதிகை-போதிகையும், ஒருபால்-ஒருபக்கத்தில், எல்-ஒளி, பொதிர்-நிறைந்த, நிதிக்கால-தங்கத்தூணுக்கு, அமைந்த-பொருந்திய, போதிகையாய்-போதிகையாக, இனமணி-பலமணிகளும், இடத்தியது-சேர்க்கப்பட்டன, முன்-தேவாலயத்துமுன்னே, நிரையில்-நிரைநிரையாய், செல்-மேகத்தின்து, பொதிர்-மிகுதியாய்த்தோன்றும், மின்னின்-மின்போல, மின்னி-விளங்கி, செறிந்த-நெருங்கிய, பன்மண்டபம்-பலமண்டபங்கள், நிலை-நிற்பது (காணப்படும்). எ-று.

உரை.—ஒருபால் பொன்னுலிசைத்த வயிரத்தூண்மேற் பவளப்போதிகையு மொருபாலொளிர்ந்த பவளத்தூண்மேல் மரகதமணிப்போதிகையுமொருபால்விளங்கிய தங்கத்தூண்மேல் பலமணிப்போதிகையுஞ்சேர்த்தித் தேவாலயத்து முன்னே நிரைநிரையாய் மேகத்தின்மின்போல மின்னிப் பலமண்டபங்கள் நிற்பதுகாணப்படுமென்க. (௪௰).

செம்பொனுலம்பொன்மேலெழுத்தளித் தீட்டியவ
ழகெனத்தெளிந்த [நாணப்
வம்பொனுலிசைத்தமணிச்சுவரோற்றி யருந்தொழிற்றச்சரு
டைம்பொனுவிழைத்தசிகரம்வானொட்டப் பட்டெனவ்வுல
கத்தோர் [ர்போன்றே.
க்ம்பொனுல்வனைந்தகொழிலையிவ்வுலகிந் கைவிடாக்காட்டின

இ-ள். அம்-அழகிய, பொன்மேல்-தங்கத்தின்மேல், செம்பொனால்-செம்பொன்னால், எழுத்து-எழுத்தை, அரிதில்-அரிதாய், தீட்டிய-எழுதிய, அழகென்-அழகைப்போல, தெளிந்த-தெளிந்த, அம்பொனால்-தங்கத்தால், இசைத்த-இசைத்த, மணி-மணிகளால், சுவரேற்றி-சுவர்களையேற்றி, அருந்தொழில்-அரியதொழிற்செய்யும், தச்சரும்-மரவினையாளரும், நாண-வெட்க, பைம்பொனால்-பசும்பொன்னால், இழைத்த-செய்த, சிகரம்-முடி, வான்-வானத்தோடு, ஒட்டப்பட்டென-ஒட்டியிருந்தாற்போலத் (தோன்றினதினால்), அவ்வுலகத்தோர்-அந்தவானுலகத்தோர், கம்-வெள்ளிய, பொனால்-பொன்னால், புனைந்த-அலங்கரித்துமுடித்த, தொழிலை-வேலையை, கைவிடா-தாம்மதைக் கைவிடாமற்(பிடித்து), இவ்வுலகில்-இவ்வுலகத்திலே, காட்டினர்போன்று-காட்டினதன்மையாகத்தோன்றும். எ-று.

உரை. — அழகியதங்கத்தின்மேற் பொன்னாலெழுதினாற்போலத் தெளிந்ததங்கத்தா லிசைப்பட மணிகளாற் சுவர்களையேற்றி யரியதச்சருநாணப் பசும்பொன்னா லலங்கரித்த சிகரம் வானத்தோடொட்டி யிருக்குமென்று தோன்றினதினால் வானுலகத்தோ ரழகாயலங்கரித்துமுடித்த நகையென்று தாம்மதைக்கைவிடாமற்பிடித் திவ்வுலகத்திலே காட்டினதன்மையின்றோன்றுமென்க. (௬௪)

வையகத்துள்ளோரேறவும்விரும்பி வானவரிழியவும்வ
      ழியென்
றையகத்தொளிர்வான்பாய்ந்தவாலயமே யந்தரத்துயர்தலை
      சாய்ந்து [ற்கங்கண்
கையகத்ததனைக்கடவுடான்றாங்கக் களித்தியாக்கோவென்பா
மெய்யகத்தெழிலோரிழிந்தெழுந்துலவத் தோன்றியவேணி
      யைப்போன்றே.

இ-ள். வையகத்து-பூவுலகத்தில், உள்ளோர்-உள்ளவர்கள், ஏறவும்-மோக்ஷத்திற்கரையேறவும், விரும்பி-விரும்பி, வானவர்-வானோர்கள், இழியவும்-இங்கேயிறங்கிவரவும், வழியென்று-வழியாக, ஐ-அழகு, ஒளிர்-விளங்கின, வான்-வானத்தின், அகத்து-இடத்தில், பாய்ந்த-வளர்ந்த, ஆலயமே-தேவாலயமே, அந்தரத்து-வானத்தின், உயர்-உயர்ந்த, தலை-இடத்து, சாய்ந்து-சாய்ந்து, கடவுடான்-ஆண்டவன்றானே, கையகத்து-கையிடத்து, அதனை-அதை, தாங்க-தாங்கியிருக்க, களித்து-மகிழ்ந்த, இயாக்கோவென்பாற்கு-யாக்கோபென்பவனுக்கு, அங்கண்-அங்கே, துய்-பரிசுத்தமாகிய, அகத்து, மனதையுடைய, எழிலோர்-அழகுள்ளவர்கள், எழுந்து-ஏறி, இழிந்து-இறங்கி, உலவ-உலாவ, தோன்றிய-தோன்றின, ஏணியைப்போன்று-ஏணியைப்போலும். எ-று.

உரை. — பூவுலகத்தோர் மோக்ஷத்தையேறவும் விரும்பி வானவ ரிங்கேயிறங்கிவரவும் வழியாகும்படிக்கு விளங்கிய வானத்துச்சிமட்டும் வளர்ந்ததேவாலயமே யாக்கோபுமுன் னங்கேகண்டவேணியைப்போலுமென்க. பின்புகோயிலைக் கட்டினவிடத்திற்றானே முன்னாளில்யாக்கோபென்பவனே ணியைக்கண்டவ்வேணி வானமட்டுஞ்சேர்ந் தங்கேயாண் டவன்றானே கையாலதைத்தாங்கியிருக்க வதின்வழியாகவும் ரு வடிவுடையோரேறவு மிறங்கவுங்கண்டானும். (சஉ)

தூண்டொடர்பொலிந்தமுகட்டுயர்விளங்குந் தூயபொற் றகட்டுமேற்படர்ந்த
சேண்டொடர்பருதிதன்கதிர்படவிற் செறிந்தபல்லணியணிகிள ர்த்த
பூண்டொடரணியார்தனதுருக்கண்டு பொருவிறேர்த்துட்கெ னச்சாய
மாண்டொடரிரவியாயிரமென்ன வயங்குமவ்வாலயமர்தோ.

இ-ள். தொடர்-தொடர்ந்து, பொலிந்த-மிகுந்த, தூண்-தூண்கள்மேல், உயர்-உயர்ந்த, முகட்டு-முகட்டிலே, விளங்கும்-பிரகாசிக்கும், படர்ந்த-பரப்பின, தூய்-பரிசுத்தமாகிய, பொற்றகட்டு-பொற்றகட்டின், மேல்-மேலே, சேண்-ஆகாயத்தை, தொடர்-தொடர்ந்துசெல்லும், பருதிதன்-சூரியனுடைய, கதிர்-கிரணம், படவில்-படவே, செறிந்த-நெருங்கிய, பல்-பல, அணியணி-அணியணியாய், கிளர்த்த-விளங்கிய, பூண்-ஆபரணங்களின், தொடர்-தொடர்பால், அணி-அழகு, ஆர்-பொருந்திய, தனதுரு-தன்னுருவத்தை, கண்டு-பார்த்து, பொருவில்-உவமையிலே, தோர்த்து-தோர்வடைந்து, உட்கென-நாணினாற்போல, சாய-சாய்ந்துபோக, மாண்-பெருமை, தொடர்-சேரும், ஆயிரம்-ஆயிரம், இரவி-சூரியன்களை, என்ன-போல, வயங்கும் - விளங்கும், அவ்வாலயம்-அத்தேவாலயமே, எ-று. மாது-ஓ, இரண்டும்-அசை.

உரை. — தூண்கள்மே லுயர்ந்தமுகட்டிலே பரப்பின தூயபொற்றகட்டின்மேற் சூரியன்கதிர்படவே யணியணியாய்நெருங்கிய தன்னுருவிளங்கக்கண் டுவமையிலே தோர்த்து நாணினாலென்னச் செஞ்சுடரோன் சாய்ந்துபோகவாயிரஞ்சூரியன்களைப்போல விளங்குமத்தேவாலயமே. (சரு)

துன்னருமெழில்செய்யின்புணும்விழிக்குஞ் சுருதிநா
லினிதினிற்காட்டப் [ருக்கிளம்ப
பொன்னருமிழையானிரைநிரைசுவரிற் புடைத்தெழப்பலவு
வுன்னரும்வனப்பிற்கிளரொளிவாய்ந்த வுயிர்பெறச்சித்திரந்
தீட்டி [தோ.
பின்னருங்கவின்கண்டயர்வுறியுரையு மிமைப்புமில்லாயினமா

இ-ள். துன்னு-நிறைந்த, அரும்-அரிய, எழில்-அழகு, செய்-செய்த, இன்பு-இன்பத்தை, உணும்-உண்ட, விழிக்கும்-கண்களுக்குமுதலாய், சுருதி-வேதமாகிய, நூல்-நூலை, இனிதினில்-இன்பமாய், காட்ட-காட்டுதற்கு, பொன்-பொன்னாற்செய்யும், அரும்-அரிய, இழையால்-நகைவேலையால், புடைத்து-அடித்து, நிரைநிரை-நிரைநிரையாய், பலவுரு-பலவுருவங்கள், சுவரில்-சுவரிலே, கிளம்ப-எழும்பவும், எழ-தோன்றவும், உன்னு-நினைத்தற்கு, அரும்-அரிய, கிளர்-விளங்குகின்ற, ஒளி-பிரகாசம், வாய்ந்த-பொருந்திய, வனப்பில்-வடிவினால், உயிர்பெற-உயிர்பெற்றதுபோல், சித்திரம்-சித்திரங்கள், தீட்டி-எழுதியிருக்கும், இன்-இனிமையாகிய, அரும்-அரிய, கவின்-அழகை, கண்டு-பார்த்து, அயர்வு-மதிமயக்கத்தை, உறி-கொண்டதினால், உரையும்-வாய்ப்பேச்சும், இமைப்பும்-கண்ணிமைப்பும், இல்லாயின-இல்லாமற்போயின. எ-று. மாது-ஓ-இரண்டுமசை.

உரை. — அரியவழகினாலின்பமுண்ட கண்களுக்குமுதலாய் வேதநூற்காட்ட நிரைநிரையாய் நகைவேலையாற் பலவுருவங்கள் சுவரிலேபுடைத்தெழும்பவு மரியவடிவினாலுயிர்பெற்றதுபோற் சித்திரங்களெழுதியிருக்கவு மக்கோயிலதிசயங்களைக்கண்டாச்சரியப்பட்டதினால் வாய்பேசாமலுங்கண்ணிமையாமலு மிருப்பதென்று தோன்றுமென்க. (௪௪)

வான்மணிவிளக்கோராயிரமிழைத்த மரகதத்திருளறக்
கற்றை [யங்க
கான்மணிவிளக்கோராயிரம்பவளங் கலந்தமுத்தணியணித
நீன்மணிவிளக்கோராயிரம்பசும்பொன் னிலைவிளக்காயிரம்
வயிரப் [செயுமால்.
பான்மணிவிளக்கோராயிரமெவனும் பகலவன்படப்பகல்

இ-ள். வான்-பெருமைபொருந்திய, மணி-மாணிக்கங்கள், இழைத்த-பதித்த, விளக்கு-விளக்குகள், ஓராயிரம்-ஆயிரமும், இருளற-இருள்கெட, கற்றை-திரண்டதிரளை, கால்-வீசுகின்ற, மணி-மணியாகிய, மரகதத்து-மரகதத்தால், விளக்கோராயிரம்-ஆயிரம்விளக்கும், பவளம்-பவளமும், கலந்த-கலந்த, முத்து-முத்துக்களும், அணியணி-கோர்வையாக, தயங்க - (காந்தி) யாட,

நீன்மணி-நீலமணியால், விளக்கோராயிரம்-ஆயிரம்விளக்கும், பசும்பொன் தங்கத்தால், நிலை-நிலையான, விளக்காயிரம்-ஆயிரம்விளக்கும், பால்-வெள்ளைய, மணி-மணியாகிய, வயிர-வச்சிரத்தால், விளக்கோராயிரம்-ஆயிரம்விளக்கும், எவனும்-எங்கும், பகலவன்-சூரியன், பட-மறைய, பகல்செயும்-விளங்குவன. எ-று. ஆல்-அசை.

உரை. — மாணிக்கத்தாலாயிரவிளக்கு மரகதத்தாலாயிரவிளக்கும் பவளமுமுத்துங்கலந்து கோர்வையாகத் தூங்க நீலமணியாலாயிரவிளக்குந் தங்கத்தாலாயிரநிலைவிளக்கும் வயிரத்தாலாயிரவிளக்குமிவையெல்லாங்கூடிப் பகலினுமதிகமாய் விளங்குவனவென்க. (ச[illegible])

தீயெரிவாய்ந்தகுருமணியாதி செறிந்தபன்மணிகளும் கன்ற
வாயெரிவிளக்கின்றொகுதியுமல்கி வயின்வயினெரிந்தபைம் பொன்னு
மாயெரிதிரண்டுவிழித்தகண்கூச வகின்முதல்நறும்புகைநா ளும்
மீயெரிசுடரையிளமுகில்மூடி வேய்ந்தெனக்குளிரவேய்ந் [தனவே

இ-ள். தீ-தீப்போல, எரி-பிரவை, வாய்ந்த-பொருந்திய, குருமணி-சிவந்தமணி, ஆதி-முதல், செறிந்த-மிகுந்த, பன்மணிகளும்-பலமணிகளும், கன்ற-விரிந்த, வாய்-இடத்தில், எரி-பிரகாசிக்கும், விளக்கின்-விளக்குகளின், தொகுதி-திரளும், மல்கி-நிறைந்து, வயின்வயின்-இடமெங்கும், எரிந்த-ஒளிர்ந்த, பைம்பொன்னும்-பசும்பொன்னும், மா-மிகுந்த, எரி-ஒளியாக, திரண்டு-கூடி, விழித்த-பார்த்த, கண்கூச-கண்கூசவே, இள-இளமையாகிய, முகில்-மேகம், மீ-ஆகாயத்தில், எரி-விளங்குகின்ற, சுடரை-சூரியனை, மூடி-வேய்ந்தென - மறைத்தாற்போல, நாளும்-எந்நாளும், அகின்முதல்-அகிற்புகை முதல், நறும்புகை - மற்றவாசப்புகைகள், குளிர - குளிர்ந்து, வேய்ந்தன - மூடும். எ-று.

உரை.— தீப்போலவெரியுஞ் சிவந்தமணிமுதல்பன்மணிகளுமெரிந்தவிளக்குகள்மிகுதியு நிறையவெங்குமெரிந்த பொன்னொளிவுமிவையெல்லாங்கூடிக் கதிர்களைவீசவிழித்தகண் கூசுமென்று சூரியனைமூடுமிளமுகில்போலெந்நாளு மகிற்புகைமுதற்றூப மற்றவாசப்புகைகள் குளிர்ந்து கிளம்பி மூடும். (

முருடொடுபம்பையொலிவயிரொலிவன முரசொடுவளையொலியொலித்த [தெரிதன்
டொடுமினியகுழலொலிவீணை செறியொலிகின்னரத்
மருடொடுமதுரப்பல்லியமொலிப்ப மாகதர்பாவொலியிசைத்திவ் [விமாந்த.
வருடொடுமொலிகள்கடலொலியொழிக்குமரியவின்பிருசெ

இ-ள். மருடொடு-முருடோடு, பம்பை-பம்பையின், ஒலி-ஒலியும், வயிர்-கொம்பொலியும், ஒலிவன-ஒலிப்பன, முரசொடு-முரசோடு, வளை-சங்கின், ஒலியும், ஒலித்த-சத்தித்தன, தெருடொடு-தெளித்த, இனிய-இன்பமுள்ள, குழல்-நாகசன, ஒலி-ஒலியும், வீணை-யாழின், செறி-மிகுந்த, ஒலி-ஓசையும், கின்னரத்து-கின்னரத்தின், ஒலி-ஓசையும், மதுர-மதுரமுள்ள, பல்லியம்-வாச்சியங்களும், நல்-நல்ல, மருடொடு-மயக்கமாக, ஒலிப்ப-முழங்க, மாகதர்-புகழ்வோர், பாவொலி-பாடுமோசையும், இசைந்து-இனிதாயிசைந்த, இவ்-இந்த, ஒலிகள்-ஓசைகள், அருடொடும்-கிளம்புதலால், கடலொலி-கடலொலியை, ஒழிக்கும்-நீக்கும், இருசெவி-இரண்டுசெவியும், அரிய-அருமையான, இன்பு-இன்பத்தை, மாந்த-உண்டு(வாழ). எ-று. தெருடு-மருடு-அருடு-இம்மூன்றும-இடைக்குறையாயின்.

உரை.— முருடும் பம்பையுங் கொம்பு முரசுஞ் சங்குந் தெளிந்தவோசை நாகசனமும் வீணையும் கின்னரமு மற்ற வாச்சியங்களு மினிதாய்மயங்கிமுழங்கப் புகழ்வோர் பாடுமோசையு மினிதாயிசைந்து கடலொலிமறைத்துக்கிளம்பின விருசெவியின்பமாய்வாழவென்க. (௬௭)

பூமழைத்திரளுநாறியகலவை பொழிதரக்கமழுநீர்த்துவலைத் [வர்வாய்ப்
மழைத்திரளுமாங்குதஞ்சிறுமை தீர்த்தநாதனைப்புகழ்ப
மழைத்திரளுங்கன்னியர்கனிய பாமழைத்திரளுமெஞ்ஞான்றும் [வே.
மழைத்திரளுமெலிதரவிம்மி விண்ணுமேற்குளிரநாறின

இ-ள். பூமழை-பூமழையின், திரளும்-மிகுதியும், நாறிய-கமழும், கலவை-கலவைச்சாந்தும, கமழும்-நாறும், நீர்த்துவலை-பன்னீரும், பொழிதர-பெய்யும், வாசனையுள்ள, மழை-மழையினது, திரளும்-மிகுதியும், ஆங்கு-அங்கும்-தங்கள், சிறுமை-குறைகளை, தீர்த்த-போக்கிய, நாதனை-கடவுளை, புகழ்பவர்-துதிப்பவர், வாய்-வாயின், பாமழை-பாமழையினது, திரளும்-மிகுதியும், கன்னியர்-கன்னிகள், கனிய-இன்பமாகப்பாடும், பாமழை-பாமழையின், திரளும்-மிகுதியும், எஞ்ஞான்றும்-எப்பொழுதும், மீ-ஆகாயத்தின், மழைத்திரளும்-மழைமிகுதியும், மெலிதர-மெலிய, விம்மி-மிகுந்து, விண்ணுமேல்-வானுமட்டும், குளிர-இன்பமாக, நாறின-மணத்தன. எ-று.

உரை. — பூமழைமிகுதியுஞ் சந்தனமும் பன்னீரும்பெ
ய்யும் வாசமழைமிகுதியு மங்கே தங்குறைகளைத்தீர்த்த நாத
னைத்துதிப்பவர்சொல்லும்பாமழைமிகுதியுங் கன்னிகள்பாடு
மினியபாமழைமிகுதியுமெப்பொழுதுமாறாமல் மேகங்கடேவு
மழையினும்மிகுதியாய்வரானுலகமட்டுமின்பமாய்த் தோன்று
மென்க. (௬அ)

பூமுறைபொப்பநாடோறங்குறையில் வேதியரருச்ச
னைதிருத்தும் [கும்
மாமுறைநலமும்வானொடுவையம் மருளநல்லறநெறிவழங்
யாமுறையனைத்துமின்புறக்கண்டா ரிமைப்பிலதயர்வுறுமல்
லால் [கழ்வதுபாலோ.
பாமுறைநடத்தித்தொடைச்சரந்தொடுத்துப் பகர்ந்தவைபு

இ-ள். பூ-வானுலகின், முறை-தன்மைக்கு, ஒப்ப-ஒப்பாக, நாடோறும்-தினந்தோறும், வேதியர்-குருக்கள், குறையில்-குறையின்றி, அருச்சனை-தேவாராதனை, திருத்தும்-திருத்தச்செய்யும், மா-பெருமைபொருந்திய, முறை-முறைமையின், நலமும்-நன்மையும், வானொடு-வானத்தோடு, வையம்-பூமியும், மருள-இணையாய்நிற்ப, நல்-நல்ல, அற-அறத்தின், நெறி-முறை, வழங்கும்-(அங்கே)வழங்கும், யாமுறை-எத்தன்மையுமாகிய, அனைத்தும்-யாவும், இன்புற-இன்பமடைய, கண்டார்-கண்டவர், இமைப்பு-கண்ணிமைப்பு, இலது-இல்லாமல், அயர்வு-சோர்வு, உறும்-அடைவர், அல்லால்-அல்லாதே, பா-பாட்டின், முறை-ஒழுங்காக, நடத்தி-செய்து, தொடைச்சரம்-தொடுத்தமாலையாக, தொடுத்து-கட்டி, பகர்ந்தவை-சொன்னவைகளை, புகழ்வது-துதிப்பது, பாலோ-தகுதியோ. எ-று.

உரை. — வானுலகிற்கொப்பாகத் தினந்தோறுங் குருக்க
ள்குறைவறாமற் றேவாராதனைதிருத்து நன்முறையும், வானமு
ம்பூமியுமிணையாய்நிற்ப வங்கேவழங்கு நல்லறத்தின்முறையு
மினிதாய்க்கண்டவ ரிமையாம லதிசயித்திருப்பதல்லாதேபா
த் தொடைகளாற் றொடர்ந்துபுகழத்தக்கதோவில்லையே. (௬௯)

உலகெலாம்வணங்கும்பொ னுவறத்தனிக்கோ லோச்சி
யுவிறைவனை வணங்க [வமை
லலகெலாங்கடந்துபழுதறப்பயந்த வறநெறியருமையானு
மிலகெலா நயங்கடாங்கிப்புகழ்கள் விழைவொடுவதிந்தனதன்
மைத் [நகரம்.
திலகெலாமெனாநிலத்திடைபழிக்கு [illegible]லேமென்னுமா

இ-ள். உலகெலாம்-உலகங்களெல்லாம், வணங்கும்-வணங்கும், பொருவம்-அணையின்றி; தனி-தனியே, கோல்-செங்கோல், ஓச்சிய-செலுத்திய, இறைவனை-கடவுளை, வணங்க-வணங்கினதினால், அலகெலாம்-அளவெல்லாம், கடந்து-கடந்து, பழுதற-பழுதின்றி, பயத்த-பயன்றந்த, அறநெறி-புண்ணியநெறியின், அருமையால்-அருமையினால், உவமை-உவமை, விலகு-அற்ற, நயங்கள்-செல்வங்கள், எலாம்-எல்லாம், தாங்கிய-உடைய, குடிகள்-குடிகள், விழைவொடு-ஆசையோடு, வதிந்தன-வாழ்ந்திருக்கும், தன்மைத்து-தன்மையினால், நிலத்திடை-பூமியில், இலகு-விளங்கும், எலா-எல்லா(நகர), நிகரை-உவமையை, பழிக்கும்-பழிக்கும், எருசலேமென்னும்-எருசலேமென்னும், மாநகரம்-பெருமைபொருந்தியநகரம். எ-று.

உரை. — உலகங்களெல்லாம்வணங்குந் துணையின்றித் தனியேயாளுங்கடவுளைவணங்கினதினாலளவுமின்றிப் பழுதுமின்றிப் பயன்றரும் புண்ணியத்தருமையினாலுவமையின்றிச் செல்வங்களெல்லாமுடையகுடிகளின்பமாய் வாழ்ந்திருக்குந்தன்மையினாற் பூவுலகில்விளங்குமற்றநகரெல்லாம் பழிக்குமாம் எருசலேமென்னுமாநகரம். (௫௰)

## வேறு.

இன்னருநகரமை யெரிமணியிழையி
னுன்னருமெழினல முடையனகவினோர்
பன்னருமறநெறி பழுதறவினிதாய்த்
துன்னருநயமொடு தலைவனபொழுதே.

இ-ள். இன்-இத்தன்மையுள்ள, அரும்-அரிய, நகர்-நகரிடத்து, அமை-அமைத்த, எரி-கதிர்விடும், மணியிழையின்-மணிவடவடிவாய், உன்னரும்-நினைத்தற்கரிய, எழில்-அலங்கார, நலம்-நன்மையை, உடையன-உடைய, கவினோர்-அழகுள்ளவர்க்கு, பன்னரும்-சொலற்கரிய, அறநெறி-தருமநெறியில், பழுதற-பழுதின்றி, துன்னு-மிகுந்த, இனிதாய்-இன்பமாய், அரும்-அரிய, நயமொடு-தன்மைகளோடு, பொழுது-காலம், தலைவன-போகும். எ-று.

உரை. — இத்தன்மையுள்ளநகரிடத்தின் மணிவடவடிவாயரியவழகுடையார் சொல்வரியமுறைமையோடினிதா யெல்லாப்புண்ணியங்களைச்செய் தின்பமாய்த்தலையும் பொழுதெல்லாம். (௫௧)

ஆடுவரமுதினோ டலர் மதுவிகலப்
பாடுவர்பொருணகு பயனமைகலைநா
டுவர்தளிருற நறவுறுமலரைச்
சூடுவர்நயனொடு துலைவன்பொழுதே.

இ-ள். ஆடுவர்-ஆடுபவரும், அமுதினோடு-அமுதோடு, அலர்-மலரின், மது-மதுவை, இகல்-ஒப்ப, பாடுவர்-(இனிதாய்ப்)பாடுபவரும், பொருள்-பொருளில், நகும்-விளங்கும், பயன்-பிரயோசனம், அமை-அடங்கிய, கலை நூல்-கல்விநூலை, நாடுவர்-தேடுபவரும், தளிருற-குளிர்ச்சியினிற்பமடைய, நறவு-வாசனை, உறும்-பொருந்திய, மலரை-பூவை, சூடுவர்-அணிபவர்க்கு, நயனொடு-இன்பத்தில், பொழுது-காலம், துலைவன்-துலையும், எ-று.

உரை. — ஆடவுமமுதினு மதுவினுமினிதாய்ப் பாடவும், பொருட்செல்வத்தினும் பயன்றருங் கல்விச்செல்வந்தேடவு மின்பமாய்வாசமலரைச்சூடவு நன்றாய்த்துலையும் பொழுதென்ப. (௫௨)

மருக்கொடுமிளிரலர் மருவியமுடிசூழ்ந்
துருக்கொடுமிளிருவ ரெரியொடுமணநீர்
திருக்கொடுமிளிரின தெருவிடையெறியப்
பெருக்கொடுமிளிர்நகர் பெயர்வன்பொழுதே.

இ-ள். மரு-வாசனையை, கொடு-கொண்டு, மிளிர்-விளங்கும், அலர்-மலர், மருவிய-சேர்ந்த, முடி-முடியை, சூழ்ந்து-தரித்து, உருக்கொடு-வடிவோடு, மிளிருவர்-விளங்கினவர், எரியொடு-பிரலைவயோடு, மண-வாசனையுள்ள, நீர்-பன்னீர்களை, திரு-செல்வத்தை, கொடு-கொண்டு, மிளிரின-விளங்கின, தெருவிடை-தெருக்களில், எறிய-இறைக்க, பெருக்கொடு-(அதனுலாய)வெள்ளத்தோடு, மிளிர்-விளங்கும், நகர்-நகரின, பொழுது-காலம, பெயர்வன்-அலையும். எ-று.

உரை. — வாசமலர்முடிசூழ்ந்தவடிவோடுதிரிந்தவர் கூட்டிட்டு வாசப்பன்னீர்களைச். செல்வமாய்விளங்குந்தெருக்களிற்சிந்தி வெள்ளமோடி நகரெல்லாம்விளங்கத் துலையும் பொழுதென்க. (௫௩)

இந்திணையிதழ்வி ரிளமதுமலரராற்
பந்தினைவனைகுவர் படிகுவரெறிவார்
வந்தினையெதிர்குவர் மறைகுவர்நகுவார்
சிந்தினைநயனொடு செலுமொருபொழுதே.

இ-ள். இந்து-சந்திரனை, இணை-போல, இதழ்-இதழ்கள், அவிழ்-விரிந்த, இளம்-இளமையாகிய, மது-தேனுள்ள, மலரால்-மலர்தளால்; பந்தினை-

பந்தை, வளைகுவர்-கட்டுவர், படிகுவர்- (கட்டினபந்தடிக்கும்போது) கலப்பர், எறிவார்-அதையெறிவர், வந்து-வந்து, இளை-சோடாக, எதிர்குவர்-எதிர்ப்பர், மறைகுவர்-மறைந்துபோவர், நகுவார்-சிரிப்பர், சிந்தினை-இப்படிப்பட்டநினைவில், நயனொடு-இன்பத்தோடு, ஒரு-ஓர், பொழுது-பொழுது, செலும்-போகும். எ-று.

உரை. — சந்திரனைப்போல மலர்களாற்கட்டினபந்தடிக்கும்போது படிவரதையெறிவர் வந்தெதிர்ப்பர் மறைந்துபோவர் சிரிப்பரிப்படி யினிதா யொருபொழுதுபோக்குவரென்க. (௫௪)

மீன்மலைமெலிதர மிளிரறவினையோர்
பான்மலைமெலிதர விசையொடுபகல்போய்
நூன்மலைமெலிதர நுணியுணர்விரவாய்
வான்மலைமெலிதர வருமிருபொழுதே.

இ-ள். மீன்-நட்சத்திரங்கள், மலை-உவமையில், மெலிதர-மக்க, மிளிர்-விளங்குகின்ற, அற-நல்லறத்தின், வினையோர்-தொழிலைச்செய்வோர், பால்-பால், மலை-ஒப்பில், மெலிதர-இனிமைகுறைய, இசையொடு-(பாடிய) இசைப்பாட்டில், பகல்போய்-பகலும்போக, நூல்-நூலினது, மலை-மலைக்கும், மெலிதர-குறைய, நுணி-நுண்மையான, உணர்வு-ஆராய்ச்சியில், இரவு-இரவும், ஆய்-போய், வான்-வானத்து, மலை-உவமை, மெலிதர-அற, இருபொழுது-இருபொழுதும், வரும்-(நன்றாய்த்)தலையும். எ-று. மலைவு-மலையெனக்கடைக்குறையாயிற்று.

உரை. — மீனினும் விளங்கி நல்லறங்களைச்செய்வோர்பாலினு மினியவிசைப்பாட்டோடிப் பகலும்போகக் கல்வியெல்லா நுண்மையாயாராய்ந் திரவும்போய் வானத்திற்போல நன்றாயிருபொழுது தலையுமென்க. (௫௫)

எழுதினிதுருவென வெழினலரிழிவரர்
வழுதினிதினிதல வழுவிலவின்றையோன்
றொழுதினிதறநெறி துறுவன நயனுற்
பொழுதினிதிரிவன பொருவில நகரே.

இ-ள். எழுது-எழுதப்பட்ட, இனிது-இனிய, உருவென-உருவம்போல, எழில்-வடிவின், நலர்-நன்மையையுடையவர், இழிவு-இழிவு, ஆர்-உள்ள, வழுது-பொய்யான, இனிது-இன்பம், இனிதல-இன்பமல்ல, வழு-மாசு, இல்-இல்லாத, இறையோன்-கடவுளை, தொழுது-வணங்கி, இனிது-இனிய, அற-அறத்தின, நெறி-வழியால், துறுவன-மிகுதியாய்வரும், நயனுல்-நன்மைகளால், இனிது-இன்பத்தோடு, பொழுது-பொழுதெல்லாம், இரிவன-தலையும், பொருவு-ஒப்பு, இல்-இல்லாத, நகர்-நகரில். எ-று.

உரை. — எழுதப்பட்ட வினிய வடிவுடையா ரிழிவுசெய்யும் பொய்யானவின்ப மின்பமல்லதென்று மெய்யானகடவுளைத்தொழுது நல்லறத்தினால்வரு மின்பத்தோடு பொழுதெல்லாந்துலையு மொப்பில்லாதநகரிலே. (௫௬)

பொறையிணை நகுவன புயமலிபொருந
ருறையிணை நகுவன வுதவியகொடையோர்
துறையிணை நகுவன துறுவியகலையோர்
தறையிணை நகுவன தடமலிநகரே.

இ-ள். பொறை-மலையின், இணை-ஒப்பனையை, நகுவன-வெல்லுவன, பொருநர்-வீரர்களின், மலி-பெருகிய, புயம்-புயங்களே, உறை-மழையின், இணை-ஒப்பனையை, நகுவன-வெல்லுவர், உதவிய-தந்த, கொடையோர்-ஈகையுடையோர்களே, துறையிணை-துறையொப்பனைகளையெல்லாம், நகுவன-வெல்லுவர், துறுவிய-நிறைந்த, கலையோர்-கல்விகளையுடையோர்களே, தறையிணை-பூமியினலமெல்லாம், நகுவன-வெல்லுவன, நகர்-அந்நகரின், மலி-மிகுந்த, தடம்-பெருமையே. எ-று.

உரை. — மலையைவெல்லுவன வீரர்புயங்களே, மழைத்துளிகளைவெல்லுவன கொடைதானங்களே, துறையெல்லாம் வெல்லுவன நிறைந்தகல்விகளே, பூமிநலமெல்லாம்வெல்லுவன வந்நகர்செல்வங்களே. (௫௭)

அலையினொடிகல்வன வரிதொலிநியமம்
விலையினொடிகல்வன விரியணிமணிகள்
கலையினொடிகல்வன கடையிலநயமோர்
வலையினொடிகல்வன மலிதிருநகரம்.

இ-ள். அலையினொடு-கடலோடு, இகல்வன-பொருதும், அரிது-அரிய, ஒலி-முழக்கமுள்ள, நியமம்-கடைவீதிகளே, விலையினொடு-விலையோடு, இகல்வன-பொருதும், அணி-அழகிய, விரி-பெரும், மணிகள்-மணிகளே, கலையினொடு-(படித்த) நூல்களோடு, இகல்வன்-பொருதும், கடை-முடிவு, இல்-இல்லாத, நயம்-இன்பந்தானே, ஓர்-ஒரு, வலையினொடு-வலையோடு, இகல்வன்-ஒக்கும், திரு-செல்வம், மலி-மிகுந்த, நகரம்-அந்நகரம். எ-று.

உரை. — கடலோடு பொருதுமுழங்கின கடைவீதிகளே, யெவ்விலையும்பற்றாமல் விலையோடு பொருது நல்லமணிகளே, படித்தநூல்களால்வருமின்பமுடியாததினால் நூல்களோ

டுபொருதுமின்பந்தானே, கொண்டசெல்வங்களால் மனத்
தைப்பிடிக்க வொருவலையேயொக்கும்நகரமென்க. (௩௮)

வளையொலிவளைவுடை வயிரொலிவளர்பரக்
கிளையொலியிசையொலி குழலொலிகிளர்பற்
றுளையொலிகலமொலி துறுவலொடினிதாய்
விளையொலியலையொலி மெலிதரமிகுமால்.

இ-ள். வளை-சங்கின், ஒலி-ஓசையும், வளைவுடை-வளைவுள்ள, வயிர்-கொம்பின், ஒலி-ஓசையும், வளர்-வளர்ந்த, பர-பரவும், கிளை-வீணையுமிடும், ஒலி-ஓசையும், இசை-இராகங்களின், ஒலி-ஒலியும், குழல்-ஊதுகுழலின், ஒலி-ஒலியும், கிளர்-மிகுந்த, பல்-பல, துளை-துளையுள்ளவாச்சியங்களின், ஒலி-ஒலியும், கலமொலி-யாழொலியுமாகியவிவ்வொலியெல்லாம், துறுவலொடு-கூடினதனால், அலையொலி-கடலொலி, மெலிதர-குறைய, ஒலி-ஓசை, இனிதாய்-இனிதாய், விளை-விளைந்து, மிகும்-மிகுந்துமுழங்கும். எ-று. ஆல்-அசை.

உரை. — சங்கும் வளைந்தகொம்பும் வளர்ந்தபரவு மிசைகளும் வீணையும் பலதுளையுள்ள குழலும் யாழு மிவையெல்லாங்கூடிவிடுமோசை யினிதாய்விளைந்து கடலொலியினு முழங்கும்நகரமே. (௩௯)

கொடியொடுகுடையுற விறையவர்குழுவி
னடியொடுமடியுற விரிவனவணிகம்
பொடியொடுமிருளுற நெரிவனபொருதேர்
முடியொடுமுகிலுற முயல்வனநகரம்.

இ-ள். கொடியொடு-கொடிகளோடு, குடை-குடைகள், உற-சேரவும், இறையவர்-அரசர், குழுவின்-கூட்டத்தின், அடியொடும்-அடியோடு, அடியுற-அடிசேரவும், விரிவன-பரம்பும், அணிகம்-தளங்கள், பொடியொடும்-(எழும்பும்) புழுதியினால், இருளுற-இருளடையவும், நெரிவன-ஓடின, பொருதேர்-பொன்னால்வனைந்த, தேர்-தேர்கள், முடியொடும்-முடிகளோடு, முகிலுற-மேகங்களுட்புகவும், முயல்வன-(எப்போது) முயன்றிருக்கும், நகரம்-அந்நகர். எ-று.

உரை. — கொடியொடு குடைசேரவு மரசர்கூட்டமாய்ப் போ யடியோட்டிசேரவு மெழும்பும்புழுதியினா லிருளாக தளங்களெங்கும் படரவு நடத்தினபொற்றேர்கள்முடியொ டு மேகங்களுட்புகவு மெப்பொழுது முயன்றிருக்கு மந்நகரமே. (௪௰)

## வேறு.

கோடாதனவுயர்கோலொடு குளிர்மாறிலகுடையும்
வாடாதனதனிவாகையு மதமாறில்களிறு
மோடாதனவடற்றானையு முளகோனொடுநகரம்
வீடாதனநெறிமாணுறி மெலியாநலமுளதால்.

இ-ள். கோடாதன-வளையாத, உயர்-உயர்வாகிய, கோலொடு-செங்கோலோடு, குளிர்-குளிர்ச்சி, மாறில்-மாறாத, குடையும்-குடையும், வாடாதன-வாடாத, தனி-ஒப்பற்ற, வாகையும்-வெற்றியும், மதமாறில்-மதமாறாத, களிறும்-யானையும், ஓடாதன-ஓடிப்போகாத, அடல்-பலத்த, தானையும்-படையும், உள-உள்ள, கோனொடு-அரசனோடு, நகரம்-அந்நகர், வீடாதன-முடியாத, நெறி-விதமாகிய, மாண்-பெருமையும், உறி-உற்று, மெலியா-கெடாத, நலமுளது-நன்மையுமுடையது. எ-று. ஆல்-அசை.

உரை. — வளையாதவுயர்செங்கோலுங் குளிர்மாறாத குடையும் வாடாதவெற்றியும் மதமாறாதயானையு மோடாதபலத்ததானையுமுள்ள வரசன் சிறத்தினாலே யந்நகர் முடியாத பெருமையுஞ் செல்வமு முடையதென்க. (கூக)

சாலன்பொடுநிறைதாய்முலை தழுவுஞ்சிறுகுழவி
போலன்பொடுநகராள்பவ னருளின்றயைபுரிசெங்
கோலன்பொடுதழுவுங்குடி குறையொன்றிலநகரின்
பாலன்பொடுதனிவாழ்வொடு படுநன்றியதளவோ.

இ-ள். சால்-மிகுந்த, அன்பொடு-அன்பினால், நிறை-நிறைந்த, தாய்-தாயின், முலை-முலையை, தழுவும்-பிடிக்கும், சிறு-சிறிய, குழவி-குழந்தைகளை, போல்-போல, நகர்-அந்நகரை, அன்பொடு-அன்பினால், ஆள்பவன்-ஆளுமரசனானவன், அருளின்-அருளினால், தயைபுரி-தயைசெய்யும், செங்கோல்-செங்கோலை, அன்பொடு-ஆசையோடு, தழுவும்-பிடித்திருக்கும், குடி-குடிகளெல்லாம், குறை-குறைவு, ஒன்றில-ஒன்றில்லாத, நகரின்பால்-அந்நகரிடத்து, தனி-ஒப்பற்ற, வாழ்வொடு-வாழ்வுகளுடனே, படும்-அநுபவிக்கும், நன்றியது-நன்மைகளுக்கு, அளவோ-அளவுண்டோ (வில்லையே). எ-று.

உரை.—மிகுந்தவன்பினா னிறைந்ததாயின்முலையைச் சிறுகுழந்தைகள் பிடித்துநின்றதுபோல வந்நகரையன்பினா லாளுமரசனுடைய தயையைக்காட்டுஞ் செங்கோலைக் குடிகளெல்லா மாசையோடுபிடித்திருக்கக் குறையொன்றின்றிய

ங்கொவ்வாத வாழ்வுகளுந் தன்மைகளு மடைந்தநகரவளமேதாவி ல்லையே. (௬௨)

இருந்தோடியதிருவிங்கணி லினிதன்புறவிடலாற்
பருந்தோடுறுநிழலென்றுயர் பயனீன்றனவெனவே
மருந்தோடிகலரிதன்புள மலிகின்றனமரபோர்
விருந்தோடுணவருகின்றன ரிலையென்றுளமெலிவார்.

இ-ள். திரு-செல்வங்கள், இருந்து-(தருமத்திலேவிடாமல்வைக்கப்பட்டு)இருந்தால், ஓடிய-தானேநில்லாதோடுமாம், இங்கண்-(அவை) இங்கே, இல்-இல்லாதவர்க்கு, இனிது-இனிய, அன்புற-ஆசையோடு-இடலால்-அளித்தலால், பருந்து-(பறக்கும்)பருந்தை, ஓடுறும்-தொடர்ந்துசெல்லும், நிழலென்று-நிழல்போலப்(பின்றொடர்ந்து), உயர்-மோக்ஷத்திலே, பயன்-பயனே, ஈன்றனவென-தருமென்று(அறிந்து), மருந்தோடிகல்-குளுந்தமருந்தென, அரிது-அரிதாகிய, அன்பு-ஆசை, உளம்-உள்ளத்தில், மலிகின்றன-நிறைகின்ற, மரபோர்-குணத்தவர், விருந்தோடுண-விருந்தோடுண்க, வருகின்றனர்-வருபவர்கள், இலையென்று - இல்லையென்று, உளம்-உள்ளம் (நொந்து), மெலிவார்-மெலிவாராம். எ-று.

உரை.— உள்ளசெல்வங்கள் தருமத்திலேவிடாமல் வைத்துக்கொண்டாற் றானேநில்லாதோடுமாம் அதையிங்கேயாசையோடேயிரப்போர்க்கிட்டு மற்றத் தருமத்துக்குஞ் சிலவளித்தா லெப்போது தம்மைவிட்டுப்போகாமற் பறக்கும்பறவையைத்தொடருந் தன்னிழல்போலப் பின்றொடர்ந்து மோட்சத்திலே பயன்றருமென்றறிந்து குளுந்தமருந்தென வினியவன்புடையகுணத்தவர் தம்விருந்துண்கவருவாரில்லாதிருந்தால் நொந்துமெலிவாராம். (௬௩)

தெள்வாருலாமுகிலுங்கட றிரையுங்கெடமுகியா
வள்வார்முரசதிர்மாநகர் வயின்வாழ்பவர்கொடையைக்
கொள்வாரிலகுறையல்லது குறையில்லதுமெனவே
கள்வாரிலகடையாரில கழிவாரில நயவார்.

இ-ள். தெள்-தெளிந்த, வார்-நீண்ட, உலா-ஒலியுள்ள, முகிலும்-மேகமும், கடல்-கடலின், திரையும்-அலையும், கெட-கெட, முகியா-ஒயாமல், வார்-வார்கொண்டுகட்டிய, முரசு-முரசு, வள்-மிகுதியாய், அதிர்-முழங்கும், மா-பெரிய, நகர்-அந்நகரின், வயின்-இடத்தில், வாழ்பவர்-வாழ்பவர்கள், கொடையை-தானத்தை, கொள்வார்-கொள்பவர், இல-இல்லாத, குறையல்லது-குறையல்லாதே, குறையில்லதும்-(அங்கே) குறையொன்றில்லை, எனவே-எனவே, கள்வார்-கள்ளரும், இல-இல்லாமல், கடையார்-நீசரும், இல-இல்லாமல், கழிவார்-தீயரும், இல-இல்லாமல், நயவார்-வாழ்வார். எ-று.

உரை.—மேகத்தினுங் கடலினுமூரசினு லோயாமலிரு திமுழங்கு மந்நகரிடத்தில்வாழ்பவர் கொடுக்குங்கொடைதா னமிகுதியாகக்கொள்ளச் சிலருறை யதைக்கொள்ளுவாரில் லாதகுறையல்லாதேயங்கேகுறையொன்றில்லை யங்கேகள்ள ருந்சருந் தீயருமில்லாமல் வாழ்வார். (௯௪)

கோவீற்றுறைதனிநாதனைக் குறையாப்புகழிடவும்
நாவீற்றுறைகலையாயவு நறுமாணறஞ்செயவும்
பாவீற்றுறையிசைபாடவும் பதமாடவும்படரும்
பூவீற்றுறைநகராங்கிரு பொழுதாயினவினிதால்.

இ-ள். கோ-வானத்தில், வீற்று-வீற்று, உறை-இருக்கும், தனி-ஒன்று ன, நாதனை-கடவுளை, குறையா-குறையாமல், புகழிடவும்-துதிக்கவும், நா-நாவிலே, வீற்றுறை-வீற்றிருக்கும், கலை-கல்விகளை, ஆயவும்-ஆராயவும், நறும்-நல்ல, மாண்-பெருமை (பயக்கும்), அறம்-அறங்களை, செயவும்-செய்யவும், பா-பாவிலே, வீற்றுறை-வீற்றிருக்கும், இசை-இசைகளை, பாடவும்-பாடவும், பதம்-பாதத்தால், ஆடவும்-ஆடவும், படரும்-படர்ந்த, பூ-பூமியில், வீற்றுறை-வீற்றிருக்கும், நகர்-நகரத்தில், இருபொழுது-இருபொழுதும், இனிது-இன்பமாய், ஆயின-நடந்தன. எ-று. ஆந்து-ஆல், இரண்டுமேசை.

உரை.—வானத்தில்வீற்றிருக்கு மொன்றானகடவுளைக் குறையாமற்றுதிக்கவு நாவிலேவீற்றிருக்குங் கல்விகளையாராய வு நற்பெருமைபயக்கு மறங்களைச் செய்யவும் பாவிலேவீ ற்றிருக்குமிசைகளைப்பாடவு மினிதாயாடவும் படர்ந்தபூமி யில் வீற்றிருக்கு மந்நகரி லிருபொழுது நன்றாய்த்துலையுமெ ன்ப. (௯௫)

நீரல்லதுமலையில்லது நிறைவான்பொருளிடுவார்
போரல்லதுபகையில்லது புரிவான்மழைபொழியும்
காரல்லதுகறையில்லது கடிகாவலுமறனாற்
சீரல்லதுசிறையில்லது திருமாநகரிடையே.

இ-ள். திரு-அழகிய, மா-பெரிய, நகரிடை-அந்நகரிடத்தில், நீரல்லது-தண்ணீரல்லாமல், அலையில்லது-அலைச்சலில்லை, நிறைவான்-நிறைய, பொருள்-பொருளை, இடுவார்-கொடுப்போர் (நிறையவாங்கச்சொல்லிச்செய்யும்), போரல்லது-போரவலாமல், பகையில்லது-பகைப்போரில்லை, புரி-வட்டம்போல, வான்-வானினின்று, மழைபொழியும்-மழைபெய்யும், காரல்லது-கரு

மேகமல்லாமல், கறையில்லது-மாசுக்கறுப்பில்லை, சிர்-சிறந்த, அறனால்-அறந் தாற் (செய்யும்), கடி-மிகுந்த, காவலும்-காவல், அல்லது-அல்லாமல், சிறை யில்லது-சிறைச்சாலைகளில்லையே. எ-று.

உரை.—அந்நகரிடத்திற் றண்ணீரல்லாமலலைச்சலில்லை, நிறையக்கொடுப்போர் நிறைபவராங்கச்சொல்லிச் செய்யும் பேரல்லாமற் பகைப்போரில்லை, மழைபொழியுங்கருமேக மல்லாமல் மாசுக்கறுப்பில்லை, அறமேசெய்யுங் காவலல்லாம ற் சிறைச்சாலைகளில்லையே. (சுசு)

மின்னாரினிதிசைபாடலில் விளையின்பதுபெரிதோ
பொன்னார்குழல்புகரின்பது பெரிதோகலைப்புரிநூல்
சொன்னாரவருரையின்பது பெரிதோபொழிதுளிக
ளன்னார்நிறைகொடையாற்பொருளருளின்பதுபெரிதோ.

இ-ள். மின்னார்-மின்னலைப்போலுமாதர், இனிது-இன்பமாகிய, இசை-இராகமாக, பாடலில்-பாடினதனால், விளை-விளைந்த, இன்பது-இன்பமானது, பெரிதோ-பெரிதென்பவோ, பொன்-பொன்னால், ஆர்-இணங்கிய, குழல்-வீணை, புகர்-பேசும், இன்பது-இன்பம், பெரிதோ-பெரிதென்பவோ, கலை-கல்வித்துறை, புரி-செய்த, நூல்-நூல்களை, சொன்னாரவர்-சொல்வார், உரை-மொழியின், இன்பது-இன்பம், பெரிதோ-பெரிதென்பவோ, பொழி-பெய்யும், துளிகள்-மழையை, அன்னார்-ஒத்தகையையுடையவர், நிறை-நிறைய, பொருள்-பொருளை, அருள்-கொடுக்கும், கொடையால்-கொடையினால், இன்பது-(தமக்கு வரும்) இன்பம், பெரிதோ-பெரிதென்பவோ. எ-று. புகல்-என்பது, புகர்-என மொழிக்கடைப்போலியாயிற்று.

உரை.—மின்போலுமாதர் பாடியவின்பம் பெரிதென்பவோ, பொன்வீணைபேசுமின்பம் பெரிதென்பவோ, கல்விநூல்களைச்சொல்வார்மொழியின்பம் பெரிதென்பவோ, மழை பெய்வதுபோலப் பொருளைக்கொடுத்ததினாற் றமக்குவருமி ன்பம்பெரிதென்பவோ. (சுஎ)

சிலையொத்தனநுதலார்மனச்சிறையொத்தனமதிள்கள்
கலையொத்தனவுயர்மாலைகள் கனமொத்தனகரிகள்
மலையொத்தனவிரதந்திரள் வளியொத்தனபரிக
ளலையொத்தனகடைவீதிக ளிலையொத்தனரபையர்.

இ-ள். சிலையொத்தன-விற்போன்ற, நுதலார்-நெற்றியையுடையமாதர்களின், மன-மனத்து, சிறை-(கற்புக்) காவலை, ஒத்தன-போலும், மதிள்கள்-(அழியாத) மதிள்களே, கலை-சந்திரனை, ஒத்தன-அடைந்த, உயர்-உயர்ந்த,

மாளிகைகள்-மாளிகைகளே, கனமொத்தன-மேகங்களைப்போலும், கரிகள்-யானைகளே, மலையொத்தன-மலைகளைப்போலும், இரதம்-இரதங்களே, திரள்-மிகுந்த, வளியொத்தன-காற்றைப்போலும், பரிகள்-குதிரைகளே, அலையொத்தன-கடலைப்போலும், கடைவீதிகள்-கடைவீதிகளே, அலையொத்தனர்-கடலைப்போலும், அவையர்-வீரர் (கூட்டங்களே). எ-று.

உரை.— வில்லுடைய நுதலார் கற்பினாற்காத்த தம்மனம்போலு மழியாதமதில்களே, சந்திரன்மட்டு முயர்ந்தன மாளிகைகளே, மேகங்களைப்போலு மியானைகளே, மலைகளைப்போலுமிரதங்களே, காற்றைப்போலுங் குதிரைகளே, கடலைப்போலுங் கடைவீதிகளே, கடலைப்போலும் வீரர்கூட்டமே. (௬௰)

பாநாணுபவிசையோதைகள் பகல்நாணுபமணிகள்
பூநாணுபமதுவாரருள் புயல்நாணுபகொடைகள்
நாநாணுபகலைமாட்சிமை நசைநாணுபநிறைசீர்
கோநாணுபநலம்யாவினுங் குறையாவளர்நகரம்.

இ-ள். இசை-இசைக்கின்ற, ஓதைகள்-ஓசையினால், பா-பாவினம், நாணுப-நாணவும், மணிகள்-மணிகளால், பகல்-பகல், நாணுப-நாணவும், அருள்-(இனிய)தலையுமன், பூ-மலரினின்று, வார்-ஒழுகும், மது-தேன், நாணுப-நாணவும், கொடைகள்-கொடைமிகுதியால், புயல்-மேகங்கள், நாணுப-நாணவும், கலை-(படித்த)கல்வியின், மாட்சிமை-பெருமையை (உரைக்கவடங்காமல்), நா-நாக்கு, நாணுப-நாணவும், நிறை-நிறைந்த, சீர்-செல்வங்களினால், நசை-ஆசை, நாணுப-நாணவும், கோ-வான்(முதலாய்), நாணுப-நாணவும், குறையா-குறையாத, நலம்-தன்மைகள், யாவினும்-எல்லாவற்றிலும், வளர்-ஓங்கும், நகரம்-அந்நகரே. எ-று.

உரை.— பாச்சொல்லுங் குரலின்பத்தினாற் பாவின்பநாணவு மணிகளொளியாற் பகல்நாணவு மினியதலையுமன் மலர்த்தேனுநாணவுங் கொடைமிகுதியால் மேகங்கள்நாணவும் படித்தகல்வியுரையிலடங்காமல் நாக்குநாணவு மாசைமேற்செல்வங்களிருக்க வாசைநாணவும், வான்முதலாய்நாணவுங் குறையாதநன்மையெல்லாமுடைய தந்நகரே. (௬௧)

நளிர்பூவிடைமதுநேர்முக நவியேயிடைவிழிநே
ரொளிர்பூணிடைமணிநேருட லுருவேயிடையுயிர்நேர்
குளிர்நாடிடைபுனனேரற வழியேயிடைகுருநேர்
மிளிரூரிடையரசாலையின் மிடைகோவியல்பகர்வாம்.

இ-ள். தளிர்-குளிர்ச்சிபொருந்திய, பூ-பூவின், இடை-இடத்தில், மது-மதுவை, நேர்-போலவும், நவி-அழகிய, முகம்-முகத்தின், இடை-இடத்தில், விழி-கண்களை, நேர்-போலவும், ஒளிர்-விளக்குகின்ற, பூண்-பதக்கத்தின், இடை-இடத்தில், மணி-மணியை, நேர்-போலவும், உருவு-வடிவுள்ள, உடல்-உடலின், இடை-இடத்தில், உயிர்-உயிரை, நேர்-போலவும், குளிர்-குளிர்ந்த, நாடு-நாட்டின், இடை-இடத்தில், புனல்-ஆற்றை, நேர்-போலவும், அறம்-தரும, வழி-வழியின், இடை-இடத்தில், குரு-குருவை, நேர்-போலவும், மிளிர்-விளங்கும், ஊரிடை-நகரிடத்தில், அரசாளகையில்-ஓரரசனுளகையால், மிடை-நிறைந்த, கோவியல்-அரசியல்பினை, பகர்வாம்-(இனிச்) சொல்வோம். வி-து. நவ்வியென்பது-நவியென-இடைக்குறையாயிற்று.

உரை.— பூவிடத்தில் மதுப்போலவு முகத்திடத்திற் கண்போலவும், பதக்கத்திடத்தில் மணிபோலவு முடலிடத்தி லுயிர்போலவு நாட்டிடத்திலாறுபோலவு மறவழியிடத்திற்குருப்போலவும் விளங்குநகரிடத்தில் நல்லரசனுமென்றதினு வினியரசியல்பினைச்சொல்வாம். (௭௰)

நகரப்படலமுற்றும்.

ஆகப்படலம் உ-இ விருத்தம்.

௱௬௰௬.



## மூன்றாவது.

# வளன்சனித்தபடலம்.

### வேறு.

அன்னமாதிருநக ரகத்துடற்குயி
ரென்னமாதாவித னினிதில்வீற்றிருந்
தொன்னலார்வெருவுற வுவந்துபாவலர்
சொன்னபாநிகருமேற் றுளங்கினனரோ.

இ-ள். அன்ன-அந்த, மா-பெரிய, திரு-அழகிய, நகரகத்து-நகரிடத்தில், உடற்கு-உடலினுக்கு, உயிரென்ன-உயிரைப்போல, மா-பெருமைபொருந்திய, தாவிதன்-தாவிதனென்னுமிராசா, இனிதில்-இன்பமாக, வீற்றிருந்து-வீற்றிருந்து, ஒன்னலார்-(தன்)பகைவர், வெருவுற-அஞ்ச, உவந்து-(தான்) களிகூர்ந்து, பாவலர்-புலவர், சொன்ன-உரைத்த, பா-பாவின், நிகரும்-நிகரெல்லாத்திற்கும், மேல்-மேற்பட்டு, துளங்கினன்-விளங்கினன். எ-று. அரோ-அசை.

உரை.— இப்படலஞ் சூசைபிறந்தகதையையுரைப்பது கருத்தேயாகையால், அம்மாநகரிடத்திலுடலிடத் துயிரிருக்குமாப்போலே தாவிதனென்னுமிராசாவீற்றிருந்து தன்பகைவரஞ்சத் தான்களிகூர்ந்து பாவினற்சொன்ன நிகரெல்லாங் கடந்துவிளங்காநின்றான். (க)

அருளொடுவீங்கிய வகத்தினன்றளி
மருளொடுவீங்கிய மறைக்கையான்மலர்ச்
சுருளொடுவீங்கிய தொடையல்மார்பினன்
பொருளொடுவீங்கிய பொறைப்புயத்தினன்.

இ-ள். அருளொடு-தயையால், வீங்கிய-நிறைந்த, அகத்தினன்-நெஞ்சினனும், அளி-அளியின், மருளொடு-மிகுதியால், வீங்கிய-நிறைந்த, மறைக்கையான்-முகிற்கையனும், மலர்ச்சுருளொடு-பூச்சுருளால்(கட்டிய), தொடையல்-மாலை, வீங்கிய-நிறைந்த, மார்பினன்-மார்பனும், பொருளொடு-பொன்னால், வீங்கிய-நிறைந்த, பொறை-மலையையொத்த, புயத்தினன்-புயங்களுடையவனுமாயிருந்தான். எ-று.

உரை. — தயைநிறைந்தநெஞ்சுந் தூளிநிறைந்த மூக்கிற்கையும் பூமாலைநிறைந்தமார்பும் பொன்றுனிறைந்த மலைப்புயக்களுமுடையானென்க. (உ)

ஒளிதவழசனியை யுமிழ்ந்தவில்லின
னளிதவழ்நிழல்செயு மருட்குடையினன்
வெளிதவழ்நவமணி விழுங்குந்தேரினன்
களிதவழ்மதம்பொழி களிற்றிருண்மையான்.

இ-ள். ஒளி-மின்றொளி, தவழ்-ஊரும், அசனியை-இடியை, உமிழ்ந்த-எய்த, வில்லினன்-வில்லையுடையவனும், அளி-குளிர்ச்சி, தவழ்-பொருந்திய, நிழல்-நிழலை, செயும்-செய்யும், அருள்-தலையாகிய, குடையினன்-குடையையுடையவனும், வெளி-விளக்கம், தவழ்-உள்ள, நவமணி-நவமணிகள், விழுங்கும்-பதித்த, தேரினன்-தேரையுடையவனும், களி-செருக்கு, தவழ்-உள்ள, மதம்-மதத்தை, பொழி-பெய்யும், களிற்றின்-ஆண்யானையின், ஆண்மையான்-பலமுடையவனுமாயிருந்தான். எ-று.

உரை. — மின்னுமிடியையெய்தவில்லு மினியவன்பினிழல்செய்யுங்குடையு நவமணியாலலங்கரித்ததேரு மதம்பொழிகளிற்றியானையின்பலமுமுடையானென்க. (ங)

பொய்முனர்பின்றிலா மூரண்கொடேறனு
மெய்முனர்பொய்யென வெருவொன்னாரிவன்
கைமுனர்நிற்கிலா கலங்கிப்போற்றும்போர்
செய்முனர்செயஞ்செயுஞ் சிங்கவாகையான்.

இ-ள். மொய்முனர்-போர்முகத்தில், பின்றிலா-பின்வாங்காத, மூரண்கொடு-வீரங்கொண்டு, ஏறனு-ஆண்சிங்கத்தைப்போலத் (தோன்றி), மெய்முனர்-மெய்முகத்தில், பொய்யென-பொய்(நில்லாதது)போல, வெருவு-அஞ்சின, ஒன்னார்-பகைவர், இவன்-இவனுடைய, கைமுனர்-கைமுன்னே, நிற்கிலா-நில்லாமல், கலங்கி-அஞ்சி, போற்றும்-வணங்கும், போர்செய்-போர்செய்யும், முனர்-முன்னர், செயஞ்செயும்-செயங்கொள்ளும், சிங்கவாகையான்-சிங்கவெற்றிக்கொடியுடையான். எ-று.

உரை. — போர்முகத்திற் பின்வாங்காத வீரசிங்கமெனத்தோன்றி மெய்முகத்திற் பொய்நில்லாததுபோ லஞ்சினபகைவரிவன்கைமுகத்தினில்லாமற்கலங்கி வணங்கிய போர்செய்யுமுன்னர் செயங்கொள்ளுஞ் சிங்கக்கொடியுடையானென்க. (ச)

வேல்செயும்போரினால் வெலப்படான்றனைச்
சால்செயுந்தவத்தினால் வென்றதன்மையான்
சேல்செயும்புணரிசூழ் செகத்தினின்றொளி
மேல்செயும்வானவர் விழைந்தபான்மையான்.

இ-ள். வேல் - ஆயுதங்களைக்கொண்டு, செயும் - செய்யும், போரினால்-யுத்தத்தால், வெலப்படான் - வெல்லப்படாதவன், தனை - (தான்) தன்னை, சால்செயும்-மிகுதியாய்ச்செய்த, தவத்தினால்-தவத்தைக்கொண்டு, வென்றதன்மையான்-வென்றதினால், சேல்செயும்-மீன்வாழும், புணரி-கடல், சூழ்-சூழ்ந்த, செகத்தினின்று-பூமியிலிருந்து, ஒளி-ஒளியை, மேல்-மிகுதியாக, செயும்-செய்யும், வானவர்-வானோர், விழைந்த-விரும்பிய, பான்மையான்-தன்மையையுடையான். எ-று.

உரை.—படையைக்கொண்டு செய்யப்பட்டபோரினால் வெல்லப்படாதவன் றன்றன்னை மிகுந்ததவத்தைக்கொண்டு வென்றதினால் மீன்வாழுங்கடல்சூழ்ந்தபூமியிலிருந்து விளங்கும் வானுடையோர்விரும்பிய தன்மையுடையானென்க. (௬)

நீதிநன்முறையெலா நிறைந்தநீண்டவ
மாதிதன்மறையிவை யனைத்துமேற்படக்
கோதினன் னுதவிசெய் கொழுகொம்பாகிவா
னேதினன்முறையிவ ணிசைந்தமாட்சியான்.

இ-ள். நீதி-நீதியின், நன்முறை-நல்லமுறைகள், எலாம்-எல்லாமும், நிறைந்த-நிறைந்த, நீண்-நெடிய, தவம்-தவமும், ஆதிதன் -ஆண்டவனுடைய, மறை-(மெய்)வேதமும், இவையனைத்தும்- இவையெல்லாம், மேற்படர்-மேற்படர, கோது-குறை, இல்-இன்றி, நன்-நல்ல, உதவி-உதவியை, செய்-செய்த, கொழுகொம்பாகி - கொழுகொம்பாகி, வான்-வானத்தில், ஏது-குறை, இல்-இல்லாமல்(வழங்கிய), நன்முறை-நல்லமுறைகளை, இவண்-இங்கு, இசைந்த-அடைந்த, மாட்சியான்-மாட்சிமையுடையான். எ-று.

உரை.— நீதிமுறைகளு நிறைந்ததவமு மாண்டவனுடைய மெய்வேதமு மிவையெல்லாமேற்படக் குறையின்றியமைந்த கொழுகொம்பாகி வானத்தில்வழங்கிய நன்முறைகளையிங்கடைந்த மாட்சிமையுடையான்.

கோனலங்கோடிலா நிறுவிக் கூர்த்தலா
னூனலம்பொருணல மறத்தினுண்ணலந்
தேனலமினிதினிற் றிளைந்துநாடெலா
மீனலம்பயின்றவான் வியப்பவாழ்ந்ததே.

இ-ள். கோல் - (இவன்கொண்டநீதிச்) செங்கோலின், நலம் - நன்மை, கோடிலா - வளையாமல், நிறுவி-நின்று, கூர்த்தலால்-அதிகரித்தலால், நூல்-கல்விநூல்களின், நலம்-நன்மையும், பொருள் - செல்வங்களின், நலம்-நன்மையும், அறத்தின்-அறங்களின், நண் - நட்பமாகிய, நலம்-நன்மையும், தேன்-தேனினது, நலம்-நன்மையுமாகிய(இவைகள்), இனிதில்-இன்பமாக, திளைந்து-நிறைந்து, மீன்-நட்சத்திரங்களின், நலம்-நன்மையை, பயின்ற -கொண்ட, வான்-வானமும், வியப்ப-அதிசயிப்ப, நாடெலாம்-அந்நாடெல்லாம், வாழ்ந்தது-வாழ்ந்தது. எ-று.

உரை. — இவன்கொண்டநீதிச்செங்கோல் வளையாமையாற் கல்விகளுஞ் செல்வங்களு மறங்களு மின்பங்களுநிறைந்து மீன்களைக்கொண்டவானமுமதிசயிப்ப வந்நாடெல்லாம் வாழ்ந்ததென்க. (எ)

பகைசெய்வார்க்கிடியெனப் படிந்துபோற்றிய
தகைசெய்வார்க்கமுதென நாமத்தன்மையா
னகைசெய்வார்க்கிளவலாய் நடத்தும்வேலிலான்
மிகைசெய்வானாண்மையை விளம்பனன்றரோ.

இ-ள். பகை-பகையை, செய்வார்க்கு-செய்பவருக்கு, இடியென-இடிபோலாகியே, படிந்து-வணங்கி, போற்றிய-துதித்த, தகை-பெருமை, செய்வார்க்கு-செய்பவருக்கு, அமுதென-அமுதுபோலும், நாமத்தன்மையான்-நாமவேலினன், நகை-இகழ்ச்சி, செய்வார்க்கு-சொன்னவர்க்கு, இளவலாய்-தான்பாலகனாய், நடத்தும்-செலுத்தும், வேல்-வேலாயுதமும், இலான்-இல்லாதவனாகி, மிகை-வேதனையை, செயவான்-செய்துகாட்டியவனின், ஆண்மையை-ஆண்மையை, விளம்பல்-உரைப்பது, நன்று-நன்றாகும். எ-று. அரோ-அசை.

உரை.—பகைவர்க்கிடியாகியே வணங்கினவர்க்கமுதுபோலு நாமவேலின னிகழ்ச்சிசொன்னவர்க்குத் தான் பாலகனா யாயுதமுமில்லாமல் வேதனைசெய்துகாட்டியவாண்மை யையுரைப்பாம். (அ)

## வேறு.

மறைவழங்கிய வளங்கொணாட்டிடைசவூலாண்ட
முறைவழங்கிய கால்மறைபகைத்தனர்முகினின்
றுறைவழங்கிய வொப்பெனச்சரமழைவழங்கிப்
பொறைவழங்கிய பிலித்தையர்போர்செயவெதிர்த்தார்.

இ-ள். மறை-(சத்திய) வேதம், வழங்கிய-வழங்கிய, வளங்கொள்-வளமையுள்ள, நாட்டிடை-(சூதேய) நாட்டிடத்து, சவூலாண்ட-சவூலென்பவனாண்ட, முறை-முறை, வழங்கியகால்-நடந்தபோது, மறை-வேதத்தை, பகைத்தனர்-பகைத்தவராய், முகில்-மேகத்தில், நின்று-இருந்து, உறை-மழை, வழங்கிய-பெய்ததுக்கு, ஒப்பென-ஒப்பாக, சரமழை-அம்புமாரியை, வழங்கி-பெய்து, பொறை-மலைகளில், வழங்கிய-சஞ்சரித்த, பிலித்தையர்-பிலித்தையர்கள், போர்செய-யுத்தஞ்செய்ய, எதிர்த்தார்-எதிர்த்தார்கள். எ-று.

உரை.—சத்தியவேதத்தை யநுசரித்து வளமையுள்ள சூதேயநாட்டைச் சவூலென்பவனாண்டபோது வேதத்தின்பகையினால் மழைபோலம்புகளைவிட்டு மலைகளில்வழங்கிய பிலித்தையர் யுத்தஞ்செய்ய வெதிர்த்தாரென்க. (க).

வேலியாற்கது விடாத்திருநகரொலா நடுங்க
மாலியாற்கதிர் வகுத்தவாளேந்தினர் நாப்பண்
ணாலியாற்கரிந் தகல்முகி லுருக்கொடுவேய்ந்த
கோலியாற்றெனுங் கொடியதோரிராக்கதனெதிர்த்தான்.

இ-ள். கதுவிடா-அழியாத, வேலியால்-மதிளினால் (சூழ்ந்த), திரு-அழகிய, நகரொலாம்-நகரமெல்லாம், நடுங்க-நடுங்க, மாலியால்-சூரியனால், கதிர்வகுத்த-ஒளிர்ந்த, வாள்-வாளை, ஏந்தினர்-பிடித்தபகைவர், நாப்பண்-நடுவிலே, ஆலியால்-நீரினால், கரிந்து-கருகி, அகல்-அகன்ற, முகில்-மேகத்தினது, உருக்கொடுவேய்ந்த-வடிவைக்கொண்டுதோன்றிய, கோலியாற்றெனும்-கோலியாற்றென்னும், கொடியது-கொடிய, ஓர்-ஒரு, இராக்கதன்-இராக்கதனும், எதிர்த்தான்-எதிர்த்தான். எ-று.

உரை.—அழியாதமதிளினாற் சூழ்ந்தநகரெல்லா நடுங்கவெதிர்த்துவந்த சூரியன்போ லொளிர்ந்தவாளுடைய பகைவர்நடுவிலே நீரினாற்கருகிய வகன்றமேகவடிவாய்த் தோன்றிக் கோலியாற்றென்னுங் கொடியவோரிராக்கதனு மெதிர்த்தானென்க. * (உ)

* அரசர்முதலாகமம்-யஉ-அதிகாரம்.

துளிசிறைச்செயு முகில்புகுமிருமலைசுமந்த
வொளிசிறைச்செயு மொருகரும்பருவதமென்ன
வெளிசிறைச்செயும் வியனிருபுயத்துமேற்சிரமே
களிசிறைச்செயுங் கதங்கொடுவெருவுறத்தோன்றும்.

இ-ள். துளி-மழையை, சிறைச்செயும்-கொண்டிருக்கும், முகில்-மேகத்தி ன், புகும்-புகுந்த, இரு-இரண்டு, மலை-மலைகள், சுமந்த-சுமக்கும், ஒளி-ஒளி யை, சிறைச்செயும்-ஒளிக்கும், கரும்-இருண்ட, ஒரு-ஓர், பருவதமென்ன-பரு வதம்போல, வெளி-ஆகாயத்தை, சிறைச்செயும்-மறைக்கும், வியன்-பருத்த, இரு-இரண்டு, புயத்துமேல்-புயங்கள்மேல், சிரமே-தலையே, களி-களிப்பெல் லாம், சிறைச்செயும்-அடக்கும், கதங்கொடு-சினக்கொண்டு, வெருவுற-(எவரு ம்) அஞ்ச, தோன்றும்-தோன்றும். எ-று.

உரை.— துளிகொண்டமேகத்துட்புகுந்த விருமலைசுமக் குமொளியொளித் திருண்ட வொருபெரியபருவதம்போல வெளிநிறைய வகன்ற விருபுயங்கள்மேற்றோன்றுந் தலையே களிப்பெல்லாமொழியச் சினத்தைக்காட்டி யெவருமஞ்சத் தோன்றினன் கோவியாற்றென்க. (௰க)

நீண்டவாள்புடை நெருங்கியேபடர்கருமுகிற்போன்
மாண்டதோள்வியன் வட்டமேபொறுத்துவெஞ்சுடரைத்
தூண்டலாமெனச் சுளித்தநீளீட்டிகைதாங்கிக்
கீண்டளாவழல் விழிவழிகிளர்ப்பவிட்டெதிர்ந்தான்.

இ-ள். நீண்ட-நெடிய, வாள்-வாளானது, புடை-இடையில், நெருங்கி- இறுகக்கட்டித் (தூங்க), படர்-பரவிய, கரும்-கரிய, முகில்போல்-மேகமொ த்த, மாண்ட-பருத்த, தோள்-தோளில், வியன்-அகன்ற, வட்டம்-கேடயம், பொறுத்து-(தூங்கச்) சுமந்து, வெம்-வெப்பமாகிய, சுடரை-சூரியனை, தூண் டலாமென-தூண்டலாமென்றதுபோல, சுளித்த-கோபங்காட்டும், நீள்-நீண் ட, ஈட்டி-ஈட்டியை, கை-கையில், தாங்கி-பிடித்து, விழிவழி - கண்வழியாய், கீண்டு-கிழித்து, அளாவு-அளாவிய, அழல்-தழலை, கிளர்ப்பவிட்டு - நிறையவி ட்டு, எதிர்ந்தான்-எதிர்ந்தான். எ-று. கீன்று-என்பதுகீண்டெனவாயிற்று.

உரை. — நீண்டவா ளிடையிற்றூங்கக் கருமேகமொத்த தோளிற் கேடயந்தூங்கச்சுமந்து சூரியனைத்தூண்டவே ணுமென்றதுபோலக் கோபங்காட்டு நீண்டவீட்டியைக்கை யிற்றாங்கிக் கண்ணைக்கிழித்தளாவிய தழலைநிறையவிட்டெதிர் ந்தான். (௰உ)

பெருக்குவீங்கிய பெரும்புனலலைசுருட்டன்ன
வெருக்குவீங்கிய விழிவுகுநெஞ்சிடையடங்காச்
செருக்குவீங்கிய விராக்கதனெரியெழச்சினந்து
தருக்குவீங்கிய சலவுரையிடியெனவிடிப்பான்.

இ-ள். பெருக்கு-வெள்ளத்தினால், வீங்கிய-பொங்கிய, பெரும்புனல்-ஆறு, அலை-தன்றிரையை, சுருட்டன்ன-சுருட்டியோடியதுபோல, எருக்கு-எருக்குமாலை, உகும்-தரும், இழிவு-இழிவு, வீங்கிய-நிறைந்த, நெஞ்சிடை-நெஞ்சத்தில், அடங்கா-அடங்காத, செருக்கு-ஆங்காரத்தால், வீங்கிய-பொங்கிய, இராக்கதன்-அரக்கன், எரியெழ-நெருப்பெழ, சினந்து-கோபித்து, தருக்கு-ஆங்காரம், வீங்கிய-நிறைந்த, சலவுரை-கோபவுரைகளை, இடியென-இடியைப்போல, இடிப்பான்-இடித்துச்(சொல்லுவான்) எ-று.

உரை.—வெள்ளத்தினாற் பொங்கியவாறு தன்றிரைசுருட்டியோடியதுபோல வெருக்குமாலையோ டிழிவுநிறைந்த நெஞ்சிடத் தடங்காதவாங்காரத்தாற்பொங்கிய விராக்கதன் நெருப்பெழச்சினந்து நிறைந்தாங்காரச்சலவுரைகளை யிடியிடித்தவோசையோடே சொல்லுவான். (௰௩)

கூர்த்தபோர்செயக் கூடினர்க்கொருவன்வந்தெய்திச்
சீர்த்தநானவன் சிறந்தபோர்தனித்தனித்தாக்கத்
தோர்த்தபாங்கினர் தொழும்பரொன்றுகுவரொன்று
வார்த்தவோகையா னகைத்திகழ்வறைந்தறைந்தழைப்பான்.

இ-ள். கூர்த்த-மிகுந்த, போர்செய-போர்செய்ய, கூடினர்க்கு-வந்தவருள், ஒருவன்-ஒருவன், வந்து-வந்து, எய்தி-சேர்ந்து, சீர்த்த-சிறந்த, நான்-நானும்-, அவன்-அவனும், தனித்தனி-தனித்து, சிறந்த-பலத்த, போர்-சண்டை, தாக்க-பொருதவே, தோர்த்தபாங்கினர்-தோர்த்தபக்கத்தார், தொழும்பரொன்று-அடிமைகளாய், ஆகுவரொன்று-ஆவார்களென்று, ஆர்த்த-கூப்பிட்ட, ஓகையால்-களிப்பால், நகைத்து-சிரித்து, இகழ்வு-இகழ்ச்சி, அறைந்தறைந்து-சொல்லிச்சொல்லி, அழைப்பான்-அழைப்பான். எ-று.

உரை.—போர்செய்யவந்தவருள் ளொருவன்வந்து நானுமவனுந் தனித்துப்பொருதவே தோர்த்தவனைச் சேர்ந்த படையெல்லா மடிமையாகட்டென்று கூப்பிட் டிகழ்ச்சியோடு சொல்லிச்சொல்லி யழைப்பான். (௰௪)

பெரியகுன்றமோ பேயதோ பூதமோவேதோ
வுரியதொன்றிலா வுருவினைக்கண்டுளிவெருவிக்
கரியவிண்ணிடி கதத்தமின்கொடுவிடுத்தன்ன
வரியகோவியாற் றறைந்தசொற்கேட்டனர்மருண்டார்.

இ-ள். பெரிய-பெரும், குன்றமோ-மலையோ, பேயதோ-பேயோ, பூதமோ-பூதமோ, ஏதோ-யாதோ, உரியது-சரியாகிய, ஒன்றிலா-ஒன்றில்லாத, உருவினை-உருவை, கண்டுளி-கண்டவிடத்து, வெருவி-(எவரும்)அஞ்சி, கரிய-கறுத்த, விண்-மேகம், கதத்த-உக்கிரமான, மின்கொடு-மின்னலோடு, இடி-இடியை, விடுத்தன்ன-விட்டதுபோல, அரிய-மிகுபலமுள்ள, கோவியாற்று-கோவியாற்றென்பவன், அறைந்த-சொன்ன, சொல்-சொல்லை, கேட்டனர்-கேட்டவர்கள், மருண்டார்-மயங்கினர். எ-று.

உரை.—மலையோ பேயோ பூதமோ வேதோ சரியொன்றில்லாத வுருவைக்கண்டெவருமஞ்சி மின்னியிடித்த மேகம்போலக்கோவியாற்றுசொன்னதைக்கேட்டுமயங்கினர். (௰௫)

நன்னெடும்படை நடுக்குறிவெருவியதன்மை
கன்னெடுங்குவ டொத்தனன்செருக்கெழக்கடுத்துப்
பன்னெடும்பகல் பரமனைப்பகைப்பவுமிகழ்ந்த
சொன்னெடும்பகை துடர்ந்தனனெவரையுநகைப்பான்.

இ-ள். நெடும்-மிகுதியான, நல்-நல்ல, படை-சூதர்படையெல்லாம், நடுக்கு-நடுக்கம், உறி-உற்று, வெருவியதன்மை-அஞ்சினதினால், கல்-கல்லாகிய, நெடும்-உயர்ந்த, குவடு - மலையை, ஒத்தனன்-ஒத்தவனாகியவிராக்கதன், செருக்கு-ஆங்காரம், எழ-எழும்ப, கடுத்து-சினந்து, நெடும்பகல்-நெடுநாளும், பரமனை-ஆண்டவனையும், பகைப்பவும்-பகைப்ப, இகழ்ந்த - இகழ்வுள்ள, பல்-பல, சொல்-சொற்களால், நெடும்பகை - நெடியபகையையும், துடர்ந்தனன் - துடர்ந்தவனாய், எவரையும் - எல்லாரையும், நகைப்பான்-நகைப்பான். எ-று.

உரை.—சூதர்படையெல்லா நடுங்கியஞ்சினதினாற் கன்மலைபோலு மிராக்கதனாங்காரத்தோடுசினந்து நெடுநாளு மாண்டவனையும் பகைப்ப விகழ்ச்சிகளைச் சொல்லிச்சொல்லி நகைப்பான். (௰௬)

தாங்குவாரிலாச் சாற்றியவுரைகள்கேட் டெவரு
நீங்குவாரென நிருபனுமயருதன்னெஞ்சிற்
கேங்குவானெவ னெதிர்ந்தவவ்வரக்கனை வென்றா
லாங்குநானவற் கென்மகளளிக்குவேனென்பான்.

இ-ள். தாங்குவார்-(இவன்பகையையெதிர்த்துத்) தாங்குவார், இலா-இல்லாமலும், சாற்றிய-உரைத்த, உரைகள்-சொற்களை, கேட்டு-கேட்டு, எவரும்-எல்லாரும், நீங்குவாரென-பின்வாங்கினார்களென்று (கண்ட), நிருபனும்-அரசனும், அயரு-மயங்கின, தன்-தனது, நெஞ்சிற்கு-மனதில், எங்குவான்-எங்குகிறவனாய், எதிர்ந்த-எதிர்த்த, அவ்வரக்கனை-அவ்விராக்கதனை, எவன்-எவனாகிலும், வென்றால்-வென்றானால், நான்-யான், அவற்கு-அவனுக்கு, என்மகள்-என்மகளை, அளிக்குவேன்-கலியாணஞ்செய்துகொடுப்பேன், என்பான்-என்பான். எ-று. ஆங்கு-அசை.

உரை.—இவன்பகையையெதிர்த்துத் தாங்குவாரில்லாம லுரைத்தசொல்லைக்கேட் டெவரும்பின்வாங்கினாரென்று கண்டவரசனு மயங்கியேங்கி யவ்விராக்கதனை யெதிர்த்து வென்றவற் கென்மகளைக் கலியாணஞ்செய்வே னென்பான். (௰எ)

இன்னவாய்பக னாற்பதுமிரிந்தபின்னண்ணர்
முன்னர்மூவரே முரண்செயப்போயினரவரைத்
துன்னவாசையாற் றொடர்ந்திளதாவிதனெய்தி
யன்னயாவையு மஞ்சினரறைதலுங்கேட்டான்.

இ-ள். இன்னவாய்-இத்தன்மையாய், பகனாற்பதும்-நாற்பதுநாளும், இரிந்தபின்-கடந்தபின்பு, இள-இளமையாகிய, தாவிதன்-தாவிதனென்பவன், அண்ணர்-தன்னண்ணன்மார், மூவரே-மூன்றுபேரும், முன்னர்-முன்னே, முரண்செய-போர்செய்ய, போயினர்-போயிருந்தார்(என்றதனால்), அவரை-அவர்களை, துன்ன-கிட்டிக்(காண), ஆசையால்-ஆசையினால், எய்தி-(தானுமங்கே) போய், தொடர்ந்து-தேடி, அன்ன-அப்படிப்பட்ட, யாவையும்-செய்தியெல்லாவற்றையும், அஞ்சினர்-பயந்தவர், அறைதலும்-சொல்ல, கேட்டான்-கேட்டான். எ-று.

உரை.—இவ்வண்ணமே நாற்பதுநாளும்போய்த் தாவிதனென்பவன் றன்னண்ணன்மார்மூன்றுபேருமுன்னேயிராசாப்படையிலேபோயிருந்தாரா மவரைக்காண வாசையினா லிதுவறியாமற் றானுமங்கேபோ யிவையெல்லாஞ் சொல்லக் கேட்டான். (௰அ)

கேட்டவாசகங் கிளர்திறநெஞ்சிடத்தெரியை
யீட்டலாமென வெழுந்துளநினைந்தவையாக்கிக்
காட்டவாய்மையிற் கடந்தவல்கடவுளை நகைப்ப
வேட்டலால்விளி விழுங்கியகயவனாரென்றான்.

இ-ள். கேட்ட-கேள்விப்பட்ட, வாசகம்-வார்த்தை, கிளர்-மேலான, திற-ஊக்கமுள்ள, நெஞ்சிடத்து-நெஞ்சிலே, எரியை-தீயை, ஈட்டலாமென-குவித்ததுபோலாகி, எழுந்து-(தாவிதன்) எழுந்து, உளம்-மனதில், நினைந்தவை-நினைத்ததெல்லாம், ஆக்கிக்காட்ட-நிறைவேற்றிக்காட்ட, வாய்மையில்-சொல்லிலடங்காத, கடந்த-மேற்பட்ட, வல்-வல்லமையுள்ள, கடவுளை-ஆண்டவனை, நகைப்ப-இகழ்ச்சிசொல்ல, வேட்டலால்-ஆசையால், விளி-சாவை, விழுங்கிய-விழுங்கிய, கயவனார்-பாவியார், என்றான்-என்றான். எ-று. விளிவு-என்பது விளியெனக்கடைக்குறையாயிற்று.

உரை.—கேட்டவார்த்தையுந் திறத்தநெஞ்சிலே தீக்குவித்ததுபோலாகித் தாவிதனெழுந்து நினைத்ததெல்லா நிறைவேற்றச் சொல்லிலடங்காத வல்லமையுள்ளகடவுளை யிகழ்ச்சி சொல்லிச் சாவைவிழுங்கிய பாவியரென்றானென்க. (௰௯)

கைவயத்தினாற் கருத்திடத் துடலினாங்கோங்கும்
பொய்வயத்தினன் புகைந்தசொற்கஞ்சுவதென்றோ
மெய்வயத்தினால் விழைசெயமாவதோகடவுள்
செய்வயத்தினாற் சிறுவனான்வெல்லுவேனென்றான்.

இ-ள். கை-(தன்) கையின், வயத்தினால்-வல்லமையைப்பற்றி, கருத்திடத்து-மனதில், உடலின்-உடலினும், நாங்கு-மிகவும், ஓங்கும்-உயர்ந்த (ஆங்காரங்கொண்டு), பொய்-பொய்யான, வயத்தினன்-வல்லமையுடையோன், புகைந்த-கக்கின, சொற்கு-உரைக்கு, அஞ்சுவதென்றோ-அஞ்சுவதென்ன, மெய்-சரீரத்தினது, வயத்தினால்-வல்லமையினால், விழை-விரும்பிய, செயமாவதோ-செயமாகுமோ, கடவுள்-ஆண்டவன், செய்-தரும், வயத்தினால்-திறத்தைக்கொண்டு, சிறுவனான்-பாலனாகிய நானே, வெல்லுவேனென்றான்-(அவனைச்)செயிப்பேனென்றான். எ-று.

உரை.—தன்கைவல்லமைநம்பித் தன்னுடலினுமுயர்ந்த வாங்காரத்தைக்கொண்டு பொய்வல்லமையுடையோன்சொன்னவுரைக்கஞ்சுவதென்ன? சரீரவல்லமையினாற் செயமாகுமோ வாண்டவன்றருந்திறத்தைக்கொண்டு நானேபாலனாயினு மவனைவெல்லுவேனென்றானென்க. (௨௰)

என்றதண்ணல்கேட் டிவன்றனைக்கொணர்மினென்றி
சைப்பச்
சென்றவன்னநற் சேடனைநோக்கலுநீயோ
பொன்றவுன்னினாய் பொருப்பினைப்பெயர்த்தெறிந்துவமை
வென்றதிண்மையான் வெகுளிமுன்னீயெவனென்றான்.

இ-ள். என்றது-சொன்னதை, அண்ணல்-அரசனும், கேட்டு-கேள்விப்பட்டு, இவன்றனை-இவனை, கொணர்மினென்று- கூட்டிக்கொண்டுவாருங்களென்று, இசைப்ப-சொல்ல, சென்ற-வந்த, அன்ன-அந்த, நல்-நல்ல, சேடனை-பாலனை, நோக்கலும்-கண்டவுடனே, நீயோ-நீயோ, பொன்ற-சாக, உன்னினாய்-நினைத்தாய், பொருப்பினை-மலைகளை, பெயர்த்தெறிந்து-பெயர்த்தெறியும், உவமை-உவமையை, வென்ற-கடந்த, திண்மையான்-திறத்தோனது, வெகுளிமுன் - கோபத்துமுன்னே, நீயெவனென்றான்- நீயெம்மாத்திரமென்றான். எ-று.

உரை.—சொன்னதை யரசனுங்கேட் டிவனையழைப்பித்து வந்தநல்லபாலனைக்கண்டவுடனே நீயோசாகநினைத்தாய்? மலைகளைப்பெயர்த்தெறியு மொவ்வாததிறத்தோன் கோபத்துமுன்னே நீயெம்மாத்திரமென்றானரசனென்க. (௨௧)

ஏந்தலீரடி யிறைஞ்சியவிளவலுமறைவான்
காய்ந்ததோர்பகை கடுத்ததன்பவஞ்செயின்மீட்டு
வேய்ந்ததோர்படை வேண்டுமோகடவுளைப்பகைத்து
வாய்ந்தவாண்மையை மறுத்தனையெவன்வெல்லானையா.

இ-ள். ஏந்தல்-அரசனுடைய, ஈர்-இரண்டு, அடி-பாதத்தையும், இறைஞ்சிய-வணங்கிய(பின்), இளவலும்-சிறுவன்(ஆகிய தாவிதனும்), அறைவான்-சொல்வான், கடுத்த-உக்கிரமுள்ள, தன்பவம்-தன்பாவமே, காய்ந்தது-சினந்த, ஓர்-ஒப்பற்ற, பகை-பகையை, செயின்-செய்தால், மீட்டு-மீளவும் (அவனை வெல்ல), வேய்ந்த-அணிந்த, ஓர்-ஒரு, படை-ஆயுதம், வேண்டுமோ-வேண்டுவதோ, கடவுளைப்பகைத்து-ஆண்டவனைப்பகைத்து, வாய்ந்த-கொண்ட, ஆண்மையை(கடவுள்செய்யுநல்ல) திறத்தை, மறுத்தனை-விட்டவனை, எவன்-ஆர், வெல்லான்-வெல்லான், ஐயா-ஐயா(வென்றான்). எ-று.

உரை.—அரசன்பாதத்தை வணங்கித் தாவிதனுஞ் சொல்வான்: தன்பாவமேசினந்து தனக்குப்பகைசெய்தால் மீளவுமவனைவெல்ல வேறாயுதம்வேண்டுமோ? கடவுளைப்பகைத்துக் கடவுள்செய்யு நல்லதிறமில்லாதவனை வெல்லாதவனாரையா வென்றானென்க. (௨௨)

திறங்கடுத்தகொல் சிங்கமு முளியமும்பாய்ந்து
மறங்கடுத்ததிர் வல்லியத்தினங்களுமெதிர்ந்து
கறங்கடுத்தகால் கழுத்தினை முருக்கிநான்கொன்றே
னறங்கெடுத்தவ னவற்றினும்வலியனோவென்றான்.

இ-ள். கொல்-கொல்லுதற்கு, கடுத்த-கோபித்த, திறம்-பலமுள்ள, சிங்கமும்-சிங்கமும், உளியமும்-கரடிகளும், கடுத்து-கோபித்து, மறம்-கொலை(செய்ய), அதிர்-கர்ச்சிக்கும், வல்லியத்து-புலிகளின், இனங்களும்-கூட்டங்களும், எதிர்ந்து-(சூழ)எதிர்த்து, பாய்ந்து-பாய்ந்து, கறங்கு-காற்றாடியை, அடுத்த-சேர்ந்த, கால்-காற்றைப்போல, கழுத்தினை-(அவைகளின்) கழுத்தை, முருக்கி-முருக்கி, நான்கொன்றேன்-நானேகொன்றேன், அறம்-அறத்தை, கெடுத்தவன்-கெடுத்த(பாவி), அவற்றினும்-அவைகளினும், வலியனோவென்றான்-பலத்தவனோவென்றான். எ-று.

உரை.— பலத்தசிங்கமுங் கரடிகளும் புலிகளும்வந்து சூழெதிர்த்துப்பாய வதின்கழுத்தைமுருக்கி நானேகொன்றேன், அறங்கெடுத்தபாவியதுகளினும் பலத்தவனோவென்றானென்க. (௨௩)

அரியவாண்மையை யதிசயித்தரசனன்றென்று
விரியளாவொளி வேலொடுதனதுபற்கருவி
யுரியபோர்செய வொருங்குதந்தனன்வற்றொடுதான்
றிரியவாய்முறை தெரிகிலேனெனமறுத்தகன்றான்.

இ-ள். அரிய-அரிய, ஆண்மையை-வல்லமையைக்(கண்டு), அதிசயித்து-அதிசயப்பட்டு, அரசன்-இராசாவும், நன்றென்று-நல்லதென்று, விரியளாவு-விரித்த, ஒளி-ஒளி(செய்யும்), வேலொடு-வேலோடு, தனது-தன், பற்கருவி-பலவாயுதங்களையும், உரிய-தக்க, போர்செய-போர்செய்ய, ஒருங்கு-ஒருமிக்க, தந்தனன்-தந்தான், தான்-(தாவிதனோவென்றால்)தான், அவற்றொடு-அத்தோடு, திரிய-நடக்க, ஆய்-ஆகிய, முறை-விதத்தை, தெரிகிலேனென-அறியேனென்று, மறுத்து-விட்டு, அகன்றான்-போனான். எ-று.

உரை.— அரியவல்லமைகண்டதிசயப்பட்டிராசாவு நல்லதென்றுவிரித்த வொளிசெய்யுந்தன்வேலையு மற்றவாயுதங்களையுந் தந்தான், தாவிதனோவென்றா லத்தோடுநடக்கமாட்டேனென்றதைவிட்டுப்போனானென்க. (௨௪)

தெரிந்தவாய்ந்தவைஞ் சிலையொடுகவணெடுத்தெவரு
மிரிந்தபாலனை நோக்கியுள்ளதிசயித்திரங்க
விரிந்தவாசையால் வேதியராசியைக்கூறப்
பிரிந்தகாலொலி பெருகவாங்கனைவருமார்த்தார்.

இ-ள். தெரிந்த-தெரிந்த, வாய்ந்த-தக்க, ஐஞ்சிலையொடு-ஐந்துகல்லோடு, கவண்-கவணும், எடுத்து-எடுத்து, இரிந்த-(எதிர்த்து)ஓடுகின்ற, பாலனை-பாலனை, நோக்கி-கண்டு, எவரும்-எல்லாரும், உள்-மனதில், அதிசயித்து-ஆச்சரியப்பட்டு, இரங்க-இரங்கவும், விரிந்த-மிகுந்த, ஆசையால்-ஆசையோடு, வேதியர்-குருக்கள், ஆசியை-ஆசிர்வாதத்தை, கூற-சொல்லவும், பிரிந்த கால்-பிரிந்தபோது, ஒலி-ஓசை, பெருக-(மிகவுங்)கிளம்ப, ஆங்கு-அவ்விடத்தில், அனைவரும்-எல்லாரும், ஆர்த்தார்-கூப்பிட்டார். எ-று.

உரை.—தெரிந்தநல்லவைந்துகல்லுங் கவணுமெடுத்துப்போகிற பாலனைக்கண்டவெல்லாரு மாச்சரியப்பட்டிரங்கவுமாசையோடு குருக்களெல்லாரு மாசிர்வாதஞ்சொல்லவும் படையிற்பிரிந்து தனியேபோகையி லோசைமிகவுங்கிளம்பவெல்லாருங்கூப்பிட்டாரென்க. (௨௫)

ஆர்த்தவோதைகேட் டரக்கனின்றமர்க்கெதிர் வருகப்
பார்த்தபாலனைப் பழித்தெழுந்தியாவருமஞ்சக்
கூர்த்தவேலொடு குறுகவந்தகல்கருமுகிலிற்
பேர்த்தகோடைநாட் பேரிடியெனவுரைசெய்தான்.

இ-ள். ஆர்த்த-கூப்பிட்ட, ஓதைகேட்டு-ஓசைகேட்டு, அரக்கன்-இராக்கதன், இன்று-இப்பொழுது, அமர்க்கு-(தன்னோடு)போருக்கு, எதிர்-எதிரே, வருக-வர, பார்த்த-கண்ட, பாலனை-பாலகனை, பழித்து-நிந்தித்து, எழுந்து-எழுந்து, இயாவரும்-அனைவரும், அஞ்ச-அஞ்சும்படி, கூர்த்த-கூர்மையுள்ள, வேலொடு-வேலோடு, குறுக-கிட்ட, வந்து-வந்து, அகல்-அகன்ற, கரும்-கரிய, முகிலில்-மேகத்தில், பேர்த்த-பெயர்ந்த, கோடைநாள்-கோடைநாளின், பேர்-பெரிய, இடியென-இடியைப்போல, உரைசெய்தான்-சொன்னதாவது. எ-று.

உரை.—கூப்பிட்டவோசைகேட்டவிராக்கதன் றன்னோடுதனிப்போர்பொருதவந்த பாலனைப்பார்த்துப் பழித்தெழுந்தனைவருமஞ்சக் கூர்மையுள்ளவேலேந்திக் குறுகவந்து கோடைநாளையிற் கருமேகத்திற் பெயர்ந்த பேரிடியென்னச்சொன்னதாவதென்க. (௨௬)

நீயடாவெதிர் நிற்பதோமதம்பொழிகரிமே
னாயடாவினை நடத்துமோகதங்கொடுநானே
வாயடாபிளந் துயிர்ப்பிடமறுகிநீநுண்டூ
ளாயடாவுல கப்புறத்தேகுவாயென்ருன்.

இ-ள். நீ-நீ, எதிர்-(என்ஞேடுபொருத) எதிராய், நிற்பதோ - நிற்பா யோ, அடா-அடா, மதம்-மதத்தை, பொழி-பொழிகின்ற, கரிமேல்-யானை மேல்(எதிர்த்து), நாய்-நாய், வினை-போர், நடத்துமோ-பொருதுமோ, அடா-அடா, கதங்கொடு-சினங்கொண்டு, நானே-நான், வாய்-வாயை, பிளந்து-திறந்து, உயிர்ப்பிட-ஒருமூச்சுவிட, அடா-அடா, மறுகி-சுழன்று, நீ-நீ, நுண்-நுண்ணிய, தூளாய்-தூசியாகி, உலகு-இவ்வுலகிற்கு, அப்புறத்து-அப்புறம், ஏகுவாய்-போவாய், அடா-அடா, என்ருன்-என்ருன். எ-று.

உரை.—நீயோ வென்ஞேடுபொருதவந்தாயடா, மதயானைமேலெதிர்ந்து நாயேபொருதுமடா, சினந்துநானொரு மூச்சுவிட்டால்டா, நீசுழன்று நுண்டூசியாகி யிவ்வுலகிற்கப் புறம்போவாயடாவென்ருனென்க. (உஎ)

வெல்வைவேல்செயு மிடலதுன்மிடலடாநானே
வெல்லைவயாதர வியற்றெதிரிலாத்திறக்கடவுள்
வல்லைகயோடுனை மாய்த்துடல்புட்கிரையாக
வொல்செய்வேனென வுடைகவண்சுழற்றினனிளையோன்.

இ-ள். வெல்-வெல்லற்குரிய, வை-கூர்ந்த, வேல்-வேலானது, செயும்-செய்யும், மிடலது-வல்லமை, உன்-உனது, மிடல்டா-வல்லமை (யெல்லாம்) அடா, நானே-நானேவென்ருல், எல்லை-சமயத்திற்கு, ஆதரவு - உதவியை, இயற்று-செய்யும், எதிரிலா-ஒப்பில்லாத, திற-பலங்கொண்ட, கடவுள்-கடவுளின், வல்கையோடு-வலக்கைக்கொண்டு, உனை-உன்னை, மாய்த்து-கொன்று, உடல்-(உன்) உடலை, புட்கு-பறவைகளுக்கு, இரையாக-இரையாக, ஒல்-பொருந்த, செய்வேன்-செய்வேன், என-என்று, உடை-தன்னுடைய, கவண்-கவணை, சுழற்றினன்-சுற்றினன், இளையோன்-இளையோன் (ஆகியதாவீதன்). எ-று.

உரை.—வெல்லற்கரிய கூர்ந்தவேலினுல்லவோ வுன்வல்லமையெல்லாமடா, நானேவென்ருற் சமயத்திற்குதவு மளவில்லாத பலங்கொண்டகடவுளின் வலக்கைக்கொண் டுன்னைக்கொன் றுன்னுடலைப் பறவைக்கிரையாகச்செய்வே னித்தேரமேயென் றுதன்கவணைச்சுழற்றினுன்ருவிதனென்க. (உஅ)

கல்லையேற்றலுங் கவணினைச்சுழற்றலுமக்கல்
லொல்லையோட்டலு மொருவருங்காண்கிலரிடிக்குஞ்
செல்லையொத்தன சிலைநுதற்பாய்தலுமன்னா
னெல்லைபாய்ந்திரு ளிரிந்தெனவீழ்தலுங்கண்டார்.

இ-ள். கல்லை-(கவண்மேற்) கல்லை, ஏற்றலும்- வைக்கவும், கவணினை-கவணை, சுழற்றலும்-சுழற்றவும், அக்கல்-அந்தக்கல்லை, ஒல்லை-சீக்கிரம், ஓட்டலும்-எறியவும், ஒருவரும்-ஒருவரும், காண்கிலர்-காணாமல், இடிக்கும்-இடித்த, செல்லைஒத்தன-மேகத்தைப்போல், சிலை-விற்போன்ற, நுதல்-(இராக்கதனது)கண்ணுதலை, பாய்தலும்-(கல்லு)பாயவும், அன்னான்-அவன், எல்லை சூரியன், பாய்ந்து-பாய்ந்து, இருள்-இருளானது, இரிந்தென-சாயுமாறுபோல, வீழ்தலும்-விழவும், கண்டார்-கண்டார்கள். எ-று.

உரை.—கவண்மேற்கல்லைவைக்கவுங் கவணைச்சுழற்றவுங் கல்லையெறியவு மெவருங்காணாம லிடித்த.மேகத்தைப்போலிராக்கதனது கண்ணுதலைக்கல் லுட்பாயவு மவன் செஞ்சுடர் வர விருள்சாயு மாறுபோல விழவுங் கண்டாரென்க. (உகூ)

கடையுகத்தினிற் கருமுகி லுருமொடுவிழும்போற்
படைமுகத்தினிற் பார்பதைத்தஞ்சவீழ்ந்தனன்றன்
புடையகத்தினிற் புணர்ந்தவாளுருவியென்றெய்வ
முடையுரத்தினை யுணர்மினென் றிருஞ்சிரங்கொய்தான்.

இ-ள். கடையுகத்தினில்-(உலகமுடியுங்)கடையுகத்தில், உருமொடு-இடியோடு, கரும்-கரிய, முகில்-மேகங்கள், விழும்போல்-விழுவதுபோல, படைமுகத்தினில்-போர்க்களத்தில், பார்-பூமியும், பதைத்து-அடித்து, அஞ்ச-பயப்பட, வீழ்ந்தனன்றன் - விழுந்தவிராக்கதனது, புடையகத்தினில் - இடையில், புணர்ந்த-கட்டித்(தூங்கிய) வாள்-வாளை, உருவி-உருவி, என்றெய்வமுடைய-என்னுடையதெய்வங்கொண்ட, உரத்தினை-வல்லமையை, உணர்மினென்று-அறியுங்களென்று, இரும்-பெரும், சிரம்-தலையை, கொய்தான்-அறுத்தான்(தாவீதன்). எ-று.

உரை.—உலகமுடியுங்கடையுகநாளி லிடியோடுமேகங்கள்விழும்போற் போர்க்களத்திற் பூமியும்பதைத்தஞ்ச விழுந்த விராக்கதனிடையிற்றூங்கிய வாளுருவி யென்றெய்வங்கொண்டவல்லமையறியுங்களென் று பருந்தலையை யறுத்தான்றாவீதனென்க. (௩௰)

கூனெடும்பிறை குழைந்தவாய்நிரைநிரைதோன்ற
ஊனெடுந்திரை யொழுகவாங்கனைவருங்கூச
நீனெடும்பொறை நிகர்தலை தாக்கினனொன்னார்
மானெடும்படை மருண்டுளைந்துளமுறிந்தோட.

இ-ள். குழைந்த-குழைந்த, வாய்-வாயில், கூன்-வளைந்த, நெடும்-நீண்ட, பிறை-பிறைகளைப்போன்றபல்லெல்லாம், நிரைநிரை-நிரைநிரையாய், தோன்ற-தோன்றவும், ஊன்-தசையினின்று, நெடும்-மிகுந்த, திரை-(இரத்தத்)திரை, ஒழுக-ஓடவும், ஆங்கு-அவ்விடத்து, அனைவரும்-எவருங் (கண்டு), கூச-அஞ்சவும், நீல்-கரிய, நெடும்-நெடிய, பொறை-மலையை, நிகர்-ஒத்த, தலை-தலையை, தாக்கினன்-(தாவிதன்) தாக்கினன், மால்-மயங்கின, ஒன்னார்-பகைவருடைய, நெடும் - நெடிய, படை-படைகள் (கண்டு), மருண்டு-பயந்து, உளைந்து-நொந்து, உளமுறிந்தோட-மனமுறிந்தோட. எ-று.

உரை. — குழைந்தவாயில் வளைந்தநீள்பிறைகள்போலப் பல்லெல்லா நிரைநிரையாய்த்தோன்றவு மிரத்தத்திரைகொண்டோடவு மெவருங்கண்டுகூசவுங் கரியநெடுமலைபோலுந் தலையைத்தாவிதன் றாக்கினன் மயங்கினபகைவர்நெடும்படை நொந்து முறிந்தோடவென்க. (௯௧)

## வேறு.

கார்முகத்தசனிகூசக் கடுத்தவவ்வரக்கன்வென்ற
சீர்முகத்திளவல்பின்னர் திறத்ததன்னாமவேலாற்
போர்முகத்தெதிரொன்றில்லான் பொழிமறைபழித்தயாரும்
பார்முகத்ததற்கெஞ்ஞான்றும் பரிந்திடவகைசெய்தானே.

இ-ள். கார்-மேகத்தின், முகத்து-இடத்தினின்று(விழும்), அசனி-இடியே, கூச-கூச, கடுத்த- சினங்கொண்ட, அவ்வரக்கன் - அவ்விராக்கதனை, வென்ற-செயித்த, சீர்-சிறந்த, முகத்து- முகத்தோனான, இளவல்-இளையோன் (ஆகியதாவிதன்), பின்னர்-பின்பு, போர்-போரின், முகத்து-இடத்தில், எதிரொன்றில்லான்-எதிரொன்றில்லாதவனாகி, பொழி-(சர்வநன்மையும்)பொழிகின்ற, மறை-வேதத்தை, பழித்த-நிந்தித்த, யாரும்-எல்லாரும், தன்-தனது, திறத்த-பலத்த, நாமவேலால்-நாமவேலினால், பார்-பூமியின், முகத்து-இடத்தில், அதற்கு-அவ்வேதத்துக்கு, எஞ்ஞான்றும்-எப்பொழுதும், பரிந்திட-பரிந்துபேச, வகைசெய்தான்-வகைசெய்தான். எ-று.

உரை. — மேகத்தினின்றுவிழுமிடியேகூசச் சினங்கொண்டவிராக்கதனைத் தாவிதன்வென்றமையாற் பின்பு போர்க்

களத்திற் றன்னுமைவேலுக்கெதிரொன்றின்றி மெய்யானவேத
த்தைப்பழித்த வெல்லாரும் பூமியிலென்றும் பரிந்துபேச
வகைசெய்தானென்க. (௱௨)

கொய்தவாண்முடிதிரண்ட குப்பைகளேறிவெய்யில்
செய்தவாண்முடியைச்சூடிச் சிறந்தவாசனத்திலோங்கிப்
பெய்தவானொளியோடாய்ந்த பெருந்தயைபிலிற்றுஞ்செங்
கோ
லெய்தவானிறையோனாண்மை யெய்தியேயரசனானான்.

இ-ள். வாள்-வாளினால், கொய்த-தான்வெட்டி(வீழ்த்திய), திரண்ட-மிகு
ந்த, முடி - முடிகளின், குப்பைகள் - குப்பைகளை, ஏறி - மிதித்தேறி, வெய்
யில்-ஒளியை, செய்த-செய்த, வாள்-விளக்கமாகிய, முடியைச்சூடி-(ஒரு)முடி
யைச்சூடி, சிறந்த-சிறப்புள்ள, ஆசனத்தில்-ஆசனத்தின்மேல், ஓங்கி-உயர்ந்
திருந்து, பெய்த-வீசின, வான்-நல்ல, ஒளியோடு-ஒளியுடனே, ஆய்ந்த-தேர்
ந்த,பெருந்தயை-பெருந்தயையும், பிலிற்றும்-பொழிந்த, செங்கோல்-செங்
கோலை,எய்த-அடைய, வான்-வானுலகின், இறையோன்-கடவுள்(தந்த), ஆண்
மை-வல்லமையை, எய்தி-அடைந்து, அரசனானான்-அரசனானான். எ-று.

உரை. —தான்வெட்டிவீழ்த்திய திரண்டமுடிகளின்குப்
பையைமிதித்தேறித் தான்விளங்கியவொருமுடியைச்சூடிச்சி
றந்தவாசனத்தின்மேல் வீற்றிருந்து நல்லொளியும் பெருந்த
யையும்பொழிந்தசெங்கோலுடைய வாண்டவன்றந்த வாண்
மையையடைந்து தானரசனானானென்க. (௱௩)

நூனகத்துளங்கிக்கேள்வி நுண்ணறிவாளரொவ்வா
வானகத்தொதுங்கிவாழும் வரும்பொருள்காட்டுங்காட்சி
கானகத்தொதுங்கிவைகுங் கடித்தவத்தோடுமின்ன
கோனகத்திலங்கியங்கண் குடியெனவதிந்ததாமால்.

இ-ள். நூல்-நூல்கள், துலங்கி-விளங்கி, நக-ஒளிவிட,கேள்வி-கேள்வியா
லுண்டான, நுண்-நுட்பமாகிய, அறிவாளர்-அறிவினையுடையோர்; ஒவ்வா-
(பூமியில்)பொருந்தாமல், வான்-வானத்தின்,அகத்து-இடத்தில், ஒதுங்கி-ஒது
ங்கி, வாழும்-வாழும், வரும்-(இனி)வரும், பொருள்-பொருட்களை, காட்டும்-
காட்டுகின்ற, காட்சி-காட்சி, கானகத்து-வனத்தில், ஒதுங்கி-ஒதுங்கி, வைகு
ம்-இருக்கும, கடி-அரிய, தவத்தோடும் - தவத்துடனேயும், இன்ன-இந்த,
கோன்-இராசாவின், அகத்து-இடத்தில், இலங்கி-விளங்கி, அங்கண்-அங்கே
(இவனாசனத்தில்), குடியென-(கூடக்)குடியாக, வதிந்ததாம்-இருந்ததாம்.
எ-று. ஆல்-அசை.

உரை. — நூல்களால்விளங்குங்கேள்விதந்த நுண்ணறிவுடையோரொவ்வாதமுறையோடுபூமியிற்கிடையாமல் வானத்தின்மேலொதுங்கிவாழு மினிவரும்பொருட்களைக்காட்டுங் காட்சியையடைந்து வனத்தி லொதுங்கியிருக்கு மரியநற்றவமே யிந்தவிராசாவினிடத்தில்விளங்கி யிவ னாசனத்திற்கூடக் குடியாகவிருந்ததென்க. (௫௪)

சூழ்ந்தபொன்முடியுங்கோலுந் துறந்துபோயரியகானில் [டி
வாழ்ந்தவொண்டவஞ்செய்மன்னர் வழங்கினுமதனைக்கூட்
யாழ்ந்தபன்மணியின்வீங்கு மாசனத்திருக்கச்சேர்த்தல்
தாழ்ந்தபண்பொழித்தவின்ன தருமகோனரிதிற்செய்தான்.

இ-ள். சூழ்ந்த-சூடிய, பொன்முடியும்-பொன்னாற்செய்தமகுடமும், கோலும்-செங்கோலும், துறந்து - வெறுத்துவிட்டு, போய்-(துறவாகப்)போய், அரிய-அரிதாகிய, கானில்-கானத்தில், வாழ்ந்த-வாழ்ந்த, ஒண்-நல்ல, தவம்-தவத்தை, செய்-செய்யும், மன்னர்-அரசர், வழங்கினும்-உண்டாயினும், அதனை-அத்தவத்தை, கூட்டி-கூட்டி, ஆழ்ந்த-புதிந்த, பல்-பல, மணியின்-மணியால், வீங்கும்-அலங்கரிக்கப்பட்ட, ஆசனத்து-(தன்) ஆசனத்தில், இருக்க-இருக்க, சேர்த்தல்-சேர்ப்பது, தாழ்ந்த-தாழ்வாகிய, பண்பு-விதத்தை, ஒழித்த-நீக்கிய, இன்ன-இந்த, தருமகோன்-தருமவிராசாவே, அரிதில்-அரிதாய், செய்தான்-செய்தான். எ-று.

உரை. —சூழ்ந்தபொன்முடியுஞ் செங்கோலும் வெறுத்துத் துறவாக்ப்போ யரியகானத்தில்வாழ்ந்த நற்றவத்தைச் செய்யுமரசருண்டாயினு மத்தவத்தையழைத்துக்கூட்டி மணியாலலங்கரித்த தன்னாசனத்திலிருத்திச்சேர்ப்பது தாழ்வில்லாத விவ்விராசாவே யரிதாய்ச்செய்தான். (௫௫)

வேலொடுமாற்றார்வெள்ளம் வென்றுவென்றடக்கித்த [ன்னை
நூலொடுவெல்லவைந்து நட்புலனடக்கிக்காத்துக்
கோலொடுவழாமைநீதிக் கொழுந்துசேர்கொழுகொம்பானா
சூலொடுவழங்குமாரித் துளிபழித்தருளுங்கையான். [ன்

இ-ள். வேலொடு-வேலால், மாற்றார்-பகைவருடைய, வெள்ளம்-திரண்ட கூட்டத்தை, வென்றுவென்று-செயித்துச்செயித்து, அடக்கி-அடக்கி, நூலொடு-நூற்படியே, தன்னை-தன்னைத்(தான்), வெல்ல-செயிப்பதற்கு, ஐந்து-ஐந்தென்னுமெண்ணினையுடைய, நண்-நட்பமாகிய, புலன்-பொறிகளை, அடக்கி-அடக்கி, காத்து-காவல்செய்து, வழாமை-வழுவாத, கோலொடு-செங்கோ

லோடு, நீதி-நீதியாகிய, கொழுந்து-இளங்கிளைகள், சேர்-படரும், கொழு கொம்பானுன் - கொழுகொம்பானுன், சூலொடு-சூலோடு, வழக்கும்-பெய்யும், மாரி-மேகத்தின், துளி-துளியை, பழித்து-வென்று, அருளும்-கொடுக்கும், கையரன்-கையையுடையரன். எ-று.

உரை — வேலொடு பகைவர்வெள்ளத்தைவென்று வென்றடக்கி முடிந்தபின்பு நூற்படியேதான்றன்னைவெல்ல வைம்பொறிகளையடக்கிக்காத்து வளையாதசெங்கோல் நீதிக்கொழுந்துபடரும் கொழுகொம்பானுன் சூல்கொண்டமேகத்தின்றுளியைவென்று கொடுக்குங்கையரனென்க. (௬௬).

மன்னருந்தலையயாற்பாரில் வழங்கியசீர்த்தியல்லா
வின்னருங்குணங்கடம்மா லிறையவற்குகந்தகோமான்
முன்னருந்தவத்தோர்கொண்ட முறைதவிர்வரங்களெய்தித்
துன்னருமுயர்வீடுள்ளோர் துணையெனப்புவியில்வாழ்ந்தான்

இ-ள். மன்னு-நிலைபெற்ற, அரும்-அரிய, தலையால்-தலையினுல், பாரில்-பூமியில், வழங்கிய-அடைந்த, சீர்த்தி-கீர்த்தியை, அல்லால்-அல்லாமல், இன்ன-இந்த, அரும்-அரிய, குணங்கடம்மால்-குணங்களினுல், இறையவற்கு-கடவுளுக்கும், உகந்த-பிரியமுள்ள, கோமான்-வேந்தன், முன்-முற்காலத்தில், அரும்-அரிய, தவத்தோர்-தபசிகள், கொண்ட-பெற்ற, முறைதவிர்-அளவிற்ற, வரங்கள்-வரங்களை, எய்தி-அடைந்து, துன்னரும்-கிட்டுதற்கரிய, உயர்வீடு-வான்வீட்டை, உள்ளோர்-உடையோர்களுக்கு, துணையென-ஒருதுணையைப்போல, புவியில்-பூவுலகில், வாழ்ந்தான்-வாழ்ந்திருந்தான். எ-று.

உரை.—அரியதலையினுற் பூமியிற்கீர்த்தியடைந்ததல்லாவிந்த நற்குணங்களினுற் கடவுளுக்குமுகந்தவேந்தன் முற்காலத்திலரியதவத்தோரடைந்த வளவில்லாதவரங்களையடைந்து வானுடையோரி லொருவன்போற் பூவுலகில்வாழ்ந்திருந்தானென்க.

(௬௭)

ஆயினுனடந்ததன்மை யாண்டகையுவப்பிலோர்நாள்
வீயினுனிகர்த்தவெச்ச மிடைமுறைபலவும்போயோர்
சேயினையப்பச்செய்வேன் சிறந்தமூவுலகிலன்றுன்
வாயினுல்விலாக்கோன்மை வரம்பெறவளிப்பேனென்றுன்.

இ-ள். ஆயினுன்-(இராசா)வானவன், நடந்ததன்மை, நடந்ததன்மையால், ஆண்டகை-ஆண்டவன், உவப்பில்-மகிழ்வால், ஓர்நாள்-ஒருநாள்(சொன்னதாவது), வீயினுல்-மலரை, நிகர்த்த-ஒத்த, எச்சம்-(உன்) சந்ததி, மிடைபதினும், பலவும்-பல, முறை-தலைமுறை,போய்-போய், ஓர்-ஒரு, சேயினுல்-

பிள்ளையினால், நயப்ப-நீமகிழ, செய்வேன்-செய்வேன், சிறந்த-சிறப்பமைந்த, மூவுலகில்-மூவுலகிற்கும், அன்னான்-அவன், வாயினால்-வாயினாலே, நவிலா-சொல்லப்படாத(முறையால்), கோன்மை-செங்கோன்மையை, பெற-அடைய, வரம்-வரத்தை, அளிப்பேனென்றான்-கொடுப்பேனென்றான். எ-று.

உரை.—அவனிப்படியே நடந்திருவாண்டவ னினிதா யொருநாள்சொல்லி மலர்போலாகு முன்சந்ததியின் றலைதலை முறைபோ யொருபிள்ளையினா னீ யதமிகவுங்களிகூரச்செய் வேன் மூவுலகிற்குமவன்சொல்லரியமுறையாற்செங்கோல்ந டத்தியாளும்படி வரங்கொடுப்பேனென்றானென்க. (௫௮)

தந்தவிவ்வரமின்னான்றன் சந்ததிமுறையிற்சேயாய்
வந்ததற்பரனாலாய வளப்பமென்றாலுமென்ற
விந்தநன்முறையான்மைந்த னியல்பொடுதேவனென்பா
னந்தரமுதலியாண்டு மாள்வதுமரியபாலோ.

இ-ள். தந்த-கொடுத்த, இவ்-இந்த, வரம்-வரம், முறையில்-முறையாக, இவனான்றன்-இவனது, சந்ததி-கோத்திரத்தில், சேயாய்-குழந்தையாய், வந்த-வந்தவதரித்த, தற்பரனால்-கடவுளால், ஆய-நிறைவேறின, வளப்பம்-நன்மை, என்றாலும்-என்றுசொன்னாலும், என்ற-(அப்படி)சொன்ன, இந்த-இத்தன்மையாகிய, நல்-நல்ல, முறையால்-ஒழுக்கால், மைந்தன்-மனுமகனின், இயல்பொடு-சுபாவத்தோடு, தேவன்-கடவுள், என்பான்-என்றுசொல்லப்படுபவன், அந்தரமுதல்-வான்முதல், இயாண்டும்-எங்கும், ஆள்வதும்-இராச்சியபாரம்பண்ணுவதும், அரிய-அரிதாகிய, பாலோ-தன்மையோ. எ-று. ஈற்றேகாரமெதிர்மறையாயிற்று.

உரை.—தந்தவிவ்வரத்தின்முறைமையே யிவன்கோத்திரத்தி லாண்டவன் மனிதனானதினால் நிறைவேற்றினதென்னலா மாயினு மித்தன்மையால் மனிதனானகடவுளே வான்முதலெங்குமாள்வ தரியகருமமோ? (௫௯)

கோன்மையா லுயர்ந்ததாவிற் கோத்திரத்துதிக்குந்தெ
மென்மையாலொருவனன்றி விபுலையிற்பிறக்குமாக்கட் [ய்வ
பான்மையா லுயிர்த்தமைந்தன் பாரொடுவானுமாள
நான்மையால்வழுவாச்செங்கோல் நல்கவுள்ளினனாதன்.

இ-ள். கோன்மையால்-செங்கோலால், உயர்ந்த-ஓங்கிய, தாவின்-தாவிதுடைய, கோத்திரத்து-கோத்திரத்தில், தெய்வமேன்மையால்-தேவமகிமையோடு, ஒருவன்-ஒருவன், உதிக்கும்-பிறப்பதும், அன்றி-அல்லாமல், விபுலையில்-பூவுலகில், பிறக்கும்-சன்மிக்கும், மாக்கள்-மனுஷர்களுடைய, பான்மையால்-தன்மையால், உயிர்த்த-பிறந்த, மைந்தன்-பிள்ளை, பாரொடு-பூமியோடு, வானும்-வானமும், ஆள-ஆளுதற்கு, நான்மையால்-நாற்குற்றத்தினால், வழுவா-வழுவாத, செங்கோல்-செங்கோலை, நல்க-(அவனுக்குக்)கொடுக்க, உள்

அ

வினரும்-நினைத்தாரும், நாதன்-ஆண்டவன். எ-று. தாவிதனென்பது தாவி னென-இடைக்குறையாயிற்று.

உரை.— செங்கோலானுயர்ந்த தாவிதன் கோத்திரத்திற் றேவபெலத்தினால் மனிதனுந்தேவனுமொன்று யொருவன் பிறப்பதுமன்றிப் பூவுலகிலெல்லாரும்பிறக்குந்தன்மையா லவன்கோத்திரத்தில்வந்த வொருபிள்ளைதானே பூமியும்வானமுமாளக் காமங் கோப மயக்கமாங்காரமென்னு நாற்குற்றத்தினால் வளையாதசெங்கோலை யவனுக்குக்கொடுக்கநினைத்தாரூண்டவனென்க. (௪௰)

உள்ளினதெல்லாமுள்ளு முறறியாலாக்கும்வல்லோ
னெள்ளினதெல்லா நீக்கு மியல்பொடுதாவிதன்றன்
வள்ளினமுறைமிற்சேயாய் வந்துமூவுலகமாள
நள்ளினவளங்கொள் குசை நயத்தொடுதெரிந்திட்டானே.

இ-ள். உள்ளினதெல்லாம்-நினைத்தயாவும், உள்ளும்-நினைத்த, உறுதியால்-திடத்தோடு, ஆக்கும-முடிக்கும், வல்லோன்-வல்லவருன (கடவுளே), எள்ளினதெல்லாம்-குறையானதெல்லாம், நீக்கும்-விலக்கும், இயல்பொடு-முறையோடு, தாவிதன்றன்-தாவிதனுடைய, வள்-வளமுள்ள, இன-கோத்திரத்தின், முறையில்-வரிசையில், சேயாய்-பிள்ளையாய், வந்து-தோன்றி, மூவுலகம்-மூன்றுலகங்களையும், ஆள-ஆட்சிபண்ண, நள்ளின-நடுவுள்ள, வளங்கொள்-வளமைகொண்ட, குசை-குசையை, நயத்தொடு-இன்பத்தோடு, தெரிந்திட்டான்-தெரிந்துகொண்டான். எ-று.

உரை.—நினைத்தவை நினைத்ததன்மையின் முடிக்கவல்லவனுனகடவுளே குறையொன்றில்லாமுறையோடு தாவிதன்கோத்திரத்திற் பிள்ளையாய்வந்து மூவுலகிற்குமரசனாக மிகுந்தவளமையுள்ள குசையைத்தெரிந்தான். (௪௧)

ஏற்றியமுறையோடெந்தை யியன்றதன்வலிமைகாட்
டப்
போற்றியவரங்கொடெங்கும் பொருனனுத்தெரிந்தகுசை
சாற்றியகோத்திரத்தின் றலைமுறைவழுவாதேனு
மாற்றியதிருவொன்றின்றி வறுமையான்பிறக்கச்செய்தான்.

இ-ள். ஏற்றிய-உயர்ந்த, முறையோடு-முறைமையோடு, எந்தை-ஆண்டவன், இயன்ற-உள்ள, தன்-தனது, வலிமை-வல்லமையை, காட்ட-காட்டுதற்கு, போற்றிய-மிகுந்த, வரம்-வரங்களை, கொடு-கொண்டு, எங்கும்-எவ்விடத்தும், பொருனருப்-அரசனாக, தெரிந்த-தெரிந்துகொண்ட, குசை-குசைமுனி, சாற்றிய-சொன்ன, கோத்திரத்தின்-(தாவிதன்)கோத்திரத்தின், தலைமுறை-தலைமுறைகள், வழுவாதேனும்- சற்றும்வழுவாமற் (பிறந்தாலும்); மாற்றிய-

(அவன்)கொண்ட, திரு-செல்வத்தில், ஒன்றின்றி-ஒன்றில்லாமல், வறுமையான்-தரித்திரனாய், பிறக்க-சன்மிக்க, செய்தான்-செய்தான். எ-று.

உரை.—உயர்ந்தமுறையோ டாண்டவன் றனக்குள்ளவல் லமைகாட்ட மிகுந்தவரங்களைக்கொண் டெங்குமாண் டரசனாகத்தெரிந்தருளைச் சொன்னதாவிதன் கோத்திரத்தின் நிலைமுறைகள் சற்றும்வழுவாமற்பிறந்தானுந் தாவிதன்கொண்டசெல்வத்தினொன் றின்றித்தரித்திரனாய்ப்பிறக்கச்செய்தான். (௪௨)

பொய்ப்படுமுலகவாழ்வின் பொருட்டிலாமிடிமை
யோடு
கைப்படுமுழைப்பி னுண்டி காணவந்துதித்தவில்லான்
மெய்ப்படுமறத்தினாண்மை விளங்கியமுறையிற்பின்ன
ரைப்படும்விசும்பொ டெங்கு மரசனாய்வணங்கச்செய்தான்.

இ-ள். பொய்ப்படும்-பொய்யான, உலக-உலகத்து, வாழ்வின்-வாழ்வினது, பொருட்டு-பொருள், இலா-இல்லாமல், மிடிமையோடு-தாரித்திரத்தினால், கைப்படும்-கையாற்செய்யும், உழைப்பில்-தொழிலால், உண்டி-உணவை, காண-தேட, வந்துதித்த-வந்துபிறந்த, இல்லான்-வறுமையோன்(றனை), மெய்ப்படும்-மெய்யான, அறத்தின்-புண்ணியத்தின், ஆண்மை-வலிமை, விளங்கிய-தெளிந்த, முறையில்-முறைமையால், பின்னர்-பின்பு, ஐப்படும்-அழகிய, விசும்பொடு-வானுலகமுதற்கொண்டு, எங்கும்-எவ்விடத்தும், அரசனாய்-அரசனாக, வணங்கச்செய்தான்-(அவனை)வணங்கச்செய்தான். எ-று.

உரை.—பொய்யானவுலகவாழ்வில்லாமற் றரித்திரத்தினாற் கைத்தொழில்கொண் டுணவுதேடப் பிறந்த வறுமையோன்றனை மெய்யானபுண்ணியத்தின்முறையா லழகியவானுலகுமுதற்கொண் டெங்கு மரசனா யவனைவணங்கச்செய்தானென்க. (௪௩)

## வேறு.

நானிலங்காட்சியா னுணித்தகாலுணர்
மீனிலங்கடந்தெலா மாளும்வேந்துதான்
றேனிலங்கருணையாற் றெளிந்தவெல்லையிற்
கானிலந்தவத்தினாற் கருப்பமாயதே.

இ-ள். நால்-(எல்லா)நாலிற்கும், நிலம்-நிலமாகிய, காட்சியால்-(அநந்த ஞானக்)காட்சியால், நுணித்த-ஆராய்ந்த, கால்-(தக்க)காலத்தை, உணர்-அறிந்து, மீநிலம்-பரமண்டலத்தை, கடந்து-கடந்து, எலாம்-சர்வத்தையும், ஆளும்-ஆளுகின்ற, வேந்து-(பரம)விராசா, தான்-தான், தேனில்-தேனிலும், அம்-இனிய, கருணையால்-அருளினால், தெளிந்த-தெளிந்து (குறித்த), எல்லை

யில்-நாளில், ஏர்ன்-(சபிர்த)வரசனுக்கு, நிலம்-நிலமாகிய, தவத்தினுல்-தவத்தா ல், கருப்பமரயது-கருப்பமரயினது. எ-று.

உரை.—எல்லா நூலிற்கு நிலமாகிய வநந்தஞானக்காட்சி யினு லொவ்வொருவினையை முடிதற்குரியகாலமறிந்து வான் மேனின்றெவ்வுலகத்தையு மாளாநின்றகடவுள் ளுசையிடத்து ச்சொன்னபடி நிறைவேற்றநினைத்த கருமமாதற்குரிய வேளை யாகத் தானினியவருளினாற்றெளிந்து குறித்தநாள்வந்து மிக் கதவத்தினாற் கருப்பந்தரித்ததென்க. (௪௪)

கொலைமுகந்தழன்றவேற் கொற்றத்தாவிதன்
றலைமுகந்தொழுகிய குலஞ்சகோபவன்
சிலைமுகந்தவிர்நுதற் றேவிநீப்பியின்
பலைமுகந்துவந்துசூ லணிந்துளோங்கினள்.

இ-ள். கொலை-சங்காரம், முகந்து-கொண்டு, அழன்ற-உக்கிரமுடைத்தா ன, வேல்-வேலையேந்திய, கொற்ற-வெற்றி (யரசனாகிய), தாவிதன்-தாவிதன், தலை-முதல், முகந்து-தொட்டு, ஒழுகிய-நடந்துவந்த, குலம்-குலத் (தலைமு றைதப்பாத), சகோபவன்-சகோபென்பவனுடைய, சிலை-வில்லை, முகந்து-ஒ த்து, அவிர்-விளங்காநின்ற, நுதல்-நெற்றியையுடைய, தேவி-மனைவியாகிய, நீப்பி-நீப்பியென்பவள், இன்பு-இன்பமாகிய, அலை-கடலில், முகந்து-மூழ்கி, உவந்து-மகிழ்ந்து, சூல்-கருப்பத்தை, அணிந்து-தரித்து, உள்-உள்ளத்தில், ஓங்கினள்-உயர்ந்தாள். எ-று.

உரை.—அங்ஙன முற்சொன்ன வீரவெற்றியரசனாகி யதாவிதன்முதற்கொண்டு தவிராதுவந்த குலத்தலைமுறைதப் பாத சகோபென்பவன்றேவியாகிய நீப்பியென்பவ ளின்பக் கடல்முழுகிக் கொண்டவக்கருப்பத்தினு லுள்ளத்தோங்கினு ளென்க. (௪௫)

மணிபழித்தருங்கவின் மங்கையுள்ளுவந்
தணிபழித்தணிந்தநற் கருப்பமாயகால்
பிணிபழித்துறுநயம் பெருகிமேலெழீப்
பணிபழித்தொளிமுகம் பொறித்தபான்மையே.

இ-ள். மணி-இரத்தினங்களை, பழித்து-பழித்த, அரும்-அரிய, கவின்-அ ழகுள்ள, மங்கை-மாது, உள்-மனதில், உவந்து-களித்து, அணி-ஆபரணங்க ளை, பழித்து-இகழ்ந்து, அணிந்த-தரித்த, நல்-நல்ல, கருப்பம்-சூல், ஆயகா ல்-ஆனபின்பு, பிணி-(சூலால்வரும்)பிணிநோயை, பழித்து-பழித்து, உறும்-வ ரும், நயம்-இன்பம், பெருகி-மிகுந்து, மேல்-மேலே, எழீ-எழும்பி, பணி-ஆப ரணங்களை, பழித்து-நிந்தித்து, ஒளி-விளக்கமுள்ள, முகம்-முகம், பொறித் த-எழுதப்பட்ட, பான்மையே-தன்மையே(தோன்றிற்று). எ-று.

உரை.— அங்ஙன மணியினு மழகிய மாதுவந்தணியாகவ ணிந்தகருப்பமாயினபின்பு சூலால்வரும்பிணிநோயின்றி நு கருமின்பமிகுதி யுள்ளடங்காமற்புறப்பட் டழகுபெற முக முமெழுதப்பட்டாற்போலத் தோன்றிற்றென்க. (௪௬)

தாரொடுசனித்ததேன் றன்மையோவளை
யேரொடுகொண்டமுத் திலங்குந்தன்மையோ
நீரொடுமைந்துதம் பகையைநீத்தொரு
சீரொடுவேற்றில சிறந்தசூலதே.

இ-ள். தாரொடு-மலரில், சனித்த-உண்டாகிய, தேன்-தேனினது, தன்மையோ-தன்மையெனவோ, வளை-சங்கு, ஏரொடு-அழகோடு, கொண்ட-(சூலாகக்) கொண்ட, முத்து-முத்துக்கள், இலங்கும்-விளங்கும், தன்மையோ-தன்மையெனவோ, நீரொடும்-நீர்முதல், ஐந்து-ஐம்பூதியங்களும், தம்-தம்முட் கொண்ட, பகையை-விரோதத்தை, நீத்து-விட்டு, ஒரு-ஒரே, சீரொடு-சீரோடு, வேற்று-வேற்றுமை, இல-இன்றி, சிறந்த-சிறப்பாகிய, சூலதே-கருப்பம். எ-று.

உரை.— அங்ஙனம் பூமலருட்சனித்ததேன்போலுஞ் சங் குஞ்சூலாகக்கொண்ட வழகியமுத்துப்போலு மக்கருப்பமு நீ ர்முதலைந்தாகிய அப்பு தேயு வாயு பிருதிவி யாகாய மெ ன்னு மைம்பூதியங்கள் தம்முட்கொண்டபகைவிட்டு மிகா மலுங் குறையாமலுமொருசீராய் வேற்றுமையின்றிக் கூடி ச்சனித்தவுடல் சிறந்ததென்க. (௪௭)

அறைவளர்மனையினு ளரசன்புக்கென
விறைவளரன்பினோ ருயிரியற்றிவெண்
பிறைவளர்நலமென வளர்ந்தபீளுள
சிறைவளருடலினுட் செலுத்தினனரோ.

இ-ள். அறைவளர்-பலவடிவறையுள்ள, மனையின்-அரண்மனையின், உள்-உள்ளே, அரசன்-இராசன், புக்கென-புகுந்தாற்போல, இறை-ஆண்டவன், வளர்-மிக்க, அன்பின்-தயையால், ஓர்-ஒரு, உயிர்-உயிரை, இயற்றி-உண்டாக்கி, வெண்-வெண்மையாகிய, பிறை-பிறை, வளர்-வளருகிற, நலமென-உத்தமதன்மையாக, வளர்ந்த-வளர்ந்த, பீள்-கருப்பத்தில், உள-உள்ள, சிறை-காவல், வளர்-மிகுந்த, உடலினுள்-அவ்வுடலினுள், செலுத்தினன்-போகவிட்டுச் சேர்த்தினன். எ-று. அரோ-அசை.

உரை.—அங்ஙனஞ் சனித்தவுடல் பிறைபோல வளர்ந்தபி
ன்னர் பலவடிவறையுள்ளவரண்மனையிலே யரசன்புகுந்தா
ற்போல வாண்டவன்மிக்கதயையா லோருயிரையுண்டாக்கி
யவ்வுடலினுட் போகவிட்டுச்சேர்த்தினனென்க. (சஅ)

வாய்வழிபரவிய நஞ்சின்வண்ணமே
காய்வழியாதன்முன் கனிந்தருந்திய
தீய்வழிகருவழி சேருந்தொற்செயி
ரோய்வழிபொறுதிறை யொழியமுன்னினன்.

இ-ள். வாய்வழி-வாய்வழியாக, பரவிய-(பலவுறுப்புகளிடத்துப்) பரவின, நஞ்சின்-விஷத்தின், வண்ணமே-விதமே, முன்-(பூவுலக)முதலில், ஆதன்-ஆதனென்பவன், காய்வழி-ஒருகனியின்வழியாக, கனிந்து - இனிதாய், அருந்திய-உண்ட, தீய்வழி-தீதின்காரணத்தால், கருவழி-கருப்பவழியாக, சேரும்-வரும், தொல்-பழைய, செயிர்-பாவம், ஓய் - ஓய்ந்துதீரும், வழி-முறை, பொறுது-பொறுக்கமாட்டாமல், இறை-ஆண்டவன், ஒழிய-(அப்பாவம்)ஒழியும்படி, முன்னினன்-நினைத்தான். எ-று.

உரை.—ஒருவனுண்டநஞ்சு வாய்வழியாகப் பலவுறுப்பு
களிடத்துப் பரவினாற்போலப் பூவுலகமுண்டாக்கியநாளிலே
யாதிமனிதனாகிய வாதனென்பவ னினிதாயொருகனியைத்தி
ன்று கொண்டதீது கருப்பவழியாகப் பூலவுறுப்பாகிய வெ
ல்லாமனிதருயிரிடத்துப்பரவி யாயசன்மப்பாவமுமற்றவுயிர்
க்கோய்ந்துதீரும்படி யுள்ளமுறைபொறுக்கமாட்டாம லா
ண்டவ னப்பாவமொழியும்படிமுன்னினனென்க. ஆதன்கனி
யைத்தின்று வினைவிளைந்தகாதையின்விரிவை ஞாபகப்படலத்
தில்-௱எம். பாட்டுமுதற்காண்க. (சக)

புரப்பவோர்பொதுமுறை பொறுததன்மையாற்
கருப்பமோரெழுமதி கடக்குமுன்வினை
பரிப்பவோர்சிறப்பருட் பயத்திற்சூற்செயிர்
விருப்பமோடிறையவன் விலக்கினனரோ.

இ-ள். புரப்ப-(சன்மப்பாவந்தீர்த்து) காக்க, ஓர்-ஒரு, பொது-பொதுவாகிய, முறை-முறையை, பொறுததன்மையால்-பொறுத்தினால், கருப்பம்-கருப்பம், ஓரெழுமதி-ஏழுமாதம், கடக்கும்-கடக்கும், முன்-முன்னே, வினை-வினையெல்லாம், பரிப்ப-அறத்தொழிதற்கு, ஓர்-ஒரு, சிறப்பு-விசேடமாகிய, அருள்-தயையின், பயத்தில்-பயனால், விருப்பமோடு-ஆசையோடு, சூல்-கருப்பத்தின்,

செயிர்-பாவத்தை, இறையவன்-ஆண்டவன், விலக்கினான் - விலக்கிநீக்கினான். எ-று. அரோ-அசை, பறிப்பவென்பதி னிரண்டாமெழுத்தாகியவல்லின-றகரம்-எதுகைநிமித்தம் பரிப்பவென-இடையினமாயிற்று.

உரை.—இங்கே சன்மப்பாவமொழிதற்காண்டவ னெங்ஙன முன்னினானென்னில், முற்றவர்பிறந்தபின்பு வேதத்தில்விதிக்கப்பட்டமுறையாற் சன்மப்பாவந்தீர்ப்பது பொதுமுறையாகையி லிம்முறைபொருமை லிக்கருப்பமாகியேழுமாத முடியுமுன்னே வினையெல்லாமறத்தொழிதற்குவிசேடதயையா லாசையோடு சன்மப்பாவத்தை யாண்டவன் விலக்கிநீக்கினானென்க. (௫௰)

தீயவைவிலக்கிய சிறப்பிற்றேவருட்
டூயவைபதிவரத் தொகையிற்சூலிடத்
தாயவையறிந்தில ளளவில்லுண்மகிழ்
தாயவள்வியப்புறித் தளர்வற்றோங்கினாள்.

இ-ள். தீயவை-(சன்மப்பாவத்)தின்மையை, விலக்கிய-விலக்கின, சிறப்பில்-சிறந்ததன்மைத்து, தேவருள்-தேவவருளினாலாய, தூயவை-பரிசுத்தத்தனத்தையும், பதி-கடவுள்(தந்த), வர-வரங்களின், தொகையில்-மிகுதியால், சூலிடத்து-சூலில்(நின்றபிள்ளையிடத்து), ஆயவை-ஆனவைகளையும், அறிந்திலள்-அறியாதவள்(ஆயினும்), அளவில்-அளவின்றி, உள்-உள்ளே, மகிழ்-களித்த, தாயவள்-தாயானவள், வியப்பு-அதிசயத்தை, உறி-அடைந்து, தளர்வற்று-சோர்வின்றி, ஓங்கினாள்-உயர்ந்தாள். எ-று.

உரை.— இங்ஙனஞ் சன்மப்பாவம்விலக்கின சிறந்த தன்மைத்துத்தேவவருளினன்மைகளோடு பலவரங்களை யாண்டவன்றந்து சூலினின்றபிள்ளையிடத் திவையெல்லாமானசெய்தியையறியாதாயினு மளவின்றி யுட்களிகூர்ந்த தாயதிசயப்பட்டுத் தளராமலோங்காநின்றாளென்க. (௫௧)

தேன்முகம்புதைத்தசூல் செறித்தசீர்கொடு
கான்முகம்புதைத்தவிழ் கமலப்பூவெனச்
சூன்முகம்புதைத்தசீர்த் தொகைபுறப்படத்
தான்முகம்புதைத்தொளி தயங்குந்தாயரோ.

இ-ள். முகம்-தன்னிடத்து, புதைத்த-மறைத்த, தேன்-தேனை, சூல்-[illegible]க, செறித்த-கொண்ட, சீர்கொடு-தன்மையால், கான்-வாசனையை, முகம்-(தன்) இடத்து, புதைத்து-அடக்கி, அவிழ்-மலரும், கமல-தாமரையினது, பூவென-

பூவைப்போல, தாய்-தாயானவள், சூல்-(தன்)கருப்பத்தின், முகம்-இடத்தில், புதைத்த-அடைந்த, சீர்-நன்மையின், தொகை-திரள், புறப்பட-புறப்படவே, தான்-தான், முகம்-(தன்)முகத்தில், ஒளி-ஒளியை, புதைத்து-பதித்து, தயக்கும்-விளக்குவாள். எ-று. அரோ-அசை.

உரை.— சூலாகத்தேனைக்கொண்டதன்மையால் வாசனைவீசுந்தாமரைபோலத் தாய்தன்வயிற்றிலுள்ள பிள்ளையடைந்த நன்மைபுறப்பட்டாற்போல முகத்திலொளியைவீசாநின்றாளென்க. (௫௨)

## வேறு.

சொல்லார்நிகர்கெடவோர் வனப்பிற்பைம்பொற்சூன்
யல்லாரிருள்கெடமீ முளைத்ததிங்களணிமணிபோ [முற்றி
லெல்லார்முகத்திலங்கிப் பிறந்ததோன்றலெழிற்கண்டு
பல்லாருடைமம்மர் கெடத்தாயின்பப்பயன்கொண்டாள்.

இ-ள். சொல்-வார்த்தையால், ஆர்-இசையும், நிகர்கெட-ஒப்பற, ஓர்-சிறந்ததோர், வனப்பில்-அழகோடு, பைம்பொன்-பசும்பொன்(போன்ற), சூல்-கருப்பம், முற்றி-முதிர்ந்துபோய், அல்-இரவு, ஆர்-பொருந்திய, இருள்-அந்தகாரம், கெட-கெடும்படி, மீ-வானத்தில், முளைத்த-தோன்றிய, திங்கள்-சந்திரன், அணி-அணிந்த, மணிபோல்-அழகைப்போல, எல்-ஒளி, ஆர்-பொருந்திய, முகத்து-முகத்தோடு, இலங்கி-விளங்கி, பிறந்த-சன்மித்த, தோன்றல்-மகனுடைய, எழில்-அழகினை, தாய்-தாயானவள், கண்டு-நோக்கி, பல்லாருடை-பலர்படும், மம்மர்-துன்பம், கெட-நீங்க, இன்ப-மகிழ்ச்சியின், பயன்-பலனை, கொண்டாள்-பெற்றாள். எ-று.

உரை.— அங்ஙனஞ் சொல்லாலொவ்வாதவனப்போடழகியகருப்பமுற்றிப்போயிராவிருள்கெடும்படிவானத்தின்முளைத்ததிங்களழகுபோல வில்வீசியமுகத்தோடு பிறந்தபிள்ளையழகினைத்தாய்கண்டு மற்றவரடையுந் துன்பமின்றி மகிழ்ந்தாளென்க. (௫௩)

கண்டாரெவருமுளத் துவப்பமேலோர்கனியின்பங்
கொண்டாரருள்பொதித்த முகத்தின்மாமைகொழித்தகதி
ருண்டார்தெளிவுண்டார் கடவுடன்றாட்குவகைசெயுத்
தண்டாரிவனுவா னென்னவாழ்த்திச்சயஞ்சொன்னார்.

இ-ள். கண்டார்-கண்டவர், எவரும்-யாவரும், உளத்து-மனதில், உவப்ப-மகிழ, மேல்-மேலான, ஓர்-ஒரு, கனி-முதிர்ந்த, இன்பம்-இன்பத்தை, கொண்டார்-கொண்டவர்களாய், அருள்-(பிள்ளையுள்ளடைந்த)கிருபை, பொதித்

—எழுதப்பட்ட, முகத்தின்-வதனத்தின், மாமை-அழகு, சொரிந்த-வீசிய, கதிர்-கிரணத்தை, உண்டார்-(தங்கண்கள்வாயால்)உண்டு, தெளிவு-தெளிவை, உண்டார்-அடைந்து, இவன்-இப்பிள்ளை, கடவுடன்-கடவுளின், தாட்கு-பாதத்துக்கு, உவகை-களிப்பை, செயும்-செய்யும், தண்-குளிர்ந்த, தார்-மாலை, ஆவானென்ன-ஆவானென்று, வாழ்த்தி-துதித்து, சயம்-சயமங்கலங்களை, சொன்னார்-சொன்னார்கள். எ-று.

உரை.—அங்ஙன மகிழ்ந்ததாயோடு பிறந்தபிள்ளையைக்கண்டயாவரு மகிழும்படி மேலானவோரரிய வின்பத்தைக் கொண்டார் தேவதயையாலப்பிள்ளையுள்ளடைந்தவருள் மேற்கிளம்பியெழுதப்பட்டமுகத்தி னழகுவீசிய கதிரை யவர்தங்கண்கள்வாயா லுண்டுதெளிந்து இப்பிள்ளையினிக்கடவுளின்பாதத்துகந்தமாலையாக நிற்பானென்று வாழ்த்திச்சயமங்கலங்களைச்சொன்னாரென்க. (௫௪)

மாசைமிக்கநிற மணியின்சாயல்மகனோக்கி
யாசைமிக்ககனி யீன்றாள்கற்றோருந்தொடைப்பா
வோசைமிக்கவறத் தொகையின்பீடத்துயர்வளர்க
ஞசையென்றவனை யேந்தியெந்தைதொழுகின்றாள்.

இ-ள். மாசை-(இழைத்த)தங்கத்தால், மிக்க-மிகுந்த, நிற-ஒளியுள்ள, மணியின்-மணியினது, சாயல்-சாயலான, மகன்-(தன்)மகனை, நோக்கி-பார்த்து, ஆசை-விருப்பத்தோடு, மிக்க-வளர்ந்த, கனி-இன்பமுள்ள, ஈன்றாள்-தாய்(சொல்வாள்), கற்றோர்-கற்றோர் (சொல்லும்), அரும்-அரிய, தொடை-தொடுத்த, பா-பாவால் (உண்டாகும்), ஓசை-கீர்த்தியினும், மிக்க-மிகுந்த, அறத்தொகையின்-அறங்களின், பீடத்து-பீடத்தில், உயர்-உயர்ந்து, வளர்க-வளர்வாயாக, ஞசையென்று-ஞசையேயென்று, அவனை-அக்குழந்தையை, ஏந்தி-கையிலேந்தி, எந்தை-ஆண்டவனை, தொழுகின்றாள்-வணங்குகின்றாள். எ-று.

உரை.— அப்பொழு திழைத்ததங்கத்தா லழகுபெற்றமணியின்சாயலாகநின்ற தன்மகனைநோக்கி யாசையோடுவளர்த்தவின்பத்தையுள்ளதாய்சொல்லும்: மகனே கற்றோர்சொல்லும்பாட்புகழினுமுயர்ந்தநல்லறங்களைப்பீடமாகக்கொண்டு வளர்வாயாகவளனென்னுஞ்ஞசையேயென்றவனைக்கையிலேந்தியாண்டவன்பாதத்தில்வைத்துவணங்கினாளென்க. (௫௫)

எல்லின்கதிர்திரட்டித் திலகந்திங்கட்கிட்டதுபோல்
வில்லின்முகத்தின் றாய் மகனையேந்திவிழைவுற்ற
சொல்லின்முகத்திறையோன் றாளைத்தாழ்ந்தித்தோன்றலறத்
தல்லின்வேந்தனென வளர்தற்காசியருள்கென்றாள்.

இ-ள். எல்லின்-சூரியனின், கதிர்-கிரணத்தை, திரட்டி-கூட்டி, திங்கட்கு-சந்திரனுக்கு, திலகம்-ஒருபொட்டு, இட்டதுபோல்-இட்டாற்போல, இன்-இனிய, முகத்தின்-முகத்தில், வில்-விளங்கிய, தாய்-தாயானவள், மகனை-பாலனை, ஏந்தி-(கரத்தில்)ஏந்தி, விழைவு-ஆசைப்பெருக்கம், உற்ற-பொருந்திய, சொல்லின்முகத்து-சொல்லைக்கொண்டு, இறையோன்-ஆண்டவனுடைய, தாளை-பாதத்தை, தாழ்ந்து-வணங்கி, இத்தோன்றல்-இப்பிள்ளை, அறத்து-அறத்தோடு, அல்லின்-இராவின், வேந்தனென-வேந்தன்(ஆகியசந்திரனைப்)போலே, வளர்தற்கு-வளரும்படிக்கு, ஆசி-ஆசீர்வாதத்தை, அருள்கு-தந்தருள்வராக, என்றாள்-என்று(வேண்டிக்கொண்டாள்). எ-று.

உரை.— சூரியன்கதிரைத்திரட்டிச்சந்திரனுக்கொருபொட்டிட்டாற்போலமுகத்தில்விளங்கியதாய்கரத்திலேந்தியபிள்ளைதேர்ன்றித் தாயானவளாசையோடுரைகொண் டாண்டவனைவணங்கிப்பிள்ளையிளம்பிறைவளருமாப்போலே யறங்களோடுவளரும்படி யிவற்காசீர்வாதந்தந்தருள்வராகவென்றுவேண்டினளென்க. (௫௯)

வீடாவானலஞ்செய் நோக்குநோக்கிவிண்ணிறையோ
கோடாவரத்தாசி செய்வான்மேலோர்குரல்தோன்றி [ன்
யாடாநிலையறத்தென் மார்பிற்றேம்பாவணியாவான்
வாடாவருண்மகனென் றம்பூமாரிவழங்கிற்றே.

இ-ள். விண்-வானத்துக்கு, இறையோன்-கடவுளானவர், வான்-வானத்தின், வீடா-முடியாத, நலம்-நன்மையை, செய்-விளைவிக்கும், நோக்கு-பார்வையால், நோக்கி-(அப்பிள்ளையைப்)பார்த்து, கோடா-குறையாத, வரத்து-வரங்களைத்தரும், ஆசி-ஆசீர்வாதம், செய்-(அவற்கு)இடும், ஓர்-ஒரு, குரல்-சத்தம், வான்மேல்-ஆகாயத்திலே, தோன்றி-தோன்றி, வாடா-வாடாத, அருள்-அருளையடைந்த, மகன்-(இம்)மகனே, ஆடா-அசையாத, நிலை-நிலையுள்ள, அறத்து-அறநெறியில், என்-எனது, மார்பில்-மார்பிலே, தேம்பாவணி-வாடாதமாலை, ஆவான்-ஆவான், என்று-என்றுசொன்னவளவிலே, அம்-அழகிய, பூ-மலர்களால், மாரி-மழை, வழங்கிற்று-பெய்தது. எ-று.

உரை.—தாயங்ஙனம் வேண்டினவளவிலே யாண்டவன் வானத்தின்முடியாதபேரின்பத்தைவிளைவிக்கும்பார்வையால் ப்பிள்ளையைப்பார்த்துக்குறையின்றிவரங்களைத்தரு மாசீர்வாத மவற்கிட்டவளவிலேயாகாயத்திலொருசத்தந்தோன்றி வாடாதவருளையடைந்தவிம்மகனே யசையாதறநெறியினிலை கொண்டென்மார்பிலணிதற்குரிய தேம்பாவணியாவானென் றுரைத்தனென்றவளவிலே பூமாரிபெய்ததென்க. (௫௭)

மைந்நூற்றெனக்கரும்பூங் குழலாள்வாய்ந்தமகனலங்
கேட்டெந்நூற்றிறத்தினுமே லடியின்வீழ்ச்சியினிதியற்றி
மெய்ந்நூற்றிறத்தமறை முறையின்விள்ளாவினையெல்லாங்
கைந்நூற்றிறத்தறவோ ரியற்றியாசிகனிந்துரைத்தார்.

இ-ள். மை-மையை, நூற்றென-நூற்றிழைத்தாற்போல, கரும்-கரிய, பூம்-அழகிய, குழலாள்-அளகத்தையுடையதாய், வாய்ந்த-பிறந்த, மகன்-(தன்)மகனது, நலம்-நன்மையை, கேட்டு-கேட்டு, எந்நூல்-எந்தநூல்களுடைய, திறத்தினும்-திறமையினும், மேல்-மேற்பட்ட, அடியின்-(ஆண்டவனுடைய) பாதத்தில், வீழ்ச்சி-பணிவை, இனிது-இன்பமாக, இயற்றி-செய்து, மெய்-மெய்யான, நால்-நாலாகிய, திறத்த-மேன்மையுள்ள, மறை-வேத, முறையின்-முறைமையின், விள்ளா-தப்பாத, வினை-கருமம், எல்லாம்-எல்லாவற்றையும், கைந்நூல்-ஒழுக்கநூலின், திறத்து-வல்லமையையுடைய, அறவோர்-முனிவர் (ஆகியகுருக்கள்), இயற்றி-செய்து, கனிந்து-இனிதாக, ஆசி-வாழ்த்துகளை, உரைத்தார்-சொன்னார்கள். எ-று.

உரை.—இருளை நூற்றிழைத்தாற்போலக் கருங்குழலினையுடையதாயங்ஙனந் தன்மகன்மாட்சிமையைக்கேட் டெத்தாலு நிகராதமுறையோடாண்டவன்பாதத்தைவணங்கி மெய்யானவேதத்தின் முறைதப்பாமற்செய்யவேண்டிய தெல்லாவற்றையுங்குருக்கள்வந்து நிறைவேற்றி மிக்க துதிகளைச்சொல்லி வாழ்த்தினாரென்க. (௫௮)

கூம்பாவணிமகற்குக் கணிதமிக்கோர்கூறுபுக
ழோம்பாவணியாக வனைத்துநீக்கியொருங்குடனோர்
சாம்பாவணியாக விரங்கியெந்தைதான்புகழ்ந்த
தேம்பாவணியேயென் றணிமிக்கம்பூண்சேர்த்தினரே.

இ-ள். கூம்பா-மங்காத, அணி-அழகுள்ள, மகற்கு-(இம்)மகனுக்கு, கணித-(சாதகக்)கணிதநூலில், மிக்கோர்-கற்றோர், கூறு-சொல்லும், புகழ்-

ஆதி, அனைத்தும்-யாவும், ஒம்பா-உண்டாகாத, அணியாக-அணியென்று, நீக்கி-மறுத்து, ஒருங்குடன்-ஒருசொல்லால், ஒர்-ஒரு, சாம்பா-மாறாத, அணியாக-பெருமையாக, எந்தைதான்-ஆண்டவன்றான், இரங்கி-இரங்கி, புகழ்ந்த-துதித்த, தேம்பாவணியே-தேம்பாவணியே, என்று-என்று(வாழ்த்தி), அணி-(உள்ள) அழகு, மிக்கு-மிகும்படி, அம்-அழகிய, பூண்-பலபூண்களை, சேர்த்தினர்-சேர்த்தியணிந்தார். எ-று.

உரை.— சூழநின்றவரோவென்னில் மங்காதவழகுள்ளவிம்மகற்குச் சாதகக்கணித நூற்கற்றோர் வாய்ப்புகழுரியவணியல்லவென்று நீக்கி யொருசொல்லான்மாறாதபெருமையாகவாண்டவன்றா னிரங்கிப்புகழ்ந்ததேம்பாவணியே யென்றுவாழ்த்தியுள்ளவழகுமிகும்படிபல்பூண்களைச் சேர்த்தியணிந்தாரென்க. (௬௧)

செய்வாய்வானுடுசூழ் குழவித்திங்கட்சீர்பொருவப்
பெய்வாய்க்கிண்கிணியுஞ் சிலம்புமார்ப்பப்பெய்துசுடர்
வைவாய்மணியாழி யிட்டுப்பைம்பூமலர்கிடத்தி
மொய்வாய்க்கடலுலகிற் றிலதமென்பார்முகங்கண்டார்.

இ-ள். செய்-சிவப்பு, வாய்-பொருந்திய, வான்-வானத்தின், உடு-மீன்கள், சூழ்-சூழும், குழவித்திங்கள்-இளம்பிறையின், சீர்-சிறப்பை, பொருவ-போல, பெய்-சேர்ந்து, வாய்-இருக்கும், கிண்கிணியும்-சதங்கையும், சிலம்பும்-காற்சிலம்பும், ஆர்ப்ப-ஒலிக்க, பெய்து-இட்டு, சுடர்-விளங்கும், மணி-மணிகள், வைவாய்-பதித்திருக்கும், ஆழி-மோதிரத்தை, இட்டு-விரலிலிட்டு, பைம்-பசிய, பூம்-அழகிய, மலர்-பூ(மெத்தை) மேல், கிடத்தி-கிடத்திய (குழந்தையின்), முகம்-(அழகிய)முகத்தை, கண்டார்-கண்டவர்கள், கடல்-சமுத்திரம், மொய்-மொய்த்து, வாய்-இருக்கும், உலகில்-உலகத்திற்கு, திலதமென்பார்-திலதமிதுவேயென்பார். எ-று.

உரை.— அங்ஙனம் வானத்தின் மீன்களாற் சூழப்பட்டவிளந்திங்களைப்போலவக்குழந்தைதோன்றும்படியொலிக்குங் கிண்கிணியுஞ்சிலம்புஞ்சேர்த்தி விளங்குமணிமோதிரத்தைவிரலிவிட்டுப் பைம்பூமெத்தைமேற்கிடத்தியகுழந்தையினழகியமுகத்தைக்கண்டவரெல்லாருங் கடல்சூழ்ந்தபூவுலகமுகத்திற்குரியதிலதமிதுவேயென்பாரென்க. (௬௨)

வான்மேல்வைத்தசுடர் கிடக்கும்வண்ணவடிவென்
கான்மேல்வைத்ததவ மினிநன் றிங்கட்காட்டுமென்பார் [பார்
நூன்மேல்வைத்தமறை விளக்குநுண்மாண்சுடரென்பார்
நான்மேல்வைத்தபுகழ் விள்ளார்கொண்டநயம்விள்ளார்

இ-ள். வான்மேல் - வானத்தில், வைத்த-(விளங்க)வைத்த, சுடர்-சூரியன், கிடக்கும்-கிடக்கும், வண்ண-தன்மையாகிய, வடிவு-வடிவே (இப்பிள்ளை), என்பார்-என்பார்கள், கான்மேல்வைத்த-கானகத்திலுள்ள, தவம்-தவத்தை, இனி-இனிமேல், இங்கண்-இங்கே, காட்டும்-காண்பிக்கும், நன்று - பெருமை(உடையனுவான்), என்பார்-என்பார்கள், நூன்மேல்வைத்த-எல்லா நூலினுமுயர்ந்த, மறை-வேதம், விளக்கும்-விளங்கச்செய்யும், நண்-நட்பமாகிய, மாண்-மாட்சிமையுள்ள, சுடரென்பார்-சுடராவானென்பார்கள், நான்மேலவைத்த-நான்கின்மேற்பட்ட(பல),புகழ்-புகழ்ச்சிகளை, விள்ளார்-(உரைத்துரைத்து)விடாதவர்கள்,கொண்ட-உட்கொண்ட, நயம்-இன்பம், விள்ளார்-விடாதிருந்தார்கள். எ-று.

உரை.—வானத்திலுள்ள சூரியன் குழந்தையாயுதித்திங்கே கிடந்ததன்மையிதுவென்பார், கானத்திலுள்ளதவத்தை நாமினியிங்கேகாணும்படிகாட்டத்தகுமாட்சிமையுடையனுவானிவனென்பார், எல்லா நூலினுமுயர்ந்தவேதம்விளங்கும்படி சுடராவானிவனென்பார், அங்ஙனம் பலபுகழ்ச்சிகளையுரைத்துரைத்துவிடாதா ருட்கொண்டமகிழ்ச்சியும்விடாமலிருந்தாரென்க. (௬௧)

வளன் சனித்தபடலமுற்றும்.

ஆகப் படலம்-௰-இ-விருத்தம்-

௨௱௨௰௭.



## நான்காவது.

# பாலமாட்சிப்படலம்.

### வேறு.

வானடுத்தர சடைந்துவாழவக்
கோனடுத்தநற் குணத்தசீரெலா
மீனடுத்தவீ டுடையவிண்ணவர்
தேனடுத்தலர் சிறுவற்கூட்டினார்.

இ-ள். வான்-வானத்தை, அடுத்து-சேர்ந்து, அரசு-அரசை, அடைந்து-பெற்று, வாழ-வாழும்படி(குசைதெரியப்பட்டமையால்), அக்கோன்-அத்தன்மையரசனுக்கு, அடுத்த-உரிய, நல்-நல்ல. குணத்த-சிறந்த, சீர்-செல்வங்களை, எலாம்-எல்லாம், மீன்-நட்சத்திரங்கள், அடுத்த-சேர்ந்த, வீடுடைய-வானுடைய, விண்ணவர்-மோட்சவாசிகள், தேன்-தேனை, அடுத்து-பொருந்தி, அலர்-மலர்ந்த(மலர்போன்ற), சிறுவற்கு-குழந்தைக்கு, ஊட்டினார்-ஊட்டினார். எ-று.

உரை.—வானடுத்தவரசனைக் குசைதெரியப்பட்டமையா லத்தன்மை யரசனுக்குரிய சீருஞ்செல்வங்களும் வானுடையோர்தேன்பொழிந்தலர்ந்தமலர்போலுங் குழந்தைக்கூட்டினார். (க)

ஊட்டினாருள் முடியினெப்பெனச்
சூட்டினாரறஞ் சுடரும்பூணெனப்
பூட்டினார்தவம் பொற்செங்கோலெனக்
காட்டினாரறி வமைந்தகாட்சியே.

இ-ள். அருள்-கிருபையை, ஊட்டினார்-ஊட்டினார், முடியினெப்பென-முடியாக, அறம்-அறத்தை, சூட்டினார்-சூட்டினார், சுடரும்-ஒளிரும், பூணென-ஆபரணமாக, தவம்-தவத்தை, பூட்டினார்-பூட்டினார், பொன்-பொன்னாலாய, செங்கோலென-செங்கோலாக, அறிவு-தெளிவு, அமைந்த-நிறைந்த, காட்சி-காட்சியை, காட்டினார்-காண்பித்தார். எ-று.

உரை.— அருளையூட்டினார் முடியாகவறத்தைச்சூட்டினா ரொளிராபரணமாகத் தவத்தைப்பூட்டினார் செங்கோலாக வரியகாட்சியைத்தந்தார். (உ)

இளையவான்பிறை யெனவளர்ந்துளம்
வளையமாசுறா வயதுமூன் றுளா
னுளைய நூல்வ ருற்றகாட்சியிற்
றிளையவானறி வெய்திச்சீர்த்தனன்.

இ-ள். வான்-வானத்திற்றோன்றும், இளைய-இளமையாகிய, பிறையென-பிறைபோல, வளர்ந்து-வளர்ந்து, உளம்-மனது, வளைய-வளையும்படி, மாசு-குற்றத்தை, உறா-அடையாமல், வயதுமூன்றுளான்-மூன்றுவயதுள்ளவனாகி, நூலவர்-கல்விநூலுடையோர், உளைய-வருந்தி, உற்ற-அடைந்த, காட்சியில்-உணர்ச்சியிலும், திளைய-நிறைந்த, வான்-மேலான, அறிவு - அறிவை, எய்தி-அடைந்து, சீர்த்தனன்-சிறந்தான். எ-று.

உரை.— இளம்பிறைபோலவ்வளர்ந்து மனத்தைவளைக்குங் குற்றமடையாமல் மூன்றுவயதாகிமற்றவர்வருந்தியடையுங் கல்வியினு நிறைந்தவறிவடைந்தானென்க. (௫)

அறிவுற்றாகையி னலர்ச்செங்கையெழீச்
செறிவுற்றாசையின் றெய்வமேற்றிவில்
நெறியுற்றார் நுதல் நிலத்திறாழ்ந்தனன்
வறிதுற்றாமுடற் குயர்ந்தமாட்சியோன்.

இ-ள். அறிவு - அறிவை, உற்றாகையின்-அடைந்தவுடனே, அலர்-தாமரைமலர்போன்ற, செம்-சிவந்த, கை-கை, எழீ-ஓங்கி, செறிவு-மிகுதியாக, உற்று-கொண்ட, ஆசையின்-ஆசையோடு, தெய்வம்-ஆண்டவனை, ஏற்றி-புகழ்ந்து, வில்-ஒளிர்ந்த, நெறி-கண்மண்டைக்குழி, உற்று-பொருந்தி, ஆர்-இருக்கின்ற, நுதல்-நெற்றி, நிலத்தில்-நிலத்திற்பட, தாழ்ந்தனன்-தாழ்ந்தான், வறிது-சிறுமை, உற்றாம்-உள்ளதாகிய, உடற்கு-உடலில், உயர்ந்த-உயர்ந்த, மாட்சியோன்-மாட்சிமையுடையகுசை. எ-று.

உரை.— அறிவடைந்தவுடனே மலர்ச்செங்கையோங்கி மிகுந்தவாசையோடாண்டவனைவணங்கியொளிர்ந்தநெற்றிநிலத்திற்படத்தாழ்ந்தான் சிறுவுடலிடத்திலுயர்ந்தமாட்சிமையுடையகுசை. (௬)

இரவிகாண்மரை யிகலவாய்மலர்ந்
தருவிமான் றுதி யறைந்துகும்பிட
மருவியோங்குசெங் கரங்கள்மாலையிற்
பருதிபோய்க்குவி பதுமமானுமே.

இ-ள். இரவி-சூரியனை, காண்-கண்ட, மரை-தாமரையை, இகல-போல, வாய்-வாய், மலர்ந்து-மலர்ந்து, அருவி-மலையினின்றோடுமாற்றை, மான்-போலும், துதி-துதிகளை, அறைந்து-சொல்லி, கும்பிட-வணங்க, மருவி-கூடி, ஓங்

கு-ஓங்கிய, செம்-சிவந்த, கரங்கள்-கரங்கள், மாலையில்-மாலைநேரத்தில், பருதிபோய்-சூரியன்போய், குவி-குவியும், பதுமம்-தாமரையை, மானும்-போலும். எ-று.

உரை.— சூரியனைக்கண்டதாமரைபோல வாய்மலர்ந்துமலையினின்றுமாறுபோல நிறைந்ததுதிகளைச்சொல்லிக்கும்பிடக்கூட்டியோங்கியசெங்கரங்களோவென்றால்மாலைநேரத்திற் சூரியன்போய்க்குவியுந்தாமரைபோலுமென்க. (௫)

தூநிலாவுசெஞ் சுடருமீன்களும்
வானுலாவுடு நடுவழங்கிய
பானிலாவையும் பார்த்துநாதனைத்
தேனுலாவுரை செப்பிவாழ்த்துவான்.

இ-ள். தூ-சுத்தமாக, நிலாவு-ஒளிசெயும், செஞ்சுடரும்-சூரியனையும், மீன்களும்-நட்சத்திரங்களையும், வான்-வானத்தில், உலாவு-உலாவுகின்ற, உடு-நட்சத்திரங்களுக்கு, நடு-நடுவில், வழங்கிய-செல்லுகின்ற, பால்-வெண்மையாகிய, நிலாவையும்-சந்திரனையும், பார்த்து-கண்டு, நாதனை-(இவையெல்லாமுண்டாக்கிய) கடவுளை, தேனுலாவு-இனிமையுள்ள, உரை-மொழிகளை, செப்பி-சொல்லி, வாழ்த்துவான்-வாழ்த்துவான்(குசை). எ-று.

உரை.— அடைந்தவழியினாற் கண்டதைக்கொண்டு தியானித்தகுசை சூரியனுமீன்களு மிவைநடுவிலுலாவுஞ்சந்திரனுங்கண் டிவையெல்லாமுளவாக்கியநாதனையினிதாய் வாழ்த்துவான். (௬)

முலைகளாமென மலைமுடிக்குமே
லலைகொள்பாலென வருவிவிஞ்சிவெண்
கலைகளாமெனக் கடலிற்சிந்திய
நிலைகொள்மாதென நிலங்கண்டோங்குவான்.

இ-ள். முலைகளாமென-முலைகளைப்போலும், மலை-மலையினது, முடிக்குமேல்-உச்சிக்குமேனின்று, அலைகொள்-அலைகொண்டு, பாலென-பால்போல(ஓடும்), அருவி-அருவியானது, விஞ்சி-மிஞ்சி, வெண்-வெண்மையாகிய, கலைகளாமென-சீலைகள்போலும், கடலில்-கடல்மேல், சிந்திய-சிந்த, நிலைகொள்-நிலைகொண்ட, மாதென-பெண்ணைப்போல, நிலங்கண்டு-பூமியினிலைமையைக்கண்டு, ஓங்குவான்-மனத்திலோங்குவான். எ-று.

உரை.— முலைபோலுமலையுச்சியினின் றலைகொண்டுபால்போலுமோடுமருவி மிஞ்சி யுடுத்தசீலைபோலுங்கடல்மேற் சிந்தப் பூமியினிலைமைகண்டுமனத்திலோங்குவான். (௭)

சோலைவா யிருள் துளித்ததேறலு
மாலைவாய்மலர் வழித்ததேறலு
மாலைவாய்கழை யளித்ததேறலு
நாலையாய்ந்தென நுதவிமூழ்குவான்.

இ-ள். சோலை-சோலையின், வாய்-இடத்தில், இருள்-இருட்டு, துளித்த-பெய்த, தேறலும்-தேனும், மாலை-மாலையின், வாய்-இடத்தில், மலர்-மலர்களினின்று, வழித்த-வடிந்த, தேறலும்-தேனும், ஆலைவாய்-ஆலையினிடத்தில், கழை-கரும்பு, அளித்த-தந்த, தேறலும்-தேனும்(இவையெல்லாம்), நாலை-கவிநாலை, ஆய்ந்தென-ஆராய்ந்தாற்போல, நுதவி-கருதி, மூழ்குவான் - (தானுந்தேன்கடலில்) மூழ்குவான். எ-று.

உரை.—சோலையிடத்திலிருட்டுத்தேனு மாலையிடத்தில் மலர்த்தேனு மாலையிடத்திற்கருப்பந்தேனு மிவையெல்லாமாராய்ந்து தானுந்தேன்கடலின் மூழ்குவானென்க. (அ)

நிழலின்மேதிகள் நீரிற்சங்குகள்
பொழிலிற்றோகைகள் பூவில்வண்டுகள்
கழனியோதிமந் துயிலக்கண்டுவாழ்
குழலிவாய்நலந் துயில்கொள்வாமரோ.

இ-ள். நிழலில்-நிழலிடத்தில், மேதிகள்-எருமைகளும், நீரில்-தண்ணீரிடத்தில், சங்குகள்-சங்குகளும், பொழிலில்-சோலைகளிடத்தில், தோகைகள்-மயில்களும், பூவில்-மலரிடத்தில், வண்டுகள்-வண்டுகளும், கழனி-வயலிடத்தில், ஓதிமம்-அன்னங்களும், துயில-தூங்க, கண்டு-பார்த்து, வாழ்-வாழ்ந்த, குழலி-பாலன், வாய்-இடத்தில், நலம்-நன்மை(யெல்லாம்), துயில்கொள்வாம்-தூங்குமாம். எ-று. அரோ-அசை.

உரை.— நிழலிடத்திலெருமைகளுந் தண்ணீரிடத்திற்சங்குகளுஞ் சோலைகளிடத்தில்மயில்களு மலரிடத்தில்வண்டுகளும் வயலிடத்திலன்னங்களு மினிதாய்த் தூங்குவதுகண்டு கடவுள் நடத்தினமுறைமை யாராய்ந்துகளிகூர்ந்த பாலனிடத்திலே நன்மையெல்லாந் தூங்குமென்க. (௯)

குயில்கட்பாடலுங் குழலொப்போதிமம்
வயல்கட்பாடலு மதுவுண்கிள்ளைகள்
பயில்கட்பாடலும் பாலன்கேட்டியைந்
தியல்கட்பாடலு மினிதியங்குமால்.

இ-ள். குயில்கள்-குயில்களின், பாடலும்-பாடலும், வயல்கண் - வயலிடத்தில், ஓதிமம்-அன்னங்கள், குழல்-வீணைக்கு, ஒப்பு-ஒப்பாக, பாடலும்-பாடியபாடலும், மது-மதுவை, உண்-உண்ட, கிள்ளைகள்-கிளிகள், பயில்கள்-பேசும்பேச்சுகள்போல, பாடலும்-பாடியபாடலும், கேட்டு-கேட்டு, பாலன்-சிறுவன், இயைந்து-பொருந்தி, இயல்கள்-தானுமிசைகளை, பாடலும்-பாடியபாடலும், இனிது-இன்பமாக, இயங்கும்-நடக்கும். எ-று. ஆல்-அசை.

உரை. — குயில்கள்பாடவும் வயலிடத்தில்வீணைபோல வன்னங்கள்பாடவு மதுவுண்டகிளிகள்பேசினாற்போலப் பாடவுங்கேட்டபாலனுகந்துதானுமிசைகள்பாடுவானென்க. (௰)

மலைமலைக்குரி வனப்பும்வாங்கரு
மலையலைக்குரி மணியுமார்ந்தசீர்
நிலைநிலைக்குரி மருதநீர்மையுங்
கலைகலைக்குரி கருத்துமெய்தினான்.

இ-ள். மலை-பருப்பதங்களும், மலைக்கு-பருப்பதத்துக்கு, உரி-உரிய, வனப்பும்-அழகும், வாங்கரும்-கடப்பதற்கரிய, அலை-கடலும், அலைக்கு-கடலுக்கு, உரி-உரிய, மணியும்-(இரத்தின)மணிகளும், ஆர்ந்த-நிறைந்த, சீர்-செல்வங்களைக்கொண்ட, நிலை-பூமியும், நிலைக்கு - பூமிக்கு, உரி-உரிய, மருத-மருதத்தின், நீர்மையும்-குணமுங் (கண்டாராய்ந்ததினால்), கலை-கல்விகளும், கலைக்கு-கல்விக்கு, உரி - உரிய, கருத்தும்-(நல்ல)உணர்வுகளும், எய்தினான்-அடைந்தான். எ-று.

உரை. — மலைகளு மலையிலுள்ளவழகுங் கடலுங் கடலிலுள்ளமணிகளு நிறைந்தசெல்வங்களைக்கொண்டபூமியும் பூமியிலுள்ளமருதமுங் கண்டாராய்ந்ததினா லரியகல்விகளுங்கல்வியடுத்த நல்லுணர்வுகளு மடைந்தானென்க. (௰௧)

மூக்கிற்றுக்கிய முயல்மெய்தாக்கிய
நாக்கிற்றுக்கிய செவிநள்தாக்கிய
நோக்கிற்றுக்கிய நுனையின்பின்னவாய்
தூக்கிற்றுக்கிய நயன்சொல்வாகுமோ.

இ-ள். மூக்கில்-மூக்கிலே, தாக்கிய-பாய்ந்ததும், மூயல்-முயர்ச்சிசெய்கின்ற, மெய்-சரீரத்தில், தாக்கிய-பாய்ந்ததும், நாக்கில்-நாவில், தாக்கிய-பாய்ந்ததும், செவி-காதுகளின், நள்-நடுவில், தாக்கிய-பாய்ந்ததும், நோக்கில்-கண்களில், தாக்கிய-பாய்ந்ததுமாகிய, நுனை-வினையின், இன்பு-இன்பங்களை, இன்னவாய், இத்தன்மையாய், தூக்கில்-ஆராய்ந்தால், தாக்கிய-தானடைந்த, நயன்-இன்பத்தை, சொல்வாருமோ - சொல்லத்தகுமோ. எ-று. ஈற்றேகாரமெதிர்மறையாயிற்று.

உரை. — மூக்குமெய்யும் நாக்குஞ்செவியுங் கண்ணு மடையு மின்பங்களையாராய்ந்துதூக்கித் தானடையுமின்பஞ் சொல்லத்தகாதென்க. (௰௨)

மீதுலாவிய மீன்கடீபமாய்ப்
போதுலாவிய புவியும்வீதியாய்க்
கோதுலாவிய குறைகொய்காட்சியான்
மூதுலாவிறை யடையமுன்னினான்.

இ-ள். மீது-வானில், உலாவிய-உலாத்திய, மீன்கள்-நட்சத்திரங்களே, தீபமாய்-தீபமாகவும், போது-மலர்கள், உலாவிய-நிறைந்த, புவியும்-பூமியே, வீதியாய்-வீதியாகவும், கோது-குற்றத்தில், உலாவிய-புகுந்த, குறை-குறையை, கொய்-அறுக்கும், காட்சியான்-காட்சியுடையான், மூது-பூர்வமுதல், உலாவு-சஞ்சரிக்கின்ற, இறை-ஆண்டவனை, அடைய-அடைதற்கு, முன்னினான்-(எவர்க்கும்)முந்திநடந்தான். எ-று.

உரை. — வானிலுலாவியசுடர்களேதீபமாகவு மலர்நிறைந்தபூமியேவீதியாகவுங் குறையில்லாதகாட்சியுடையானென்றுமுள்ளவாண்டவன்பாதத்தையடைய வெவர்க்கும் முன்னினனென்க. (௰௩)

ஆறுமாறுமொன் றோடலாய்த்தமுண்
மாறுமாறுகொண் டலைமயங்கெனச்
சாறுதாறுமொன் றின்றித்தான்வளத்
தேறுபேறுகொண் டிளவலோங்கினான்.

இ-ள். ஆறுமாறும்-பலவாறுகளும், ஒன்று-ஒன்றாய்ச்சேர்ந்து, ஓடலாய்-ஓடி, தமுள்-தம்முள், மாறும்-விகாரப்படும், ஆறுகொண்டு-விதமாக, அலை-திரை, மயங்கென-கலந்ததுபோல, சாறு-சொல்லும், தாறும்-அளவும், ஒன்றின்றி-ஒன்றில்லாமல், தான்-தான், வளத்து-மாட்சிமையில், ஏறு-உயரும், பேறு-வரம், கொண்டு-பெற்று, இளவல்-பாலன், ஓங்கினான்-ஓங்குவான். எ-று. சாற்று-என்பது-சாறு-என இடைக்குறையாயிற்று.

உரை.— வெள்ளமிகுதியாற் பலவாறுக ளொன்றாய்க்க தோடிப்பொங்கினதுபோல வளவுமட்டு மொன்றின்றி எ ந் தரியவுணர்வுகளைப்பெற்றபால னோங்குவானென்க. (௰௪)

மாக்கட்டாக்கிய மறங்கொள்கூளிகள்
நோக்கத்தாக்கிய நுண்சடத்திவ
னாக்கத்தாக்கிய வருளைத்தாக்குற
வூக்கத்தாக்கிய விகலுடைத்துளான்.

இ-ள். மாக்கள்-மனிதரோடு, தாக்கிய-போர்பொருதிய, மறம்-பாவம், கொள்-கொண்டுவிடும், கூளிகள் - பசாசுகள், நோக்கத்து - கருத்தோடு, ஆக்கிய-செய்யும், நுண்-அரிய, சடத்து-கொடுமையால், இவன்-இவன், ஆக்கத்து-மிகுதியாய், ஆக்கிய-கொண்ட, அருளை-கிருபையை, தாக்குற-(அழிக்கத்) தாக்கவே, ஆக்கிய-செய்த, இகல்-அப்பகையை, ஊக்கத்து - வீரத்தால், உடைத்துளான்-அழித்துவென்றிருப்பான். எ-று.

உரை.— மனிதரோடு போர்பொருது பாவங்கொண்டுவிடும்பசாசுகள் நினைத்துச் செய்யு மரியவஞ்சனைகொண் டிவன்மிகுதியாய்க்கொண்டவருளையழிக்கத்தாக்கவே வீரங்கொண்டிவனப்பகையையுடைத்து வெல்லுவான். (௰௫)

## வேறு.

கள்ளங்காட்டு களங்கங்கடிந்தொளி
ருள்ளங்காட்டொளி காட்டியவொண்முகந்
தெள்ளங்காட்டெழி றீட்டிவரங்கடம்
வெள்ளங்காட்டி வளர்ந்துவிளங்கினான்.

இ-ள். கள்ளம்-பொய், காட்டு - விளைக்கும், களங்கம்-குற்றத்தை, கடிந்து-அறுத்து, ஒளிர்-விளங்கின, உள்ளம்-மனது, காட்டு-காண்பித்த, ஒளி-ஒளிவை, காட்டிய-காண்பித்த, ஒள்-தெளிந்த, முகம்-வதனமானது, தெள்-கொழித்த, அம்-அழகினை, காட்டு-காட்டிய, எழில்-வடிவாக, தீட்டி-எழுதியதினால், வரங்கடம்-வரங்களின், வெள்ளம்-வெள்ளமே, காட்டி -(புறத்துக்)காட்டி, வளர்ந்து-ஓங்கி, விளங்கினான்-விளங்கினான் (குசை). எ-று.

உரை.— பொய்யினால்வருமாசின்றி விளங்கின நல்லுயிர் கொண்டவொளிவுகாட்டியதெளிந்தமுகத்தி லழகினைத்தீட்டியதினாலுட்கொண்டவரங்களின்வெள்ளமே புறத்துங்காட்டி வளர்ந்து விளங்கினான் குசையென்க. (௰௬)

இன்றெளித்தெவ ரும்நசையெய்துவ
பொன்றெளித்தெழு தும்படப்பொற்பினன்
மின்றெளித்தெழு திக்கதிர்வீசெழில்
கொன்றெளித்தென வாசையிற்கோடிலான்.

இ-ள். இன்-இனிதாய், தெளித்து-விளங்கி, எவரும்-யாரும், நசை-(தன்மேல்)ஆசை, எய்துவ-வைக்க, பொன்-பொன்னெளி, தெளித்து-வீசி, எழுதும்-எழுதப்பட்ட, பட-படத்தின், பொற்பினன் - அழகுடையான், மின்-மின்னல், தெளித்து-கொழித்ததுபோல, எழுதி-எழுதிய, கதிர்-கிரணங்களை, வீசு-வீடும், எழில் - மற்றமுகத்தழகெல்லாம், கொன்-பயனில்லாதது, என-என்று, தெளித்து-அறிந்ததனால், ஆசையில்-(தானேயதின்மேல்) ஆசைவையாமல், கோடிலான்-நெறிதப்பாதுதிரிவான். எ-று.

உரை.—நன்றாய்விளங்கி யெவருந்தன்மேலாசைவைக்கத் தெளிந்தபொன்னலெழுதப்பட்ட படத்தினழகுடையான் மின்போலொளிர்ந்த மற்றமுகத்தழகெல்லாம் பயனில்லாதென்று தானேயதின்மேலாசைவையாதேதிரிவானென்க. (௰௭)

கதிர்முகத்தலர் கஞ்சங்கொல்கஞ்சமேற்
பொதிர்முகத்தெழும் பொற்பளிகொல்நசை
பிதிர்முகத்திழை யாரிவன்பேரெழில்
முதிர்முகத்திடை மொய்த்தனநோக்கமே.

இ-ள். கதிர்-சூரியன், முகத்து-முன்னே, அலர்-மலர்ந்த, கஞ்சங்கொல்-தாமரையோ, கஞ்சமேல்-தாமரைமேல், பொதிர்-மொய்த்து, முகத்து-தொனியோடு, எழும்-எழும்பும், பொற்பு-அழகுள்ள, அளிகொல்-வண்டுகளோ, நசை-ஆசை, பிதிர்-மிகுந்த, முகத்து -முகத்தோடு, இழையார் - ஆபரணங்களையணிந்தமாதர்கள்; பேரெழில்-பேரழகு, முதிர்-நிறைந்த, இவன்-இவனது, முகத்திடை-முகத்திடத்து, மொய்த்தன-மொய்த்துவைத்த, நோக்கம்-கண்கள். எ-று.

உரை.—சூரியன்முன் மலர்ந்ததாமரையோ தாமரைமேல் மொய்த்தவண்டுகளோ ஆசையோடு கன்னிகளெல்லாரும் பேரழகுள்ள இவன் முகத்திலே மொய்த்துவைத்த கண்களென்க. (௰௮)

விதிமுகத்தலர் மேதையின்மேன்மையான்
புதிமுகத்தலர் பூவணிச்சாயலார்
நிதிமுகத்தெதிர் மூடிய நீண்டகண்
மதிமுகத்தெதிர் தாமரைமானுமே.

இ-ள். விதிமுகத்து-உண்மையிடத்து, அலர்-மலர்ந்த, மேதையின்-அறிவின், மேன்மையான்-மகிமையையுடையகுசையோவென்றால், புதி-புதிய, முகத்து-முகத்தோடு, அலர்-மலர்ந்த, பூ-பூவின், அணி-அழகிய, சாயலார்-சாயலுள்ளமாதர்களின், நிதி- அழகிய, முகத்து-முகத்தில், எதிர்-எதிர்பட்டு, மூடிய-மூடிக்கொண்ட, நீண்ட-நெடிய, கண்-கண்கள், மதிமுகத்து-சந்திரன்முன்பாக, எதிர்-எதிர்பட்டுக்குவியும், தாமரை-தாமரைமலரை, மானும்-போலும். எ-று.

உரை.— நிறைந்த வுணர்வுடையகுசையோவென்றால் மலர்ந்தபூஞ்சாயலாக வழகியபெண்கள்முகங்கண்டாற் சந்திரன்முன்பாகக் குவியுந்தாமரைபோலக் கண்களைமூடுவானென்க. (௰௧)

கானிறைஞ்சிய நற்றவக்காவலன்
மீனிறைஞ்சிய மின்விழியாருரை
யூனிறைஞ்சிய வேலெனவோர்ந்துதான்
றேனிறைஞ்சிய தீஞ்சொலைக்கேட்கிலான்.

இ-ள். கான்-கானில், நிறைஞ்சிய-நிறைந்த, நல்-நல்ல, தவ-தவத்தையுடையவர்களுக்கு, காவலன்-அரசன் (ஆகியபாலன்), மீன் - நட்சத்திரங்கள், இறைஞ்சிய-பணிந்த, மின்-ஒளிவீசிய, விழியார்-விழியையுடையமாதர்களின், உரை-சொல், ஊன்-தசையை, நிறைஞ்சிய-நிறையவுண்ட, வேலென-வேலென்று, ஓர்ந்து-உணர்ந்து, தான்-தானே, தேன்-தேனினிமை, இறைஞ்சிய-தாழ்ந்த, தீம்-இனிய, சொலை-(அச்)சொல்லை, கேட்கிலான்-கேளான். எ-று.

உரை.—கானில்வழங்குந்தவத்தோர்க் கரசனாகநின்றபாலனே மீனினுமொளிர்ந்த விழியுடையார்சொல்லுஞ்சொல் விரத்தத்தையுண்ணும் வேலென்றுணர்ந்து தேனினுமினிதாயுரைக்கினுமச்சொல்லைத்தானேகேளானென்க. (௨௰)

கார்முகத்து வளைத்தனகார்முகஞ்
சீர்முகத்துச் செயற்தருங்காமவெம்
போர்முகத்து வெல்வான்புரையாசையற்
றோர்முகத்தெதிராதொளித்தானென்றான்.

இ-ள். கார்முகத்து - வில்லின் (எதிராக), வளைத்தன-வளைத்த, கார்முகம்-வில்லை, சீர்முகத்து-நன்மையாக, செயம்-செயத்தை, தரும்-தரும், காமம்-காமத்தின், வெம்-வெப்பமாகிய, போர்முகத்து-போரிடத்தில், புரை-குற்றமுள்ள, ஆசை-ஆசை, அற்று-அறந்து, ஏர்-அழகுடைய, முகத்து-முகத்தின், எதிராது-எதிர்நில்லாமல், ஒளித்தான்-ஒளித்தவன், வெல்வானென்றான்-வெல்லுவானென்றான். எ-று.

உரை. — வில்லெதிராகவளைத்தவில்லை நன்றாய்ச்செயந்தருமாம், காமப்போரிலேவென்றாற் குற்றங்கொண்டவிடு மாசைகளம்பட்டதபடிக் கழகுமுகத்தெதிராகநில்லாம லொளித்தோடினவன் வெல்லுவானென் றுணர்ந்தானென்க. (௨௧)

என்றொளித்தெனக் கானுறவேகினான்
குன்றொளித்த குருமணிச்சாயலான்
கன்றொளித்த கறவைகனைத்தென
வன்றொளித்தவற் கார்த்தழுதாருமே.

இ-ள். என்று-அதைச்சொல்லி, ஒளித்தென-ஒளிந்ததுபோல, கான்-கானத்தில், உற-இருக்க, ஏகினான்-போனான், குன்று-மலையில், ஒளித்த-புதைந்த, குருமணி-செம்மணியினது, சாயலான்-அழகுடையான், அன்று-அப்போது, ஒளித்து-ஒளித்துப்போனதினால், கன்று-(தன்)கன்று, ஒளித்த-(பிரிந்து)மறைந்த, கறவை-பசுவானது, கனைத்தென-(அதனைக்)கூவி(த்தேடி)யதுபோல, அவற்கு-அவனுக்காக, யாரும்-எல்லாரும், ஆர்த்து-கூவி, அழ-அழுதார். எ-று.

உரை. — அதைச்சொல்விக் கானத்தி லொளிக்கப்போனான். மலையிற்புதைத்த செம்மணிபோலழகுடையான், இவனொளித்துப்போனதினாற் றன்கன்றைப்பிரிந்துதேடும்பசுப்போலவெல்லாருமழுதாரென்க. (௨௨)

தேமுயங்கிய தேன்றருநீட்டிய
காமுயங்கிய கார்வரைகண்டகாற்
பூமுயங்கு புலந்தருநீழல்கீழ்
பாமுயங்க வதிந்தனன்பாடுவான்.

இ-ள். தேம்-வாசனை, முயங்கிய-பொருந்திய, தேன்-தேனை, தரும்-கொடுக்கும், நீட்டிய-நீண்ட, கா-சோலைகள், முயங்கிய-சூழ்ந்த, கார்-கரிய, வரை-மலையை, கண்டகால்-கண்டவுடனே, புலம்-அவ்விடத்து, பூ-பூக்கள், முயங்கு-நிறைந்த, தரு-மரத்து, நீழல்-நிழலின், கீழ்-கீழே, வதிந்தனன்-தங்கி, பா-பாக்கள், முயங்க-பாடினானென்ன, பாடுவான்-சொல்வான். எ-று.

உரை.— வாசனையுந்தேனும்பொழிந்த நீண்டசோலைகள் சூழ்ந்த கருமலையைக்கண்டான், கண்டவுடனே பூத்தவோருயர்ந்த மரத்தின்கீழிருந் துட்கொண்டவின்பத்தினாற் பாடினானென்னச்சொல்லுவான். (௨௩)

## வேறு.

வளைத்தனதனுக்கொடுவெழுதுமீர்க்கடை வடிக்கணைவி
னைப்படவினையையாக்கிய
விளைத்தனநசைக்கொடுவிளையுநோய்த்திரள் விடப்பகைபய
த்தனபொறிகளீர்த்துபு
திளைத்தனபிறைக்கொடுநசையுநீத்தவை செகுத்தொடுபுதை
த்திடவுரியதாய்ப்பொரு
விளைத்தனதிருக்கொடுவளருமாட்சியை யியற்றியமுகிற்படர்
மலையினூக்கமே.

இ-ள். வளைத்தன-வளைத்த, தனுக்கொடு-வில்லைக்கொண்டு, எழுதும்-எழும்பும், ஈர்க்கு-இறகு, அடை-சேர்ந்த, வடி-கூர்மையாகிய, கணை-அம்பின், வினைப்பட-வினையினும், வினையையாக்கிய-வினையைச்செய்து, விளைத்தன-விளைவித்த, நசைக்கொடு-ஆசையினால், விளையும்-உண்டாகும், நோய்-துன்பங்களின், திரள்-மிகுதியை, விட-கொண்டுவிட்டு, பகை-பகையை, பயத்தன-செய்யும், பொறிகள்-பஞ்சேந்திரியங்களை, ஈர்த்துபு-அறுத்து, திளைத்தன-பெருகிய, பிறைக்கொடு-குற்றங்களோடு, நசையும்-ஆசையும், நீத்து-நீக்கி, அவை-அவையெல்லாம், செகுத்து-கொன்று, புதைத்திட-புதைக்க, உரிய தாய்-உரித்தாகிய, பொருவு-உவமை, இளைத்தன-அற்ற, திருக்கொடு-செல்வங்கொண்டு, வளரும்-வளர்ந்த, மாட்சியை-மாட்சிமையை, இயற்றிய-செய்த, முகில்-மேகம், படர்-சூழ்ந்த, மலையின்-மலையினது, ஊக்கமே-திறமே (என்றான்). எ-று. ஒடு என்பது, இசைநிறையிடைச்சொல்லாயிற்று.

உரை.—வளைத்தவில்லெய்யுங் கூர்த்தவம்பினுந்தைத்துவினையைச்செய்த வாசையினால்விளையுந் துன்பங்களையாக்கிப் பகைசெய்யும் பஞ்சேந்திரியங்களையறுத்துவந்தகுற்றங்களையு மதுகளைக்கொண்டுவிடுமாசையையுங் கொன்றபின்னிவையெல்லாம்புதைக்க வுரியவிடமிதேயாகி யொவ்வாதசெல்வங் கொண்டுவளர்ந்த மாட்சிமையுளதாய மேகத்தாற்சூழ்ந்தமலையின்றிறமேயென்றானென்க. (௨௪)

சினைக்கருமுகிற்றலைவிலகவூக்குபு திரட்கனிதிளைத்தன
பொழில்கள்சூட்டிய
நனைக்கருவிளைத்துயரிடமிதாய்க்கதிர் நடத்தியதிருக்கிளருல
கின்மேற்செல
நினைக்கருமுரித்தடமெனவிராப்பகல் நிறுத்தியதவத்துணையு
தவியாற்பல
வினைக்கருமறுத்திறையவனைவாழ்த்தலின் விருப்பினுநனித்த
குமலையினூக்கமே.

இ-ள். சினை-சூல்கொண்ட, கரு-கரிய, முகில்-மேகங்கள், தலை-உச்சியை, விலக-விலகிப்போக, ஊக்குபு-உயர்ந்து, திரள்-மிகுந்த, கனி-கனிகள், திளைத்தன-நிறைந்த, பொழில்கள்-சோலைகள், சூட்டிய-சூழ்ந்த, நனை-பூவரும்புகளின், கரு-கண்ணிகட்டலை, விளைத்து-செய்து, உயர்-உயர்ந்த, இடம்-இடம், இதாய்-இதாகையால், கதிர்-கிரணங்களை, நடத்திய-விளங்கச்செய்த, திரு-செல்வம், கிளர்-நிறைந்த, உலகின்மேல்-வானுலகின்மேலே, செல்-செல்ல, நினைக்கு-நினைக்கும், அரும்-அருமையாகிய, உரி-உரிய, தடமென-வழிபோல, இராப்பகல்-இரவும்பகலும், நிறுத்திய-நிலைபெறச்செய்த, தவ-தவத்தின், துணையுதவியால்-துணையினுல், பல-பல, வினை-வினையின், கரு-வேரை, மறுத்து-போக்கி, இறையவனை-கடவுளை, வாழ்த்தலின்-வாழ்த்துவதினுல், விருப்பினும்-என்னுசையின்மேலும், நனி-மிகவும், தகும்-தகுதியான, மலையின்-மலையினது, ஊக்கமே-திறமேயென்றுன். எ-று.

உரை.—சூற்கொண்டகரியமேகங்கள்விலகிப்போக வுயர்ந்துநற்கனிநிறைந்தசோலைகள்சூழ்ந்து பூவரும்புமலிந்த வுயரிடமிதாகையா லொளிருஞ் செல்வவானுலகின்மேற்செல்ல வுரியவழியேயாகி யிராப்பகல் மாறுததவத்தின்றுணையினுல் வினைகளை நீக்கி யென்றுங் கடவுளைவாழ்த்தலாமென்றதினு லென்னுசையின்மேலு நன்மையுடைய மலையின்றிறமேயென்றுனென்க. (உரு)

உடித்தன்முதற்கதிரொழுதுகோட்டுய் ருளத்திருளொ
ளித்தொளியறிவுநீர்த்தலின்
முடித்தனதவத்துயிரினிதுகாத்துளி முரட்படுபகைப்படவ
ரணின்மாட்சியா
மிடித்தனமழைத்துளிபெருகுமாற்றொடு மிணைப்படநிறைப்
படுமருளினீத்தமுள்
குடித்தனமனத்தெழவுறுதியாக்கிய குணத்தருள்குடித்தகும
லையினூக்கமே.

இ-ள். உடித்தன-உதித்த (சூரியனது), முதல்-முதல், கதிர்-கதிர், எழுது-எழுதும், உயர்-உயர்ந்த, கோட்டு-உச்சியுடையதேயாகி, (உளத்து-என்) உள்ளத்தின், இருள்-இருளை, ஒளித்து-மறைத்து, ஒளி-ஒளிர்ந்த, அறிவு-உணர்வு, தீர்த்தலின்-நிரம்புவதினால், முடித்தன-முடித்த, தவத்து-தவத்தால், உயிர்-உயிரை, இனிது-இன்பமாக, காத்துளி-காத்தவிடத்தில், முரட்படு-போர்செய்யும், பகைப்பட-பகைவர்கெட(வைத்த), அரணின்-கோட்டையின், மாட்சியாய்-மாட்சிமையாகி, இடித்தன-இடித்த, மழை-மேகத்தின், துளி-மழையால், பெருகும்-பெருகும், ஆற்றொடும்-ஆற்றோடு, இணைப்பட-ஒப்ப, நிறைப்படும்-நிறையும், அருவின்-தயையின், நீத்தம்-வெள்ளம், உள்-உள்ளே, குடித்தன-குடித்த, மனத்து-மனத்தில், எழ-எழ, உறுதி-உறுதியை, ஆக்கிய-செய்த, குணத்து-குணத்தையுடைய, அருள்-தேவருள், குடி-குடியாக, தரும்-தருதியான, மலையின்-மலையினது, ஊக்கமே-திறமே. எ-று. உதித்தனவென்பது-உடித்தனவென விகாரமாயிற்று.

உரை. — தினந்தோறுஞ் சூரியன்கதிரா லெல்லாத்திற்கு முன்னே யெழுதப்பட்ட உச்சியதேயாகி யங்கென்னுள்ள முந் தன்னிருளை நீக்கியொளிர்ந்தவுணர்வடைந்துநற்றவத்தை முடித் துயிரைக்காத்தவின் போர்செய்யும்பகைவர்க்கெதிரா ய்வைத்தகோட்டையாகி, யிடித்துப்பெய்யுமழையாற் பெருகுமாறுபோல நிறைந்ததயையின்வெள்ளமோடி யதைக்குடித்தமனத்தி லெழ வுறுதிசெய்த தேவருள் குடியாயிருக்குமலையின் றிறமேயென்றானென்க. (௨௯)

## வேறு.

என்றெழுந்துவப்பிலோங்கி யிரட்டலைக்கடலினீந்தி
நின்றெழுங்கரைகண்டாற்போ னிழற்றியதிமிசுவிம்முங்
குன்றெழுங்குவடுநோக்கிக் குயில்குயின்றகவமஞ்ஞை [சை.
யன்றெழுந்தெழுதும்வண்ணத் ‚ தலர்ந்தகானுழைந்தான்கு

இ-ள். என்று-(இவையெல்லாஞ்)சொல்லி, எழுந்து-எழுந்து, உவப்பில்-சந்தோஷத்தில், ஓங்கி-உயர்ந்து, இரட்டு-ஒலிக்கும், அலை-அலைகளையுடைய, கடலில்-கடலில், நீந்தி-நீந்தி, நின்று-அக்கடலினின்று, எழும்-எழுந்த, கரை-கரையை, கண்டாற்போல-கண்டதுபோல, நிழற்றிய-நிழலைச்செய்யும், திமிசு-வேங்கைமரங்கள், விம்மும்-நெருங்கும், குன்று-மலையின், எழும்-உயர்ந்த, குவடு-உச்சியை, நோக்கி-பார்த்து, குயில்-குயில்கள், குயின்று-கூவி, மஞ்ஞை-மயில்கள், அகவ-ஆட, அன்று-அப்பொழுது, எழுந்து-(தான்)எழுந்து, எழுதும்-எழுதிய, வண்ணத்து-விதமாய், அலர்ந்த-மலர்கள்பூத்த, கான்-காட்டில், நுழைந்தான்-நுழைந்தான், குசை-குசை. எ-று.

உரை. — இவையெல்லாஞ்சொல்லி யினிதுவந்தோங்கிக்க டவுணீந்திப்போகிறவ னெழுந்தகளையைக் கண்டாற்போல வேங்கைமரங்கள் நெருங்கிச்சூழ்ந்த மலையினுச்சியைநோக்கிப்போய்ச் சூழக்குயில்கள்கூவ மயில்களகவத்தானெழுந்து மலர்களாலெழுதியகானத்தி னுழைந்தான் சூசையென்க. (உஎ)

காரிடைக்குளித்தமின்போற் கானிடைக்குளிப்பப்போ
னீரிடைக்குளித்தபேவு நிறநரைகுளித்தோர்மூப்பன் [கி
ருரிடைக்குளித்ததேன்போற் றயையிடைக்குளித்தசொற்கொ
டேரிடைக்குளித்தபாலா வியம்புதிபோவதென்றான். [ண்

இ-ள். காரிடை-மேகத்திடத்து, குளித்த-மறைந்த, மின்போல்-மின்னலைப்போல, கானிடை - காட்டிடத்து, குளிப்ப-ஒளித்திருக்க, போகில்-போகையில், நீரிடை-தண்ணீரில், குளித்த-படிந்த, பேவு-நுரையின், நிற-நிறத்தையுடைய, நரை-நரை, குளித்து-படிந்த, ஓர்-ஒரு, மூப்பன்-கிழவன், தாரிடை-பூவிடத்து, குளித்த-ஓடிய, தேன்போல்-தேனைப்போல, தயையிடை-தயையில், குளித்த-மூழ்கிய, சொற்கொண்டு-சொல்லால், ஏரிடை-அழகில், குளித்த-மூழ்கிய, பாலா-பாலனே, போவது-போவதை, இயம்புதியென்றான்-சொல்லென்றான். எ-று.

உரை. — மேகத்திலொளித்த மின்போலத் தான்கானத்திலொளித்திருக்கப்போகிறபோது நீர்மேனுரைபோல நரைகொண்டவோர்கிழவ னெதிர்ந்து பூவடிந்ததேனி னினியதயையோடுரைத்து வடிவுள்ளபாலனே யெங்கேபோகிறாய் சொல்லென்றான். (உஅ)

வீடிழந்திகல்செய்பேய்கள் வினைப்பகைக்கஞ்சியோடி
நாடிழந்தொளித்துக்கானி னயந்துறையறத்தைநாடி
யீடிழந்துயர்ந்தகுன்றத் திடத்துநானொளித்தலுள்ளித்
தோடிழந்தேகுதென்றான் றுணையிழந்துயர்ந்தபாலன்.

இ-ள். வீடு-வான்வீட்டை, இழந்து-இழந்து, இகல்-பகையை, செய்-செய்யும், பேய்கள்--பேய்களின், வினை-தீவினையுள்ள, பகைக்கு-பகைக்கு, அஞ்சி-பயந்து, ஓடி-ஓடிப்போய், நாடு-நாட்டை, இழந்து-விட்டு, கானில்-வனத்தில், ஒளித்து-ஒளித்து, நயந்து-சிறந்து, உறை-இருக்கும், அறத்தை-அறத்தை, நாடி-தேடி, ஈடு-உவமையை, இழந்து-கடந்து, உயர்ந்த-ஓங்கிய, குன்றத்திடத்து-அம்மலையிடத்து, நான்-நான், ஒளித்தல்-ஒளித்திருப்பதை, உள்ளி-நினைத்து, தோடு-கூட்டத்தை, இழந்து-விட்டு, ஏகுதென்றான்-போகிறேனென்றான், துணை-உவமையை, இழந்து-கடந்து, உயர்ந்த-ஓங்கிய, பாலன்-பாலன். எ-று.

உரை.—வான்வீட்டையிழந்தபேய்கள் பகைசெய்துகொண்டுவிடும் வினைக்கஞ்சி யோடிப்போய் நாட்டைவிட்டுவனத்திலொளித்து வாழுமறத்தைத்தேடி யொவ்வாதுயர்ந்த வம்மலையிடத்து நானொளித்திருக்க வாசையோடு தனியேபோகிறேனென்று னுவமையில்லா துயர்ந்தபாலனென்க. (௨௯)

கார்முகத்தலருமுல்லை கடிமுகத்திமைக்கும்வண்கா
லூர்முகத்தஞ்சுநாவா யுடைத்திருக்கொணருங்கொல்லோ
போர்முகத்தெதிரா நீங்கிற் புணருமோவிழைந்தவெற்றி [ன்.
யேர்முகத்துணர்விற்றேர்ந்த விளவலோயென்றான்மூத்தோ

இ-ள். கார்முகத்து-மேகத்தின்முகத்தில், அலரும்-மலரும், முல்லை-முல்லை, கடிமுகத்து-வாசனைகொண்டு, இமைக்கும்-விளங்கும், வண்-மிகுந்த, கால்-காற்று, ஊர்-வீசும், முகத்து-இடத்தில், அஞ்சும்-பயப்படும், நாவாய்-கப்பல், உடை-(புறநாட்டில்)உள்ள, திரு-செல்வங்களை, கொணருங்கொல்லோ-கொண்டுவருமோ, போர்முகத்து-போரின்முகத்தில், எதிரா-எதிராமல், நீங்கில்-நீங்கினால், விழைந்த-விரும்பிய, வெற்றி-செயம், புணருமோ-கிடைக்குமோ, ஏர்-அழகுள்ள, முகத்து-முகத்தோடு, உணர்வில்-அறிவில், தேர்ந்த-முதிர்ந்த, இளவலோவென்றான்-பாலனேயென்றான், மூத்தோன்-மூத்தோன். எ-று.

உரை.—இடித்தமேகமுகத்தில் மலர்ந்தமுல்லை வாசனைமிகுந்துவிளங்குமல்லோ? காற்றிற்குப்பயந்தகப்பல் புறநாட்டிலுள்ள செல்வங்கொண்டுவருமோ? போர்முகத்திலெதிராமலோடினவன் வெற்றியைக்கொள்ளுவானோ வழகியமுகத்தோடுதேர்ந்தவறிவுடையபாலனேயென்றான்மூத்தோன். ஆகையால் நாட்டைவிட்டொளிக்கவேண்டாமென்பதுகருத்து.

(௩௰)

பைம்பொறியரவினஞ்சிற் பழிப்படப்பகைத்துக்கொ
ஐம்பொறியன்றிச்சூழ்ந்த வனைத்துமேபகைத்தகாலை [ல்லு
செம்பொறிபெய்தபைம்பூ சிதைந்தெனவுளமுமேங்கி
வெம்பொறியாகவாற்று வேட்கையேயென்றான்சூசை.

இ-ள். பைம்-பசிய, பொறி-பொறியுள்ள, அரவின்-பாம்பின், நஞ்சில்-நஞ்சினும், பழிப்பட-தீதுண்டாக, பகைத்து-பகைத்து, கொல்லும்-கொல்லும், ஐம்பொறி-பஞ்சேந்திரியங்கள், அன்றி-அல்லாதே, சூழ்ந்த-சூழ்

ந்த, அனைத்துமே-எல்லாம், பகைத்தகாலை-பகைசெய்தபொழுது, செம்-சிவந்த, பொறி - தீப்பொறியில், பெய்த - போட்ட, பைம்பூ-பசுமலர், சிதைந்தென-வாடினாற்போல, உளமும்-மனமும், எங்கி-ஏங்கி, வெம்-வெப்பமுள்ள, பொறியாக-நெருப்பாக(விளையும்), வேட்கையே-ஆசையே, ஆற்றா-தணியப்படாது, என்றான்குசை-என்றுசொன்னான்குசை. எ-று.

உரை. — பாம்பினஞ்சினுங்கேடாகப் பகைத்துக்கொல்லும்பஞ்சேந்திரியங்களல்லாதே சூழ்ந்ததெல்லாம் பகைசெய்யவே நெருப்பிற்போட்டபைம்பூவாடினாற்போலமனமுமேங்கி நெருப்பாகவிளையுமாசை மாற்றலரிதென்றான் குசை. (௫௧)

பொன்னொளிகாட்டுஞ்செந்தீ புகையகில்மணத்தைக்
காட்டும் [சி
மின்னொளிமணியைக்காட்டும் வினைசெயும்படைக்கல்மாட்
தன்னொளிகாட்டுந்துன்பத் தகுதியிற்குன்றாவூக்கம்
மன்னொளிகாட்டுநல்லோய்மறையிதுவென்றான்சான்றோன்.

இ-ள். செந்தீ-செந்தீயானது, பொன்-பொன்னின், ஒளி- ஒளியை, காட்டும்-காண்பிக்கும், புகை-(வெந்து)புகையும், அகில்-அகிலங்கட்டை, மணத்தை-தன்வாசனையை, காட்டும்-காட்டும், வினை-தன்றொழிலை, செயும்-செய்யும், படைக்கல்-சாணைக்கல், மின்-மின்னும், ஒளி - ஒளிவீசுகின்ற, மணியை-மணிகளை, காட்டும்-காட்டும், துன்பத்தகுதியில்-துன்பகாலத்தில், குன்றா - குறையாத, ஊக்கம்-தைரியம், மாட்சிதன் -(அறத்தின்)மாட்சிமையினது, ஒளி-ஒளியை, காட்டும்-காட்டும், மன்னு-நிலைபெற்ற, ஒளி-ஒளியை, காட்டும்-காட்டுகின்ற, நல்லோய்-உத்தமனே, இது-இதுவே, மறை-வேதம், என்றான் - என்றான், சான்றோன்-அறிஞன். எ-று.

உரை. — நெருப்பினாற்செம்பொன் னொளிவுபெறுமே, வெந்துபுகைந்தாலகிலங்கட்டை வாசனைபெறுமே, சாணைக்கல்லுவருத்தஞ்செய்தால் மணிகளொளிபெறுமே, அத்தன்மையாற் றுன்பம்வந்தபோது குறையாத்தயிரியத்தா லறத்தின்மாட்சிமைதோன்றுமே, நிலைபெற்றவொளியைவீசு மழகுடையோ யிது வேதவிதியாகவெண்ணுவாயென்றான் மூத்தோன். ஆகையாற்றுன்பத்திற்கஞ்சி யொளிக்கவேண்டாமென்பதுகருத்து. (௫௨)

உள்ளுயிருண் ணுங்கூற்றி னுடன்றுகொல்நசையையக்
கொல்லத்
தெள்ளுயிர்மருட்டுஞ்செல்வத் திரள்துறந்தொருங்குநீங்கிக்
கள்ளுயிருயிர்த்தபைம்பூங் கானில்வாழ்தவத்தைநாட
லெள்ளுயிர்தெளிக்கும்வண்ணமென்பரோவென்றான்சேடன்.

இ-ள். உள்-உடலுள்ளிருக்கும், உயிர்-உயிரை, உண்ணும்-உண்ணும், கூற்றின்-கூற்றினும், உடன்று-பகைத்து, கொல்-கொல்லும், நசையை - ஆசையை, கொல்ல-(நாங்)கொல்ல, தெள்-தெளிந்த, உயிர்-உயிரை, மருட்டும்-மயக்குவிக்கும், செல்வத்திரள்-செல்வங்களையெல்லாம், ஒருங்கு-முழுதும், துறந்து-விட்டு, நீங்கி-நீங்கி, கள்-இனிய, உயிர்-காற்று, உயிர்த்த-வீசும், பைம்-பசிய, பூ-மலர்நிறைந்த, கானில்-கானத்தில், வாழ்-வாழும், தவத்தை-தவத்தை, நாடல்-தேடலே, எள் - இகழ்ச்சிகொண்ட, உயிர்-உயிரையும், தெளிக்கும்-தெளியச்செய்யும், வண்ணம்-முறைமை, என்பரோவென்றான்-என்பாரோவென்றான், சேடன்-பாலன். எ-று.

உரை.—கொல்லுங்கூற்றினுங் கொடியதாய்க்கொல்லு மாசையைநாங்கொல்லத் தெளிந்தவுயிரை மயக்குவிக்குஞ்செல்வங்களெல்லாமொருமித்துநீக்கி மலர்ந்தகானத்தில்வாழுந் தவத்தைத்தேடலே முன்னாசையாலிகழ்ச்சிகொண்டவுயிரையுந் தெளியச்செய்யுமுறைமையென்பாரல்லவோ வென்றான் பாலன். (௩௯)

ஒருங்கெலா நீக்கலோர்நாளுறுதியேபகைத்துச்சூழ்தன்
மருங்கெலாமிருப்பவுள்ள வாயடைத்திடைவிடாது
நெருங்கெலா நுழையாக்காத்த னெடும்பயன் பயத்தநீண்
போர்
சிருங்கெலா நிலையினூங்குந் திறமிதென் றய்யன்சொன்னான்.

இ-ள். ஒருங்கு-ஒன்றாக, எலாம்-எல்லாத்தையும், நீக்கல்-விட்டுப்போதல், ஓர்நாள்-ஒருநாள், உறுதியே-துணிவே, பகைத்து-(தன்னைப்)பகைத்தன, எலாம்-எல்லாம், தன்-தனது, மருங்கு-பக்கத்தில், சூழ்-சூழ்ந்து, இருப்ப-இருக்க, உள்ள-தன்மனத்தின், வாய்-வாசலை, அடைத்து-அடைத்து, இடைவிடாது-இடம்விடாமல், நெருங்கு-நெருங்கும், எலாம்-எல்லாம், நுழையா-நுழையாமல், காத்தல்-காத்தலே, நெடும்-நீண்ட, பயன்-பிரயோசனத்தை, பயத்த-தந்த, நீண்போர் - நெடும்போர், எலா - எல்லா, சிருங்கு-மலைமுடியின், நிலையின்-நிலையினும், நூங்கும்-உயர்ந்த, திறம்-மேன்மை, இதென்று-இதுவென்று, அய்யன்-ஐயன், சொன்னான்-சொன்னான். எ-று.

உரை. — எல்லாத்தையும்விட்டுப்போத வொருநாள் துணிவல்லோ? தன்னைப்பகைத்ததெல்லாஞ் சூழ்ந்திருக்கவே தான்மனத்தின்வாசலையடைத்து நெருங்கிவரும் பொருள்களிலொன்றுமுள்ளேநுழையவொட்டாம லோயாதுகாத்தலே நெடுநாட்போராய் நெடும்பயனுந்தந்து நல்லவறநிலையினுள்ளுமுத்தம்மதுவென்றனய்யனென்க. (௯௪)

நாடோறுங்கனிந்தசெந்தே னற்கனியளித்தனன்றே
கோடுறுமரமுந்தன்னைக் கொடுத்தலேநன்றேயிவ்வா
றீடுறுமுளதுமுள்ளு மீதல்செய் துறவேயென்பார்
வீடுறுநூலோரென்ன விளம்பினனிளவல்மாதோ.

இ-ள். நாடொறும்-தினந்தோறும், கனிந்த-முதிர்ந்த, செந்தேன்-செந்தேனைப்பொழியும், நல்-நல்ல, கனி-கனிகளை, அளித்தல்-கொடுத்தல், நன்றே-நல்லதோ, கோடு-கொம்புகள், உறு-உள்ள, மரமுந்தன்னை-மரத்தையும், கொடுத்தலே-கொடுத்தலே, நன்றே-நல்லதோ, இவ்வாறு-இவ்வித, ஈடுறும்-ஈடாகும், உளதும்-(தனக்கு)உள்ளதும், உள்ளும்-(தன்) உள்ளமும், ஈதல்-கொடுத்தல், செய்-செய்யுந், துறவேயென்பார்-துறவாமென்பர், வீடு-மோட்சம், உறும்-அடையும், நூலோர்-வேதநூலுடையகுருக்கள், என்ன-என்று, விளம்பினன்-சொன்னான், இளவல்-பாலன். எ-று. மாது - ஓ-இரண்டுமசை.

உரை. — இனியகனிகளைத் தினந்தோறுமரத்துக்கொடுக்கலே நல்லதோ வொருமிக்கமரத்தையுங்கொடுக்கலே நல்லதோ? இத்தன்மை தனக்குளதுந் தன்னுள்ளமுங்கொடுத்தல் துறவாமென்பார் குருக்களேயென்றான்பாலன். (௯௫)

காயொடுமரந்தந்தாற்போற் கடித்துறவருமைவெஃகி
வேயொடுநெருங்குங்கானில் விழைந்துதானொழுகனன்றே
தீயொடுகுழைமற்றோருஞ் செவ்வுறச்செலுத்தனன்றே
தூயுடுவுணர்வோயென்னச் சொற்றினன்குரவனம்மா.

இ-ள். காயொடு-காயோடு, மரம்-மரத்தையும், தந்தாற்போல்-கொடுத்ததுபோல, கடி-மிகுந்த, துறவு-துறவின், அருமை-அருமையை, வெஃகி-விரும்பி, வேய்-மூங்கில், நெருங்கும்-நெருங்கிய, கானில்-கானகத்தில், விழைந்து-விருப்புற்று, தான்-தானொருவன், ஒழுகல் - (தருமவழியில்) நடத்தல், நன்றே-நல்லதோ, தீயொடு-தீமையால், குழை-வாடும், மற்றோரும் - மற்றவரும், செவ்வுற-செவ்வழியிற்சேர, செலுத்தல்-நடத்துதல், நன்றே - நல்லதோ, தூய்-தூய, உடு-நட்சத்திரங்களினும்(விளங்கிய), உணர்வோய்-உணர்வுடையோய், என்ன-என்று, சொற்றினன்-சொன்னான், குரவன்-மூத்தோன். எ-று. ஒடு-என்பது இசைநிறையிடைச்சொல்லாயிற்று. அம்மா-அசை.

உரை.—காயோடுமரத்தையுங் கொடுத்தாற்போலத் துற
வாக் மூங்கில்வளர்ந்தகானத்தி லாசையோடு தானொருவன் ற
ருமவழியினிற்பது நல்லதோ? தானடந்ததல்லாதே பாவத்தில்
மிழ்ந்திய மற்றவருஞ் செவ்வழியினிற்பச்செய்வது நல்லதோ?
தூயமீனினும் விளங்கிய வுணர்வுடையோயென்றான் மூத்
தோன். (௩௬)

பெற்றறமணிந்தநல்லோய் பிறர்மனைவிளைந்தசெந்தீ
யற்றறவோடித்தன்வீ டழன்றதேபோலவேட்கைப்
பற்றறவுணர்த்தியுள்ளம் பற்றியநசையில்வெந்தா
விற்றறவுறுதியென்றே வென்றனனரியசூசை.

இ-ள். அறம்-அறத்தை, பெற்று-அடைந்து, அணிந்த-அணிந்த, நல்லோய்-நல்லோனே, பிறர்மனை-பிறர்மனையில், விளைந்த-பற்றிய, செந்தீ-அக்கினி, அற்றற-அவிந்துபோக, ஓடி-(ஒருவன்) ஓடி, தன்-தனது, வீடு-வீடு, அழன்றதேபோல-பற்றியெரிவதுபோல, வேட்கை-ஆசையின், பற்று-தொடர்பு, அற-அறுதற்கு, உணர்த்தி-பிறர்க்குணர்த்தி, உள்ளம்-மனம், பற்றிய-கொண்ட, நசையில்-ஆசையால், வெந்தால்-வெந்தால், இற்று-இல்லது, அற-அற்க, உறுதியென்றே-திடனென்றே, என்றனன்-என்றான், அரிய-அரியமாட்சியுடைய, சூசை-சூசை. எ-று.

உரை.— அறம்பெற்றணிந்தநல்லோய் பிறர்மனைபற்றிய
தீயையவிப்ப வொருவனோடித் தன்வீட்டிற்றீப்பற்றி வெ
ந்தாற்போலத் தீயவாசையறுக்கப் பிறர்க்குணர்த்தியகால் தா
னாசையுட்பட்டுள்ளம்வெந்தால் நல்லதோவென்றா னரியமா
ட்சியுடையசூசை. (௩௭)

நீதிலாவிடமேவேண்டிற் சேணுலகெய்தல்வேண்டுங்
கோதிலாவனத்துந்தன்னைக் கொணர்ந்தகால்வினையும்வெம்
ரேதிலாதொழுகலுள்ளத் தியல்பினாலாகுமன்றி [போ
வாதிலாவிடத்தாலாகா மைந்தனேயென்றான்சான்றோன்.

இ-ள். நீதிலா - நீதில்லாத, இடமே - இடம், வேண்டில்-வேண்டுமாகில், சேணுலகு-வானுலகிற்கு, எய்தல்வேண்டும்-போகல்வேண்டும், கோதிலா-குற்றமற்ற, வனத்தும்-வனத்திலேமுதலாய், தன்னை-(தான்)றன்னை, கொணர்ந்தகால்-கூட்டிக்கொண்டுபோனவிடத்தில், வெம்போர்-கொடியபோர், வினையும்-உண்டாகும், ஏதிலாது-பாவமில்லாமல், ஒழுகல்-நடத்தல், உள்ளத்து-மனதின், இயல்பினால்-திடனால், ஆகுமன்றி-ஆகுமல்லாதே, வாதிலா-சண்டையில்லாத, இடத்தால்-இடத்தினால், ஆகா-ஆகாது, மைந்தனேயென்றான்-மைந்தனேயென்றான், சான்றோன்-அறிஞன். எ-று.

உரை. — நீதில்லாதவிடம் வேணுமாகில் வானுலகிற்குப் போகல்வேண்டும், வனத்திலேமுதலாய்த் தான்றன்னைக்கூட்டிக்கொண்டுபோனதினால் வெகுபேரும் பகையுமுண்டாகும். பாவமில்லாமல் நன்னெறியினிற்ப தவன் வன்மனத்துணிவுள்ளவனாகுமல்லாதே யிடத்தைப்பற்றியாகாது. மகனேயென் றுரைமூத்தோன். (௩௮)

ஈரறம்வழங்கும்வண்ணத் தியாவையுந்துறந்ததன்மை
பேரறமென்பக்கேட்டேன் பின்னையத்துறவினாங்கு
மோரறமுளதேலையா வுரைக்குதியுரைத்தவன்ன
சீரறம்விழைவேனென்றான் சேணுலகுரியபாலன்.

இ-ள். ஈரறம்-இரண்டறங்களும், வழங்கும்-வழங்கும், வண்ணத்து-முறைமையால், இயாவையும்-எல்லாத்தையும், துறந்ததன்மை-துறந்தவிதமே, பேர்-பெரும், அறம்-புண்ணியம், என்ப-என்றுசொல்ல, கேட்டேன்-கேள்விப்பட்டேன், பின்னை-பின்பு, அத்துறவின்-அந்தத்துறவைவிட, ஆங்கும்-மேற்பட்ட, ஓர்-ஒரு, அறம்-அறம், உளதேல்-இருந்தால், ஐயா-ஐயா, உரைக்குதி-சொல்லும், உரைத்த-சொன்ன, அன்ன-அந்த, சீர்-சிறந்த, அறம்-அறத்தை, விழைவேனென்றான்-விரும்புவேனென்றான், சேணுலகு-வானுலகிற்கு, உரிய-உரிய, பாலன்-பாலன். எ-று.

உரை. — இல்லறந் துறவறமென்னு மீரறம்வழங்கியமுறையினுள் ளெல்லாத்தையும் வெறுத்த துறவு பேரறமென்று சொல்லக்கேட்டேனாகிலு மிதுக்குமேலோரறம்வேறிருந்தாற் சொல்லையா, சொன்னநல்லறத்தைத் தேடுவேனென்றான் வானுலகிற்குரியகுணத்தையுடையபாலன். (௩௯)

ஈரறம்பிரிந்துநோக்கி வியம்பியதுறவின்மாட்சி
பேரறமாவதன்றிப் பிரிவிலாவிரண்டுந்தம்முள்
ளோரறமாகச்சேர்க்கி லுறுதியும்பயனுமோங்கத்
தேரறமாகுமென்றான் செழுந்துறைக்கேள்விமூத்தோன்.

இ-ள். ஈரறம்-அவ்விரண்டறங்களையும், பிரிந்து-பிரித்து, நோக்கில்-பார்க்கில், இயம்பிய-சொன்ன, துறவின்-துறவறத்தின், மாட்சி-பெருமையே, பேரறம்-பேரறம், ஆவதன்றி-ஆவதல்லாதே, இரண்டும்-இரண்டும், தம்முள்-தமக்குள்ளே, பிரிவிலா-பிரிவின்றி, ஓரறமாக-ஒரேயறமாக, சேர்க்கில்-சேர்த்தால், உறுதியும்-திடனும், பயனும்-பிரயோசனமும், ஓங்க-அதிகரிக்க, தேர்-தேர்ந்த, அறமாகுமென்றான்-அறமாகுமென்றான், செழும்-மாட்சிமையுள்ள, துறை-நூலின், கேள்வி-கல்வியுள்ள, மூத்தோன்-மூத்தோன். எ-று.

உரை.—அவ்விரண்டறங்களைப்பிரித்துத் தனியேபார்த்தா ற் றுறவறம்பெரிதே யிதுவுமன்றி யிரண்டுமொன்ருகக்கூட் டினு லதிகவுறுதியும்பயனுந்தரும்வேறற மாகுமென்று னுயர்ந்தவறிவுடைய மூத்தோன். (௪௰)

பாற்கலந்திட்டதெண்ணீர் பால்குன்றம்பண்புமில்
வாம் [பம்
மேற்கலந்தொளிர்ந்தவெய்யோன் வெயிலுமுன்னெரித்ததீ
போற்கலந்திசைத்தமற்றப் புண்ணியந்துறவுவாய்ந்த
சாற்கலந்தியல்லையேற்றுந் தகுதியோவென்றுன்பாலன்.

இ-ள். பால்-பாலோடு, கலந்திட்ட-கலந்த, தெண்-தெளிந்த, நீர்-நீரா ல், பால்-பாலானது, குன்றும்-கெடும், பண்புமில்லால்-தன்மையில்லாதாயினு ம், மேல்-ஆகாயத்தில், கலந்து-பொருந்தி, ஒளிர்ந்த-விளங்கிய, வெய்யோ ன்-சூரியனுடைய, வெயிலுமுன்-ஒளிக்குமுன், எரித்த-எரியச்செய்த, தீபம் போல்-தீபத்தைப்போல, கலந்து-சேர்ந்து, இசைத்த-கூட்டிய, மற்றப்புண் ணியம்-மற்றப்புண்ணியங்கள், துறவு-துறவறம், சால்கலந்து-மிகுந்த, வாய்ந்த-மாட்சிமையுள்ள, இயல்பை-குணத்தை, ஏற்றும்-அதிகப்படுத்தும், தகுதியோ-தகுதியுடையதோ, என்றுன்-என்றுன், பாலன்-பாலன். வி-று.

உரை.—பாலோடுகலந்ததெண்ணீர் பாலைக்கெடுக்குந்த ன்மையில்லாயினுஞ் சூரியனொளிக்குமுன் வீணுயெரித்ததீப ம்போலத் துறவல்லாதே மற்றப்புண்ணியங்களதுக்குள்ள்மா ட்சிமை யதிகமாகச்செய்யுமோவென்றுன்பாலன். (௪௧)

தெருட்டகுமுணர்விற்சான்றேன் சேடனைத்தழுவிச்
சொல்வா
னருட்டகுமுணர்வன்பூக்க மரும்பொறையீகைமற்ற
மருட்டகுமியல்தீர்மாட்சி மதியைமீன்சூழ்ந்ததேபோற்
பொருட்டகுநாட்டில்வைகும் பொலந்துறவணியுமன்றே.

இ-ள். தெருள்-தெளிவு, தகும்-இயலும், உணர்வின்-அறிவிற்சிறந்த, சா ன்றேன்-அறிஞன், சேடனை-பாலனை, தழுவி-தழுவி, சொல்வான்-சொல்வா ன், அருள்-அருளும், தகும்-ஏற்ற, உணர்வு-உணர்வும், அன்பு-அன்பும், ஊட க்கம்-ஊக்கமும், அரும்-அரிய, பொறை-பொறுமையும், ஈகை-ஈகையும், மரு ள்-மயக்கத்துக்கு, தகும்-உரிய, இயல்-குணம், தீர்-தவிர்ந்த, மற்ற-மற்ற, மாட்சி-மாட்சிமையும், மதியை-சந்திரனை, மீன்-நட்சத்திரங்கள், சூழ்ந்ததே

போல்-சூழ்ந்ததுபோலே, பொருள்-செல்வத்திற்கு, தகும்-உரிய, நாட்டில்-நாட்டில், வைகும்-இருக்கும், பொலம்-அழகிய, துறவு-துறவறத்தை, அணியும்-சூழும். எ-று. அன்று-ஓ-இரண்டுமசை.

உரை. — தேர்ந்தவறிவுடையமூத்தோன் பாலனை யின்பமாய்த்தழுவிச்சொல்வான்: 'சந்திரனைச்சூழ்ந்த நட்சத்திரங்கள்போல நாட்டிலிருந்துசெய்ததுறவறத்தையருளுமுணர்வுமன்புமூக்கமும் பொறுமையு மீகையு மற்றமயக்கந்தவிர்ந்தமாட்சிமையுஞ்சூழுமே. (இவையெல்லாம் பிறரைப்பற்றிச்செய்யப்படும் புண்ணியமாகையிற் கானத்தில் வழங்காதென்பதுகருத்து). (௪௨)

கான்வளர்தவத்தைக்கானிற் கண்டெளிதடைவார்மற்றோ
தான்வளர்தவத்தைக்கூட்டித் தமர்க்கெலா நகரிற்காட்டல் [ர்
வான்வளர்வலமைபூத்த மாண்பிதேயிதுநின்பாலாம் [ன்.
மீன்வளருணர்வோயென்றுமின்னெனமறைந்தான்சான்றோ

இ-ள். கான்-கானத்தில், வளர்-வளர்கின்ற, தவத்தை-தவத்தை, கானில்-கானத்தில், கண்டு-பார்த்து, எளிது-எளிதில், மற்றோர்-மற்றவர்கள், அடைவார்-அடைவார்கள், வளர்-வளர்ந்த, தவத்தை-அத்தவத்தை, தான்-தான், கூட்டி - கூட்டிவந்து, தமர்க்கெலாம் - தன்னினத்தாரெல்லாருக்கும், நகரில்-(தன்)நகரில், காட்டல்-காட்டலே, வான்-வானுலகிற்குரிய, வளர்-மிகுந்த, வலமை-வல்லமையும், பூத்த-முதிர்ந்த, மாண்பு-மாட்சிமையும், இதே-இதுவே, மீன்-மீனினும், வளர் - மிகவிளங்கின, உணர்வோய் - உணர்வுடையோனே, இது-இதுவே, நின்-உனது, பாலாம்-கடமையாம், என்று-என்று, மின்னென-மின்னலைப்போல, மறைந்தான்-மறைந்துபோனான், சான்றோன்-அறிஞன். எ-று.

உரை. — கானத்திலிருக்குந்தவத்தைக் கானத்திற்றேடி யெளிதாய் மற்றவரடைவார், அத்தவத்தைத் தானழைத்துத் தன்னூரிற்கூடவைத் தினத்தார்க்கெல்லாருக்குமதைக்காட்டலே வானுலகிற்குரியமாட்சிமையும் வல்லமையுமல்லோ? மீனினும்விளங்கின வுணர்வுடையபாலனே யிதுவே நீசெய்யவேண்டிய கருமமென்று மின்போல் மறைந்துபோனான் மூத்தோன். (௪௩)

ஊனுருக்காட்டிவந்த வும்பனென்றறிந்துபோற்றித்
தேனுருக்கோதையொத்தான் றிளைத்தவின்புருகிமூழ்கிக்
கூனுருப்பிறையுமெஞ்சக் கொழுங்கதிர்முகத்தில்வீசப்
பானுருச்சுமந்துநாறும் பவளநன்மதலையொத்தான்.

இ-ள். ஊன்-தசையுள்ள (சரீரத்தின்), உரு-ரூபத்தை, காட்டி-காட்டி, வந்த-வந்த(மூத்தோன்), உம்பனென்று-வானவனென்று, அறிந்து-அறிந்து, போற்றி-(கடவுளைத்)துதித்து, தேன்-தேனை, உரு-பொழியும், கோதை-பூமாலையை, ஒத்தான்-ஒத்த(பாலன்), திளைத்த-நிறைந்த, இன்பு-இன்பத்தில், உருகி-உருகி, மூழ்கி-மூழ்கி, கூன்-வளைந்த, உரு-உருவமுள்ள, பிறையும்-பிறையொளியும், எஞ்ச-குறைய, கொழும்-செழிய, கதிர்-கதிரை, முகத்தில்-முகத்திலே, வீச-வீசலால், பானு-சூரியனுடைய, உரு-உருவத்தை, சுமந்து-சுமந்து, நாறும்-தோன்றும், பவள-பவளத்தாற்செய்த, நல்-நல்ல, மதலை-தூணை, ஒத்தான்-ஒத்துநின்றான். எ-று.

உரை. — சீரரூபத்தைக்காட்டிவந்து பேசினமூத்தோன் வானவனென்றறிந்தபாலன் கடவுளைப்போற்றித் தேன்மலிந்தமாலைபோல நிறைந்தவின்பத்திலுருகிமூழ்கிநின்று வளைந்தபிறையினுமுகத்திற்கதிரைவீசலாற் சூரியனைச்சுமந்து விளங்கும்பவளத்தூண்போல வதிசெயப்பட்டுநின்றான்.

(௪௪)

நீதியுநெறியுஞ்சொன்ன நிலையெலாமுணர்ந்தபின்ன
ராதியுமந்தந்தானு மாயநின்கழலல்லாது
வீதியுமெனக்கொன்றுண்டோ வினையறுமிறையோயென்ன
வோதியும்விறலும்விம்ம வொளித்ததன்னகரஞ்சேர்ந்தான்.

இ-ள். நீதியும்-நீதியும், நெறியும்-முறையும், சொன்ன-சொன்ன, நிலையெலாம்-(மற்ற) ஒழுக்கமுறையெல்லாம், உணர்ந்தபின்னர்-ஆராய்ந்தபின்பு, ஆதியும்-எனக்காதியும், அந்தந்தானும்-முடிவும், ஆய-ஆகிய, நின்-உன், கழலல்லாது-பாதமல்லாது, எனக்கு-எனக்கு, வீதியும்-வழியும், ஒன்றுண்டோ-வேறொன்றுண்டோ, வினையறும்-தீவினைதீரும், இறையோய்-(என்) ஆண்டவனே, என்ன-என்று, ஓதியும்-உணர்வும், விறலும்-துணிவும், விம்ம-மிகுதியாக, ஒளித்த-(விட்டு) ஒளிந்த, தன்-தனது, நகரம்-நகரை, சேர்ந்தான்-சேர்ந்தான். எ-று.

உரை. — நீதிமுறையு மற்றநன்னெறிமுறையுமுரைத்துக் காட்டினநியாயங்களெல்லா மாராய்ந்தபின்பு சூசைசொல்லுவான்: எனக்காதியு முடிவுமாகிய வுன்பாதமல்லாதெனக்கு

வேறொரு வழியுமுண்டோ? வினைதீரு மென்றாண்டவனே
யென் றுணர்வுந் துணிவுமிகுதியாகிக் கானிற்போகாமற்றிரு
ம்பி விட்டதன்னகரைச்சேர்ந்தான். (௬௫)

கார்வளர்மின்னின்மின்னிக் கதிர்வளர்பசும்பொன்னி
வார்வளர்முரசமார்ப்ப மணிவளர்நகரம்வில்செய் [ஞ்சி
தேர்வளர்பருதியொத்தான் சென்றுபுக்குவப்பயாரும்
பார்வளர்திலகமொத்தான் பழிப்பறவிளங்கினானே.

இ-ள். கார்-மேகத்தில், வளர்-உண்டாகின்ற, மின்னின்-மின்னலினும், மின்னி-விளங்கி, கதிர்-ஒளி, வளர்-மிகுந்த, பசும்பொன்-பசும்பொன்னாலாகிய, இஞ்சி-மதிள் (சூழ), வார்-வார்கட்டி, வளர்-ஓங்கும், முரசம்-முரசு, ஆர்ப்ப-ஒலிக்க, மணிவளர்-மணிமிகுந்த, நகரம்-நகரில், வில்செய்-ஒளிசெய்யும், தேர்-தேரில், வளர்-எழும், பருதி-சூரியனை, ஒத்தான்-ஒத்தவிவன், சென்று-போய், புக்கு-புகுந்து, யாரும்-யாவரும், உவப்ப-சந்தோஷிக்க, பார்-பூவுலகிற்கு, வளர்-கதித்த, திலகமொத்தான்-(ஒரு) திலதம்போன்றவனாக, பழிப்பு-பழிப்பு, அற-நீங்க, விளங்கினான்-விளங்கினான். எ-று.

உரை.— மேகமின்னினுங் கதிரொளிவீசும்பொன்மதிள்சூழ வார்கட்டினமுரசொலிக்க விவன் சூரியனைப்போல மணியாலலங்கரித்த நகரைப்புகுந்து பூவுலகிற்கொரு திலதம்போல வெல்லாருமகிழப் பழிப்பின்றி விளங்கினானென்க. (௬௬)

## வேறு.

மீனார்வானம்பெற்றவனோதி விதிபெற்றுத்
தேனார்கானம்பெற்றதிருந்துந் தெளிவாறா
வூனார்காயம்பெற்றிவனுவ்வோ டுயர்மற்ற
வானார்மானம்பெற்றறமொன்றாய் வினைகின்றான்.

இ-ள். மீன்-நக்ஷத்திரங்கள், ஆர்-நிறைந்த, வானம்-வானத்தை, பெற்றவன்-அடைந்தவனாகிய(மூத்தோன்), ஓதி-சொல்லிய, விதி-முறைகளை, பெற்று-கொண்டு, தேன்-தேன், ஆர்-பொருந்திய, கானம்-கானத்தில், பெற்ற-பெற்ற, திருந்தும்-திருத்திய, தெளிவு-தெளிவு, ஆறா-மாறாமல், ஊன்-தசை, ஆர்-உள்ள, காயம்-சரீரத்தை, பெற்று-கொண்டு, இவன்-இவன், வான்-வானுலகத்திற்கு, ஆர்-பொருந்திய, மானம்-மரியாதையை, பெற்று-அடைந்து, உவ்வோடு-தவத்தோடு, உயர்-உயர்ந்த, மற்ற-மற்ற, அறம்-புண்ணியங்களை (யெல்லாம்), ஒன்றாய்-ஒன்றாக, வினைகின்றான்-செய்கின்றான். எ-று.

உரை. — வானுலகத்தோன் சொன்னவுணர்வுகளைக்கொ
ண்டு கானத்திற் றான்பெற்ற தெளிவுமாறுமற் சீரங்கொண்ட
வனாகியும் வானுலகிற்குரிய புண்ணியங்களையெல்லாந் தவத்
தோடொன்றுபடச்செய்தான். (சஎ)

வானங்கொண்டார்மாணருள்கொள்வா னவர்கொண்
ஞானங்கொண்டா னில்லவனில்லோர் நகைகொள்வான் [ற்
றானங்கொண்டான்மாசில தூயோன் றவங்கொண்டா
னீனங்கொண்டாருள்வலிகொள்வா னிவைகொண்டான்.

இ-ள். வானம்-வானத்தை, கொண்டார்-உடையோர், மாண்-மாட்சிமை
யுள்ள, அருள்-கிருபையை, கொள்வான்-கொள்ள, அவர்-அவ்வானவர், கொ
ண்ட-அடைந்த, ஞானம்-ஞானமே, கொண்டான் - அடைந்தான், இல்லவ
ன்-தானில்லாதவனாய், இல்லோர்-இல்லாதவரெல்லோரும், நகைகொள்வான்-
களிப்படைய, தானங்கொண்டான்-தானமேசெய்தான், மாசு-குற்றம், இல்-
இல்லாத, தூயோன்-பரிசுத்தன் (ஆயினும்), தவங்கொண்டான் - தவத்தைய
டைந்தான், ஈனம்-குறை, கொண்டார்-கொண்டவர்கள், உள்-உள்ளத்தில்,
வலி-துணிவு, கொள்வான்-அடையும்படி, இவைகொண்டான்-இவையெல்லா
ங்கொண்டான். எ-று.

உரை. — வானுடையோருள்ள மாட்சிமையடையவவர
டைந்த ஞானமேயடைந்தான், தானில்லாதவனா யில்லாதவ
ரெல்லாருமுவப்பத் தானமேசெய்தான், குற்றமொன்றில்லா
தவனாயினுந் தவமேசெய்தான், குறைகளைக்கொண்டவெல்
லாரு மிதைக்கண்டு தாமுந்துணியும்படி யிவையெல்லாங்
கொண்டானென்க. (சஅ)

புன்மைப்பட்டார்கொண்டவைவெஃகிப் பொருள்
கொண்ட
தன்மைப்பட்டார்யாவையுமுண்ணார் தரல்செய்யா
ரின்மைப்பட்டான்கூசையுழைத்தே யினிதுண்பா
னன்மைப்பட்டார்ந்தேற்குநருய்வா னனியீவான்.

இ-ள். புன்மைப்பட்டார்-ஈனப்பட்டவர், கொண்டவை-(தாங்)கொண்ட
பொருளை, வெஃகி-விரும்பி, பொருள்கொண்ட-பொருளானதுகொண்ட, தன்
மைப்பட்டார்-தன்மைப்பட்டவர்களாய், யாவையும்-அவையாவையும், உண்ணா
ர்-(தாமும்)உண்ணார், தரல்செய்யார்-(பிறருக்கும்)ஈயார், இன்மைப்பட்டான்-
வெறுமையுள்ளவனாகிய, கூசை-கூசையோவென்றால், உழைத்தே-(தானே)உ
ழைத்து, இனிது-இன்பமாக, உண்பான்-உண்பான், நன்மைப்பட்டு-நன்மை
யையடைந்து, ஆர்ந்து-நிறைந்து, ஏற்குநர்-இரப்போர், உய்வான்-பிழைக்
கும்பொருட்டு, நனி-மிகவும், ஈவான்-கொடுப்பான். எ-று.

உரை.— நீசர்தாங்கொண்ட பொருளின்மேலாசைவைத்துப் பொருள்கொண்டதன்மையினைத்தாமுமுண்ணார், பிறர்க்குமீயார், வெறுமையுள்ளகுசைபோலவென்றாற் றானுழைத்துத் தத்தநன்மையினானிறைத் திரப்போரினிதாயுண்டுவாழக்கொடுப்பானெனக. (௪௯)

வேய்ந்தார்ந்தொன்றும்வான்பொருள்விஞ்ச விழை
வோடீட்டான்
ஈய்ந்தாலொன்றேகோடிபயக்கு மெனிலன்பால்
வாய்ந்தானொன்றுந்தன்வறுமைக்கே மலிவீக
லாய்ந்தாலொன்றும்வான்புகழ்கூற லரிதன்றே.

இ-ள். வேய்ந்து-அலங்கரித்து, ஆர்ந்து-நிறைந்து, ஒன்றும்-பொருந்தும், வான்-பெருமைபொருந்திய, பொருள்-பொருள், விஞ்ச-மிக, விழைவோடு-ஆசையோடு, ஒன்று-ஒன்று, ஈய்ந்தால் - அளித்தால், ஒன்றே - ஒன்றே, கோடிபயக்கும்-கோடிதரும், எனில்-என்றால், அன்பால்-அன்பினால், வாய்ந்தான்-மாட்சிமையுடையோன்(ஆகியகுசை), ஒன்றும்-மனம்பொருந்திய, தன்-தனது, வறுமைக்கே-எளிமைக்கே, மலிவு-நிறைவாக, ஈகல்-கொடுக்கலை, ஆய்ந்தால்-ஆராய்ந்துபார்த்தால், ஒன்றும்-இசையும், வான்-பெரிய, புகழ்-அதிகளை, கூறல்-சொல்லல், அரிது-அரிது. எ-று. அன்று-என்பது-இசைநிறையும், ஓ-என்பது-ஈற்றசையுமாயின.

உரை.— மலியவடைந்த பொருளின்மிஞ்சினதை யாசையோடிரப்போர்க்களித்தாலொன்றேகோடியாகுமென்றால் அன்பின்பெருமையுடையோன்குசை தான்வறுமைகொண்டிருக்கவு நிறையக்கொடுக்குந்தன்மை யாராய்ந்துபார்த்தாலதற்குரியதுதிகளையுரைப்பதரிதென்க. (௫௰)

மெய்யாற்குன்றுதொண்டவமாறு வினையாண்மை
கையாற்குன்றுவண்கொடையோடுட் களிகூர்ந்து
பொய்யாற்குன்றுநெஞ்சருவல்லோன் புணர்வாக்க
மையாற்குன்றுவெம்வனமேகா மனைநின்றான்.

இ-ள். பொய்யால்-பொய்யினால், குன்று-கெடாத, நெஞ்சு-நெஞ்சையுடைய, அரு-அரிய, வல்லோன்-வல்லமையுடையகுசை, உள்-மனத்தில், களிகூர்ந்து-சந்தோஷித்து, கையால் - கையினால்(கொடுக்கும்), குன்று - குறையாத, வண்-மிகுதியான, கொடையோடு-தருமங்களோடு, மெய்யால் - உடலினால், குன்றாது - குறையாமல், ஒண்-நல்ல, தவ-தவத்தினது, மாறு-மாறாத, வினை-செய்கையின், ஆண்மை-ஆண்மையை, புணர்வாக்க-கூட்ட, மையாற்குன்று - இருள்குறையாத, வெம் - வெப்பமுள்ள, வனம் - கானகத்தில், ஏகா - போகாமல், மனை-வீட்டில், நின்றான்-இருந்து(தவஞ்செய்தான்). எ-று.

உரை.—பொய்கொள்ளாதநெஞ்சினன்குசை குன்றயாத கைத்தருமங்களோடு மோயாதநற்றவத்தி னுண்மையைக்கூட்ட விருண்டகானத்திற்போகாம லூரிலேநின்று தவஞ்செய்தானென்க. (௫௧)

காக்கா துள்ளம்மைம்பொறிகாட்டும் வழிநிற்பப்
போக்கா துள்ளம்முய்யமெஞ்ஞானம் புரியாண்மை
யாக்கா துள்ளயாவுமகன்றே யழிவாக்கம்
நோக்கா துள்ளதேவருணோக்கி நுதற்கிற்பான்.

இ-ள். காக்கா து-காவலின்றி, உள்ளம்-மனதை, ஐம்பொறி-(மெய் வாய்கண்மூக்குசெவியென்னும்)ஐம்பொறிகள், காட்டும்-காட்டுகின்ற,வழி-வழியிலே, நிற்ப-நிற்க, போக்கா து-போகவொட்டாமல், உள்ளம்-உயிர், உய்ய-பிழைக்க, மெஞ்ஞானம்-மெஞ்ஞானம், புரி-செய்கின்ற,ஆண்மை-ஆண்மையை, ஆக்கா து-செய்யாமல், உள்ளயாவும்-இருக்கின்றவெல்லாம், அகன்றே-(விட்டு)நீங்கியே, அழிவு-அழிவுள்ள, ஆக்கம்-செல்வங்களை, நோக்கா து-பார்க்காமல், உள்ள-கொண்ட, தேவருள் - தேவருளை, நோக்கி-பார்த்து, நுதற்கிற்பான்-நினைப்பான். எ-று.

உரை. — காவலில்லாமல் மனமே யைம்பொறிவழியாகப்போகவொட்டாம லுயிர்வாழ மெஞ்ஞானத்தினுண்மைக்குதவாததெல்லா நீக்கி யழிந்துபோஞ்செல்வங்களைப்பாராமற் றேவருளொன்றையேவிரும்புவானிவனென்க. (௫௨)

சொல்லுஞ்செல்லாக்கானுழையாத்தண் டுளிதூற்றுஞ்
செல்லுஞ்செல்லாத்தீயெரிகற்றை திளைவேந்த
னெல்லுஞ்செல்லாக்கானகுநற்கா னெனவுள்ளம்
புல்லும்பொல்லாங்கீர்த்துபுக்கைம் பொறிகாத்தான்.

இ-ள். சொல்லும்-(மனிதர்)சொல்லும், செல்லா-செல்லாத, கான்-வனத்தில், நுழையா-போகாமல், தண்-குளிர்ச்சிபொருந்திய, துளி-மழைத்துளி, தூற்றும்-பெய்யும், செல்லும்-மேகமும், செல்லா-போகாமல், தீ - நெருப்பாய், எரி-எரிந்து, கற்றை-கிரணங்கள், திளை-நிறைந்த, வேந்தன்-சூரியனது, எல்லும்-ஒளியும், செல்லா - நுழையா, கான்-வனத்தை, நகு[illegible]ழிக்கும், நல்-நல்ல, கானென-வனமாக, உள்ளம்-மனதில், புக்கு-புகுந்து, புல்லும் - சேரும், பொல்லாங்கு-தின்மையை, ஈர்த்து-அறுத்து, ஐம்பொறி-ஐம்பொறிகளையும், காத்தான்-காத்தான். எ-று.

உரை.— மனிதர்சொல் செல்லாதவனத்திற்போகாமல் மழைத்துளியில்லாமல் நெருப்பாயெரிந்து சூரியன்கதிருஞ்

செல்லற்கஞ்சும்வனத்திலு நல்லவனமாகத் தின்மையெல்லா நீக்கிய தன்மனத்துள்ளே புகுந் தைம்பொறிகளைக் காத்தா னென்க. (௫௫)

சுட்டாகுலமுற்றோர்வனமுற்றான் றுகடீரா
முட்டாசையையுற்றெங்கணுமுற்றால் முனிதானோ
பட்டாசையிரண்டீர்த்துளமோங்கப் பலயாவும்
விட்டாயுளதோராண்டகைமேவி வினைதீர்த்தான்.

இ-ள். சுட்டு-சுட்டு, ஆகுலம்-துன்பம், உற்று-பொருந்திய, ஓர்-ஒரு, வனம்-வனத்தில், உற்றான்-புகுந்தோன், துகள்-குற்றங்கள், தீரா-தீரமல், முட்டு-நிறைந்த, ஆசையை-ஆசையை, உற்று-கொண்டு, எங்கணும்-எங்கும், உற்றால்-திரிந்தால், முனிதானோ-(அவன்) முனியோ, பட்டு-உண்டாகிய, ஆசையிரண்டு-இரண்டாசையும், ஈர்த்து-அறுத்து, உளம்-மனத்தில், ஓங்க-ஓங்கி, பலயாவும்-மற்றயாவையும், விட்டு-விட்டு, ஆய்-தேர்ந்து, உளது-இருக்கின்ற, ஓர்-ஏக, ஆண்டகை-ஆண்டவனை, மேவி-விரும்பி, வினைதீர்த்தான்-தீவினையெல்லாந்தீர்த்தான். எ-று.

உரை.—துன்பஞ்செய்துசுடும் வனத்திற்புகுந்தோன் குற்றங்களைவிடாம லாசைகொண்டு நினைவின்றெலங்குந்திரிந்தா லவன்முனியோ? இவனேவென்றால் நானென்னதென்னுமிரண்டாசையுமறுத்து மனத்திலோங்கி மற்றயாவையும்விட்டாண்டவனைமாத்திரமேதேடி வினையெல்லாந்தீர்த்தானென்க. (௫௬)

மைப்பட்டிளகுஞ்சேற்றிலுலாவிண் மணிமாவி
செய்ப்பட்டொளிருஞ்செங்கதிர்மாசாய்ச் சிதைவாமோ
பொய்ப்பட்டயரும்புற்பொருண்மேலைம் பொறிவிட்டால்
மெய்ப்பட்டுயரின்றனுளமாழ்கா வினைகொள்ளான்.

இ-ள். மைப்பட்டு-கறுத்து, இளகும்-இளகும், சேற்றில்-சேற்றிடத்து, உலா-உலாவிய, விண்-ஆகாயத்தின், மணி-அழகாகிய, மாவி-சூரியன், செய்ப்பட்டு-சிவந்து, ஒளிரும்-விளங்கிவீசும், செங்கதிர்-செங்கதிர், மாசாய்-அழுக்காகி, சிதைவாமோ-கெடுமோ (கெடாததுபோலே), பொய்ப்பட்டு-பொய்யாகி, அயரும்-கெடும், புல்-அற்ப, பொருண்மேல்-பொருளின்மேலே, ஐம்பொறி-ஐம்பொறிகளை, விட்டால்-விட்டாலும், மெய்ப்பட்டு-மெய்கொண்டு, உயர்-உயர்ந்த, இன்றன்-இனிமையுள்ளவனாகியகுசை, உளம்-மனம், மாழ்கா-மயங்காமல், வினை-தீவினையை, கொள்ளான்-கொள்ளான். எ-று.

உரை. — கருஞ்சேற்றிடத்திற் சூரியன் செங்கதிர் பட்டாலுஞ் சேறுகாத்துபோலப் பொய்யானபொருள்மேலேயைம்பொறிபடவிட்டாலு மெய்கொண்டுயர்ந்தகுசை மனமயக்கமின்றி வினைகொள்ளானென்க. (௫௫)

போராறென்னும்பூவிடைமாக்கட் புரையெல்லாஞ்
சேராறென்னுமின்பமெலாந்தீர் தெளிவெய்தி
யீராறென்னும்மாண்டுளனென்றும் மினிதின்னு
ஊராறென்னும்மன்றல்செயேனென் றுரனுற்றான்.

இ-ள். போர்-(ஞானப்) போரின், ஆறென்னும்-இடமென்னும், பூவிடை-பூமியினிடத்தில், மாக்கள்-மனிதருடைய, புரையெல்லாம்-குற்றங்களெல்லாம், சேர்-சேரும், ஆறென்னும்-வழியென்னும், இன்பமெலாம்-இன்பங்களெல்லாம், தீர்-தீர, தெளிவு-தெளிவை, எய்தி-அடைந்து, ஈராறென்னும் - பன்னிரண்டென்னும், ஆண்டுளன்-வயதுள்ளவனாகி, இனிது-இன்பத்தோடு, இன்னு-தீமை, ஊர்-விளையும், ஆறென்னும்-வழியென்னும், மன்றல்-கலியாணத்தை, என்றும்-எப்போதும், செயேனென்று-செய்யேனென்று, உரன்-உறுதியை, உற்றான்-கொண்டான் (குசை). எ-று.

உரை. — ஞானப்போர்க்களமாகிய பூமியிடத்தில் மனிதர்பாவங்கொள்ளும் வழியாகிய வின்பங்களெல்லாத்தையு நீக்கத் தெளிவுணர்வடைந்து பன்னிருவயதாகி யின்பத்தோடு தின்மைவிளைய வழியாகியகலியாண மெக்காலத்துஞ்செய் யேனென் றுறுதிகொண்டான் குசையென்க. (௫௬)

## வேறு.

உடல்கிடந்துட லங்கடந்தானெனு
மிடல்கிடந்துயர் வீடுளவின்பது
கடல்கிடந்து கனிந்தகளிப்புறி
மடல்கிடந்தகள் வார்மலர்மானுவான்.

இ-ள். உடல்-உடல், கிடந்து-இருந்தும், உடலம்-உடலை, கடந்தானெனு-விட்டவனைப்போலாகி, மிடல்கிடந்து-வல்லமைகொண்டு, உயர்-உயர்ந்த, வீடுள-(வான்) வீட்டிலுள்ள, இன்பது-இன்பத்தின், கடல்கிடந்து - கடலிற்கிடந்து, கனிந்த-இனிய, களிப்புறி-சந்தோஷமுற்று, மடல்கிடந்த-இதழினின்ற, கள்-தேனை, வார்-பொழியும், மலர்-மலரை, மானுவான்-போலிருப்பவன் (குசை). எ-று.

உரை.—உடலிருந்தாலு முடலில்லாதவனைப்போலாகி வல்லமைகொண் டுயர்ந்தவான்வீட்டின்பக்கலிற்கிடந்து களிகூர்ந்து மதுப்பொழியப்பட்ட மலர்போலிருப்பன் குசையென்க. (௫எ)

கலையுற் றுள்ளிரு ணீங்கியகாட்சியா
னலையுற் றிப்பொரு ளோடலையா துள
நிலையுற் றெந்தை நெருங்கடிசேர்ந்துயர்
மலையுற் றானென மாறுபடானரோ.

இ-ள். கலை-கல்வியை, உற்று-அடைந்து, உள்ளிருள்-மனவிருள், நீங்கிய-நீங்கிய, காட்சியான்-காட்சியோன், அலையுற்று-அலைந்து (திரியும்), இப்பொருளோடு-இவ்வுலகப்பொருட்களோடு, அலையாது-அலையாமல், உளம்-உள்ளம், நிலையுற்று-நிலைபெற்று, எந்தை-ஆண்டவனுடைய, அடி-பாதத்தை, நெருங்கு-நெருங்க, சேர்ந்து-சேர்ந்து, உயர்-உயர்ந்த, மலையுற்றானென-மலைநிலையையடைந்தவனைப்போல, மாறுபடான்-மாறுபடாமலிருப்பன். எ-று. அரோ-அசை.

உரை.—அடைந்தவுணர்வினு ளிருளில்லாதகாட்சியோ னலைந்துதிரியு மிப்பொருள்களோ டலையாம லுள்ளேநிலைபெற் றாண்டவன்பாதத்தை நெருங்கச்சேர்ந் துயர்ந்தமலைநிலையாகவடைந்தவனைப்போல் மாறுபடாமலிருப்பனென்க. (௫அ)

தேக்கிப்பாரி நிறைத்துளயாவையுந்
தூக்கிப்பார்த்தனன் றோன்றியதீதெலாம்
போக்கிப்பாய்பயன் பூத்துக்கலந்தநீர்
நீக்கிப்பாலுணு மோதிமநேருவான்.

இ-ள். தேக்கு-இனிப்புள்ள, இப்பாரில்-இப்பூவுலகில், நிறைந்து-நிறைந்து, உள-உள்ள, யாவையும்-எல்லாத்தையும், தூக்கிப்பார்த்தனன்-தூக்கிப்பார்த்து, தோன்றிய-தோன்றின, தீதெலாம்-தின்மையெல்லாம், போக்கி-நீக்கி, பாய்-பாவிய, பயன்-பலன், பூத்து-பயத்துக்கொண்டு, கலந்த-கலந்த, நீர்-நீரை, நீக்கி-விலக்கி, பால்-பாலை, உணும்-உண்ணும், ஓதிமம்-அன்னத்தை, நேருவான்-போலுவான். எ-று.

உரை.—பூவுலகினிறைந் துள்ளதெல்லாந்தூக்கிப் பார்த்துத் தோன்றினதின்மையெல்லா நீக்கி யுள்ளநன்மைகொண்டிருநீர் கலந்ததண்ணீரைவிட்டுப் பாலையுண்ணு மன்னம்போலுவானென்க. (௫௯)

மீயிருட்கொணர் மேகமிடைந்தெனப்
போயிருட்கொண ரைம்பொறிபோக்கிலான்
றூயருட்கொணர் சூட்சிதெளிந்துளம்
பாயருட்கொணர் பற்றுதலெய்தினன்.

இ-ள். மீ-வானத்தில், இருள்-இருளை, கொணர்-கொண்டுவரும், மேகம்-மேகம், மிடைந்தென-நெருங்கியதுபோல, போய்-பேய், இருள்-இருளை, கொணர்-(மனதில்) கொண்டுவரும், ஐம்பொறி-ஐம்பொறிகளை, போக்கிலான்-போகவிடாதவனாய், தூய்-தூய, அருள்-அருளை, கொணர்-கொண்டுவரும், சூட்சி-சூட்சியினால், தெளிந்து-தெளிந்து, உளம்-உள்ளத்தில், பாய்-பாய்கின்ற, அருள்-கிருபையை, கொணர்-கொண்டுவரும், பற்றுதல்-ஆசையை, எய்தினன்-கொண்டான். எ-று.

உரை.—வானத்திலிருளைச்செய்யு மேகம்போலப்போயிருளைமனதிற்கொண்டுவரு மைம்பொறிகள்போகவொட்டாமற் றூயவருளினாற் றெளிந்தவுணர்வினா லுட் டயையினாசை கொண்டானென்க. (௬௰)

கோதிலோர்முறை கொண்டுநடந்தபின்
னேதிலோர்முறை யாருநடந்தெழ
நீதியோர்முறை நேர்நெறியோதுவான்
வேதியோர்முறை விஞ்சியுமாட்சியான்.

இ-ன். கோது-குறை, இல்-இல்லாத, ஓர்-ஒரு, முறைகொண்டு-முறையோடு, நடந்தபின்-தானடந்தபின்பு, ஏது-குற்றம், இல்-இல்லாமல், ஓர்-ஒரே, முறை-முறையில், யாரும்-எல்லாரும், நடந்தெழ-நடந்தோங்க, ஓர்-ஒப்பற்ற, நீதி-நீதியுடைய, முறை-முறையின், நேர்நெறி-செவ்வழியை, ஓதுவான்-சொல்விக்காட்டுவான், வேதியோர்-குருக்களுடைய, முறை-முறையினும், விஞ்சிய-மிகுந்த, மாட்சியான்-மாட்சிமையுடையான். எ-று.

உரை.—குறையில்லாதமுறையோடு தானடந்தபின்பு குற்றமில்லாம லெல்லாருநடக்கும்படி நீதிநன்முறைகளைச்சொல்விக்காட்டுவான் குருக்களினு முயர்ந்தமாட்சிமையுண்டயானென்க. (௬௧)

முனிப்பழித்த விளையமூத்தோனெனப்
பனிபழித்த பயன்படயாவருங்
கனிபழித்த கனிந்தநல்வீணைதன்
னெனிபழித்தசொற் சொல்லியவாய்மையான்,

இ-ள். முனி-முனிகளை, பழித்த-வென்ற, இளைய-பால, மூத்தோனென-மூத்தோனைப்போல, யாவரும்-யாரும், பனி - குளிர்ச்சியை, பழித்த - இகழ்ந்த, பயன்பட - பயனடைய, கனி-கனியை, பழித்த-பழித்த, கனிந்த-இனிய, நல்-நல்ல, வீணை தன்-வீணையின், தொனி-ஓசையை, பழித்த-இகழ்ந்த, சொல்-சொல்லை, சொல்லிய-பேசிய, வாய்மையான்-வாக்குடையான். எ-று.

உரை. — முனிகளை வென்றபாலமூத்தோ னியாவருங் குளிர்ந்தப்பயன்பட வினியநல்வீணையோசையினு மினிதாகிய சொல்லுடையானென்க. (௬௨)

பொருள்கடிந்த புலன்களடக்கலால்
மருள்கடிந்த மனந்தெளிகாட்சியா
னருள்கடிந்த வசடரைநோக்கலோ
டிருள்கடிந்த விரக்கமுற்றேங்குவான்.

இ-ள். பொருள்-பொருளாசையை, கடிந்த-அறுத்த, புலன்கள்-ஐம்பொறிகளை, அடக்கலால்-அடக்கினதினால், மருள்-மயக்கத்தை, கடிந்த-அறுத்து, மனம்-மனதில், தெளி-தெளிந்த, காட்சியான் - காட்சியையுடையோன், அருள்-அருள், கடிந்த-அற்ற, அசடரை-தீயோரை, நோக்கலோடு-காண்பதால், இருள்-இருளை, கடிந்த-நீக்கிய, இரக்கமுற்று-இரக்கமடைந்து, ஏங்குவான்-ஏங்குவான். எ-று.

உரை. — பொருளின்பிற்செல்லாமலைம்பொறிகளையடக்கினதினால் மயங்காதமனத்திற் றெளிந்தகாட்சியுடையோ னருளில்லாத தீயோரைக்கண்டுதெளிந் திரக்கமா யேங்குவானென்க. (௬௩)

தவர்க்குமூங்கரி தாந்தயைதாங்குளத்
துவர்க்கும்வேலை யுடுத்தனபாருறை
யெவர்க்குநன்றி யியற்றியின்றுசெயு
மவர்க்கும்வாய்ந்த வறத்துணையாயினன்.

இ-ள். தவர்க்கும்-தவத்தோருக்கும், ஊங்கு-மிகவும், அரிதாம்-அரிதாகும், தயை-தயையை, தாங்கு-தரிக்கும், உளத்து-மனத்தோடு, உவர்க்கும்-உவர்க்கும், வேலை-கடலை, உடுத்தன-(ஆடையாகத்) தரித்த, பார்-உலகில், உறை-இருக்கும், எவர்க்கும்-யாவர்க்கும், நன்றி-நன்மையை, இயற்றி-செய்து, இன்று-(தனக்குத்) துன்பத்தை, செயுமவர்க்கும்-செய்பவருக்கும், வாய்ந்த-பொருந்திய, அறத்துணை-அறத்துணை, ஆயினன்-ஆனான். எ-று.

உரை. — தவத்தோருமடைதற்கரியதயை தானடைந்தே யுவர்க்கடல்சூழ்ந்த வுலகுள்ளயாவர்க்கு நன்மைசெய்து தனக்குப்பொல்லாப்புசெய்தவர்க்கும் நல்லறத்துணையானென்க. (௬௪)

அன்புவாய்ந்த வுயிர்நிலையஃதிலார்க்
கென்புதோ லுடல் போர்த்ததென்றன்புறை
யின்புதோய்ந்த நிலையெனத்தானிவண்
டுன்புகாய்ந்த வுயிர்த்துணையாயினான்.

இ-ள். அன்பு-அன்புதானே, வாய்ந்த-பொருந்திய, உயிர்நிலை-உயிர்நிலையாம், அஃதிலார்க்கு-அதில்லாதவர்க்கு, உடல்-உடலே(உயிர்நிலையாகாமல்), தோல்-தோல், போர்த்தது-மூடினதாகிய, என்பு-எலும்பே(யாகும்), என்று-என்று, தான்-தான்(எவர்க்கும்), அன்பு-அன்பு, உறை-பொருந்திய, இன்பு-இன்பம், தோய்ந்த-கலந்த, நிலையென-நிலைபோலத்(தோன்றி), இவண்-இவ்வுலகில், துன்பு-துன்பங்களினால், காய்ந்த-காய்ந்த, உயிர்-உயிர்களுக்கு, துணையாயினான்-துணையானான். எ-று.

உரை.—அன்புதானே யுயிர்நிலையாகையி லதில்லாதவருடலேயுயிர்நிலையென்றுசொலலத்தகாமற்றோலால்மூடின வெலும்பென்னத்தகுமென்று தானன்பினா லெவர்க்குமின்பநிலைபோலத்தோன்றித் துன்பங்களினாற் காய்ந்தவுயிர்க்கெல்லா மினியதுணையானான். (௬௫)

பொறையதாண்மையி னோடெரிபூணணா
மறையதாட்சி யணிந்தவளன்றகும்
நிறையமாட்சி நிகர்ப்பதுநூல்வழி
யறையவாய்மைய ரெய்துபவாண்மையோ.

இ-ள். பொறையது-பொறுமையின், ஆண்மையினோடு-திடனோடு, மறையது-வேதத்தின், ஆட்சி-உரிமையும், எரி-விளங்குகின்ற, பூணணா-ஆபரணமாக, அணிந்த-அணிந்த, வளன்-வளனுக்கு, தகும்-உரிய, நிறைய-நிறைந்த, மாட்சி-மாட்சிமை, நிகர்ப்பது-சரியாகவாழ்த்துவது, நூல்வழி-நூலின்வழியாய், அறைய-சொல்ல, வாய்மையர்-வல்லவரும், எய்துப-அடையும், ஆண்மையோ-திறமோ. எ-று.

உரை.—பொறுமையினாண்மையும் வேதத்தினுரிமையுமாபரணமாக வணிந்தவளனே கொண்ட நிறைந்த மாட்சிமை சரியாய்வாழ்த்த நூலோருஞ்சொல்லுந் தன்மையோவென்க. (௬௬)

பாலமாட்சிப்படல முற்றும்.

ஆகப்படலம்-௪-௲-விருத்தம்-

௨௱௯௰௫.

ஐந்தாவது.

# திருமணப்படலம்.

## வேறு.

இவ்வருங்குணத் திரங்கியவினியவன்புடைமை
வவ்வருங்குணத் தவனிகொள்மடிவினை நீக்கிச்
செவ்வருங்குணத் திறையவன்சென்றதைத்தீர்ப்ப
வவ்வருங்குணத் தவன்விருப்பெய்திநொந்தயர்வான்.

உரை.—இத்தன்மையாயிரங்கின வன்புடையகுணத்தோ ன்குலைச புவகங்கொண்ட கேடுகள்விலகி நீதிநற்குணத்துய ர்ந்த கடவுள்மனிதனாய்வந்து தீர்க்கவேணுமென்று கொண் டவாசையினானொந்து துயரங்கொள்வானென்க. (க)

உலகுண்டாயகால் மனுக்குலத்தலையவனுண்ட
விலகுண்டாயகாய் விளைத்ததீதுயிரெலாஞ்சிதைப்ப
வலகுண்டாயிவா தடும்விடங்குடித்தவாய்வழியா
விலகுண்டாயின வெலாவுறப்புலவெனவுலவாம்.

உரை.—உலகம்படைப்புண்டநாளையில் மனுக்குலத்துத் தலைவனாகிய வாதித்தகப்பனுண்ட விலக்கப்பட்டகனியால் வி ளைத்ததின்மையுயிர்களெல்லாங்கெடுக்க வாய்குடித்தவிஷ மு றுப்புகளிலெங்கு முலாவினதுபோலப் படராநின்றதென்க. (உ)

ஆடித்தநஞ்சினாற் குருதிகண்டாலெனப்பாவம்
த்தநெஞ்சினால் முதிர்செயிர்க்குலத்திருண்மொய்ப்பப்
தவிஞ்சையாற் பணித்தமெய்ப்பிறைவனைப்பழித்துப்
த்தவஞ்சனாற் பெருகியதெங்களுமருளே.

உரை.—குடித்தநஞ்சினாற் கண்மயங்கியிருண்டதுபோலப் பாவநஞ்சினாலு மனத்திலிருளேமூடி முன்படித்த வேதநூலாலறிந்துவணங்கின மெய்யானகடவுளைவிட்டு வந்தவஞ்சனைகளினா லெங்கு மயக்கம்பெருகிப்படர்ந்ததென்க. (௩)

பண்ணருஞ்சுடர்ப் பருதிபோய்ப்பரயிருணீக்க
வெண்ணருஞ்சுட ரேற்றுவரிணையெனமாக்க
ளெண்ணருஞ்சுட ரோரிறையவனொளித்தெவையும்
மண்ணருஞ்சுடர் மானுமென் றிறைஞ்சவுள்ளினரால்.

உரை.—அரியகதிருள்ள சூரியனத்தமித்துப்போய்ப் படர்ந்தவிருளைநீக்க வெண்ணப்படாத விளக்குகளையேற்றுவார் போல மனிதரும் பரஞ்சோதியாகிய வொன்றானமெய்க்கடவுளை மறந்தபின்னர் நல்லசுடரொன்று மற்றதெல்லாங்கடவுளாகப் பாவித்தாரென்க. (௪)

மறமொழித்திலர் மறைமுறையொழித்தனரிறைவன்
றிறமொழித்தனர் செய்முறையொழித்தனர்சிறந்த
வறமொழித்தன ரறிவொழித்தனர்நலம்யாவும்
புறமொழித்தனர் புணருயிரொழித்தனர்சிதடர்.

உரை.—பாவத்தைவிடாமல் வேதமுறையு மாண்டவன் பலமுஞ் செய்யவேண்டியமுறைகளு நல்லறங்களுமுணர்ந்தவறிவுகளு மற்றநன்மைகளோ டுயிருமிழந்தார்பாவிகளென்க. (௫)

எஞ்சுகப்பய னியற்றியவறங்களேயின்னா
விஞ்சுகப்பகை வினைசெயும்பழம்பழிப்பேயந்
நஞ்சுகப்பகு வாயரவுருக்கொட்டந்நாளி
லஞ்சுகப்புவி யனைத்துமேதோன்றியதரால்.

உரை.—நன்மைபயக்கு நல்லறங்கள்குறையவும் பாவங்கள்மிஞ்சவும் பகைத்துவினைசெய்யும் பழம்பழிகொண்ட பசாசுகளெங்கு மந்நஞ்சுவிடவேணுமென்று பரும்பாம்புருவங்கொண் டந்நாளிலே யுலகமெல்லா மஞ்சக்காண்பித்ததென்க. (௬)

அன்னநஞ்சுறும் பாவமேபரந்ததின்தனை
யுன்னினஞ்சுறு முன்னியவுன்னமுமதனைப்
பன்னினஞ்சுறும் பன்னியவாயதுமதனைத்
துன்னினஞ்சுறத் துன்னியதிசையெலாமன்றே.

உரை.—அந்தநஞ்சோடுபரந்த பாவங்களினா லதைநினைத்தால் நினைத்தமனநஞ்சாகவு மதைச்சொன்னாற் சொன்னவாய்நஞ்சாகவு மதைக்கிட்டினா லடுத்ததிசையெல்லா நஞ்சாகவும் பாவநஞ்சுபடர்ந்ததென்க. (௭)

நிழலினஞ்சுறும் வெய்யிலினஞ்சுறுநெடுநீர்க்
கழனிநஞ்சுறுங் கடிமலர்நஞ்சுறும்பொலிந்த
பொழிலினஞ்சுறும் புணர்கனிநஞ்சுறுமடவா
ரெழிலினஞ்சுறுங் காண்டலாவின்னுயிரிறக்கும்.

உரை.—நிழலும் வெயிலும் வயலும் வாசமலருமுயர்ந்தசோலையு மதிலுள்ளகனிகளு மாதரழகு மிவையெல்லா நஞ்சாகி நல்லுயிர்கெடப் பாவத்துக்கேதுவாகிய காரணங்களாயினவென்க. (௮)

காருநஞ்செனக் கனலியுநஞ்செனமாரி
சோருநஞ்செனத் துறும்வளிநஞ்செனச்சுடர்ப்பூ
ணாருநஞ்சென வாடைநஞ்சுணவுநஞ்சமிர்த
நீருநஞ்சென நேமிகொள்ளவையுநஞ்செனவே.

உரை.—மேகங்களு நெருப்பும்பெய்யுந்துளியுமடிக்குங் காற்றும் விளங்குமணிகளு நல்லாடைகளு மருந்துமுணவுகளு மமுதாகியதண்ணீரு மிவைமுத லுலகுள்ளதெல்லாம் பாவத்துக்குதவுதலா னஞ்சாயினவென்க. (௯)

நஞ்செஞ்சாமையி னடுநெறிதவிர்தலோடின்று
விஞ்செஞ்சாமையின் சிறுமைநோய்துயர்பிணியிடைந்து
நெஞ்செஞ்சாமலு நெடியதோர்நடுக்குறுநிற்ப
மஞ்செஞ்சாமலு மருண்டிருண்டழிந்தனவுலகம்

உரை.—இந்தநஞ்சுகுறையாததினால் நீதிநெறியிற் றவிர்ந்துபோய்ப் பாவமேமிஞ்சிக் குறையாமற் சிறுமையுநோயுந் துயரும்பிணிகளுநிறைந்து நெஞ்சோயாமற்பயந்து நடுங்கவிருள்மாறாமல் மயங்கியழிந்ததேயுலகமெல்லாமென்க. (௰)

மீன்மறந்தன மேதினிவிளக்கலும்வெய்ய
வான்மறந்தன மாரியைவழங்கலுமதுரத்
தேன்மறந்தன செழுமலர்பெய்தலும்வேத
நூன்மறந்தன நுதலருந்தீமைசெய்தமையால்.

உரை.—முன்னேபோலச் சந்திரசூரியன்மீன்களும் பூமியைவிளக்காமலும் வானமழைபெய்யாமலு மலர்களினியதேனைப்பொழியாமலுந் தந்தொழில்மறந்ததுபோல நின்றனவாம் வேதநன்னூலை மறந்தமனிதர் பாவஞ்செய்ததினாலென்க. (௰௧)

அறமடிந்தன வடைந்தனதீயவையனைத்தும்
மறமிடைந்தன மறந்தனதருமமேவஞ்சத்
திறநிறைந்தன தீர்ந்தனதவங்களேவிரதம்
புறமுரிந்தன பொதிர்ந்தனபகைசெயும்புணாயே.

உரை.—அறங்களொழிந்துபோய் வந்தனதீயவினையெல்லாம், பாவங்கள்நிறைந்துமறந்துபோயினதருமங்களே, வஞ்சனைபெலங்கொண்டு தவங்களில்லதாயின, விரதங்கள்புறப்பட்டழிந்துநெருங்கின பகைசெய்யுங்குற்றங்களென்க. (௰௨)

விண்கிழித்திழி வெள்ளநீர்சிறைசெயுமுழுநர்
மண்கிழித்துழ வழங்கியகொழுவினை நீட்டிப்
புண்கிழித்துநெய்ப் புனலொடுபோர்முகத்தஞ்சாக்
கண்கிழித்தொளி கான்றவேலாக்கினபகைமே

உரை.—மேகங்களைக்கிழித்துவிழு மழையாலோடும் வெள்ளநீரைமறித் துழுநர்மண்ணைக்கிழித்துழவைத்த கொழுதன்னை நீட்டிப் புண்ணாகவுடலைக்கிழித்த திரத்தமோட வொளிவிடும்வேலாகச்செய்தது பகையென்க. (பாவத்தாற்பகைமிகுந்ததென்பதுகருத்து.) (௰௩)

அன்புமில்லன வெனதுணதென்பதிலார்வ
நன்புமில்லன வஞ்சனைகற்கலானன்றால்
பின்புமில்லன தீயவையினிதெனப்பெட்டற்
கின்புமில்லன விச்சையால்வறுமையுள்ளதுவே.

உரை.—அன்புமில்லாதேபோ யெனதுமுனதுமென்றதி
னால் நட்புமில்லாதேபோய் வஞ்சனைகளைப்படித்ததினால் ந
ன்னூல்களுமில்லாதேபோய்ப் பாவமேயின்பமாக விரும்பி
னதினால் நல்லின்பமுமில்லாதேபோய்ப் பொருளாசையிஞ்
சினதினால் வறுமையேநிறைந்ததென்க. (௰௪)

கரும்புலாவிய சாறிலகாய்ந்தனவாலை
யரும்புலாவிய வழுதிலவழுதனகமலஞ்
சுரும்புலாவயல் பயனிலதுறுவினகடுமுள்
விரும்புதேனுணப் பாடிலவிம்மினகுயிலே.

உரை.—கரும்பாலைகள்முன்போல நிறைந்தசாறுபொழி
யாமற்காயவுந் தாமரைமுதல்மலரொல்லாந் தேனைவிடாமலழு
வும், வயல்கள்பயனைக்கொடாமல் முள்ளினால்நிறையவும், வி
ரும்பினமதுவையுண்ணுதகுயில்கள் பாடாமற்புலம்பவுமா
யிற்றென்க. (௰௫)

## வேறு.

எள்ளலாயமன்னுயிர்க ளின்னுவினிதென்றதைவிரும்பி
யள்ளலாயவிருண்மொய்ப்ப வவனியெங்குமொய்த்தனதீ
துள்ளலாயதரும்மதோ வுள்ளியுள்ளத்திரங்கிவளன்
வள்ளலாயவிறையவனை வணங்கிவருந்தியுரைவகுத்தான்.

உரை.—இழிவுகொண்ட மன்னுயிர்கள்பாவமேயின்பமெ
ன்றுவிரும்பி யள்ளத்தக்கதாய விருள்நிறைந்தாகி யுலகமெல்
லாமவிந்ததின்மை நினைப்பதுமரிதே, அதைநினைத்திரங்கின
கூசை தயைநிறைந்தகடவுளைவணங்கி வருந்திச்சொல்வானு
மென்க; தயையின்மிகுதியாற் கடவுளைவள்ளலென்றார். (௰௬)

ஒன்றாயாளுமரசேயென் னுயிர்க்கோர்நிலையேதயைக்
கடலே [ங்கோன்மை
குன்றாவொளியே யருட்பரனே குணுங்கிங்கோச்சுங்கொடு
பின்றாவினைசெய்வதுநன்றோ பிறந்தப்பகையைத்தீர்த்தளிப்
பச்
சென்றாலாகாதோவிரக்கஞ் செய்யக்குணித்தநாளெவனே.

உரை.—தனியேயுலகங்களெல்லாமாளுமிராசாவே யென்னுயிர்நிலையே தயைநிறைந்தகடலே குறையாதவொளியே யருணாயகனே பசாசுக ளிவ்வுலகங்கொடுமையாகவாண்டு முடியாதபகையும் வினையுஞ்செய்வதுநல்லதோ? நீமனிதனாய்ப்பிறந்து பேய்ப்பகைதீர்த்தளிக்கவந்தாலாகாதோ? நீயெங்களுக்கிரக்கஞ்செய்யக்குறித்தநாளெப்போதென்க. (௰௭)

மறையைப்பழித்தபொய்ம்மதங்கள் மருட்டும்வினை
யாலொண்டவத்தின்
முறையைப்பழித்தசிற்றின்ப மூழ்குநசையாலென்றுமிதோ
வுறையைப்பழித்தவிண்ணிலமன் னுயிர்களெரிதீநரகெய்தத்
தறையைப்பழித்தபேயினங்கள் தவிராதீங்காள்வதுநன்றோ.

உரை.—வேதத்தைப்பழித்த பொய்யானமதங்கள் மயக்குவித்ததினால் நற்றவத்தின்முறைகளைப்பழித்த சிற்றின்பத்தில்முழுகினவாசையினா லெப்பொழுது மிதோ மழைத்துளிபோல வெண்ணப்படாதவுயிர்கள் தீநரகத்தில்விழுந் தமிழ்ந்தப் பூவுலகங்கெடுத்தபசாசுகள் விடாமலாள்வது நல்லதோ? (௰௮)

முன்னாளினிதினியுரைத்த முறையாற்பகைத்தவெறித்த
லையை
பின்னாள்மனுவாயவதரித்தீங் கெய்திமிதிக்கிலாகாதோ [றே
பன்னாளுலகங்கொண்டபழிப் பகையையெண்ணுவதுநன்
வன்றேவெம்மேற்காட்டியபே ரன்பின்றெண்ணிலாகாதோ.

உரை.—முன்னே நீசொன்னமுறையோடு பகைத்த பேய்த்தலையைமிதிக்க நீயிப்போது மனிதனா யுவதரித்துவந்தா

லாகாதோ? பலநாளுநாங்கள்செய்த பகையாகியபாவத்தை நீ
மனதிலே குறையாகவெண்ணுவதுநல்லதோ? அவதரித்துவரு
வேனென்றநாளிலே யெங்கள்மேலிருந்த பெருந்தயையைப்
பொழுதும் பார்த்தாலாகாதோவென்க. (௰௯)

தந்தைநோகவுணர்வின்றித் தவறுநின்றபிள்ளைகடஞ்
சிந்தைநோகப்பணிந்தடுத்தாற் சினந்ததாதையகற்றுவனோ
நிந்தையாக்ப்பிழைத்தெனினு நினக்கோர்பிள்ளையாயவெமக்
கெந்தையாகநீயென்று மிரங்காமுனிவதாங்கொல்லோ.

உரை.—தகப்பனுக்குமனநோக வறியாமற்பிழைசெய்த
மக்கள்தாமுநொந்துவணங்கித் தந்தைபாதத்தில்விழுந்தால
வனைக்கோபித் தவன்றள்ளுவானோ? உன்னை நிந்தித்துநாங்கள்
குற்றஞ்செய்திருந்தாலு முனக்குநாங்களே பிள்ளைகளு மெ
ங்களுக்கு நீ தகப்பனுமாகக்கொள்ள நீயிரக்கம்புரியாமலெ
ப்பொழுதுங் கோபங்காட்டுவாயோ? (௨௰)

பொறியைத்தவிர்த்தமாதவத்தோர் புலம்பற்கிரங்கிற்
குறையென்னோ
வறியைத்தவிர்த்தகுழவிகளு மழுதற்கிளைந்தாற்றீதெனவோ
நெறியைத்தவிர்த்தவஞ்சமிக நேமிசிதைத்தாள்கொடுங்கோ
ன்மை [யென்னோ.
வெறியைத்தவிர்த்தவயங்கொடுநீ வினைதீர்த்துதிப்பத்தடை

உரை.—தம்பொறிகளையடக்கினமாதவத்தோர் புலம்பின்
வோசைகேட்டிரங்கினாற் குறையோ? விளைவறியாக்குழந்தை
களழுமோசைக்கிரங்கினா லாகாதோ? நன்னெறிகளைக்கெடுக்
கும்வஞ்சனைகொண்டாளுங் கொடியபசாசுகளைத்தள்ளி யு
ன்வல்லமைகொண்டெங்கள் வினைகளைத்தீர்ப்பவருதற் குனக்
குத்தடையேதோ? (௨௧)

கன்னித்தாய்தன்கரத்துன்னைக் கண்டுள்ளுவப்பவுன்ம
லர்த்தாள் [கால்
சென்னித்தாரொன்றணிந்திலங்கச் சிறுவனாய்நீயழுதுணுங்

துன்னித்தாழ்ந்துதொழவுன்றீஞ்சுவையார்குதலைச்சொற்கே
ட்ப [கென்பான்.
வென்னிற்றாழ்வுண்டாயினுமென் னிறைவாவடியேற்களுள்

உரை.—உன்னைப்பெறுங் கன்னித்தாயின் கரத்திலுன்னை
நான்கண் டுள்ளேகளிகூரவு முன்மலர்ப்பாதத்தை யென்ற
லையணியாக வணிந்திருக்கவு நீகுழந்தையாய் முலைப்பாலு
ண்ணும்போது நானணுகிவணங்கவு மினியவுன் மதலைச்சொ
ல்லைக்கேட்பவு நான்குறையுள்ளவனாயினுமென்னாண்டவனே
யடியேற்கருளுவாயென்பான். (௨௨)

இன்னானின்னயரவுமுரைத் தேங்கியேங்கியழுகின்ற
வன்றாளன்னவுரைக்கிசையா யன்புதூண்டுமரியநசை
தன்னாலுன்னப்பொருவற்ற தருமகன்னிமரியென்பாள்
பன்னாடுன்னாதருட்புரியப் பரமனெய்தவேண்டினளே.

உரை. — சூசையிவ்வெல்லாஞ்சொல்லி யிரங்கியேங்கி
யழுதநாளிலே யதற்கிசைசொல்லுவதுபோலத் தன்றன்ப தூ
ண்டினவாசைகொண் டொப்பில்லாததருமகன்னியாகிய மரி
யென்பவளு மந்நாள்வரைக்குஞ் செய்யாததைசெய்வதற்
குப்பரமநாதன்வரவேணுமென் றுவேண்டுவாளென்க. (௨௩)

அன்றென்றுடையாலடையாப்பண் பன்னாரிருவர்
சொல்லமிர்தந் [யோ
துன்றென்றிருதற்செவியுவப்பத் துடர்பிறகேட்டவானிறை
னன்றென்றிரங்கியுலகளிப்ப நரனாவதற்கேயுதவியிவ [னால்.
ரொன்றென்றிவரைமணத்தொன்ற வுள்ளத்துள்ளிமுடித்தா

உரை. —அப்போதென்பாவினா லண்டாதமுமறையோ டி
வ்விருவர்சொல்லுஞ் சொல்லமிர்தத்தையுண்ட விருசெவி
மகிழ வன்பினோ டிவையெல்லாங்கேட்டபராபரனே நல்ல
தென்றிரங்கித் தானுலகத்தையிரட்சிக்கமனிதனாவதற் கிவ்வி
ருவரையுதவியாகத் தெரிந் திவரை மணமுடித்துச் சேர்க்கச்
சித்தமானானென்க. (௨௪)

அணையற்றகன்றபவவெள்ளத் தமிழ்ந்துமுயிர்கடங்கு
றைதீர்த்
திணையற்றகன்றவருட்பவ்வத் தினிதின்மூழ்கியுய்வதற்கே
தணையற்றகன்றதயைக்கடவுள் தனித்தான்செய்யுந்தொழிலெ
னினுந் [சொல்வாம்.
துணையற்றகன்றமாண்பிவரைத் துணையாய்ச்சேர்த்தநலஞ்

உரை.— கரையின்றியகன்றோடின பாவவெள்ளத்தி லமிழ்ந்தினவுயிர்களுடைய குறைகளைத்தீர்த் தொவ்வாதவருளின் கடலுண்மூழ்கிவாழ வளவிறந்ததயையுள்ளகடவுள் தான்றனியேசெய்யுந்தொழி லிதுவாகுவு மொப்பில்லாமாட்சிமையுடையவிவ்விருவரைத் துணையாகத்தயையினாற்சேர்த்த முறைமைசொல்வாம். (௨௫)

## வேறு.

ஆரானுநிகர்ப்பரியவன்பார்ந்தநாயகன்றா னலகைவெ
ல்லக்
காராரும்வானுலகுமண்ணுலகுங்கடிநயக்குங் கருணைகண்ணி
யேராருமணியிமைக்கு மியெருசலேமாலயத்தி லிருமைவாய்
ந்த [ச்சொல்வான்.
சீராருங்கன்னியின்கட்சேடமையோர்வானவனைச் செலுத்தி

உரை.— ஒருத்தனாலுமுவமியாத தயையுள்ளநாயகன்றான் பசாசுகளைவென்று வானுலகும் பூவுலகு மகிழ்ந்துவாழக்கிருபைநினைத்து நவமணியால்விளங்கும் எருசலேநகரிலுள்ள தேவாலயத்திற் பெருமைநிறைந்திருந்த கன்னியாகிய மரியென்பவளண்டைக் கழகியவொருசம்மனசை யனுப்பிச்சொல்வானென்க. (௨௬)

சேயாகமனுக்குலத்திற்சேர்ந்துதித்துவையகத்தார் சி
தைவைநீக்கத்
தாயாகவளர்கன்னிதாய்வயிற்றிற்பழம்பழிசேர் தவறில்லாது
தூய்யாகமறிவாண்மைசுடர்காட்சிவலியருள்மாண் டுனிவுகு
ட்சி [ளன்றோ.
வீயாதவரங்கொடுபெற்றெவ்வுலகும்வியப்பெய்த வேய்த்தா

உரை.—மனிதனாய்ப்பிறந்து பூவுலகமுள்ளகேடுகளைத்தீர்க்கவெனக்குத்தாயாகவளருங்கன்னியே தன்றாய்வயிற்றிற் பழம்பழியாகியசென்மப்பாவமின்றி யுற்பவித்து அப்போது தானே தூயமனமு மறிவு மாண்மையுந் தெளிந்தகாட்சியும் வல்லமையு மருளும் பெருமையுந் துணிவுஞ் சூட்சியு மிவை யெல்லா முடியாதவரமாகப்பெற்று எவ்வுலகு மதிசயப்ப டத்தோன்றினளல்லவோவென்க. (௨௭).

காரணமாயேதறியாவையகத்தாரினிதுளத்திற் களித்து
மூழ்கி [யாவும்
வாரணமாயின்பெய்தத்தலைவியெனவான்றளங்கள் வகுப்பி
பூரணமாய்த்தொழுதுவப்பப்புவனத்திற் பொருவின்றிப்
பேர்த்தவெய்யோன் [ந்துவேய்ந்தாள்.
பேரணியாய்ப்பிறைமிதித்துமுடியொப்பமீன்சூடிப் பிற

உரை.— காரணமறியாமற் பூவுலகத்தோரின்பக்கடலின் மூழ்கியுவப்பவும் வானுலகத்தோ ரிவள் தந்தலைவியென்றெல்லாரும் பூரணமாய்த்தொழுதுவப்பவும் பூமியிலிணையின்றிச் சூரியனைச் சீலையாகவுடுத்துச் சந்திரனைக்காலணியாகமிதித்து மீன்களைமுடியாகச்சூடிப்பிறந்தாளென்க. (௨௮)

பிறையொக்குமொளியன்னாள் பெருகுவயதொருமூன்
றிற் கோயிற்சேர்ந்து [ணங்குமாற்றாற்
மறையொக்குமொளியன்னாள்வழுவிலநாடொறுமென்னை வ
பொறையொக்குந்துணையன்னாள் பூவனத்தினிற்பவருள்
பொலிந்தவானோர் [தாளன்றே.
முறையொக்குநிலையன்னாள்முற்றிவளர்வரத்தங்கண் முதிர்ந்

உரை. — பிறைபோலவொளியோடுவளர்ந்து மூன்றுவயதாய்க் கோயிலிலேசேர்ந்து வேதவடிவாய்விளங்கி யெந்நாளுந்தப்பாம லென்னைவணங்குமுறையினாற் பூவுலகிற்காதர வாந்துணையாகிப் பூமியிலிருந்தும் வரங்களாலுயர்ந்தவானுலகத்தோர்க்கொத்தநிலைமையடைந்துவரங்கள்முற்றத் தானுமுற்றி யங்கேமுதிர்ந்தாளல்லவோவென்க. (௨௯)

துணைதீர்ந்தகன்னியெனையீன்றுமுறந்துயரிற் று
ணையாதற்கு [கெய்தாதற்கும்
பிணைதீர்ந்த்விப்பயன்பேய்க்கொளிப்பதற்குமவட்கிகழ்வாங்
வணைதீர்ந்ததுணையளிப்பேனிவைகூறுமணத்தூதாய் வான்
விட்டங்கண் [னுப்புகின்றான்.
ணணைதீர்ந்தவருட்கன்னியாமெனவேகென்றிறையோ ன்

உரை.— கன்னியாயிருந்து துணையின்றியென்னைப்பெற விருக்கின்றாளாயினு மினியவளுக்குவிளையுந்துயர்களிற்றுணை யாகவு மொப்பில்லாதவிவ்விரகசியத்தைப் பசாசுக்கொளிக் கவுங் கன்னியானவள்பிள்ளையைப்பெறக்கண்டவ ரிகழ்ச்சி சொல்லாமலிருக்கவுங்குறையில்லாததுணையை யவட்களிப்பச் சித்தமானேன், இவையெல்லாமவட்குணராமல்மணத்தூதாக நீபோ யவ ளாமென்றுசம்மதிக்கச்செய்வாயென்று பரா பரனொருவானவனையனுப்பினான். (௩௰)

வான்செய்தசுடரோய்க்கும் வடிவொடுவானவன்சடுதி
வந்தக்கன்னி [ருதுந்தன்மை
கான்செய்தமலர்ப்பதத்தைக்கண்டிறைஞ்சிக்கடவுளருட் க
தான்செய்தவேவவெனத்தவறுதோர்மணத்தமைதல் தரும
மென்னத் [னே.
தேன்செய்தகனிசொல்லாற் சீர்த்தபலவுறுதிகளுஞ்செப்பினா

உரை. — சூரியனினுமொளிர்ந்தவடிவாய் வானவன்கடுகி வந்து அக்கன்னியின்வாசமலர்ப்பாதத்தைவணங்கி யாண்டவ ன்றயையைக்கருதி யேவினதாக நீமணத்துக்கமைதல்வேண் டுமென்று தேன்பொழிந்த வினியசொலலாற் பலவுறுதியான நியாயங்களைச் சொல்லிக்காட்டினானென்க. (௩௧)

மணிமொழிமுற்றுணராமுன் மனமுளைந்துவாடுகின்ற
வதனமாறப் [யின்றுசேப்ப
பணிமொழிமுற்றுணராதாய்ப்பகல்செய்கண்ணுறெனநீர்ப்
வணிமொழிமுற்றுணர்நெஞ்சமுட்டுடிப்ப நெட்டுயிர்ப்
போடாற்றிப்பின்னர் [சொல்லலோர்ந்தாள்.
துணிமொழியுற்றிறைவனதுதுணைத்தாளைப் பணிந்திவளுஞ்

உரை.— மணமென்றவார்த்தை யுச்சரித்துமுடியுமுன்ன ரவள்மனதினொந்து முகவடிவுவாடிமாறவு மொன்றுஞ்சொல்லாம லொளிவிடுமிருவிழியாறுகக்கண்ணீராவிட்டுச் சிவக்கவுங் கேட்டதையாராய்ந்தநெஞ்சுள்ளே துடிக்கவு நெடுமூச்சுகள்விட்டழுதபின்னர் துணிந்து தானு மாண்டவன்பாதத்தைவணங்கி மறுமொழிசொல்லநினைத்தாளென்க. (௩௨)

தேன்றானோநஞ்சதுவோ வெனவிழுங்கவோமிழ்தல்
தேற்றாநெஞ்சாள் [யூன்றி
மீன்றானோர்முடிச்சென்னிநிலம்புல்லமுழந்தாளை விரும்பி
வரன்றானோரணியெனவெஃகியகூந்தல்வலத்தோளின் வயங்
கத்திங்கட் [றாள்:
கூன்றானோபூவெருத்தங்கோட்டியிருகைகூப்பிக் கூறலுற்

உரை.— வாயிற்கொண்டபொருள் தேனோநஞ்சோவென் று சந்தேகந்தோன்றினதினா லதைவிழுங்கவு மினிமையினா லுமிழவுந் துணியமாட்டாதவனைப்போல நின்றவள்மீன்மு டிசூழ்ந்தசென்னிநிலத்திற்படவணங்கி முழந்தாளிலிருந்து வானுலகு மழகணியென்றுவிரும்பினகூந்தல் வலத்தோளிற் றாங்கப் பிறைபின்வளைவுபோல நற்பிடரியைவளைத்துத் தன் னிருகைகூப்பிச்சொல்லுவாளென்க. (௩௩)

உலகெல்லாம்புரக்குமருட்கொடையோனேயுருவில்லா
தொளிவல்லோனே [வே
யலகில்லாத்தற்பரனேயற்புதனேயென்னன்பே யரசர்கோ
நலமெல்லாந்தந்துதந்தநல்லுணர்வுமறியாயோ நலமிக்கோ
யுட் [கிற்பானேன்.
புலமெல்லாமறிந்தாயேற்புலம்பிமனமுடைந்துளையப் புகல்

உரை.— உலகங்கள்யாவையுங் காத்தளிக்குந்தயையுள்ள கொடையோனே யுருவமின்றியொளிநிறைந்தோனே யளவிற ந்ததற்பரனே யற்புதனேயென்னன்பே யரசர்க்கரசனே யெ னக்கு நன்மையெல்லாந்தந்து நீதந்தநல்லுணர்வறியாயோ? என்னுளமெல்லா மறிந்தாயாகி விப்போதென்மனமுடைந் துநொந்து நான்புலம்பவேமணமொழிபேசுவானேன்?எப்

பொழுதுங் கன்னியாயிருக்க மூன்னுற்றவுணர்வு நல்லுணர்'
வென்றாள். (௬௪).

நீயுகுத்தவணக்கமெனநினைவோங்கிமூவயது நிகழாமு
ன்னர் [ணி
மாயுகுத்தவாழ்விக்குமணமின்றியெஞ்ஞான்று மாறுக்கன்
யாயிருப்பநானுணர்காலாமெனநீயருட்புரிந்தா யன்றேவை
யா [தல்கிற்பானேனன்.
நோயுகுப்பவுளத்தலக்கண்ணுழைந்தறப்பமணமிப்போ நு

உரை. — நீதந்தவணக்கமென்றதுணிந்து மூன்றுவயதி
லேமயக்குவிக்கும் வாழ்வுள்ளமணமின்றியெப்போதுமாறுத
கன்னியாயிருப்பேனென்றுநானினைத்தபோது நீயேயாமெ
ன்றதையைசெய்தாயல்லோ! இப்பொழுதுபெருந்துயர்மனத்
தினுழைந்தறக்கும்படி மணத்தைநினைப்பானேனென்க.

என்றென்றாள்மென்றாளாளிதயத்திற்றீபாய்ந்துள் ளெ
ரிபுண்ணன்னு [றிப
ளன்றென்றாய்மனமுருகியாகுலத்தாழ்கடல்மூழ்கி யழுந்தா
நின்றன்றுயிரக்கதிரோனேருருக்காட்டியவாறே னிகராக்க
ன்னி [ன்றான்.
பின்றன்றுதொழுதின்னும்விரிவேதத்துறதியுரை விளம்புகி

உரை.—இவையெல்லாமென்றாள் மெல்லியதாளுடையாள்
தீ யிதயத்திற்பாய்ந்தெரியும் புண்கொண்டவளைப்போ லன்
றேயெனக்குத்தாயானவ ளுள்ளுருகித் துன்பக்கடலி லமிழ்
ந்தியிருக்கச் சூரியனுருவோடுநின்றவானவ னொப்பில்லாக்க
ன்னியின்பாதத்தைவணங்கி யின்னமும் விரிவாக வேதத்தினு
றுதிகளைச்சொல்லிக்காட்டுவானென்க. (௬௫)

மீனெடுமின்சுடரொல்லாம் வெல்லறிவுற்றயர்வானேனன்
வெருவாதொன்றாய்த் [த்தசெந்தீக்
தேனெடுகொல்லரியினமோர் நாவாய்க்குள்ளடக்கினனுந்தினை
காடுனெடுதண்மதுமலரிற்குளிரச்செய்தவனுமணக் கடியோ
டுன்கண் [றைபூண்டுள்ளாய்.
வானெடுமண்வணங்குந் தூய்கன்னிமைகாப்பதுமரிதோ ம.

உரை.—மீன்கள்முதலுள்ளசுடர்களையெல்லாம் வெல்லு மறிவிருக்க மயங்கியேங்குவானேன்? அஞ்சாமற்பசுக்களுஞ் சிங்கங்களு மொன்று மொருகப்பலிலேயடக்கினவனு நிறை ந்தசெந்தி மதுப்பொழியும் வாசமலர்போலக்குளிரச்செய்த வனு மணத்தோடேகூட வானுலகும் பூவுலகும்வணங்குமுன்க ன்னிமைசேர்த்துக்காப்பதரிதோ வணியாகவேதத்தையணிந் தவளே! (அக்கப்பல்நோவைக்கப்பல் அத்தீநபூக்கன் சூளைத் தீ)யென்க. (௬௭)

சொல்வழியுமுள்வழியுந்துடர்ந்தடங்காதெவ்வுவமைத்
தொகுதியாவும் [ன்றே
வெல்வழியுமாயவலிவேய்ந்தபரன் றிருவுளமாய் விகற்பமெ
வெல்வழியுங்கடந்தறிவானேவவினுவின்னனு றுதென்பவா
னேன் [ழ்ந்தாள்.
கல்வழியுங்கடந்தனதின்கன்னியருமணத்திணங்கிக் கடவுட்டா

உரை. — சொல்லினுநினைவினுமடங்காம லுவமையெல் லாம் வெல்லுமுயர்ந்தவல்லமையுள்ளபராபரன் றிருவுளமா கிய மையமென்ன? வரும்பொருளெல்லாமறிந்து சூரியனிலு ந்தெளிந்தவறிவுடைய நாதனேவலின்படியேசெய்தாற் பின் பொருபொல்லாப்புவாராதென்று வானவன்சொல்லக் கற்கு ன்றினுந்திண்ணியகன்னிமை பின்பழியாமலாகுமணஞ்செய் யச்சம்மதித்துக் கடவுள்பாதத்தைத்தொழுதாள் மரியென்ப வள். (௬௮)

## வேறு.

ஆமெனவாயின தறையவானவ
னாமெனயாவரு நயப்பனாயக
னேனமெனமாண்பிசை சீமையோனெனுந்
தோமெனயாவுந்தீர் தவற்குச்சொற்றுவான்.

உரை.—இவளாமென்றுசம்மதித்ததை வானவன்போய்ச் சொல்ல நாமெல்லாரும்வாழும்படிக்கு நாயகனே தன்கர்வ லாக மாட்சிமைகொண்டசீமையோனென்னுங் குறையெய்தி னில்லாதமாதவற்குவந்துதோன்றிச் சொல்வானென (௬௯)

கோதிலதாவிதன் குலத்திற்றுதைதாய்
மாதிலதணந்தமா மரியென்பாளிவ
ணேதிலவரத்துயர்ந் திலங்குமீன்களுண்
மீதியைமதியென விளங்கின்றுளரோ.

உரை.—குறையில்லாததாவிதனிராசகுலத்திற்பிறந்து தந்தையுந் தாயுமிழந்தமரியென்பவ ளிந்தக்கோயிலி லுயர்ந்த வரங்களால் மீன்களுள்மதிபோல மற்றக்கன்னிகளுள் விளங்குவளென்க. (௪0)

ஈரொழுவயதுளா யிலங்கிம்மங்கையை
நேரொழுதுணைமண முகிப்பநீர்த்ததன்
சீரொழுகுலத்தினுட் டெரிந்தமாட்சியான்
பேரொழுமணங்கொடு பிணிக்குவாயென்றுன்.

உரை.—பதினாலுவயதாகையி லிவளுக்குநேராகவொருதுணைதேடி மணத்தைமுகிப்பப் பெருமையிலெழுந்த வவள்குலத்தினுள் மாட்சிமையுடையவொருவனைத்தேர்ந்து மணமாகக்கட்டுவாயென்றுன். (௪௧)

முனிவரன்முதல்வன் மொழிந்தயாவையுந்
தனிவரமடந்தையை விளித்துச்சாற்றியுண்
ணனிவரவருட்புரி நாதனேவலா
மினிவரமணஞ்செயல் வேண்டுமேயென்றுன்.

உரை.—ஆண்டவன்சொன்னதெல்லாஞ் சீமையோனு வ்வாதவரங்கள்கொண்ட கன்னியையழைத்துச் சொல்லிக்காட்டி யகன்றவருளுடையநாதன் கட்டளையாகக்கொள்ள வினிமணமே செய்யல்வேண்டுமென்றுனென்க. (௪௨)

என்றதுங்கேட்டுயிர்ப் பெழவிரங்கினள்
மன்றலுமன்றல்செய் வாழ்வுமெற்கதே
பொன்றலும்பொருவில புன்கணுமினு
மொன்றலுமாமிறை யுரைக்கிலேயென்றுள்.

உரை.—மரியென்பவளுஞ் சொன்னதைக்கேட்டுப்பெருமூச்சுவிட்டேங்கி மணமுமணத்தால்வரும்வாழ்வுகளு ம

டியாட்குச் சாவினு மொவ்வாத துயராயினு மிப்படி நாயகன்சொன்னபோது மணமேயாகுமென்றுளென்க. (௪௩)

என்றவையுணர்ந்தமா தவனுமின்பொடு
மன்றலைமுடிதர வங்கண்வைகிய
நன்றணிமுனிவரைக் கூட்டி நாய்க
னன்றமைந்தறைந்தநற் பணியறைந்துளான்.

உரை.— இதைக்கேட்டமாதவனு மணத்தைமுடிக்கவங்கேயிருந்தமற்றமுனிகளைக் கூட்டி யாண்டவன் றிருவுளம்பற்றினதைச்சொல்லிக்காட்டினான். (௪௪)

அறைந்தவாசகமுணர்ந் தரியமாதவர்
நிறைந்ததாவிதன்குல நிலையின்மாட்சிகொண்
டுறைந்தயாரையும்விளித் தொருவனைப்பிரான்
பறைந்ததாகையிலொரு பழுதுறாதென்றார்.

உரை.— மற்றமுனிவரு மிதையறிந்து தாவிதன்குலத்திலுண்டானவெல்லாரையுங்கூட்டி யவர்களுக்குள்ளே யாண்டவன்றானேயொருவனைத்தெரிந்துகாட்ட மன்றுடுவோமப்போது பழுதுவராமல் மணமுடியுமென்றுரென்க. (௪௫)

நன்றெனநயப்பொடு நாதன்வேண்டினர்
கன்றினமுரசொலி கறங்கத்தாவிதன்
றன்றினவனைவருந் துன்பினென்றழைத்
தன்றினமணிநக ரரிதுவந்ததே.

உரை.— நல்லதென்று நாயகனைவணங்கினபிற்பாடு முரசடித்துத் தாவிதன்குலத்தோரெல்லாரும் வர்ருங்களென்றழைப்ப வன்று நவமணியா லலங்கரித்தநகரெல்லாங்களிகூர்ந்ததென்க. (௪௬)

தூர்க்கடையுருமென முரசங்காலொலி
யீர்க்கடைகணையென விருசெவிப்புகப்
போர்க்கடையெனமனம் புலம்பிமாமரி
சீர்க்கடைபிரானடி யிறைஞ்சிச்செப்புவாள்.

உரை:—மேகத்திடிபோலத் தோன்றின முரசிறேசை யீர்க்குடையவம்புபோல விருசெவியிற்பாயப் போர்க்களம் போலுமனத்திற்புலம்பி மரியென்பவ ளினிதாய்த் தானடைந்த நாதன்பாதத்தைவணங்கிச்சொல்வாளென்க. (௪௭)

எள்ளொழிந்துனதுதா ளிறைஞ்சிநாளெலாந்
தெள்ளொளிர்ந்துயர்ந்தவித் தேவகோயிலின்
னள்ளொளிந்திருப்பவென் னசையறிந்துளா
யுள்ளொளிந்ததுமெலா முணருநாதனே.

உரை.—குறையின்றியுன்பாதத்தைவணங்கிச் சாந்தனையுந் தெளிந்தொளிர்ந்த விக்கோயிலினடுவே யொளித்திருக்க வென்னசையையறிவாயே யுள்ளொளித்ததெல்லாமுந் தெளிவாக வறிந்தநாயகவென்க. (௪௮)

தீயினுஞ்சுடுமணஞ் செய்கென்றுயது
வாயினுமடவரல் மறுக்கலாங்கொலோ
வீயினுங்கொடியவிவ் வினையினுளங்
காயினுந்திருவுளங் கனிவென்றுமரோ.

உரை.—நெருப்பினு மென்னைச்சுடுமணத்தைச்செய்யச்சொன்னாய், தானதுவாயினுமாயினுந்தள்ளக்கூடாதே, சாவின்மேலுங்கொடியதாகிய விவ்வினையா லென்மனமுட்காயினு மிதுவுன்றிருவுளமென்றபோ தினியதாகுமென்க. (௪௯)

கடிசெயுங்காலையுங் கன்னிகாக்கநின்
னடிசெயுமுறுதியா லகத்திலோங்கிவான்
குடிசெயும்வரைநேர் குணித்தவென்றுணை
படிசெயுந்திருநகப் பயன்பகுக்குவாய்.

உரை.—மணஞ்செய்தாலு மென்கன்னிமைகாக்க வுன்றிருப்பாதத்துறுதி போதுமென்று மனத்திலோங்கி வானுடையோர்க்குநேராக வெனக்குக்குறித்ததுணைவன் பூவுலகின்செல்வங்களைப்பழித்த தேவவரங்களையடையச் செய்வாயென்க. (௫௰)

பார்படைத்தனதிருப் பற்றிலானருட்
சீர்படைத்தனநலந் திளைப்பக்கற்பெனும்
பேர்படைத்தனவரம் பெறத்தந்தாயினன்
சூர்படைத்தனவெனத் துணைக்கொள்வாமரோ.

உரை.—பூவுலகின்செல்வங்களை விரும்பாம லருட்செல்வநிறைந்தாகக் கற்பின்பெரும்வரம்பெறத்தந்தே யத்தன்மையான் றன்பமடைந்தவடியாளைத் துணையாகக்கொள்ளச்செய்வாயென்க. (௩௧)

உடைப்பதற்கருந்துய ருயிர்த்தவாழ்வுகள்
கிடைப்பதற்குரித்துணை கிடைப்பக்கேட்கிலள்
துடைப்பதற்கருந்துகட் டுடைத்துநின்னருள்
படைப்பதற்கறத்துணை பணிக்குவாயென்றாள்.

உரை.—விலகப்படாத துரிதங்களைச்செய்யும் வாழ்வுகள் கிடைப்பதற்கான துணைகேளேன், ஒழிப்பதற்கரிய குற்றமெல்லாமொழித் துன் றேவவருளாகும்படியான வறத்துணையே தருவாயென்றுளென்க. (௩௨)

என்றுபெய்மாரியா லெழுந்தவெள்ளமாய்ச்
சென்றுமொய்வேலைமேற் றிரண்டவாறுபோற்
றன்றுதுய்மணஞ்செயத் தெரிந்தசூசைமே
னன்றுபெய்வரமெலா நாதனீட்டினன்.

உரை.— இப்படிசொன்னநேரமே பொழிந்த மழையி னெழுந்தவெள்ளங் கடல்மேற்றிரண்டோடியதுபோல மணத்துணையாகத் தெரிந்தசூசையுளத்தில் நன்மையுடைய வரத்தொகை குவித்தாளுண்டவனென்க. (௩௩)

இன்னருமுறைக்கிவ ணிருவரொய்திய
துன்னரும்வரங்களாற் றுணையிலார்தமுள்
ளுன்னருந்துணைவரொன் றுணர்ந்தநாயகன்
பன்னருமணம்புணர் பயன்சொல்வாமரோ.

உரை:—இத்தன்மையா விருவரடைந்தவரங்களாற் புறத் திறிகரில்லாமற் றம்முள்நிகராயினரென்றுணர்ந்தகடவு ளிவர்களை மணவினையாற் புணர்த்தமுறைமைசொல்வரமென்க. (௩௪)

## வேறு.

அணிவுற்றெருவியுற்றகல்கோமுரசின்
பணியுற்றுமணப்பயனாகநகைத்
துணிவுற்றரசாயினசுற்றமுளா
ரணியுற்றெவருங்கடிதண்டினரால்.

உரை.—கறிகொண்டோசையெழுந்த விராசமுரசின்கட்டளைகேட்டு மணவரசையா விராசகுலத்தோ ரெல்லாருங் கூட்டமாய்வந்தாரென்க. (௩௫)

குருமாமுனிகூறியவேவலினால்
மருவாநகையாழுமுந்தவிர்கின்
றருமாதவனாயினகுசைபணித்
திருமாமணியாலயமெய்தினனால்.

உரை.—குருவரயின மாமுனிசீமையோ னேவலாகக்கொள்ள வாசையின்றி மணமெல்லாம் வெறுத்த வருந்தவனாகிய குசையுங்கீழ்ப்படித்து பொற்றேவாலயமடைந்தானென்க. (௩௬)

குருமாமணியாலொளிர்கோயிலினுட்
டிருமாதினைவேட்டுமெலாருமுறப்
பொருவாதொளிர்பூங்கொடியைக்கொணர்வா
னருமாமுனியங்கணறைந்தனனால்.

உரை.—செம்மணியால்விளங்குந் தேவாலயத்துள் செல்வப்பெண்ணை விரும்பினயாவரும் வந்தபின்பு நிகராதழகியபெண்ணைக் கூட்டிக்கொண்டுவரச்சொன்னான் சீமையோனென்க. (௩௭)

தன்னிற்றவிராத்தகுபற்றளவா
யுன்னித்தவிராப்பயமோங்கியபோற்
கன்னிக்கழிவாகுமெனாக்கதனாற்
றுன்னிக்கலுழ்வாள்சுடர்சுந்தரியாள்.

உரை.— ஒருபொருள்மேல் விடாமல்வைத்த வாசையள வாக விடாதபயமுமிகுதியாகையால் மரியென்பவளுந் தன்க ன்னிக்கோரழிவாகுமோவென்றஞ்சி யழுதுசொல்வாள்சுடர் விடும்ழகுடையாளென்க. (௫௮)

மின்னுந்திரைசூழ்விரிமேதினிமே
றுன்னும்முயிருந்துடர்காவலனீ
யென்னும்பொழுதென்னிறைநின்னையலாற்
பின்னும்முயிர்க்காவலனார்பெறவோ.

உரை.— கடல்சூழ்ந்த பூமியிலுள்ள வுயிர்க்கெல்லாங் கா வல்நீயாகக்கொள்ள வென்றாண்டவனேயுன்னையல்லாதேவே றொருகாவல னெனக்குவேண்டுவதோ? (௫௯)

இறையோனடியெய்தியவானவரே
பொறையோர்பொருவாத்துயர்பூத்தயர்வான்
கறையாகுலமற்றுயர்கன்னியரு
டுறைபான்பெயரத்தகுமோர்விதியேன்.

உரை.— கடவுள்பாதத்தை யடைந்த வானுடையோரே பூ வுலகத்தோ ரொவ்வாத துயர்கொண்டலையவே துன்பமின்றி வாழு மிக்கன்னிகளோடிருந்தநா னிவ்விடம்விட்டுப் பெயர ச்சொல்லும்விதியேதோ! (௬௰)

தாதாத்தளிசூழ்தவழ்தண்டொடையால்
மாதாடுமனஞ்சுடவீனவனே
மீதார்தொலிபங்கிதமேயுறையா
னீதாதுநடத்திதுநேர்பயனோ.

உரை.—இதழினின்றொலிசெய்யும் வண்டுசூழ்ந்த குளிர்பூணமாலையா லென்மனமுட்சூட வானவனே யவ்வுலகினுள்ள் விங்கிதவுரையோடு நீமணத்தூதாக நடந்ததற்குப் பயனிதுதானே. (௬௧)

பரனேபரிவற்றருளேபணியான்
சுரரோமணமாகுபதூதரைவார்
நரரோவுதவார்நறுமாமணமே
வரலோடுவரும்பயன்மாட்சியிதோ.

உரை.—ஆண்டவனே விதிலேதுன்பமறத் தயைசெய்யான்,வானவரோமணஞ்செய்யச்சொல்லித் தூதுசொல்லுகின்றார், மனிதரோவுதவார், மணத்தோடுவரும்பயனிதுதானே? (௬௨)

நிழலாலயநீங்குமணப்பயனாற்
சுழலாயினவென்றுயர்நாளுமெலாம்
புழலாயினபுண்ணுழையப்பொதுளுந்
தழலாயுருகுந்தமியேனினியே.

உரை.—நிழல்செய்யு மிந்தக்கோயிலைவிட்டு மணத்தினுள்ளுஞ்சுழல்கொண் டெந்நாளுமடைந்த துயர்துளைத்தபுண்ணினுழைந்த தீபோலாகி யினிநானே யுருகாநிற்பேனென்க. (௬௩)

மனனேமறவாதுவருந்துதியே
கணவேயுனுகண்கள்கலுழ்ந்துதிரோ
யெனவேயுளமேங்கியழுதழுவாள்
புனலேபொருவாவிழிபொங்கிழையாள்.

உரை.—என்மனமே யினிமறவாமல்வருத்தங்கொள்வாய், நெருப்புண்டகண்களே யெந்நேரமு மழுங்களென்று மனத்திலேங்கிவிடாதழுவா ளருவிக்கண்பொங்கின, மணிபோன்றழகினளென்க. (௬௪)

உள்ளூற்றவணங்கிலணங்குளையத்
தெள்ளூற்றவருந்தெருட்டோர்ந்திறையோ

னள்ளுற்றவழுங்குமழுங்கலுங்
கள்ளுற்றகனிந்தசொலுற்றனனால்.

உரை. — உட்கொண்ட தணியாத்துன்பங்களா லிவள் நொந்தபோது தெளிந்தவுணர்வினாற் றேறும்படிக் காண்ட வனிறைந்தழுங்கிய வருத்தந்தீரு மினியசொற்கொண் டுரைப் பானென்க. (௬௫)

அருளெஞ்சிலநெஞ்சவிருஞ்சுதையே
மருணெஞ்சொருவஞ்சனையஞ்சியதோ
திருவெஞ்சரணஞ்சவியுஞ்செயுநின்
றருமஞ்செறிதஞ்சமுமெஞ்சியதோ.

உரை. — குறையாதென்னருளால் விளங்குநெஞ்சுடையமகளே! மயங்கியிதேவஞ்சனையென் றஞ்சுகின்றாயோ? என் பாதத்தைத்தொழுது நீசெய்ததருமங்களடைந்த தஞ்சவாதரவுங் குறைந்ததோவென்க. (௬௬)

கொன்னேகுலையேல்குலையேல்குறைவே
நின்னேசிலகன்னிநினைத்தவிதத்
தென்னேவினாநணையெய்தினனே
கன்னேரியகன்னிமைகாக்குவனால்.

உரை. — வீணாயஞ்சாதஞ்சாதே, குறையில்லாத வுன்கன்னிக்குக்கேடுவருமென்று நீநினைத்தவழியாக வென்னேவினால் வருந்துணைவன் கல்வினாடொத்த வுன்கன்னிநிலைபெறக் காப்பானென்க. (௬௭)

நீயாவியநீர்மையினோர்துணைவ
னோயாத்தவத்துனோடொத்தனனாய்த்
தூயாரினுமேங்கருநேயனுமாய்
வீயாதொளிர்கன்னிமைவீற்றியல்பாம்.

உரை. — நீவிரும்பின குணத்தையுடைய துணைவனோயாத தவத்தினானெக்கொத்தவனாய்ச் சுத்தமனத்தோருள்ளு மிக வேசுத்தனுமா யவனோடுகுறையின்றி யுன்கன்னிவீற்றிருக்குமென்க.' (௬௮)

குலையேல்குலையேல்குழையாமாயாற்
கலையேதருகாட்சிகடந்தறிவோ
டலையேநிகராந்துணையாகுமவ
னிலையேநெறியேயெழநீயறைவேன்.

உரை.— அஞ்சாதஞ்சாதே மாறுதநற்குணத்தோடு கல்வியால்வருங்காட்சி கடந்தவறிவினாற் கடலைப்போலு முன்றுணைவனுடைய நிலைமையுநெறியுநீயுள்ளுவப்பச்சொல்லுவே னென்க. (௬௯)

தாய்செய்சிறைநீக்குமுனர்தனாயிற்
பேய்செய்சிறைநீத்தருள்பெற்றுடலா
நோய்செய்சிறைநாறுபகன் னியறு
நீய்செய்சிறைநேர்பொறிகாத்தனனால்.

உரை. — தாய்வயிற்றிலிருந்து பிறக்குமுன்னர் பூவுலகிற் பேய்ச்சிறையாகிய சென்மப்பாவத்தைநீக்கித் தேவருளை யடைந்து நோய்செய்யுமுடலின் சிறையையொழிக்க நீயேயுன்கன்னியழியாதபடிக்குக் காக்குமாப்போலே தன்பொறிகளைத்தானுங் காக்குகின்றானென்க. (௭௰)

அடையாரணநேரறநேர்வடிவான்
கொடையாசையினாற்குளிர்காரனைவா
னுடைஞானறிவாலொளிமானவருட்
கடையாவதிலாநீகடனேரினால்.

உரை.—வேதமேயறமே வடிவாகக்கொண்டான், கொடைதானஞ்செய்ய வாசையினால் மேகம்போல்வான், கொண்டஞானவறிவினாற் சூரியனைப்போல்வான், முடிவின்றியடைந்தவருளினாற் கடலைப்போல்வானென்க. (௭௧)

தீயொக்குவனந்தெளியாத்தவந்
தாயொக்குமருட்டகைவென்றதயை
நீயொக்குமவர்க்குரிமேதையுள
னீயொக்குநிலைக்குளிநீர்மையினான்.

உரை.— தீயாற்சுடும்வனத்திற்கிடையாத்தவமுந் தாய்கொ ண்டவன்பினை வென்றதையையும் வானுடையோர்க்குரிய கா ட்சியுமுடையனாகி யுன்குணத்தொத்த குணத்தோனென்க. (௭௨)

விண்ணாருமவர்க்கும்வியப்புறவே
கண்ணாதியெலாப்பொறிகாக்குதலாற்
றெண்ணாழியினுந்திரைகொண்ணசையற்
றெண்ணாதிவருனெனை நீங்குமெலாம்.

உரை.—வானவரு மதிசயிப்பவே கண்முதலைம்பொறிக ளைக் காத்ததினாற் கடல்போலலையு மாசையற்றுத் தானென் னையல்லாதே யொன்றுமெண்ணா னென்றும்விரும்பானென் ன்க. (௭௩)

எனக்காவவியற்றியயாரினுமுள்
மனக்காவலினால்மறவாப்பிரியன்
றனக்காயவரத்தமரர்த்தகைமே
லுனக்காகுவதற்குரிகாவலனே.

உரை.— எனக்காசைவருத்துவிக்கு மியாவரினு மிவன்றன் மனத்தைக்காத்ததன்மையா லெனக்கேயாதபிரியனாகி யவன டைந்தவரங்களினால் வானவர்மேலு முயர்ந்தாகி யுனக்கேயா ன்காவலனானனென்க. (௭௪)

என்றானிறையோன்களிகூர்ந்திவளும்
வன்றொழுவாடகைவானவருஞ்
சென்றார்விழிநீர்த்திரைமாற்றியரு
தன்றுரானாகியெழுந்தனளே.

உரை.—ஆண்டவனிவையெல்லாஞ்சொல்ல விவளுங் களி கூர்ந் தவன்பாதத்தைத்தொழுதாள்,வானவரும்வந்திவள்கண் ணீரைத்துடைத்து மாறாதநற்றுணிவடைந் தெழுந்திருந்தா ளென்க. (௭௫)

கூறொப்பளவாதியியாவுமிலா
தாறொட்பிலநீர்மையினானருளாட்

டேறொப்பிலூக்கமொடுந்தெருளாள்
நூறொப்பிலதோழியர்நோக்கினளே.

உரை.—முடிவு மொப்புமளவு மாதியு மிவையெல்லாமின்றி யொப்பிலாதவாறிலக்கணமுடைய நாதனருளாற்றேறி யூக்கங்கொண்டு தெளிந்தமரியென்பவ ளொவ்வாத நூறுதோழிமார்வருவதைக்கண்டாளென்க. (௭௬)

## வேறு.

இடியொத்தலர்ந்த வெழிலேந்துசிலம்பிரட்டக்
குடியொத்தலர்ந்த விருள்வைகியகூந்தனல்லார்
முடியொத்தலர்ந்த மதிநாணமுதிர்ந்தபைம்பொற்
றொடியொத்தலர்ந்த கொடிவேய்துடசூழ்ந்தடைந்தார்.

உரை.—விரிந்தவழகுள்ளசிலம்புக ளிடித்தொலிக்கக் குடியாகவந் திருளிருக்குங் கூந்தலையுடைய மாதர்கள்முடிபோல் விரிந்தொளிரு முழுமதிநிகராமல்நாண, வழகினால் முதிர்ந்த பொற்றொடிபோலு மரியென்பவளையலங்கரிக்க வந்தாரென்க. (௭௭)

வான்வைத்தவிழ்ந்த மலர்போலொளிர்மீன்கள்மானத்
தேன்வைத்தவிழ்ந்த சினைநாடளிசேர்ந்துவிம்மக்
கான்வைத்தவிழ்ந்த கடிமாலைகனிந்துசூழ
மீன்வைத்தவிழ்ந்த விழியார்சிலரோமிடைந்தார்.

உரை.— வானுலகில் மலர்ந்தபூவாகிய மீன்களைப்போலத் தேன்பொழிந் தவிழ்ந்தவரும்புகளைநாடி யிளவண்டுகள்சூழ்ந்துகூப்பிட வாசனைபொழிந்து மலர்ந்தமாலைகளையணியமீன்போலுங்கண்ணுடையசிலரோ நெருங்கினாரென்க. (௭௮)

கடியாயலர்ந்த வொளிர்காந்தளினேர்கரத்தில்
விடியாயணிப்பொன் வளையிட்டணிவாருமல்லாற்
கொடியாயதன்ன நறைநாணமொடுங்குளிர்ந்த
பொடியாயசுண்ணஞ் சிலர்பூசிடவும்பொதிர்ந்தார்.

உரை.— வாசனைவிட்டுமலர்ந்த கார்த்திகைப்பூப்போலு மிருகையிலேபிடித்த நற்பொன்வளைகளையிடவு மல்லாதே நறுறக்கொடியு நானமுங் குளிர்ந்தபொடிச்சுண்ணமும்பூசக் கூட்டமாய்வந்தார்சிலரோயென்க. (௭௯)

செம்பொற்சிலம்புஞ் செருவோடுசிலம்பலன்றிப்
பைம்பொற்சிலம்பும் பலகிண்கிணியும்படர்ந்த
வம்பொற்சிலம்பு மணிமேகலையோடுபொற்பா
ரம்பொற்சிலம்புங் கலனுஞ்சிலர்கொண்டடைந்தார்.

உரை.—பொற்சிலம்புகள் பொருதாலென்ன வொலிப்பதன்றி யொலிக்கும் பொற்கிண்கிணிகளு மொலிசெய்யுமகன்றபொன்மணிமேகலையு மழகியபொன்னாபரணங்களுங்கொண்டுவந்தார்சிலரோயென்க. (௮௰)

நல்வாசமூண்ட நறுநெய்நனிபூசிநானங்
கொள்வாசமூண்ட குளிர்பூம்புனலாட்டிவெந்த
பல்வாசமூண்ட புகைபாய்ந்தவிர்பாவினுவி
வெல்வாசமூண்ட துகிலேந்தினர்வேய்ந்தடைந்தார்.

உரை.— வாசநெய்யைப்பூசிக் கஸ்தூரிமுதலிய வாசமுள்ளதைக்கூட்டிக் கலந்தநீராட்டி வெந்தவகில்முதலிய வாசப்புகைகாட்டிப் பாலாவியினு மெல்லியசீலையேந்தியுடைந்தார் சிலரோயென்க. (௮௧)

கடுகொண்டகண்ணின் கவினார்கனிவாயவாசைக்
கொடுகொண்டயாவு மிவள்கண்டுகுளிர்ந்தசொல்லா
லுடுகொண்டசென்னி யொசித்தொல்லையகன்மினென்று
நடுகொண்டகன்று நகைகொண்டுநடந்துபோனாள்.

உரை.—நஞ்சுகொண்ட கண்ணழகுடையா ராசையேர்டுகொண்டுவந்ததெல்லா மிவள்கண்டு மீன்முடிசூழ்ந்தசென்னியையசைத்துக் குளுந்தசொல்லாற் கடுகிப்போங்களென்று நடுவேசிரித்துக்கொண்டு நடந்துபோனாளென்க. (௮௨)

தூங்காயமாலைத் தொடையோமணவாது தூய்பொன்
வீங்காயவாரக் கலனோமிளிராதுமெந்தை
பாங்காயபாதம் பணியேயழகேயதில்லா
வீங்காயபாவு மிழிவென்றுவிரைந்தகன்றாள்.

உரை.— தாழ்ந்தபூமாலைகளோ மணவாதே, பொன்னிறைந்த வாபரணங்களோ வொளிராதே, என்பிதாவினழகியபாதமேயணியு மழகுமா மதுவில்லாததெல்லா மிழிவுதானென்று கடுகவகன்றுபோனாளென்க. (௮௩)

விண்ணாவியாய கதிர்தூசெனவேய்ந்துவிண்மேற்
கண்ணாவியாய கடிமீன்முடிகவ்விநற்றாள்
தண்ணாவியாய மதிதாங்கியதாரின்மேலும்
பண்ணாவியாய குரலாட்கொருபாங்குநன்றோ.

உரை.— வானுயிராகியசூரியனைச் சீலையாகவுடுத்து, வானத்தின் கண்ணாகி யொளிருமீன்களை முடியாகச்சூழ்ந்து, நற்பாதத்தைக்குளிர்ந்த மதியே மிதியடியாகத்தாங்கி யிந்தவணிகள் மேலும் வீணைக்குயிரான வினியகுரலுடையாட்குப்பின்னையுமொருவலங்காரநன்றாய்த்தகுமோவென்க. (௮௪)

வஞ்சஞ்செறிந்த நிலமண்டியபூணனைத்துங்
கஞ்சஞ்செறிந்த வடியாள்கழிவாய்க்கடந்தே
யஞ்சஞ்செறிந்த நடையாடியகன்றனந்தன்
விஞ்சஞ்செறிந்த மிளிர்வானணிவேய்ந்தணிந்தான்.

உரை.— வஞ்சனைநிறைந்த பூமியுள்ளவணிகளெல்லாத்தையுந் தாமரைப்பாதத்தாள் வெறுத் தன்னநடையால்நடந்துபோகவே பரமநாதன் மிகுந்த வழகுள்ளவானத்தினணிகளைச்சூழ்ந்தணிந்தான். (௮௫)

வானாருமெய்தி யறமேமணியென்றணிந்தார்
மீனாருமோதி மிளிர்தோடெனவேய்குகின்றார்
தேனாருமாலைத் திரளென்றருள்சேர்க்குகின்றார்
கானாருவாய்ந்த தவமேகலையாய்வனைந்தார்.

உரை. — வானவர்வந்து மணியாகவறமும் காத்ணியாக வொளிர்ந்தவுணர்வுந் தேன்பொழிந்த மாலையாகவருளுஞ் சீலையாகக்கானத்தில்வளருந்தவமு மிவளுக்கணிந்தானென்க. (அசு)

## வேறு.

அவிரொளிராரியதாரகையுண்
மவிபாலொளிகால்மதிபோரவதுபோ
லொலியாயசிலம்புடைமங்கையருட்
பொலியாலயமூடிவள்புக்கனளே.

உரை. — இராவினிறைந்தொளிரு மழகியமீன்களினுட் பாலொளிவிடுஞ்சந்திரனடப்பதுபோல விடிக்குஞ்சிலம்புடையதோழியர் நடுவே மரியென்பவள் தேவாலயத்திற்குப் போனாள். (அஎ)

அடரற்றடிவைத்தனளண்டியவாய்
சுடரற்றிருளுந்துகளும்வெறியும்
படரற்றிசைபன்னெழுகாதமகன்
றிடரற்றிழிவற்றெழுசீரடியாள்.

உரை. — நெருக்கநீக்கி யிவள்மெல்லடிவைத் தண்டினவிடமெல்லா மொளிவில்லாமயக்கமுங் குற்றங்களும் பசாசுகளும் படர்ந்திராமற் பதினேழுகாதமேதூரமகன்றுபோய்த் துன்பமுமிழிவும் விலகிப்போ யெழுந்துவந்தா ளிச்சீரடியாளென்க. (அஅ)

வையும்பொருவாமடவாள்வரவம்
பெய்யுங்கொடுவேளொடுகோமிழிவும்
பொய்யும்பவமும்மகலும்பொசியா
தையுண்ணலர்கண்டளிநீங்கினபோல்.

உரை. — பூவுலகமொவ்வாத கன்னிவரக்கண்டு காமவம்பெய்யுமன்மதனுங் காமவிசாரங்களும் பொய்யும்பாவமும்விலகிப்போயின தாமுண்ணாத வழகியமலரைக்கண்டவண்டுகள் நீங்கிப்போவதுபோலென்க. (அக)

காமக்கனலாற்றினநோக்கியகண்
வீமக்கருள்விட்டனமூடியகண்
ணேமக்கதிகாட்டும்விழித்திருகண்
வாமக்கதிர்வாட்டுகளித்தகணே.

உரை.—இக்கன்னியுள்ளகண்ணை யொருவன்பார்த்தாற்கா மநெருப்பே யவிந்தாறவு மிவள்பாராமற் கண்மூடினச்ச முங் கலக்கமுங் கொடுக்கவு மினிதாய்க்கண்விழித்துப்பார்த் தாளாகிற்·பரமகதியழகின்றன்மைகாட்டவு மக்கண்ணேகளி கூர்ந்தபோது சூரியனைமறைக்கவு மிக்குணமெல்லாமுடைய ன விவள் கண்ணென்க. (௬௰)

வில்லேவியகோல்விழியாரறைதீஞ்
சொல்லேயுயிருண்ணெனவேசொலுவார்
கொல்லேதமிலாக்குதலைச்சொனலாள்
நல்லேயுயிர்காக்குநவின்றசொலால்.

உரை.—வில்லாலெய்யப்பட்ட வம்புபோலுங் கண்ணு டைய மற்றமாதர்சொல்லுந் தீஞ்சொல்லே யுயிரையுண்ணு மென்பார், கொலைபாதகமறியாத மழலைச்சொல்லுடையிவ ளோவென்று வினிதாயுயிரைக்காத்தளிப்பள் சொல்லுமுனை யிஞுவென்க. (௬௧)

பல்லும்விழியும்பவளத்திதழுஞ்
சொல்லுங்கனியீஞ்சொலுமொண்ணுதல்கொள்
வில்லுங்கரமும்விரிசீறடியுஞ்
செல்லுந்திசைசெல்லுறழ்செல்லருளே.

உரை.—இவள்கொண்டபல்லும் விழியும் பவளவுதடுஞ் சொல்லின்சொல்லு மொளிர்நெற்றிப்புருவவில்லுங் கையு ஞ்சீறடியும் போனவிடமெல்லா மழைபொழிமேகம்போல வருட்கருணை பொழிந்ததென்க. (௬௨)

அரிதாய்மடவாள்வரவாங்கெவரும்
பரிவாய்விழிவிண்டனர்பார்க்குதலு

மெரிவானி லுலாமதியெய்தியகால்
விரியாம்பல்விராச்சினைவிண்டனபோல்.

உரை.—இவ்வருமையால் வரும்பெண்ணை யெவருங்கண் மலர்ந்து நோக்கவே வான்மீதுலாவின சந்திரனுதித்தபோது பொய்கையி லாம்பலெல்லாந் தன்வாசவரும்பு மலர்வது போலுமென்க. (௧௩)

அருஞானமுமானமுமாயறிவு
மிருமூக்கமுமாக்கமுமாங்கெவரும்
கருதாவழிகண்வழிமேய்ந்துமனந்
தெருடாவருடேர்ந்துதெளிந்தனரோ.

உரை. — அரியஞானமும் பெருமையு மாராய்த்தவுணர்வுந் தைரியமு மற்றநன்மையெல்லா நினையாதமுறையோடுகண்வழியாக வெவருமடைந்து தேர்ந்தவருளினால் மனதிற்றெளிந்தாரென்க. (௧௪)

வீடாடிவிளங்கெழில்வேய்ந்தமுகத்
தாடாடிவிரும்பியழுந்தியகண்
ணேடாடிவடிந்தவிளங்கனிதே
னாடாடியுவந்தளியொத்தனவாம்.

உரை.— வான்வீட்டிலுளதாயொளிரு மழகுகாட்டியமுகத்திலாடிவிரும்பி யழுந்தியகண்களே பூவிதழ்களாடிவடிந்த வினியவிளந்தேனுட்கொழித்துக் களிகூர்ந்தவண்டுகள்போல்வனவென்க. (௧௫)

குறையீர்ந்துயர்வான்குடியாயவிவட்
கறையீர்த்தெழில்காணவெமக்கிருகண்
முறையீந்தலதாயிரகண்முதலா
மிறையீந்தனனேவினிதென்றறைவார்.

உரை. — குறையொன்றின்றி வான்குடியாகியவிவள் கொண்டமாசில்லாதவழகினைக்காண நமக்கிருகண்ணன்றி, யாண்டவனாயிரங்கண்கொடுத்திருந்தால் நல்லதென்பாரென்க. (௧௬)

மறைசெய்தவனப்பெனவாய்ந்தநலாள்
பிறைசெய்ததிலாவிழியும்முளமுஞ்
சிறைசெய்தனகாலுநலஞ்செயுநன்
முறைசெய்தனவேதெனவேமொழிவார்.

உரை. — வேதவடிவாய்விளங்குமிம்மடந்தை குன்றயின் றியெங்கள்விழியுமனமுஞ் சிறைசெய்தாளாயினு நமக்குச்சி றையினற் அன்பந்தோன்றும வின்பமேசெய்தமுறை யே தோவென்பாரென்க. (௬எ)

எள்வாரிலவிக்கவினலெமதுள்
கள்வாய்க்களிநாம்பெறலென்களவைக்
கொள்வாருமலாதுகொடுப்பவரோ
வுள்வாரியவின்புளரொன்றறைவார்.

உரை. — இகழ்வாரில்லாதவிவ்வடிவின லெங்கள்மனமே களவாய்ப்போய் நமக்குச்சந்தோஷமவந்ததென்ன? களவா ண்டாரல்லாதே பதிகொடுப்பாரு மின்பங்கொள்வாரோவெ ன்பாரென்க. (௬அ)

அருகாயினவானழகார்வதனம்
பருகாயினவெம்விழிபார்த்தலின
முருகாதளியுற்றிலரோவெமதுள்
திருகாதனகற்றிரளென்றறைவார்.

உரை. — கிட்டிவந்தவான்வடிவுள்ள முகத்தையருந்தியவி ழியாற்பார்த்து நாமுருகாதிருந்தால் நம்மனமே யசையா தபாறையாயினதென்பாரென்க. (௬௯)

அவளோடினிதாய்மணமேயமைவா
னுவமோடிறையோனுளமொத்தனனே
த்வமோகையனேதகவானவனே
வெவனேவிவளெய்துவனென்றறைவார்.

உரை. — அவளோடினிதாய் மணமுடிக்கத்தக்கவனே யா ண்டவன்சித்தத்துக்கொன்றுபட்டவனே மாதவனே வொரு வானவனே யாரோவென்பாரென்க. (௱)

மின்பட்டமடந்தைவிடங்கமுறி
மன்பட்டமணம்பெறுவான்முதலோ
னன்பட்டனதாணவம்வீட்டுநயம்
பின்பட்டனன்வான்பெறுமென்றறைவார்.

உரை.— மின்னுமிப்பெண்ணின்குடங்கை யடைந்துநிலை கொண்டமணத்தைப்பெறத்தக்கவன் றப்பாமலாண்டவன் றன்பாதத்தையு மோக்ஷப்பேரின்பத்தையும் பின்படைந்து வானுலகமடைவானென்பாரென்க. (௱௧)

அறைவாரறைநீக்கியருந்தவனும்
குறைவார்கையிலேதனியொவ்வொருகோ
லிறைவாய்முறையென்றதையீந்தெவரும்
முறைவாய்விதிகேட்பமொழிந்தனனால்.

உரை.— இவையும் பலவுஞ்சொல்லுவா ரோசையமர்த்தி யருந்தவனாகியசீமையோ னங்கேகூடினவர்க்கெல்லா மொவ்வொருத்தனுக்கொவ்வொருகோலுங்கையிலேதந்து கடவுள்கட்டளையிட்டதென்று முறையோடெல்லாருமாண்டவன் குறித்தமணத்துணை காட்டவேணுமென்று கேட்கச்சொன்னானென்க. (௱௨)

மொய்ப்பட்டலைநீர்முடுகுந்தலமேல்
மெய்ப்பட்டெதிரற்றொளிர்மின்கொடியைக்
கைப்பட்டுறலோர்ந்துகளித்தெவரும்
மைப்பட்டவளன்றனிலஞ்சினனால்.

உரை.— கடல்சூழ்ந்தவுலகி லெதிரின்றி விளங்கிய மின் கொடியை மணஞ்செய் தடையலாமென்றெல்லாருங்களிகூர்ந்திருக்க வளனோவென்று லதற்குப்பயந்திருந்தானென்க. (௱௩)

திறலர்திருநீரியதிங்கொடியைப்
பெறலாகவெனக்கொருபேறுளதோ
துறவாய்மணநீக்குபசொல்லியபின்
னுறலாமணமோவெனவுள்ளினனால்.

உரை.— தேவசெல்வத்தினாலலங்கரித்த பெண்ணையடை
ய.வெனக்குப்பேறுமில்லை யிருந்தாலுந் துறவினால் மணஞ்
செய்யேனென்றுறுதிகொண்டபின்பு மணமாகுமோவென்
றுநினைத்தானென்க. (௱௪)

உள்ளும்பொழுதேயவனேந்தியகோல்
கள்ளுங்கடியும்பொழிகாமரிதழ்
விள்ளுஞ்செழுவெண்மலர்பூத்தமையான்
மள்ளும்விண்ணாலயமல்கியதே.

உரை.— இவைநினைத்தபோதிவனேந்தியகோல் மதுவும்
வாசமும்பொழிந்த வழகிதழ்மலர்ந்த வெண்மலர்பூத்துத்தே
வாலயமெங்கும் பரிமளமேபடர்ந்ததென்க. (௱௫)

காம்பாவணிகாட்டியகன்னிநலத்
தேம்பாவணியிவ்வணியோர்ந்தபிரா
னும்பாவணிநம்பியைநல்கிடவோர்
தேம்பாவணியாங்கொடிசேர்த்தனென்றார்.

உரை.— அடங்காதவழகினைக்காட்டிய விக்கன்னியி னல
த்திற் கிவ்வுலகழகெல்லாமேற்றதல்லதென் றாராய்ந்தசுவாமி
யிவளுக்குமெலியர்தநலங்கொண்ட துணைவனைக்கொடுத்தற்க
டையாளமாக வாடாதமாலையாகியபூங்கொடியைச் சூசைக்கு
த்தந்தாரென்றுரென்க. (௱௬)

செழுந்தாய்துகிர்சேயடிபொன்னிறவாய்
விழுந்தூவியவெண்சிறைவேய்புறவங்
கொழுந்தூவிகொடோங்கிவளன்றலைமே
லெழுந்தூவியைநீட்டியிருந்ததுவே.

உரை.— அப்போது நற்றாயபவளக்காலும் பொன்னிற
வாயுந்தோன்றி வெள்ளிறகுள்ளவொருபுறா தன்னற்சிறகைக்
கொண் டேயரப்பறந்து வளனாகியசூசைதலைமேனின் றெழுந்
தவிறகு நீட்டியிருந்ததென்க. (௱௭)

கண்ணுமணநான்செயலாங்கசடென்
றண்ணுனியசூசையுளோர்ந்தருக

விண்ணுதனுரந்தரவேவெருவற்
றெண்ணுதனகாட்சியையீந்தறைவான்.

உரை.—கருதாதமணத்தை நான்செய்யவே யெனக்குக்கு
ற்றமாகுமேயென் றுள்ளேகுசைதாணி யுளைந்துருகும்போ
து வுனுலகின்யகன்ச்சந்தீர்த்துத் துணிவுகொடுக்க நினைபர
தகாட்சியுந்தந்து மனதிலேசொல்லுவானென்க. (௱௮)

துறவாதறுடர்ந்துமணந்தடரா
துறலாவதெனோதிருவென்னுளமா
யறவால்யமாயவணங்கினை நீ
பெறவாவியபெற்றியதேபெறுவாய்.

உரை. — துறவாகவிரும்பி யிம்மணத்தை வெறுப்பதெ
ன விதுவென்றிருவுளமாகி யறத்தினுலயம்போது மிம்ம
த்தையை நீகொண்டால் நீவிரும்பினபடியாகுமென்றான் க
டவுளென்க. விரும்பினபடி துறவுதானே. (௱௯)

என்றாடொலியாயிளவெண்புறவுந்
தன்றாவிபுடைத்துயர்தாவியகால்
வன்றாயொளிவீழ்ந்துவளனீறலைமேல்
மின்றாவிநிலாமுடிவேய்ந்ததுவே.

உரை.—இவ்வொலி மனதிலேதோன்றியபின் னிளவெண்
புறவு மிறகடித்துயரப்பறந்து நற்றாயவொளிகளைவிட்டுவெள
ணீறலைமேற் கதிர்பொழிமுடியேதோன்றி விளங்கிற்றென்க.
(௱௰)

வேய்ந்தானொளிவேந்தெனவேய்ந்தவெலா
மாய்ந்தானருளேயளியேயமுதே
தோய்ந்தான்கடறோய்ந்தென வம்பரினும்
வாய்ந்தான்றொழுதான்மதுவாகையினான்.

உரை.—அப்போது குசை சூரியனைப்போலத்தோன்றி
னான், காண்பித்ததெல்லா முள்ளாராய்ந்தான், கடலுட்டோ
ய்ந்தார்போலே யருளு மன்புமின்பு மிவற்றினுட்டோய்ந்

தான், வானவரினும்பெருமைகொண்டான், கடவுளைத்தொழு
தான் மதுமலர்க் கொடியையேற்றினவனென்க. (௱௰௧)

விண்ணுங்கவினுர்வயதீராழுகொள்
மண்ணுங்கலைதேய்த்தொளிர்காட்கொடியை
வெண்ணுங்கொடுமோர்வயதேகிமண்ற்
தெண்ணுங்கொடியான்செயவான்விதியே.

உரை.—விகுந்தவடிவோடு முதிர்ந்தபதினாறுவயதுள்ளகு
ளிர்ந்தபிறைபித்தொளிர்பாதத்தாளாகிய மரியென்பவளை
மணஞ்செய்ப முப்பத்துமூன்றுவயதிலைதெளிபூங்கொடி
யேற்றிய சூசைக்குக் கடவுளின்கட்டளையாயிற்றென்க.
(௱௰௨)

## வேறு.

வடியமலிமதுநுகரவளியின மலைாமருவனவழியெனு
நெடியகொடியுடனுரியவரநிலைநிகரினிறையமைவளனின்மே
படியவிழிவிழிபடியமனமன மினிதில்விழவிழுபரிவுடன் [ற்
முடியவருமணமுரியதுணையிவன் முறையின்மொழிகுவரெவ
ருமே.

உரை.—வடிந்தமதுவைவுண்ண மலர்ந்தபூவின்மேல் வ
ண்டுகள்மொய்ப்பதுபோல நீண்டகொடியேந்தி யொப்பில்
லாவரத்தொகையடைந்த சூசைமேற் கண்ணெல்லாமு மன
மெல்லாமும்விழவேயாசைபோடிவனே யிம்மணத்திற்குரி
யதுணையென்பரெவருமென்க. (௱௰௩)

அருப்புவிரைமலர்தளிர்த்துநறுமது வவிழ்த்தவளனு
டைகொடியினைக் [வவர்
கருப்புவிவினிடைதொடுத்தபசுமலர் கதிர்த்தபகழிகொலெனை
விருப்புவிடவதுகுளிர்ச்சிவிடுமிது நிகர்த்தவினையலதெனவி
வர்
விருப்புமலியனகவத்திவினையறவிதித்தவிருதெனவெவருமே

உ ரை.—வாசவரும்புகளைக்கொண்டு மதுவைவடியும்வள
ர்ந்திய கொடியைக்கண்டு கருப்புவில்விலேகோர்த்த பூங்

கணையோவென்பார்சிலரே, அப்பூங்கணை வருத்தஞ்செய்யு நெருப்பேவீசும், இம்மலரோ மனங்குளிரத்தலையேவிடுமாகையா லிதற்கது நிகரல்லவென்பார்சிலரே, உயர்ந்தவாசையால் முடித்ததவத்தினு லெவ்வாதருமறையோடு வந்தவிருதிது வென்பாரெவருமென்க. (௱௰௪)

அன்றாசையொடுநின்றவனைவரு மங்கணமைவனகா
ணலாற்
கன்றுமனமெழவின்பமலிகடல் கன்றிமுழுகியவேலையே [ச்
நின்றகுரவனுமன்றகொடியொடு நின்றவளனினைவரவெனு
சென்றதுணையடி துன்றிவளனலவ சிந்தைமிசைதொழுதா
னமரோ.

உரை.—அன்றங்கே யாசையோடுநின்றவரெல்லாரு மரனதெல்லாத்தையுங்கண்டு மனமிளகி யின்பக்கடலின்முழுகியிருக்கக் குருவாகிய சீமையோன் வாசக்கொடியேந்தியசூசையை வரச்சொல்லி யவனும்வந்து குருவின்பாதத்தைச்சென்னிமேல்வைத்துத் தொழுதானென்க. (௱௰௫)

நாணநளினமுநாணமதியமு நாணவிணையவுநாரியைக்
காணமனமெழுஞானவொளியொடு காமமறவுறுகாதலாய்க்
கோணமரபறுஞானகுருவடி கோதையெனவணிகோதையும்
யாணரொளியொடுசாயுபிறைநுத லீசனடியுறவேற்றினள்.

உரை.—தாமரையு மதியமுமெவையு நிகராமல்நாண வழகியபெண்ணைக்கண்டவளவில் மனத்திலெழுந்த ஞானவொளியினாற் காமமற ஞானக்காதல்கிளம்பவே மனக்கோட்டமில்லாத குருப்பாதத்தை மாலையாகவணிந்தமடந்தையாகிய மரியென்பவளு மொளியின்வடிவோடுசாய்ந்தபிறைபோலத்தன்னெற்றி குருவடிசேரவிழுந்துவணங்கினளென்க. (௱௰௬)

வாய்த்தவொளியிருவானசுடரினை மானுமிருவிழைவா
ழ்கெனச்
சாய்ந்தமுனிவரனுசிமொழியொடு தாவியணைகுபுதாங்கினு
னாய்ந்தவிறையவனவ்விதிமுறை யாகியிணையெனவாசியால்
வேய்ந்தமணிமினி மேவிமுடிதர வேதமுறையெனவோதி
னன்.

உரை.— வாய்ந்தவொளிவிடுமிருசுடரைப்போலு மிருவரைவாழவென்று சாய்ந்தமுனியாகியசீமையோனாசீர்வாதஞ் சொல்லிமார்போடணையத்தாங்கி யாண்டவனேவலா லிவரைச்சேர்டெனத்துதித் தினிவேதமுறையின்படியே மணமுடிப்பதுதானேயென்றானென்க. (௱௰௭)

தாந்தள்மிசையொருதாமரையினலர் கிணலெனவருமா
தவன்
காந்தள்விரியுங்கைநானமலர்மிசை காந்தைகரமணிவாகிவான்
வேந்தனுமதுரிதாயமுறையுரு மேவிவரவெனுமாசியோ
டேந்தமறைமுறையேதில்முடிதர வேதிலருமணமாயதே.

உரை.—கார்த்திகைப்பூமே லிசைத்ததாமரைபோல மணவாளன்விரித்தகைமேற் பெண்கையைக்கூட்டிச் சீமையோன்வைத்துக் கடவுள்மனிதனாகி யுங்கள்கோத்திரத்தின் வழியாகவரக்கடவதென் றாசீர்வதித்து வேதமுறையெல்லாங் குறையின்றிமுடித் தரியமணமேயாயிற்றென்க. (௱௰௮)

முடுகுமுரசொலிமுடுகுமுழவொலி முடுகுமுருடொலித்
முடிவிலாக்
கடுகுபறையொலிகடுகுகலமொலி கடுகுகடமொலிகனிவெழா
தொடுகுதுழலொலிதொடுகுகுரலொலி தொடுகுதுதியொலி
தொடுதலாற்
படுகுமுகிலொலிபடுகுகடலொலி படுதவிலமணமாயதே.

உரை.—முரசும் முழவும் முருடு மொருபாலோசைமுடுகப் பறையும் வீணையுங் கடமு மொருபால்கடுகிமுழங்கக் குழலும்பாடுவர்குரலுந் துதிப்பர்வாழ்த்துதலு மொருபா லினிதாய்த்தொடர மேகத்தின்முழக்கமுங் கடலின்முழக்கமும்படவே குறைபடாதமணமாயிற்றென்க. (௱௰௯)

வாழியறவுருவாழிமறையுருவாழிதிருவருமாதுவீர்
வாழியெமதுயிர்வாழியுலகுயிர் வாழியுயிருயிர்போலுவீர்
வாழியருணிலைவாழிதவநிலை வாழிநிலநிலையாயினீர்
வாழியெனவிவர்வாழியெனவவர் வாழுமருமணமாயதே.

உரை. — அறத்தினுருவும் வேதத்தினுருவுஞ் செல்வத்தி
னுருவு நிகர்ந்தவரேவாழி, எங்களுக்குயிரு முலகிற்குயிரு மு
யிர்க்குயிருநிகர்ந்தவரேவாழி, அருளினிலையுந் தவத்தினிலையுநி
லத்தினிலையுமானவரேவாழியென் றவரவர்சொல்ல வாழ்வரிய
மணமாயிற்றென்க. (௱௨௰)

பொறுமையறுபகைபொதுளுபழியுமர் பொதுளுசி
னமிடர்புரையறு
நறுமையறுசலநணுகுமறமருள் நணுகுமிருண்ணிசிநயமறுஞ்
சிறுமையுறுதுயர்செறியுமடிமிடி செறியும்வெருவிழிசினுகு
நோய்.
வறுமைமறுபவமனையவிவையினி மடியவருமணமாயதே.

உரை. — பொறுமையில்லாதபகைகளும் பழிப்போர்க
ளுங் கோபமு நன்மையில்லாதசலமுங் குற்றமு மிருண்டம
யக்கமு நயமில்லாத சிறுமையுந் துயருங்கேடுஞ் சோம்ப
லும் பயமு நோய்களும் வறுமையு மாசும் பாவமு மிவையெ
ல்லா மினியொழியும்படிக்கு மணமாயிற்றென்க. (௱௨௧)

நிறையுமொளியொடுதிருவுநயமொடு நிதியுநனியொடு
நெறிவழா [ணெறுப்
முறையுமகிழ்வொடுகலையுமறிவொடு முயலும்வலியொடுமுர
பொறையுமளியொடுபொருளும்வரமொடு புகழுநலமொடு
புரையிலா
மறையுமருளொடுதவமுமறமொடு வளரவருமணமாயதே.

உரை. — கீர்த்தியுஞ் செல்வமு நயமு நிதிய நீதிமுறைகளு
மின்பமுங் கல்வியு மறிவுமுயற்சியும் வல்லமையும் பின்வாங்
காதபொறுமையு மன்பும்பொருளும்வரங்களும் புகழுநன்
மைகளுங் குறையில்லாதவேதமுந் தயையுந் தவமு நல்லறமு
மிவையெல்லாம்வளரும்படிக் கவ்வரியமணமாயிற்றென்க.
(௱௨௨)

ஓசைபெழுபுகழோதவெழுகட லோதமெழுமெனவே
தியார் [திலாக்,
பூசைபெழுதுதிதூபமெழுபுகை போதுமெழுவெறிப்போழ்

சூசையெழுமொளிகோதையெழுமொளி சோதியிணையென
வேய்தலா
லாசையெழுநயமாயவெழுதிரை யாழவருமணமாயதே.

உரை. — சொன்னபுகழோசைக ளெழுந்தகடலோசை போலவுங் குருக்கள் செய்யும்பூசையின் றுதிகளுந் தூபமுத லெழு நற்புகையுஞ் சித்தின மலர்விடும்வாசமுமூடியாழச்சூ சையிடத்திலு மரியென்பவளிடத்திலு மெழுந்தகதிரோ சூரிய னைப்போலத்தோன்றவு மாசையேயெழுந் தெல்லாருமின்ப க்கடலிலாழ்ந்தழுழுக மணமாயிற்றென்க. (௱௨௩)

கன்னிமுறையொடுநாயகனையொளி காலுமுடுவெனவீ
னுத
லென்னினியமுறைசூடுமிவளென வேகபரனிடுமேவலாற்
றன்னியிவடுணையாகமணமமை போதிவனுள நாயகற்
புன்னிமருவியவானமுளர் துதி யோதவருமணமாயதே.

உரை. — கேடின்றி நட்சத்திரந்தன்கதிர்விடுவதுபோலவி வள் தன்கன்னிமாறுமற் கடவுளைப்பிள்ளையாகப்பெறுவளெ ன்றறிந்த நாயகனேவலா லவளுக்குமணத்துணையாகச் சூசை யமைந்தபோ திவன்கற்பின்மாட்சிமையெண்ணிய வானவர் துதிகளைச்சொல்லிக்கொண்டிருக்க வரியமணமாயிற்றென்க. (௱௨௪)

பாடமடவரர்பாடவிறலியர் பாகுநனிசெவிமேயலா
னூடநயநலநாடுமௌவுட னுகிநகரொடுநாடெழாக்
கூடவொளிவிரிவானவுலகினர் கூருகளியிசைகூடியின்
பாடவிருவுலகாகவளவற வாழவருமணமாயதே

உரை. — மாதருங்கன்னியரும்பாடவிற் பாகின்ப மிரு செவியருந்தவு நாடியவின்பமாலைக்களவாகி நகருநாடுமெ ழுந்துயரவுங் கூடவிளங்கியவானுடையோர்களிகூர்ந்தவிசை கள்கூடியின்பத்திலுட்கொழிக்கவு மிருவுலகமளவின்றிவா ழவே மணமாயிற்றென்க. (௱௨௫)

ஓயவினையினியோவவிலநிலமோரகையெழுகடலூடிலாய்
மாயவிருடவிர்வானநிலையினர் வாழியெனவெனவாசமார்
தூயமலர்மழை தூவியிசைமழை தூவியொளிமழைதூவலா
லாயவிருவுல காகவளவற வாழவருமணமாயதே.

உரை.—இனிவினையெல்லாமொழிந்து துன்பமின்றிப்பூவுலகங்களிக்கடலூடமிழ்ந்தி யிருளைத்தவிர்த்தவரானவர் வாழி வாழியென்று வாசமலர்மழையு மின்னிசைமழையு மொளியின்மழையும் பொழிந்திருக்க விருவுலகமு மளவின்றிவாழ வம்மணமாயிற்றென்க. (௱௨௬)

ஓல்லையுளியவையுள்ளுமுறைசெயு முண்மையுளபரஞ்
சிதந்
தெல்லையிலநயமுள்ளும்மாரு மெண்ணியுறைவனவாசியோ
டல்லையறுநெறியுள்ளமுனிமுத லன்னவருமிடுமாசியால்
வல்லையிருவுலகாகவளவற வாழவருமணமாயதே.

உரை.—நினைத்தவை யந்நேரமே நினைத்தபடிசெய்யவல்லவனாகிய பராபரன்முதற்கொண் டளவில்லாக்களிகூர்ந்த வானவரு மிருளகன்ற நன்னெறிவழுவாத முனியாகியசீமையோனு மற்றனைவருந்தந்த வாசியைக்கொண்டு வானுமண்ணும்வாழும்படிக் கவ்வரியமணமாயிற்றென்க. (௱௨௭)

## வேறு.

உரைத்தவிதங்கொடாயமுறை யுவப்பினடந்தநாள்பல
விரைத்தகவுண்டவாகையனை விளித்தகனுந்தனூரினுறத் [வும்
திரைத்தகவுண்டவார்வமொடு திளைத்தருளுண்டவாசியறை
புரைத்தணிவின்றிவாழுமுனி புயத்தைப்பணிந்துகூறினனால்.

உரை.—சொன்னமுறையா வினிதாய்ப்பலநாளும்போனபின்பு வாசம்பொழிந்த விருதுடையகுசையையழைத்துத் தூரமகன்ற தன்னூருக்குப்போகச்சொல்லி யாறுபோலப்பொங்கிய வன்பின்றயையோ டாசீர்வாதந்தந்து குற்றமொன்றின்றி வாழுஞ்சீமையோன் குசையை மார்போடணைத்துச்சொன்றனென்க. (௱௨

அளிப்படவந்தவேவலுண ரளிப்படவிண்டவாகைவள
ஞெளிப்படமன்றலாயவர முவப்பிவணங்கலாகுமுறை
வெளிப்படவன்றுவேணுமென விழுப்படையன்புலாவியுறு
களிப்படநின்றவீசன்டி கருத்திலணிந்துதாழுவனே:

உரை.— அன்பினால்வந்தகட்டளையதென்றுணர்ந்து குளிர்ப்படமலர்ந்தகொடியுடையகுசையுங் கீர்த்திபடமுடித்தணைத்தோடு தனக்குவந்தநன்றியறிந்தொழுகும்படி செய்யுங்கருமம்வெளிப்படுத்தக்கேட்டு மிகுந்தவன்போடுகளிகூர்ந்து நின்ற குருவின்பாதத்தில்விழுந்துதொழுதானென்க. (௩௨௯)

உடுத்தவநந்தஞானமுறை யுரைத்துமிழ்கின்றமானமு
கொடுத்தவரங்களாலுயரு குணத்துவணங்குமாவரனை [னி
யெடுத்தபினுண்டவோகையெழவெடுத்தமுதிர்ந்தவேதமுறை
யடுத்தவநந்தநீதிபல வவிழ்த்தனபின்புகூறவனால்.

உரை.— தானணிந்த பரமஞானம் பிறர்க்குரைக்கு மாட்சிமையுள்ளமுனியே யுள்ளடைந்த வரங்களினளவாகத் தாழ்ச்சிகாட்டியமாவரத்தோனாகியகுசையையெடுத்தபின் பிரியமாக முதிர்ந்தவேதத்திற்கடுத்த வநந்தநீதிமுறைபலவுஞ்சொன்னபிறகுசொல்வானென்க. (௩௩௦)

இருத்தியகன்றகேணியற விறைத்தளவுந்திபூறுமெனப்
பொருத்தியமைந்ததேவவருள் புணர்த்தவறங்கொடேறுமது
கருத்திலொளித்தபோதுபசுங் கலத்திலொளித்தநீரதறிந்
தருத்தியெழும்பவாழியென வணைத்துவிரும்பியேவினனால்.

உரை.— ஆழ்மாய்த்தோண்டியவகன்றகிணற்றுநீ ரிறைத்தவளவாகவுயர ஊறுவதுபோல வடைந்ததேவவருளின் வரங்களுநன்றியறிந்து செய்தவறங்களினளவாக வளருமல்லாலதற்குத்தக நடவாம லவ்வரங்களைமனதிலே புதைத்தொளித்ததுபோ லிருந்தாலோவென்னிற் பச்சைமட்கலத்தி லொளித்தநீர்போலக் கலமுங்கெட்டுநீருஞ்சிந்துமாகையா லடைந்ததேவ்வரங்களையறிந்தாசைகிளம்ப ஒழுகல்செய்வாயென்றவனைமார்போடணைத்துச் சொன்னான் சீமையோனென்க. (௩௩௧)

இடித்துமுழங்குமேறனைய விவற்றையறிந்தகோதையு
வெடித்துவருந்திமாறுமில் விதிக்குருமன்றுபாதமில் [ளம்
நெடித்துவதிந்தகோயிலில நெறித்துணைநின்றமாதரில
பிடித்துநடந்தவீதியில பெயர்க்குவனென்றுவாடினளே.

உரை.—இடித்தவிடைபோ லிதைக்கேட்ட மரியென்பவ ள்தன்மனம்வெடித்து வருத்தமாறும வினியென்னைப்படிப் பித்தகுருவின்பாதமுமின்றி நெடுநாளிருந்தகோயிலுமின்றி யறநெறித்துணைவராகநின்ற விக்கன்னிகளுமின்றியிந்நாள்வ ரைக்கு நடந்தமுறைகளுமின்றி நான்பிரிவேனோவென்று வாடினளென்க. (௱௯௨)

உடைத்தனநின்றுபேருமென வுயிர்த்தனமைந்தர்பே
ருமெனக் [மெனப்
குடைத்தழல்புண்டுழாவலெனக் குழைத்திடவொன்றுபேரு
பெடைத்துணையன்றில்வாடுமெனப் பெயர்த்துயிர்நின்றதேக
மென
வடைத்தவரந்தைகாலுமென வரற்றிவருந்திவாடினளே.

உரை.—அடைந்ததிரவியம் போக்கடித்தாற்போலவும் பெற்றபிள்ளை தாயைவிட்டுப்பிரிந்தாற்போலவுங் குடைந்த புண்ணை நெருப்புத்துழாவினாற்போலவு முடலிலுழைத்தவோரு றுப்புப்பிரிந்தாற்போலவுந் தன்பேடையைப்பிரிந்தவன்றில் நொந்தாற்போலவு முயிர்பிரிந்துபோய்நின்றவுடல்போலவு மரியென்பவ ளடைந்ததுன்பங்களை வாய்விட்டுமிழ்ந்தாலெ ன்னப் புலம்பியழுதுவாடினளென்க. (௱௯௩)

இருத்தியதந்தைதேவவுள மெனத்தெருளுண்டுதேறியுய
கருத்திலணிந்தமாணமுனி கழற்கள்பணிந்துகாதலெழப் [ர்
பொருத்தியவன்பினோகையொடு புடைத்துணைநின்றபேதை
யருத்திகலந்தநீரிரிய வரற்றியணைந்துதாழுவளே. [யரா

உரை.—அந்நாள்வரைக்கு மங்கைதன்னை யிருத்தினதகப் பனாகியகடவு ளிப்போதுபோகச்சொல்லி யிதுவவன்றிருவு ளமென்றுணர்விற்றெளிந்து தேறி யுயர்ந்தசிந்தையிலணிந்த

சீமையோன்பாதத்தைவணங்கி யாசையோடு பிரியநட்புள்
ளமற்றக்கன்னிகளைக் கட்டிக்கொண்டு விவரு மவரு மன்பி
னாற்கலந்த கண்ணீரைவிட்டழுது தொழுதாளென்க. (௱௩௪)

கனத்திலெழுந்தவோதையொடு கனத்திலெழுந்தகூரவி
வனத்திலெழுந்ததீயனைய மனத்திலெழுந்தபீடையுறி. [னர்
யினத்திலெழுந்தவார்வமிக வியத்திலெழுந்தேறலொடு
தனத்திலெழுந்தகோயிலது தலத்திலெழுந்துபோயினளே.

உரை.—மேகத்தின்முழக்கம்போல வழுமோசைகிளம்ப மேகத்தினிறங்கொண்டகூந்தலார் கானகத்திலுள்ள செந்தீபோல மனத்திலே துன்பங்கொண்டு தங்களுள்ளிருந்தநட்பினளவாகப் பலசொல்லாற்றேறுதல்செய்து பொற்கோயிலுக்குப்போனாள் மரியென்பவளென்க. (௱௩௫)

உடுக்குலமுண்டுசூடினளு முருக்கொடுமன்றவாகைய
மடுக்குநெருங்கயாருமுறையணிக்குலமண்டுகோயிலுறி [னு
யெடுக்குநலங்கொணாயகனையிரட்டி யிறைஞ்சலாயினபின்
வடுக்குலமொன்றிலாதமுனி மனத்திலுவந்துகூறவனால்.

உரை.—மீன்முடியாளும் பூங்கொடியாளும் கூட்டமாயெல்லாரு நெருங்கியிருக்குங் கோயிலிற்போ யெவரையுந்தூக்கியளிக்குநாதனை மிகவும் வணங்கினபின்பு குற்றமொன்றில்லாதமுனிசீமையோ னினிதாகச்சொல்வானென்க.
(௱௩௬)

கனத்திவிழிந்துசாயவரை கரத்தில்விழுந்துபோவரும்
வனத்தில்வளர்ந்துபோகவயல் வயத்தில்மெலிந்துபாயவலை
யினத்திவிரிந்துபெருமில விளிப்படவந்தவாரியென
தனத்திலிருந்தவாழ்வினிமை தவிர்க்கனிறைந்தஞானமதே.

உரை.— மேகத்தினின்றுவிழ மலையின்கையிலேவிழுந் ததினின்று பெரும்போதரிய கானகத்தில்வளர்ந்தப்பால்போய் வயலிடத்தில்மெலிந்தோடிக் கடலிலேசென்றுபெருமில்லாம விழிவுகொண்ட வெள்ளத்தின்குணமே. அத்தன்மைத்தாயபொருளினால் வாழ்வுகளாகையி லிதைவிரும்ப[illegible]ம விருட்பதே.ஞானமாமென்றானென்க. (௱௩௭)

அறத்துணையன்றியாய துணை யதற்றமறிந்துறாமையெ
ன
றிறத்துணை நம்புவீரர்பிறர் திறத்தில்மெலிந்துமாள்வரென்ன
மறத்துணை தந்ததீதுதரு மடத்திழிவென்றுதேவவரு
ளுறத்துணை தந்தபாதமது வுயிர்க்கொரநந்தவீடெனவே.

உரை.— அறத்தின்றுணையன்றி மற்றத்துணைசமயமறிந் துதவாதே, தன்வல்லமைநம்பின வீரர்மிஞ்சியவல்லமையுடை யார்கையினாற்சாவார், பாவத்தினால்வருந்தின்மை யறியாமை யு மிகழ்ச்சியுந்தருமே, தேவகிருபையினா லடைந்தகடவுளி ன்பாதத்துணையோவென்னி லதுவுயிர்க்கநந்தவீடாமென்றா னென்க. (௱௩௮)

இவற்றையியம்பிமீளமறை யியற்படுமெண்டுநீதிபல
தவத்தையணிந்ததேவமுனி தரத்தயைதந்தவாசிதர
வவற்றையுணர்ந்தபோதிருவ ரகத்திலுயர்ந்துபாதமல
ருவத்தையுவந்துதாழுகுவ ருகத்திலுதிர்ந்தமீனனையார்.

உரை.— இவையும் பலநீதிமுறைகளுந் தவமணிந்ததேவ முனிசொல்லித் தயையோடாசீர்வாதமுந்தரவே அவையெல் லாமினிதாய்க்கேட்ட விருவர்மனத்திலோங்கி யவன்மலர்ப் பாதத்தி லாசையோடுவிழுந்தார் கடையுகத்தில்விழு மீன்க ள்போலவென்க. (௱௩௯)

இசைப்படவொன்றியீரறமு மெவர்க்குமிலங்குமாடியி
நசைப்படநின்றவீசனடி நயப்பில்வணங்கவீழுமுறை [னர்
சுசைப்பவன்முன்றனீரடிக டொட்டத்துவணங்கவேகனவில்
விசைப்படுதிங்கள்மாவியொடு விழத்தகைகண்டவாறெனவே

உரை.— இல்லறந்துறவறமென்னு மிரண்டறமு மொன் றாயிசைத் தெல்லாருக்குங்காட்டுங்கண்ணாடிபோலு மிவரிரு வராசையோடு நின்றகுருவின்பாதத்தில் விழுந்தமுறையே முன்னாளிற் சுசைப்பவன் றன்பாதத்தைவணங்கச் சூரியனு ஞ்சந்திரனும் விழவே கனாவிற்கண்டதன்மைபோலுமென் க. (௱௪௰)

அணித்தகவெந்தைகூறவினி தளித்தகமன்றலாதவொடு
பிணித்தமன்ங்கள்வேறுமில பிரித்தவிரண்டுதேகமிடை [ப்
கணித்தவிதங்கள்மாறுமுறை களித்துயிரொன்றுவாழவென்
பணித்தனரங்கியாருமறை பழிச்சல்கடந்தவோகையிலே.

உரை.— தயாபரன்சொற்படி யினிதாய்முடித்த மணத் தோடுகட்டப்பட்ட விருமனமும்வேறுபடாம விரண்டுட விடத்தி னினைத்தமுறையின்மேற் களிகூர்ந்த வோருயிரோவா ழவென் றெல்லாரும்பிரியமோங்கித் துதித்துச்சொன்னாரெ ன்க. (௱சக)

மிகுத்தனரங்கண்யாருமருள் விருப்பிலருந்தியாசிகளை
வகுத்தனரங்கணுயதிரு மணத்தில்மிகுந்தசீரமைதி [கள்
தொகுத்தனரெங்கும்யாருமில துணைப்படவொன்றியேகணி
ப்குத்தனரங்குஞானவொளி பரப்பிநடந்துபோயினரே.

உரை.— கூட்டமாயங்கிருந்தயாவருமருளோங்கின வா சையோடுதுதிகளைச்சொல்லி யந்தத்திருமணத்தின் மாட்சி மைமுழுவதுமறிவாருமின்றி [illegible]ழித்துணையாகவணிகளைவிட் டுஞானவொளியைப் பரப்பிப்போனாரென்க. (௱சஉ)

## வேறு.

ஆங்குவம்மின்வம்மினென வாரணம்புனைந்தவடிவாக
வந்தணைந்தாகலா [தருந்தவரவே
தீங்குநின்மினின்மினெனவாகமுண்டவின்பமிக யாரும்வந்
தாங்கள்வம்மின்வம்மினென்யாரும்வந்துமண்டவொடு தாவி
முன்புபின்புவரலா [நின்றுபெயர்வார்.
னீங்கநின்மினின்மினெனமீமுழங்கெழுந்தநகர் நீடுநின்று

உரை.— இவரை நகரிடத்திற்கண்டயாவரும் வாரும் வாரு மென்ப, வேதமேவடிவாகவணிந்த விவ்விருவர் கடந்துபோ காம லிங்கேநில்லுங்கள் நில்லுங்களென்ப, இவரைக்கண்ட தினு னிறைந்தவின்பமடைந்தவர் மற்றவரைபழைத்துவாரு ங்கள்வாருங்களென்ப, எல்லாருமண்டி முன்[illegible]ம்பின்னு

ந் தாவிவருநெருக்கத்தைவிலக, நில்லுங்கள் நில்லுங்களென்ப, இப்படியெங்குமுழங்கின நகரா நின்றுநின்று மெள்ள ர்வயகலுவார். (௱௪௩)

காவிவிண்டமன்றுமிதழ் காலுமின்பமொன்றுமுறை
காலுகின்றதன்றியியலாற் [ண்டுகொண்டதுதிபின்
பூவின்புமிழ்ந்தவுயிர்போகுதென்றுநின்றநரர் பூசைகொ
ளேஞ்சியம்பொருந்தவெறுமாயுடம்புநின்றவுயிரோவுகின்று
பின்றுசெலவே [சினின்றகன்றுபெயர்வார்.
கோவினம்பொருந்தினவர் கோளொளிர்ந்திரிந்தமுறை கோ

உரை.—மலர்ந்தசெவ்வாம்பல் வாசவிதழ்விடுந்தேன்போ வினியசெல் விருவர்சொல்விப்போதலாற் பூவிலுமினியவுயிர்போகுதென்று நின்றமனுவெல்லாம் வணங்கித்துதித்தபின்பு சித்திரங்கள்போல வெற்றுடம்பாய்நின்று தன்னுயிரவரைப் பின்செல்லவிடவே யிராசகுமார ரிருசுடரொளிர்ந்து சாய்வதுபோலத் தெருவெல்லாமகன்றுபோனார். (௱௪௪)

பாசையுற்றுருண்டவுருடேருருட்டிவந்தவழி மாசையு
ற்றொளிர்ந்ததனைய [நந்தநயனுய்ப்
வாசையற்றெழுந்தவர்போர்கழற்றிடங்கடோறு மாரிணைத்த
பூசையுற்றவும்பரிசைபாடலுற்றகன்றவழி போயொளித்தகு
ந்தனுறையுள் [றைஞ்சுமவரோ.
நாசரொத்தையென்றநகர்தாமடுத்தடைந்துறைவர் நாளடுத்தே

உரை.— பொன்னுருளையுருட்டினதேர் சாயும்வழியெல்லாம் பொன்னாகிவிளங்குவதுபோல வாசையறுத்தவருந்தவரிருவர்சேர்ந்தவிடமெல்லாம் வேதத்தின்ஞானதன்மை பரப்பி வணங்கியவானவருஞ்சூழப்பாடிக்கொண்டுபோக நெடும்வழிநடந்தொளிர்ந்த தன்பதிநாசரொத்தையென்னு நகரையடுத்தடைந்தார் நானடுத்துவணங்குமவ்விருவரொன்க. (௱௪௫)

ஏதமங்கொழிந்ததெனநோவணங்கொழிந்துநிறை யே
சிலின்படைந்துகடவுள் [ந்தபொழுதே
பாதமங்[illegible]ழுந்ததெனஞானமங்கிலங்கவிவர் பாழிவந்தடை

யோதமங்கெழுந்ததென வூரினின்றடங்கலரு மோடிவந்தடர்
ந்துமழைகொள் [ணடுமொலியே.
சீதமங்கதிர்ந்ததென வாய்மலர்ந்தறைந்தபுகழ் சேணழுந்த.

உரை.—இவர்வரவே குற்றங்களெல்லாமொழிந்து துன்பங்களுமொழிந்துபோய் நிறைந்தவின்பத்தோடு கடவுள்பாதந்தானே யங்கேயெழுந்தருளினதென்று ஞானமேவிளங்கத்தன்னகரி லிவர்வந்தபோது கடல்பொங்கவருவதுபோ லெல்லாருமோடிவந்து மேகங்கள்திரண்டுமுழங்கினதுபோல வானமுந்திரப் புகழ்களைச்சொல்லிச்சொல்லிக் கூப்பிட்டாரென்க. (௱சசு)

அருகுமண்டவந்தகொழுவிழியுவந்தருந்துநய னளவ
கன்றவந்துமிடையப் [டெருகவின்றியங்குளிர
பெருகுமண்டெழுந்ததுகள் வெளியில்மண்டிமண்டுமிருள்
முருகுமண்டமன்றமழையனையவம்புமிழ்ந்தமலர் முடுகிநி
ன்றமைந்தருளமே [தெழுந்துபுகுவார்.
பருகுமண்டநந்தவருளரிதுசிந்துகின்றிருவர் பதியமைந்

உரை.—அருகுவந்தவ ரளவின்றி நிறைந்கவின்பமடைந்த திரு வெல்லாருங்கூட்டமாய்மண்டிக் கிளம்பின தூசிகள் வெளியைமூடி யிருளர்குமென்று வத்தூசிகளெழும்பாம லெங்குங்குளிர்ந்திருக்க வாசனைபொழிந்த மழைபோல வாசமலர்ச்சிந்தி நின்றயாவருமுவப்ப வநந்ததயைசிந்தி யிவ்விருவர்தம்பதியடைந்துபுகுந்தாரென்க. (௱சஎ)

விதியெழுந்தொளிர்ந்தமறை வடிவணிந்தநந்தவன்
விருதணிந்தடைந்ததெனவான்
மதியெழுந்தொளிர்ந்தவடிமரியெழுந்தடைந்ததென மன
மெழுந்துவந்தமுறையா [ண்டுகின்றநகைசெய்
னிதியெழுந்தொளிர்ந்தவுலகுளரெழுந்தடர்ந்துவர நிறையம
பதியெழுந்தொளிர்ந்தநகர்புகுவரின்புமிழ்ந்துபுவி பரிவொ
டும்புரந்தவிவரே.

உரை.—விதியா லுயர்ந்த வேதவடிவணிந்தவருந்தவன் கு
லை மலர்.விருதேந்திவந்தானென்றும் பிறைமே[illegible]ந்தபா

தமுடைய மரியென்பவள் வந்தாளென்று மனமகிழ்ந்து
பொன்னுலக வானவரடர்ந்துவர மிகவுமாசைவருத்துவிக்கு
முயர்ந்தநகரைப்புகுந்தா ரினிதாய்ப் பூவுலகம் புரந்தளிக்கு
மிவரென்க. (௱௬௮)

தகவடைந்தவெந்தைதிருவடிகளங்கிலங்கவுழி தரவரங்
கொளங்கிருவர் [செறிந்துபுக்கவே
புகழுறுங்கெழுந்தமறைபுகநிறைந்தடர்ந்தவருள் புகவறஞ்
முகமலர்ந்துவந்தமரர்குடியமைந்துறைந்தநகர் முதிரநற்
தமுண்டமுறைக [னின்றடங்கமுறையோ.
ளகமவிந்துணர்ந்ததமிழ்க்கலைவருந்துகின்றதொடை யளவி

உரை.—மாட்சிமையுடைய கடவுள் திருவடிக ளங்கேவின
ங்கும்படி வரங்கொண்டவிவ ரங்கேபுகுந்தபோது கூடவே
தமுந்தேவவருளு நல்லறமும்புகவே முகமலர்ந்துமகிழ்ந்த
வானவருங் குடியாகவமைந்திருக்கு மந்நகரடைந்தநன்மை
படித்த நற்றமிழ்க்கவிஞர் வருந்தினுஞ் சொல்லத்தகுமு
றையோ விலையென்க. (௱௬௯)

## வேறு.

இற்றையினிதாயினபின் மற்றையெவருந்துடராக்
கற்றைமவிசோதிகருள் முற்றிமுகில்புக்கனைய
நிறத்தியனில்லாமையென வெறுத்தசிறிதோர்மனையுள்
ளறத்தியலின்மாண்புரிமை பெறத்தகவர்புக்குறைவார்.

உரை.—இவையெல்லா மாயினபின்பு மற்றெவருங்காண
வரவே கதிர்நிறைந்தசூரிய னிருண்டமேகத்துட் புகுந்தது
போலச் செல்வத்தினழகு நில்லாதென்றுவெறுத்ததோர் சி
றியமனையி லறத்தினால் மாட்சிமையுடையோர் புகுந்திருந்
தாரென்க. (௱௭௰)

புக்கவிவரோடுடை மிக்கநலம்யாவுமுறிச்
சொக்கவிழும்வானுலக ரொக்கநகை தூண்டவுறி
மீட்பதினியெந்தையுற வேட்பதுசெய்வீடிதெனிற்
கோட்ப[illegible]ல் நான்முறையின் கேட்பதினிவாழ்த்துளதோ.

உரை:— இவர்புகுந்தபோது கூட நன்மையெல்லாம்புகு
ந்துகூடவு மழகுள்ளவானுலடையோர் புகுந்து மீளவுமினி
மேலாண்டவனும்வந்துபுக வாசைசெய்யும் வீடதுவென்று
விதுக்குமேல் வளைவில்லாத நன்னூல்களாற்கேட்கத்தக்க வர்
ழ்த்துதலு முண்டோவென்க. (௱௫௧)

மங்குலிடைமாவியென வங்குநுழைவாரொளினு
மெய்க்குழுளர்காணவுளம் பொங்குநகைபூத்துவர
தெள்ளரியசேடர்மிசை யுள்ளமொடுமொருவிழி
கள்ளவிழுகானலர்கள் விள்ளவளிவீழ்வதுபோல்.

உரை.—மேகத்துள் நுழைந்தசெஞ்சுடர்போ லங்கிவர் நு
ழைந்தாலு மெய்க்குழுள்ளயாவரு மிவரைக்காணவாசையோ
டுவந்து தெளிந்தவடிவுடையவிருவர்மேல் வந்தவர்மனமும்
விழியும்விழுவது மதுபொழிந்தமலர்விரிந்தபோது வண்டு
கள்மொய்த்துவிழுவனபோலுமென்க. (௱௫௨)

திங்களையுரிஞ்சொளியை மங்கரியதாளினலாள்
நங்கையுரை ஞானமிகு தங்கவுரைசாற்றலொடு
மாலைமதுவாகைவள னூலையறைநுழையுமா
யாலைமதுவாகநிறை வேலைமடுவிட்டதுபோல்.

உரை.—பிறையைத்தேய்த்து மங்காமலொளிரும் பாதமு
டையமரியென்பவள் வந்தமாதருக்கு ஞானவிதிகளைச்சொல்
லும்போது மலர்க்கொடியேந்தியகுசையு மாடவர்க்குநன்
னூல்களைவிரித்து நுண்மையாய்க்காட்டவி னினியமதுவின்
னிறைந்தகடல்மடுதிறந்தோடியதுபோலுமென்க. (௱௫௩)

இவ்வுலகுள்ளாயபொழு தவ்வுலகுமாவலுறச்
செவ்வொழுகுதேவனருள் வவ்வுமிருமைந்தரினை
சேர்த்துமணமாக்கலிவர் நீர்த்தமணநேரியதோ
தோர்த்ததெனவோவெனவுள் ளார்த்தறைகுவார்சிலரே.

உரை. — பூவுலகமுண்டாக்கினநாளையிலே வானுலகுமா
ஞ்சபட நீதிநெறிவழுவாத நாயகன்றனையைகொண் டாகித்தாய்.

தகப்பனைச்சேர்த்து மணமுடித்தமுறைமையே யிம்மணத்துக்கி
ணையென்பதோ விதனாலது தோர்த்ததென்பதோவென்று
சொல்லுவர்சிலரென்க. (௱௫௪)

துப்பொளிருசெஞ்சுடரோ டொப்பொளிருமென்
மெப்பொழுதுமீதிரிய வப்பொழிலாண்டகையு [மதிய
மில்வெழிலையாக்குமென வவ்வெழிலையாக்கினரோ
குவ்வெழில்கொல்வானெழில்கொல் வவ்வலரிதென்றறைவார்.

உரை.—செங்கதிருள்ள சூரியனு மதற்கிணையாய வெண்
மதியு மெப்பொழுது மேல்விளங்கித்திரிய வாண்டவ னற்ப
ளிவிவர் வடிவினை நினைத்துண்டாக்கினரோ விவர்காட்டும்வழ
வழிவ்வுலகினழகோ வானுலகினழகோவென்று கண்டுபிடிக்
கக் கூடாதென்பார்சிலரென்க. (௱௫௫)

மன்னரதுமன்னனினி துன்னரியவொண்டவமே
துன்னலொடுதுய்த்துப்பய னின்னமகர்காட்டுமென:
தாவித்துசந்ததியின் மேவியிவர்வேய்ந்துறவே
யேவினன்றந்தனென வாவியறைவார்சிலரோ.

உரை.—அரசர்க்கரசனாகிய தாவிதன்செய்த வரியதவத்தி
ன் பயனைக்காட்டத்தாவிதன்கோத்திரத்தி லிவளையாண்டவன்
பிறக்கச்செய்தானென்று சொல்லுவர்சிலரென்க. (௱௫௬)

பொழுதுமிவர்பூணிருமை யெழுதுமறைகாட்டுமென
வெழுதுமறையான்றெனினும் பழுதிலிருகல்லெழுத
வேண்டியதுநீதியென மாண்டமறைகாட்டுமிவர்
மீண்டிவரைக்காட்டுமறை யீண்டறிதுமென்றறைவார்.

உரை.—எப்பொழுது மிவரணியர்கச்சூழ்ந்த வெழுதப்ப
ட்ட வேதத்தைக்காட்டுவதொன்றதினா லெழுதப்பட்ட வேத
மொன்றுண்டு மொன்றுமெழுதாமலிருகல்லிலெழுதினது நீ
தியென்று நல்லவேதத்தையிவர்காட்டுகின்றார், மீளவு மிவர்
மாட்சிமையை வேதமேகாட்டுமென் றிப்போதறிந்தோ மெ
ன்பார்[illegible]ரென்க. (௱௫௭)

பொய்வினைபிரித்தநயன் மெய்வினையுணர்த்துமிவர்
செய்வினையளிக்குமென நொய்வினைகுறித்தபரன்
மண்ணுலகும்வானுலகு நண்ணுமுறவோடுநா
ளண்ணுமெனவின்னமண மெண்ணுமெனுமோர்சிலரே.

உரை.—பொய்யாற்பிரிந்தநன்மைகளை மெய்யுணர்ந்தவிவர்செய்யுங்கருமமே தருமென்றுணர்ந்த பராபரன் மண்ணும் வானுமொன்று யுறவாக நாள்கிட்டினதென்றுக்கு மிம்மணத்தை நினைத்தானென்பார்சிலரென்க. (௱௫௮)

முனியவளிமொய்த்ததுணர் குனியவுமிழ்தேறலினுங்
கனியவிவையோதுதவி னினியவிருபோதுமுறி
நனைவருமிரண்டுபெயர் வனைவருமணம்பெறலாற்
புனைவருமநந்தமுறி யனைவருமகிழ்ந்தனரே.

உரை.—சினங்கொண்டுவண்டுகள்மேல்மொய்த்ததினால் வளைந்தமலர்பொழியுந் தேனினுமினிதா யிவையெல்லாஞ் சொல்லிச்சொல்லி யிருபொழுதும்போய் மலர்போலு மிவ்விருவர்முடித்தமணத்தினு லரியபெருமை யெவரு மடைந்து மகிழ்ந்தாரென்க. (௱௫௯)

தேங்கொடியையேந்தினனும் பூங்கொடியைவென்ற
தாங்குடியிருந்துமறை யாங்கொடிபடர்ந்துவளர் [வளுந்
அரியகொழுகொம்பனையர் புரியவரிதீரறமு
முரியமுறையோடிணையல் விரியவறைவாமினியே.

உரை.—வாசக்கொடியேந்தியகுசையும் பூங்கொடியை வென்ற மரியென்பவளு மிவ்விருவரங்கே குடியாயிருந்து வேதக்கொடிமேற்படரக் கொழுகொம்பாகிச் செய்தரியதுறவறமில்லறமென்னு மீரறங்களைச் சேர்த்திசைத்த உரியமுறைமையினிச்சொல்வாமென்க. (௱௯௰)

திருமணப்படலமுற்றும்.
ஆகப்படலம் - ௫ - இ - விருத்தம்
௪௱௫௰௩.

## ஆறாவது.

# ஈரறம்பொருத்துபடலம்.

### வேறு.

சூலவுற்றதிரையாழி சூழ்புவனத்தாங்குகின்ற
வலைவுற்றவுயிர்க்கெல்லா மாதர்வார்திருமணத்தா
னிலவுற்றபதத்தாளு நீர்மலர்க்கோற்பூமானு
முலைவுற்றவுளத்தஞ்சி யுளைந்திரங்கிவருந்தினரே.

உரை.— சுழலுந் திரைக்கடல்சூழ்ந்த பூமியிடத் தலையுமு யிர்க்கெல்லா மாதரவுசெய்யுந் திருமணத்தினாற் சந்திரனை மிதித்த பாதமுடைய மரியென்பவளுங் குளிர்ந்த மலர்க்கொ டியேந்திய பூமானாகியசூசையு மனத்திலஞ்சிநொந்துவரு ந்தினாரென்க. (க)

தேன்வழங்கும்பூந்துறையாஞ் செழுவாகையேந்துத
வன்
[யால்
வான்வழங்குமிறையோன்றன் மனமெழமுன்னுணர்த்தமை
மீன்வழங்குமுடியாடன் விளம்பரியமாட்சியொடு
கான்வழங்குந்தவப்புங்கங் கணித்தவனைவணங்குவனால்.

உரை.— தேன்பொழிந்தமலரின் றுறையாகிய விருதுடை யமாதவன்சூசை வானுலகினாயகன் முன்றனக்குக்காட்டிய காட்சியினால் மீன்முடிசூழ்ந்த மரியென்பவளுடைய சொ ல்லரியமாட்சிமையுந் தவத்தினுயர்ச்சியு மறிந்தமையா லவ ளைமனதிலே வணங்குவானென்க. (உ)

இருணீக்குந்துறவாக விதயநசைதூண்டெனினு
மருணீக்குங்கோற்றொடிதன் வாண்முகத்தாலெஞ்ஞான்றுங்
கருணீக்குங்கதிருயிர்த்த காட்சியினுளம்வெருவி [ன்.
யருணீக்கும்பொறிசெறித்தோ னஞ்சியுணர்ந்தலைசொலவா.

உரை.—தான்றுறவாக வாசைமிகவுங்கொண்டிருந்தாலுந் தெளிந்தகோற்றொடியாகிய தன்றுணைவியின்முகத்தி லெப்பொழுதும்பொழியப்பட்ட கதிர்களைக்கண்டு மனத்திலஞ்சி யருளினாற்பொறிகளையடக்கினதவத்தோன்குறைசை நினைத்தவைசொல்லானென்க. (௩)

மின்னியதாரகைமுடியின் விளங்கரியகாட்சியினாற்
றன்னியதோராவிபடத் தூயபளிங்காசுறுமென்
றுன்னியதாலாடவரோ டுரைப்பறியாமடவாளும்
மன்னியதார்த்துணையொடுத்தன் மனங்காட்டநாணுவளால்.

உரை.— மரியென்பவளுந் தான்முடியாகச்சூழ்ந்தமீன்களினுந்தெளிந்தவுணர்வடைந்ததினா லாவியேபடத் தூயபளிங்குமாசுகொள்ளுமென்று தானாடவரோடுபேசப்பழக்கமின்றி நிலைபெற்றவரியவிருதுகொண்ட தன் றுணைவனோடும் பேசித் தன்மனத்தையவற்குக்காட்ட நாணுவாளென்க. (௪)

ஒப்படையாத்துணைதந்தே யுடைக்கன்னிகாப்பானென்
றப்படையார்கலியென்ன வலைந்தமனத்துரஞ்செய்தாய்
வெப்படையாமனங்குளிர விதித்ததெலாம்வெளியாகுந்
தப்படையாமுறையருளி தற்பரனேயெனத்தொழுதாள்.

உரை.—ஒப்பில்லாத துணையெனக்குத்தந்தே யவனென்கன்னிமைகாப்பானென்று கடலைப்போலவலைந்த வென்மனமுறுதிகொள்ளச்செய்தா யிப்போது வேகுமென்னெஞ்சு குளிரவே யன்றுசொன்னதெல்லாம்வெளியாகச்செய்வாயாண்டவனேயென்றுதொழுதாள் மரியென்பவளென்க. (௫)

வளமாளுந்திருமடந்தை வருத்தங்கண்டாக்குநிவான்
றளமாளுமரசென்பான் றவிர்க்கரியவயத்தன்மைத்
துளமாளுமுறைதன்னா லுரையாதுமுளந்தூண்டி
யிளமாளுமலர்க்கொடியோ னுய்ந்தறையத்துணிவிந்தான்.

உரை.— மாட்சியுள்ளவிவள்வருந்தியதன்மை யறிந்திரங்கி வானோர்க்கரசனாகியகடவுள் தான்றவிராத வல்லமையி

றா னுள்ளமாளுமுறைகொண் டொன்றுஞ்சொல்லாமல் ம
னத்தைத்தூண்டி யகன்றமலர்க்கொடியோன் குசை பேசத்
துணிவுதந்தானென்க. (௬)

உற்றவாறுளத்திலறி வுறுதற்றதுணிவோங்கிச்
சொற்றவாற்றியேனேற் றுகட்டுடைத்தவெந்தைவரம்
பெற்றவாறுணாத்தற்கே பிரியாதோர்கைம்மாறு. [டான்.
முற்றவாறிவட்கேட்பே னெனவளன்முன்மொழிகொண்

உரை.— வந்தவழியறியாமல் வந்ததுணிவினா லோங்கிப் பேசும்வகையறியாதாயினுங் குற்றதீர்ந்த வென்னாண்டவ னெனக்குத்தந்தவரங்களைச்சொல்லி யதற்கானகைம்மாறாகு ம்படி யிவளைக்கேட்பேனென்று குசை தான்முன்னேபேச த்துடங்கினானென்க. (௭)

வையகத்தார்வானகத்தார் வணங்குகின்றவானிறையோ
மெய்யகத்தாலருளுணர்ந்து வெய்தரியதுணைவியெனப் [ன்.
பொய்யகற்றாயிழையுன்னைப் புன்மையறவெனக்கீதல்
மொய்யகத்தா னுணர்ந்தடியேன்முய லுங்கைம்மாறுண்டோ

உரை.— பூவுலகத்தோரும் வானுலகத்தோரும் வணங்கு மாண்டவன் மெய்யானதையுணர்ந் தரிய துணைவியாகப் பொய்யாத வழகணியோடொத்தவுன்னை யென்புன்மைதீர வெனக்குத்தந்தா னதற்காசையோ டடியேனாராய்ந்துபார்த் தாலுஞ் செய்யுங்கைம்மாறுண்டோவில்லையென்க. (௮)

மொய்ப்படுவெண்டிரையாழி மூழ்கியெழும்பதங்க
னது
செய்ப்படுவெங்கதிர்தாங்கித் தெளிந்தத்தங்கதிர்விடும்போற்
கைப்படுநன் றுளமேய்ந்து கைம்மாறாய் நன்றுசெயு
மெய்ப்படுநன்முறைநீயே விதித்தருள்தியென் றறைந்தான்.

உரை.— அலைகொண்டதிரைக்கடல்மூழ்கி யெழுந்துவிள ங்குஞ்சூரியன்செங்கதிரைக் கண்ணாடிதாங்கியதினாற் றெளிந் து தானுங்கதிர்விடும்போல நான்கைக்கொண்ட தன்மைக்கு

க்கைம்மாறாக நன்றுசெய்யுமுறைமை நீயேசொல்வாயென் றான்குசையென்க. (௯)

இன்னிசையுங்கோற்றேனு மின்கனியுங்கழைப்பாகும்
பன்னிசையும்பாகூறும் பணியாழுமாங்குயிலு
மன்னவையுநாணவினி தஞ்சொனலாளுஞ்ஞணிச்
சொன்னவைகொண்டுணர்வுரைப்பத் துணிந்துதுவர்வாய்ம
லர்ந்தாள்.

உரை.—இனியவிசைகளு நற்றேனுந் தீங்கனிகளும் பாகுஞ் சொல்லியவிசைகளும் பேசும்வீணையுங் குயிலு மிவையெல்லாநிகராமனுணை வினிய நற்சொல்லுடைய் மரியென்பவள் நாணி யவன்சொன்னதைக்கொண்டு பேசத்துணிந்து பவள வாயைமலர்த்தாளென்க. (௰)

மின்னையடைகடல்சூழ்ந்த வியனுலகம்புரந்தளிக்கு
மென்னையடையிறைவனலா லென்னுயிரையினிதளிப்பப்
பின்னையடைவதோர்காவல் பேதைபெறவேண்டியதே
னுன்னையடையானடைந்த வுவப்புரைப்பபாலதுவோ.

உரை.—மின்னியகடல்சூழ்ந்த பூவுலகம்புரந்தளிக்கு மென்னையுடையநாதனன்றிப் பின்னை மென்னுயிர்க்காவல னடியாட்குவேண்டியிருந்தா லதற்குன்னையடைந்ததினு லடைந்தமகிழ்ச்சி சொல்லுந்தன்மையல்லவென்க. (௰௧)

இவ்வாறென்றருள்புரிந்தே யினிதென்னைக்காத்தினற
வவ்வாறென்றிலயாரு மவிநன்றியாவினுநா [யோன்
னெவ்வாறென்றிலநன்மை யுற்றதின்கைம்மாறாகச்
செவ்வாறென்றுளத்தோர்ந்த சிறிதுரைப்பேனோவென்றாள்

உரை.— இப்படிக்கொத்த தயைசெய் தென்னைக்காத்தக டவுள்யாத மடையும்வழியொன்றின்றி மற்றெவருங்கொண் டநன்மையினு நிகரொன்றில்லாமல் நானடைந்தநன்றிக் கோர்கைம்மாறாகச் செய்வழியென்றுணர்ந்தவை சொல்லு வேனோவென்றாளென்க. (௰௨)

கான்பயிலுமுறுக்கவிழ்செங் கமலத்தேன் றுளித்ததெ
மீன்பயிலுமுடியாள்வாய் விரித்துரைத்ததீஞ்சொல்லாந் [று
றேன்பயிலுமலர்க்கொடியோன் செவியின்புண்டறைதியெ
தான்பயிலும்விடையாகித்தாழ்ந்திவளுமொழிகின்றாள். [றுத்

உரை.—வாசம்பொழிந்த விதழ்விரிந்த செந்தாமரை தேனைத்துளித்ததுபோல மீன்முடியாள்வாய்விரித்துரைத்த வினியசொல்லாற் றேன்றுளித்த மலர்விருதுடையகூலை செவியாலின்பமுண்டுமகிழ்ந்து சொல்லேயென்றனையா. லுத்தாரமாகி மரியென்பவள் சொல்லுவாளென்க. (௰௩)

துணிக்கரிதாமைம்பொறிகள் சார்பொருள்சார்ந்துளம்
பிரிந்து
தணிக்கரிதாம்விழைவாத விளமையின்கட்டேரன்றதலாற்
கணிக்கரிதாமருட்புரிந்த கடவுளொன்றேமனஞ்சேரக்
குணிக்கரிதாமிருளீனுங்கோதினிமைநசைவெறுத்தேன்.

உரை.—அடக்கப்படாத வைம்பொறிகள் சாரும்பொருளின்மேலுள்ளமுஞ்சார்ந்து பின்பறக்கப்படாத தீயவாசையாகுமென்று நானிளமையிற்றானேகண்டறிந்து லென்னினைவின்மேலு மெனக்குத்தயைசெய்தகடவுளேமாத்திர மென்மனஞ்சேரும்படிக்கு மயக்குவிக்குந் தீயவினிமையினசையெல்லாம்வெறுத்தேனென்க. (௰௪)

நசையற்றமனமோங்கி நாயகற்கேபலியாக
வசையற்றகன்னிமையின் வளங்காக்கநினைத்தேனித்
திசையுற்றகாவலனீ சேர்ந்ததனைக்காக்குதியென்
றிசையுற்றமதிப்பதத்தா ளிணையடிதாழ்ந்திறைஞ்சினளே.

உரை.— ஆசைவெறுத் ததின்மேலோங்கி நாதனுக்குப் பலியாகக் குற்றமின்றி யென்கன்னிமையழியாமற் காக்க நினைத்தேன், நீயு மெனக் கிங்கே வந்தகாவலனாகக்கொள்ள வதைக்காத்தல்செய்வாயென் றுசொல்லி யவன்பாதத்தைத்தொழுதாள் மதியைமிதிக்கும்பாதத்தாளென்க. (௰௫)

ஸ்ரீதிடையூர்பானுடுத்தாள் விளம்பியசொற்கதிர்வெள்ள
கர்திடையூர்ந்திதயச்செங் கமலமுகைமேற்படவே [ங்
தாதிடையூரமுதெனநீர் தடக்கண்பெய்துளமலர்ந்து [ன்
போதிடையூர்மணக்கொடியோன் பொங்கருளாற்புகல்கின்று

உரை.— வானத்திலூருஞ் சூரியனையுடுத்தவள் சொன்ன சொல்லே விட்டகதிர்வெள்ளங் காதின்வழியா விருதயத்தின் செந்தாமரையரும்புமேற்படவே யிதழ்வழியா லொழுகுந் தேன்போலக் கண்ணீரைவிட் டுள்ளமலர்ந்துவாசமலர்க்கொடியோன் சூலை பொங்கினவன்பினோடு சொல்வானென்க. (௰௬)

புண்கனிந்தமருந்தொப்பப் பொங்குகருணாகரியே
விண்கனிந்தவொளியிமைக்கும்வெஞ்சுடரோன்விரித்துய்க்கு
மண்கனிந்தகதிரிருளை மாற்றுமெனவினிதுரைத்த
பண்கனிந்தநின்சொல்லாற் பாசறைசெய்மருள்தீர்த்தாய்.

உரை.— இனிதாய்ப் புண்ணையாற்று மருந்துபோல மிகுத்தகருணையுடையவளே வானுமண்ணு மின்பங்கொள்ளவிளங்கினசூரியன்விட்ட கதிரிருளைமாற்றிநீக்கினதுபோல வீணையினுமினிதாய் நீயுரைத்தசொல்லா லெனக்குவருத்தஞ்செய்த மயக்கத்தைத்தீர்த்தாயென்க. (௰௭)

திருவுளத்திற்குணராதோன் றீங்குண்டோசெய்மனத்
டிருவுளத்திற்குணர்வொன்றுமிசைத்தமுறைநன்றறியக்[தோ
கருவுளத்திற்குணர்வுண்டோ கருத்துயர்ந்துதூண்டுநசை
வருவுளத்திற்கருணைவலோன் வாய்ந்ததயைவழங்குவனே.

உரை.— திருவுளமுணராததில்லை, செய்தமணத்தோடுநம திரண்டுமனத்திற் கோருணர்வுதந்து தானம்மையிசைத்தமுறை யிருண்டவென்மனத்தில் நானுணரக்கூடுமோ? கருத்திலுயர்ந்து நல்வாசையுள்ளவர்களுக்கே தயாபரன்மிகுந்த தயைசெய்வானென்க. (௰௮)

ஆசடைபூவனத்தன்னை யமலனெனக்களித்ததனால்
மாசடைபூரியரொத்தென் மனமலருமென்றுணர்த்தம்

பாசடைபூங்கொடிதந்து பாசறைதீருஞ்செய்யுந்
தேச்சடைபூணறிவுன்னைச் செழுந்துணையாய்த்தந்தனனே.

உரை.—குற்றநிறைந்தபூவுலகி லுன்னையாண்டவனெனக் குத்தந்ததினு விருள்கொண்ட நீசர்போலக்கிடந்தவென்மனம லருமென்றுகாட்டவல்லேர் பசுமலர்க்கொடியைத்தந்து து ன்பமெல்லாந்தீர்த்த பலன்செய்யுந் தெளிந்தவறிவுடைய வுன்னைத் துணையாகத்தந்தானென்க. (௰௯)

அணித்தாகவரிதாய வருட்புரிந்தநாயகன்றாட்
பிணித்தாகநசையொடுநான் பெறும்வயதோரீராறு
நணித்தாகிற்சாந்தனையு நறுங்கற்புநலங்காக்கக்
குணித்தாகிக்கடவுடனைச் சாட்சியெனக்கூற லுற்றேன்.

உரை. — அடைதற்கரியவருளைச்செய்த நாதன்பாதத்தை ச்சேர வாசைகொண்டு நான் பன்னிருவயதிலே சாந்தனையு ம் விரத்தனாக நினைத்துக் கடவுளைச் சாட்சியாகச்சொன்னே னென்க. (௨௰)

இளிசெயுமென் றிம்மணத்தை யேவியகால்வெருவுற்றே
னளிசெயுமென் னுயிர்நாத னவையறுநின் கன்னிமையா
லளிசெயுமென் கற்பினிதா யளிப்பதற்கன் றேமணமரீயக்
களிசெயுமென் னிறைவற்கோர் கைம்மாறேதறிகிலன்யான்.

உரை. — இதற்கிழிவாகுமென் றிம்மணத்தை யாண்டவ னேவியகா லஞ்சினேனாகினுங் குளிர்பட வென்னுயிரளிக்கு நாதன் குறையில்லாதவுன் கன்னிமையா லினிதா யென்கற்பு த ன்னைக்காக்க மணமாயிற் றாகையா லாண்டவற்கான கைம்மா றேதோவறியேனென்க. (௨௧)

கைமாறுமரிதெனிலக் கடன்கழிப்பவீவளவும்
பொய்மாறுங்காட்சியினாற் பொற்புய்யவொண்கற்பினையாம்
மெய்மாறுஞ்செயிரன்றி வெய்யமலவொனக்காத்து
மைமாறுந்திருத்தகுந்தாள் வாழ்த்திடவன்றேயென்றான்.

உரை.—கைம்மாறரிதென்றா லிக்கடன்கழிப்பச். சாந்த னையும் பொய்யாதவுணர்வினையுந் கற்புமெய்தவிர்ந்த குற்ற

ங்கொள்ளாமல் நாமே தன்மலைப்போலவினிதாய்க்காத்தி
ருளைமாறு மிறைவன்பாதத்தை வாழ்த்தலே நல்லதென்றான்
றாசையென்க. (உ௨)

என்பதுமாங்குள்ளுருக விவரின்பக்கடல்மூழ்கி
யன்பதுவாழ்வில்லறத்தோ டிணிக்கரிய துறவறத்தை
முன்பதுவாங்கிலமுறையான் முயன்றுதமிற்சேர்த்தமையாற்
பின்பதுவானதிசயிப்பப் பெயர்ப்பரியமாண்படைந்தார்.

உரை.—இவையெல்லாஞ்சொல்லி யிவருள்ளுருகி யின்பக்கடலின்மூழ்கி யன்பின்வாழ்வாகியவில்லறத்தோடு சேர்க்கரிய துறவறத்தை முற்காலத்தில்லாதமுறையோ டிவர் தம்மிடத்திற்சேர்த்ததினால் வானவருமிதைக்கண்டபின் னதிசயப்படவே யழியாதமாட்சிமையடைந்தாரென்க. (உ௩)

## வேறு.

கட்புலனாதியைங் கதவடைக்கலால்
மட்புலனுளதெலா மனம்புகாதுயர்
விட்புலன்முதலெலா மாண்டவேந்திவ
ருட்புலன்றனித்தடைந் துவப்பிலாளுமால்.

உரை.—கண்முதலைங்கதவாகிய வைம்பொறிகளையடக்கியடைத்ததினாற் பூவுலகிலுள்ளதெல்லா முள்ளேபுகாம லுயர்ந்தவான்முத லுலகமூன்றுமாளும்பராபர னிவர்மனத்தைத் தானொருவனேயடைந் தினிதாள்வானென்க. (உ௪)

ஐங்கதவடைத்ததற் கறநற்காவலாய்த்
தங்கதவடுத்தபற் பொருட்டடுத்துளத்
திங்கதுகொணருணர் விட்டபின்விடைப்
பங்கதுபகர்ந்துளப் பகையற்றோங்குவார்.

உரை.—ஐம்பொறியென்னு மைங்கதவடைத்தபின் னதற்கு நல்லறமேகாவலாகவைத் தந்தக்கதவுகளி லடுத்துவந்த பொருளெல்லாமங்கேதடுத்து வந்தபொருள்கொண்டு வந்த வுணர்வுகளை யறந்தானே யுள்ளேகொண்டுவிட்டதற்கு மறுவு

த்தாமுந் தானேசொல்லி யுள்ளே பகையின்றியோங்குவரெ
ன்க. (உரு)

மானமேவேலியாய் வகுத்தசொற்றரும்
ஞானமே தூதனாய் நயப்பயாவருந்
தானமேதோழனா யறிவின்றன்மையால்
வானமேயுறையுளாய் மடிவில்வாழுவார்.

உரை.—இவரிடத்தின் மானமேயரணாகவு ஞானமேநினை த்தவைசொல்லுந் தூதனாகவுந் தானமே யெவருங்களிகூரத் தோழனாகவு மறிவின்மேன்மையினால் வானமேபதியாகவுங் குறைவின்றிவாழ்வாரென்க. (உசு)

எள்ளலைக்கலந்தவாழ் விழைந்தகன்றவான்
வள்ளலைச்சிவணியுள் மவியவாழுவா
ரள்ளலைக்கலந்தநீர் கடந்தருந்திலாத்
தெள்ளலைச்சுனையடுத் துண்டசீர்மையே.

உரை.— இழிவுகொண்ட பூவுலகின்வாழ்வுகளைவெறுத்து வானுலகநாதனையடுத்து மிகவும்வாழ்வார் சேற்றோடுகலந்த நீரையுண்ணாமற் கழிந்துதெளிந்த சுனையண்டித் தெண்ணீ ரைக்குடிப்பார்போலவென்க. (உஎ)

கோற்றிருத்தினர்க்கெலாங் கோனென்பான்பணி
நூற்றிருத்தியமுறை நுதலியாக்கிய
பாற்றிருத்திவருணம் பழுதற்றுண்டகை
வீற்றிருந்தானு மாசனத்தின்மேன்மையே.

உரை.—செங்கோலைத்திருத்தியாள்புவர்க்கெல்லா மரசனா கியகடவு ளேவியநூலென்னும்வேதத்தின் திருத்தியமுறை கருதி நிறைவேற்றுங்குணத்தையுடைய விவர்மனமேகுறைவி ன்றியாண்டவன் வீற்றிருந்தானுஞ் சிங்காசனமாமென்க. (உஅ)

வெப்பருளாசையை வெறுத்தசீர்கொடு
தப்பருள்பொருளினைத் தவிர்த்தவாண்மையா

லப்பொருள்படைத்தனை யண்டந்தமாண்பின
ரெப்பொருளனைத்திலு மிதயத்தோங்கினார்.

உரை. — வருத்துமாசையைவெறுத்துப் பொய்கொள்ளும்பொருள்களைத்தவிர்த்த வல்லமையினா லப்பொருள்களைப் படைத்தநாதனையடைந்த மாட்சிமையுடையராகி யெப்பொருளினு மேலுயர்ந்தமனத்திலோங்கினாரென்க. (௨௯)

எள்ளுமோர்நவையிலா தெனினும்யாக்கையை
யுள்ளுமோர்தவத்தினா லொறுத்ததன்மையார்
விள்ளுமோர்மலருலை பெய்தவீழுநீர்
கொள்ளுமோர்மணமெனக் குணங்கொண்டோங்கினார்.

உரை. — இகழ்ச்சிபடக் குற்றமொன்றில்லாயினுந் தம்முடலை மிகுந்ததவத்தோடொறுத்ததினால் மலர்ந்தபூவை யுலையிற்போட் டிறக்கின பன்னீர்வாசனை பொழிவதுபோல விவரும்பயன்கொண்டோங்கினாரென்க. (௩௰)

பொன்னொளிகாட்டெரிப் பொறிகளோமணி
பன்னொளிகாட்டிய பாடையோவுரு
வுன்னொளிகாட்டிய வுளியனோவுளந்
தன்னொளிகாட்டிய தவமதேந்தினார்.

உரை. — பொன்னின்குணத்தைக்காட்டு நெருப்பென்பவோ மணிக்கொளிகொடுக்குஞ் சாணைக்கல்லென்பவோ வடித்தகல்விற் குறித்தவுருவங்காட்டு முளிதானென்பவோ விவர் மனங்கொண்டமாட்சிமைகாட்டுந் தவத்தைக்கொண்டாரென்க. (௩௧)

மீனொளிவிழுங்கிய மேகம்போனசை
தானொளித்திறைவனை யுணருந்தன்மையால்
வானொளிர்காட்சியால் வளன்விளங்கியுட்
பானொளிவிழுங்கிய பளிங்கொத்தாயினான்.

உரை. — மீன்களினொளியினை மறைக்குமேகம்போலு மானசையைவெறுத்துக் கடவுளையுணர்ந்துவானுலகின்காட்சியை

யடைந்தசூசைவிளங்கிச் சூரியன்கதிரையுண்டபளிங்குவிளங்குவதுபோல நின்றானென்க. (௩௨)

உண்டசெங்கதிருமி ழத்தமொத்தவன்
விண்டசெங்கமலமா னிதயமேயொளி
மண்டவெங்கதிரென மலிந்தகாட்சியைக்
கொண்டசொல்லிறைவனை வாழ்த்திக்கூறுவான்.

உரை.—உண்டகதிரை யுமிழுங்கண்ணாடிபோலுஞ் சூசை தன்னிருதய மலர்ந்ததாமரைபோலுண்ட வெங்கதிர்நிகர்த்த காட்சியைக்கொண்டதையுமிழக் கடவுளைவாழ்த்திச்சொல்வானென்க. (௩௩)

## வேறு.

அறக்கடனீயேயருட்கடனீயே யருங்கருணாகரனீயே
திறக்கடனீயேதிருக்கடனீயே திருந்துளமொளிபடஞான
நிறக்கடனீயேநிகர்கடந்துலகி னிலையுநீயுயிருநீநிலைநான்
பெறக்கடனீயேதாயுநீயெனக்குப்பிதாவுநீயனைத்துநீயன்றே

உரை.—அறத்தின்கடலுநீ யருளின்கடலுநீ கருணாகரனு நீ திறத்தின்கடலுநீ செல்வத்தின்கடலுநீ யுளந்தெளிய ஞானத்தின்கடலுநீ நிகரின்றியுலகினிலையு முயிருநீ நானிலைகொள்ளுங்கடலுநீ யெனக்குத் தாயும் பிதாவு மற்றனைத்து நீயென்க. (௩௪)

காரீத்திரள்மறையாக்கடலினுண்மூழ்காக் கடையிலா
தொளிர்பரஞ்சுடரே [லே
நீர்த்திரள்சுருட்டிமாறலையின்றி நிலைபெறுஞ்செல்வநற்கட
போர்த்திரள்பொருதக்கதுவிடாவரனே பூவனந்தாங்கிய
பொறையே [யிர்தருந்தே.
சூர்த்திரள்பயக்குநோய்த்திரள்துடைத்துத் துகட்டுடைத்து

உரை.—மேகத்தினால் மறையாமலுங் கடலினொளியாமலு மோயாதுவிளங்கும் பரஞ்சோதியே! சுருண்டு மாறுமலைகளின்றி நிலைகொண்டசெல்வத்தின்கடலே! போர்முகத்திலெதிரியா

தவரணே! பூவுலகத்தைத்தாங்கு முயர்மலையே! துன்பந்தரு
நோய்களையுங் குற்றங்களையுந்தீர்த் துயிரைத்தரு மமுதே
யென்க. (௫௫)

விண்கிழித்தோங்கிமின்பயில்கொடிஞ்சி வேய்ந்துயர்
தேர்த்திரள்காப்போ [ள்காப்போ
கண்கிழித்தொளிபாய்வாட்டிரள்காப்போ கால்தவிர்பரித்திர
மண்கிழித்தொழுகும்புனலெனச்சீறி மதம்பொழிகரித்திரள்
காப்போ [ப்பே.
புண்கிழித்தடலார்காப்பதோநீயே புரந்துசெய்காப்பதுகா

உரை.—மேகத்தைக்கிழித்துயரப்பட்ட வொளிவிடுஞ்சிக
ரமுள்ளதேரின்திர ளுயிரைக்காக்குமோ? கண்கூசவொளிர்ந்
தவாள்முத லாயுதத்திரள்காக்குமோ? காற்றிற்குமுந்துங் கு
திரைத்திரள்காக்குமோ? பூமியைக்கிழித்தோடு மாறுபோலச்
சீறிமதம்பொழியும் யானைத்திரள்காக்குமோ?புண்படுத்திவல்
லமையுடைய படைவீரர்காக்குமோ? நீயே புரந்துசெய்யுங்
காவலே யினிதாய்க்காக்குமென்க. (௫௬)

வஞ்சினருளம்போலளக்கரிதாழ்ந்த வாருணத்திடைவ
ழிகீண்டி [தாய்
யஞ்சினர்நனையாக்கடக்கவேதந்தா யாறுநின்றதர்விடத்தந்
துஞ்சினர்சுகத்திவிளிதுமூவிளையோர் சிகிக்கிடைகுளிர்ந்துற
த்தந்தா [துண்டோ.
யெஞ்சினருன்னைநம்பியதன்மைத் தியற்றவொன் றுனக்கரி.

உரை. — வஞ்சினர்மனம்போல வளக்கப்படாத வாழங்
கொண்டகடலிடத்தில் வழியாகி யஞ்சினயூதர் நனையாமல்
லைக்கடக்கத்தந்தாய், சேரர்தானென்னு நதிநின் றன்னோர்க்கு
வழிசெய்யத்தந்தாய், நபூக்கன் சூளையிற்போட்ட மூன் றுபா
லரு நித்திரைகொள்பவர்போல வினிதாய்நெருப்பிடத்திற்
குளிர்ந்திருக்கத்தந்தாய், குறைகொண்டயாவருமுன்னை நம்பி
னதன்மைக் கவரைக்காக்க வுனக்கரிய தொன் றுண்டோவெ
ன்க. (௫௭)

தலையெழும்வரையோடுயர்ந்தமற்றெவையுந் தகர்ப்பவா
னேறுமிழ்முகிலே [றைவதுபோல்
முலையெழும்பயனேருமிழ்ந்தநீர்குழியின் முடிகிவந்தினிது
அலையெழுங்கடல்சூழ்புடவியிற்செருக்குற் றசடரைத்தாழ்த்தி
யகையாற் [செய்வாய்.
கலையெழும்பயனுற்றூழ்குவவொடுத்துக் களிப்டக்கருணையே

உரை.— உச்சிநிறுவினமலைகளு முயர்ந்தமற்றெவையுந்த கர்ப்ப விடிகளைவிடுமேகந்தானே முலைப்பாலொப்பப் பொழிந்ததுளிநீர் பள்ளத்தில்வந்துநிற்பதுபோல நீயுமலையெழுந்தகடல்சூழ்ந்த வுலகினுங்காரிகளைத்தாழ்த்தினகையா லுணர்வடைந்தவளவாகத்தாழ்ச்சியுடையாரை யெடுத்துத் தூக்கிக் களிபடக்கிருபையைச்செய்வாயென்க. (௫௮)

வான்முகத்தெழுந்திங்குவனையேநோக்கி மாவிதன்செ
ழுங்கதிர்க்கோலாற் [ளை
கான்முகத்தரிதோரோவியமென்னக் கடிமலரொழுதியவண்
நான்முகத்தடங்காதன்பிலென்றணிமை நோக்கிமுட்கான்.
பொருவென்னுள் [ட்களவோ.
தேன்முகத்தவிழ்ந்தபூம்பொழிலொப்பத் திருத்திய நினதரு

உரை.— வானத்தினின்று தாழவினிதாய்நோக்கினசூரிய ன் றன்கதிர்க்கோலாற் காட்டிடத்திற்சித்திரங்களைப்போலம லர்களையெழுதினதன்மையுணரப்படாதவன்பிலுலென்றணி மைநோக்கி முள்ளானிறைந்த கானகம்போலிருந்த வென்ம னமேதேன்பொழிந்துமலர்ந்தபூந்தோட்டநிகராகத் திருந்தி யெனக்குச்செய்ததயை யளவுள்ளதோவென்க. (௫௯)

காய்ந்தபோதழன்முன்வையெனுவுன்முன் காய்ந்தெரி
யாதுண்டோகருணை [னைத்து
ஈய்ந்தபோதருத்திபின்னுறவளிப்பா யிருடவிர்காட்சியால்
மாய்ந்தபோதிருளுமுள்ளமுங்கடந்தே யறிகிலாதேதுண்
டோமனுவாய் [ய்வாய்.
வேய்ந்தபோதன்றேயென்னுயிரின்பவேலையின்மூழ்குபசெ

உரை.—நீசினந்தா லழிவின்முன் வைக்கோ லென்னவெந் தழியாததுண்டோ? தயையுஞ்செய்தா லாசைக்குமேற் கொடுப்பாய், இருளாதகாட்சியோடெல்லாத்தையு மாராய்ந்தால் மறைவெல்லா முள்ளங்களெல்லாங் கடந்ததறியாததொன்றில்லை, நீயவதரித்துமனிதனாய்த்தோன்றினா லப்பொழுதென்னுயி ரின்பக்கடலின்முழுகச்செய்வாயென்க. (௪௰)

வளிச்சிறையாகப்பொங்கலைகீண்டி மரக்கலம்போயின [யு
வழியு
மொளிச்சிறையாகவிண்டிசைகீண்டி யோதிமம்பறந்தனவழி
மளிச்சிறையாகநினைவுசெல்வழியு மாய்ந்தவையடைகினுமா
ர்வக்
களிச்சிறையாகநீவரும்வழியே கண்டதையடைவதுபாலோ.

உரை.—காற்றிறகாகக்கொண்டு பொங்கியகடலைக்கீண்டிக் கப்பல்போயினவழியுந் தன்னழகிறகைக்கொண்டு விசும்பினைக்கீண்டியன்னம்போயினவழியு மாசையிறகாகக் கொண்டு நினைவுபோயினவழியு மடையப்படாதே யவற்றை யாராய்ந்தடைந்தாலு நீயுன்றயையிறகாகக்கொண்டு மனிதனாகவரும்வழியைக்கண் டடையக்கூடுமோ? (௪௧)

உணங்கியமரத்திற்குயிர்வரும்பெய்த வுறையெனவரு [தியேயெஞ்சா
தியேயுலகிற்
திணங்கியவிருளைச்சீய்க்கவெங்கதிர்கொள் ளிரவிபோல்வரு
தணங்கியற்றியவெம்பழம்பழிக்கூளிக் கரியெனவருதியேயு [யென்றான்
ன்னை
வணங்கியநல்லோர்க்கருள்புரிந்தன்னை வருமெனவருதியே

உரை.—உணர்ந்தமரத்திற்குயிராகப் பெய்தமழைபோல வருவாயே, பூவுலகங்கொண்ட விருளை நீக்கச் செங்கதிர்பரப்புஞ்சூரியனைப்போலவருவாயே, ஓபாததுன்பஞ்செய்யும் பழமபழிகொண்டபசாசுக் கோர்சிங்கம்போல வருவாயே, உன்னைவணங்கியநல்லவர்க்குத் தயைச்செய்ய வொருதாய்போலவருவாயே யென்றானென்க. (௪௨)

சூன்மலிமுகில்பெய்மாரியாற்பெருகிச் சுருட்டலைகளை
யகட்டடங்காத் [ணை
தேன்மலிகாவுங்கழனியுநிறைப்பத் திரைபிரண்டுலவியவண்
நூன்மலியோகத்துணர்ந்தவைபொங்கி நுதலியவிவற்றொடு
பலவுந் [ற்றையென் ...
தான்மலியுவப்பிற்சாற்றுவானுயர்வான் றளர்த்தொழுந்தவத்தி

உரை. — சூல்கொண்டமேகம்பெய்ததுளியின்ற் பெருகி யலைகளைச்சுருட்டும் நதிபிரண்டுலாவிக் கரையுள்ளடங்காம ற் றேன்பொழிந்தசோலைகடோறும் வயல்கடோறு நிறைந் தோடியதன்மையறிவோங்கிய தியானத் துணர்ந்ததெல்லாங் கருதி யிவற்றையும் பலவு நிறைந்தவின்பத்தோடு சொல் [illegible] ன்வானுடையோர்வணங்குந் தவத்திராசராகிய சூசையெ ன்க. (௬௩)

தேனுண்டவுவப்பிற்குயிலிரண்டுண்ட தேனுமிழ்ந்தென
னத்தமுள்ளிசவிப் [மேயொருநாள்
பானுண்டநிழல்செய்சினையடுத்தினிதாய்ப் பாடியவண்ண
கானுண்டகொடியோடாரணம்பூண்ட காவலனுடுயிர்விளக்
கு [ட்டமீதே
மீனுண்டமுடியாள்ஞானபல்விதிகள் விளம்பியமுறையறிந்

உரை. — நிறையத்தேனுண்ட வின்பத்திற் குயிலிரண் டுமுண்டதேனைக் கக்கினதுபோலத் தம்முள்ளிசவிச் சூரிய னைமறைக்குமோர் கொம்பிலிருந் தினிதாய்ப் பாடினதன்மை யே யொருநாள் வாசமலர்க்கொடியு நல்லவேதமும் பூண்ட காவலனாகியசூசையு முயிரெல்லாம்விளக்கு மீன்களைச்சூழ்ந் த முடியாளாகிய மரியென்பவளுந் தம்முள் ஞானமுறைக ளைச்சொன்ன வாறுரைப்பதேயரிதென்க. (௬௪)

## வேறு.

பொருள்கொண்டவையுமாக்கினனப் பொருளிற்கு
ன்றுப்புகுந்துளனாய் [ன்றோ
மருள்கொண்டவைகொள்மாறுமிலா வயிரக்குன்றினிலைகொ

னருள்கொண்டவர்க்கல்லாலுண்டோ வாவல்கொண்டவுயிர்க்
குநிலை [த்தான்.
அருள்கொண்டலைநீர்சூழ்ந்தபுவி சூழ்ந்தாலென்றான்பூந்துச

உரை.—பொருள்கள்யாவையுஞ்செய்து தான்குன்றுமாம ற் பொருள்களினுட்புகுந்துள்ளனாகி யவை மயங்கிமாறியபோ து கூடமாறாமல் வயிரமலையினு நிலைகொண்டபராபரனிச ப்புந் தயையடைந்தவர்க்கல்லாதே யாசைகொண்டவுயிர்க்கு நிலையுண்டோ கடல்சூழ்ந்தபூமியெல்லாம் பார்த்தாலுமென் றான் பூங்கொடியோன் சூசையென்க. (௪௫)

தேர்மேற்றியங்கும்பதாகையதோ சிகரிசிந்துஞ்சிந்த
லையோ
நீர்மேற்படருஞ்சைவலமோ நீர்மேலாடுகுமிளிகளோ
தார்மேற்பனியோ நுண்மணன்மேற் றடத்தில்வரைந்தவுணர்
வென்றோ [யாள்.
பார்மேற்கடவுணிலையில்லாப் பான்மையென்றாள் மீன்முடி

உரை.—தேரின்மேலாடியபெருங்கொடியோ, மலையினி ழிந்தவருவியினலைகளோ, நீரின்மேற்படர்ந்தபாசியோ, நீரின் மேலாடியகுமிளிகளோ, பூமாலைமேல்விழுந்தபனித்துளியோ, வழியிடத்தில் நுண்மணலின்மேலெழுதிய நினைவோ விவை யெல்லாமொக்கு மிவ்வுலகிற் கடவுளினிலையடையாதவனென் றாள் மீன்முடியாள் மரியென்பவளென்க. (௪௬)

நிலைகொண்டேனுமந்நிலையால் நிலைக்கும்பயனென்னு
யிர்க்குண்டோ [நிலைகொண்
டலைகொண்டவியாமொய்க்கடல்போன் மயர்ந்துமயங்குமன
நிலைகொண்டெரித்தாற்போலநகை யுய்க்குந்துயரற்றுள்கு
ளிரக் [நித்தான்.
நிலைகொண்டவருமீங்கேதோ கண்டாலென்றான்பொதிசெ

உரை.—அவையெல்லாநிலைகொண்டாலு மத்தாலுயிர்க் கு நிலைக்கும்பயனுண்டோ வெப்பொழுது மொய்கொண்ட புங்கடற்போ லசைந்துமயங்குமனமே நிலைகொண்டு தீ

யுலையிலெரித்தாலென்ன வாசைவருத்துவிக்குந் துன்பநீக்கி
யுள்ளங்குளிரவே கற்றோரு மிங்கேயொருநன்மையாகிலுங்
கண்டாரோவென்றான் பொறிகளையடக்கின தவத்தோனெ
ன்க. (௬௭)

கனவிற்பிடித்ததனமென்றே கனநின்றெல்கிப்பாய்ந்த
மின்னே
சினவித்திளை தீமுன்வையோ திளைப்பவுவரிநீபெய்யுறையோ
நினவிற்கூமனுணர் தூதோ நிசிநாடகர்கொள் கோலமதோ
வெனவித்திசைகொள்வாழ்வனைத்து மென்றாள்பிறைதேய்த்
தொளிர்பதத்தாள்.

உரை.—கனவிற்கைக்கொண்ட திரவியமோ, மேகத்தினி
ன்றசைந்துபாய்ந்த மின்னே, சினந்ததீமுன்வைத்த வைக்
கோலோ, நீரையக்கடலிடத்திற்பெய்தமழையோ, ஊமைநி
னைத்ததூதோ, இராவில் நாடகரெடுத்தவேடமோ விவையெ
ல்லாமொக்கு மிவ்வுலகின்வாழ்வெல்லாமென்றாள் பிறையை
த்தேய்த்தொளிகொண்டபாதத்தையுடையாளென்க. (௬௮)

நிந்தைபொதுளும்வாழ்வடைமுன் னினைவைத்தாண்டு
மாசைசுடுஞ் [பெய்து
சிந்தைபொதுளுமென்றடைந்தாற் சிந்தைவருத்தவெறுப்
மெந்தைபொதுளுந்தாய்வினையா விரங்கிப்புரிந்தவருளொ
ன்றே [ன்.
நந்தைபொதுளுநசைநிறைய நயக்குமென்றான்மறைவடிவா

உரை.—நிந்தைகொண்ட விவ்வாழ்வடையுமுன்னர் நினை
வினைத்தாண்டியவாசையேசுடும், நெஞ்சுநிறைந்துவாழுமெ
ன்றதையடைந்தால் நெஞ்சுவருந்த வதின்மேல் வெறுப்பா
குமே யென்பிதாவிரங்கி யொருநற்றாய்போலச்செய்யுந் த
யையொன்றேபூரணமா யாசைநிரப்பி யின்பங்கொடுக்கு
மென்றான் வேதவடிவுடையானென்க. (௬௯)

கனியோகழையோகழைகான்ற கனிந்தபாகோகோற்றே
னோ [தோவான்
நனியோரகையினுற்கூட்டியதோர் நறவோவுயிர்செய்மருந்

றனியோவழங்குமமுதென்றாற் றகுமோவெந்தையருட்கிளை
யே [ழியாள்.
விழியோருவமையீங்குண்டோ வென்றாள்வழுவாமறைமொ

உரை.—கனியோ, கரும்போ, கரும்பினிழிந்தபாகோ, நற்றேனோ, பிரியமாய்க்கூட்டிய வின்பமோ, உயிர்தருமருந்தோ,வானத்தில்வழங்கியவமிர்தமோவிவையெல்லாங்கூடியென்பிதாசெய்தயைக்கொவ்வாமவிங்கேவேறுவமை யதற்குண்டோவென்றாள் வழுவாவேதமொழியுடையாளென்க. (௫௰)

தேவவருளல்லாவிங்கண் டேடற்குரிதோர்பயனுண்
டோ
மேவநயஞ்செய்மற்றெவையும் விரும்புகின்றநசைதானே
யோவவினைசெய்ததினூங்கு மொன்றுருண்டோவுயிர்க்கெல்
லாம் [னுன்.
பாவமவிதற்கென்றுரைத்தான் பகைப்பேய்நடுக்கும்பரிசன்

உரை.— தேவதயையல்லா திங்கே தேடற்குரியபயனொன்றுண்டோ? நயங்காட்டியமற்றவெல்லாம் விரும்பியவாசை தானே துன்பஞ்செய்து பாவமாக வுதவினதினு லதின்மேலுயிர்க்குப்பகையுண்டோவென்றான் பகைத்தபசாசுநடுங்கச் செய்யுநற்குணத்தோனென்க. (௫௧)

நக்கிக்கொல்லுநச்சரவோ நயஞ்செய்துயிருண்கொடு
ங்கோலோ
பக்கிக்கிட்டதோரிரையோ பயனுட்கலந்தநஞ்சதுவோ
புக்கிற்றெருக்கயாவுமறப் பொறித்தீயொளியென்றெரிப்பது
வோ
விக்கிச்சிக்குநசையென்று ளரிவானயக்கும்பரிசன்னாள்.

உரை.— நக்கியுயிரைக்கொல்லும்விடப்பாம்போ, நயங்க்காட்டிக்குடிகெடுக்குங் கொடுங்கோலரசனோ, பறவைபிடிக்கமுற்போட்டவிரையோ, பாலோடுகலந்தநஞ்சோ,புகுந்தெல்லாத்தையு மிற்றழிக்கும்படி செந்தீயை நல்லொளியென்றெரிக்குந்தன்மையோ விவையெல்லாமொக்கு மின்பத்தை

விரும்பு மாசையேயென்றாள் வானுலகிற்கின்பஞ்செய்யு ந
ற்குணத்தாளென்க. (௫௨)

பவமேபழித்துப்புவனத்திற் படர்ந்தவணங்கிற் றுயிர்கா
த்துத் [யிர்க்கிங்
துவமேநயனைப்பயத்துய்க்குந் துணையேதென்னின் மன்னு
னைமேழுதுயர்செய்நானெனதென் றுயவிருபற்றினிதறுக்குந்
தவமேயுயிர்க்கோர் துணையென்றான் றவத்தின்பெவ்வக்கரைக
ண்டான்.

உரை. — பாவத்தைநீக்கிப் பூமியிற்படர்ந்த துன்பங்களை
ற்றுயிரைக்காத்து நன்மைபயத்தின்பங்கொண்டுவருந்துணை
யேதென்று லுயிர்க்கெல்லா மிங்கேவினைத்துயர்செய்யுநா
னென்னு மெனதென்னுமிருபற்று தலை யினிதாயறுத்த த
வமே யுயிர்க்குநற்றுணையாமென்றான் றவக்கடலின்கரையை
க்கண்டான். (௫௩)

பொதிருமுட்டாமரையோ பொதிர்முட்புறவுட்
சுவைக்கனியோ [லோ
வதிருமொழியால்வெருவுய்த்தே யவனியுவப்பப்பெய்முகி
லெதிருமொன்னார்க்கோங்கரணே வெவருமஞ்சுமுருக்காட்
டிக்
கதிருமின்பார்தவமென்றாள் கருணைப்பவ்வக்கரையில்லாள்.

உரை. — முள்ளுடையதாளுள்ளதாமரையோ, புறத்துமு
ள்ளு முள்ளேயினியசுவையுங்கொண்ட பலாக்கனியோ, இடி
யோமுழங்கிவெருவச்செய்து பூமியெல்லா மின்பங்கொள்
ளமழைபெய்யுமேகமோ, எதிர்த்தபகைவர்க்கு வைத்தவர
ணே வினையெல்லாமொக்கு மெவருமஞ்சவுருவங்காட்டி நி
றைந்தவின்பம்பயக்குந் தவமேயென்றாள் கரைகாணக்கரு
ணைக்கடலொத்தாளென்க. (௫௪)

மொய்யுந்துறவேயெந்தையடி முறைகொண்டடை
யவழியென்றாற் [றையென்பார்
பொய்யுமிருளும்பொதிர்ந்ததெலாம் போக்குந்துறவோகு

பொய்யும்புரைதீரிறைவனருள் கொடுக்குந்துறவேயின்டலே
மெய்யுமுயிருநீயென்றான்விளங்கீரறக்கண்ணாடியினான் [யே

உரை.—மெய்கொண்ட துறவுதானே யென்பிதாபாதத்தை யடையவழியதென்று விருளும்பொய்யுங் கொண்டதெல்லாம்போக்குந்துறவினைக் குறையென்பரோ பாவத்தைத் தீர்த்த கடவுள்தயையைக்கொடுக்குந் துறவேநீயே யின்பமுடல் மெய்யுநீயே யுயிருநீயேயென்றான் விளங்கியவீரறத்தின் கண்ணாடியொத்தானென்க. (௫௫)

தாயுநீயேதந்தையுநீ தாவுநசைநாட்டியநீயே
தீயுநசைதீர்நசைநீயே செல்வநீயேயுயிரினிதிற்
றோயுமலைநீயாகியுனைத் துறவாதணுகல்செய்துறவோ [ள்.
காயுவினையென்பாரொன்றாள் கதிப்பால்காட்டுஞ்சஞ்சனத்தா

உரை.—என்னாண்டவனே நீயேயெனக்குத்தாயுந்தந்தையு. நீயேயென்னாசைகுறித்தகுறியே தீயவாசையெல்லாந்தீருமாசைநீயே செல்வநீயே யென்னுயிரினிதாய் முழுகுங்கடல்நீயே யிவையெல்லாமாகியவுன்னை யகலாமலணுகியடையும்படிசெய்துறவினைக்காய்ந்தகொடியவினையென்பாரோவென்றாள் பரமகதித்தன்மையைக்காட்டுங் கண்ணாடியொத்தாள். (௫௬)

என்றானவனென்றாளவளென் றின்பக்கடலின்மூழ்கியு
ளங் [வப்பிற்
குன்றாவியப்போடெய்தியவான் கொண்டதளமும்பொங்கு
பொன்றாமணமுந்தேன்பிரளும் பொழிபூமழையைப்பொ
ழிந்தாசி [ழ்ந்தார்.
யொன்றாயெவருமுரைத்துநிற்ப வுயர்வானவரொத்திவர்வா

உரை.—என்றான் சூசையு மென்றாள் மரியுமென்று தம்முள்ள யின்பக்கடலின்முழுகி முடியாதவதிசயத்தோடு சூழவந்த வானுலகின்றளங்களுங் களிகூர வாசமுந் தேனும்பொழிந்த மலர்மழைதுளித்து வாழ்த்துகளை யெவருஞ்சொல்லிக் கொண்டிருப்ப வவ்விருவரும் வானுடையோர்போல வாழ்ந்தார். (௫௭)

# வேறு.

துறவினாலுடல் துறந்தனவுயிரெனத்தோன்றி
நறவினானறை நறுந்தணர்விள்ளலர்போலில்
லறவினாவுடனனைவருமோம்பியவன்பின்
னுறவினாலுலகுயிரெலாமுடலெனக்கொண்டார்.

உரை.—இருவர்கொண்டதுறவினா லுடலில்லாதவுயிர்போலத்தோன்றி மதுப்பொழிந்தவாசவிதழ் மலர்ந்தபூப்போல வில்லறத்தின்வினாவினா லெல்லாரையும்பேணினவன்பி னுறவினா லுலகிலுள்ள வுயிரெல்லாந் தமக்குடலாகக்கொண்டா ரென்ப. (ஆகையாலுடலை யுயிர்காத்ததுபோல விவர் மற்றவுயிர்களைக்காத்தாரென்பது கருத்து.) (௫௮)

தாழுபான்மையோ தகவுடைபான்மையோவென்றுச்
சூழும்யாரையுஞ் சூழ்ந்துசூழ்வருநயஞ்செய்வார்
கீழுமேலுமென் றுணர்கிலாதுறுப்பெலாங்கிளர்ப்ப
வாழுமேயுயிர் மலிந்துடலுலவியபோன்றே.

உரை.— இவர்தாழ்ந்தவொன்று மவர்மேலொன்றும் பாராமற் சூழ்ந்தயாவரையும்விசாரித்து நினைப்பதற்கரிய நன்மைசெய்வார் கீழுறுப்பென்றுமே லுறுப்பென்றும்பாராம லுறுப்பெல்லா நிறையவாழுமுயி ருடலிடத்துலாவினதன்மையென்க. (௫௯)

துய்யத்தாயுரித் துடர்பினார்சுடப்புகன்றவர்க்கும்
மய்யத்தாவிய மனத்தெழுமன்பினன்றியற்றல்
நொய்யத்தாதுகள் நோகவுட்குடைந்திமிரளிக்குஞ்
செய்யத்தாமரை திளைப்பநல்விருந்திடும்போன்றே.

உரை.— நற்றாயொத்தவன்புடையார் தம்மைச்சுடச்சொல்லுவார்க்கும் நீதியுள்ளமனத்திலெழுந்தவன்பினா னன்மைசெய்வார், நொய்யிதழ்களைநோகத் தன்னைக்குடைந்தவண்டுகளுக்குச் செந்தாமரை யொழுகுந்தேனால் நல்விருந்துசெய்வதுபோலவென்க. (௬௰)

வாய்ந்தமாண்பினர் வருந்தலுஞ்செய்குவர்க்குள்ளந்
தோய்ந்தவார்வுமத் துறவியநலநிறையளித்தல்

காய்ந்தவாலையின் கரும்பினைமுறுக்குதற்களவி
லீய்ந்தபாகினி திரிந்தெலாநிறைந்தனபோன்றே.

உரை.—உயர்ந்தபெருமையோர் தமக்குவருத்தஞ்செய்வார்க்குத் தாங்கொண்டவன்பினால் நிறைந்தநன்மைகொடுப்பர் வேகுமாலையிடத்திற் கரும்பினைமுறுக்கினவளவாகத் தந்தபாகோடியிடமெல்லா நிறைந்ததுபோலவென்க. (௬௧)

வருந்தினார்முகத் தெழுதியவருத்தமேகண்டால்
விருந்தினார்முகத் தழைத்தவர்க்கூட்டியமிடைதேன்
திருந்தினார்முகத் துரைத்தசொல்லினைமதுச்செவியா
லருந்தினார்முகத் தெழுநயக்கடலினாழ்ந்தகல்வார்.

உரை.—வருந்தினார்முகத்தி லெழுதப்பட்ட துன்பங்களைக்கண்டா லவர்விருந்தினார்முகத்தோடவரையினிதாயழைத்துத் தேனையவர்க்கூட்டினாற்போ லுரைத்தசொல்லின்பத்தைச் செவியாலுண்டயாவரு முகத்திற்கிளம்பு மின்பக்கடலின்மூழ்கி யகலுவாரென்க. (௬௨)

கூர்ந்தநன்மையைக் கூறியபயனினாலெவருஞ்
சேர்ந்ததன்மையிற் செயிரறவோங்கிவேறுவா
ரார்ந்தபொன்வரை யடுத்துறைகாசமுங்கருமை
பேர்ந்தபொன்வரை பொழில்பிளிர்ந்தனபோன்றே.

உரை.—இவர் நுண்மையாய் நன்னூல்களைச்சொன்னபயனினா லெல்லாரும் வந்ததன்மைமாற்றிக் குற்றங்களைத் தீர்ந்தோங்கிவேறுவார், பொன்மலையிலிருக்குங்காக்கையுங் கருமைவிட்டுப் பொன்னிறமாயொளிர்ந்ததுபோலவென்க. (௬௩)

போயதாதைய ரீட்டியபொருளெலாம்பொறையென்
றுய்யவாயின வனைத்தையுமாலயத்தொருபால்
நேயமாருயிர் நேரியவிரவலர்க்கொருபால்
தூயவாரியர் விரைந்தருந்துடர்பொடுதொகுத்தார்.

உரை.—போனதந்தைமார் குவித்துவைத்தபொருளெல்லாம்பாரமென்றாராய்ந் துள்ளதெல்லாம்பகுத்து தேவாலயத்திற்கொருபங்குமன்புள்ளவுயிராகப்பேணின விரப்போ

ர்க்கொருபங்குந் தூயமாட்சியுடையோர் தாமதமின்றியளி யவன்பின்றொகுத்தானென்க. (௬௪)

துன்புதுன்றிய பொருளெனவனைத்தையுந்தொகுத்த
பின்புதுன்றிய பேரரிதன்புளந்தூண்டி
யென்புதந்தினு மினிதெனவீகவுமுழைத்தே
யன்புதந்துண வளித்துணவாமழைபோன்றார்.

உரை.—துன்பஞ்செய்யும் பொருளென்றெல்லாத்தையுங் கொடுத்தபின்பு தாங்கொண்டவன்பு தம்முள்ளத்தைத் தூண்டியதினு லெலும்புந்தந்தா லினிதென்றதுபோலப் பிறர்க்களிப்பத் தாமுழைத்துப் பூவுலகிலுள்ளவுயிர்க்கெல்லா முணவாக்கியபின் றானுமுணவாகு மழைபோலிருந்தானென்க. (௬௫)

சிறுமையார்துயர் சிதைத்திரந்தாயினுமளித்த
வறுமையார்பலர் வறுமைதீர்திருவினராகி
யுறுமையார்முகி லுறையிரந்துயிர்க்கெலாமுகுத்த
நறுமையார்தளிர் நறுமலர்வாவியேபோன்றார்.

உரை.—சிறுமையுடையோர் கொண்டதுன்பங்களைத்தீர்த்துத் தாமிரந்தும் பிறர்க்குக்கொடுத்து வந்தவறுமையோர் பலர்வறுமைதீர்த்த செல்வமுடையோராகி யிருண்டமேகத்துளிகளையிரந்தபின்ன ருயிர்க்கெல்லாங் கொடுக்கும் வாசமலர்நிறைந்தகுளம்போ லிருந்தானென்க. (௬௬)

தாயொத்தார்வொடு தரித்திரர்க்கனைத்துமேயாகித்
தீயொத்தாகுலந் தீர்த்துளங்குளிரவண்முகிலாய்ப்
பேயொத்தாலதைப் பெயர்க்கணியொத்தனர்பெயரா
நோயொத்தாயகா னுகர்ந்துயிர்தருமருந்தொத்தார்.

உரை.—தாய்போலவன்புகொண்டு தரித்திரர்க்குத்தாமெல்லாமாகித் தீப்போலவந்ததுன்பங்களை நீக்கிப் பிறருள்ளங்குளிர்பட விகன்றமேகமுமாகி யுயிர்களைக்கெடுக்கப் பேயண்டினு ல்லதைவென்றகற்றப் பேரணிபோலிருந்து தீராதநோயொருவனடைந்தபோ துயிர்தருமருந்துபோ லிருந்தானென்க. (௬௭)

பொய்யெனப்படர் புழைப்படக்குடைந்தபுண்ணு
மெய்யெனத்தயை வேர்விடுநெஞ்சினார்நோக்கி [டலை
ஐயெனத்தமுள் ளிரங்கியதன்மையோடப்புண்
ணொப்பெனக்கதி ருதித்திருளெனமறைந்ததுவே.

உரை.—பொய்போலப்படர்ந்து குடைந்தபுண்ணுடையவுடலை மெய்போலவேரிட்டழுந்திய வன்புடையநெஞ்சினாரொருநாள்கண்டுவிரைந்து தம்முள்ளிரங்கியதன்மையாலே யப்புண்சூரியனுதிப்ப விருள்மறைந்ததுபோல மறைந்ததென்க. (௬௮)

காவியுண்டருட் கண்ணினார்முகமனோக்கவினாங்
காவியுண்டசா வதைக்கடிதுமிழ்ந்ததேயமல
னேவியுந்தவிர்த் தேகியவியோனசென்றவனைத்
தாவியுண்டபின் றந்தனதிமிங்கிலம்போன்றே.

உரை.—பின்னையொருநாள் தயையுள்ளகருங்குவளைக் கண்ணுடையோர் பிரியமாய்ப்பார்த்ததினா லங்கோருபிணாயுண்டசர் வுடனேயதனைக்கக்கிச் செத்தவனுயிரோடெழுந்திருந்தா னாண்டவ னேவிக்கொண்டிருந்தானு மதை மீறிப்போன வியோனசென்றவனைப்பாய்ந்துண்ட திமிங்கிலமின்வனையுமிழ்ந்ததுபோலவென்க. (௬௯)

ஓதுமுற்றரு ளுரையினாலெவருமுட்காமக்
கோதுமுற்றழல் குளிரநீக்குவர்கரம்பிடித்துத்
தீதுமுற்றழல் திளைத்தபோதிலோத்தெனுமவனைச்
சோதுமத்தினின் றமரரோதுரத்தினர்போன்றே.

உரை.—இவர்சொல்லு மினியவுரைகளினாலெவரு முட்காமங் கொளுத்தினவழலையவித் துட்குளிர்படவே பாவத்தாற்பற்றியவழலெரியும்போது கைப்பற்றி யிழுத் திலோத்தென்றவனைச் சோதுமநகரினின் றப்பால்வானவர் துரத்தினதுபோலவென்க. (௭௰)

அன்பின்காணியா ரன்பொடுவீங்குமில்லறஞ்செய்
யின்பின்காதலா வின்னுயிர்தன்னிலுமெவர்க்கும்

நன்பின்காவலராய் நலைவயறநயனெலாநல்கி
முன்பின்காசினிக் கிணையிலாமுயன்றதற்களவோ.

உரை.—அன்பின்கரணியுடையோர் தயைமிகுந் தில்லறங் கொடுக்குமின்பத்தினாசையா லுயிரினுமெவர்க்கு நற்காவலா கிக் குற்றங்களற நன்மையெல்லாந்தந்து பூவுலகின்முன்னு ம்பின்னு முவமையில்லாதமுறையோடு செய்ததற்களவுண் டோவென்க. (௭௧)

ஆலமுற்றிய வகல்புவிநயன்படவருளின்
கோலமுற்றிய குணத்திவர்கெழுவியகருணை
நீலமுற்றிய நெடும்வரையெங்கணுங்குளிரச்
சீலமுற்றிய சினைமுகில்பொழிந்தனபோன்றே.

உரை.—நஞ்சுகொண்டபூமியெல்லா நன்மைப்படத்த யையின்வடிவுள்ள குணத்தையுடையோர் நிறைந்துசெய்தக ருணையே கரியநீண்டமலையெல்லாங்குளிரச் சீலமேருலாகக் கொண்டமேசந்துளிபொழிந்ததுபோலுமென்க. (௭௨)

கானகத்துற வாயினரின்னணங்கனிவாய்
வானகத்துற வாயினவில்லறம்வனைந்தார்
மானகத்துற மனுவொடுதெய்வதமிறையோ
ஞானகத்துற வரங்கொடுபுனைந்தனபோன்றே.

உரை.—கானகத்தில்வழங்குந் துறவுகொண்டவிவரிவ்வண் ணமேயினிதாய் வானுலகி லுறவுள்ள வில்லறத்தையு முடித் தார், மனத்திற்பெருமைகொண்டு மனுச்சுபாவமுந் தேவசு பாவமு முடவிடத்திலொன்றுபடக் கடவுள் தன்வல்லமை கொண்டு புனைத்ததுபோலுமென்க. (வானுலகிற்றவமில்லாம லன்புடைமையுள்ளதாகையி னன்பினுல்வளரு மில்லறமேவா னத்தி லுறவுடையதென்றுரொன்க.) (௭௩)

ஈரறம்பொருத்துபடல முற்றும்.

ஆகப்படலம் - ௬ - இ - விருத்தம்

௫௱௨௯.

# ஏழாவது.

# ஐயந்தோற்றுபடலம்.

## வேறு.

மாசறுதுறவோரன்ன வடதிசையுள்ளிவெய்யோன்
காசறுமேடமுற்றுக் களித்தபங்குனிநாள்கன்னி
யாசறுகடவுளெய்தி யவதரித்துடலம்போர்த்த
வேசறுகாதைபாட வினையவனடிமேற்கொள்வாம்.

உரை. தூயதுறவோர்நினைவுபோல வடக்குபோகச் சூரியனுநினைத்துக் குறையில்லாத மேடவிராசியையடைந்தவினிய பங்குனிநாளிற்குற்றங்களை நீக்குங்கடவுளே கன்னியிடத்திலவந்தவதரித் துடலுங்கொண்ட தேவகதையைப்பாட வவனிரு பாதத்தைத் தலைமேற்கொள்வாமென்க. (க)

தண்படுகொழுகொம்பூன்றித் தலைபடர்வல்லியன்ன
தெண்படுமதுப்பூவாகை சேர்த்தநற்றுணைவனோடு
விண்படுமுடுக்கள்சூழ்ந்த விரைக்கொடிகன்னியிவ்வா
றெண்படுமளவற்றுய்ந்த வீரறம்புனைந்தநாளில்.

உரை.— குளிர்ந்தகொழுகொம்பினின்று படரும்வல்லிக் கொடிபோலத் தெளிந்தமதுவைப்பொழியு மலர்விருதுற்ற நற்றுணைவனுகிய சூசையோடு வானத்திலுள்ளமீன்களைச்சூழ்ந்த வாசம்பொழிந்த பூங்கொடியாகிய கன்னிமரியென்பவ ளித்தன்மையா லெண்ணுமளவுமின்றி நல்லீரறங்களைப்புனைந்தநாளிலேயென்க. (உ)

குணிக்கருங்கருணையார்ந்த குணத்தையாறமைந்தநாதன்
றணிக்கருங்குணுங்கைவென்று தரணியைப்புரந்துகாக்கக்

கணிக்கரும்வளமைபூத்த கன்னியின்வயிற்றிருளிங்
கணிக்கருமுறையான்மைந்த னாகவுட்கருத்துற்றானே.

உரை. — கருதற்கரியகருணையுள்ள வாறிலக்கணங்களையு டையநாதன் றணியாதோங்கினபசாசுகளைவென்று பூவுலகத் தோரைப்புரந்துகாக்க மதிக்கப்படாதவளமையுடைய கன் னியின்வயிற்றி லிங்கே தோன்றியமுறையோடுமகனாகநினைத்தா னென்க. (௩)

மணமுடித்தேழாந்திங்கள் வளர்ந்துதேய்ந்தொழுகாமு
கணமுடிக்கன்னியுள்ளங் கனிவுடைந்தமையக்கஞ்ச [ன்னர்
மணமடற்குவியுங்காலை வந்தபங்குனியையைநாட்
கணமெனக்கபிரியேலைக் கடவுளேவிட்டானன்றே.

உரை. — திருமணமாகியேழுமாதமுடியுமுன்னர் மீன்மு டிசூழ்ந்தகன்னி யுள்ளிணங்கிச்சம்மதிக்கவே தாமரைதன் வாசவிதழ்களைக்குவியுநேரமென்னுஞ் சாயங்காலமே பங்கு னிமாதமிருபத்தைந்தா நாளி லவ்விடத்திற் சீக்கிரமாய்க்கபிரி யேலென்னும்வானவனை யாண்டவன்விட்டானென்க. (௪)

தூதெனவவியோனாய கபிரியேல்சுடரைச்சூட்டிக்
கோதெனவிருளைநீத்த கோதைகண்விரைவிற்சென்று
சீதெனமதியந்தாங்குஞ் சேவடிபணியவீழ்ந்து
போதெனவழிந்ததேனைப் பொருதுவெல்லுரையுற்றானே.

உரை. — தூதஞ்சியவவியோனென்னுங் கபிரியேல் கதி ரைவீசு முருவங்காட்டிப் பாவவிருளை நீக்கிய கன்னியினிட த்து விரைவிற்சென்று குளிர்ந்தசந்திரன்றாங்கிய பாதத்தைவ ணங்கவிழுந்து மலரினிழிந்ததேனுவமைவென்ற சொற்கொ ண்டானென்க. (௫)

பொய்யகன்றெழுவதெய்வப் பூரணவோகையாளே
மையகன்றவப்பிணைத னடைந்துவாழ்நெஞ்சத்தாளே
வையகம்வைகும்வாய்த்த மாதருளெண்ணிலாகி
ஐயகம்பொலியப்பூத்த சுந்தரிவாழியென்றான்.

உரை.—மெய்கொண்டுயரப் பூரணதேவவரங்களாற் பிரியஞ்செல்வியே! ஐயமின்றிப் பரமநாதனையடைந்துவாழு நெஞ்சுடையவளே! பூவுலகிற்பெருமையுள்ளமாதர்களுள் ளெண்ணப்படாத பாக்கியமடைந்து தூயமனத்தினுயர்ந்த வழகியேவாழியென்றானென்க. (௬)

கனிக்கள்வுயர்ந்தகோடு வளையும்போற்கருணையார்ந்த
நனிக்களவெள்ளிமைபூத்த நறுமையிற்பொருவாக்கன்னி
தனக்களவகன்றவாசி சாற்றியசொல்லையாய்ந்த
மனக்கள்வுளைந்துநாணி வரைந்தவோவியமேயொத்தாள்.

உரை.—உச்சியிற்காய்த்த கனிகளினளவாகக் கொம்புகள் வளைவதுபோலக் கொண்டநன்மைக்களவாகத்தாழ்ச்சியுடையவரங்களாலொவ்வாதகன்னி தனக்களவில்லாத புகழ்களைச் சொன்னமுறை நினைத்தவளாக நொந்துநாணிச் சித்திரம் போ லிமையாதிருந்தாளென்க. (௭)

கலங்கினவகத்துந்தெண்ணீர்க் கடலளறாகாவண்ணம்
மலங்கினவகத்துங்கன்னி மயக்குறாதுரனுற்றோங்கித்
துலங்கினவகத்துன்னேவல் துடர்நெறிதோற்றுவாயென்
றிலங்கினவகத்துள்ளுள்ளி யிறைவனை வணக்கஞ்செய்தாள்.

உரை.—கலங்கினாலுந் தெளிந்தகடல்சேறாகாததுபோ லவக்கன்னியுள்ளுளைந்தாலு மயக்கமின்றியோங்கியென்றாண்டவனே தெளிவாகவுன்னேவலின்முறைமை காட்டுவாயென் று விளங்கியவுணர்வி லிதைநினைத்துக் கடவுளைத்தொழுதா ளென்க. (௮)

பளிங்கடுத்தவற்றைக்காட்டும் பான்மையாவிவண்முகத்
துளங்கடுத்தவற்றையோர்ந்த கபிரியேலுறுதிசொல்வான் [றி
விளங்கடுத்திறைவற்கன்பு மீதுறவுவகைபூத்த
வளங்கடுத்துயர்ந்தமர்தே மயக்குறவருந்துவானேன்.

உரை.—அடுத்தபொருளைக் கண்ணாடியிடத்திற்காண்பது போல விவண்மனத்தைக்கடுத்த வுணர்வெல்லா மிவண்முகத்தி

ற்கண்டறிந்தகபிரியேலுறுதிகளைச்சொல்லுவா னுன்னையடு
த்துவிளங்கியகடவுளுக்கன்புமிக்க் பிரியமுடையவளாகிமாட்
சியாலுயர்ந்தமாதேமனமயங்கவருந்துவானேனென்க. (௯)

மதிபழித்திலங்குசங்கின் வாய்ந்தகுல்பழித்தீங்குள்ள
விதிபழித்தரியவாற்றால் வேய்ந்ததோர்கருப்பமாகி
நிதிபழித்தொளிர்ந்ததோன்றல் நீபயந்தவற்கியேசு
துதிபழித்துயர்ந்தநாமஞ் சொற்றவாய்கன்னிமாதே.

உரை.—மதியினும்விளங்கிய சங்குகொண்டநற்குலப்ப
ழித்துப் பூவுலகிலுள்ளபொதுமுறை தவிர்ந்தவழியாற் கருப்
பந்தாங்கிப் பொன்னொளியினுந்துலங்கியவோர்பிள்ளையை
நீயேபெற் றவற் கியேசுவென்னுந் துதியெல்லாங்கடந்த
நாமமேயிடுவாய்கன்னிமாதேயென்க. (௰)

அளியமைந்துயிர்த்தசெம்ம லநந்தன்சேயென்னநே
யுளியமைந்தாசுதாவித் துயர்ந்தகோலோச்சிநாளும். [மி
களியமைந்தளித்தபாரிற் காவலென் றுள்வானென்ன
நளியமைந்தினியசொல்லை நவின்றடிவணங்கிட்டானே.

உரை.— அன்பின்வழியால் நீபெறும்பிள்ளை கடவுளின்ம
கனுமாகிப்பூவுலகிலுந் தாவீதனுடையசெங்கோலடைந் தெ
ப்பொழுது மினிதா யளித்த பூமிக்காவலாகவாளுவானென்று
குளிர்ந்தசொல்லைக்கொண் டவள்பாதத்தை வணங்கினனெ
ன்க. (௰௧)

தொய்யலுற்றிறைவன்றாளைத் தொழுதுவாழ்திருவல்
லோனே
மய்யலற்றழிவிற்கன்னி மைந்தனைப்பெறுதலேதென்
றய்யமுற்றிவள்வினவ வரியமாதடியைப்போற்றி [ஞே
வெய்யிலுற்றடைந்ததூதன் விடைமொழியுரைப்பான்மன்

உரை.—இனிதாய்க்கடவுள்பாதத்தை வணங்கிவாழுந்திரு
வல்லோனே குறையின்றியழியாதகன்னி பிள்ளையைப்பெறு
வதேதென்று சந்தேகத்தோடிவள்கேட்ப விவளடிபணிந்து

கதிர்வீசிவந்த தூதனாகிய கபிரியேல்மறுமொழிசொல்வானெ
ன்க. (௰௨)

காருலாமுலகுமாங்கு கதிருலாஞ்சுடரையெல்லாங்
காருலாமுலகும்யாவுங் காரணமொன்றுமின்றிச்
சீருலாம்வயத்தநாதன் செய்தவின்மகவையீன்றுஞ்
சீருலாங்கன்னியாதல் சேர்த்தலேயரிதென்பாயோ.

உரை.—மேகந்திரியுமுலகினையு மங்குடையபலசுடர்களை
யுங் கடல்சூழுலகினையு மற்றெவையு மொருகாரணமுமின்றி
ச்செல்வவல்லவனுய கடவுளுள்ளவாக்கினபின் னதின்மேற் பிள்
ளைபெற்றும் மழகியகன்னியழியாதுகாத்தலே யரிதென்பா
யோவென்றானென்க. (௰௩)

மகற்பெறுவயதுமுற்றி மைமையாமெலிசபெத்குத்
தகற்பெறுகருப்பமாகித் திவன்றவெண்டிங்களாறுய்ப்
பகற்பெறுகன்னியாய்நீ பழுதிலாச்சிறுவனீன
விகற்பெறுவினையென்றும் மிறையவற்கெளியதன்றோ.

உரை.—புதல்வனைப்பெறுதற்கான வப்துங்கடந்து முற்
றிமலடியாகிய வெலிசபெத்தையும் பெருமையுள்ளகருப்ப
ங்கொண்டாறுமாதமாகி விளங்குங்கன்னியாகியநீயு மழிவின்
றிப் பிள்ளைபெறுதல் விரோதமென்றுதோன்றினும் மாண்
டவற்கெளியதாமென்க. (௰௪)

ஆவதுங்கடந்தகாட்சிக் கருந்தவனீசயிய
னேவதுமின்றிக்கன்னி யொருமகவுயிர்ப்பாளென்னக்
கோவதுவிறைவன்சொன்ன கூற்றெனவுரைத்தல்பொய்யா
யாவதுமறிதியல்லால் யானினக்குரைப்பதென்னே.

உரை. — வருங்காரியங்களையறிந்து வருங்காலங் கடந்த
காட்சியுடைய வருந்தவனாகியவீசயீயனென்பவன் றூன்பமி
ன்றிக் கன்னியொருத்திமகனைப்பெறுவாளென்று வானுலக்
நாதன்சொன்னவசனமாக வுரைத்தானே யதுபொய்யாம
லாகுமென்றறிவாயன்றி நானே திரும்பி யுனக்குச் சொல்ல
வேணுமென்க. (௰௫)

நேயமாம்பிரீத்துசாந்து நிழன்றதண்கவிகைக்கீழ்நீ
தாயுமாயொன்றுமூவர் தமிற்சுதன்றன்னையீன்றாந்
தூயமாகன்னிக்கேதந் தோன்றிலாச்சுடரினாங்கு
மாயமைக்காக்குவானென் றஞ்சலிசெய்திட்டானே.

உரை. — நேயமாகிய இஸ்பிரீத்துசாந் துனக்குநிழல்செய் தவன் குளிர்ந்தகுடையின்கீழ் நீகருப்பங்கொண்டு தாயுமாகிப் பிதாசுதன் இஸ்பிரீத்துசாந்தென்னு மொரேகடவுளாயுள்ள மூன்றாட்களி னிரண்டாமாளாகியசுதனைமகனாகப்பெற்றாலு ந் தூயவுன்கன்னிமையழிவின்றிச் சூரியனினு மிகுதிவிளங்க க்காக்குவானென் றவளைவணங்கினான்கபிரியேலென்க. (௰௬)

தேற்றுரையுரைத்ததூதன் செப்பியயாவுங்கேட்டு
வேற்றுரையுரைத்திலாளுள் விழைவுறவிறைவன்றாளைப்
போற்றுரையுரைத்துக்கேட்ட புதிவினையோர்ந்துசாவி
யேற்றுரையுடைத்தகன்னி யிரவெலாம்போக்கினாளே.

உரை. — தேறுதல்செய்ததூதன் சொன்னதெல்லாங்கே ட்டுமறுமொழிதான்சொல்லாம லாசையோடாண்டவன்பா தத்தைவணங்கி யன்றுகேட்டபுதுமையையாராய்ந்துபார்த் துப் புகழெல்லாங்கடந்தகன்னி யவ்விரவெல்லாந்தியானத் திற்போக்கினாளென்க. (௰௭)

அருள்புறங்கண்டசெல்வத் தமலைமுன்னெளிமையுள்
வெருள்புறங்கண்டுகூசி வெறுத்தலோடமைதரேற்றாள் [ளி
தெருள்புறங்கண்டமீனிற் றிருமுகத்தொளிவில்வீச
விருள்புறங்கண்டபாரிற் கெரிவிளக்கொப்பநின்றாள்.

உரை. — தேவருள்மிகுந்துவந்த விச்செல்வத்தினருமை முன்பாகத் தன்னெளிமையெதிர்படவுணர்ந்து தாழ்ச்சியி னால் வெருவிக்கூசி யதைவெறுக்கவு மிணங்கியமையுந் தே றுதகன்னி தெளிந்தமீனினுந் திருமுகத்திற் கதிர்களைவீசலாற் பாவங்கொண்டிருண்டபூவுலகிற் கொருவிளக்குப்போல நின் றாளென்க. (௰௮)

இன்னவாயுசாவும்வேலை யிளம்பிடியன்னவோர்நற்
கன்னிவாய்மொழியைக்கேட்பக் கடவுளுங்கடவுடன்னைத்
துன்னிவாழ்மரர்யாருந் துகடவிர்த்துலகமெல்லா
மன்னவாயுய்யுமென்ன வவாவொடுநிற்பாரன்றே.

உரை. — இத்தன்மையாய்த் தியானிக்கும்போ திளம்பிடி யொத்தவோர் கன்னியின்வாய்மொழியைக்கேட்கக் கடவுளு மற்றவானவரு மிவள்வாய்மொழியினா லுலகெல்லாம் வாழு மென்றறிந் தாசையோடு நின்றாரென்க. (௰௯)

சூழ்திரையுடுத்தபாரிற் றோன்றிய நவத்தைக்காண்டற்
காழ்திரைவிரைவினீக்க வாதவன்கதித்துத் தூண்டுந்
தாழ்திரையாழ்ந்தபாய்மாத் தழல்சினத்துயிர்த்ததென்ன
கீழ்திசைகவிந்தவானங் கேழொளிசிவந்ததன்றே.

உரை. — கடல்சூழ்ந்தபூவுலகிலாய விப்புதுமைகாண வாசையினாற் சீக்கிரமாய்ச் சூரியன் கடலைவிட்டெழும்பக் கோபித்துத் தூண்டியகடவி லமிழ்ந்திய தன்குதிரைகள்சினந்து தீப்பொறிகளைவிட்டாலென்ன கீழ்திசைசிவந்ததென்க. (௨௰)

நன்னிலாவுதயத்தெந்தை நயப்புறவியப்பவானோர்
மன்னியாமெவரும்வாழ்க வந்தவாளவனைநோக்கிக்
கன்னிதாழ்சிரத்தைக்கோட்டிக் கடவுளாளென்னையிந்தோ
பன்னியாயினநின்வாய்ச்சொற் படியெனக்காகவென்றாள்.

உரை. — சூரியனுதயத்திலே யாண்டவ னின்பங்கொள்ளவும் வானவரதிசயப்படவு நாமெல்லாரு நிலைபெற்றவாழ்வடையவும் வந்தகபிரியேலைநோக்கித் தன்சிரத்தைத்தாழக் குனிந்து கடவுளினடிமையாயவென்னை யிதோ நீசொன்னபடி யெனக்காகக்கடவதென்றாள் கன்னிமரியென்க. (௨௧)

என்றாளிகடுத்தவன்பா விதயங்கூர்ந்துயிர்த்தசெந்நீர்
மின்றாளிமூன்றுஞ்சேர்ந்தோர் மெல்லுடலாயுள்ளாவி
சென்றாளிமனுவும்வாய்ந்த தெய்வமும்பொருந்தவீக்கி
யொன்றாளியிறைவன்மைந்த னோர்மனுமகனுமானான்.

உரை. — அக்கன்னியிவற்றைச் சொன்னபோது நெஞ்சிற்கடுத்த வன்பின்மிகுதியினு விருதயம்பொங்கிக் கொப்புளித்தவிரத்தத்துளி மூன்றுமொன்றாய்ச்சேர்ந்துமெல்லியதோருடலாகியந்நேரமே படைத்ததோர்நல்லாத்துமமு மவ்வுடலினுட்புகவிட்டுச் சென்றபோது மனுத்துவமுந் தேவத்துவமுங்கூடப்பொருந்தக்கட்டி யவ்விருதுவ மொன்றினதினு, ஆண்டவனுடையகுமாரன் மனுமகனுமானானென்க. (உஉ)

மீயகன்றுயர்ந்தமாண்பாள் விளங்கவேய்யுலகமூன்று
மாயகன்றோன்றுநீத்தை யாயிரத்திருநூறுண்டிற்
பாயகன்றொளியிற்சான்றோன் படரிருணீக்குமுன்னர்
நாயகன்மருளை நீக்க நானெனவாயினானே.

உரை. — வானுலகி லுயர்ந்தமாட்சிமையுடைய கன்னித்தாய் கதிரைவீசிக்கொண்டு நிற்பவே மூவுலகமுண்டாக்கியொன்றுகுறைய வையாயிரத் திருநூறுவருடமாகிச் சூரியன்பாப்புந்தன்னொளியா லிருளை நீக்குமுன்ன ராண்டவனுங்கொண்டமயக்கத்தை நீக்க நம்மைப்போல மனிதனானானென்க. (உ௩)

ஆதனேவிதித்தநாளு மமையமுமாகும்வேளை
யேதமேவிளைத்தவாத னிழிவொழித்துயிர்களியாவு
நாதனேயளிப்பச்சுங்க நாளையிலுதித்துமுன்னோர்
வேதமேயுரைத்தவண்ணம் விகலமற்றாயிற்றன்றே.

உரை. — ஆதித்தகப்பனாகிய வாதனையுண்டாக்கின நாளுஞ் சமயமுமாகியநேரமே பாவஞ்செய்தவாதன் கொண்டுவிட்ட கேடொழித்து நாதனே யுயிர்களெல்லாமளித்தாக்காக வெள்ளிக்கிழமையிலே யவன்மனுவாய் முன்னோர் வேதமாகச்சொன்னதெல்லாங் குறையாமல்நிறைவேற்றினதாயிற்றென்க. (உ௪)

யாழிசைபழிப்பவாறோ ரினிதெனப்பாடவாங்கு
மாழலைபழிப்பத்தொய்ய லார்ந்ததாய்நப்பவெய்யோன்
கேழொளிபழிப்பவன்ன மனையொளிகிளர்ப்பவானில்
வீழுறைபழிப்பவெங்கும் விழுநயன்பொழிந்ததன்றே.

உரை.—வீணைபழிப்ப வதனினுமினிதாய் வானோர்பாடவு ந்தாழ்ந்தகடலினு மிகுந்தவின்பத்தின் மூழ்கினதாய் களிகூரவுஞ் சூரியன்கதிரினு மந்தமனையெல்லாம்விளங்கவு மேகத்தினின்றிழியுந்துளியினு நிறைந்த நன்மையாவு மெங்கும் பொழிந்ததென்க. (௨௫)

பளிக்குவேய்செப்பி லுண்ட பருதிசூழெறிக்கும்வில்
லாற் [மோத
ஒளிக்குமேபோலுந்தேன்பெய் செழுமலர்முகைகண்
மலர்க்குமேபோலும்வாய்ந்த வன்னமாகன்னிமாட்டெவ்
வளிக்குமேமணமும்வில்லு மொளிமுகத்தொழுகிற்றம்மா.

உரை.—பளிங்கினாற்செய்தலங்கரித்த செப்பினு ள்ளடைத்தசூரியன் சூழக்கதிரையெறிந்து விளக்குவதுபோலவு மலராதபூவரும்புகள் வாசனைபொழிவதுபோலவு மழியாதவம்மாகன்னி திருமுகத்திலெங்கும் வாசமுமொளியும்பொழிந்தனவென்க. (௨௬)

சேயெனத்தன்கண்வந்த தேவனைவணக்கஞ்செய்து
தாயெனத்திறம்பாக்கன்னி தன்னுயிர்கிளர்ப்பத்தாறிற்
றாயெனத்துளித்தமாரித் தொகையின்மேல்வரங்கள்வாரும்
நாயெனக்கண்டவானோர் வாயடைத்தஞ்சாநின்றார்.

உரை.—தனக்குமகனாகவந்தகடவுளைவணங்கித் தாயானவழியாக்கன்னி தன்னுயிரினிதாய்நிறைய வளவின்றிப்பெய்த தூயமழையினு மிகுந்தவரங்களையடைந்த முறைமைகண்ட வானோ ரதிசயத்தினால் வாய்புதைத்தஞ்சிச் சூழநின்றாரென்க. (௨௭)

அஞ்சியவணக்கத்தோடு மஞ்சலிசெய்துதாயுந்
துஞ்சியவுயிர்களுய்யத் துடர்பொடீங்கெய்தியார்வம்
விஞ்சியசேயும்வாழ்த்தி விரும்பிவானுயர்வாழ்வீட்டை
யெஞ்சியவிழுப்பத்தோங்கி யினிதெனப்பாடாநின்றார்.

உரை.—வானவரஞ்சிவணங்கித் தாயையுங் கெட்டவெம் முயிர்கள்வாழத் தயையாலிங்கேமனுவாய்வந்துகருணைநிறை

ந்தழகனையும்வாழ்த்தி யாசைமிகுந் துயர்வான்வீட்டினு மரியவின்பங்கொண்டோங்கி யினிதாய்ப்பாடுவாரென்க. (௨௮)

## வேறு.

வாழுவானுளோரியாழு மருகுநன்றிமேலுயர்ந்
தாழுமாழிசூழுபாரி லரிவையுண்டதேவருட்
சூழுசூலிதாயபோது சுடரொரிந்தவானுமேற்
றாழுபூமியேறவாய் தகவுவாடிலாவதே.

உரை.— வானுலகில்வாழுநாமே கொண்டநன்மையின் மேலு மாழ்ந்தகடல்சூழ் பூவுலகிலுள்ள விப்பெண்ணடைந்த தேவவருளினா லிவள்கொண்ட சூலிதாகையிற் கதிர்விட்டிலங்கியவானின்மேலுந் தாழ்ந்தபூமியேயுயர்ந்தபெருமைபெற வதற்கானமாட்சிமை யொருநாளும் வாடாதென்க. (௨௯)

வாடிலாதுமாறிலாத மணமெறிந்தபூங்கொடி
கேடிலாதுலாவுதேறல் கிளரரும்புசூலுறி
யீடிலாதுஞாலமேவு பிழிவமைந்தநோயறக்
காடியாவும்வாசமாரு கனியையீனுநாளிதே.

உரை.—மாறுமலுங்குறையாமலும் வாசம்பொழிந்தபூங்கொடியாகியவிக்கன்னி யழிவின்றித் தேனிறைந்தவரும்பினைச் சூலாகக்கொண்டா ளினிப்பூவுலகம் பாவத்தினாலடைந்த நோயைத் தீருமருந்தாக வாசனையெங்கும்பரப்பிய வோர்கனியைத்தர நாள்கிட்டினதென்க. (௩௰)

நாளிதேயுவப்பஞால நசையமிழ்ந்திராவறக்
கோளிதேகடுத்ததீது கொணர்குணுங்கிளையற
வாளிதேபிழைத்தநீச மனுமலிந்தகேடறப்
பீளிதேவியப்பவீடு பெறுவுகின்றதாழுமே.

உரை.—பூவுலகங்களிகூர நாளிதுவே, மனதிற்காசைகொண்டுவிடு மிருளற்றொழியச் சுடரிதுவே, பொல்லாங்கெல்லாங் கொண்டுவிடு பசாசுகள்செய்நோய் வேரோடறக்கவர

ளிதுவே, பிழையுற்றநீசமனுக்குல நிறைந்தடைந்தகேட்டற்ற கலச் சூவிதுதானே, வான்வீட்டடைந்த நாமுதலாய்திசயிப்ப வென்க. (௫௧)

பெறுவுகின்றநாமவாலை பெருகுகின்றவேவினு
ஊறுவுகின்றஞாலம்யாவு மூளையவந்தபீடைக
ளிறுவுகின்றகாலமாக விளவணின்றநாதனைத்
துறுவுகின்றநூலினோடு துதிசெய்கின்றியாவரோ.

உரை.—தன்னுமை வெற்றிவேலுடையா னிறங்கி யடைந்த பூமி முன்னர்நோகக்கொண்டபீடைகளை யறுத்தழிக்கும் காலமாகக் குழந்தையாயவதரித்தநாதனைக் கற்றநூலின் முறைகொண்டெவர் நிகராகத்துதிப்பாரென்க. (௫௨)

துதிசெய்கின்றியாருமுண்ட துகடுடைத்தநன்றியால்
விதிசெய்கின்றவேதநின்று மிகைதுடைத்தஞானமாய்க்
கதிசெய்கின்றவீறகன்ற கனிவுகுக்குவான்மிசை
பதிசெய்கின்றுவாழவொன்று பரிசிலக்கமாகுமே.

உரை.—ஆகிலுங் கூடியவளவி லவனைத்துதிப்பவரெல்லாருந் தாங்கொண்டபாவத்தைத் துடைத்தநன்மையினால் விதித்தவேதத்தின்முறையாற் றன்பந்தீர்ந்த ஞானங்கொண்டு பரமகதியிலுள்ள முடியாதவின்பத்தையடைந்து வான்மேற்குடிகளாய் வாழும்படிக்கு நாதனெடுத்தமுறை விளக்கலிதேயென்க. (௫௩)

இலக்கமாகநேமிமீதி வினிதெழும்பதங்கனி
யுலக்கமாகவீதிதீத ரொழுகலின்றியுண்டதோம்
விலக்கமாகநாதனாகி மெவியமைந்தனென்றனாய்க்
கலக்கமாகநேமிதேய்வு கடியகங்கலங்கவே.

உரை.—விளக்கமாகப் பூமியிலெழுந்த சூரியனீயே தீயோர்கெட்ட நன்னெறியில்வழுவிச் செய்தபாவத்தைவிலக்கிநீக்க வானுலகநாதனாய்ச் சிறியதோர்மனுமகனாய் மயக்குவித்துப் பூவுலகினைக்கெடுக்கும்பசாசுக ளுட்கலங்கி மயங்கவென்க. (௫௪)

அகங்கலங்கமுனையுடன்றீயழிவுகுங்குனுங்கினம்
நகங்கலங்கவுருமிழிந்த தடையில்மண்டெரிந்ததீச்
சகங்கலங்கவெருவடைந்து சடிதியின்றிழிந்த்தா
முகங்கலங்கவுறமரந்தை முடியமண்டலங்களே.

உரை.—உள்ளங்கலங்கப்போர்செய்தறிவுபயக்கும் பசா சுகளெல்லா மலைகள்திர விழுந்தவிடிகள்போல நிறைந்தெரி தீயுலகமாகியநரகமுங்கலங்க வின்றே வெருவி யோர்கணத் திற் கீழேவிழுந்தனவா முகமுங்கலங்கமனிதர்கொண்ட துன் பமெல்லா மொங்குமுடியவேயென்க. (௬௫)

மண்டலங்களங்கமெங்கும் வாரிமாற்வாண்முகன்
கண்டலங்களுங்கலங்கு காலுஞானகாந்தியால்
விண்டலங்களங்கணின்ற மீனுநாணவேய்ந்தலு
லெண்டலங்களெங்குநன்றி யீறிலாமலீகுமே.

உரை. — பூவுலகமடைந்தமாசெல்லாம் வாரிக்கொண்டு மாறு மொளிவிடுமுகத்தினன் கண்கூசவுமிழு ஞானகாந்தியி னால் வானினின்றமீன்களுநாண வொளிர்ந்துதோன்றியகரு ப்பமே யெண்டிசையெங்கு முடிவின்றிநன்மையெல்லாம் பயப்பதென்க. (௬௬)

ஈறிலாமலேகிழட ரீங்குநேடுசீரெலாஞ்
சேறிலாதசெறுவில்விட்ட சிதடர்செந்நெல்வித்ததே
மாறிலாதுநீடுவாழ்வு வானநாதனீகுவான்
பேறிலாதமனுவொடொத்த பிணியருந்தவுற்றுளான்.

உரை.—முடிவின்றி நீசரிங்கே தேடியசெல்வங்களெல்லா ஞ் சேறில்லாதவயலிடத்திற் பேதையோர்விதைத்த செந்நெ ல்வினையதாமே, வானுலகநாதனேவென்றால் மாறாமல் முடி யாதவாழ்வுகளை மனிதர்க்களிப்பத் தானே நீசமனிதர்க்கொ த்த பிணிகளையநுபவிக்க மனிதனாய்வந்தானென்க. (௬௭)

உற்றமீனும்வானும்வான முற்றயாமுமேயுமீ
றற்றவாசையோடுகூ சலிர்ப்பில்வாழ்த்துநாதனைக்

குற்றமர்திவாழுகோதை குக்கிகுழவாயகூல்
சொற்றவாயசீரதோ தொடுத்தபாவின்மாலையால்.

உரை.— மீன்களும் வானமும் வானத்தில்வழங்குநாளு மோயாமலுமுடியாமலும்பயந்துகூசி யாசையோடுவாழ்த் தின்பரமநாதனைக் குற்றமொன்றின்றிவாழுங்கன்னி தன்றி ருவயிற்றிலடக்கவின்றேயாகியகருப்பமுறைமை மாலையாகத் தொடுத்தபாவினாற் சொல்லத்தக்கதோவில்லையென்க." (௫௮)

தொடுத்தபாவைநிகரநீதி தடருநாவின்முறையினா
லடுத்தமூவுலகமியாவு மரியமூன்றுவிரவினாற்
றடுத்தவீரவெதிரிலாது தகவிருங்குபரமனை
யுடுத்தகருவிலரிதிருங்கு முவமியாதோர்விறலியே.

உரை.—சிதையாதுவரும்பாட்டுப்போலத் தடருநீதிமுறைதவறுமலுலகமூன்றினையு மூன்றுவிரவாற்றாங்கித் தனக்குத்தடைசெய்யவல்ல பகையொன்றில்லாத பரமநாதனைக் கொண்ட கருப்பத்தி லரிதாய்த்தாங்கிநின்ற வொப்பில்லாத தோர் சிறுபெண்ணேயென்க. (௫௯)

விறலியாலுயிர்த்தபாலன் விறலினாலுயர்ந்தரா
மறலினாலமைத்ததீது மரபினாலழிந்தறத்
திறலினால்மிதித்தகூளி சிரமெலாநெரிந்திடும்
பிறவினாலுகுத்தபாவம் விலகுவாள்விளங்குவான்.

உரை.—இச்சிறுபெண்டரும்பாலனே வீரங்கொண்டாதியிற் பாம்பினுருக்கொண்ட பசாசின்பகையினால்வந்த தின்மைநன்றுமொழிந்தறத் தன்வல்லமைகொண் டப்பசாசுகள் தலையெல்லாநெரிய மிதித்துக்கொல்லுந்தன்மையினால் வந்தபாவங்களைவிலகி விளங்குவானென்க. (௬௰)

வான்விளங்கமண்விளங்க வந்தநாதன்வாழியே
மீன்விளங்கவேய்த்தமுத்து வேய்ந்தசிப்பிவாழியே
கான்விளங்கவுயிரளிக்கு கனியிராயன்வாழியே
தேன்விளங்குமுகைவிளாது தேமுகன்னிவாழியே.

உரை.—வானுமண்ணும்விளங்கவந்த நாதனேவாழி, மீன் களினு மொளிவிடுமுத்து சூலாகக்கொண்ட சிப்பியொத்தவளேவாழி, வாசம்பொழிந்துயிளைத்தருங்கனியொத்த விராயனேவாழி, தேனுமிழ்ந்துமலராதவரும்பொத்தகன்னியேவாழியென்க. (௪௧)

வாழிமைந்தருய்யமைந்த ஞயநாதன்வாழியே
வாழிநன்மையீகவின்மை மலிதயாபன்வாழியே
வாழிவாழுவானின்வாழ்வு மண்ணின்வாழ்வுவாழியே
வாழிகருணையாழிவாழி மதுரவாழிவாழியே.

உரை.—மனிதர்வாழ மனிதனுயநாதனேவாழி, பிறர்க்குச் செல்வந்தரத் தான்றரித்திரங்கொண்ட தயாபரனேவாழி, வாழும்வானுலகிற்கு மண்ணுலகிற்கும் வாழ்வானவனேவாழி, கருணைக்கடலேவாழி, மதுரக்கடலேவாழியென்க. (௪௨)

ஏன்றுபாவழங்குமாரி யித்திறத்துகுத்தபின்
மன்றுபூவழங்குமாரி மட்டினத்திறக்கிய
கன்றுநீர்வழங்குமாரி கற்றைவிட்டமாரியுங்
குன்றுமீவழங்குமாரி குறையெனப்பரப்பினர்.

உரை.—வானவரிதெல்லாஞ்சொல்லி யித்தன்மையாவினிய பாமழைபொழிந்தபின்பு வாசமலர்மழையு மலர்த்தேனினின்றிறங்கின பன்னீர்மழையுங் கதிர்மழையு மலைமேற்பொழியுமழையினுந் திரளாய்ப்பரப்பினரென்க. (௪௫).

## வேறு.

ஒளிமுகத்துளயாவுமுவந்ததொத்
தளிமுகத்தமலன்மனுவாயின
களிமுகத்துயர்காயமொடார்கவி
நளிமுகத்தகல்ஞாலநயந்ததே.

உரை.—சூரியனுதயத்தி லுங்குளதெல்லா மகிழ்ந்ததுபோ லவன்பினு லாண்டவன் மனிதனானமகிழ்ச்சியா லுயர்வான் மூங் கடல்சூழ்ந்தவகல்பூமியுங் களிகூர்ந்தனவென்க. (௪௬)

சேதுலாவியசெங்கதிரோடுவான்
மீதுலாவியமீன்மகிழ்ந்தாலென
மாதுலாவியமாட்சியொப்பாகவிள்
ளோதிலாவொளியேழ்மடங்காயதே.

உரை.— சிவந்தகதிர்விடுஞ்சூரியனும் வானிலுலாவு மீன்களுமகிழ்ந்தனபோல வப்பெண்கொண்டமாட்சிமை நிகரத் தாமு மன்றுதந்தவொளி யெழுமடங்காயிற்றென்க. (சரு)

மிகையுற்றுநிலங்காத்தவன்வேய்தலாற்
றகையுற்றுரியதாரகைநோய்செய
நகையுற்றுலெனநாண்மலர்தேனுக
முகையுற்றுயமுறுக்கவிழ்ந்தாமரோ.

உரை.— துன்பங்கொண்டபூமியைக் காத்தளித்தநாதன் றோன்றியதினா லழகியமீன்களு முவமையிற் றோர்த்துநோக வொளிர்ந்தமலரெல்லாஞ் சிரித்ததுபோலத் தேன்மொழிய வாசவரும்புகள்விழ்ந்துமலர்ந்தனவென்க. (சசு)

கடுக்கொடிங்குகடுத்தனதீதற
நடுக்கொடன்புடைநாயகன்றாழ்தலான்
மடுக்கொடெங்கணும்பூமலர்வண்ணமே
யுடுக்கொடண்டமிறங்கினதொத்ததால்.

உரை.— நஞ்சுமிழ்ந்து கடுத்தபாவந்தீர நீதியோ டன்பின்மிகுதியுடையநாயக னிங்கேவந்துதாழ்ந்ததினாற் குளமுந்த லெவ்விடத்திலு மலர்பூத்ததன்மை மீன்களோடுவானமு மிங்கேயிறங்கிவந்ததுபோலுமென்க. (சஎ)

வள்ளவாயிளமாங்குயிலோடெலாப்
புள்ளவாவுவப்பிற்புகழ்ந்தாலென
வுள்ளளாமகிழ்வொத்தினிபாடலா
லெள்ளயாழிசையேய்த்தனவாமரோ.

உரை.— அகன்றவாயுள்ள விளங்குயில்முதல் மற்றப்பறவைக ளினியவாசையோடவதரித்தநாதனைப் புகழ்ந்தாற்போ

வவுள்ளேகொண்டமகிழ்ச்சிக்கொத்தவின்பமாய்ப்பாடி வீ
ணைசொல்லுமிசைகளை யிகழ்ந்தனவென்றவாறென்க. (௪௮)

ஐயும்போயினபோயினவாகுல
மெய்யும்போயினபோயினமுற்பழி
மையும்போயினபோயினவஞ்சனை
பொய்யும்போயினபோயினபூதமே.

உரை.—அன்றுதானே சந்தேகங்களுந் துன்பங்களுஞ் சண்டைகளும் பழம்பழிகளு மாசுகளும் வஞ்சங்களும் பொய்களும் பேய்களும் பூவுலகத்தைவிட்டுப் போயினவென்க. (௪௯)

நெடியநாள்வெளிமூடியநீள்முகில்
கடிதுபோதவில்வான்கதிர்கான்றெனக்
கொடியநோயொழியுங்குணத்தன்றணி
முடிதுளாவெழின்முற்றினஞாலமே.

உரை.—வெளியை நெடுநாள்மூடின கரியமேகங்கள் விரைவிற்கரைந்து மறைந்ததினால் வானமெல்லா நல்லகதிரைப்பரப்பினதுபோல முற்கொண்டகொடியநோ யன்றொழிந்ததன்மையினாற் பூமியெல்லாமகிழ்ந் தோர்முடிசூழ்ந்தாலென்னமுதிர்ந்தவழகோடு தோன்றியதென்க. (௫௰)

அலகற்றுயினவாண்டகைமேயோர்மக
னுலகத்தாயினனென்றுணராத்தவத்
திலகத்தாவியமாண்பியலோர்க்கெதிர்
விலகத்தாவியமீகளிகூர்ந்ததே.

உரை.—அளவில்லாதகடவு ளன்று மனிதனானனென் றறியாமலுந் தவத்தினால்விளங்கியபெருமையோரெல்லாமொப்பில்லாதகளியை யநுபவித்தாரென்க. (௫௧)

வேறரங்கினுறங்கிவிழித்திறை
காறெருழுங்கடைகாரணங்காண்டிலன்
மாறகுங்கறைமாறியகுசையுட்
டாதிறந்ததடம்படவாழ்ந்தனன்.

உரை.—மயக்குங்கறையொன்றில்லாத சூசையோவென்றால் வேற்றறையில் நித்திரைகொண்டுவிழித்தபின் னாண்டவன் பாதத்தைவணங்கும்போது காரணமறியாமல் மட்டில்லாதபெருமைகொண்டு மகிழ்ந்தானென்க (௫௨)

வையநாயகன்வையகத்தாரெலா
முய்யவந்துலகுற்றனனேவென
வையமாயிறையோனையருச்சனை
செய்யவீழ்ந்துமகிழ்ந்தருட்சீர்த்தனன்.

உரை.—உலகத்தாரெல்லாரும்வாழ வுலகநாதன்வதரித்திங் கேவந்தானேவென்று தானநுபவித்தவின்பத்தினாற் சந்தேகப்பட்டுக் கடவுளைவணங்கிக் களிகூர்ந் தருளடைந்துவாழ்ந் தானென்க. (௫௩)

வீடமைத்தனவாழ்வுவிழுங்கிய
வீடமைந்தனவின்பதுவேலைதன்
வீடமைந்தனின்மூழ்கியவேலையின்
வீடமைந்திலன்வெண்மலர்க்கோவினான்.

உரை.—வீடென்னும் பரமகதியிலுள்ள வாழ்வுகளைவிழுங்கிய பேரின்பத்தின்கடலே தன்வீட்டிலுளதாகையி லதிலே மூழ்கியபோது முடிவின்றிவாழ்ந்தான் வெண்மலர்க்கொடியுயர்த்தசூசையென்க. (௫௪)

பானகக்கதிர்பானதுசூவில்வான்
பானகக்களியாள்தரப்பார்த்தாற்
பானகக்களிப்பவ்வமுண்மூழ்கினான்
பானகக்கமழ்பாடவிவாகையான்.

உரை.—வான்முறையின்மேலும் பேரின்பத்தையுடைய தன்றுணைவி சூரியனைச்சூலாகக்கொண்டதினாற் சூரியனிடத்துமிழ்ந்த கதிர்கள்போல வொளிபரப்பக்கண்டதினா லமுதினு மினியகளிக்கடலுண்மூழ்கினா னிகரின்றித் தேனைப் பொழியும்விருதுள்ள சூசையென்க. (௫௫)

கண்டகந்தனில்வாழ்ந்துதன்காதலி
கண்டகத்தகுங்காதைதெரிந்திலான்
கண்டகன்றகனிந்தவின்பெய்தலாற்
கண்டகந்துளிகான்றுகளித்தனன்.

உரை.—அக்கதிர்களைக்கண்டு மனதில்வாழ்ந்து.தன்மனை வியிடத்திலான மாட்சிமையுள்ளசெய்தியை யறியாம வினி யயாலவு மினியவின்பத்தினு விருகண்டுளித்தழுதுமகிழ்ந்தா னென்க. (௫௬)

கலையின்மேலெழுகாற்கவினுளுடை
கலையின்மேலெழுகாந்திபரந்தன
கலையின்மேலெழுங்களியோடருங்
கலையின்மேலெழுகாட்சியடைந்துளான்.

உரை.— பிறைமேலெழுந்த பாதவடிவினுளாகிய தன்று ணைவியுடுத்த சீலைமேற்கிளம்பிய காந்தியெங்கும்பரந்தன, சீ க்கிரத்திற் றுனடைந்தமகிழ்ச்சியோடு படித்தவரிய நூலினு முயர்ந்தகாட்சியடைந்தானென்க. (௫௭)

நாடொறுங்கருநன்றுவளர்ந்துபொன்
னூடுறுங்கருணைப்பொலிநாயகி
நாடுறுங்களிநம்பிகொள்நட்பியல்
நாடருங்கலையானவில்வாங்கொலோ.

உரை.—நாள்தோறுங்கொண்டகரு வினிதாய்வளர்ந்துவா னுலகிலுள்ள கருணைகொண்டுயர்ந்த நாயகியண்டையிலிரு ந்த துணைவன்சூசை யவள்மேல்வைத்த நட்பியல்பினையரிய நூற்கொண்டுரைப்பக் கூடுமோவென்க. (௫௮)

கால்வரும்பிழிகால்கமழ்வாகைபிரான்
கால்வரும்பரிசாற்களிமாறமேற்
கால்வரும்படிகம்பலைகாய்ந்துறுங்
கால்வருந்தியகாதைசொல்வாமரோ.

உரை.—உமிழ்வதரிய மதுவையுமிழ்ந்து மணக்குங்கொ டியோன் சூசையேயடைந்த வின்பஞ் சுழன்றுவருஞ்சுளை

போல மாறினதினால் மேற்காற்றடித் தெல்லாமுங் காய்ந்தத
ன்மையா லுள்ளங்காயத் துன்பம்வந்தபோது வருந்தினசெ
ய்தியையினிச் சொல்வாமென்க. (௫௯)

## வேறு.

மாசறுங்கருப்பமாகி வளர்ந்துதேய்திங்களைந்தா
யாசறுந்தருமகன்னி யகடினிதோங்கும்வண்ண
மேசறுந்தவத்தோன்கண்டே யெய்தியகாட்சிவாளாற்
றேசறுநெஞ்சமீர்த்த செல்லலோடையங்கொண்டான்.

உரை.—மாசில்லாக்கருப்பமா யைந்துமாதமாகிக் குற்ற
மில்லாததருமகன்னியின் றிருவயி றினிதாய் வளர்ந்ததன்மை
நற்றவத்தோன் சூசைகண்டுபிடித் தக்காட்சியின்வாளினால் ம
யங்கிய தன்னெஞ்சினையறுக்குந் துன்பத்தோ டையங்கொ
ண்டானென்க. (௬௰)

மணிநிறத்தழகின்சாயல் வழங்கியமடவாள்முன்ன
ரணிநிறப்படலையாக வறமெலாஞ்சேர்த்ததன்மை
துணிநிறத்தெளிந்தோன்கண்ட தோற்றமீங்காய்ந்தகாலை
பிணிநிறத்துருத்ததுன்பம் பெருகியேமுற்றிற்றம்மா.

உரை:—மணியைநிகர்த்த வழகியகன்னி முன்னாளிலே
கோர்த்ததோரணியாக வறங்களெல்லாந் தன்னிடத்திலொன்
றாய்ச்சேர்த்ததன்மையைத் தெளிந்தவறிவுடைய சூசைகண்
டிருந்தான், அன்றிவளிடத்திற் கண்டவறத்தின்மாட்சிமை யி
ப்பொழு தாராய்ந்ததினாற் பிணியாகமனதிலொறுத்திய துக்க
ம்பெருகிமுற்றினதென்க. (௬௧)

நாள்வளர்பருவத்தஞ்சூல் நன்றுறவளரும்வாய்ந்த
நீள்வளர்பருவத்தெஞ்சாப் பெருந்துயர்வளர்ந்துமிக்காய்
வாள்வளர்புண்ணிற்செந்தீ வைத்தெனத்துயருமாற்றாக்
கோள்வளர்புணரிதாழ்ந்து குளித்தநெஞ்சமிழ்ந்துகின்றான்.

உரை.—நாளோடு நன்றாயழகியசூல்வளர வளர்ந்தசூலோ
டு விடாமற்பெருகிய துயரும்வளர்ந்துமிகவே வாளாற்றிறந்

த புண்ணில்வைத்த செந்தீப்போல மிஞ்சிய துக்கமாற்றுமற்
பீண்மையின்கடலுளாழ்ந்து குளித்தமிழ்ந்தினனென்க. (சுஉ)

கதிர்வருமுகத்தின்மாமை காண்டலிற்கண்டகண்ணற்
யொதிர்வருமன்புமையப் புன்கணுமுளத்துண்டுண்ட
முதிர்வருந்துயரச்செந்தீ முழுவதும்விப்பச்சிந்திப்
பிதிர்வருமிருகண்ணீரே பெருந்துயரொழிக்கலாற்றா.

உரை.— கதிராவீசுந் தன்றுணைவிமுகத்தழகு கண்டதினு னிறைந்தவன் பிணையும்வருத்தஞ்செய்யையத்தையுமனத்திலே யுண்பா னுண்டமுதிர்கிலேசச்செந்தீயை முழுதும்விப்பதற்குச் சிந்திவிழுமிருகண்ணூறும் போதாதென்க. (சுங)

காார்முகத்தெழுந்துசூழக் கதத்தகால்முகத்திற்பவ்வ
நீர்முகத்தெழுந்தவோத நேரநொந்தலைந்தநெஞ்சா
னேர்முகத்தெழுந்தவைய மிவளகன்றகலுந்தன்மை
சீர்முகத்தெழுந்துதேர்ந்து சிந்தையிற்றேறலோர்வான்.

உரை. — மேகமுகத்திற் சினந்தெழுந்தகாற்றினாற் கடலிலெழுந்தவலைகள்போல நொந்தலையு நெஞ்சுடையான் சூசை துணைவியழகியமுகத்தைக்கண்டு வந்தவையமே யவளகலும்போ. ததுவுமகன்றதினாற் சீர்கொண்டு சிந்தையிற்றேறவுணர்வானென்க. (சுச)

பொய்யெனக்கறைந்தீர்கண்ணே புணையுருக்கன்னிமுன்னுள்
மெய்யெனக்கறைந்ததன்மை மெலியுமோபளிங்கிற்றூயாள்
மையெனக்களங்கமுற்று மயங்குமுன்னிரவிநீட்டுங்
கையெனக்கதிர்கள்மாறிக் கலங்கலேகாண்பீரென்றான்.

உரை.—என்கண்ணே யெனக்குப்பொய்சொன்னீரோ,மாசில்லாதகன்னி முன்னே யெனக்குச்சொன்னது பொய்யுமோ?பளிங்கினுந் தூய்மையுடையவள் தன்னிடத்தில் மாசுகொள்ளுமுன்னே சூரியன்விட்டகதிர்களே கலங்கிமாறக்காண்பீரென்றானென்க. (அழியாக்கன்னியா யிருப்பேனென்று ளரகைபி லவள்முன்சொன்னதென்றார்.) (சுரு).

என்றனன் கருக்கொள்காந்தை யெதிர்தரவெய்தவற்று
ணின்றனன்விழித்தானைய நீக்கவுமருகுநண்ணிச்
சென்றனன்கருக்கண்டேற்றான் றேர்ந்துளஞ்சிதைந்தானொந்
தான்
பின்றனன்பின்றாத்துன்பம் பெற்றழுதுரைப்பன் மீண்டே.

உரை.—இப்படியென்றபோது சூற்கொண்டதுணைவியெதிராகவரக்கண்டான், நின்றான், பார்த்தான், வந்தவையநீக்க வேணுமென்று கிட்டச்சென்றான், சந்தேகமின்றிக்கொண்டகருப்பங்கண்டுகொண்டான், மனதிற்சிதைந்தான், நொந்தான்; அப்பாலேபோய்த் தீராததுன்பத்தை யடைந்தழுது மீளவுஞ்சொல்லுவான் சூசையென்க. (௬௬)

வான்வளர்நாதனேவி மணஞ்செயநானேபூத்த
தேன்வளர்வாகைவிண்ட செழுமலர்வாடாதோங்க
மீன்வளர்கண்ணினல்லாள் விளைந்ததன்கன்னியம்பூக்
கான்வளரிதழ்கள்வாடிக் காய்ந்ததென்றுணர்தலாமோ.

உரை.—வானுலகநாதனேவவினால் மணஞ்செய்ய நானடைந்த தேன்பொழிந்த கொடிமலர்ந்த நற்பூ வாடாதிருக்க மீன்களையொத்த கண்ணுடையவென்றுணைவி கன்னிமையாகிய நன்மலர் வாசவிதழ்வாடிக் காய்ந்ததென்று நினைக்க வாமோவென்க. (௬௭)

புண்செயும்வைவாள்செய்த புண்டனையாற்றுந்தன்
கண்செயுங்காட்சிகாட்டுங்கருவுளங்கிழித்துக்காட்டும் [மை
ப்பண்செயுமொழியாள்மாட்சி பற்றியதுயர்களாற்ற
வெண்செயுமுணர்விலங்க ணியாதுமெய்யென்பதம்மா.

உரை.—புண்ணைச்செய்தவாள்தானே யப்புண்ணையாற்றினாற்போல வென்கண்டானே கருப்பமுண்டென்றுகாட்டி யென்மனத்தைக்கிழித்தபின்ன ரிவ்வினியசொல்லாளுடைய மாட்சிமைகாட்டி வந்ததுயராற்றுமே யாகையா லாராய்த் துபார்க்கிலிவ்விரண்டிலுள்ளதோ மெய்யென்பேனென்க. (௬௮)

நீர்விளைகடலோடொத்த நெஞ்சலைந்துருகப்பின்ருச்
சூர்விளைகாட்சிதந்து துறந்துயிர்தந்தகண்ணே
யேர்விளையிரவிநோக்கா திருளடைந்தரற்றியெஞ்சாக்
கார்விளைதாரையொப்பக் கலுழ்ந்தினிவருந்துதீரோ.

உரை. — கடல்போலலையு நெஞ்சுருக முடியாததுன்பஞ் செய்யுங்காட்சியினல் வருத்தியகண்களே யினி யழகியசூரியனைப்பாராமலிருண்டு நீங்காமல் மேகத்தினின் றுவிழுந்த தாரைபோலக் கண்ணீரைவிட்டழுது வருந்திக்கொள்ளுங்களென்க. (சுசு)

இருளறவுணர்விற்றேர்ந்த விருந்திறத்தரசர்கோவே
தெருளறவுணர்ந்தவையஞ் செய்தநோயினிநீத்துற்ற
மருளறவுணராய்கொல்லோ மணஞ்செயப்பணிசெய்தன்றே
யருளறவருத்துந்தன்மை யதன்பயனெனவோர்ந்தாயோ.

உரை. —இருளின்றியுணர்ந்துதேர்ந்த வல்லமையுடையவரசர்க்கரசனுகிய வென்னுண்டவனே! நான்மயங்கவந்த வையஞ்செய்யுநோ யினிமேற்றீர்த்து வந்தமயக்கத்தையுந் தீராயோ? நான் மணஞ்செய்ய நீகட்டளையிட்டபோது அன்றுனேயிரக்கமின்றி நானடைந்தவருத்த மதற்குப்பயனுதலென்றுணர்ந்தாயோவென்க. (எ0)

ஆவிநோய்செய்தவிச்சு வாயவென்வினையன்றேனுந்
தாவிநோய்செய்தவையத் தகுதியாலுணராநானே
க்ாவிநோய்செய்தகண்ணுள் காசுறச்செய்தாளென்னி
லோவிநோய்செய்தவிப்பா ரொருங்கெனவிழுங்குமின்றே.

உரை.—என்னுயிர்க்குநோய்செய்தவிந்தக்கருப்ப மென்னுல்வந்ததல்லதாயினு நான்கொண்டவைய மயக்கத்தினலாராய்ந்துபாராம லென்றுணைவி குற்றஞ்செய்தாளென் றுநினைத்தா லின்றுதானே விப்பூமியிளந் தென்னைவிழுங்குமென்க. (கருங்குவளையினுமழகியகண்ணுக்கையிற் காவிக்குநோய்செய்த கண்ணென்றார்.) (எக)

பாருலகளித்துக்காக்கப் பரமனையுயிர்க்குந்தாயே
யேருலவுவப்பக்கன்னி பெயர்கிலள்பெறவாளாகி
வீருலங்கிறைஞ்சமன்ன னென்மணத்துணைவியாமோ
நீருலவுறழ்நெஞ்சிற்கிந் நினைவகன்றகன்மினன்றே.

உரை.—பூவுலகத்தையளித்துக்காக்க வவதரித்தநாதனைப் பெற்றதாய் தேவுலகங்களிகூரத் தன்கன்னிமைமாறுமற் பெறவாளேயாயினும் வானுமண்ணும்வணங்கு மந்தத்தே வனெனக்கு மணத்துணைவியாவாளோ? கடல்போலமயங் கியலையு மென்னெஞ்சிற்கப்பா லிப்படிக்கொத்தநினைவுக ளேயகன்றுபோங்களென்க. (௭௨)

அலைப்புறங்கண்டநெஞ்சே யரந்தையுண்டுய்ய லுன்னே
அலைப்புறங்கண்டசெந்தீ யொருங்குமூழ்குதியின்றென்ன
விலைப்புறங்கண்டபைம்பூ விருங்கொடிவாடநொந்து
கலைப்புறங்கண்டநூலோன் கலங்கியுள்ளுளைந்துசோர்ந்தான்.

உரை.—அலையுமென்னெஞ்சே துன்பங்களையுண் டினி வாழ்வாயென்றெண்ணாதே யின்றுதானேதீயில்முழுகி மாள் வாயென்று நல்லிலைவிரித்தபைம்பூங்கொடியும்வாட நொந் து தேர்ந்தவுணர்வுகளையுடையவனாயினுஞ் சூசையுட்கலங்கி யுளைந்துசோர்ந்தானென்க. (௭௩)

## வேறு.

இருமதியெல்லைநா ளின்னவாறுபோய்ப்
பருமதிமயக்கிய பலவுமோர்ந்துதே
றொருமதியுணர்கில னுயிர்ப்புவீங்கிவீங்
கருமதிமாதவ னரற்றிவிம்முவான்.

உரை.—இத்தன்மையா யிருமாதமும்போ யயர்ந்தவுண ர்வினைமயக்குவிக்கும் பற்பலநினைவோர்ந்து தேர்ந்ததொரு வழியின்றிப் பெருமூச்சுவிட்டு மிகுந்தவறிவுடையமாதவன் புலம்பியழுவானென்க. (௭௪)

கருவினைதெளிகினுங் காந்தைகட்புரை
வருவினையுணர்கிலன் வருத்தும்பாசறைப்
பெருவினையுரைக்கில னுருகிப்பேருளத்
தருவினைதனித்துணர்ந் தலக்கண்மூழ்கினான்.

உரை.—கருப்பத்தைநிச்சயமாய்க்கண்டாலுந்தன் மனைவியிடத்திற் குற்றமெண்ணாமற் றன்னைவருத்தின துயரின்றன்மையுஞ்சொல்லாம லுள்ளுருகத் தனித்தனியே யிவையெல்லாமாராய்ந்து துன்பக்கடலி லமிழ்ந்தினானென்க. (எ௫)

திருக்குறுநெய்யலர் சிதையும்போலுளத்
துருகினான்மெலிந்துயி ருசலாடநோய்
பருகினான்றுயில்கிலாய்ப் பருகிலாகிலீ
மருகினான்மதுமலர் வயங்கும்வாகையான்.

உரை.—திருகினபைம்பூவாடிச் சிதைவதுபோலத் தானுள்ளுருகினானுயிருமெலிந் தூஞ்சலாட நோயுண்டு மற்றொன்று முண்ணாமலுந் தூங்காமலு மரணத்துக்கண்டினான்றேமலர்க்கொடியுய்த்தகுசையென்க. (எ௬)

உட்படைபாய்ந்தகன் றுடைத்தபுண்ணென
நட்படையுளத்தினுண் ணணுகும்பாசறை
நுட்படைதுயரினு னொந்தநோயெனக்
கட்படைகீறிய கருத்தினொந்துளான்.

உரை.— உள்ளேவேற்கொண்டு திறந்தபுண்போல நட்புடையமனதிலேவந்ததுன்ப நன்மையான துயரெல்லாத்திலுங் கொடியதென்று கண்டறிந்தகாட்சியா னொந்தா னன்புடையகுசையென்க. (எஎ)

கார்முகத்துடைந்தவே றன்னகாதலி
சேர்முகத்துடைந்துதான் கண்டுதேறலா
ளீர்முகத்துடைந்தநீண் குரம்பினீர்மையாற்
றூர்முகத்துடைந்துளங் கலாந்துதோன்றினான்.

உரை.—மேகத்தைக்கிழிவிழு மிடிபட்டதுபோலத் தன் மனைவிகிட்டவந்தநேரமெல்லா முள்ளுடைந் தழுதப்பா

ர்த்துக் கருப்பத்தினிச்சயமாகையில் வெள்ளத்தின்முகத்து நீண்கரையிடிந்ததுபோலத் தானுந்துயர்முகத்துடைந்தன் மெலிந்து தோன்றினளென்க. (௭௮)

உயர்வினைபுணர்கிலா துடலையின் னுயிர்
பெயர்வினைபோன்றுதன் றலைவன்பேருளத்
தயர்வினையனைத்துமுள் ளறிந்தமங்கையுந்
துயர்வினையடைந்துளத் தாறறித்தோன்றினள்.

உரை.—உயர்வினையாகிய தேவகருப்பத்தின்வகையறியா மற் றன்னுடலைவிட் டுயிர்பிரிந்தாலென்னத் தன்றலைவனாகிய சூசை யுள்ளயர்ந் தநுபவித்ததுன்பமெல்லாமறிந்த கன்னி தானும் பிழைகொண்டழுது தோன்றினளென்க. (௭௯)

நிறைபடச்சிறப்பொடு நிமலன்செய்யருள்
மறைபடற்றகவென மனத்திலெண்ணலோ
டறைபடத்திருவுள மறிந்திலாமையாற்
பொறைபடத்துறுந்துயர் புகன்றுதீர்க்கிலாள்.

உரை.—கடவுளொருவற்கு விசேடமாய்ச்செய்த நிறைந்ததை மறைப்பது நல்லதென் றெண்ணினதினாற் றன்னிடத்துக்கருப்பம்வந்த வரியமுறை வெளிப்படுத்தத் திருவுளமிவளறியாமையி னடந்தசெய்திசொல்லி வந்தபாரத்துயர்களைத்தீராதிருந்தாளென்க. (௮௰)

அன்பினாலிவன்றுய ரடைந்துளானென
நன்பினாலவமியா நங்கையோர்தலாற்
றன்பினாலுருகினள் துனியைநீக்குமோ
ரின்பினால்வரஞ்செய விறைவற்போற்றினள்.

உரை.—தன்மேல்வைத்தவன்பினாற் சூசைவருந்துகின் றானென்று நிகராதன்மையுள்ளகன்னி யறிந்ததினால் மிகவு நொந்துருகி யந்தத்துயரைத்துடைத் தினிதா யாறுதல்செய் யும்படி யாண்டவனை வணங்கினளென்க. (௮௧)

வில்லவள்வளியுருத் தகிரவானுயர்
பல்லவமரமுமேற் படர்பொன்வல்லியு

மெல்லவையலைவுறி வளையுறுண்மைபோ
லில்லவள்கொழுநனோ டிடுக்கணெய்தினாள்.

உரை.—வானமுமதிரக் கொடுங்காற்றுவீசியுயர்ந்தமரத்தி னோட்டின்மேற்படர்ந்த வல்லிக்கொடியுங் கூடவலைந்து வளைவதுபோலக் கொழுநனோ டில்லாளுந்துயர்கொண்டலைந் தாளென்க. (அஉ)

உருகியதுணைவனை யுருகிநோக்கினள்
பெருகியதுயர்செயும் பிணிகளேதையா
மருகியவடிமையான் வனைவதேதெனா
வருகியைத்தன்புற வறைந்திறைஞ்சினாள்.

உரை. — துன்பத்தினா லுருகியதன் றுணைவனைத் தானுமு ருகநோக்கி வந்தபீழைக்குக் காரணமேதையா வுன்னையண் டினவடிமையாகியநான் செய்யவேண்டியதேதென்று கிட் டப்போய் மிகுந்தவன்புகாட்டிச் சொல்லித்தொழுதாளெ ன்க. (அ௩)

கண்ணலாளுரைத்தசொற் காதினுட்புகப்
புண்ணளாம்பெரும்புழை புகுந்ததீயென
வெண்ணலாலருந்துய ரெய்திச்சூசையுண்
ணண்ணலார்ந்தழல்பொறாப் பிரிதனாடினான்.

உரை.—புண்டிறந்த பெருந்துவாரத்திற் புகுந்தசெந்தீ ப்போலத் தன்றுணைவிசொன்னசொல்லே தற்காதினுழைந் ததை யாராய்ந்து வருந்தினசூசை நெருப்புபோல வுட்ப ற்றியதுயர்பொறுக்கமாட்டாம லவளைவிட்டுப்பிரிந்துபோ கநினைத்தானென்க. (அ௪)

காசடைகடலெழுங் கமலங்காலினாற்
பாசடைதளம்பிய பான்மைபாசறை
யாசடைபொழுதரி தமைந்தகாட்சியாற்
றேசடையுளத்தையுஞ் சிதைப்பதாமரோ.

உரை.—நவமணிகொழித்தகடலின் மலர்ந்ததாமரைப்பூடி த்காற்றினாற் றளம்பியாடினதுபோலத் துன்பம்வந்தாற்றெ.

ளிந்த வறியவுணர்வுடையநெஞ்சமு மயங்கவேசெய்யுமென்க. (௮௫)

நீரின்மேற்றாள்பிரிந் தலைந்தநீர்மலர்ச்
சீரின்மேலலைந்தலைந் தமிழ்ந்துஞ்சிந்தையான்
சூரின்மேலன்புளஞ் சுடச்சுடத்தகும்
போரின்மேற்கலங்கியுட் புலம்பினானன்றோ.

உரை.— தாளறுந்தநீர்மலர் தண்ணீர்மேலே யலையுந்தன்மையினுமே லலைந்தலைந்து துன்பத்தினுளமிழ்ந்தின வுணர்வுடையசூசை வந்தபீழையன்றித் தன்னன்பு தன்னைச்சுடச்சுடவே நெஞ்சினுட்கிளம்பின போர்வினையின்மேலுந் தயங்கியேங்கிப் புலம்பினானென்க. (௮௬)

மருடருகருவென மாதைக்காட்டினே
விருடருகசடதா மிவையொளிக்கினே
லருடருமறைமுறை யழித்தலாமினித்
தெருடருபிரிவலாற் செய்வதேதுண்டோ.

உரை.— குற்றத்தினால்வந்தகருப்பமென்று நானிப்பெண்ணைக்காட்டிக்கொடுத்தாற் குற்றமுள்ளபொய்யாகுமே, கண்டகருப்பமொளித் திங்கேகூடவிருந்தா லருள்தந்தவேதத்தின்கற்பனைமீறினதாகுமே யாகையி லினித் தெளியும்வழி பிரிதலன்றி வேறில்லையென்க. (௮௭)

என்னுயிரதனினுங் கினியபொற்றொடி
தன்னுயிர்பிரிந்தியான் றனித்துப்போயின
பின்னுயிரொன துடல் பிரிவிலாங்கொலோ
வுன்னுயிருய்யலு மெளியதோவென்றான்.

உரை.— என்னுயிரினுமெனக்கினிய விவளுயிரைவிட்டுப் பிரிந்துநான்றனியேபோ யகன்றபின்ன ரென்னுயிருமென்னுடலைவிட்டுப்பிரியாதிருக்குமோ விப்போதுதானேயித்தை நினைத்ததினாற் சாகாமலிருப்ப தெளிதோவென்றானென்க. (௮௮)

என்றரூந்திருவுள மின்னதாருமேல்
மன்றருந்துணரொடு வந்தபூங்கொடி
நின்றருந்துணை பெரு நீக்கிக்கானிடை
சென்றருந்தவமினி தென்றுதேறினான்.

உரை. — இவைகுசை சொல்லி யிது திருவுளமாகில் வாசமு லர்க்கொடியோ டெனக்குவந்தபூங்கொடியாகிய வருந்து ணைவிட்டவிருக்கப் பேறில்லாதா னவளைவிட்டுக் கானகத்திற் போ யருந்தவத்தைமுடிப்பதுநல்லதென்று நிச்சயமாய்த்து ணிந்தானென்க. (அகூ).

பிரிந்துளிதுணையின் பிணிகண்டாலுள
முரிந்துளிதுணிவிலா மெனமுடங்கொளி
பிரிந்துளிபிருண்டுறு மிரவினுப்பணிற்
சரிந்துளிநீக்குப தனிற்குணித்தனன்.

உரை. — நான்பிரிந்துபோகிறபோ தென்றுணைவியடை யுந் துயரைக்கண்டேனாகி லுள்ளுடைந்துபோகத் துணிய மாட்டேனென்றெண்ணிச் சூரியன்சாய்ந்துபோ யிருண்ட விராத்திரிநடுவேயெழுந் தவ்விடநீக்கிப்போகநினைத்தானெ ன்க. (கூ0).

பிரிவருமன்பினர் பிரியுங்காலுறும்
புரிவருந்துயர்கள்கண் ணுறல்பொறுதொளித்
தெரிவரும்பருதிபோ யையமெய்தினேன்,
முரிவருஞ்சித்தைபோ லிருளுமொய்த்ததே.

உரை. — என்றும்பிரியாத வன்புடையோர் தம்முட்பிரி யும்போது வரு மரியதுயர்களைச் சூரியன்காண மனம்பொ ருமையா லொளித்துப்போ யையங்கொண்டகுசையின்சித் தை மயக்கத்தினுலிருண்டதுபோலப் பூமியு மிருண்டதெ ன்க. (கூக)

என்னுளமறிந்தவோ ரொகிரில்நாதனே
புன்னுளமினதென வுளத்திலுன்னலான்

மின்னலையகலுது மிவ்வளைமேவிநீ
துன்னலைவகற்றுதி யென்றுதுஞ்சினன்.

உரை.—என்னுள்ளத்தை முழுதுமறிந்த வொப்பில்லாத நாதனே யிதுவுன் றிருவுளமென்று நினைத்திலனல்லோ விப்பெண்ணைவிட்டுப்போகின்றேனி யிவளைக்காத்து வருமிடையூறெல்லா நீக்குவாயென்று நித்திரைகொண்டானென்க. (௧௨)

குணித்தயா நினைவையுங் குறையில்கோதெலாந்
துணித்தமாமடந்தைகாண் சூட்சியாறனைத்
தணித்தமாதுணையவன் றணந்துபோயினாற்
கணித்தமாதுயரினாற் கலுழ்ந்தரற்றினாள்.

உரை.—கூசை நினைத்ததெல்லாத்தையுங் குறையொன்றில்லாதகன்னி கண்டறிந்ததினாற் றன்னைவிட்டுத் தன்றுணைவன்கன்றுபோனால் வருந்துயர் நினைத்ததன்மையினா லழுது புலம்பினாளென்க. (௧௩)

தாய்பெறுந்தனையனை மறந்ததன்மையா
னீய்பெறுமன்பருள் நிகழ்த்திலாமையா
தீய்பெறும்வளைத்தவில் நிமிருஞ்சீர்மையா
னோய்பெறுங்கருத்தற றுதவிற்றீர்த்தோ.

உரை.—என்னாண்டவனே! தாய் தான்பெற்றபிள்ளையை மறந்தாளென்ன நீயு முன்றேவகிருபைகாட்டாதிருக்கின்றாய், நெருப்புபற்றியெரியப் போர்முகத்தில் வளைத்தவில்லே நிமிர்ந்தாறினதுபோல மனதில்வந்தநோயற்றொழிய நினைத்தாலாகாதோவென்க. (௧௪)

வளம்படுவென்வயின் வைகுநாதனே
யிளம்படுபேதையான் றனிக்கிவீடிதோ
வுளம்படுதுயரறிந் துறுதிசெய்கென
வளம்படுவிழிசிவந் தழுதுவேண்டினாள்.

உரை.—வளர்ந்தவென்வயிற்றி லிருக்குநாதனே யிளம்பேதையாய நான் றுணையின்றித் தனியேநிற்பது பெருமையோ?

நாளுள்ளடைந்தபீழையறிந் துறுதிசெய்யுங் கிருபையிசெய் வாயென்று நீண்டகண்சிவப்ப வழுதுவேண்டிக்கொண்டா னென்க. (கூரு)

எள்ளருங்குணத்திறை யிரக்கமீதுறி
யுள்ளருந்துயரினு ஆறுதியாமெனத்
தெள்ளருமிருவருக் கிடர்செய்தேனினித்
தள்ளருந்துனியறத் தயைசெய்வேனென்றான்.

உரை.— இகழ்வில்லாக்குணத்தையுடைய நாதனிரங்கி யரியதுயர்களைப்பொறாத் துளத்துறுதிகொள்வானென் றிவ் விருவர்க்குத் தெளியாததுன்பஞ்செய்தேனே யினிமாறப்ப டாதவருத்தநீக்கித் தயைசெய்வே னென்றானென்க. (கூசு)

என்றலுங்கபிரியேற் கேவல்செய்தரு
மன்றலும்பிழியும்பெய் வாகைச்சூசைகட்
சென்றழுந்தியதுயர் தீர்ப்பச்சூல்வினை
நன்றழுந்துவப்பெழ நவில்குவாயென்றான்.

உரை.— இத்தன்மைநினைத்தகடவுள் கபிரியேலாகிய வானவற்கேவல்செய்து மாருதவாசமு மதுவும்பொழியப்பட் டவிருதுள்ளசூசையிடத்திற்போ யவன்கொண்ட துயரைத் தீர்க்கத் தன்றுணைவியிடத்திற் சூலானவகையெல்லா மவனினி தாய்க் களிகூரச் சொல்வாயென்றானென்க. (கூஎ)

ஐயந்தோற்றுபடல முற்றும்.

ஆகப்படலம் - எ - இ - விருத்தம்

சூாஉரு.



## எட்டாவது.

# ஐயநீங்குபடலம்.

### வேறு.

செல்லாருமுலகிமைக்குஞ்செங்கதிரோ னுருத்தோன்
றித் தேவவல்லோன் [வ்வாய்
வில்லாருமணியிமைக்குமுடிசூடித்தேன்றாற்றும் விரதச்செ
சொல்லாரும்பங்கயக்கண்பொன்வரைத்தோள் சுடரகலந்
தோற்றுமேனி [துச்சென்றான்.
யெல்லாருங்கதிரெறிப்பவிக்குமிழுமலர்க்கொடியோ னிடத்

உரை.—மேகங்கொண்டவானம்விளக்குஞ் சூரியன்வடிவோடுதோன்றித் தேவவல்லோனாகிய கபிரியேலே நன்மணியால்விளங்கியமுடிசூடித் தேன்பொழியப்பட்ட பொய்யாதசெவ்வாயு மதுப்பொழிந்ததாமரைக்கண்ணும் பொன்மலைப்புயமும் விளங்கினமார்புமுடையமேனியெங்குங் கதிர்விட்டிலங்கத் தேனுமிழ்மலர்க்கொடியுடைய சூசையிடத்திற்சென்றானென்க. (க)

கட்புலனுங்கதவடைத்தகரியதுயிற்கொண்டதவக் கனா
வையக்கண்டோ [யெய்த
னுட்புலனாற்றிவமைந்துள்ளுருக்குகின்றதுயர்நீக்கி யுவகை
விட்புலனுங்கிரவியெனவிண்ணவன்வந்துளத்துருவம் வேய
த்தோன்றி [கொண்டான்.
மட்புலனுனிருசெவியால்வானுரியவின்பருந்த மதுச்சொற்

உரை.— இருகண்கதவடைத்த கருந்துயிலைக்கொண்டதவத்தின்கனாவையக்கண்டசூசை யுள்ளத்தினாற்றிவடைந்து கொண்டதுயர்நீக்கிக்களிகூர வானத்திற்றோன்றியசூரியனைப்போலவந்த. வானவனெடுத்தவுருவ முள்ளத்திற்றோன்றக் காண்

பித்துப் பூவுலகிலிருந்தகுறைச வானுலகிற்குரியபேரின்பத்தை
யிருசெவியாலருந்த மதுவைப்பொழிந்த வுரைகொண்டான்
கபிரியேலென்க. (௨)

வையத்தார்வானகத்தார்வணங்குகின்றவரம்பெற்ற மதி
வல்லோனே. [கன்னி
ணையத்தாலகத்தலக்கண்ணுழைந்தறப்பவல்லவானே னறிவிற்
பொய்யுற்றாரணத்தோரும்புகன்றபடிபெறுவளெனப் பொ
ருவில்வாய்ந்த [நல்லோய்.
மெய்யைத்தானறியாயோவினையுயிர்க்குமலர்வாடா விருது

உரை.— பூவுலகத்தாரும் வானுலகத்தாரும் வணங்கும் வரங்களைப்பெற்றமதிவல்லோனே நினைத்த வையத்தினுள்ளேமயங்கிநோக வல்லவானேன்? வேதத்திலேசொன்னபடியே யழியாத வோர்கன்னி பிள்ளைபெறுவாளென் றெப்பில்லாதசத்தியத்தையறியாயோ? வாசம்பொழிந்த வாடாமலர்விருதடைந்தநல்லோனேயென்க. (௩)

நேர்விளைந்தநீதிபரனெடுங்காலத்துணர்ந்ததனை நிக
ழ்த்துங்காலாய்ச் [ளேழாஞ்
சீர்விளைந்தநின்மனைக்கண்கன்னியருத்தான்மகளுயைத் திங்க
கூர்விளைந்தபிணியின்றிச்சூற்கன்னிபெறுந்தேவத் தோன்ற
ல்தானே [யென்றான்.
பார்விளைந்ததுகடீர்ப்பானெனவியேசுவெனு நாமம் பகர்வா

உரை.— வளையாதநீதியுள்ளகடவுள் நெடுங்காலத்துமுன்னினைத்ததனை யிப்போதுசெய்யநாளாகிச் செல்வமுடையநின் றுணைவியிடத்தி லவள்கன்னிமைமாறுமற் கடவுள்தான்பிள்ளையாயெழுமாதமுடிந்ததே, சூல்செய்யும்பிணியொன்றின்றியித்தக்கன்னி யினிமேற்பெறும்பிள்ளைதானே பூவுலகிலுள்ளபாவந்தீர்த்தளிப்பானென்றதினா லவற்குநீயியேசுவென்னுந்திருநாமமிடுவாயென்றான்கபிரியேலென்க. (௪)

அலைபுறங்காணயிர்ப்பகத்தோ ணையெனக்கண்விழித்
தொளிரூ றன்றிமற்றோர் [றைநால்தந்த
நிலைபுறங்காண்கிலன்களியும்வெருவுமுறிக்கடிசெருந்தா ணி.

கலைபுறங்காண்டிமேவாங்கிக்கணிக்கரியதன்மையின்றாய் கன்
னிமாறு [விரும்பிவீழ்ந்தான்.
விலைபுறங்காண்மணியெனத்தன் மனைமகனுமெந்தைதொழ

உரை. — கடல்போலையத்தினலலைந்த நெஞ்சுடைய கு
சை திடுக்கெனவிழித்துப்பார்த்துச் சூழவெங்கு மொளியை
க்கண்டா னல்லாதே வேறொன்றுங்காணும்ற் களியு மச்சமு
ங்கொண்டுசீக்கிரமாயெழுந்தான், படித்த நிறைந்தநூலினும்
தெளிந்தவுணர்வடைந்து நினைக்கரியமுறைமையோடு நாயகன்
னிமையழியாமல் விலைமதியாதமாணிக்கம்போலத் தன்மா
னைவியிற்றி லவதரித்து மகனுகியகடவுளைவணங்க வாசை
யோடுவிழுந்தானென்க. (ரு)

சாலரும்புச்சூலணிந்தசண்பகத்தண்சினைகடொறுந் த
வறுந்தென்றற் [ன்று
காலரும்பத்தாதரும்பிக்கடிமலர்தேனேடரும்பும் கந்தமெ
வாலரும்புவாயரும்பவரும்பரும்பூவாகையினுன் மகிழவா
னோர் [சொல்வான்.
நூலரும்பவாயரும்பிச்சுருதிமதுப்பொழியுமுரை நுதலிச்

உரை. — மிகுந்தவரும்புகளைச்சூலாகவணிந்த சண்பகத்
தின் குளிர்ந்த கொம்புகள்தோறுந் தென்காற்று தவறிவீசும்
போது மலர்ந்தபூ மதுவும்வாசமும்பொழிவதுபோல வெ
ள்ளையரும்புமலர்ந்த பூங்கொடியோன் சூசை சூழவானவரும்
களிகூர நூலைவிரித்துரைப்ப வாய்மலர்ந்து வேதத்தின்மது
வாகியவுரையாராய்ந்துசொல்வானென்க. (சு)

எல்லோடுமொளிபெருகா திரவொடிருட்படாதெங்கு
மிலங்குஞ்சோதி [தொழுந்தொழும்பன்
சொல்லோடுமுணர்வின்றிச் சூழ்ந்தவெலாக்கலைவல்லோய்
புல்லோடும்புன்மையறியாதென்னேவித்திறத்திற் பொலியச்
செய்தாய் [றவின்மிக்கோய்.
செல்லோடும்வான்வியப்பச்சிறுமையெடுத்தடல்காட்டுந்தி

உரை. — சூரியன்கதிரினு லொளியும்பெருக விரவினு லி
ருளுமடையாம லெங்கும்விளங்கிய பரஞ்சோதியே யொரு

வஞ்சொல்வருமுணர்வின்றித் தானேயெல்லாத்தையுமறி
ந்தகடவுளே யுன்னைவணங்கு மிவ்வடிமைக்குள்ள புல்லிறொ
த்த புன்மையறியாமலோ வித்தன்மையா யென்னையுயர்த்தி
னைத்தாய் மேகங்களோடும் வானுலகினோரதிசயிப்பச் சிறியா
னையெடுத்துயர்த்தி வல்லமைகாட்டுங்கடவுளே.. (௭)

பாராழியுளர்கொண்டே படைத்தாயோர்குறுஞ்சூர
ற்பயனைக்கொண்டே [நில்லாவான்மீ
நீராழிவழிவகுத்தாய் நெடும்படையோன்பணிக்கொண்டே
தூராழிநிறுத்தினையே யொத்திறத்தின்றுலக முய்தற்கன்பி
ன் [பெயராச்செல்வோய்.
பேராழிகடக்கவுநீ தொழும்பனெனைத்துணைக்கொண்டாய்

உரை.—ஒருசொற்கொண்டல்லோ பூவுலகமுதலெல்லாத்
தையுமுண்டாக்கினையே, மோயிசன்கையிலேதந்த வொருபிர
ம்புகொண்டு சமுத்திரத்தைப்பிளந்து வழியாகச்செய்தா
யே, நெடும்படையுடையசோசுவனேவலைக்கொண்டுநில்லாம
ல்வானத்திற்றிரியுஞ்சூரியனைநிறுத்தினையே, இத்தன்மையாவிப்
பொழுதும் பூவுலகமிரட்சிக்க வுன்றயைப்பெருங்கடல் கட
ப்பதற் கடிமையாகியவென்னைத் துணையாகக்கொண்டாய்
மாறுதசெல்வமுடையநாதனேயென்க. (௮)

என்பென்போட்டிபடக் கின்னரத்தோதையடிபடச்
சேரினத்தினங்க [ம்போர்த்த
ளன்பன்போடிசைபடநேர்நரம்போடிவளர்தசைமீ தீதனு
பின்பின்போடுயிர்படவே பெயர்ந்தெழமுன்னிசேக்கியல்
காண் பெறறியென்று [முயல்கொண்டாயோ.
முன்பென்போடொன்றுபடக் கிடந்தனனுயிர்படவிம்

உரை.—சுடுகாட்டிற் கலந்துபரப்பினவெலும்புகளொ
ன்றொன்றோடேயடிபடவெழுந்து கின்னரவோதைபோலக்
கிளம்ப வசைந்துபோ யினத்தினமாய்ச்சேர்ந்து நன்றாயி
சைபட வொழுங்கோடு நரம்புகளோடிச் சதையும்வளர்ந்த
தின்மேலே தோலும்போர்த்தபின்ன ரினிதா யுயிரோடெழு

ந்திருக்க முன்ன ரிசேக்கியவென்பவன்கண்டானே யத்தன்
மையால் முன்னெலும்புபோலக்கிடந்தநா னுயிர்பட்டுயர
வோ விந்தவுபாயஞ்செய்தாயென்க. (௯)

தெவ்வினகத் தூனுண்டுதீயுமிழ்மால்கரியினுமுட் டி
ஞன்சுதீத்தை [தை
நவ்வியகத்துரன்விஞ்சநாற்கடலம்படைத்தலைவ னவிர்ச்சிரத்
வவ்வியகத்துணிவெய்திவாளாவிற்றதுகேட்டுன் வலிபுகழ்ந்
தேன் [ற்பேன்.
குவ்வினகத்தெனையுயர்த்தகுணங்கண்டேயினியியாது கூறுகி

உரை.—பகைவர்மார்பி விரத்தமுண்டு தீயைக்கொப்புளிக்கு மதயானையினு முள்ளத்திற்றிறங்கொண்ட சுதீத்தையென்பவள் பெண்ணழகினேடு மரியவீரத்தை மிகவுமடைந்து நாலுகடலினெத்த சதுரங்கசேனைத்தலைவ னொலுபேரின னென்பானுடைய மலையொத்ததலையைப்பிடித்துள்ளோங்கி யவன்வாள்கொண் டிவளறுத்தாளென்றுகேட்டு நானுன் னரியவல்லமைவணங்கித்துதித்தே னினிமேல் நீயிப்பூவுலகிலென்னை யுயர்த்ததன்மையைக்கண்டபின்னர் நான்சொல்லுவதென்னவென்க. (௰)

மேழகங்கள்காத்தனகான்மேதினிபின்காவலராய் விரி
செங்கோலாற் [மை
கேழகங்கைத்தாவிதனுமோயிசனுநீதெரிந்த கிளரன்பாண்
சூழகங்கண்களிகூர்ந்தேனினியுன்றாய்க்காவலனாய்த் துணைத
ந்தேயுன் [பலென்றான்.
வாழகங்கையெனைத் தூக்கிவகுத்தவரத்தினையெவனுன் வகுப்

உரை.—ஆடுகளைக்காத்துமேய்க்கும்போது பூவுலகின்காவலராக வொளிர்ந்தகோலைத்தந்து தாவிதனையு மோயிசனையு நீதெரிந்துகாட்டின வுன்கிருபையின்வல்லமை நான்மனதிலேயாராய்ந்தபோது களிகூர்ந்தே னினிமே லுன்னைப்பெ ங்கன்னித்தாய்க்குக் காவலனாக வவட்கென்னைத் துணைதந்துவாழு முன்றிருக்கையினு லென்னைத்தூக்கித்தந்தவரம்புகழ வெங்கேயுவமையெடுப்பேனென்றானென்க. (௰௧)

உம்பரினுமரிதிறனையுயர்த்தநிலையன்புபட வுணர்ந்து
ணர்ந்தே [கல்கொண்டேனு
மெம்பரிவும்பொங்கியெழத்தொழுதுதொழுதாயிரநாட் பு
மெம்பரிவுநிழற்றுமலரொழிற்றுசத்தோன்சூழ்ந்தவைநா னி
யம்பும்பாலோ [வின்மீண்டே
கம்பரிவுமிகமுன்னர்கணித்தவயிர்ப்புணர்ந்துரைப்பான்கனி

உரை. — வானுலகத்தோரின்மேலுந் தன்னையரிதாயாண்
டவனுயர்த்தமுறைமை தானாராய்ந்தாராய்ந்து மனதிலெழு
ந்தநட்புமிகுத்தொழுது தொழுதபோ தெங்குநிழல்செய்யு
மலர்க்கொடியேந்தியசூதைசயுள்ளே நினைத்தயாவையு மாயிர
நாக்கொண்டாலு நான்சொல்லக்கூடுமோ? மீளவுந்தான்வரு
ந்தி முன்னுணர்ந்தசந்தேகத்தைநினைத் தினிதாய்த் திரும்பி
ச்சொல்லுவானென்க. (௰௨)

வான்செய்தசுடரினுந்தூய்தெருளோனேமருளற்ற வ
விறல்லோனே [நீனு
தேன்செய்தமலரீந்துசிறந்தமணங்கூட்டிநினைச் சேயென்
மீன்செய்தமுடியாளைத்தந்துதந்தநயனறியா வினைப்பயத்
தால் [மிக்கோய்
யான்செய்தகுறைகுணியாதினிதளித்திநினைவினுமூங் கிரக்க

உரை.— வானத்தில்விளங்குஞ்சுடர்களினுந் தெளிந்தவறி
வுடையோனே! மயங்காதவல்லமைகொண்டோனே, தேன்
பொழிந்தமலர்க்கொடியைத்தந்து மணமாகச்செய்துன்னை
மகனாகப்பெறுமீன்முடியாளை யெனக்குத்தந்ததினாற் றந்த
நன்மையறியாததினாலேநான்செய்தகுறைபாராமற் றயைசெ
ய்தாயென்று உணரப்படாத விரக்கமுடையோனே யெ
ன்க. (௰௩)

செய்ப்படுவானுலகினொடு திணையாவும்படைத்தளித்
தாள் சிறந்தகோவே [ங்கன்னி
மெய்ப்படுமோர்கலியுடுத்தபாரினினக்கன்னையெனு முகு
கைப்படுவானடியேனைத்தெரித்தாயோவதற்பின்யான் கசி
வாவும் [னினேனே
பொய்ப்படுவோகுலமெய்திப்போயிவள்நற்புடையகல வுன்

உ-ரை.— சிவந்தவானமுதலிடமெல்லாமுண்டாக்கி பிரட்
சித்தாஞ்சிராசாவே! கடல்சூழ்ந்த பூவுலகினுனக்குத்தெரிந்த
தாயாகிய மலராக்கன்னியைக் கைக்கொள்ளவடியேனைத்தெ
ரிந்துகொண்டாயோ வதற்குப்பின்பு நான்குற்றமுள்ளபொ
ய்யினுல்வந்த. சிந்தர்குலங்கொண் டிவளைவிட்டுப்போக நினை
த்தேனேயென்க. (௰௪)

அரியமறைக்கொழுந்தெனமேற்படர்தரவீங்கோர்கொ
ழுகொம் பன்னவாட்கே [ர்வான்மீதில்
யுரியமுறையறிவில்லாயான் கொழுகொம்பாவதுண்டோ வுய
ரியவுறையும்பரையுமேவலக்கொள்பொருவற்ற மேன்மை
யாளைத் [யாச்சீர்க்கே.
திரியமுறையிட்டேவல்கொண்டேனேகொண்டநயன் றெளி

உ-ரை. — வேதமேகொழுந்தாகமேற்படரக் கொழுகொ
ம்பானவனுக்கு முறையொன்றறியாததான் கொழுகொம்பா
வேனோ! வான்மேல் விளங்கியிருக்குஞ்சம்மனசுகளையு மேவ
ல்கொள்ளு மொப்பில்லாத மாட்சியுடையாளைத் திரியுமு
றைசொல்லி நானேயேவல்கொண்டே னென்டந்ததன்மையறி
யாததினுலல்லோவென்க. (௰௫)

சேதுவாங்கதிரெறிக்குஞ்செழுவெய்யோன் றனையுடுத்
து செய்யமேனி [ன்னி
மீதுலாந்தாரகையைவிளக்கிமைக்குமகுடமென வேய்ந்தசெ
ரீதுலாங்கதிர்காலுந்திங்களுறைந்தொளிபாய்ந்த செழுந்தண்
பூந்தா [ன்றே.
ளிதுலாம் வடிவங்கொண்டிணை தீர்ந்தமாட்சிமையாளிவளாம

உ-ரை.— செஞ்சுடராயாடையாகவுடுத்த சிவந்தமேனியு
ம் வானின்றிரியுமீன்களை முடியாகச்சூழ்ந்தசென்னியுங் கு
ளிர்ந்தொளிவீசுஞ் சந்திரன்தேய்த்துவிளங்கிய மலர்ப்பாதமு
மிவையெல்லாமுடைய வடிவங்கொண் டொவ்வாதமாட்சி
மையுடையவ ளிவள்தானல்லோவென்க. (௰௬)

இலகெல்லாமுயன் றுயர்ந்தவெந்தைமடிவின் றிவருந் தி
னிதிற்செய்த [தே
வுலகெல்லாமுரிதரநஞ்சுயிர்த்தகரும்பாந்தடலை யுயர்மிதித்
திலகெல்லாநஞ்சினுக்கோர்மருந்தாகுந்தையலிவள் விரிந்த
வையத் [ன்றே.
தலகில்லாள்பொருவில்லாள்மார்தொழுமடிநல்லா ளிவளாம

உரை. — விளங்கியசுடரெல்லாஞ்செய் தென்பிதாகுறை
யொன்றின்றி நன்றாய்முடித்த பூவுலகமெல்லாங்கெடுக்க ந
ஞ்சுகொப்புளித்த பாம்புருவாய்த்தோன்றிய பசாசுத்தலை
யைமிதித்து நஞ்செல்லாம்விலகி யதற்குமருந்தாகுமிவளே, ப
ரந்தவுலகிலெங்கு மளவு நிகருமில்லாள் வானவர்வணங்கும்பா
தத்தையுடையா ளிவளல்லோவென்க. (௰எ)

செய்ம்முறையுங்கடன்முறையுந்திறம்பாதநீதிநெறிச்
செழுங்கண்ணடி [யனத்தாணி
மெய்ம்முறையுமறைமுறையும்விளக்குகின்றஞானம்மை வி
கைம்முறையுமளிமுறையும்பொழிகனகமாரியினுற் கருணைக்
கார [ளாமன்றோ.
யிம்முறையுமெம்முறையுங்கடந்துயர்ந்தமாட்சிமையா ளிவ

உரை. — செய்யவேண்டிய முறைகளுங் கடன்களைத்தீர்
க்கவேண்டியமுறைகளுங் குறையாதநீதிநெறியைக் காட்டுங்
கண்ணடிபோலவு மெய்யுமறையும்விளக்கிய ஞானத்திற்க
மைந்த சிங்காசனம்போலவு முதாரமுறைகளு மன்பின்மு
றைகளும்வழங்கிய பொன்மழைபொழியப்பட்ட கருணையி
ன்மேகம்போலவும்விளங்கி மற்றமுறைகளெல்லாங் கடந்த
மாட்சிமையுடையா ளிவள்தானல்லோவென்க. (௰அ)

புத்தானவளமெல்லாம்பூண்டிமைக்குமியல்புறிதாந் பு
லமைநல்லோ [ணிச்
சொத்தாநிகர்ப்பரிய விவ்வறத்திதனையைய மிதயத்திதண்
சத்தானகடவுடருந்தெருளோடென்னகமறிந்த தகைவினுக்க
ண் [ன்குசை.
னுத்தானவழியாதென்றுளக்களிப்போடேகெய்தி யுளேந்தா

உரை.—புதுமுறையாற் பெருமையெல்லாமணிந்து விளங்கியரியநூலோ ரெவ்வுவமையினாலு மடையாதவறத்தையுடையவளாகிய விவளை நானையமாகநினைத்து நினைத்ததெல்லாமாண்டவன்வட்குத்தந்ததெளிவோ டமிழ்ந்திருந்ததினா லிவ்விடத்தினித்திரும்பி நான்போவதெப்படியென்று மகிழ்ச்சியுமச்சமுமடைந் துளைந்தான் குசையென்க. (௰௯)

## வேறு.

கொழுந்தழுந்தழன்றவாய்க் குறுகிவீழ்தவி
லெழுந்தெழுங்கரத்தினா லிழிவின்றுய்வர்போல்
விழுந்தெழுந்தகவினோன் வெருவிநாதனன்
பழுந்தெழுந்துணாடி யரற்றியேற்றினான்.

உரை.—கொழுந்துவிட்டெரியுந் தீநிறைந்தகுழிவாயிற் குறுகித்தவறிவிழும்போது தன்னைக்கை தூக்கியொருவன்செய் தவுதவியினாலெழுந்து குறையொன்றின்றி நின்றவனைப்போல வுயர்ந்தபெருமையுடையகுசையும் விழுந்துவெருவித் தனையழுந்திய கடவுளின்மலர்ப்பாதத்தை யழுதுவணங்கினானென்க. (௨௰)

மடன்மடுவழிந்ததேன் வாகையானுளத்
தடன்மடுதிறந்தழுந் தன்பொடாண்டகை
கடன்மடுதிறந்தென வரங்கள்காலவின்
புடன்மடுமூழ்கினா னுவந்தசிந்தையான்.

உரை.— மலரிதழ்வழியாய்த் தேன்பொழிந்த விருதுடையகுசை மனதிலே யாண்டவன் றன்வல்லமைசெலுத்தித் தயைகொண்டுகடலின்மடைதிறந்ததுபோல வளவில்லாதவரங் களைத் தந்ததினாற் களிகூர்ந்தவ னின்பமடுவிலே முழுகினானென்க. (௨௧)

இற்றையாகைவிவை காணவிச்சையா
லொற்றையாழியன்கட் லொல்லென்னீர்த்தெழக்
கற்றையுரங்கரங்களை நீட்டுங்காட்சிபோ
லற்றையாரொளியொடு சிவந்ததைந்திரி.

உரை.— இதாகையி லித்தைக்காண வாசையினாற் சூரியன் சீக்கிரமாய்க் கடலைநீக்கியெழும்புதற்குத் தன்கதிராகியகரங் களைநீட்டினானென்ன வத்தாலேவிளங்கிச்சிவந்தது கீழ்திசை யென்க. (௨௨)

மருடருமிருளை மாறிச்சூசையுள்
ளருடருநயநல மன்றுகாட்டிட
விருடருமுலகினி திருளுந்தீர்ந்தன
பொருடருமொளியவன் பொலிந்துசேரவே.

உரை.— முன்மயக்கத்தினாற்கொண்ட விருளைமாற்றிச் சூசையுள்ளேயருளினாற்கொண்ட மகிழ்ச்சியைக்காட்ட விருண்டபூவுலகினு மிருள்நீங்கிப்போனதேபோற் கதிருடைய சூரியனெழுந்துவந்ததினாலென்க. (௨௩)

செய்ப்படுமுலகினர் வணங்குஞ்சீர்மையாள்
மொய்ப்படுபணியினி முயல்தலாங்கொலோ
மெய்ப்படுமடிமையான் வினைசெய்வேனெனாக்
கைப்படுதொழிலெலாங் கனிவொடேற்றினான்.

உரை. — சிவந்தவானுடையோர் வணங்குமாட்சிமையுடையவளிவ்வளாகி யினிமேல்வேலைசெய்தாலாமோ வவள்சரீரத்துக் கடிமையாகியநானே யூழியமெல்லாமுடிப்பேனென்றுகைவேலைமுழுதுமினிதாய்நிறைவேற்றினானென்க. (௨௪)

படைத்தவன்றாயடி பணிந்துபோற்றவுந்
துடைத்ததன்னையமுந் துகளுஞ்சொற்றவு
முடைத்ததன்மனநசை பொறாதவுண்மையா
லடைத்தனகதவின்வா யணுகிநின்றனன்.

உரை. — கடவுளைச்சூலாகக்கொண்டதாயின்பாதத்தை வணங்கவு நீக்கினதன்னையமுங் குற்றமுஞ்சொல்லவு மிகவுமாசைகொண் டதைப்பொறுக்கமாட்டாம லவளிருந்த[illegible]த்த வாசற்படியிலேகாத்திருந்தானென்க. (௨௫)

செழுந்திருமாதறை திறந்தபோதவ
ளெழுந்திருந்தையென வியந்தண்ணெனு

விழுந்திருவிழுந்திரு வடியைவேண்டினான்
றெழுந்திருவடியிசை மழைக்கண்டூவியே.

உரை.—செல்வத்திருமடந்தை தன்னறையைத்திறந்தபோ
தாசையைசீக்கிரத்திலெழுந்து நெஞ்சுதுணுக்கெனப்பதை
ப்பவிழுந்து சிறந்தவிவளிருதிருவடியைவணங்கினான் வணங்
கியபாதத்தின்மேற் றன்னிருகண் ணினியமழை தூவியே
யென்க. (உசு)

ஏரணிதயவுட னென்னையாளுடை
சீரணியறத்தினுய் செகத்துநாயகி
காரணன்மகவெனக் கருப்பந்தாங்கிமெய்
யாரணமொழிமுறை யமைத்தமாட்சியாய்.

உரை.—இரக்கமுடையதயையோ டென்னையடிமையாக
க்கொண்டசிறந்தவறத்தினளே! உலகினாயகியே! கடவுள்மகனா
கச் சூற்கொண்டு மெய்யானவேதத்தின் முறையெல்லாங்
கொண்ட மாட்சிமையாளேயென்க. (உஎ)

கோதறத்தமியனுட் குணித்தயாவையு
மேதறத்தெரிதரு மிரவிக்காட்சியாய்த்
தீதறத்தயையினுன் சிறுவன்றன்மையா
னீதறத்திளைத்தவென் குறைகணீக்குவாய்.

உரை.—அடியேன்குற்றமாக நினைத்ததெல்லாங் குறைபி
ன்றி யறிந்திருக்குஞ் சூரியனோடொத்த காட்சியுடையவளே!
பாவங்கள்தீரத் தயையோடவதரித்த வுன்மகனைப்போல நீ
யு நீதிமுறைதப்பிவந்த வென் குற்றங்களைப்பொறுப்பாயெ
ன்க. (உஅ)

துன்புறச்செய்ததோந் துடைத்தவாசிநீ
யன்புறச்சொல்லினு லல்லதுன்னடி
பின்புறப்பெயர்வனோ வெனப்பெருக்கனை
யின்புறத்துயருற விரங்குவானரோ.

உரை.—நான்வருந்தச்செய்த வென்குற்றத்தைத்துடைத்
துப்பொறுக்கு மாசீர்வாத நீயிரங்கித்தந்தாலொழிய வுன்பா

தன்னைவிட்டுப் பிரிவேனோவென்று வெள்ளம்போலப்பெரு
கினவின்பமும் துயரமுமடைந்துள்ளிரங்கினானென்க. (௨௯)

பொருடொடுமருமறை வடிவம்யோன்றெளி
ரருடெர்டுமடவரலக்த்திவின்புற
விருடொடுதுயரகன் றறிவையீந்தன
தெருடொடுமிறைவனைச் சிறந்துபோற்றினாள்.

உரை.—மெய்கொள்ளரியவேதம் வடிவாகக்கொண்டுதே
வவருளினாற் பூரணகன்னியோவென்றால் மனத்திற்களிகூர்ந்
து தன்றுணைவற்கு மயக்கத்தினால்வந்த துயர்நீக்கி யறிவுகொ
டுத்தநாதனை வணங்கினாளென்க. (௩௰)

பொருக்கெனத்துணைவனைப் பொவியத்தூக்கினள்
பெருக்கெனப்பெருகுமின் புளம்பிரண்டெனக்
கருக்கணக்கண்மழை கழுமிவீழ்ந்தன
ளிருக்கணமுடியுட னிரவியாடையாள்.

உரை.—சீக்கிரமாய்த் தன்றுணைவனை யெழும்பத்தூக்கிப்
பெருகினவின்பத்தின்வெள்ள முள்ளேகொள்ளாமற் பிரண்
டதுபோலக் கரியமேகங்களொப்ப விருகண்மழையாகக் க
ண்ணீரை நிறையவிட்டழுது தானும்விழுந்தாள் பெருமீன்க
ள்முடியாகச்சூழ்ந்து சூரியனையாடையாகவுடுத்த மாமரியெ
ன்க. (௩௧)

கதிர்த்தெழுமன்பினான் காந்தைவீழ்குரு
வெதிர்த்தெழுகெனமலர்க் கரங்கொடேத்தினான்
விதிர்த்தெழுதாழ்ச்சியால் மீண்டும்வீழ்ந்தனள்
பொதிர்த்தெழுவரங்களாற் பொங்குமாட்சியாள்.

உரை.—மிகுந்தவன்புடையசூசை தன்றுணைவி விழாதப
டிக்கெதிர்ந்துவந் தெழுந்திருவென்று கையினாலேந்தினான்,
மிகுந்ததாழ்ச்சியோடு திரும்பவிழுந்தாள் நிறைந்தவரங்களி
னா லுயர்ந்தமாட்சிமையுடையமரியென்க. (௩௨)

என்னுளங்கொளாக்கனி வியற்றுமன்பினேய்
நின்னுளங்கொளாத்துயர் நெடிதுசெய்தியான்
றன்னுளங்கொளாத்துகட் சூட்டினேனென
நன்னுளங்கொளாத்தயை நல்கல்வேண்டுமே.

உரை:—என்னுளத்திற்கொள்ளாத வின்பமெனக்குச்செய்யு மன்புடையோனே யுன்மனத்திற்கொள்ளாததுன்ப நானே நெடுங்காலமுனக்குச்செய்து பொறுக்கப்படாத குற்றஞ்செய்ததினா லதைமனதிலேயெண்ணாமற் றயைசெய்யவேணுமென்றாள் மரியென்க.. (௫௩)

மன்னராள்மன்னவன் வகுத்தமாவரந்
தன்னையான்மறைப்பது தகவதாமென
வென்னையாளுடையவ னேவலின்மையா
லுன்னையான்சூல்வினை யொளித்ததாமென்றாள்.

உரை.—அரசரையாளுமரசனாகியகடவுள் தந்தவரங்களை மறைப்பது நன்றென்றுணர்ந் தென்னையடிமையாகவுடைய நாதன்கட்டளையில்லாததினா லுனக்கு நான்கொண்டசூலின்செய்தியை யொளித்தேனென்றாளென்க. (௫௪)

என்றவர்க்கரமெடுத் திவளையேற்றினாள்
மன்றலருயிர்த்தவெண் வாகையாளனுந்
துன்றலர்கடுத்துடு சூட்டுமங்கையுஞ்
சென்றலரிறைவன்றாள் செறிந்துபோற்றினார்.

உரை.—அவளிதைச்சொல்லி யிருகைகூப்பி யிவளைவணங்கினாளதின்பின்பு வாசமலர் வெண்கொடியுடையசூசையு மலரொப்ப மீன்களைமுடியாகச்சூடியகன்னியுங் கூட விருவருமாண்டவன்மலர்ப்பாதத்தைத் தொழுதாரென்க. (௫௫)

பீடையால்வற்றிய வுளத்திற்பேரொளி
[illegible]டையாளுரையினா லரிதின்பாழ்ந்தனன்
கோடையால்வற்றிப்பெய் கொண்டலாற்பெரு
கோடையால்நிகர்த்தன வோகைச்சிந்தையான்.

உரை.—முற்கொண்ட துயரினால் வற்றியமனதிலே சூரிய னையுடுத்தவளுரைகளினாலின்பத்துள் மூழ்கினான், கோடைநா ளிலேவற்றிப்போய்ப் பெய்தமழையினாற் பெருகுந்தடாக மொத்த மகிழ்ச்சிநிறைந்த சிந்தையான் சூசையென்க. (கசு)

கோள்கடைந்தழுத்திய மகுடக்கோதையர்ள்.
பீள்கடைந்தழுத்திய கதிர்பிலிற்றல்கண்
டாள்கடைந்தழுத்திய தாரின்வாகையான்
வாள்கடைந்தழுத்திய வருத்தநீக்கினான்.

உரை.—மீன்களைக்கடைந்தழுத்திவைத்த மகுடஞ்சூழ்ந்த கன்னிகடைந்ததுபோல நன்றாய்த்தோன்றிய கருப்பத்தினா னிறைந்த கதிரைவிடுவது கண்டதினால் தாளைக்கடைந் தங்கழு த்தியமலருள்ளகொடியோன்சூசை முன்னர் வாளைக்கொண் டுள்ளங்கடைந்ததன்மையி னழுத்தியவருத்தத்தை யிப்பொ ழுதுநீக்கினானென்க. (கஎ)

வண்டுலாந்தாரினான் மலர்க்கண்வாயினா
லுண்டுலாமகிழ்வினை யுளம்பொறாமையிற்
பண்டுலாம்வளமெல்லாம் பழித்தகாந்தையைக்
கண்டுலாமுளமதுக் கனியக்காலுவான்.

உரை.—வண்டுசூழ்ந்தகொடியோன் றன்மலர்க்கண்ணா லுண்டவின்பமுலாவிய மனதிலே யதைப்பொறுக்கமாட் டாமல் முற்காலத்திற்றோன்றியபெருமையெல்லாம் பழித்து வெல்லுந் தன்றுணைவியைக்கண்டு தன்மனதிலுலாவிய மது வைக்கொப்புளித்தாலென்ன வினிதாயுரைப்பானென்க. (கஅ)

கூறருந்தகையுடை கோதையார்தமுண்
மாறருந்திருவரம் வயங்குமாட்சியாய்
சேறருந்தன்மையாற் சிறுவனாகிய
பேறருங்கடவுளைத் தாங்கும்பீடமே.

உரை.—சொல்லிலடங்காத பெருமையுடையமாதர்களுக் குள்ளே மாறாததிருவரங்களையடைந்த மாட்சிமையுடையவ

ளே! நடத்தற்கரியமுறையா லுனக்குப்பிள்ளையாகிய வடைத
ற்கரியகடவுளைத் தாங்கியபீடமேயென்க. (௩௯)

ஒளிமுகத்திற்செறி விரவியுற்றெனக்
களிமுகத்துன்னையுங் கடவுனோக்கிமுற்
றெளிமுகத்தியம்பிய சீரின்றன்னிடை
துளிமுகத்தமைத்ததாற் றுதிப்பர்யாருமே.

உரை.—ஒளிசெய்முகத்தோடு சந்திரனுக்கெதிராகச் சூரியன்வந்துமதிபூரணமாய் விளங்குவதுபோல வாண்டவனுமகமலர்ந்தமுகத்தோ டுன்னைப்பார்த்ததினால் முன்னேதெளிவோடு வேதத்திலெழுதப்பட்ட செல்வதன்மையெல்லாமிப்போதுமழைபோ லுன்னிடத்தில் வழங்கியதினா லெவருமுன்னைத்துதிப்பாரென்க. (௪௰)

மைக்கடன்மருவிய வையத்தாரினுள்
ளிக்கடன்மானரு மிருமையுற்றநா
னக்கடன்றவறிலாத் திருத்தலாகநீ
நிக்கடன்மதலையா நிமலற்போற்றுவாய்.

உரை.—கருங்கடல்சூழ்ந்த பூவுலகத்தாரினுள்ளே யித்தப்பெருங்கடலொவ்வாத பெருமையடைந்தேனானே யதினாலெனக்குவந்தகடன் குறையின்றி நான்றிருத்தும்படிக்கு நீயேயுனக்கு வல்லமையால்வந்த பிள்ளையாகியவாண்டவனைவேண்டுவாயென்க. (௪௧)

என்றுதிரிரவியில் லெதிர்திருப்பலா
தின்றுதிர்பளிங்கென நிரம்பியோதிய
தன்றுதியடங்கலுந் தனதுநாதனைத்
துன்றுதியாக்கினள் பளிங்கிறாயினள்.

உரை.— இதெல்லாஞ்சூசைசொல்லவே தன்மேற்பட்ட சூரியன்கதிரைத் திருப்பிவிடும்பளிங்குபோல விரிவாகச்சொன்னதன்றுதிகளெல்லாந் தன்னாண்டவற்குத்துதியாகத்திருப்பினாள் பளிங்கினுந் தூயகன்னியாகியமரியென்க. (௪௨)

எண்ணிலாச்சுடரென விமைத்தவானவர்
வண்ணிலா நறுமலர் வருடந்தூவின
ரொண்ணிலாவிவர்பத மூவந்துசூடின
ரண்ணலாந்தனைத்துதி யளவிற்பாடினர்.

உரை.—எண்ணப்படாதசுடரென்னவிளங்கிய வானவ ரு
ருவோடுதோன்றி விளங்கும்வாசமலரை மழையாகத்தூவி
யொளிவிடு மிவர்பாதத்தை யினிதாய்ச்சூடி யாண்டவனை வா
ழ்த்த வளவின்றிப்பாடினரென்க. (சங)

## வேறு.

இருள்பரந்தவையமொடுதுயருநீக்கி யின்பலையின் மூ
ழ்கியவொண்டவத்தின் மிக்கோன்
றெருள்பரந்தகாட்சியுறியுளத்திலோங்கச் சேணுறையோர்
பாடியபேருவகையாலோ [ன்றுவென்னுச்சூழப்
ருருள்பரந்தசுடருடுத்தமேனிதானு மூயிர்சென்றவழிசெ
பொருள்பரந்தகதிரொறிக்குமுருவந்தோன்றிப் புவிதலைவிட்
டுயர்நின்றுனுரைமேனின்றாள்.

உரை.—இருளோடுமுன்கொண்டசந்தேகமுந் துன்பமு
நீக்கி யின்பக்கடலின் மூழ்கின மாதவத்தோன் சூசை தெளிந்
ததோர்காட்சியையடைந்து மனத்திலோங்கும்படிக்கு வா
னவர்பாடினபேரின்பத்தினாற் சூரியனையுடுத்தமரியென்பவ
ள்மேனியுந் தன்னுயிர்போனவழியேபோனுவென்னச் சூ
ழப் பொற்கதிரைப்பரப்பிவிளங்கும்வடிவுகாட்டிப் பூமியை
விட் டுயராகாயத்தினின்று னுரைத்தமுறையின்மேனின்றவ
ள் மரியென்க. (சச)

நின்றநிலைதன்மையுமன்றியியாவு நினைத்துரைப்பநின்
றுடான்றனக்காளாய்நான் [லாற்றுறைவல்நன்னூல்
சென்றநிலைகண்டிரங்கித்துணிவும்பாவுந் திருத்தித்த[illegible]லல்
வென்றநிலைகொண்டவுணர்வோர்க்கும்பாலோ விண்விய[illegible]
பநீவியப்பவிருப்பமூழ்கி [பத்துணையேநிற்பாய்
மன்றநிலைவாரகையினேயன் றுகண்ட மாட்சிநலமியானிசைப்

உரை. — அவளாகாயத்தினின்றமுறையுமன்றங்கேயாவைம
ற்றதெல்லாமுநானினைத்துச்சொல்ல வங்கேநின்றவள்தான்
டிமையாக நான்றன்னைச்சென்றதினு லென்னையிரக்கமாய்ப்
பார்த்துத் துணிவும்பாவுந்தந்தாலொழிய நற்கல்வியெல்லா
ங்கடந்த கற்றோர்முதலாய் முடியுந்தன்மையோ வாகையால்
வானுலகமு நீயுமதிசயிப்ப வாசமலர்க்கொடியோய் சூசை
யேயின்பத்தில்மூழ்கியன்று நீகண்டமாட்சிமை நான்சொ
ல்விக்காட்ட வெனக்குத்துணையாகநிற்பாயென்க. (௪௫)

விண்கதிர்காலுருத்தோன்றிவிண்ணினின்றுள் விரதநி
லையிதோவென்னவளர்ந்துதேயுந்
தண்கதிர்கால்பிறைக்குழவியடியாரேய்த்துத் தனைச்சென்றார்
சிதையாவொன்றிரவிமுன்னுந்
தெண்கதிர்காலுடுக்குலமேமுடியாய்ச்சூடித் தெளிஞானநிலை
யிதெனச்சுடாதுதண்ணத்
தொண்கதிர்கால்செஞ்சுடரையுடுத்துநின்று ளுணர்வினுமே
னின்றினிதென்னுளத்தினின்றுள்.

உரை. — வானத்திலுள்ளவொளியைப்பரப்பின வுருவோ
டாகாயத்தினின்றவ ளிதுவோவிரதத்தின்முறைமையென்று
கோபமாய் வளர்ந்துதேயுங்குளுந்தபிறையைக் காலாலேமிதி
த்துத் தன்னைச்சென்றவர்க்குக் கேடொன்றும்வாராதென்று
சூரியன்முன்பாகவு மறையாமற் றெளிவாகவிளங்குமீன்களை
முடியாகச்சூட்டித் தெளிந்தஞானத்தின்முறையென்று சு
டாமற் குளுமையோடுபொருந்திய கதிரைவீசுஞ்சூரியனையா
டையாகவுடுத்துநின்றுள் நினைவெல்லாங்கடந்து நன்றுயென்
னுளத்தினின் றென்னையாளுமரியென்க. (௪௬)

திருக்கொண்டொளிகொண்டவானில்வைகித் தெளி
யுணர்வுண்டுருவின்றியணுவாய்நின்றோ
ருருக்கொண்டாருயிர்நின்றவெந்தைதாய்தன் றெளியெறிக்
குமலர்ப்பதத்தையேற்றியேற்றி
மருக்கொண்டார்மதுமலரைத்தூவித்தூவி மறுத்தொடை
யான்மண்டுபுகழ்பாடிப்பாடிக்

கருக்கொண்டாள்வரப்படவ்வநீந்திநீந்திக் கதிர்வெள்ளஞ்சூ
ழெறித்துக்கனிநின்றாரால்.

உரை.—செல்வத்தோடு மிகவும்விளங்கின வானுலகிலிருந்துதெளிந்தவறிவன்றி யுருவமில்லாம லணுவாகியவானவரன்றுருவங்கொண்டார், கொண்டவுருவினலுயரநின்ற தேவதாயின் விளங்கின்மலர்ப்பாதத்தைவணங்கிவாசமு மதுவுதிரையப்பொழிந்தமலர்மழைதூவி யினியதேன்மாலையாக நிறைந்த துதிகளைப்பாடிப்பாடித் தேவகருப்பங்கொண்டகன்னி யடைந்தவரங்களின்கடலை நீந்திநீந்திக் கதிர்த்திரளைச்சூழப்பரப்பி யினிதாய்நின்றாரென்க. (௪௭)

எவ்வுலகினோருமுய்யக்கருணையுள்ளி யிட்டமடத்தைதனை
முதலோன்வனைந்துவானத்
தவ்வுலகினோர்பிரிந்தவவைகளொன்பா ன்வையவைக்கோ
ரொருநூறும்பலரோர்நூறு [ம்பிரியாமுன்னீர்
மிவ்வுலகினிவள்பிறந்தமுதனளாதி யிவட்பணிகேட்டாயிரரு
வவ்வுலகின்றமதரசியாகச்சூழ்க வானிறையோனன்புபுரித்
தேவினனே.

உரை.—உலகங்கள்யாவும்வாழ முதலானகடவுள்கருணையினைத் திட்பண்ணையுண்டாக்கி வானுலகத்தோர் தம்முட்பிரிந்தவொன்பதுசபையிற் சபைக்கோரொருநூறும் பலசபையிலெடுத்தவொருநூறுந் தெரிந்து பூவுலகிலிவள்பிறந்த நாள்முத லவ்வாயிரவானவ ரிவளேவலைக்கேட்டுப்பிரியாமல் நடந்து கடல்சூழ்ந்தபாருலகிலுள்ளதமதிராக்கினியாக வவ்வளைச்சூழ்ந்திருக்கவான்கடவுளன்போடேவினனென்க. (௪௮)

ஏவியவாறிவட்பிரியாவன்னாரிந்நா ளெழில்முகத்தில்வா
ன்முகத்தைத்தோன்றத்தேர்ந்தீப்
பூவியவாறரக்கொளிபெய் துகிலுடுத்துப் பொழிமதுவாடா
தமலர்ச்சுடிகைசூடி [ன்னும்வாசகத்தை
யாவியவாறணியணியாய்தின்றயாரு மாண்டகைதாய்மாரிய
மேவியவாறேங்கியமார்பணிந்துவெய்யோன் வேய்ந்தனைய
வவ்வணிவேய்ந்தினிதினின்றார்.

உரை.—கடவுள்கட்டளையிட்டபடி யிவளைப்பிரியாதவா
யிரவான்வருமன்று தாமெடுத்தவழகியமுகத்திலே வான்வீ
ட்டினழகின்னதென்று தோன்றும்படிக்குத்தோன்றிச் செ
ங்கதிரையுமிழுஞ் சிவந்தநல்லாடையுடுத்து மதுவைப்பொ
ழிந்தவாடாதமலர்முடிகளைச்சூடி யாசையோடணியணியாய்
நின்றவெல்லாருமாண்டவன்றாய்மரியென்றொருவாசகத்தை
ப்பதக்கமாகமார்பிலேயணிந்து சூரியனைப்போல வந்தவாப
ரணஞ்சூழ விளங்கிநின்றாரென்க. (௪௯)

நீமமுடைத்திங்கடுடைத்தொளியைப்பாய்ந்த நேர்டி
யாள்நேரறப்பூவிள்ளாவண்ணங்
காமமுடைத்தொளியுடித்துச்சுடரிற்றூய கருத்திலமைகன்
னிநலங்காட்டுதற்கே [மொடுவாசம்வீசி
தாமமுடைத்தண்டாதுமடுவுடைத்துச் சாய்த்தமதுவெள்ள
பேம்முடைத்தனிவிருதென்மலர்சுவேத விலீவியெனுமாலை
பதத்தொருநூறாய்த்தார்.

உரை.—விளங்கின சந்திரனைத்தேய்த்தொளிரும்பாதமு
டையமரியென்பவள் நிகரின்றிமலராதபூமுகைபோலக் காம
விகாரங்களின்றிச் சூரியனினுந் தூயகருத்திலமைந்த கன்னித்
தன்மையைக்காட்ட விளங்குங்குளுந்தமடல்மடையுடைந்து
சாய்ந்தோடியமதுவின்வெள்ளத்தோடு வாசனைவீசி யவட்கு
ச்சொந்தவிருதாகிய மலர்ந்தவெள்ளையிலீவிமாலையாகக்கட்
டி யவள்பாதத்திலொருநூறுவைத்தாரென்க. (௫௰)

இருதியெழிற்படுத்தியவான்வரத்துவல்லா ளிவர்வானோ
ர்நிலைகடந்தவன்புவிஞ்சக் [யநலங்காட்டுதற்கே
கருதியெழிற்படுத்தியவொன்றாயவெந்தை கண்ணியமைநே
குருதியெழிற்படுத்தியசெந்தாதுலாவுங் கொழுந்தண்டேனி
ரோசையெனுங்கோதைகொண்டு
பருதியெழிற்படுத்தியசீறடியைப்போற்றிப் பணியாகமுற்ப
டைத்தாரொருநூறன்றே.

உரை.—சொற்கடந்ததேவவரங்களால் வல்லவளாகியமரி
யென்பவளுயர்ந்தவானுலகத்தோரிடத்து வழங்கினமுறை

மைகடந்த வன்பினையெண்ணி யழகெல்லாங்கடந்த வொன்றாகியகடவுளின்மேல்வைத்த நட்பின்றன்மையைக் காட்டக் குருதியினுஞ்சிவந்தவிதழிடத் துலாவுங் குளுர்ந்ததேன்மொழியுமிரோசையென்னும் பூமாலைகொண்டுவந்து சூரியனிலுமொளிர்ந்த வவள்சீறடியைப்போற்றி யாபரணமாகமுன்னேவைத்துப் படைத்தாரொருநூறென்க. (௫௧)

வீடவிழ்த்தநலங்காட்டும்வனப்பினல்லாள் விரிபுவிம
ன்னுயிர்களெலாமின்புற்றுய்யக்
கேடவிழ்த்தநெஞ்சினர்க்குமுறுதிசெய்யுங் கிளர்த்தனதன்று
யாபநலங்காட்டுதற்கே
நீடவிழ்த்தவாயிடத்துப்பிரிந்தோடும்பன் னீர்க்கெல்லாம
டைக்கலஞ்செய்வாவிபூத்த
தோடவிழ்த்தவிளாக்கமலமாலைமாற்றிச் சூடியதாடொழுகி
ன்றாரொருநூறன்றே.

உரை.—வான்வீட்டிற்றோன்றின நலத்தைக்காட்டு மழகுடையாள் பரந்தபூமியிலுள்ளமனிதரெல்லாருமினிதாய்வாழக் கெட்டபாவிகளுக்கும் நன்மைசெய்யு நிறைந்த தன்றயையின்றன்மையைக்காட்ட வகன்றவாயினு ளங்கங்கேபிரிவாகவோடிவரும் பலதண்ணீர்க்கெல்லா மடைக்கலஞ்செய்யும் பொய்கையிடத்து மலர்ந்தவாசமுள்ளதாமரைகளை மாலையாகப்பின்னியத்தாலணிந்தவவள்பாதத்தை வணங்கினரொருநூறென்க. (௫௨)

துறைகெழுநூல்வழியனைத்துமடையாஞானத் துறைய
னுள்மாசறுநல் லுணர்வினீர்த்து
மறைகெழுநூல்வழிவழுவாக்கடவுணற்றாள் மாறிலமெய்ஞ்
ஞானநலமமைந்ததற்கே [வீடாகிரியுமிரவிக்காந்த
முறைகெழுநூல்வழியன்னவெய்யோன்வானின் முடுகுவழி
மறைகெழுநூல்வழித்தொடைபோற்றொடையலாக்கி யருச்
சனைசெய்தடியணிந்தாரொருநூறன்றே.

உரை.—மற்றநூல்வழியடையாத ஞானத்துறையான்வளிருளில்லாதவுணர்விற்றேர்ந்து வேதநூல்வழிவிடாமற் கடவுளின்பாதத்தைப்பிரிந்தகலாத மெய்ஞ்ஞானத்தையடைந்தா

ளென்றுகாட்ட நீதிமுறைதவறாததுபோலச் சூரியன்வானத்
தில்விளர்ந்தோடும்வழிவிடாமற்சாயுஞ் சூரியகாந்தமலர்களை
ச்சொல்லுணர்த்து நூல்களின்முறையாற்கட்டின பாவின்
றொடைபோல நல்லமாலையாக்கிவணங்கியவள்பாதத்தி லணி
ந்தாரொருநாறென்க. (௫௩)

மாசென்றமதியமிதித்துயர் தூய்தாளாள் மனங்கலங்
கத்துயர்வரினுநெருப்பிற்கஞ்சாத்
தேசென்றுகுலையாநெஞ்சுறுதியெஞ்சாச் செல்லல்லற்குயர்
ந்ததிறங்காட்டுதற்கே
தூசென்றமலைசூழ்ந்தொல்லெனத்தாழோடித் துறும்வெ
ள்ளத்தளவிறலைநிறவிப்பூண்ட
காசென்றதேன்றுளிக்குங்குமுதமாலை காலணியாய்த்தொழு
திடுவாரொருநாறன்றே.

உரை. — மாசுகொண்டதென்று சந்திரனை மிதித்ததின்
மே லுயர்ந்த தூயபாதத்தையுடையாள் தன்மனங்கலங்கத்
துயர்கள்வந்தாலு நெருப்பிற்கஞ்சாதபொன்போலக் குலை
யாதநெஞ்சுதுணிவுவிடாமல் வருந்துன்பங்களின்மே லுய
ர்ந்துகாட்டின மனவூக்கத்தைக்காட்டச் சிலைபோலமலையை
ச்சுற்றிச் சலசலவென்றுதாழவோடி நெருங்கிவரும் வெள்
ளத்தினளவாகத் தலைநிமிர்த்துத் தானணிந்த நவமணிபோலத்
தேன்றுளிகள்பொழியப்பட்ட குமுதமாலையைக் காலணியா
கவணங்கியணிந்தாரொருநாறென்க. (௫௪)

மட்பொதுளுஞ்சேற்றெழுகுங்கதிர்சேறுகா வண்ண
மெனக்கதிர்கலங்கிற்கலங்காநெஞ்சாள்
ஏட்பொதுளுமின்னுமைக்கழுக்குறுதாள் கதிரினுந்தூய்மா
ட்சிநலமணிந்தத்தற்கே
மூட்பொதுளுமணம்பொதுளுநொய்யந்தாது முருகொழு
குமுகைவிண்டசெஞ்செவ்வந்தி
விட்பொதுளுநலந்தொடுத்தமாலையாகவிழுந்திறைஞ்சிக்கொ
ணர்ந்தனரோவொருநாறன்றே.

உரை.—பூமியினிறைந்தசேற்றிலேபட்ட சூரியன்கதிர்சே றுகாததுபோல வக்கதிர்கலங்கினாலுங் கலங்காதநெஞ்சுடையாள் கண்வழியாற்சூழநெருங்கிவருத்தின்மைகளினா லழுக்கடையாமற் சூரியன்கதிரினுந் தூய்மையுடையவளான தன்மையைக்காட்ட முள்ளாலேநிறைந்திருந்து வாசனைநிறைந்த மெல்லியவிதழ் தேன்பொழியப்பட்ட வரும்புமலர்ந்த செஞ்செவ்வந்திகளைக்கொண்டு வானில்வழங்குமாலையாகக்கட்டி விழுந்து வணங்கிக் கொண்டுவந்துவைத்தாரொருநாறென்க. (௫௫)

இத்திறத்தால்வெஞ்சுடருமெஞ்சவெஞ்சா தியல்புயர்
ந்தாளின்பருந்திச்செயிர்நாஞ்செய்த
வத்திறத்தால்வந்ததவஞ்செயிரொன்றின்றி யரிதுலகம்திசயி
ப்பநோற்றாளென்று [கவர்தொடையையன்றே
மைத்திறத்தால்விரிசிறகையோசனித்த வண்டணுகாச்சண்ப
மெய்த்திறத்தால்மறைதொடுத்ததொடையலென்று விசித்த
ணிந்தார்தாள்வணங்கியொருநாறன்றே.

உரை.—இத்தன்மையாற் சூரியனிலுந் தூயாய்நிற்கு மரியென்பவள் நாமின்பத்தையுண்டு பாவஞ்செய்ததினால் வந்த தவத்தை யவள்குற்றமொன்றுஞ்செய்யாம லுலகமெல்லாம் திசயப்பட முடித்தாளென்றதைக்காட்டக் கரியசிறகை விரித்தடித்தவண்டுகளணுகாத சண்பகப்பூமாலையை மெய்கொண்டுதொடர்ந்துவரும்வேதவிதிதொடுத்தாற்போலக் கட்டிப்பாதத்தில்வணங்கி யணிந்தாரொருநாறென்க. (௫௬)

வானாருநடுக்குற்றுவணங்குந்தேவ வரத்துயர்ந்தவான
ரசாள்நவைநாமாறக் [ருள்கொண்டாளென்றுத்
கூனாருஞ்செருக்காறுத்திறத்தினாணக் குணிக்கரியதாழ்ச்சிய
தேனாருமலரினத்துட்புன்மைகொண்டு தேறலொடும்மணத்தி
னொடுமெவையும்வெல்லுங்
தாராரும்வகுளம்பூமாலைதாண்மேற் களிப்பெழவிட்டிறைஞ்
சுகின்றாரொருநாறன்றே.

உரை.—வானுலகத்தோர்முதலாய்நடுங்கிவணங்குந் தேவவரங்களாலுயரப்பட்ட வானரசாளே நாமென்றும்பாவ

ங்களைவிடாமல் மனம்வளைந் தாங்காரத்தையும்விடாததினால் வெட்கப்பட வுணர்தற்கரியமுறையோடு தாழ்ச்சியைக் கொண்டாளென்றதைக்காட்டத் தேனுள்ள சகலமலர்களுக் குள்ளே சன்னமாயிருந்துபொழிந்தமதுவினாலும் வாசனை யாலு மலரெல்லாம்வெல்லும் மகிளம்பூமாலையை யடிமிசை களிகூர்ந்துவைத்துவணங்கினாரொருநூறென்க. (ருஎ)

வஞ்சஞ்சேர்தந்திரத்தாற்பழியேவிஞ்ச மன்னுயிர்கள்
பகைத்தழிக்குங்குணுக்கினங்கள்
நெஞ்சஞ்சேர்நஞ்சுகுப்பவெடுத்தநாக நெடுந்தலையையெ
ன்றுடையானேராவல்லாள்
கஞ்சஞ்சேர்திருப்பதத்தால்மிதித்தவெற்றி காட்டமதுக்காண்
றநறுந்தும்பைமாலை
பஞ்சஞ்சேருவப்பினொடுபைம்பொன்சேர்ந்த பதத்தணியா
ய்த்தொழுதணிந்தாரொருநூறன்றே.

உரை. — வஞ்சனையுள்ளதந்திரத்தினாற்பழிமிகுந்து மனிதருயிர்களைப்பகைத்துக்கெடுக்கும் பசாசுகள் மனதிலேகொண்டநஞ்சு கொப்புளிக்கவுரியதென் றுருவாயெடுத்த பாம்பின்றலையை நான்சொல்லும்பாவினா லிகரப்படாத வல்லமைகொண் டிவள்தன் ருமைப்பதத்தால்மிதித்து வெற்றி கொண்டாளென் றுகாட்டத் தேன்பொழிந்துநாறுந் தும்பைமாலையை வீண்வீட்டி லுள்ளமகிழ்ச்சியோடு பொற்பாதத்தினணியாகவணங்கியணிந்தாரொருநூறென்க. (ருஅ)

இம்முறையாலொன்பதணிசூழ்ந்துநிற்ப வெவர்க்குந
லஞ்செய்பொழிலோமுகிலோபானோ
வம்முறையானிகராதெவ்வுயிரும்யாவு மமுதினுமூங்கினிதன்
பாலோம்புந்தாய்செய்
கைம்முறையாமெனப்பணிபொற்சுடிகையாரங் கண்டிகை
யோடினக்கலனெண்ணில்லாதேந்தி
மெய்ம்முறையாலொளிர்ந்திறைஞ்சுமீராறும்பர் விழைந்தி
வள்சூழீராறுமீன்போலநின்றார்.

உரை. — இத்தன்மையா லொன்பதணிகள் நாறுநாறாய்ச்சூழநிற்ப வித்தக்கன்னி பொதுவாயெவர்க்கு நன்மைசெ

ய்யுங் குளுந்தசோலையோ துளிபொழிமேகமோ விருள்வில
க்குஞ்சூரியனோ விந்தவுவமையெல்லாங்கடந் தழுதினு மினி
யவன்போ டியெல்லாத்தையு மோம்புந்தாய்போல வெவர்
க்குஞ்செய்யுமுதவிசகாயமென்று பொன்முடிகளு முத்துவ
டங்களும் பதக்கங்களு மற்றுண்டான பற்பலவாபரணங்க
ளை யெண்ணில்லா மற்கையிலேந்தியெடுத்த சீரத்தாலொளிர்
ந்துவணங்கிய பன்னிருவானவராசையோடவளைச்சூழ்ந்தப
ன்னிருமீன்கள்போல வோரணியாய்நின்றனரென்க. (௫௧)

வையகத்தார்வடுதீர்ப்பவிவட்கோர்மைந்தன் வந்தபி
ரானருட்புரிந்துவஞ்சமிக்கோர்
கையகத்தாலடியுண்டுமாள்வானென்றுக் கடுமரமோடாணி
யுமுண்முடியுந் தூணு
மொய்யகத்தாலடுமற்றக்கருவியாவு மூவறுவானவரொருபா
ல்கையிலேந்தி
மெய்யகத்தாளுள்ளுருகமுன்னர்நின்றார் விளம்பரியவெந்
தைதயைவாழ்த்திநின்றார்.

உரை.—பூவுலகத்தார்செய்தபாவந்தீர்க்க விவளுக்குமகனா
கவுற்பவித்துவந்தகடவுள் கிருபைசெய்து பாவிகள்கையினா
லடிபட்டுயிரைச்செலவழிப்பானென்றுகாட்ட வவன்பாடுப
டுங்கொடியமரமு மிருப்பாணிகளுமுண்முடியுங் கற்றூணு
மற்றக்கொலைக்கான வெத்தனங்களைப் பதினெட்டு வானவ
ரோரணியாகக் கையிலேந்தித் தவறுதமெய்யுணர்ந்த நெஞ்
சுடையமரியென்பவ ளுள்ளுருக முன்பாகநின்றார், நின்று
சொற்கடந்தவாண்டவன்றயையைவாழ்த்தினரென்க. (௫௨)

ஈரிறகாறோரொருவர்கொண்டுதோன்றி யேழுமாய்
ப்பத்தணியாய்நின்றவானோ [ரண்டு
ரீரிறகாலஞ்சினர்போல்முகத்தைமூட வீரிறகாலடிமூடமற்றி
ரீரிறகாறென்றலுந்தண்ணிலாவுங்காலச் செழும்பைம்பொற்
சாமரைபோல்விசித்திரட்டப்
பாரிறகாவளத்தோங்குமரசாடன்றாள் பணிந்துபணிந்தரு
கியேழச்சூழ்ந்துநின்றார்.

உரை.— ஒவ்வொருவ ரழகியவாறிறகோடுதோன்றிய வெழுபதுவானவ ரிரண்டிறகினால்ஞ்சினவர்போலத் தம்முகத்தைமூடி யிரண்டிறகினாற் றம்பாதத்தையுமூடி மற்றிரண்டு நல்லிறகினாற் காற்றுமொளியும்பரப்ப வதை வெண்சாமரைபோலப்புடைத்தடிக்கப் பூவுலகிற்றகாதவளமையினாலோங்கிட்டதக்கிராக்கினியின்பாதத்தைத்தொழுதுதொழு தாஞ்சயோகே ழுந்நின்றாரென்க. (௬௧)

செம்பொன்மேற்பசும்பொன்னா லெழுதினாற்போல்
திண்கவசமேலணிகள் தியங்கித்தோன்றப்
பைம்பொன்மேற்பயிற்றியமாமணியாலெல்லைப் பாய்மகு
டம்புனைந்தலகைமுனைந்துவென்ற
வெம்பொன்மேற்கதிர்த்தவைவேல்கையிலேந்து மிக்கயலுங்
கபிரியலாந்திருவல்லோனு
மம்பொன்மேற்றவிழுருக்கொண்டாங்குலாம்பே ரணிகளிரு
தலைவரெனத்தோன்றினரே.

உரை. —செம்பொற்றகட்டுமேலே பசும்பொன்னாலெழுதிய தன்மையாற் பொற்கவசத்தின்மேலாபரணங்களசைந்து தூங்கப் பைம்பொன்னிலேபதிக்கப்பட்ட மணிகளால் விளங்கின்முடியைச்சூடிப் போர்செய்து பசாசுகளைவென்ற வெரித்தபொன்னொளியைக்கடந்து கதிர்செய் கூர்த்தவேல் கையிலேந்திய மிக்கயலென்னும்வானவனுங் கபிரியலாகிய திருவல்லானென்னும்வானவனுமாக விருவ ரந்தப்பேரணிகளுக்கிருதலைவர்ப்போலத் தோன்றினாரென்க. (௬௨)

## வேறு.

இவருமலதுளவுமரருமளவில தெரியுவெளிமிசையிரிபல
சுடரொளி [ளுமிகவொளி
வருமுடிகளுநவமணியணியொடு ககனவெழிலணியணிக
லவாடட்டுளபலநிறமலரணி தொடையல்மதுமழைகுமிழி
களெழவிழ [நிரைநிரைநிகழ்வரே.
நிவருமணியணிகுடையொடுகொடிகளு நிறையவெளிவெளி

உரை.—முற்சொன்னவானவராயிரருமல்லாதே மற்றவா
னவ ரளவின்றி வானத்திற்றிரியும் பலசுடர்களினொளியைக்கட
ந்தமுடிகளு மணிகள்பதித்துவானழகினைக்காட்டு மாபரண
ங்களுமிகவேவிளங்கச் சிவப்புமுதற்பலநிறமுள்ளமலர்மாலை
கள்பொழிந்த மதுமழைதுமிழ்கள்கிளம்பப்பெய்து மேலு
யர்ந்தமணிக்குடைகளுங் கொடிகளு மாகாயமெங்குநிறைய
வரிசைவரிசையா யேந்திவந்து தோன்றினரென்க. (௬௩)

அலையினலையலைமிசைமிசைவனவென வரசருருவுடன
ணியணிநெரிதர [ருவிகள்
நிலையினுளமுரசொடுமுளகருவிகள் நிகரிலுயருலகுளபல்க
மலையினுயரினமுகிலதிர்வனவென மலியமுழங்கினவினியன.
வொலியொடு [துரையடைகருமமோ.
கலையினுயரினதொடைதொடைதுடர்வன கனியவினவென

உரை.—கடலிடத்தி லலைகள்மேலலைகள் வருவதுபோல
வந்தயானவரு மரசர்தன்மையா லணியணியாய்நெருங்கிவர
ப் பூவுலகிலுள்ளமுரசுமுதற்பலவாச்சியங்களும் வானுலகி
லுள்ளவிங்கொவ்வாதபலவாச்சியங்களு மலைமேல்திருமேக
ங்கள்போல மிகவுமுழங்கினவினியவோசையோடு கற்றநூ
லினுமுயர்ந்தபாத்தொடையோ டவர்துடர்ந்துபாடினவின்
பமானவுணர்வுகள்தான் சொல்லிக்காட்டத் தகுமோவென்க.
(௬௪)

ஒலியதிரமுடிமுடியொடுமடிபட வுலகையெழவிழவணி
தொடையசைவொடு [னதனுவுனா
மலியமதுமழைசலசலவெனவின மணிகள்கணகணவெனவெ
மெலியதிமலனைமகவுடையவளுடை வெயிலினெழுமடியொ
ளிவடிவடிவடி [ணிகுவரனுகியே.
பொலியவவரவர்சிரமிசையணிகுவர் பொருவினசையொடுப

உரை.—முடிகளோடுமுடிகளடிபட்டுமுழங்க வானவரா
சையோடுபணிந்துவிழும்போ தணிந்தமாலையசைந்துவிழும
துமழை சலசலவென்க வணிந்தநவமணிவடங்கள்சந்து
ணகணவென்க வென்புன்சொல்லடையாத தன்மையாற்கடவு

ளைமகளுகச்சூர்கொண்டவிக்கன்னியுடைய வெயிலினுமே மூதன்மையாலொளிவடியும் வடிவுள்ளவடிகளுயர வவர்வர்த லைமேலணிந்துகொள்வாரொப்பில்லாதவாசையோடணுகிவ ணங்குவாரென்க. (௬௫)

அரவினுருவொடுகொடிவிடுவிடமற வரிதினுயிர்தருமினித
மூதிவளென [சுடரிவளென
விரவினிருளினும்வடுதருமிருளற விரவியொளியினுமொளிர்
வுரவிழிவுமறவுயிரடுமிகலற வுறுதியிவளெனவுயிரிவளெனவிரி
புரவினிகரிலதயவினினிகரில புணரியிவளெனவறைகுவர்சில
ருமே.

உரை.— பாம்பினுருவங்கொண்டு பசாசுமிழ்ந்தநஞ்சற வரிதாயுயிரைக்கொடுக்கு மினியவமிர்தமிவளென்று மிராவி லுள்ளவிருளினு மிருளைத்தந்தபாவமறச் சூரியனொளியினு மொளிர்ந்தசுடரிவளென்று மெம்மனமுற்றகேடறவுமெம் முயிரைக்கொல்லும்பகையறவு முறுதியிவளென்றுமுயிரிவ ளென்றும்விரிந்தவீகையினுந்தயையினு மொப்பில்லாதகட லிவளென்றுஞ்சொல்லுவார்சிலரென்க. (௬௬)

கடியினெடிதமரொழவுயிர்மெலிகுவர் கவலையடைகுவர்ம
க்களிலவுளைகுவர் [விளிவுறியர்குவர்
மிடியின்மெலிகுவர்பிணிகளின்மெலிகுவர் வெருவியுருகுவர்
குடியின்மெலிவொடுமிருமையினிழிவொடு குழையவழுகுவர்
கலுழுவர்மடிகுவர் [சிலருமே.
படியினனையவருதவியதலைவி பரவையிவளெனமொழிகுவர்

உரை.— பசாசுகள்செய்யு நெடும்போரினுலுயிர்மெலி ந்தவருங்கவலையடைந்தவரு மக்களில்லாமல்வருந்தினவருந் தாரித்திரத்தினுலு நோய்களினுலுமிளைத்தவரும் பயந்தவ ருஞ்சாகுங்காலத்திலயர்ந்துநொந்தவருங் குடிமெலிவினு லும்பெருமையீனத்தாலுங் குழைந்தழுதவரும் புலம்பினவருமர ணமடைகுவரும் பூமியிலுள்ள மற்றவனைவருமுதவியடை யும்படிக்கு நன்மைநிறைந்த கடலிவளென்று சொல்லுவார் சிலரென்க. (௬௭)

ஒளிகொளுலகமுமுதலியவுளபல் வுலகுபொதுவறவணை
யவுநடவிய [ரியடற
வளிகொணதிபதிதனைமகவெனவணியரியகருவுடனுலகிடொ
வளிகொள்கவரிமுநிழறருகவிகையுமருவுமெமதரசியுமிவளெ
னவரு [தெர்ழுகுவர்சிலருமே.
டுளிகொள்முகிலெல்னமணமலர்மதுமழை சொரியவ்டியிணை

உரை.—விளங்கும்வானுலகமுதலுளவுலகங்களைத்தனியே யாண்டுநடத்தின தயையுடையுநதிபதியாகியகடவுளைமகனாகச்சூற்கொண்டுபூவுலகிலுள்ளதுன்பஞ்செய்யு மழலையவிப்பக்குளுந்தகாற்றுவீசுங் கவரியு நிழலைச்செய்யுங்குடையுங்கொண்டநமக்கிராக்கினியிவளென்றுந் தயையைத்துளியாகக்கொண்டமேகமிவளென்றும் வாசமதுமலனா மழையாகச்சிந்தியவளிருபாதத்தைவணங்குவர்சிலரென்க. (சூஅ)

ஒருவர்கவரிகளிடவிடவணுகுவரொருவர்கவிகைகளெழ
வெழமருகுவ [விடைமொழிகொணர்குவ
ரொருவர்பணிவிடைமுடிதரவிழைகுவ ரொருவரிறையவன்
ரொருவரொழுதியமுகவெழில்கருதுவ ரொருவரதிசயமுறியி
னிதுருகுவ [வரொவருமே.
ரொருவர்புகழிடநிகரிலமெலிகுவ ரொருவர்புகழுவர்பணிகு

உரை.—வந்தவானவருள்சிலர் வெண்சாமரைவீசவணுகுவர், சிலர் குடைகளைமேற்பிடிக்கவணுகுவர், சிலரவளிட்டவூழியமுடிப்பவிரும்புவர், சிலராண்டவனவட்கனுப்பினமறுமொழிகொண்டுவருவர், சிலரழகினெழுதப்பட்ட வவள்திருமுகத்தையாசையோடாராய்ந்துநோக்குவர், சிலரதிசயத்தினுள்ளுருகுவர், சிலரவளைப்புகழநினைத் துரியவுவமையின்றிமெலிகுவர், சிலரொப்படியுந்துணிந்துபுகழுவர், வணங்குவரெல்லாருமென்க. (சூகூ)

பருதியுடையுடைநலமிகவருளுடை பரமன்திபதிபொ
ருகருவுடையவள் [விடுமளவை
சுருதிமொழியெழவெனதிறையவனிவை தொகுதியற்வளவற

விருதியறவென்தறவறிவிசைதர வினியடியனளுமெனமுயல்
வதெனவுள் [ளுயருவார்.
கருதிநசையெர்டுகருதியவுணர்வுகள் கனியவுணர்தவில்லாரு

உரை.—சூரியனையாடையாகவுடுத்த வடிவினைமிக்கதயை யுள்ளபரமநாதனைச் சூலாகக்கொண்டமரியென்பவ ளென் னாண்டவன் வேதத்தினுரைத்ததெல்லா நன்றாக வினையாவை யுந் தொகையுமளவுமின்றிச்செய்யும்போது சொலிவிலடங் காததை நானறத்திற்குரிய வுணர்வோடடையும்படிக் கடியா ளினிமேற் செய்யவேண்டியதேதென் றுள்ளெண்ணி யா சையோடன்றவ ளெண்ணினவுணர்வுகளையெல்லா மினிதாய் வானவரறிந்ததினு லன்றுயர்ந்தாரென்க. (௭௰)

அயமும்வழுவையுமிரதமும்விருதருமடையுநிருபருநி
கரிலமெவிதர [றமனையிடை
வயமுமிருமையுமறிவொடுகருணையு மருவுமிறையவனொருசி
நயமுமொளிமையும்விபவமுமடைபனு நடவுமளவையுமிது
வெனில்வடுவொடு [கருமே.
கயமுநடலையுமவிபுவியருளொடு கனியவதுபொழுதுயர்கதிநி

உரை.—குதிரையும் யானையுந் தேர்களும் படைவீரருமா கிய நாற்றானையுடையவரசருந் தஞ்செல்வமிதற்கு நிகரல்ல வென் றுமெவிய வல்லமையும் பெருமையு மறிவுங் கருணையு முடையகடவு ளொருசிறுமனையிடத்தி வின்பமு மொளியுஞ் செல்வமுமெல்லாங்கூட்டிச்செலுத்தினதன்மையிதுவாணற் பாவத்தோடுதண்ணீருந்துன்பமுஞ்சூழ்ந்த பூவுலகத் தேவ ருளடைந்துகளிகூர வன்றுபரமகதியோடுநிகர்த்ததென்க. (௭௧)

## வேறு.

இற்றையெலாமுமியற்றியகாலை யினத்தியலாநயமாய்
மற்றையெலாமுமனத்திலுசாவு மலர்த்திருவாகையினான்
கற்றையுலாவுடளிக்குருவாம மிகக்கதிர்வீசியுரு
ளொற்றையுலாவிரதக்கதிராக வுவப்பலைமூழ்கினனே.

உரை. — இதெல்லாமாகையில் நிகரில்லாதவின்பத்தோடு மற்றதெல்லாமாராய்ந்த மலர்க்கொடியோன்சூசை கதிர்பட்டொளியெறிக்குங்கண்ணாடியினும் கதிர்களைப்பரப்பியோருருளையுள்ளதேரிலெழுந்ததோர் சூரியனைப்போலாகி யின்பக்கடலின்முழுகினானென்க. (௭௨)

வென்னைவிரித்திடுகூளிநடுக்கிய வேதமொழித்திறலோன்
பொன்னைவிரித்ததின்மீதுபுதைத்தமின் மாலையிழுத்தியபோற்
கொன்னைவிரித்தநிலாவினிறத்தவிர் கோலமுடுத்தெனையா
ளன்னைவிரித்தநிலாவுணவத்திற னானும்விரித்தன்றால்.

உரை. — முதுகுதந்தோடினபசாசுகள் நடுங்கச்செய்யும் வேதமொழியைக்கொண்டு வல்லமையுடையசூசைவிரித்த பொற்றகட்டின்மேல் மாலையாகமீன்களைப்பதித்துவைத்ததுபோல நிகராமல்வீணாயொளிரு மற்றச்சுடர்களினும் விளங்கியகோலத்தையுடுத்தென்னையாளுந்தாயானவளன்றுபரப்புமொளிவினைத் தானுண்டதினாலொத்த முறையோடுவிளங்கினானென்க. (௭௩)

ஓசையெழுந்தகலோல்மெறிந்தன வாரியுடன்றலென
வாசையெழுந்தனவோகையடங்கில தாயலர்தன்கொடிபோல்
பூசையெழுந்தநறுமதுவம்புகழ் பூச்றும்படியே
சூசையெழுந்துயர்நாயகிதன்றுதி தூவியறைந்தன்றால்.

உரை. — ஓசைகிளம்பத் திரைகளைச்சுருட்டி வெள்ளமோடினதுபோல வாசையிலெழுந்த மகிழ்ச்சியுள்ளடங்காமல் மலர்ந்ததன்கொடி நிறைமதுவுமிழ்ந்ததன்மையால் மிகுந்தவணக்கத்தோடுமினியபுகழ்களைச்சொல்லச் சூசையாகாயத்திலெழுந்த நாயகியின்றுதிகளை விரித்துரைப்பானென்க. (௭௪)

நீயொருதாயொருதாதையுநீயுயிர் நீயெவையகிலுநீ
நீய்கனிவார்கடல்நீயொளியார்சுடர் நீயருளார்முகில்நீ
நீயிறையோனெழுமாசனநீநெறி வேதம்வழாநெறிநீ
நீய்முகிழாதநறுமலர்நீநிறை நூனிகராவுருநீ.

உரை.—எனக்குத்தாயுந்தந்தையுமுயிருமற்றெவையுநீயே, இன்பத்தினானிறைந்த கடல்நீயே, ஒளியானிறைந்த சுடர்நீயே, தயையினானிறைந்தமேகநீயே, கடவுளெழுந்திருக்குஞ் சிங்காசனநீயே, நன்னெறிகாட்டினவேதத்தின்வழுவாதநெறிநீயே, மலர்ந்தவாசப்பூமாலைகநீயே, நிறைந்தஞானவிஞ்ஞானிகாரத்சுரூபிநீயேயென்க. (௭௫)

ஏரணியேயிதயத்திலிருந்தென யாளுடையான்வளே
சீரணியேமதிவெண்குடையேதிரு மாரிவிடும்புயலே
யாரணியேகருணாகரியேயுயிர் யாவுமளித்தமுதார்
வாரணியேதனிநாயகியேநனி வாழுதிவாழுதியே.

உரை.—அழகுபொருந்தியவாபரணமே! என்னிருதயத்திலிருந்தென்னை யடிமையாயுடையவளே, செல்வவணியே, சந்திரனைப்போல வெவர்க்குங்குளிர்ந்தநிழல்செய்யுங்குடையே, செல்வங்களெல்லா மாரியாகப்பெய்யுமேகமே, வேதரூபியே, கருணாகரியே, உயிரெல்லாங்காக்கு மமுதினானிறைந்தகடலே, நிகரில்லாதநாயகியே மிகவும் வாழிவாழியென்க. (௭௬)

வாழியனந்ததயாபரனுக்குரி வாய்ந்தருடாயுவளே
வாழிவிசும்பிடைவாழுபரும்பரின் வாமவிராக்கினியே
வாழிமுகிண்டிலபூவனைகன்னிய மாதனையாளரசே
வாழியமுந்தருளேமறையேயற னேநனிவாழுதியே.

உரை.—அனந்ததயாபரருக்குரிய வருளுடையதாயேவாழி, வானுலகில்வாழும்வானோர்க் கழகியவிராக்கினியேவாழி, மலராதபூவொத்த் கன்னிகளையாளுமரசியேவாழி, நிறைந்தவருளே வேதமே புண்ணியமேவாழியென்றனென்க. (௭௭)

என்றனனென் றுபுகழ்ந்துபுகழ்ந்திவை யெண்ணிமகி
ழ்ந்தனகால்.
நின்றனவும்பரடைந்தநிறைந்த நிகர்ந்திலகாட்சியெனுந்
தன்றனதாசைதணந்தவன்றகை தாங்கியமார்பிலெழச்
சென்றபிரான்முகமேமறையாது தெளிந்துயர்கண்டனனே.

உரை.—இதெல்லாஞ்சொல்லிப்புகழ்ந்து மகிழ்ந்தபோது சூழநின்றவானவரடைந்தவொப்பின்றி நிறைந்த பரமகாட்சிபோலத் தானென்னுந்தனதென்னு மிருபற்றினைத்தவிர்ந்த மாதவன்சூசை பெருமைகொண்ட மார்பிலெழுந்துவப்ப வந்நேரமெழுந்தருளின கடவுளின்றிருமுகத்தை மன்றவொன்றின்றித் தெளிவாகமேலேகண்டானென்க. (௭௮)

மேவருமிவ்வருமாறொடுவேய்ந்த பிதாசுதனேயனென்னு
மூவருமோர்நிகராதபராபர மாமுதலோன்முயலோர்
தாவருமாமுறையால்மறையாதுரு வேய்ந்துதயாபமெழா
வாவருமாதவனீதுயர்காணள வாநயனேரளவோ.

உரை.—அரியபெருமையோடு வானினின்றுவந்துதோன்றியபிதாவுஞ்சுதனுநேயனுமென்னு மாள்வகையின் மூன்று யொருதேவத்துவமூன்றிற்குமாகையி லொன்றானகடவுள்செய்த தவிராதமுறையினால் மறையாம லுருவமாய்த் தோன்றி யிருந்ததயாபத்தைக்காட்டவே யரியமாதவன்சூசை யிதெல்லாங்கண்டபோ தநுபவித்த வின்பமளவுளதோ வில்லையென்க. (௭௯)

செகத்தியலாதசிறப்பெழுநாயகி யைச்செகநாயகனே
யகத்தியலாதவருட்கொடுநோக்கி யருத்தியொடேவியதால்
முகத்தியலாதநயத்துநிலாவுரு முறநியவானவர்சூழ்
நகத்தியலாதமணிக்கலனார நயத்தொடுசூட்டினனே.

உரை.—பூவுலகினியற்கைகடந்த சிறப்புடையநாயகியாகியமரியை யுலகநாதனேயுள்ளே கொள்ளாதவருளைப்புரிந்து நோக்கியாசையோடேவினதினால் முகத்திற்காட்டப்படாதவின்பமுட்கொண்டு கதிருருவோடேசூழநின்ற வானவரிம்மலைகளில்விளையாத மணிகள்பதித்த வாபரணங்களையிவளுக்குவிரும்பிச்சூட்டினனென்க. (௮௰)

தன்னுயிராமெனவுன்னுதயாபமொ டெண்ணியமூவு
லகார் [ன்
மன்னுயிர்யாவையுமுள்ளினளாமொரு மன்னரசர்க்கிவளே

றென்னுயிராள்பவன் மின்னியமீனொளி வெண்ணிலவேவியுலா
மின்னுயிராகியசென்னியின்மீதொரு மின்முடிசூடினனே.

உரை.—தயாபமேயிருந்து தன்னுயிராக மற்றுயிர்களெல்லாமெண்ணிப் பேணியாளுமிராக்கினியிவளென்றுள் என்னுயிராளுங்கடவுள் வெண்ணிலகதிர்களைவீசி மீன்கள்சூழ்ந்துவாவு மின்னுக்குயிராகிய விவள்சென்னியின்மேல் விளங்கியதோர் முடியைச்சூடினனென்க. (௮௧)

## வேறு.

முழுதுணர்ந்தருள்முற்றியமாமுனி
பழுதுணர்ந்தபனிப்பறவிற்றையப்
பொழுதுணர்ந்தமையாற்புகலற்றினி
தழுதுணர்ந்தவையாரறைவாரரோ.

உரை.—முதிர்ந்தவுணர்வு மருளுமுடைய மாமுனிகுசை முன்பழிப்பாகநினைத்த சந்தேகமற விதெல்லா மன்றுகண்டறிந்ததினாற் பேசாமலினிதாயழுது மனதிலேநினைத்ததை யாருரைப்பாரென்க. (௮௨)

ஏதியாவுமுணர்ந்திதயத்தெழும்
போதியாவும்புரந்திட நாயகன்
கோதியாவுந்துடைத்திவண்கொண்டமெய்
நீதியாவுநிறைந்தவன்கண்டுளான்.

உரை.—இதெல்லாங்கண்டறிந்து மனத்திலோங்கியபோதுலகெல்லாங்காக்கப் பரமநாதன் குறையொன்றின்றி யிவ்வுலகிலெடுத்த வுடலின்ரூபத்தை நீதிமுறைவழங்கின குசைகண்டானென்க. (௮௩)

பளிக்குமஞ்சிக்த்தூடுறைபான்மணி
வெளிக்குமஞ்சறவேய்ந்ததுபோலுல
களிக்குநாதனமைத்தமெய்தாய்வயிற்
றுளிக்குள்மாதவனோர்ந்துகண்டானரோ.

உரை.—பளிங்கினாற்செய்த செப்பினுள்வைத்த வச்சிரமணிவெளியே மறைவின்றித்தோன்றியதுபோல.வுலகினைபளித்தநாதனுடுத்தவுடலையவன்றாய்வயிற்றுக்குள்ளே நன்றாய்க்கண்டான்சூசையென்க. (௮௪)

கஞ்சமோவிணாக்கஞ்சமுண்முத்தமோ
விஞ்சுபான்மதியோவிரிசெஞ்சுட
ரொஞ்சுபானியல்போவெனவோவள
னெஞ்சுவாழ்குபகாரனுடனீர்மையே.

உரை.—தாமரையென்பவோ, வாசத்தாமரையினுள்ள தரளமென்பவோ, ஒளிமுதிர்ந்த வெண்பிறையென்பவோ, விரிந்ததன்கதிரைச்சுருக்கித்தோன்றின சூரியனுருவென்பவோ, யாதென்பவோ சூசைகளிகூரக் கண்ட வுடலின்றன்மையென்க. (௮௫)

கண்டநாயகன்கண்ணொழுகுங்கதி
ருண்டமாதவனுள்ளொளியுண்டதோர்
சண்டதூயபளிக்குயர்தாணென
விண்டவாரொளிவெஞ்சுடர்வெல்லுமால்.

உரை.—கண்டநாதனுடையவிருகண்வழியா லொழுகும் கதிர்களையுண்டசூசை செங்கதிரையுண்ட தூயபளிங்கினாற் செய்யப்பட்ட பெருந்தூண்போல் வவன்பரப்பினவொளியே சூரியனொளியைவெல்லுமென்க. (௮௬)

சீர்த்தபூங்கொடியோன்றிருநாதனைப்
பார்த்தவேலையிற்பார்த்தனநாயக
னேர்த்தவாசையிற்கண்ணெதிர்பட்டெழூங்
கூர்த்தவார்வமுங்கூறுதலாங்கொலோ.

உரை.—பூங்கொடியோன்சூசை யவதரித்துடலைக்கொண்டநாதனைப்பார்த்துக்கொண்டிருக்கும்போது நாதனுமவனைப்பார்த்தானப்பொழுதிருவர்க்கொத்தவாசையோடு மிருவர்கண்கலந்தெதிர்பட்டதினா லவரிடத்தெழும்பின மிகுந்த நட்பின்றன்மையையுரைப்பதற்குமோவென்க. (௮௭)

தண்ணந்தாமரைதா தவிழச்சுடர்
கண்ணங்காங்கதிரா ற்கனிபார்த்தென
விண்ணங்காவலன் பார்த்துவிழைந்துளத்
தெண்ணந்தாவுணர்வின்பொருணர்த்தினன்.

உரை.— குளிர்ந்ததாமரைமலரச் சூரியன்றன்கண்ணாகி யகதிரராற்பார்த்தாலென்ன வானுலகநாதன் குசையைப்பார்த் தாசையோடவன்மனதிலெண்ணங்கடந்தவுணர்வுகளை யினி தாய்த்தந்துணர்த்திச்சொல்வானென்க. (௮௮)

விண்டபூங்கொடிதந்தவிருப்புட
னுண்டமாமணத்துன்றுணைபூங்கொடி
கொண்டமாட்சிகுணிக்கருங்காட்சியாற்
கண்டதாமறைகாட்டியமாண்பினேய்.

உரை.— மணமாகநானீமுன்னுனக்கு மலர்ந்தபூங்கொ டியைத்தந்தவிருப்பத்தோ டுனக்குவந்தபூங்கொடியாகிய வு ன்மணத்துணைவிகொண்டமாட்சியெவ்வளவென்றுநினையாத காட்சியினா வின்றுகண்டதாச்சுதே வேதமேன்மையைக்கா ட்டியபெருமையுடையோனேயென்க. (௮௯)

இன்னதன்மையினாட்கிவணீதுணை
துன்னுதன்மையினலருள்சூழ்ந்தனக்
குன்னுதன்மையினுணராவரம்
மன்னுதன்மையினல்வகுத்தாமரோ.

உரை.— இத்தன்மையுடையாளுக்கு நீயிங்கேதுணையான தினால் நான்றயைகருதி யுனக்குமதிக்கப்படாத நிலைபெற்றவ ரங்களைத்தந்தேனென்க. (௯௰)

கருவியொன்றிலகன்னியந்தினு
மருவியென்னைவளர்க்குகைத்தாதையாய்ப்
பெருவினன்றிபுணர்ந்திடநானுனைத்
துருவினேனெனச்சூழ்ந்தொழுகென்றனன்.

உரை.— புறக்காரணமொன்றின்றி யிவளென்னைக்கன்னி யாயிருந்துபெறுவா ளாயினு நீகூடநின்றென்னைவளர்க்குங்

கைத்தாதையாகத்தெரிந்தொப்பில்லாத நன்மைகளைக்கொடுக்க வுன்னைத்தெரிந்துகொண்டேனென்றுணர்ந்ததற்குத் தகநடந்துகொள்வாயென்று தெனென்க. (கூக)

சொரியமாரிதுறந்தொனிவெள்ளமாய்ப்
பிரியவார்கலிமேற்பிரண்டாலென
வரியமாதவற்காதிவளர்ப்பதற்
குரியமார்வரமூற்றுளங்கூர்ந்ததே.

உரை.— மழைபெய்ததினாற் பொங்கின வெள்ளம்மிண்டுகடலிற்பாய்ந்ததுபோல வன்றுமாதவனாகியகுசைக்குக் கடவுளைவளர்ப்பதற்குரியவரங்கள் வெள்ளமாகவந்து மனத்திலுயர்ந்தானென்க. (கூஉ)

அண்ணற்கிங்கண்மைந்தகைத்தாதையைக்
கண்ணற்கோங்குகருத்தொடுபோற்றியுள்
ளெண்ணற்கேற்றியவாகியயம்பினார்
வண்ணப்பூமழைவானவர்வாரியே.

உரை.— பூவுலகிற்கடவுளுக்கமைந்தகைத்தாதையாகிய குசையைக்குறித்து மிகுந்தவாசையோடுவணங்கி யுள்ளேயவனையெண்ணினதன்மைக் குயர்ந்த துதிகளைச்சொன்னார் வானவராகியபூமழையைவழங்கியென்க. (கூங)

சிறைப்படுங்கனல்சிக்கெனவாய்கிழித்
துறைப்படுங்ககனத்தெழவோங்கல்போ
லறைப்படுந்தவனன்புமிகுந்துயிர்
புறப்படும்பரன்போதவிருந்திலால்.

உரை.— அடைக்கப்பட்டநெருப் புடனேயொருவாய்திறந்துயர்ந்தவாகாயத்திலெழும்புவதுபோல வறங்கொண்டமாதவன்குசையினல்லுயிர்மிகுந்தவன்பினுலுடலைவிட்டுப்பிரிந்துபோமாண்டவன்றனே போகவொட்டாமலிருந்தாதேபோனுலென்க. (கூச)

இருத்திவாழுயிரோவியுட்டீண்டிய
வருத்தியாவிளவற்பதத்தர்ச்சனை
திருத்திவீழ்ந்தனன்சென்னிநிலம்படக்
கருத்திலார்ந்தமறைக்கொழுகொம்பினான்.

உரை.— இத்தன்மை யிருத்தப்பட்ட தன்னுயிரோவியமனத் தைத் தாண்டியவாசையோடு தாய்வயிற்றிற்கண்ட திவ்வியகு ழந்தைபாதத்தைவணங்கித் தரையிற்றலைபடவிழுந்தான் மன த்திலணிந்தவேதத்திற்கொரு கொழுகொம்பாகிய சூசையெ ன்க. (௧௫)

வீழ்ந்தவாசையின் மீண்டெழுந்தானரு
ளாழ்ந்தகாட்சியொன் றின்றியுமண்டையிற்
றாழ்ந்தகாந்தையைக்கண்டதவத்தினோன்
சூழ்ந்தயாவையுஞ்சூழ்ந்துளத்தோங்கினான்.

உரை.—விழுந்தவாசையோடுமீளவுமெழுந்தானெழுந்து பார்க்கும்போது முற்கண்டவருள்நிறைந்த காட்சியொன்று ங்காணாமற் றன்றுணைவி தன்னண்டையிலே யிறங்கிவந்திருப் பதுகண்டசூசை சம்பவித்ததெல்லாமாராய்ந் துளத்திலோங் கினானென்க. (௧௬)

ஐயநீங்குபடலமுற்றும்.

ஆகப்படலம் - ௮ - இ - விருத்தம்

௭௱௰௬.



## ஒன்பதாவது.

# மகிழ்வினைப்படலம்.

## வேறு.

இன்னியாவையு முளத்தெண்ணியெண்ணியதிலைக்
குன்னலாதுளமுயர்ந்தின்பறுதுருகுவான்
பன்னலாவடைவரும்பண்படைந்துயரினுள்
துன்னலால்டைநயன்சூழ்ந்தமாதவநலோன்.

உரை.— நடந்ததெல்லாமாராய்ந்ததன்மைத்துளத்திலோ ங்கி முடிவின்றிக்களிகூர்ந்துருகுவான் சொல்லிலடங்காதமு றையாலுயர்ந்தமரியென்பவள் தனக்குத்துணைவியாகவந்ததி னாற்றனடைந்தநன்மையாராய்ந்தமாதவன் சூசையென்க. (க)

முந்தையாமுதவினோன் மூவிடத்தொருவனாய்த்
தந்தையாவருமிலாக்கன்னியின்றனையனா
மெந்தையானிவன்வளர்த்தெற்கிதோவியல்பெறாச்
சிந்தையாலுருகிமீண்டாய்ந்தசொற்செப்பினான்.

உரை. — எல்லாத்திற்குமுந்தினகாரணமாகியகடவுள் மூ வுலகிற்குமொருவனாய்நின்று தகப்பன்செயற்கையொன்றின் றித்தூயகன்னியின்மகனானவென்பிதாவை நானிங்கேவளர்ப் பதெனக்குத்தகுந்தன்மையோவென்றுமனதிலுருகிப் பின் னையுஞ்சொல்லுவான்சூசையென்க. (உ)

வானுநேராதுமாறுவரத்தோங்கிவான்
மீனுநேராதுமெல்லாக்கைகண்டேந்தியூர்
தேனுநேராதுதேர்தீஞ்சொலைச்செப்பவே
நானுநேராகினாறுதுங்கட்பேன்கொலோ.

உரை. — வானுலகினிகராதவரத்தினால் நானேயோங்கிவரன்மீன்கள் நிகராதழகுளதாயாண்டவனெடுத்த மெல்லியவுடலைக்கண்டு கையிலேந்தி மலரினின்றவடியுந்தேனினு மினிய தேர்ந்தசொல்லையவனுரைக்கும்போது நானேகூடவவற்கு நேராகநின்று நானுமதற்கேட்பேனோவென்க. (௩)

வேதமேவேடமாய்வேய்ந்தமாதவரெலா
மேதமேதீர்க்குவானிங்குநாடியபிரான்
பாதமேபாவிநான்பார்க்கவுந்தலையினென்
கேதமேதீரமேற்சூடவுங்கெழுமுமோ.

உரை. — வேதத்தைவடிவாகவணிந்த மாதவரெல்லாரும் பாவத்தைத்தீர்த்தளிக்க விங்கேவரவேணுமென்றவிரும்பின கடவுளின்பாதத்தைப்பாவிநானேபார்க்கவு மென்குறைதீர வென்றலைமே லணியவுங்கூடுமோவென்க. (௪)

நீருலாமுலகினோர்நீண்டசெங்கதிரவன்
றேருலாமுலகினோர்சேர்ந்துபோற்றியநிலா
வேருலாமடியினுளெய்தியெய்தியநலஞ்
சீருலாமடியினாரீஞ்சொலாரடைவரோ.

உரை. — கடல்சூழ்ந்தவுலகத்தோருஞ் சூரியன்றிரியும் வானுலகத்தோருஞ் சேர்ந்துவணங்குஞ் சந்திரன்மேலுலாவிய பாதத்தையுடையவிக்கன்னி யெனக்குத்துணைவியாகவடைந்ததினால் நானடைந்தநன்மை சீர்கொண்டடிதொடுத்தபாவினற்சொல்லுடையாரடையுந்தன்மையோவென்க. (௫)

மேவினார்வாசமேவீசுபூவிள்ளுமோர்
கோவினால்வந்தகோடாதபூங்கொடியையென்
பாவினானெய்தலாற்பாலுலாநாடமே
யேவினால்மேவுசீராயதென்றெண்ணுவான்.

உரை. — மேலுலகிலுள்ள வாசனைபொழிந்து மலர்ந்த பூங்கோலோ டெனக்குவந்தபூங்கொடியாகிய விந்தமணத்துணைவியை யென்னிடத்திலேநானடைந்ததினாற்சூரியனுலாவு

ம் வானுலகத்தோர் தமக்குத்தருமாகில் விரும்புந்தன்மையெனக்காயிற்றென்றானென்க. (௩)

மாட்சியாலோங்குபூவாகையானெண்ணருங்
காட்சியாலோங்கிமுற்கண்டயாவுந்தருஞ்
சூட்சியாலோங்குதன்றாய்மாதேவியைத்
தாட்சியாலோங்குளத்தோர்ந்ததேசாற்றுவான்.

உரை.— மாட்சிமையினுயர்ந்த பூங்கொடிபோன் சூசை யடைந்தகாட்சியினால் முன்னர்கண்டதெல்லாமாராய்ந்ததெளிவினுயர்ந்த தன்றுணைவியைப்பார்த்துத் தாழ்ச்சியோ[illegible] யரப்பட்டவுணர்வுகளைச்சொல்வானென்க. (௪)

தூயுலாமிந்துலாஞ்சொக்குலாம்பாதமுஞ்
சேயுலாம்பானுலாஞ்சீருலாந்தேகமும்
மீயுலாமீனுலாமின்னுலாஞ்சென்னியு
மோயிலாதிற்றெலாமுற்றமாமாட்சியாய்.

உரை.— தூயபிறைமேலெழுந்த வழகியபாதமுஞ் செஞ்சுடருடுத்துச் சீர்த்ததிருமேனியு மேலுலாவியமீன்களைச் சூடிமின்னியசிரசு மிவையெல்லாம் விடாமற்கொண்டமாட்சிமையுடையவளேயென்க. (௫)

நீரளாம்புணரிசூழ்நீண்டபாருலகமுங்
காரளாங்கதிரளாங்காயவானுலகமுஞ்
சீரளாங்கருவியில்லாதுசெய்தனவிதத்
தேரளாமுறைமையீங்கின்றுகண்டனனியான்.

உரை.— கடல்சூழ்ந்தபூவுலகமுங்கதிர்செய்யும் வானுலகமுமாதிநாளிலே கடவுள் துணைக்காரணமொன்றின்றிச்செய்தவரியமுறையை யிங்கேயின்றுசெய்தது கண்டேனென்க. (௬)

ஏதிலாச்செகமெலா மேற்றமோரிறையவன்
மாதிலாத்தையினால் வந்துகாரணமிலாப்
பேதிலாத்தகவிலாப் பேதையாமெனையுறற்
றுதிலாத்திருவுறத் தான்றெரிந்தனனிதோ.

உரை.—முடிவின்றியுலகங்கள்யாவும்வணங்கியகடவுள்மா
ருதகன்மழையால்வந்து காரணமொன்றின்றிப் பேறும்பெ
ருமையுமில்லாத பேதையாகியவென்னை யுன்னாலே யளவில்
லாதசெல்வம்பெற விதோதெரிந்தானென்க. (௰)

வானகத்துற்றுநின் றோர்வணங்குன்வளம்
யானகத்துற்றில னேவல்கொண்டேனினைத்
தேனகத்துற்றருட் சீர்மையரனீபொறுத்
தானகத்துற்றவுன் சேயொடாளென்னையே.

உரை.—வானுலகத்தோர்வணங்கு முன்பெருமை நான
றியாததினா லுன்னையேவல்கொண்டேனே, நீயினிதாய்க்கொ
ண்டவருளினா லிதைப்பொறுத்துச் சரீரமெடுத்தவதரித்த வு
ன்றிருக்குமாரனோடு நீயுமென்னையாள்வாயென்க. (௰௧)

தாயுநீதலைவிநீ தாழ்விலாத்தயவெலா
மீயுநீபரியுநீ யிட்டவென்குறையெலாந்
தேயுநீகருணையாஞ் சேயொடன்பலையினுட்
டோயுநீயெனையுநீ யாளெனத்தொழுதுளான்.

உரை.—எனக்குத்தாயுந்தலைவியுநீயே, குறையாததயை
செய்தென்னைக் காத்தவள்நீயே, செய்தவென்குற்றமெல்லா
ந் தேய்த்தழித்தவள்நீயே, கருணையாகியவுன் திருமகனோட
ன்பின்கடலுட் டோய்ந்தவள்நீயே யென்னையாள்வாயென்
று தொழுதான்கூசையென்க. (௰௨)

பற்றறுத்துட்டிறற் பற்றருட்பொற்பினான்
சொற்றவுற்றிட்டவச் சொற்செவிப்பட்டபோ
தற்றழற்பட்டதொத் துட்டிகைத்தொப்பிலா
துற்றகத்துட்டகச் சொக்கினாள்சொற்றுவாள்.

உரை.—ஆசையறுத்தமனத்தில் வல்லமைசெய் யருள்வ
டிவினான் கூசைசொன்னவுரை தன்றுணைவியின் செவியுட்ப
ட்டபோது நெருப்புபட்டாலென்னநொந்து நிகராதமா
ட்சிமைமனதிலேயுண்ட வடிவினாள் மரியென்பவள்சொல்வா
ளென்க. (௰௩)

## வேறு.

தொழுதேல்தொழுதேவிறைவற்றொழுதா னன்றென்
றாலும்
பழுதேத்தவிர்குற்பயனாற்பரம னென்னோடொன்றும்
பொழுதேதொழுதாலெனக்கேபுரியோர் பணிவாமென்று
வழுதேயுழுதேதொழுதாள்மரர்க் கரசாளென்பாள்.

உரை.—வணங்காதேவணங்காதே யவதரித்தகடவுளைவண
ங்குவது நல்லதென்றாலுங் குறைதவிர்ந்தகருப்பத்தினாலாண
டவ னென்னோடொருபொருளாய்நிற்குமளவு மவனைவணங்
கினாலந்தவணக்கமெனக்குச் செய்ததாகத் தோன்றுமென்
றழுதழுதுதொழுதாள் வானோர்க்கிராக்கினியாகிய மரியென்
பவளென்க. (௰௪)

பைந்தாளுயர்தாமரைபோற்பிறைமேற் படிபொற்ப
தத்தாள்
நொந்தாளென்னாத்தானுநொந்தா மென்றானென்றாற்
செந்தாள்நோகப்பணிநீசெய்யா தடியேன்முடிப்பத்
தந்தாள்பவளேதயைசெய்தருள்வா யென்றான்முனிவன்.

உரை.—பசுந்தாளினூன்றியதாமரைபோலப் பிறைமே
லூன்றிய பொற்பாதத்தையுடையாள் நொந்தாளென்றா தா
னுநொந்து வணங்காதபடிக்குச்சம்மதித் தாமென்றானென்
றாலு முன்சிவந்தபாதநோகப்பணிவேலைநீசெய்யாம லதெ
ல்லாமடியேன்முடிக்கத்தந்து தயைசெய்வா யென்னையாள்
பவளேயென்றான்ஞானியென்க. (௰௫)

ஆன்றாயபணித்தொழிலென்றொழிலே யென்றாளவளு
மென்றாயெளிமைத்தகவெய்ததற்கே யிருவர்தம்மிற்
பின்றாமுறையாவிசவிப்பெரிதும் பருமுள்வியப்பச்
சென்றாயபணித்தொழிலைச்செயமுன் னுவரச்சான்றோர்.

உரை.—உண்டானபணித்தொழி லெனதாமேயென்றாள்
மரியென்பவளு மிப்படிசொல்லித் தாழ்ச்சியின்பெருமை

யைபடைய விருவருந் தம்முட்பின்வாங்காமலிசலி வானவர் மிகவுமதிசயப்பட விருவருமுள்ளவேலைசெய்ய முந்துவா ரப்பெரியோரென்க. (௰௬)

வீழ்வாரியின்றிக்குழிநீர்வீயா துறைகின்றென்னுஞ்
சூழ்வாரில்லாற்றுடர்தீதறியா தாள்வாரல்லால்
வாழ்வாரில்லையென்பார்மாணு மண்ணோர்மனத்திற்
றாழ்வாருயர்வாரெனவித்தக்கார் தண்மைவிழைவார்.

உரை.—வெள்ளமோடலிற்றண்ணீரெல்லாம் பள்ளத்தி னின்றிருக்குமென்றுணர்வாரில்லாமலுஞ் செல்வத்தினால்வருந்தின்மை யுணராமலும் நீசமனிதராள்பவரையன்றிவாழ் வாரில்லையென்பாரோ, மனத்தாழ்ச்சியுடையோருயரப்படுவா ரென்று மெய்யானபெருமைகொண்ட விவ்விருவர்தணிமை யேவிரும்புவாரென்க. (௰௭)

காயாமரமேயல்லாற்காய்த்த சினைகள்நிறுவா
தீயார்செல்வத்தல்லாற்றெருளோர் செருக்கெய்துவரோ
பாயாநெகிழும்பணியாதனவில் பணித்தசரமே
வீயாதுயரும்வளிநேர்வெகுளா வளையுந்தருவே.

உரை.—காயாதமரத்தின்கொம்பு நிமிருமல்லாதே காய்த் தகொம்புகள்நிறுவாததுபோலச்செல்வங்கொண்டநீசரல்லா தே தெளிந்தநூலோராங்காரங்கொள்வாரோ? வளையாதவில் லுதொடுத்த வம்புநெகிழ்ந்து குறியிற்பாயாது, காற்றுமுன் னெதிராமல்வளையுமரமுங் கெடாமலுயருமென்க. (௰௮)

சாலோர்பொருளாணிறைபொற்கலமே தருமோர்தோ
ணியோ
நூலோரியக்கம்பேசார்நுண்மா ணுழைகின்றறங்கொள்
மேலோருகப்பேமேவார்மேவார் துடர்தன்னிழலைப்
போலோரிடத்துந்தேடாப்பொழுதே துடரும்புகழே.

உரை.—யாதொருபொருளைக்கொண்டு நிறைந்தபொற்க லஞ்சத்திக்குமோ? அத்தன்மை நூலோர்பெருமைசிலாக்கி

யம்பேசா ரரிய மாட்சிமை செய்தவற்ங்களைக்கொண்டபெ
ரியோருயர்ச்சிவிரும்பார்; தன்னிழற்கு முதுகுகாட்டிப்
போனவனை யந்நிழல்தொடரும்போல வோரோரிடத்தும்பு
கழைத்தேடாதவனைப் புகழேதொடருமென்க. (௰௯)

ஏதேமறைநூலென்றுவரைத்தற் கிறையோன்வந்தப்
போதேயெளிமைப்புணரக்கண்டத் தணிவிற்பொலிவோர்
கோதேகொணராள்வினையைக்குணியாக் குணிதாழ்வினையே
நீதேயெனவந்நெறிநின்றொழுகற் கிசலாநின்றார்.

உரை.— இதுவேதமாகவிதித்ததற்குக் கடவுளவதரித்துவந்
ததினாலவனுமெளிமைகொண்டானென்றுகண்டதினாற் றாழ்
ச்சியினாலுயர்ந்தபெருமையுடைய மரியுஞ்சூசையுங்குற்றங்
கொண்டுவிடுமாள்வினைகருதாமற் றாழ்வினைதானேநீதியென்
று தாழ்ச்சியோடொழுகத் தம்முள் ளிசைவிக்கொண்டிருந்தா
ரென்க. (௨௰)

பின்னாட்கொருநாள்மனையாள்மனையைப் பரிவாய்விள
க்க [ளீ
முன்னாட்கிணையாமுனிவோன்கண்டே முதவோன்சூல்கொ
ளன்னாட்கிதுவேமுறையோவென்று னவளுமுறையீ
தின்னாட்கிறையாநினக்கோவெனவத் தொழிலைமுயன்றாள்.

உரை.—பலநாளிலொருநாள் மரியென்பவள் மனையைவி
ளக்கக்கண்ட முற்காலத்து நிகராதமுனியாகியசூசை கடவு
ளைச்சூலாகக்கொண்டவளுக் கிதுமுறையோவென்றான். மரி
யென்பவளு மிப்பெருமையுடையவளுக் கிராசாவாகியவுனக்
காகுமோவென்று தொடுத்தவேலைமுடித்துச் செய்தாளெ
ன்க. (௨௧)

உனதேயெனதேயில்லாதில்லில் லொருநாள்பணிப்பா
தனதேயெனமாதவனேசெய்தான் தவறுதிந்நன் [ல்
றெனதேயின்றுள்மரர்க்கரசா ளிதுநன்றென்றால்
நினதேயென்பாய்கொல்லோநிருபற்கிதுவென்றுரைத்தான்.

உரை.— உனதென்னு மெனதென்னு மில்லாதமனையி
லொருநாள்வேலைசெய்யும்பங்குதனதென்றுமாதவன்சூசை.

யுள்ளவேலைசெய்தா னப்போது தவறாதபயன்றரு மிந்தந
ன்மை யெனதேயென்றாள்வானோர்க்கரசா ளிதுநன்மையெ
ன்னி லுனதென்பாயோ விராசாவாகியவெனக்கல்லோவேண்
டுமென்று சூசையுழைத்துமுடித்தானென்க. (௨௨)

வண்டாயிரஞ்செஞ்சுடர்தோன்றியமுன் வந்தேக்கமலத்
தண்டாதினைத்தாங்குடைந்தூறியதே னுண்ணுந்தன்மைத்
தொண்டாதவிழ்பூங்கொடியோனுறங்கி னவடாமரைக்கண்
விண்டாகுதன்முன் விழையும்பணியே யெல்லாமுயல்வான்.

உரை:—சூரியனுதிக்குமுன்னர் வண்டுகள்வந்து தாமரை
யின்குளிர்ந்தவிதழ்களைக்குடைந்து துளித்ததேனையருந்துந்த
ன்மையினா லொளிசெய்மலர்ந்தபூங்கொடியோன்சூசையு நித்
திரைகொண்டமரியென்பவள்தன் றாமரைக்கண்டிறக்குமுன்
னர். விரும்பினபணிவிடையெல்லாஞ்செய்வானென்க. (௨௩)

முயலாதொன்றுண்டென்றான்முடுகி முடிப்பக்கேட்
புயலாருவார்குழலாளவனும் புரிபுன்னகையா [பாள்
வியலா துனக்கென்று மறுத்திடைவான் பொருள்போக்கியகா
மயலாமென்னுமனநொந்தழுவாள் வானோர்க்கரசாள். [ல்

உரை. — முடியாதவொன்றுகண்டால் விரைந்துதான்மு
டிக்கக்கேட்பாள் மேகங்கள்சுமந்து மீன்களையணிந்தகுழ
லுடையமரியென்பவ ளப்போது சூசை புன்னகைகாட்டி
யிதுனக்கியலாதென்று மறுத்ததினா லிடையிலொருவன்பெ
ரும்பொருளைப்போக்கி மயங்கினாற்போல வானோர்க்கரசா
ளுநொந்தழுவாளென்க. (௨௪)

சேயாயெளிமைக்கொளியாகுதற்கே சென்றாய்திரு
வோய்
தாயாயடியாட்கெளிமைத்தகைமை வேண்டாதென்னே
தூயாயிந்நன்றிலதேற்றாஞ்சா துயிர்க்கோர்நிலையோ
வீயாவருளேமகவேயென்று விழைவுற்றயர்வாள்.

உரை.—என்னாண்டவனே! திருச்செல்வோனே, நீயவதரி
த்துமகனாகித் தாழ்ச்சிக்கொளிசெய்யவந்தாயே யுனக்குத்தா

யாகிய வடியாளுக்குத்தாழ்ச்சியின் பெருமை வேண்டாமெ
ன்பதேதோ விந்தத் தூயதன்மை யெனக்கில்லாதேபோனு
லென்னுயிர்சாகாமல்நிற்குமோ முடியாதவருளே யென்மக
ளேயென்று மிகுந்தவாசையினாலயர்ந்தாள் மரியென்பவளெ
ன்க. (௨௫)

ஐயர்வாள்ஞாயோவென்னுவன்போ டிரக்குற்றஞ்சே
துயர்வாடகமேதுன்பற்றலரத் தூதேவியவோ [ய்
ருயர்வானவனுற்றொருநாள்வளனப் பணியைச்செய்யப்
பெயர்வாயினகாற்பிழிவாய்மலரோ பிளிரச்சொல்வான்.

உரை.—என்றாய்யர்வாளோவென் றிரக்கங்கொண்ட பிள்
ளையாகியகடவுள் துயரால்வாடிய தன்றாய்மனமே துன்பத்
தீர்ந்துமலரத் தூதாகவேவின வொருவானவன்வந் தொருநா
ள்சூசை யுள்ளவேலைமுடிக்கப்போகிறபோது மலர்ந்தவாய்ம
துச்சொல்கொப்புளிக்க வுரைப்பானென்க. (௨௬)

நுணிக்கொம்பினுமூக்கினர்றொந்திறப்பா ரணையவூக்க
குணிக்கும்பருமானிடருங்குணியாக் கெட்டாரொன்னுக் [ந்
கணிக்கும்பரிசாற்கடவுள்மனுவா யெளிமைகாட்டத்
தணிக்கும்பரிசாற்றாய்தண்டொழில்செய் யாதாற்றகவோ.

உரை.— நுணிக்கொம்பிலிருந்ததின்மேல் உயரத்தாண்டி
னால் விழுந்துசாவாரொன்றதுபோல வாங்காரத்தைநினைத்தகி
னால் வானவருட்சிலர்பேயாகவு மானிடர்பாவிகளாகவு நினைத்
திராமற் கெட்டாரொன்றுணர்ந்ததன்மையினாற் கடவுள்தானே
மனிதனாகி மனிதர்க்கெளிமைகாட்டத் தான்றன்னைத் தாழ்த்
தினமுறையோடவன்றாயுந் தாழ்ச்சியின்றொழிலைச்செய்யா
திருந்தால் நல்லதோவென்க. (௨௭)

செல்லாருலகிற்குயர்வாழெமக்குஞ் சேலார்கடல்சூழ்
கல்லாருலகுற்றவர்க்குங்கனியின் பியற்றுங்கருணை
வல்லாரியம்மாமடவாள்வருந்துந் துயரங்கண்டும்
வில்லாரறிவோய்விழையுந்தொழிலை விட்டலாகாதோ.

உரை.—மேகமண்டலத்தின்மேல்வாழு நமக்கும் மச்சநி
றைந்தகடல்சூழுங்கல்லானிறைந்த பூவுலகத்தவர்க்கு மின்பஞ்

செய்யுங்கருணையின் வல்லவளாகிய விம்மாமடந்தை வருந்து ந்துயரங்கண்டாலும் விளங்கினவறிவுடையோ யவள்விரும் புந்தாழ்ச்சித்தொழிலைவிட்டார்லாகாதோவென்க. (உ௮)

இன்பால்வானேற்றிவளை நீயேற் றுதனன்றன்றே
வன்பர்ல்விழைதண்டொழிலையன்கு ளரிதாற்றிடலே
தன்பாலெனத்தாய்தனையனினிவாழ்ந் துணைவேர்த்துழைத்த
துன்பாலெனவநண்டகையேவினனென் றுரைசெய்தொளி
ந்தனன்.

உரை. — இனிதாய்வானுலகம்வணங்கப்பட்டவிவளை நீயும் வணங்குவதுநல்லதல்லோ வாகிலுமாசையோ உவள்விரும் புந்தாழ்ச்சியின்றொழில்களையவளேமுடிக்குந்தன்மை யவட் குமுறையென்றுந் தாயும்பிள்ளையுமினிமேல் வாழ்ந்துண்க நீவேர்த்துழைப்பதுனக்குமுறையென்று மாண்டவன் கட் டளையிட்டானென்று வானவன்சொல்லி மறைந்துபோனு னென்க. (உ௯)

மீயேவியதோர்விதிமேல்விதியொன் றுண்டோவிறை
நீயேவிய்தேநான்மேவியநீதியெனத்தொழுதே [வா
போயேவியதைப்புகழ்மேனின்றுட் குணஞ்செய்தனனால்
வாயேவியபாநிகராமறைக்கோர் கொழுகொம்பன்னான்.

உரை. — என்னுண்டவனே! மேனின்றுவருமவிதியின்மே லெனக்குவேறொன் றுண்டோ? நீசெய்தவேவல் நான்விரும் புநீதிதானேயென்று வணக்கஞ்செய்துபோ யாண்டவன் செய்தகட்டளையைப் புகழப்படாதமாட்சியுடைய மறியெ ன்பவட்கறிக்கையிட்டான் வாயுரைத்தபாவினு னிகராதவே தத்திற்கொருகொழுகொம்பாகியகுசையென்க. (௩௰)

இப்பாலேதொன்றில்லாதெல்லா முளவாக்கினனுய்
முப்பாலொன்றுமூர்த்தைக்குரிமாண் முறையோடருகுந்
திருப்பாலடையாவிப்பண்புடையோ ருடையிவ்வெளிமைச்
செப்பாக்கவிகுழுலகாளரசர் தகவொத்துளதோ.

உரை. — இங்கேதுணைக்காரணமொன்றின்றி யெல்லாத் தையுமுண்டாக்கி மூவுலகிற்கு மொருவனுகிய வாதிகாரணற்

சூரிய மாட்சிமுறையோடவனையடுத்து நிகரப்படாதகுணத் திவ்விருவருடைய தாழ்ச்சிக்கொப்பாக நீர்க்கடல்சூழ்ந்த பூ வுலகாளு மரசருடைய பெருமைபோதுமோவென்க. (௫௧)

## வேறு.

நீர்க்கணங்குழிதேடிய நீர்மையாற்
சீர்க்கணங்கெளிமைத்துணைதேடினர்
கார்க்கணங்குறைகான்றதும்போலறத்
தேர்க்கணங்கெனுமீகையியற்றினார்.

உரை.— நீரெல்லாங்குழியைத் தேடினதன்மையாற் செல்வத்திற்கழகாகிய தாழ்ச்சியைத் துணையாகத்தேடினவிருவர். மேகங்களுக்கழகாகிய துளிதுளித்தல்போல வறங்கொண்ட வழகிற்கழகாகிய வீகையைச்செய்தாரென்க. (௫௨)

மறுமைநாடிவழங்கியவன்பொடு
நறுமைநாடியவான்கொடைநல்கவிற்
சிறுமைநாடியபற்றறத்தீர்த்திட
வெறுமைநாடினர்நாடருமேன்மையார்.

உரை.— இனிவரும்பரமகதிநன்மை யாசையினா லன்புவழங்கவெவர்க்கும்நன்மையாகப்பெருங்கொடைதான்றந்து துன்பஞ்செய்பற்றுதலெல்லாந்தீர்த்தறவே வெறுமையைத் தேடினார் தேடப்படாதமேன்மையுடையோரென்க. (௫௩)

வீட்டுநன்மைவிளைநிலமாமிலோர்
நீட்டுதங்கரமென்றுநினைத்தருள்
மாட்டுவித்தெனவந்திரப்பார்கரத்
தீட்டுவான்பொருளெண்ணிலதாமரோ.

உரை.— இரப்போர்நீட்டுங்கைதானே வான்வீட்டினன்மைவிளையு நிலமாகுமென்றுநினைத் துள்கொண்டவருளினால் வந்தவிரப்போர்கையிலே வித்தாகக்குவித்தபொரு ளெண்ணப்படாதென்க. (௫௪)

ஈய்ந்துதாமுமில்லாரெனவாயபின்
காய்ந்துதீய்த்தகுளங்கடிதோண்டெனத்

தோய்ந்திலாயருளாற்றொழில்செய்துயிர்
வாய்ந்துவாழவுமீகைவழங்குவார்.

உரை.—மற்றத்தரித்திரர்க்குத் தந்துதந்து தாமுந்தரித்திர ராகியபின் முன்னுண்ணீரொடுத்தகுளங்காய்ந்தா லதைவெட் டித்தோண்டினதன்மைபோலத் தாமு. மிதயத்தி லுள்ள தலையினாற் றம்முட்லையொறுத்து வேலைசெய்து மற்றுயிரொல்லா நன்றாய்வாழும்படிக் கீகைவழங்குவாரென்க. (௰௫)

உழுதுண்பாருயிர்வாழ்பவர்மற்றெலாந்
தொழுதுண்பாரெனிற்றுந்தொழில்செய்தபின்
னுழுதுண்பார்கொடைகோடலில்லாயின
பொழுதுண்பாரிவியாரெனப்பூசவே.

உரை. — தாமுழுத பயிர்ப்பயனையுண்பவ ருயிர்வாழ்வா ரொழிய மற்றவரெல்லாரு மவரைத்தொழுதுண்பாரென்று ராகிற் றுந்தொழிலைச்செய்துழைத்தபின்புந் தாங்கொடுக்கு ங்கொடைவாங்குவாரில்லாதபோ தழுதுண்பாரிவராகையி லுண்பவருள்ளத்தன்மைத் தென்றலாமென்க. (௰௬)

அந்தநுண்டொழிலாமெனக்கொள்பவர்
தந்தவொன்றினைத்தாமுநிறைகுன்ற
வந்ததென்றிலர்வாழ்த்திக்கொண்டையமாய்ச்
சிந்தவும்புயற்செங்கையிற்கொள்ளுவார்.

உரை.—இவர்செய்த வந்தமுள்ள நுணங்கியதொழில் தமக்காகுமென்றுகொள்பவர் தந்தவொன்றினைப்போதும் போதாதென்னுமற் றந்தவரைத்தொழுது தானமாகச்செலவழிக்கத் துளிக்குமேகமொத்தகையால்வாங்குவாரென்க. (௰௭)

நாக்கணங்குகனிந்துநவின்றசொல்
நோக்கணங்குகண்ணேட்டநொதுத்தகை
பூக்கணங்கிடுந்தானமென்றுள்ளுவார்
கோக்கணங்கொடுவோங்குகுலத்தினூர்.

உரை.—நாவிற்கழகேதென்னி லினிதாயெவர்க்கு மருள் படவுரைத்தசொல்லே, கண்ணுக்கழகேதென்னிற் கண்டபிற

ர்துயர்க்கிரங்கின கண்ணோட்டமே, மலர்ந்தகைக்கு மிகவு ம
ழகேதென்னிற் குணந்தானே யென்றெண்ணுவார் பலவரச
ரினுவோங்கின குலத்துடையமரியுஞ் சூசையுமென்க. (௩௮)

மங்குன்முட்டியமாடமெவன்செயுங்
கங்குன்முற்றியகையனைக்கொண்டதேல்
சங்குண்முத்தெனப்புன்மனைதாமுறைந்
தெங்குமுற்றியமாண்பிவரேந்தினர்.

உரை. — மேகத்தைமுட்டின மாளிகையாவதென்ன விரு ளைக்கொண்டபாவிகளை யுட்கொண்டதென்று விவரோவென் னிற் சங்கினுள்ளிருக்கின்ற முத்துப்போல வொருசிறுமனை யிலிருந் தெங்கும்விளங்கின மாட்சிமையடைந்தாரென்க. (௩௯)

அங்கமட்கலந்தீட்டுவராரெனுப்
பொங்ககத்தைக்கவர்வலைபோன்றபூண்
செங்கலத்தினந்தீதெனநீத்தருட்
டங்கமுற்றெளிவேடந்தரித்துளார்.

உரை. — அங்கப்பானையைத் திட்டிக்கோலமிடுவாரில்லையே யென்று கொண்டுவிடுமாங்காரத்தாற் பொங்கினமனத்தை யகப்படுத்தும்வலையினோடொத்ததாகிய பூணாபரணமெல்லா மாகாதென் றுதவிர்த் துள்ளேயருளைக்கொள்ள முழுதுமெ ளியவேடத்தைத்தரித்தாரென்க. (௪௰)

பானுடைக்கொடுபொன்மதிப்பாவனும்
மீனுடைக்குடமுந்தனில்வேய்ந்தபின்
கானுடைத்தொடையோகலனேதகா
வானுடைத்தளம்வாழ்த்தரசாட்கரோ.

உரை. — உடையாகச் சூரியனையு மிதியடியாகச் சந்திரனை யு முடியாகமீன்களையுமணிந்தபின்னர் வாசப்பூமாலையாகினு ம் பொன்னணிகளாகினுந்தகாது வானுலகத்தளங்கள் வாழ்த் துமரசியாகிய மரியென்பவட்கேயென்க. (௪௧)

வான்பொழிந்தவின்பெய்திலர் மண்ணிடை
தேன்பொழிந்தவையின்பெனத்தேடுவார்
கான்பொழிந்தகனிக்கடுபாய்ந்தபின்
னூன்பொழிந்தவுடற்கினிதேதென்பார்.

உரை.—வானுலகினின் றவரும் பேரின்ப நுகராதவுராக்கும் பூவுலகிற்பொழிந்த தேன்முதலியவற்றையின்ப மென்றுகருதித்தேடுவாரோ. ஆதித்தகப்பனுண்டவாசக்கனியால் வந்த நஞ்சு பூமியெங்கும்பரந்துபாய்ந்தபின்ன ருதிரம்பொழியப்பட்டவிற்நீசவுடலுக்கின்பமாகாதென்ப ரிவரென்க. (௪௨)

என்றுதம்பசிமாற்றிடவுண்கிலர்
பொன்றுதம்முயிர்போக்கிலதுண்பரால்
பின்றுதம்மிறையோன்பெரிதூட்டிய
தொன்றுதம்முளத்துண்டினிதோங்குவார்.

உரை.—இவ்வண்ணமேசொல்வித் தம்பசியையாற்றவுண்ணாமற் சாகாதவண்ண முண்பாராகிலும் பின்புகடவுள்நிறைந்தூட்டின தேவவுணவொன்றினை மனத்திலருந்தி யினிதாயோங்குவரென்க. (௪௩)

புவியருந்தியபுன்மிடியூங்கெழாச்
செவியருந்தியகேள்வியர்தேவரு
ணவியருந்தலல்லாதருந்தொன்றிலா
நவியருந்தியநல்லுடல்வாடுமோல்.

உரை.—பூமியைவிழுங்கின தாரித்திரமுயர்ந்தெழ நிறைந்தகேள்வியுடைய விவ்விருவர் தேவருளாகியதேவவுணவன்றியருந்திடவொன்றுமின்றி யழகியதமதுடல்வாடுமென்க. (இத்தன்மையோர்முதலாய்ப் போசனமில்லராகையின் மற்றத்தாரித்திர ரிதையறிந்து தேறுவரென்றதினா லவர்கொண்டவின்மையாற் புவியுள்மிடியூங்கெழுமென்றார்.) (௪௪)

சிந்தைதேறியதேறல்செய்வாகையான்
முந்தையாயவெலீயமுனிக்குறு

தந்தைகாகைகொடுத்தனதன்மையா
லெந்தையின்றுணவீதல்செய்வானென்றான்.

உரை.—சிந்தையிற்றேறிய மதுப்பொழி பூங்கொடியேசான்குசை சொல்வான்:முந்தையாகிய வெவீயமாமுனிக்கு மூன்னுளியிற் கடவுளொருகாகைகொண்டு பலநாளுமுணவினைத்தந்ததுபோல் எம்பிதாவே யின்றுநமக்கும்போசனங்கொடுப்பானென்றானென்ப. (சரு)

உறைசெயும்பொழுதொப்பிலபாடிய
நிரைசெயும்பலபுள்நெடுநாளுறி
விரைசெயுங்கனியீந்துவிருந்தெனுக்
கரைசெயுங்கடையற்றினிதுண்பரால்.

உரை.—இதைச்குசைசொல்லும்போதொப்பில்லாமற்பாடின பலபறவை நிரைநிரையாய்வந்து பலநாளும்வாசமுள்ளவினியகனிகளைக்கொடுப்ப வதுகளைவிருந்தாகக் கரையில்லாதவின்பத்தோடுண்பரென்க. (சசு)

ஏமகத்தருளுயகனேவியுஞ்
சேமகத்தருடேறுநல்லோர்பல
யாமகத்தினினைத்திலதின்னமா
கோமகர்க்குவிருந்தெதிர்கொள்வரால்.

உரை.—சொந்தமாயருளைக்கொண்டநாயகன் பின்பேவியதினுல் மனத்தில்நன்றாய்க்காத்ததயையினுற்றேறியசிலநல்லோர் பலசாமத்தில்வந்து நினைத்திராம விவ்விராசகுமாரருக்கெதிராகவிருந்தினைக்கொண்டு விடுவரென்க. (சஎ)

கொண்டயாவையுங்கொண்டிறைவாழ்த்திமுற்
பண்டநாள்சிறைபட்டுறைதானியற்
கண்டமேலவ்னுங்குழவன்கொடு
மண்டுணுங்காணர்மாண்பிதெனுவுண்டார்.

உரை.—அந்நல்லோர்கொண்டுவந்ததெல்லாத்தையுமிவர்கைக்கொண்டுகர்த்தாவைவாழ்த்தி முற்காலத்திற்சிறைச்சாலையி

லிடைக்கப்பட்ட தானியலாமுனிக் கொருவானவ னுழவனாகி யவொருவனைக்கொண் டெனக்கசனத்தைத்தந்த முறையிதென் று வாழ்த்தியுண்டானென்க. (தானியலாமுனி மெய்யானகத் தாவை வணங்குகின்றானென்று பகைத்த தீயோர்வினையாற் சிங்கங்கள் நின்றசிறைச்சாலையி லடைக்கப்பட்டா னப்போ தாண்டவனேவலினாற் சிங்கங்களவனைத் தீண்டாதாயினும்ப சியாற்சாவானென் றொருவானவ னுருவாய்த்தோன்றித் தூர தேயத்தி லுழப்பவர்க்கசனங்கொண்டுபோகின்றவுழவனொரு வனைத் தலைமயிரைப்பற்றித் தூக்கி யவன்றந்த வசனத்தைத் தா னியலாமுனிக்குக் கொடுக்க நெடுநெறிகொண்டுபோ யம் முனியுந் தன்பசிப்பரிவுதீர்ந்தபின்ன ரவ்வுழவனைமுன்னின் றவிடத்து நோகாமற்கொண்டுவிட்டானென்றது வேதாகம மாமென்றுணர்க.) (௪௮)

பின்னையொன்றிலபிற்பகல்பேரொழி
லன்னையின் றிருவானனம்வாடல்காண்
டன்னையுன்னிலமாதவனேந்துமீன்
பின்னைவென்றகண்விண்டுறைவென்றதே.

உரை.—பின்னையு மறுநாளருந்தவொன்றில்லாமற் பேர ழகுடைப் தாய்மரியென்பவள் திருமுகம்வாடினதுகண்டு த ன்னை மறந்தமாதவன் சூசை நொந்துவிடுமொளியால் மீனெ ளிவினைவென்ற தன்னிருகண்ணே யழுகையால் மேகத்துளி களைவென்றனவென்ப. (௪௯)

மன்னநம்மணம்வாய்ந்துமுடிப்பமுற்
பொன்னநின்கொடிபூத்தத்தந்தபின்
னுன்னருஞ்சுவையொன்றில தீதவு
மன்னவண்டையையோர்க்கரிதோவென்றாள்.

உரை.—நிலைபெறச் சிறந்தவெம்மணமுடியும்படிக்கு மு ன்னேகாரணமொன்றின்றி யுணங்கின வுன்கோல் கொடியாக கப்பூக்கத்தந்தபின்ன ரின்றுமொன்றில்லாம லரியசுவைகளை யெமக்குத்தருவ தந்த வல்லமையுடையோனுக் கருமையோ வென்றாள் மரியென்பவளென்க. (௫௰)

என்னலோடொருகாரணமின்றியுங்
கன்னலோமதுவோகனிதன்மையோ
மின்னலோடியபொற்கலமீதொரு
பன்னலோட்டையாப்பயுன்கண்டுளார்.

உரை. —அவளிவைசொல்லுங்கால் காரணமொன்றின்றிக் கரும்போ மதுவோ தீங்கனியோவென்று தேறியுரைப்பதற் கரிதாய் மின்களோடினபொற்பாத்திரத்தின்மீது சொல்லப்படாதவொருபயனைக்கண்டானென்க. (௫௧)

இற்றையோர்ந்தவில்லோருவந்தோங்கவே
மற்றையோர்பகல்மாந்திடவொன்றிலர்
கற்றையோர்பிழம்புற்றுருக்காட்டிவா
னுற்றையோருணவுய்த்துவழங்கினார்.

உரை. — இதையோர்ந்த மற்றத்தரித்திருந் தேறியோங் கவேபின்னையும்வேறொருநா ளொருந்த வொன்றுமில்லாராகை யிற் கதிர்வெள்ளம்பொருந்தின வுருக்காட்டி யழகியவானு டையோர்வந் தசனங்கொண்டிட்டுவழங்கினானென்ப. (௫௨)

எண்ணந்தீர்ந்தவெழிற்கொடுவெண்ணிலா
வண்ணந்தீர்ந்தொளிர்மாறுகத்தும்பர்சூழ்
தண்ணந்தீம்புனலாடலர்த்தண்டொடை
சுண்ணந்தோய்ந்துரந் தூங்குபுதோன்றினார்.

உரை. — மதிக்கப்படாத வடிவோடுவண்ணந்தீர்ந்து விளங்கின வத்திரங்களைக்கொண்ட வெண்ணப்படாதவானவர்சூழ வெங்குங் குளிர்ந்தநீர்மலராற்றொடுத்தமாலைகள் சுண்ணந்தோய்ந்தமார்பிற்றூங்கித்தோன்றினானென்க. (௫௩)

துகிலிற்றேயுரத்தோயணிதோன்றவே
யகிலிற்றேய்த்துகில்வாடையோடாடவின்
முகிலிற்றேய்வரைமொய்ப்புயமோங்கநான்
புகவிற்றேய்நயத்தோர்பொருவொத்ததோ.

உரை. — துகிலான்மூடினமார்பி லணிந்தவாபரணங்கள் தோன்றவு மகிற்புகையிற்றேய்ந்த நற்பட்டாடை மெல்லிய்

தாதவின் வீசும்வாடையினாலாடவு மேகத்தினுட்புதைத்த மூலையோடு நிகர்பொராதென்றுபொருதும்புயங்களோங்கவுமவ்விருவர்கொண்டவின்பத்திற்கு நான்சொன்னது மோருவமையும்பொருந்துமோவென்ப. (௫௪)

புரிந்ததாமரைபொற்றவிசிட்டுமின்
னெரிந்தமீனொடுதேனிழிபூந்துகள்
விரிந்தவாணிவிரித்துயர்வாசனை
சொரிந்தநீர்ப்புனல்தூற்றிவழங்கினார்.

உரை.— தாமரைமலரைக்கொண்டு செய்தவழகியவணையைப்பரப்பி விளங்கினமீன்களுந் தேன்பொருந்தின நன்மலருமியையக்கூட்டிச் செய்தவகன்றமேற்கட்டியை மேலே விரித்து வாசனைபொழிந்தபன்னீரையுந்தூற்றி வழங்கினாரென்ப. (௫௫)

கான்சொரிந்தகனிப்படப்பாலொடு
தேன்சொரிந்தசுவைப்படச்சேனுளோர்
வான்சொரிந்தமதுக்கொடுபல்லுணா
மீன்சொரிந்தவெயிற்கலத்திட்டினார்.

உரை.— வாசத்தீங்கனியு மினியபாலுந் தேன்சுவையு மிவையெல்லாநிகராதுபடவே வானவர் வான்மீதுவழங்கின மதுவின்வகையோடு பலதேவுணவுகளைக் கதிர்வீசும்பாத்திரங்களினிரம்பக்கூட்டிவைத்தாரென்ப. (௫௬)

கண்கொடுண்டகளிப்பினுமேழிசைப்
பண்கொடுண்டசெவிப்பயன்பாடனு
வெண்கொடுண்டளவெல்லையில்தேவபல்
லுண்கொடுண்டநயத்திணையுள்ளதோ.

உரை.— வந்தவானவர்காட்டின வழகியகோலவடிவுகளை நுகர்ந்த கண்ணினாலாயின வின்பத்தின்மேலு மேழிசையேழும்வீணைமுதலிய சங்கீதங்களை நுகர்ந்த செவியினாலாயின வின்பத்தின்மேலுமெண்ணுமளவுமில்லாமல் நுகர்ந்ததேவபல்லுணவுகளினாலாயினபேரின்பத்திற்குநிகரில்லையென்க. (௫௭)

## வேறு.

எல்லுஞ்செல்லாவொள்ளொளி யேந்தோ ரெழிலுண்
டாய்ச்
செல்லுஞ்செல்லாவிண்ணுறைகின்றோர் சிறிதாங்கோ
ரில்லுஞ்செல்லாநின்றனதன்மைத் திவர்தம்பாற்
சொல்லுஞ்செல்லாவுண்மையமுண்டே தொழுதுண்டார்.

உரை.— சூரியனின்மேலும்விளங்கின திருவடிவுதோன்றி மேகங்கள்செல்லாத வானினின்றவானோ ரங்கே யொருசிறுமனையிற்சென்றுநின்றதினா லிவ்விருவர் சொல்லிலடங்காத பேரின்பத்தை நுகர்ந்து கடவுளைவாழ்த்தியிட்டவசனத்தைக் கொண்டாரென்ப. (௫௮)

அள்ளுந்தன்மைத்தார்ந்தொளிவானோ ரரிதென்பாக்
கொள்ளுந்தன்மைத்தின்னிசைபாடக் குளிர்தன்கோல்
விள்ளுந்தன்மைத்தூறியதேன்போல் வினையெல்லா
முள்ளுந்தன்மைத்தொண்கொடிகொண்டா னுரைகொண்
டான்.

உரை.— அள்ளிக்கொள்வதற்களவாக நிறைந்த வொளிவினைப்பரப்பினவானவர் நான்பாவினாலடைவதற்கரிய முறையோடுபாடவே பூங்கொடியுயர்த்தகுழை குளிர்ந்த தன்கொடிமலர்ந்துபொழிந்த தேனிகர்ந்த வுரைகளைக்கொண்டுசெல்வானென்ப. (௫௯)

பின்றாவல்லோய்பேணியவன்போய் பிரிவின்றி
யொன்றாய்நின்றோயீங்குயிரெல்லா முணவீந்தோய்
குன்றாவன்பானம்பினயார்யார் குறையுண்டோ
மென்றாருண்டோவென்னுயிர்மாறா தினிதாள்வோய்.

உரை.— தொடுத்ததெல்லாமுடிப்பதற்குரிதாகிப் பின்வாங்காத வல்லமையுடையோ யாவரையும்பேணுகின்ற வன்பினையுடையோய் தன்னிடத்தில்வேறுபாடொன்றின்றியொரு பொருளாய்நின்றோயுயிரெல்லாம்பற்றினபலவுணவனைத்தை

யுந்தந்தோய் குறையாதவன்பிறனோவென்னை நம்பினவருள் யாராகினுங்குறையாகவுண்டோவென்றவருண்டோ மாறுமலென்னுயிரையினிதாயாள்பவனேயென்க. (௬௰)

வல்லாருண்டோவுன்னையலாதுன் வலநம்பி
யில்லாருண்டோவுண்டிலருண்டோர் விவையிங்கண்
கல்லாருண்டோகண்டவையெண்ணிக் காவரதேற் [ய்.
சொல்லாருண்டோவுன்னருள்வாழ்த்துந் தொடைமிக்கோ

உரை. — உன்னையல்லாமல் வல்லவரெவரோ வுன்வல்லமைநம்பினவரு ளில்லாதவரு முண்ணாதவருமுண்டோ விவையெல்லாத்தையுமிங்கேயறியாதவொருவனுமுண்டோ கண்டநியாயத்தை மனதிலெண்ணியொளியாதிருந்தா விதைச்சொல்லி யுன்னைப்புகழாதவருமுண்டோ வடைந்ததயைவாழ்த்தினபாவினு முயர்ந்தோயென்க. (௬௧)

நீர்தோய்பொன்னூர்தன்றலைநீட்ட நிசிநீத்தோ
னேர்தோய்மின்னூர்பொற்சிறையம்புள் ளினமெல்லாஞ்
சீர்தோய்தன்னாநின்புகழ்பாடச் செயிரின்றித்
தார்தோய்தேனூண்பலதந்தே தயைசெய்வோய்.

உரை. — இரவைநீக்குஞ் சூரியன் கடனீரிற்றோய்ந்த தன்பொற்றலைநீட்டியுதிக்குங்கா லழகினோடெழுதப்பட்டுமின்னும் பொற்சிறகுவிரித்தபறவைகளெல்லா மினியகுரலோடேதந்நாக்கவிழ்த் துன்றிருநாமத்துதிகளைப்பாடவே நீகுறையின்றிப்பூமலர்பொழியுந் தேன்முதற் பலவுணவுகளைப் பறவைக்கெல்லாந்தந்து தயையைச்செய்வாயேயென்ப. (௬௨)

காய்கான்செல்லென்முந்தையருண்ணீர்க் கனியில்லா
நோய்கான்றீட்டுந்தாகமவித்தே நுகர்வெய்தத்
தீய்கால்கல்லேதீம்புனல்காலத் திரிவார்தம்
வாய்கானெல்லாம்பின்செலவக்கல் மலிதுண்டார்.

உரை. — எசித்துநாட்டைவிட்டுக் காய்ந்தகானகத்தின்வழிவரும்போ தென்பிதாக்களாகிய யூதருண்ணுந்தண்ணீரின்

நீ வருத்தஞ்செய்த தாகமிவித்தருந்தற்கு நெருப்பைக்கொப்
புளிக்குங்கல்லுதானேயினியதண்ணீரையுமிழ்ந்து தினந்தோ
றும்பயணமாய்நடந்த பூதரோடுகூடக் கானகத்திலெங்கு ம
க்கல்லு பின்சென்றுபோகையி லவர்திறைய்வுண்டாரென்ப.
(௬௩)

அன்னாரந்நாளவ்வனவாய்வர் தமுதின்றிப்
பன்னாடன்னாதுள்ளியவின்பம் பலவீந்தோ
ருன்னாதுண்மாதேவவிதந்தாங் கொருகோடி
யின்னாதுன்னேயொன்றிலவாழ்ந்தேயினிதுண்டார்.

உரை.—அந்தயூதர்தானேயந்தக்காலத்தி லந்தவனத்துவழி
வரும்போ தருந்தவுணவொன்றில்லராயினு ரப்பொழுதவனே
வன்றுனினைத்த வின்பம்பொருந்தின சிறியதோர் தேவவுண
வினைப் பலநாளுமவர்க்குத்தந்தே யங்கேயொருகோடிமனி
தரும் வருத்தஞ்செய்யு மொருநோயுமின்றி வாழ்ந்தினிதாயு
ண்டாரென்ப. (௬௪)

மீண்டோர்முனியேகான்வழியுண்ணா மயலுறரு
ளுண்டோரமரன்றந்தவோர்பிண்ட மயிற்கின்று
னீண்டோர்வழியேநாற்பதுநாள்போய் நிகரற்றான்
றீண்டோர்பசிதோன்றாதுயர்குன்றின் மிசைசென்றான்.

உரை.— பின்னைமாட்சிமைபொருந்தின வெலீயசாமு
னிபெர்சபெய்கானகத்திற்போகிறபோ துணவில்லாமல்ம
ங்கிவிழுந்தா னப்பொழு தொருவானவன்கொண்டுவந்த சா
ம்பலிற்சுட்டவடையைத்தின்று ணுதவி னெடும்வழியே நாற்
பதுநாளுநடந்து நிகரின்றித் திரும்பிப் பசியாமலுயர்ந்த
வொரெபென்னு மலையினுச்சியை யேறிச்சென்றானென்ப.
(௬௫)

குறித்துண்ணைப்புல்லொன்றிலகாய்தல் கருதிக்கார்
மறித்துண்ணாதெண்ணாவுயிர்மாழ்ந்தே மருளெல்லாஞ்
செறித்துண்ணன்றார்யோகியவர்க்கே திளைபன்னாள்
பறித்துண்காகந்தானுணவீகப் பரிவீந்தாய்.

உரை.—பசுமான்முதலியவை கறித்துண்ணும் பசும்
புல்லொன்றில்லாமல் நிலமெல்லாங் காயவேணுமென்று நீ

யே மேகங்கள் பெய்யாததற்கு மதித்ததிரு ஷணவின்றியெல்லைப்படாத பலவகையுயிர்கள் மாண்டிறக்க மயக்கந்தீர்ந்ததன்மையிற்சிறந்தயோகியாகியவந்தவெலீயசாமுனிக்குநெடுநாளுமொருகாக்கை தான்பறித் துண்ணுங் குணத்தைவிட்டு நாடோறுமுணவுகொண்டுகொடுக்க விரக்கந்தந்தாயேயென்ப. (௬௬)

நின்னாலாமோர்நன்றதுவெள்ள நெடிதென்னா
லென்னாலாமோவென் னுயிர்வேந்தா வியல்தங்கை
தன்னாலாமோர்புன்றொழில்சார்பென் றவர்வாழா
துன்னாலாமோர் நற்றுணையோர்ந்தா ருயிர்வாழ்வார்.

உரை.— என்னாண்டவனே! இதெல்லா நீயருள்புரிந்துசெய்ததல்லாதே யுன்னாலாயினதன்மைகளின் வெள்ளத்தையாராய்ந்துவிரிவாகவுரைப்ப தென்னாலாகுங்கருமமோ? என்னுயிரையாளுமிறைவனே! தங்கையாலின்ற புன்றொழிலே வாழ்வதற்குரிய சார்பென்றெண்ணுநீசரோ வாழாரன்றி யுன்னைத்துணையாகநம்பினவ மனிதர்யுயிர்வாழ்பவரென்க. (௬௭)

குற்றந்தேடேன்கோல்குடையென் றுங் குறைதேடேன்
சுற்றந்தேடேன்சூழ்ந்தெனவுள்ளஞ் சுடுவம்பொன்
பெற்றந்தேடேனம்பியவிம்மை பெரிதுய்க்கு
மற்றந்தேடேன்றேடுவனீசெய் யருளென்றான்.

உரை.— குற்றத்தால்வருநன்மையைத்தேடேன், ஆள்வார் கொண்டகோலுங் குடையு நீர்க்குமிழியோடொத்ததென்று தேடேன், சுற்றத்தாருதவியையுநம்பித்தேடேன், அணியாகச் சூழ்ந்தாற்போல வுளத்தைச்சுடும் பொன்முதலாயின செல்வங்களைத்தேடேன், மனிதர்நம்பின மற்றப்பிரபஞ்சவாழ்வுகள் சார்வுநிலையைக்கொண்டுவிடுமென்று தேடேனே, நீயிரங்கிக்காட்டினதையமாத்திரமே தேடுவேனென்றான் குசைமாமுனியென்க. (௬௮)

என்றானன்றுதோங்கியகோலா னிவைகேட்டாங்
கென்றுநின்றார்வான்சபையுள்ளா வுணர்வுள்ளிக்

குன்றுமென்றூறியதீந்தேன் கொர்டுமைம்பூப்
பொன்றுவன்பால்விண்மழைபோலப் பொழிகின்றார்.

உரை.—இவையெல்லாம் பூங்கொடியைய் யுயர்த்தகுசைசயுணாப்பக்கேட்டுச் சூழங்கேநிறைந்திருந்த வானவரெண்ணாதவையெண்ணியோங்கி மாறாத வினியதேன்பொருந்தின பூமல்லா நீங்காத வாசையோடுமழையின்றன்மையாற் பொழிந்தாரென்க. (௬௯)

மாணக்காலப்புன்மனைவானோர் மனையொப்பப்
பேணக்காலத்தொள்ளொளிபெற்ற பெரிதென்னாத்
காணக்காலத்தாக்கைசிவந்தே கடலங்கீழ்
நாணக்காலத்தாழ்முழுகிற்றே நனிவெய்யோன்.

உரை.— அந்தச்சிறுமனை பெருமைதகுங்காலமாகியதை வானவர் தம் வீடொப்பாகப் பேணினபோ தங்கே விரிவாகப்படர்ந்த வொளியின்றன்மை தன்கதிரினுமிகுதியென்று சூரியன்கண்டபோது நாணினதினாற் றன்னுடம்பெல்லாஞ் சிவந்துபோய்க்கடலின்கீழ்தாழ்ந்துமுழுகியொளித்ததென்ப. (௭௰)

## வேறு.

மாவிருஞாலமூடு மாசிராவறவில்வீசிப்
பாயிருசுடரோடொத்தார் பகலிராவிலவானோர்க்கொன்
றாயிருவருமுள்ளோங்கி யமரர்சூழ்பணிந்துநிற்பக்
காயிருவிசும்பின்மாட்சி காட்டியமனையதன்றே.

உரை.— சூரியனத்தமித்துப்பூவுலகத்தைமூடின விராவினிருளற்றொழியக் கதிரைப்பரப்பினவிருசுடர்போல் விவ்விருவர்தோன்றிப் பகலுமிராவுமின்றி வானுலகத்தோர்தன்மையினாகியுள்ளோங்கச் சூழவானோர்பணிந்துநிற்ப வான்வீட்டின்மாட்சிமைகாட்டினதவ்வீடென்க. (௭௧)

சூன்முகத்தெரிந்தமேகஞ் சுடர்ந்திருளறச்சூழ்மின்னும்
போன்முகத்திறைவன்றன்னைப் புதல்வனாய்க்கருப்பம்பூண்[டா

டான்முகத்திருவில்வீசுந் தகுதியாறெளித்தவோதி [வாள்.
நான்முகத்துமிழ்ந்துதீந்தே னுகர்ந்தவாய்மலர்ந்துசொல்

உரை.— சூலைக்கொண்டமேகம் விளங்கி யிருளறமின்னு மாப்போலே கடவுளை மகனுக்கருப்பத்தையணிந்த மரியெ ன்பவள்தானுந் தன்முகத்திலே திருவில்வீசினதன்மையா லொத்தகதெளிவுளவுணர்வுகளை நாவின்படியேயுமிழ்ந்து தீந் தேனினு மினியவாயைமலர்ந்துசொல்வாளென்க. (எஉ)

காரொழுங்ககனத் தூர்ந்த கதிர்பலவுதித்தல்தந்தே
யேரொழுமணியும்பூவு மினியதீங்கனியுமற்றச்
சீரொழும்பொறித்தமாமை திளைத்தனவெவ்வையுந்தந்த
பேரொழுங்கருணையானே பின்னையுந்தன்னைத்தந்தான்.

உரை.— மேகங்கள்திரியுந்திசையின்மேலெழுந்த வானத் திலூர்ந்த சந்திரசூரியநட்சத்திரங்க ளுதித்துவிளங்கத்தந்து வடிவழகுள்ள மணிகளையு மலர்களையு மினியகனிகளையு மெ ழுதப்பட்டவழகினாற் சிறந்தமற்றதெல்லாத்தையு நமக்குத்த ந்ததின்பின் னிக்காலத்திற்பெருங்கருணையுடையநாத னவத ரித்துத்தன்னையுந்தந்தானென்ப. (எ௩)

நூனெறிவழங்காவண்ண நுதவியகருணைச்சால்பிற்
றூனெறிநரதேவாகித் தோன்றியபின்னொந்தை
பானெறிபெருகுமின்பப் பரவைநாமூழ்கல்தந்து
வானெறிவழங்குந்தன்மை மண்ணிடைவழங்கான்கொல்லோ,

உரை.— கற்றோர்நினையாதமுறைமையை நினைத்தகருணையின் மிகுதியாலெங்கத்தாவே யவதரித்தநரதேவனாய் வந்தபின்பு பாவினாற்பெருகினவின்பக்கடலி னுமினிதாய்மூழ்க வானத் தில்வழங்கினதன்மை பூவுலகிலும் வழங்கச்செய்யானோவெ ன்க. (எ௪)

கோலநற்படலைபைம்பூக் கூருகிர்விசித்தமாலை
சாலநற்கதிர்ப்பொன்பற்றாத் தடமணிப்படலைமற்ற
நீலநற்கடல்சூழ்பாரி னிகரறவளியவார்த்தி
ஞாலநற்றகவிலோங்க நாயகன்மனிதனானான்.

உரை.—வடிவுளகோர்வையாக விறுகக்கட்டின பூமாலை
யும் விளங்கினபொன்னாற்கட்டின பெருமணிவடமுங் கருங்
கடல்சூழ்ந்த பூவுலகிலுள்ளமற்றக்கட்டெல்லாமுநிகராம வி
ருதுவத்தைவவியாகவொன்றாய்க்கட்டி மண்ணுலகுபெருமை
யடைந்தோங்கக் கத்தாதானேமனிதனானானென்க. (௭௫)

பூட்டியபுணர்ச்சிப்பாலாற்புணரிருதுவங்கள்வேறாய்க்
கூட்டியவொருவனாய குணத்தவன்மனுவுமெழில்பா
னீட்டியநலங்கள்குன்றா விறைவனுமென்பானிவ்வாய்
சூட்டியகருணைநன்னூற் றுறைவலோரடையும்பாலோ.

உரை. — தெய்வத்துவமு மனுத்துவமு மென்றிரண்
டையு மொன்றாய்க்கட்டினபுணர்ச்சிமுறையினா லவ்விருதுவ
ங்களிரண்டாய்நிற்பக் கூடினவிருபேராகாம லொருவனே
யாகியதினா லவன்றானே மனிதனென்றுந் தேவநற்குணங்க
ள்குறையாத தேவனென்றுஞ்சொல்லப்படுவா னித்தன்மை
யா லிரண்டவன்காட்டினகிருபையை நிறைந்த கல்வியினல்
லோருமடைந்து விரித்துக்காட்டத்தகவரோவென்ப. (௭௬)

நஞ்சமிர்திரண்டுஞ்சேர்த்து நஞ்சுநல்லமிர்தமாமோ
விஞ்சவிர்பொன்னிற்சேருள் விசித்திதுபசும்பொன்னாமோ
நெஞ்சவிர்கருணைபூண்ட நிமலன்றன்குணமுங்குன்றா
வெஞ்சழிமனுவின்றன்மை யிறைமையோடுயர்த்தினானே.

உரை. — நஞ்சுமமிர்தமுமென் றிரண்டையுங்கலந்தா ல
மிர்தத்தின்குணங்குன்றுமொழிய நஞ்சுதானமிர்தமாகாதே.
விளங்கினபொன்னோடு செம்பினைக்கலந்தாற் பொன்மாற்று
குறையுமொழியச் செம்புதங்கமாகாதே, ஒளியணியாகக்கரு
ணையைப்பூண்ட கடவுளோவென்றாற் றெய்வத்துவமு மனு
த்துவமுமென் றிரண்டையுங் கூட்டிச் சேர்த்ததன்மையினா
ற் றேவத்துவங்குறைபடாமல் நீசமனுத்துவத்தைத் தூக்கித்
தெய்வத்தொத்ததாகவுயர்த்தினானென்க. (௭௭)

கீழ்வரோசேர்ந்தமேலோர் கீழ்மையேமாறித்தாழ்ந்
தாழ்வரோயன்றித்தாழ்ந்தார் தகவுறவியாரோ

வாழ்வரோயிறைவற்கொத்த வளமையுமுணர்வும்பண்புஞ்
சூழ்வரோபரமனற்ற டொழுத்தருகுவப்பிற்சேர்ந்தார்.

உரை.— இவ்வுலகில் நீசனைச்சேர்ந்தபெரியோர் தம்பெருமைகெட்டுத். தாமுநீசராவாரொழிய வந்நீசனைப் பெருமைபெறச்செய்யவல்லவருண்டோ? கத்தரவினற்பாதத்தை வணங்கி யவனைச்சேர்ந்தமனிதரோவென்றாற் றங்குறைகள் தீர்ந் துளத்தில்வாழ்ந்து கத்தாவுக்கொத்தபெருமையுமறிவுங் குணமுமுதலியநன்மைகளையடைந் தணியாகச்சூழ்ந்து கொள்வாரென்ப. (௭௮)

பருவளர்கதிர்கள்கோலாற் பொறித்ததோர்படத்தின்சா
மருவளர்மலரும்வாமம் வளரினமணியும்பொன்னு [யல்
முருவளர்பருதிதோற்றி யுடைத்தொழிலெஞ்சநாதன்
திருவளர்தயையின்சார்பு சீரெலாம்பயக்குமன்றே.

உரை.—பரப்பினகதிர்களின்கோலா லொருபடத்தையெழுதினாற்போல வாசமலரையு மொளிமணிகளையுஞ் செம்பொன்னையுந்தோற்றுவித்து வடிவுளசூரியன்செய்யுந்தொழிலைமறைக்க நன்மையோடுவளருங்கத்தாதயையின்சார்பு நமக்குச்செல்வங்களையெல்லாத்தையும் பயக்குமென்ப. (௭௯)

மெய்வினையிடமைந்தின்றி விளங்கியகடவுளாகிப்
பொய்வினைபொறிகளட்டுப் புரைவினைநசையுமட்டுத்
துய்வினையுளத்திற்பொங்குந் துடர்பிறகாகவூக்கி
ஐயவினையுணர்வோரல்லா லனந்தனற்பாதஞ்சேரார்.

உரை.—சத்தபரிசரூபரசகந்தமென் றைந்தினையும்பொருந்தின வுடலில்லாது கடவுளரூபியாதலாற் பொய்மையைக்காட்டின செவிமுதற்பஞ்சேந்திரியங்களையடக்கிக்கொன்றுபாவத்தைப்பயக்குமாசையும் வெறுத்தொழித்தமையா லழுக்கறத் தூயமனதிலே பொங்கின தேவநட்பினை யிறகாகக்கொண்டு தத்தியின்மேலுயர்ந்து தெளிந்தஞானமுடையோரொழியக் கடவுள்பாதத்தை யொருவருஞ்சேராரென்க. (௮௰)

செருவழிபொறிகளைந்துஞ் செகுத்துத்தன் னிலையினு
லருவழியென்றுதானே யங்கண்வானிறங்கிப்பாரிற் [க்க
கருவழிவந்தநாதன் கலைமுதிர்சுருதிகாட்ட
வுருவழிதோன்றிமாக்க ளுறவுறமகனானானே.

உரை.—போராடி யைம்பொறிகளையும்வென்றடக்கித் தன்னிலையின்மேலுயர்ந்து கடவுள்பாதத்தை யடைதற்கரியவழியிதென்று கடவுள்தானே யழகியவானுலகத்தினின்றிறங்கிப் பூவுலகிற்கருப்பத்தின்வழியாகவவதரித்துக் கல்விமுதிர்ந்த வேதத்தை மனிதர்க்குக்காட்ட வரூபியானவ னுருவோடு தோன்றி மனிதருறவினைத்தேடித் தானே மனிதனானானென்ப. (௮௧)

கோணெறிகடந்தஞானங் கூறியெம்முயிர்கள்வாழ
வாணெறிகடந்தபுண்போல் வருந்தனிற்கினிதோவன்பாற்
பாணெறிகடந்தோயெம்மாற் பயனுனக்கீங்கொன்றுண்
டோ
சேணெறிகடந்துநம்மைத் தேடிவந்துளைவாயென்றாள்.

உரை.—மீன்களினுந்தெளிந்தஞானங்களையுணர்த்தி யென்னாண்டவனே யெங்களுயிர்கள்வாழ நீ வாளைக்கொண்டுகிழித்தபுண்போல மனதில்வருந்துவதுனக்கினிதோ? பாவலரடையப்படாதவன்பினையுடையோனே யெங்களாலுனக்குப் பயனொன்றுண்டாமோ வாகுமென்றாற்போல வானினின்றிறங்கி யெங்களையிங்கேதேடிவந்து வருந்துவாயேயென்றாள் மரியென்பவளென்க. (௮௨)

தேனுருக்கோதையொத்தாள் செப்பியகனிந்ததீஞ்சொ
கானுருக்கொடியோன்சாலக் களிப்புறச்செவியின்மாந்தி [ற்
யூனுருக்கொண்டநாத னுணர்ந்திறைஞ்சிருவர்வாழ்த்தி
மீனுருக்கொடுவில்வீச வேதநற்றிலதமொத்தார்.

உரை.—தேனிறைத்தமாலையினோடொத்தகன்னி சொன்னவினியவுரைகளை வாசம்பொருந்தினகொடியோன்குன்ச்மிகவுங்களிகூரச் செவியினாலருந்தி யுடலையெடுத்தநாதனை யி

ருவர்வணங்கிவாழ்த்தி யிருசுடர்போலவிளங்கி வேதமணிந்த
விருதிலதமேபோலநின்றாரென்க. (௮௩)

## வேறு.

இன்னருநிலைமையோ டரவெலாமினி
துன்னருமுவகையோ டுணர்ந்தவோதியாற்
றுன்னருமருள்புரி சுதனைவாழ்த்தவிற்
பன்னருமகிழ்வினை பயத்ததாமரோ.

உரை.—இவ்வரியதன்மையா விராவெல்லாமினிதாயுணர்
ந்தஞானங்களினு லரியதயையைச்செப்புந் திருமகனைவாழ்த்
தி யிருவர்சொல்லிலடங்காத மகிழ்ச்சியையடைந்தாரென்க.
(௮௪)

உண்ணிலாவுரைவழி யுகுத்தபான்மையாற்
றெண்ணிலாவடியினுள் செப்புஞ்சொல்விழைந்
தெண்ணிலாவரத்தவ னெண்ணிலாமூறை
யுண்ணியாயவளுறை யரங்குளேகுவான்.

உரை.—மனதிற்கொண்டவொளிவினை யுரைபின்வழியாக
வுமிழ்ந்தாற்போலச் சந்திரனையணிந்த பாதத்தையுடையம
ரியென்பவள் சொல்லுகின்றமொழிகளைக்கேட்பதற் காசை
யினு லெண்ணிறந்தவரங்களையுடைய மாதவன்சூசை யவளி
ருக்கின்றவறையினுள் ளெண்ணப்படாதவிசைகளுமண்டிப்
போவானென்ப. (௮௫)

விரைசெயுங்கொடியினு னுழைபல்வேலைதே
னுரைசெயுமடந்தைவா னுயர்நின்றுள்ளொளி
வரைசெயுமளவற வழங்கல்காண்டலுங்
கரைசெயுங்கடலினுங் களிப்புற்றோங்குவான்.

உரை.—வாசமலர்க்கொடியோ னந்தவறையினுள் நுழை
ந்த பிற்பலதருணத்திற் றேனிகர வினியசொல்லுடைய கன்
னி யிந்நிலத்தைவிட் டுயர்வானத்தினின் று மட்டில்லாவொ
ளிவ்விடுவதுகண்டதினாற் கரைசூழ்ந்தகடல்நிகராது கரையி
ல்லாதகளிகூர்ந்தோங்குவானென்ப. (௮௬)

தேனினார்மடியெனத் திங்கடெண்சுடர்
பானிலாசகோரமே பருகினாலெனா
வானிலாவெழுந்ததாண் மடந்தைகால்கதிர்
மீனிலாவிருவிழி மேய்ந்துடேறுவான்.

உரை. — பசுவினிறைந்தமடிபோலுஞ் சந்திரன்விடுத்த தெண்கதிரின்பாலைச் சக்கரவாகப்புள் ளருந்தினாற்போலச் சந்திரன்மேலெழுந்தருளின பாதத்தையுடைய மடந்தைவிடுங்கதிர்களை மீனோடொத்தவிருவிழிகளாலருந்தி யுட்டேறி னான்குசையென்ப. (௮௭)

பேருயிர்த்துணையுடல் பெயர்ந்துவான்மிசை
யேருயிர்த்திரவிபோ லெறிந்தவிற்றிரள்
நேருயிர்த்தனவிமுன் பளிங்குநேர்முகத்
தாருயிர்த்தோழனு மலங்கித்தோன்றினான்.

உரை.— அக்கன்னிகொண்ட பேருயிர்க்குத் துணையாகிய வுடலு நிலத்தைவிட்டுவானினின்று வடிவுள்சூரியனைப்போல வெறிந்தகதிர்த்திரள் நேராகத்தன்மேல்விழுந்ததினா லிரவியின்முன்னின்ற பளிங்குபோல வவனுயிர்த்தோழனாகிய குசையும் விளங்கிநின்றான். (௮௮)

சடங்கொடுவிண்ணுறை தளங்கடாழ்தலுங்
கடங்கொடுபல்லியங் கறங்கிப்பாடலு
மிடங்கொடுசூழ்தலுங் கண்டுளின்பலை
புடங்கொடுகடல்பெருக் கெடுத்துட்புக்குளான்.

உரை. — உடலைக்கொண்டுதோன்றின வானுலகின்றளங்கள்வந்து தாழவுங் கடமுதற்பலவாச்சியங்கள் முழங்கிப்பாடவும் விரிவாகச்சூழ்ந்துநிற்பவுங்கண்ட குசை யின்பத்தையலை யாதப்புறங்கொண்டு பெருகினகடலினுட்புகுந்து முழுகினானென்க. (௮௯)

கண்குடித்தனவொளி கிளர்த்தகாட்சியா
னெண்குடித்துவந்தகண் ணிமைப்பிலாமையும்

வண்கொடித்துணரலர் வாடிலாமையும்
விண்குடித்தகைமையால் விளங்கித்தோன்றினான்.

உரை.—கண்வழியாற் குடித்தவொளியிற் றெளிந்தகாட்சி யையுடையகுசை மதித்தற்கரியமுறையோடுகளிகூர்ந்து கண்ணிமையாததினாலுந் தன்கொடிவிருது மலர்ந்தமலர் வாடாததினாலும் வானத்திற்குடியாய்நின்றவனைப்போல விளங்கித்தோன்றினானென்க. (௧௰)

இன்னிழவிவரிய விழைபொற்பூணினு
டன்னிழலொடுங்கநான் றக்குமணத்திடை
மன்னிழலெழுங்கொடி வருத்ததாமென்றுன்
மின்னிழவுடன்புனல் விளக்குங்கண்ணினான்.

உரை.— இனியவிளங்குதிரைப்பரப்பின பொன்னணிச் சாயலாய்நிற்கு மிவள்செய்யுநிழவிலே நாணொடுங்குதற்கே மணஞ்செய்தபோதில் மாறுதநிழல்செய்யுமிப்பூங்கொடியை யாண்டவன் றத்தானல்லோவென்று கொண்டவின்பத்தினு லொளியையுங்கண்ணீரையுங் கண்வழியாற்பொழித்தான் குசையென்க. (௧௧)

உன்னியவ்வகையோ டுருகியின்பரு
மின்னியமுகில்துளி விட்டெனுமிளிர்
கன்னியவிழிமழை கான்றுகான்றுயர்
துன்னியபுயமலை துளங்கத்தோன்றினான்.

உரை.— இவற்றையும்பலவையு முணர்ந்துள்ளுருகிக்குறையாதவின்பத்தினால் மேகமின்னிப்பெய்யுமாப்போலே குற்றங்கொள்ளாத விருகண்ணெனீர் தழுதழுது தன்னிருபுயமலையு முயர்ந்துவிளங்கித்தோன்றினானென்க. (௧௨)

மன்னெனமணத்திடை யமைந்தமாதுபோர்
மின்னெனமிளிர்ந்துயர் மேவிமீள்கிலாத்
தன்னெனவிசும்புறி னிவடணந்தநான்
பின்னெனசெய்வதென் றுளத்திற்பேணினான்.

உரை.—நிலைபெறுமென்று மணத்தோடுவந்த விம்மடந்தைபோய் மின்னலைப்போல வொளிர்ந்தொல்கி வானத்திலேறித்திரும்பாம லேதேதனக்குரியவிடமென் றங்கேநின்றா. லப்போ திவளைப்பிரிந்துநின்றநானே செய்யவேண்டியதேதென்றுமனத்தினினைந்தானென்க. (௧௩)

உந்துதேரொனநகை யுகப்பிலேறினள்
நொந்துதேரரும்புவி-யிடுக்கணுக்குருல்
நந்துதேறியநய னல்கமீட்டிவண்
வந்துதேறுவுளென மனதிற்றேறினான்.

உரை.—ஏறந்தேராகத் தன்னன்பினாசையைக்கொண்டு வானத்திலேறினவள் பூவுலகநொந்துகொண்ட வுணர்வதற்கரிய துன்பங்களைத்தீர்க்குந் தேவகருப்பத்தினா னமக்காகுநன்மையைக்கொடுக்க விங்கேதிரும்பிவந் தாறுதலைச்செய்வாளென் றுளத்திற்றேறிக்கொண்டான்குசையென்க. (௧௪)

## வேறு.

இத்திறத்துணர்ந்தகாலத் தெந்தைதன்கருணைவீர
மொய்த்திறத்தவிர்தன்றாளின் முழுதுறவிசித்தகோதை
மெய்த்திறத்தெறிந்தகற்றை விலகநீத்திறங்கினாளென்
றத்திறத்திவன்றன்சொல்லு மார்வமுமுயிர்த்துச்சொல்வான்.

உரை.—இத்தன்மையா விதைச்குசை நினைத்தபோது கடவுள்தானே தன்கருணையின் வீரப்பெலத்தினா லொளிர்ந்த தன் றிருவடிகளோடுசேர்த்துக்கட்டுப்பட்ட கோதையாகியமரியென்பவள் சரீரத்தில்விட்டகதிரைமறைத்துக் கீழேயிறங்கினா ளப்பொழுது குசையுரைகளையு மன்பினையு முமிழ்ந்து சொல்வான். (௧௫)

## வேறு.

கடம்புகுந்தேறலைச் சூல்கொள்கண்ணிபோ
றடம்புகுங்கடவுளைத் தாங்கும்பீடமே
யுடம்புகொள்ளுனதுசே யுவப்பதற்குநின்
புடம்புகுத்தமியனே புரிவதோதுவாய்.

உரை.—வரசம்பொருந்தினதேனைச் சூலாகக்கொண்டபூமாலையின்சாயலாய மாட்சிமைதருங்கடவுளைத் தாங்கினபீடநீயே, உன்னிடத்திலவதரித்தநாதன் மகிழ்வதற் குன்னையண்டினவடியேன் செய்யவேண்டியதைச் சொல்லிக்காட்டுவாயென்க. (௯௬)

ஞைகயினுணுளைசெயக் கேட்பக்கண்டிளால்
மொய்யினலைவுகொள் சிந்தைமூகைபோல்
மெய்யினல்மைந்தபின் விமலன்செய்யருள்
மையினுணர்கிலா மருள்கின்றேனரோ.

உரை.—தான்கையினுற்பேசிப் பிறர்பேசின்தைக் கண்ணாற்கேட் டுணர்விற்றேறும லலைந்தசிந்தையையுடைய ஊமைபோல வாண்டவனுன்வயிற்றி லுடலைக்கொண்டவதரித்தபின்ன ரெனக்குச்செய்ததயையை நான்கொண்டமாசினல் முழுதுமுணராமல் மயங்கிநிற்பேனென்க. (௯௭)

கொம்பயில்கொடியெனக் கொடியிற்பூவெனக்
கம்பயில்முத்தென மலருட்கள்ளென
வம்பயி லுன்வயிற் றமலனுயபின்
னம்பயிலெமக்குள நயன்சொல்வாங்கொலோ.

உரை.—கொம்பின்மேற்படர்ந்தகொடிபோலவுங் கொடியின்மலர்ந்தபூப்போலவுஞ் சங்கினுள்முத்துப்போலவு மலரினுள்மதுப்போலவு முன்றிருவயிற்றிற் கத்தாவவதரித்தபின்பு நமக்காசையின்மேலும் வந்தநன்மையைச் சொல்லத்தகுமோவென்க. (௯௮)

மொய்யகத்திரட்டுநீர் மூடுகிச்சூழ்ந்தமர்
வையகத் துற்றுயர் மடியநாயகன்
மெய்யகத்துதித்தபேர் தலைவென்றநின்
கையகத்தடியனென் காணலாங்கொலோ.

உரை.—பொருதலைந்தொலித்ததிரைகளைச்சுருட்டுங் கடல்சூழ்ந்தபூவுலகினை மொய்த்ததுயர்களைத்தீர்க்க நாதன்கொண்டவுடலோடுபிறக்கும்போது நானவனை யுன்மலர்க்கரத்திற்காண்பேனோவென்ப. (௯௯)

ஒளியமைபிறைநுதல் புருவத்தொண்சிலை
வெளியமையுடுவிழி துகிரைவெல்லிதழ்
நளியன்மையாம்பல்வாய் நளினநாண்முகங்
களியமைநீருகக் காணலாங்கொலோ.

உரை.— விளங்கினபிறையோடொத்த நுதலையும் புருவத்தினொளிர்ந்தவில்லையும் வானத்தின்மீன்களைநிகர்த்த விருவிழிகளையும் பவளநிறத்தைவென்றவுதடுகளையும் குளுமையொருந்தினவாம்பலொத்தவாயையுந் தாமரைமுகத்தையு நான் களிகூர்ந்தழுதுருகக்காண்பேனோவென்க. (௱)

திண்படுமதுவொடு நறவுதாதவிழ்
நுண்படுமனிச்சையி னொய்யசீறடி
தெண்படுமலரிணை முத்தஞ்சேர்த்தியென்
கண்படுபுனலினாற் கழுவலாங்கொலோ.

உரை.— குளுந்ததேனையு மணத்தையும்பொழியப்பட்ட விதழைமலர்ந்த மெல்லியவனிச்சம்பூவினு நொய்யதிருவடிமலரிரண்டையு முத்தஞ்செய் தென்கண்ணருவியாற் கழுவக்கூடுமோவென்க. (௱௧)

வீயினின்பூளையி னொய்யமெய்யுடைச்
சேயினைத்தொழிலினாற் காய்த்ததிண்கரத்
தேயினியடியனே னேந்தலாங்கொலோ
வாயினென்னுயிர்பிரி யாமையாகுமோ.

உரை.— பூவினும்பூளையினு நொய்ய வுடலையுடைத்த வன்றிருமகனை நானேதொழிலைச்செய்து காய்த்தவென்கையா வினிமேலேந்துவேனோ? ஏந்துவேனாகி லென்னுயிரின்பத்தினா லென்னுடலைவிட்டுப்பிரியாமல் நிற்பதாகுமோவென்க. (௱௨)

ஒளிப்படவுயர்ந்தபே ரொன்றுமின்றியும்
வெளிப்படமனுப்புரம் வேய்ந்தநாயக
னளிப்படமலர்ப்பத நயந்துசென்னிமே
லளிப்படவிருத்தியா னணிதலாங்கொலோ.

உரை.—புகழப்படவுயர்ந்தபேறிங்கொன்றுமில்லாமலு மறுபியாகியநாத னமக்குத்தோன்ற மனுவுடலையெடுத்துவந்தவன் குளிர்படுமலர்ப்பாதத்தை நானேயென்றலைமே லன்புனைவிருத்தி யணியக்கூடுமோவென்க. (௱௩)

திருந்துபூஞ்சிகழிகை பூண்ட்சீரெனப்
பொருந்துபூந்திருவுடல் போர்த்துநின்வயிற்
றிருந்துபூவிடையவன் பிறந்தவெல்லையின்
வருந்துபூவெழுச்செயும் வளப்பெவன்கொலோ.

உரை.—திருந்தியழகுபடக்கட்டின பூமாலையையணிந்தாற்போல வழகுபொருந்தின பூந்திருவுடலைப்போர்த் துன் றிருவயிற்றினின்று பூவுலகிற் கத்தாபிறந்தபோது வருந்தினபூமியெல்லாமகிழ்ந் துயரப்பட வவன்செய்யும்வளப்பேதோவென்ப. (௱௪)

களிப்பனோவழுவனோ கனிபத்தானெனை
விளிப்பனோசுளிப்பனோ விழைந்தவாண்முக
மொளிப்பனோதழுவிய வுவப்பின்முத்தமு
மளிப்பனோவுலகெலா மளித்தநாதனே.

உரை.—களிகூருவானோ வழுவானோ வினிதாய்த்தானென்னையழைப்பானோ முனிவானோ நான்விரும்பின திருமுகத்தையொளிப்பானோ வென்னை யின்பமாய்க்கட்டிக்கொண்டுமுத்தமிடுவானோ வுலகங்கள்யாவையு மிரட்சித்தநாதனேயென்க. (௱௫)

கோமுழுதிறைஞ்சிய கொற்றக்கொற்றவன்
காமுழுதளிப்படக் கவிகைவிண்டெனப்
பூமுழுதொழிநகை புரிதல்கண்டதே
லோமுழுதுவந்துளத் துருகியோங்குவேன்.

உரை.—வானுலகெல்லாம்வணங்கப்பட்ட வல்லவதிபதியாகியகத்தா பூஞ்சோலையெல்லாங்குளிரப் பூவரும்புமலர்ந்ததுபோலத் தானும் பூவடிவினைமறைத்த வொரு புன்னகை காட்டக்கண்டேனாகில் இ பெரிதுவந்துளத்தின்முழுதுமுருகியோங்குவேனேயென்ப. (௱௬)

பானலங்கழைநலம் பகரியாழ்நலந்
தேனலங்கடந்தமென் குதலைத்தீஞ்சொலை
வானலமுளம்படச் செவிகள்மாந்தினேல்
யானலங்குயிர்விட லினியதாமரோ.

உரை.—இனியபாலுந் தீங்கரும்பும் பேசும்வீணையு நற்றேனு மிச்சுவையாவையுங்கடந்த வினியமழலைச்சொல்லை யவனுரைப்ப வான்வீட்டின்பேரின்பத்தை யென்னுள நுகர்வதற் க்ச்சொல்லை யென்செவியானுகர்வேனாகி லப்பொழுது நான்றெளிந்தவென் னுயிரைவிட்டிறந்தாலு மினியதாமே யென்க. (௱௭)

வளமைகொள்திறலினால் வயங்குமாண்பினோ
னிளமைகொள்பிறையென விளவலாய்வளர்ந்
தெளிமைகொளுணவினை யெளியனெம்மொடு
நளிமைகொள்கருணையா னுகர்வதாவனோ.

உரை.—பெருமைகொண்டவல்லமையால் விளங்கினமாட்சிமையுடையோ னிளம்பிறைபோலக் குழந்தையாய்த்தோன்றிவளர்ந்தபின் னுயர்ந்ததயையோடிறங்கி யேழைபோல நம்மோடெளியர்க்கொத்த வுணவுகளையுண்டானோவென்ப. (௱௮)

கங்கையஞ்சுழியினிற் பட்டகாலெனச்
சங்கையம்பெற்றியா றவிக்குமென்னுளம்
பங்கையம்பதத்தினன் பருகநானுழைத்
தெங்கையத்தொழிலினுக் கியலும்பான்மையோ.

உரை. — நடுவாற்றிற்சுழலுஞ் சுழியி லகப்பட்டவனைப்போல வென்னசெய்வேனென்ற சந்தேகத்தினாற்றவிக்குமென்மனமே தாமரைப்பாதத்தினு விங்கேயாண்டவ னெழுந்தருளித் தானுண்கநானுழைத்துச்செய்த வென்றொழிலுக்குத்தகுந்தன்மையோவென்ப. (௱௯)

அருவினைத்தொழிலுழைத் தருந்துநீரெனக்
கருவினைச்சாபமாய்க் கடவுளேவினன்

பெருவினைசெய்யநான் பிரானுண்பானெனிற்
றிருவினைத்தன்மையாற் றொழில்செய்தாற்றலே.

உரை.—அரியதொழிலைச்செய் துழைத் துண்பேனென் றுதித்தக்கப்பன்செய்தபாவத்துச் சாபமாக முன்னாளிலே கத்தாவேவலைச்செய்தானே யிப்பொழுதோவென்றால் நால்வேலையைச்செய்தபயனை யாண்டவன் றானுண்பானாகில்வேலைசெய்வதெனக்குப் பெரும்பாக்கியமாமேயென்க. (ஆதித்தகப்பன்செய்தபாவங் கருவின்வழியான் மற்றமக்கட்குப்பற்றியதினாலது கருவினையென்றோர்க.) (௱௰)

துதிவளர்வரம்பிலா தனந்தசோபனத்
திதிவளருவப்பெழீ யமரர்செய்புகழ்
விதிவளர்தகுதிமா விமலற்கீங்குரிப்
பதிவளரிருத்தியின் பயனிலாயதே.

உரை.—துதியாலளவின்றிவளரு மனந்தசோபனமுறையின்வளர்ந்தமகிழ்ச்சியோடு வானவரோயாமற்செய்யும்வாழ்த்தவின்முறைமைகடந்த குணத்துயர்நாத னிப்புவியிற்பிறந்தெழுந்தருளும்போ தவற்குரியவிடமுஞ் செல்வத்தின்பயனுமொன்றில்லையேயென்ப. (௱௰௧)

தேனொடேந்தியமலர்ப் பதத்திற்சேர்த்திடக்
கானொடேந்தியநுரை கதுவப்பூந்துகி
லானொடேந்தியதிரு வுடலஞ்சாய்ந்திட
மீனொடேந்தியவணை வேய்ந்திலாயதே.

உரை.—தேனிறைவினாலோங்கிய மலர்ப்பாதத்திற்சேர்க்க வாசம்பொழிந்தநுரையைநிகர்த்த பூந்துகிலுமில்லை, தானெடுத்த திருமேனிசாய்வதற்கு வான்மீன்களாலொப்பனைசெய்தவோரணையுமில்லையேயென்க. (௱௰௨)

இலங்கொளிக்குருமணி யிணைக்கிப்பொன்றவ
ழலங்கொளிச்சாமரை யமைந்திலாயதே
விலங்கொளிப்பரப்புற விரித்துநற்பகல்
துலங்கொளிப்படமுயர் தோன்றிலாயதே.

முதிர்செயுங்கனித்தேன்-மாந்தி முன்னர்யாமுற்றநோயைப்
பிதிர்செயுமருந்தாங்கைக்கும் பிணியுணத்தலையாய்வந்தான்.

உரை.— வானுலகரசரெல்லாரு மவன்பாதத்தைவணங்க வினிதாயாசைமிகுந்து நிறைந்தசெல்வத்தை யுடையோனாகி யிங்குள்ள புற்சிறுசெல்வங்களைத் தேடானே யாதியின் முதிர்ந்த தேன்கனியையருந்தி மனிதரெல்லாருங்கொண்ட நோயைத்தீர்க்குமருந்தாகிய கசக்கும்பிணிகளைத்தான்றலையாயுண்கவந்தானென்க. (௱௨௨)

ஆற்றெலாங்கடலுள்வைகு மரியதூயறத்தினுள்ளும்
வேறெலாத்திருவேவைகும் விழுத்தவத்திறைவநாமே
மாறெலாங்கடந்தவன்பால் வணக்கமுட்புரிந்தாலெஞ்சே
பேறெலாங்கடந்தசெல்வப் பெற்றியாவிமிழிற்கொள்வான்.

உரை.—கடலினுள் ளாறெலா மடங்குமாப்போலே மற்றச்செல்வங்களெல்லா நல்லறத்தினுள்ளடங்கு மருந்தவத்தினிராசாவே! நாமுமாறுதவன்பினா லவனைவணங்கினோமாகி லெமக்குமகனாய்வந்தநாத னதையரியபேறுபெற்ற செல்வத்தின்றன்மையாகக்கொள்வானென்ப. (௱௨௩)

களிவளர்தவத்தின்வீட்டிற் காட்சிநன்னிலையில்ஞான
வொளிவளர்கதவுசேர்த்தி யொழுக்கநற்றாளைப்பூட்டி
யளிவளர்நெஞ்சின்மஞ்சத் தன்பணைபரப்பினேமேல்
வெளிவளருயர்வான்வேந்தன் விழைந்துறைந்தெம்மையாள்
வான்.

உரை.— மனம்பொருந்திக்களிகூர்ந்து செய்ததவமேவீடாகவு மதிலேதியானமேநிலையாகவுநாட்டி ஞானமேயொளிர்ந்தகதவாகவுஞ்சேர்த்து நல்லொழுக்கமே தாளாகவும்பூட்டித் தயையுளநெஞ்சமே தூங்குமஞ்சமாகவும்வைத் ததின்மேலன்புதானேயணையாகவும் பரப்பினோமாகி லுயர்ந்தவானுலகநாத னாசையோடுவந்து வீற்றிருந் தெம்மையாள்வானென்ப. (௱௨௪)

துளைத்தெழுதசையின்முந்நீர்ச் சுழியினும்பட்டதே
போ

றிளைத்தெழுமையமென்றோ செய்கடனின்னதென்ன [ருள்
விளைத்தெழுந்தயையினெந்தை விளம்பவேண்டுவனென்றென்
கிளைத்தெழுநயப்பிற்றஞ்சே கேட்டிவர்வேண்டுகின்றார்.

உரை. — உளத்தைக்குடைந்தெழுந்த 'வாசையென்னுமா கடல்கொண்டசுழிகளினுள் நாம்பட்டதுபோல வித்தனைச ஞ்சேதகப்படுவானேன்? செய்யவேண்டிய தின்னதென்றுமி ருந்ததலியயோ டாண்டவன்காட்ட வேண்டிக்கொள்ளுவது நல்லதென்றாள் மரியென்பவள். இத்தன்மையே யிருவருமிகு ந்தவாசையோடு தற்றிருக்குமாரனைக்கேட்டு வேண்டிக்கொ ண்டாரென்ப. (௱௨௫)

காரின்பால்கடந்தவங்கண் ககனம்பாலெதிரில்லாளு
மோரொன்பான்மனத்துட்சொல்வா னுளத்தின்பால்வணக்க
ஞ்செய்து
பாரின்பால்தோன்றும்பாலா விருவர்பால்பயந்தசேபோ
னீரின்பால்வறுமைக்கொப்ப நீரெனைவளர்த்தல்வேண்டும்.

உரை.—மேகமண்டலத்தைக்கடந்த வடிவுளவானுலகிற் ற னக்கொப்பாரு மிக்காருமில்லாமல் வீற்றிருந்தாளு மொன் றானகடவு ளவருளத்திற் றோன்றச்சொல்வானே: நீங்களென் னைக்கர்த்தாவென்று மனதிலேவணங்குவதல்லாதே தந்தையின் றி யழியாதகன்னியிடத்திற்பிறந்தாலும் புறத்திலேதோன்று முறையா விருவர்க்குப்பிறந்தபிள்ளையென்றுபாவித்து வறு மைக்கொத்த நன்முறையோடென்னை வளர்க்கவேண்டுமெ ன்ப. (௱௨௬)

பொறையினார்விரும்பும்வாழ்க்கைப் புரையினாற்சிதை
வுற்றோன்
றிறைவனானழிவில்வீட்டை யிருக்குமாறிமிழிற்காட்டச்
சிறுமையால்வளம்பெற்றுங்கட் சிறுவனாய்த்திருவென்றீந்த
வறுமையானுயர்ந்தவும்மை வையம்வாய்த்தெரித்தேனென்
றான்.

உரை.—பூவுலகத்தோர்வாழ்க்கையைவிரும்பிப் பாவத்தை க்கொண்டுகெட்டாரென்று கர்த்தாவாகியநானே குறையின்றி

வான்வீட்டைச்சேரும்வழியை யினிதாய்க்காட்டச் சிறுமை யின்றல் மாட்சிமைபெற் றுங்களிடத்துக்குழந்தையாய்த்தோ ன்றச் செல்வமென் றுநானுங்களுக்குத்தந்த வறுமையால் ம ற்றவருள் ளுங்களை யிப்புவியிற்றெரிந்துகொண்டே னென்று ரைதனென்க. (௱௨௭)

மாடகவிசைநேரிச்சொல் மாதவன்கூறசைகேட்டே
யாடகமாடத்தோங்கி யருமணியணை மீதம்பொற்
பாடகமொளிர்ந்திங்காளும் பார்த்திபர்செல்வமேய்க்கும்
கோடகமெலமதில்லாமை குணமெனக்கூறினனே.

உரை:—வீணையினிசைகளை நிகர்த்த விந்தவுரைகளை மாதவ ன்கூறசைகேட்டுப் பொன்னாற்செய்தமாளிகையில் நவமணிச் சிங்காசனத்தின்மேலெழுந்திருந்து பொற்பாடகத்தா லொ ளியைப்பரப்பி யிவ்வுலகத்தையாளு மரசர்கொண்ட செல்வ ங்களைவெல்லுங் குறையில்லாத நமதுவறுமை குணந்தானே யென்றுனென்க. (௱௨௮)

அழற்றியவேனிற்காலத் தருந்தியவமுதைக்கான்று
நிழற்றியகொம்பிற்பேசு நிறக்கிளியிரண்டுமென்று [கிச்
மிழற்றியவண்ணத்தன்னார் விருப்பெனுமெழுங்கால்பொங்
சுழற்றியநெஞ்சிலாவி சுகக்கடல்மிழ்ந்திற்றன்றே.

உரை.—வேனிற்காலத்திலுண்ட வமிர்தத்தையுமிழ்ந்துநி ழலைச்செய்த கொம்பின்மேலிருந்துபேசு மிருநற்கிளிகளைப் போலச் சொன்னதன்மையா விவ்விருவர்கொண்ட வாசை யென்னுங்காற்றுபொங்கிச்சுழலப்பட்டநெஞ்சிலேதம்மு யிர்கள் சுகக்கடலினுள் ளினிதாயமிழ்ந்தினதென்ப. (௱௨௯)

தோடணிமகளிர்மன்றல் துடங்கியவுவகைபோலக்
கேடணியுலகம்பூத்த கேதமற்றுவப்பக்கன்னி
நீடணிகருப்பமுற்றி நீத்தெழும்பருதிபோல்மெய்க்
கூடணிபரமன்றோன்றக் குணித்தநாள்குறுகிற்றம்மா.

உரை.—காதணிகளைப்பூண்ட புதுப்பெண்ணே தனக்கு ம்மணந்துவக்கினதென் றுள்ளடைந்தகளிப்புபோலக் கேடு

கொண்டபூவுலகத் துன்பங்களை நீக்கிக்களிகூரக் கன்னிமாம
ரி நெடுங்காலத்தணிந்தகருப்பமுற்றி யதைவிட்டுச் சூரியனை
ப்போல வுடலையுடுத்தநாதன் பிறந்துதோன்றத் தான்குறித்
ததாள்கிட்டினதென்ப. (௱௩௰)

ஸ்ரீமுயங்கியபைந்தோகை விரித்தநன்மஞ்ஞைபோன்
ஸ்ரீமுயங்கியமீன்செய்த வெயின்முடிபூண்டகோதை [றே
சேமுயங்கியமெய்போர்த்த சேயெழுமுன் றன்கையாற்
பூமுயங்கியபாலாவிப் பூந்துகில்வனைந்திட்டாளே.

உரை.—பூந்தோட்டத்தினின்று மலர்களோடுகலந்த தன்றோகையைவிரித்துக்காட்டுமயிலைப்போல வான்மீன்களை முடியாகச்சூழ்ந்தமரியென்பவள் சிவந்தமேனியையுடுத்த நரதேவனாகிய தன்றிருக்குமாரன்பிறக்குமுன்னர் தன்கையாற் பூவோடுகலந்த பாவினாவியைநிகர்த்த வொருபூந்துகிலைமுடித்தாளென்க. (௱௩௧)

தூமநற்புகைகள்சூட்டித் துளித்ததேன்சினைகொள்
பைம்பூத்
தாமநற்கமழ்நீர் தூற்றித் தாழ்ந்தொருபேழைதன்னில்
வாமநற்றுகில்பெய்தேதன் மனமெனத்திருத்தன்சேயி
னாமநற்புணர்ச்சிபூட்டி நயப்பதாள்விரும்பிநின்றாள்.

உரை.—முடித்தசிலைக் ககிற்புகைமுதற் பலவாசப்புகைகளைக்காட்டிச் சினையாகமதுவைக்கொண்டபூமாலையிலிறக்கின வாசப்பன்னீரையுந்தூற்றி வணக்கத்தோ டொளிர்ந்த துகிலையொருபேழையினுள்வைத்துத் தான்றன் மனத்தைப்பூட்டினாற்போலே தன்றிருக்குமாரனாமத்தைப்பூட்டாக நன்றாய்ப்பூட்டியவன்பிறந்து தான்களிகூர நாளேதோவென்று விரும்பிநின்றாளென்க. (௱௩௨)

தண்டமிழ்ச்சொல்லுநூலுஞ் சால்பொடுகடந்தவண்
ணத்
துண்டமிழ்துவப்பினுள்ளத் தோங்குமிவ்விருவர்தம்மூட்
டண்டமிழுரைத்ததேபோற் பயன்பகர்ந்திலவற்காண
மண்டமிழ்துகும்வாவின் மகிழ்வினையுரைப்பாரோ.

உரை.—நற்றமிழ்ச்சொல்லானு நூலானுமடையப்படா மல் மிகவுங்கடந்தமுறையோடு களியுண்டவின்பத்தினு ளு ளத்திலோங்கினவிவ்விருவர் வீணைதமிழைப்பேசினாற்போல த் தாந்தம்முள் பலபயன்களைப்பேசி நரதேவனாகிய குழந் தையைக்காண் மிகுந்தவின்பத்தைக்கொடுக்குமாசையினா ல் டைந்தமகிழ்ச்சியைச்சொல்லுவாருண்டோவென்க. (௱௩௩)

மகிழ்வினைப்படலமுற்றும்.

ஆகப்படலம் - ௯ - இ - விருத்தம்

௮௱௫௨.



# பத்தாவது.

# மகவருள்படலம்.

செல்செயுஞ்சாபநீக்கச் செஞ்சுடர்சாபஞ்சேர்கால்
கொல்செயுஞ்சாபநீக்கிக் கூவெலாமுறவாய்ப்பாவத்
தல்செயுஞ்சாபநீக்க வாண்டகைமகரஞ்சேர்ந்துள்
ளெல்செயுங்கன்னிநீக்கி யிளவலாயுதித்தல்சொல்வாம்

உரை.—வான்வில்நீங்கி மாரிகாலநீக்கத் தனுசிராசியிற்சூரியன்புகுநாளிற் கொலைசெய்யுந்தனுவைக் கைவிட்டுப் பூவுலகெங்கும் போரின்றிச்சமாதானமாகிப் பாவத்தால்வந்த விருளைப்பயக்குந் தேவசாபத்தைநீக்க வாண்டவனுசையைக் கொண்டுளத்தில்விளங்குங்கன்னியின் றிருவயிற்றைநீக்கிக் குழந்தையாய்ப்பிறந்ததைச்சொல்வாம். (க)

மாயிருஞாலங்கொண்ட மருட்கிணைந்தழுதவானங்
காயிருமிடர்தீர்காலாய்க் களித்தெனமாரிகாலம்
போயிருபுடையிற்செந்நெல் பொதிர்ந்தமார்கழிநாளையந்
தாயிருவுலகுமோங்க வாண்டகையுதித்தலோர்ந்தான்.

உரை. — பூவுலகங்கொண்ட மயக்கத்தைக்கண்டதற்கிரங்கி நெடுநாளழுதிருந்தவானமே மனங்காய மனிதர்க்குவந்த துன்பமுடியக்காலமாச்சுதென்று களிகூர்ந்தாற்போல மாரிகாலம்போ யிருபுடையிற் செந்நெல்காய்த்த மார்கழிமாத மிருபத்தைந்தாந்தேதியில் வானுமண்ணுமோங்கக் கடவுள் மனிதனாய்ப்பிறக்க நினைத்தான். (உ)

பழிபெலாநீக்கிநீங்காப் பகைமுதிர்கொடுங்கோலோச்
சழிவெலாம்பயத்தபேய்வென் றமலனுமகருமொன்று [சி
விழிவெலாமொழித்துவீக்க விளவலாய்ப்பிறப்பநாத ...
ஆழியெலாமுனைவற்றெங்கு மொருகுடைநிழற்றிற்றன்றே.

உரை.— நமக்குவந்தபழியெலாநீக்கித் தீராதபகையைக்கொண்டு கொடியமுறையோட்டாண்டு கேடுகளையெல்லாம் வருத்துவிக்கும் பசாசுகளை வென்று கடவுளுமனிதருமுறவாகக் குறையின்றியொன்றாய்க்கட்டக் கடவுள்தான் குழந்தையாய்ப்பிறக்கப் பூமியெங்குஞ்சண்டைநீங்கி யொருவன்குடையெங்கு நிழலைச்செய்ததென்க. (௩)

நிலமுறைபகையைச்சீக்கி நிகரிலொத்தவியானென்பா
ன்
வலமுறையொருவனாண்ட வள்ளமையாற்செருக்குற்றெங்கும்
பலமுறைபிரிந்தயாரும் பண்டுறைகாணியூர்போய்க் [னே.
குலமுறையிறையுமெண்ணுங் கொணர்ந்திடப்பணியிட்டா

உரை.—எங்குந்தன்பகையைவென் றொப்பில்லாமலொத்தவியானென்பவன் வல்லமைகொண்டு பொதுவறத்தனியேயுலகமெல்லா மாண்டதினா லாங்காரம்பொங்கிப் பலமுறையா லெங்கும்பிரிந்துபோன வெல்லாருந் தாமிருந்தபழையகாணியூரிலேபோய்க் குலத்தின்முறையோடு கையிறையு மெண்ணிக்கையுங்கொண்டுகொடுக்க வேவலைச்செய்தான். (௪)

இப்பணிகேட்டுவேதத் தெழினுதற்றிலதமொப்ப
வொப்பணிகடந்தசூசை யுளத்தழற்புகுத்தினாற்போல்
வெப்பணியுயிருலாவும் வெய்துறலாற்றமொய்கொள்
ளப்பணியுலகவேந்தி னன்னையைநோக்கிச்சொல்வான்.

உரை.— இந்தவேவலைக்கேட்டு வேதத்திற்குநுதல்விளங்குந் திலதம்போலாகி நிகரற்றசூசை தன்னுளத்தினெருப்புபுகுந்ததென்ன வேகுமுயிர்கொண்டதுபனாயாற்ற வலையுங்கட்டல்சூழ்ந்தபூவுலகநாதனைச் சூல்கொண்ட தாயைநோக்கிச் சொல்வானென்ப. (௫)

மன்னவனுலகிலெங்கும் வகுத்ததோர்பணியீதன்றே
பின்னவன்பணித்தவாற்றாற் பெத்திலேமென்னும்வாய்த்த
வென்னகர்க்கிறையுமெண்ணு மீவதற்கேகல்வேண்டு
மன்னதற்கடியேன்செய்யு மாவதென்றருளிச்சொல்வாய்.

உரை.— இராயனெனக்குமிட்டகட்டளையிதுவே யிதின்படியே நான்பெத்திலேமென்னுமென்னகர்க்குப்போய்க்கையிறையுமெண்ணிக்கையுங்கொடுக்கவேண்டு மிதற்குநான்செய்யவேண்டுவதைச் சொல்வாயெனப. (௬)

விண்டலமகத்துவேந்தர் வேந்தனுமுனதுமைந்தன்
மண்டலமகத்துத்தோன்றி மனுமகன்பிறப்புநாளாய்த்
தண்டலையகத்துவிள்ளுந் தாதினுநொய்தாணீயுங்
கண்டகமகத்தென்னோடு துணைவரக்கருதலாமோ.

உரை.— வானுலகின் வேந்தர்க்குவேந்தனாகிய வுன்றிருக்குமாரன் பூவுலகிற்றோன்றி மனிதனாய்ப்பிறக்க நாளர்ச்சுதேயித்தருணத்திற் பூந்தோட்டத்தின் மலர்ந்தபூவிதழினுநொய்யபாதத்தையுடையநீயு முள்ளாணிறைந்தவழியி லென்னோடு துணையாகவரக் கருதவுங்கூடுமோவென்ப. (௭)

மின்னிநாவிடிவெற்பீர்ந்து வேறிருகூறுசெய்வ
துன்னிநானுய்யலாற்றே னொருநொடிபிரிந்துபோகின்
முன்னிநானடைநோய்நீக்க முதல்வன்கேட்டவன்செய்யே
வல்
பன்னிநான்செய்வதென்னே பகர்தியேயென்றான்குசை.

உரை.— ஒருநொடிநேரத் துன்னைவிட்டுப்பிரிந்துபோனேனாகில் மின்னிவீழ்செந்தீயிடியாற் பிளந்தமலையை வேறுக்கினாற்போலாகுமென்றெண்ணி நான்பிழைப்பதரிதே யென்னுள்ளங்கொண்ட துன்பத்தைத்தீர்க்க வாண்டவனைக்கேட்டவனிட்டகட்டளையெனக்குச்சொல்லிச் செய்யவேண்டியதை யுரைப்பாயென்றான்குசையென்ப. (௮)

## வேறு.

என்றநீம்ரமறைவடிவ மேந்துதவனிவைகூறப்
பின்றருயாவையுமுணர்ந்தும் பேரிறையோன்றனைத்தாங்குத்
துன்றருமாமாட்சிமையா டன்றுணைவன்சொற்பணிய
வன்றருமாமகவினைத்தாழ்ந் ததற்கியற்றும்பணிகேட்டாள்.

உரை: — வேதவடிவாய்த் தோன்றினமாதவ னிவற்றைச் சொன்னதினாற் பின்புவரும்யாவையுமறிந்தாலுங் கத்தாவை மகனாகச்சூல்கொண்ட வரியமாட்சிமையுடைய மரியென்பவள் தன்றுணைவனிட்டவேவலைப்பணியவன்றுதன் றிருக்குமாரனைப்போற்றியதற்குச்செய்யுமுறைமையைக் கேட்டாளென்ப. (௯)

கேட்பதருந்தயைக்கிறைவன் கேட்டுரைத்ததிருவுள
மே
கோட்பதருங்குணக்கிழத்தி கொழுநனுளத்தெழச்சொல்வி
வேட்பதருமணமணத்த வுயிரிரண்டும்வேறுகா
வாட்பதருநயத்திருவர் மாநகர்க்கேகுதுமென்றாள்.

உரை. — தாய்கேட்டதைத் தயையோடுகேட்டகடவுள் மறுமொழியைச்சொல்லிக்காட்டின திருவுளமின்னதென்றுகுறைவில்லாத சற்குணத்துயர்ந்தவிராக்கினி தன்றுணைவன்களிகூரச்சொல்வி விரும்புதற்கரியமணமொன்றாய்க்கட்டினவெமதிரண்டுயிர்கள்பிரிந்துவேறுகாமல். வாடாதவின்பத்தோடிருவரு நமதுமாநகர்க்குப்போவோமென்றாளென்ப. (௰)

தேனிகர்சொற்செவிமாந்தச் செழுந்தவத்தோனுளத்
தோங்கி
மீனிகர்பொற்சிவிகையுமால் வேழமும்பாய்பரிமாவும்
வானிகர்பொற்றிண்டேரும் வறுமையர்க்கில்லாமையினீ
கானிகர்முட்டடத்தேகக் காண்டலுளம்பொறுப்பரிதே.

உரை. — தேனினினியவிச்சொல்லைத் தன்செவியாலருந்தலால் மாதவன்குசையுளத்திலோங்கிச்சொல்வான்: வான்மீனை நிகராயொளிர்ந்த தண்டிகையு மதயானையும் பாயுங்குதிரையும் வானத்திலுயர்ந்தபொற்றேரு மெந்தாரித்திரத்துக் கில்லாமையாற் கானகம்போலு முள்ளடைந்தவழியிலே நீவரக் கண்டபோதென்னுளம்பொறுக்குமோவென்க. (௰௧)

தொன்மாண்டபுடைநகரிற் றன்னியபின்றுங்குறை
யும் [ர்
பொன்மாண்டமுடித்தாவிற் பொலிவமைந்தவெங்குலத்தோ

வன்மாண்டவருட்புரிந்து வந்ததுயரா றமெனத்
தன்மாண்டவுளத்திதுவே சார்பெனத்தா னுணர்ந்தானே.

உரை.— பழமையின்மாட்சிமையுள்ள 'வெமதுநகர்க்கு ச்சென்றபின் பங்கேயிருக்கும்' பொன்றமுடிசூழ்ந்த தாவிதி ராசாவினுயர்ந்த வெங்குலத்தாரே மிகுந்தத்யைகாட்டி வ ழியில்வந்ததுன்பங்களாறுமென் றிதுவேமாட்சிமைபொரு ந்தியதன்மனதிற் சார்பாகவெண்ணித் தேறினான் சூசையெ ன்ப. (௰௨)

மாண்டகையாரறன்சார்பா ரல்லதினமனுச்சாரா
ராண்டகையாரருட்சாராரர்க் கல்லதொருதுயர்சாரா
சேண்டகையாரிவன்சார்பாற் செல்லுதுறாமெனவானோர்
பூண்டகையாலறஞ்சார்ந்தாள் புரைசாராப்புகல்செய்தாள்.

உரை.— பெருமையுடையோர் றத்தினைச்சார்வாரொழி யத் தம்மினமாகியமனிதரைச்சாரார், கத்தாசெய்யுநிறைந்த கிருபையைச்சாராதவர்க்கொழியச் சார்ந்தவர்க்கொருதுன் பமும்வாராது. நாமும்வான்மாட்சிமையுடையநாதனுதவியி னாற் குறையொன்றின்றிச்சேருவோமென்று வானினின்று வந்தவணியாக வறங்களெல்லாம்பூண்டமரியென்பவள் பி ழையாமொழியைச்சொன்னாளென்ப. (௰௩)

குவட்டாயவெள்ளநீகர் கூர்த்துவகைபெருகியெழத்
துவட்டாததாய்தவனுந் துணைவியெனுமாயிழையு
முவட்டாதபணிமுறையாற் செல்லவெனவுணர்வுற்றார்
சவட்டாதவன்புரிமைச் சால்பினிரண்டன்றிலொத்தார்.

உரை.— மலையுச்சியினின்றொழுகும் வெள்ளத்தின்றன் மையா யுளத்திலின்பம்பெருகித் துவளாத்தவத்தையுடைய சூசையுந் தன்றுணைவியாகியமரியென்பவளுமிட்டகட்டளை பொருந்தினமுறையோடுபோகநினைத்தா ரொழியாதுபிரியா தவன்பின்மிகுதியா லிரன்றிலம்புள் ளொத்தெனவே. (௰௪)

பூண்மின்னுமணிட்பேழை போன்றருஞ்சூல்முற்றணி
ந்தாள்

கோண்மின்னுமுடிதாழ்க் கொழுனனைத்தான்றொழவவனு
மாண்மின்னுமனம்வெருவி வணங்கப்பின்பிருவர்தொழுந்
தாண்மின்னுமகன்றந்த வாசியொடுதடங்கொண்டார்.

உரை.—மின்னுமாபரணங்களைக்கொண்ட பேழையின் சாயலாக வுருந்தேவகருப்பத்தைக்கொண்டகன்னி மீன்களைச்சூழ்ந்ததலையைத்தாழ்த்தித் தன்றுணைவனைவணங்கினா ளவனு மாட்சிமைபொருந்தினமனதில் வெருவி யவளைவணங்கினான், பின்பிருவிருங்கூடி விளங்கின திருக்குமாரன்பாதத்தைப்போற்றியிவனுந்தந்தவாசீர்வாதத்தோடுபயணமாய்ப்போனாரென்ப. (௰௫)

அருள்வீங்கும்விண்ணரசாட் காயினவாயிரரன்றி
யிருள்வீங்குந்துகடைத்தோன் பிறக்குங்காலெனவின்னும்
பொருள்வீங்குமும்பரொன்ப தாயிரரும்புடைதிரிந்து
தெருள்வீங்குங்கதிர்பரப்பிச் செலவிட்டான்முதலோனே.

உரை.—அருளானிறைந்தவானரசாளாகிய மரியென்பவட்குக் காவலாகநின்ற வாயிரவானவரன்றி மயக்கத்தால்வந்த பாவங்களைத்தீர்க்குங்கடவுள் மனிதனாய்ப்பிறக்கக் காலமிது வென்றதனா லின்னம்பொன்வடிவாய்த்தோன்றின வேறொன்பதினாயிரவானவ ரவள்புடையிற்றிரிந்து தெளிந்தகதிரைப் பரப்பி வாங்காமற்போக வாண்டவன் கட்டளைசெய்தானென்ப. (௰௬)

பிறைபழித்தபொற்பதத்தாற் பிறைமிதித்தாடனைச்சூ
ழப்
பொறைபழித்ததோட்டிறத்திற் பூண்டவழச்செஞ்சுடரை
நிறைபழித்தவுருச்சூட்டி நிரைநிரைவிண்ணோரிறைஞ்சி
புறைபழித்தமலர்மாரி யுந்தரத்திற்பொழிகின்றார்.

உரை.—சந்திரனொளியினும்விளங்கின பொற்பாதத்தினா லிளம்பிறையைமிதித்த கன்னியைச்சூழ்ந்து மலையினுந்திறத்தமீதாண்மே லாபரணங்கள்தவழ்ந்துலாவச் சூரியன்வடிவினு மழகியவுருவத்தைக்காட்டி நிரைநிரையாய் வானவர்கூ

பூவணங்கித் துளித்தமழைநிகராத மலர்மாரியை யாகாயத்தில் விட்டுப்பொழிந்தாரென்ப. (௰௭)

வஞ்சத்தார்மனம்போல விருண்டவிராவாட்டுமொளி
விஞ்சத்தாரணியறியா வெயில்வெள்ளமும்பருகத்
தஞ்சத்தார்தவஞ்செய்தோர் தகைபோலவிவர்க்கிருள்சூ
ழெஞ்சத்தாமிரவுபக லென்றறியாதேகுகின்றார்.

உரை.—வஞ்சனருள்ளத்தின் றன்மையா விருண்டவிராவையொழிக்கு மொளிமிகப் பூவுலகின் மற்றவரறியாமலங்கே நின்றவானவர் வெயிலைமிகவுஞ்செய்தமையால் நிறைந்ததவத்தைச்செய்தவர்பெருமை யிருளைக்கொள்ளாததுபோல விவ்விருவர்க் கிருள்தோன்றாம விவர்பகலிராவென் றறியாமற் போனாரென்ப. (௰௮)

புண்காத்தமருந்தன்ன பெருவியருட்சேர்மாதவனும்
விண்காத்தவேந்தனைச்சூல் வேய்ந்தொவ்வாக்கன்னிகையும்
மண்காத்தவருள்பரப்பி வழிவருங்கால்வளைத்திவரைக்
கண்காத்தநிமையென்னக் காத்தாரக்ககனத்தோர்.

உரை.—புண்ணையாற்று மினியமருந்துபோல வுயர்தயைகொண்ட மாதவன்றனையும் வானுலகநாதனைச் சூலாகவணிந்து நிகராதகன்னிமாமரியும் பூமியையிரட்சிக்குந் தயைசெய்து வழியேவரும்போ திவரைச்சூழ்ந்து கண்ணைக்காத்தநிமைகளைப்போல வவ்வானவர்காத்தாரென்ப. (௰௯)

அன்றாங்குமுட்டடத்திற் றுயராற்றாத்துவள்கொடிபோ
லன்றாங்குநொய்யடியா ளயர்வுற்றுச்சோர்ந்துவிழப்
பொன்றாங்குபொறைத்திண்டோட் பொலிந்தும்பர்தாங்கி
மின்றாங்குமலைத்தோற்றம் விளங்குவடிவொத்தனவே. [னரால்

உரை.—அங்கேமுள்ளுநிறைந்த வழியில்வந்த துயராற்றாமற் றுவண்டகொடியைப்போல வப்பொழுதங்கே நொய்யவடியையுடையகன்னி யயர்ந்துசோர்ந்துவிழவே பொன்மலையினொத்த புயங்களையுயர்த்தவானவ ரவளைத்தாங்கினார் பின்னைத்தாங்கின பொன்மலையின்றோற்றம்போலவேயென்ப.
(௨௰).

## வேறு.

பானளாவுழிபாயிருணீத்தொளி
தானளாவியதன்மையிருயினர்
போனவாயிலெலாம்புரைநீத்தரு
ளானதாரும்பிராகுலமாறவே.

உரை. — சூரியன்றிரியுமிடத்தி லிருள்மறைந் தொளிதா னே படருந்தன்மையி னிவரும்போனவிடமெல்லாம் பாவ மொழிந்து மன்னுயிர்கள்கொண்ட சிந்தாகுலங்கள் மாறத் தேவருள்நிறைந்தாயிற்றென்ப. (௨௧)

போர்க்கணங்கடுத்தாலெனப்பொங்கொலிக்
கார்க்கணங்கதங்காட்டிமலிந்துகால்
நீர்க்கணங்கழுவாவிநிறைந்துசூழ்
சீர்க்கணங்கொடுசேர்த்தனநாடெலாம்.

உரை. — இவர்போகையிற் பலபோர் கூட்டமாய்க்கடுத் ததன்மையால்முழங்கினமேகங்களின்கூட்டங் கோபத்தை க்காட்டி நிறைந்துபொழியுமாரியின் றண்ணீர்கூடிக் குளங் கடோறு நிறைந்து சூழெங்குஞ்செல்வங்களைக்கொண்டு சிற ந்ததா நாடெலாமெனப. (௨௨)

சோலைசூழ்வரைதூங்கியதீம்புனல்
மாலைசூழ்வழியொல்லெனவந்துபாய்ந்
தாலைசூழ்வயலார்ந்துவிளைந்தநெல்
வேலைசூழ்வளைமுத்தெனவேய்ந்ததே.

உரை. — சோலைகளாற்சூழப்பட்ட மலையினின் றிழிந்தோ டினதீம்புனல் மாலையின்சாயலாய் மலியமலர்ந்தபூம்பொழி ல்வழியா யொல்லென் றுமுழங்கிவந்துபாய்ந்து சூழ வாலைக ளாடும்வயல்களெல்லாநிரப்பி விளைந்தசெந்நெல் கடலினுள் ளசங்கின்முத்துகளின் றன்மையின்றோன்றினதென்க. (௨௩)

மாலையாருமணமகளாமெனுச்
சோலையார்தருப்பூம்பணைத்தோற்றமே

மாலையாருகோட்டியவானெனுஞ்
சேலைவார்பொய்கைதேன்மலர்விள்ளவே.

உரை.— மாலையையணிந்த மணப்பெண்ணைப்போலுஞ் சோலைகடோறு மலர்ந்தபூங்கொம்புகளே, இரவில் மீன்களைக்காட்டினவானத்தைப்போலு மீன்களையுடையகுளங்கடோறுந் தேன்றுளித்த பூமலர்ந்ததோற்றமேயென்க. (௨௪)

வீழிமின்னியவிண்டிரள்பெய்தநீ
ரூழிநீத்தமுடுக்கெனவோங்கிவர்
தேறியெக்கணுஞ்செய்தயைநேரநல்
லாழிதொத்தெனவோடியவாலையே.

உரை.— வீழிமின்னு மேகங்கள்பொழிந்த தண்ணீரூழி வெள்ளமாகமுடுகுந்தன்மையினு மிவர்போனவிடமெல்லா நிறையச்செய்யுந்தயையின்சாயலா யாறுபோலமலிந்தசாறுதந்தனவாலைகளேயென்க. (௨௫)

கொம்பினார்குயில்கூவவுமஞ்ஞைகள்
பம்பியாடவும்பைஞ்சிறைத்தேனொடு
தும்பிபாடவுந்தூயனநாணவு
நம்பிமாதொடுநன்னெறிபோயினான்.

உரை.— கொம்புகடோறுங் குயில்கள்கூவவும், சோலைகடோறு மயில்கள்பொலிந்தாடவும், மலர்கடோறும்பலவண்டினங்கள்பாடவும், தம்மினுந்தூயோரிவரென்று தூயவன்னங்கள்நாணவும், தன்மனைவியோடு சூசையே நன்னெறியைக்கடந்துபோனானென்க. (௨௬)

தூமஞ்சூடியதூய்துகிலேந்துபு
தாமஞ்சூடியதாரொடுபூண்மலி
காமஞ்சூடியகாந்தரியென்றொரு
நாமஞ்சூடியநாரியைக்கண்டுளார்.

உரை.— அவரித்தன்மைபோகையி லகிற்புகைமுதல் வாசப்புகைகளையுண்ட நல்லாடையையுடுத்துப் பூமாலைகளையு ம

ணியாபரணங்களையும்பூண்டு, வளர்ந்தகாமத்தைக்கொண்ட காந்தரியென்னும்பெயருள்ள வொருபெண்ணைக்கண்டானென்க. (௨௭)

வெஞ்சினக்கரிமேய்ந்தரும்வெள்ளிலோ
நஞ்சினூற்றியகாஞ்சிரமோநகை
யிஞ்சிவெற்றெழிற்பாவையின்வேடமோ
நெஞ்சினற்றகைநீத்தெழினாரியே.

உரை.— மதயானையுண்டுவிட்ட விளாங்கனியென்பவோ, நஞ்சினைக்கொண் டழகியவெட்டிப்பழமென்பவோ, நகைகளால் வீண்டழகினைப்பெற்ற பொம்மையென்பவோ, நெஞ்சிலேபெருமையில்லாமல் முகவடிவுள்ள வித்தப்பெண்ணென்க. (௨௮)

ஆலமேந்தியவானனத்தோடிநற்
கோலமேந்தியகோளனவேய்ந்துகொல்
காலனேந்தியவாள்கவர்ந்தீர்ந்துயிர்
நீலமேந்திநிறைந்துணுங்கண்ணினாள்.

உரை.— நஞ்சினைப்பொருந்தினமுகத்திலோடி வடிவுள வாண்மீன்களைப்போலத்தோன்றிக் கொல்லுங் கூற்றனேந்தி வாளைத்திருடி யுயிரையறுத்துண்ணுங் கரியகண்ணையுடையாளென்ப. (௨௯)

புலம்புமோந்தையினொந்தெனப்பொன்னிடச்
சிலம்புமேல்வலச்சீறடியூன்றிவில்
லலம்புனைந்தபொற்றூணயற்பொன்மலைத்
தலம்புனைந்தமின்சாயலொத்தாளரோ.

உரை.— நொந்தார்ப்போலப் புலம்பினவிடக்காலின்பொற் சிலம்பின்மேல் வலக்காலையூன்றிநின்று கதிரைமாலையாகவணிந்த, பொற்றூணண்டையிற்சாய்ந்து பொன்மலையிற்சார்ந்த மின்னின்சாயலாகநின்றாளென்ப. (௩௰)

தீதிற்கலாபமுடோன்றவிளிம்பெடைத்
துகிர்க்கொடாயலர்கிள்ளியுதிர்த்தெழு

மகிழ்கவர்புகை தூதுவிட்டங்குழல்
முகிற்கவர்மினின் மின் முகங்கோட்டுவாள்.

உரை. — உடுத்ததுகிலின் ரேகையுள்ளுத்தோன்ற விளிம்பினைத்தூக்கி யுகிரைக்கொண்டணிந்தபூமாலையைக் கிழித்து தறி யகில்வெந்துசூழக்கிளம்பும்புகையைக் காமாதுரரை யழைக்கத்தூதாகவிட்டுத் தன்னழகியகூந்தலாகிய மேகத்தினின்றிறங்கினமின்னைப்போல வோயாமல் மின்னினமுகத்தையசைத் திங்கங்கே திரும்பிப்பார்ப்பாளென்ப. (௯௧)

பாற்கலந்தன நஞ்சுபருகிறார்
போற்கலந்தனவின் பொடுபுன்கணை
மாற்கலந்தமனத்துணமைந்தர்சூழ்
வேற்கலந்தகண்வெஃகிநெருங்கினார்.

உரை. — பாலோடுகலந்தநஞ்சினைக் குடித்தார்போல வின்பத்தோடுகலந்ததுன்பங்களை மயங்கினமனதில்ருந்தச் சூழ வநேகம்பேர் கொல்லும்வேலுடையவிருகண்வடிவினைவிரும்பி நெருங்கிநின்றாரென்ப. (௯௨)

காமத்தீயெழவோர்நகைகாட்டினள்
வீமத்தீயெழவெஞ்சினங்காட்டுவாள்
தூமத்தீயெழத்தோன்றிருள்போன்றகண்
வாமத்தீயெழவுண்ணிசிமல்குமால்.

உரை. — காமத்தின்றீயுட்பற்றியெழும்ப வோரோரிடத்தப்புன்னகையைக்காட்டினபின் புள்ளம்வேகுநெருப்பாகவச்சந்தோன்றக் கோபத்தைக்காட்டுவாள், சூழத்தீவெந்தவகிற்புகை வெளிமறைத்திருண்டதுபோல வவளிருகண்ணுங் காந்தியைக்காட்டிக்கண்டார்மனத்திலிராவாகுமென்ப. (௯௩)

மஞ்சுதோய்சிறகாடியமஞ்ஞைபோல்
நஞ்சுதோய்மனநங்கைநருவகில்
மஞ்சுதோய்துகிலாடிவதிந்தகால்
நெஞ்சுதோய்தகவோர்நெறியெய்தினார்.

உரை.— மலையின்மேல்மேகத்தைக்கலந்த தன்றோகையை விரித்தாடின மயிலைப்போல நஞ்சிற்றோய்ந்தமனத்தையுடையவம்மடத்தையும்வாசனைபொழிந்தவகிற்புகையழகினிற்றோய்ந்த தன்புடவையின்றோகை விரித்தாடியிருக்கும்போது நெஞ்சிலணிந்தமாட்சிமையுடையம்மரியுஞ்சூசையு மவ்வழியேவந்தாரென்க. (௫௪)

கோலமூடியவங்கக்குடத்தினை
சீலமூடியதீமன்கண்டுகார்
நீலமூடியபானொடுநேர்மிடி
சாலமூடுதலைவியிரங்கினாள்.

உரை.— கோலமிட்டவங்கப்பானையினிகராய முகத்தினழகினால்மூடப்பட்ட விவளுடையதீயமனத்தைக்கண்டு மேகத்தினால் மூடப்பட்டசூரியனைப்போலத் தரித்திரக்கோலத்தால் முழுதுமூடப்பட்டவிராக்கினியாகிய மரியென்பவருள்ளேயிரக்கத்தைக்கொண்டுபார்த்தாளென்க. (௫௫)

வீய்கலந்தவனப்பொடுவீங்குளம்
பேய்கலந்துகுடியெனப்பேர்கிலாத்
தீய்கலந்தசிதைவுடைப்பேதையை
நோய்கலந்தவுயிர்ப்பொடுநோக்கினாள்.

உரை.— பூவணிச்சாயலராய்நின்றவடிவினாலோங்கினவிம்மடந்தைமனதிலே கலந்து குடியாகநின்ற பசாசுவிட்டகலாமற் பாவமுங்கேடுங்கொண்டவிப்பேதையை மரியென்பவள் தன்மனநோகப் பெருமூச்சுவிட்டுப் பார்த்தாளென்க. (௫௬)

கண்டதீயவையல்லதுகண்ணுறாக்
கொண்டதீயவையெண்ணுவர்கொல்லெனா
வுண்டதீயவுளத்திலுறைந்தபே
யண்டவர்கைவளற்கவள்சூட்டினாள்.

உரை.— கண்ணாற்கண்டதீமையல்லாமற்காணாதுள்ளேகொண்டகேடுகளை மதிப்பாருண்டோவென்று மரியென்பவள்

வானினின்றுவந்த விருதேந்தினருசையுங்காண வப்பாவியி
ன்மனதிலேயிருக்கும் பசாசைக்காட்டினனென்ப. (௯௭)

கொடியகோற்கொடுவாண்டகுனுக்கினம்
மடியருற்கொடுவந்தவனும்வந்
கடியவேற்கொடுவக்கடியோட்டெறு
நெடிய்கோற்கொடுநின்றனனின்வேண்டினன்.

உரை.—கொடுமையைச்செய்து பூவுலகினையாண்டிருந்
தபசாசுகளெல்லாங்கெட வவதரித்து மனிதனாய்வந்தநாத
ன் றிருநாமமென்னும் வல்லவேலைக்கொண் டப்பேயை
யோட்டுநீயென்று நெடியபூங்கொடியேற்றிநின்றருசைவே
ண்டிக்கொண்டானென்க. (௯௮)

மொய்கொள்நீரொடுமூவுலகிற்கெலா
மெய்கொள்நாயகிமேவியுள்ளேவலால்
மைகொள்சோருபழம்பதிமாற்றிவாய்ப்
பொய்கொள்வேகநரகுறப்போயதே.

உரை.—பொருதுந்திரைகளைச்சுருட்டிமாறுங் கடலோடு
ள்ள வுலகமூன்றிற்கு மெய்யானவரசாளாகிய மரியென்பவ
ளிரங்கி மனத்திலேவினதினற் குற்றங்களைக்கொண்டுயிடும் ப
சாசு தன்பழம்பதியாகிய வந்தப்பெண்ணினெஞ்சினைவிட்டு
ப்போய்ச் சொன்னபொய்படருஞ் சீக்கிரத்திலே நரகத்து
க்குப்போனதென்க. (௯௯)

கள்ளங்காட்டுகுனுங்குகடிந்தபின்
னுள்ளங்காட்டுபளிங்குணர்ந்தர்லென
வெள்ளங்காட்டுவாலாமைவிழுங்கெனு
மள்ளங்காட்டிமாழ்ந்தேனெனநாணினள்.

உரை.— பொய்யைக்காட்டிமயக்குவிக்கும் பசாசவளைவி
ட்டுப்போனபின்புதன் னுள்ளத்தைத்தனக்குக்காட்டினவொ
ருகண்ணாடியைப்பார்த்தாற்போல மரியால்வந்தவெள்ளங்
காட்டி யுள்ளவசுத்தங்களையெல்லாம் வாரிவிழுங்குவதுபோ

லநாளும்பாவத்தி லென்வல்லமைகாட்டிக்கெட்டேனேயெ
ன்று நாணினாளென்க. (௪௰)

உவாவமர்த்தியவங்குசமொப்பெனத்
வாவயத்திவடாங்கியநாணமே
சுவாதமைத்துகட்டுடைத்தோர்கணா
யவாவுடைக்கடற்கரங்கடைத்தாளரோ.

உரை.—மதயானையைமர்த்தினவங்குசத்தினிகராந யிவள் தப்பாததேவவல்லமையினு லடைந்தநாணமே யின்பத்தினு சையால் வந்தகுற்றங்களைத்துடைத்து நீக்கி யதைக்கொண் டொருகரையாக வாசையென்னுமுடைந்தகடலை யடைத்தா ளென்க. (௪௧)

நாணிநாணுபநாடியகாரணங்
காணிலாள்வெருவுங்களியுங்கொடு
வாணிலாவிழிநித்திலம்வார்முகங்
கோணியொன்றுரையாக்குழநீங்கினாள்.

உரை.—நாணியுநாணுதற்குக் காரணந்தேடிக் காணாமலு ம் பயமுங்களிப்புங்கூடவுள்ளடைந்து வாளொளிவிளங்கின விருவிழியினின்றிழிந்த வெண்முத்துகளைவாரின தன்முகத் தைச்சாய்த்தொன்றுஞ்சொல்லாம விருந்தகூட்டத்தையக ன்றுபோனாளென்க. (௪௨)

## வேறு.

நீரார்பவளத்துறையி னிரைநித்திலமுய்த்தென்ன
வேரார்துவர்வாய்முறுவ லிலங்கநின்றாளேதோ
சூரார்முகத்தோடுரையாத் துறந்தாளென்றுங்குறைந்தார்
வாரார்கழலார்த்திடிப்ப வருந்திவெருவிப்போனார்.

உரை.—கடலிலுள்ள பவளத்தினீண்டதுறையிலே வெ ண்டரளங்களை நிரையேகோர்த்துவைத்ததுபோல வழகிய த ன்பவளவாயிலே வெள்ளெயிறுதோன்றச்சிரித்துக்கொண்டு நின்றாளே யிப்போதேதோ அக்கறுமமா யொன்றுஞ்சொ

ல்லாம லகன்றுபோனாளேயென்று முன்னவளைச்சூழ்ந்திரு ந்தவரெல்லாரும் வாராற்கட்டினகாலணிகளார்ப்ப விரைவா ய்நொந்து பயந்துபோனாரென்க. (௪௩)

விண்டோய்மாடத்தொதுங்கி வினையற்றுளந்தாண்டு
ணர்வாழ்
கண்டோய்புனலாடினடன் கசடேகருதுந்தன்மைத்
துண்டோயிலமெஞ்ஞானத் துறுதித்துணையோரமரன்
மண்டோய்துகடீர்ந்தவன்றாய் விடவேமனமோங்கினளால்

உரை.—காந்தரியோவென்றால் மேகத்திற்புகுந்துயர்ந்த தன்மாடத்தினுள்ளொதுங்கிப் பாவஞ்செய்தவினையொழித் து மனத்தைத் தாண்டினநினைவினாற் கண்பொழிந்தநீராடித் தான்முன்செய்தகுற்றங்களைக்கருதுந்தன்மையா லோயாம லுள்ளடைந்தமெய்ஞ்ஞானநிலைக்கும்படியுறுதித்துணையாக வவளண்டைக்கொருவானவனைப் பூவுலகின்பாவங்களைத்தீர்க் குநாதனுக்குத் தாயாகியமாமரியனுப்பினதினா லவள் மனவீ ரத்தைக்கொண்டோங்கினாளென்க. (௪௪)

இன்னேபிரவிகாணந்தகனே ரியல்கொண்டின்னாள்
பொன்னேமணியேபொலியோர் பெயர்கொள்வலைகாளும்
மாற் [தே
கொன்னேகுழையப்பிறரும் குழைந்தேனெனநொந்தழு
மின்னேமின்னிப்பெயுங்கால் விழும்போல்விழவீர்த்தெறிந்
தாள்.

உரை.—ஒருகாலுஞ்சூரியனைக்காணாதகுருட னொருநாள் சூரியனைக்கண்டா லதிசயித்தத்தன்மையா விவளு ஞானத்திற் றெளிந்து பூண்டவாபரணங்களைநோக்கிப் பொன்னென் னுமணியென்னு நற்பெயர்பெற்று மனத்தைச்சிறைசெய் யும்வலைகளே யுங்களாலல்லோ வீணாய்ப்பிறருங்குழைய நா னுங்குழைந்தேனென்று நொந்தழுது பெய்யும்போது மி ன்கள் மின்னிவிழுவதுபோலப் போர்த்தவாபரணங்களு மி ன்னிவிழ வறுத்தெறிந்தாளென்க. (௪௫)

விண்டிக்கொழுகிக்குழல்சூழ்விரைவீசிய தண்டொடை
வண்டிற்கிரைசெய்தெனையும்வண்டிற்கிரைசெய்தீரோ [கா.ள்
யிண்டிக்கொழுகாநஞ்சிட்டீ ரென்றிவளுட்சினந்தே [ள்.
தெண்டித்தெனப்பூந்தாளாற் றேய்த்தாளுதைத்தாளுடைத்தா

உரை.—மலர்ந்துதேனொழுகி யென்கூந்தலைச்சூழ மது வாசப்பூமாலைகளே, பொழிந்தமதுவினால்வண்டினத்திற்கு விருந்துதந்து வண்டென்னும் பாவத்துக்கென்னையுமிரையாகச்செய்தீர், பின்னையுமெனக்கினியதேனைப்பொழியாம லுயிரைக்கொல்லு நஞ்சினைத்தந்தீரென்றுகோபித் தவற்றைத்தெண்டிக்குமாப்போலே தன்பூங்காலாற்றேய்த்தாளே, துவைத்தாளே, துடைத்தாளேயென்க. (௬௬)

அருப்புமடறேன்குளிரொன் றணியாய்முலைகுழலங்கா
கருப்புவில்லேவியவெங் கணையாய்மனமேகருக [ள்
விருப்புச்செய் துண்ணுழைந்தே வெந்தீப்புகுத்திக்கொன்
றீர் [ள்.
நெருப்புக்கொணர்ந்தீர்நெருப்பில்வேவீரெனச்சுட்டிட்டா

உரை. — அரும்பின்மடலினின் றொழுகினதேன் குளுமையென்று நான்முலைமேலணிந்தமாலைகளே, மன்மதன்றன்கருப்புவில்லைவளைத்தெய்யும் பூங்கணையே நீங்களாகி யென்மனமே கருகிப்போக வாசையைப்பிறப்பித் துள்ளேநுழைந்து வெந்தீயை மனதிற்புகுத்தி யென்னுயிரைக்கொன்றீர், நெருப்பினையெனக்குக்கொண்டுவிட்டீரோ நெருப்பிலே வேவீரென்று சுட்டெரித்தாளென்க. (௬௭)

சுண்ணங்கலவைசுதைசாந் தெனும்வண்டிவருஞ்சே
றே
திண்ணங்கொண்டாயென்றார் சடமேயென்றார்தழலும்
வண்ணங்கொண்டாயெனவேன் மனமேயறியுங்கசடா
யெண்ணங்கடியவெரிந்தேனெரிந்தேனென்றெறிந்தாள்.

உரை.—சுண்ணமென்றுங் கலவையென்றுஞ் சுதையென்றுஞ் சாந்தென்று முதலியபெயர்பெற்றாலு முள்ளதன்

மைந்நோக்கில் வண்டினம்விரும்பினசேறுதானே, நீகுணமை
கொண்டாயென்றவர் பொய்யேசொன்னார், வேகுங்குணங்
கொண்டாயென் றென்மனமேயறியும், பாவமாகியென்சங்
கைக்கேடாக வெரிந்தேனெரிந்தேனே யென்றதையெறிந்தா
ளென்க. (௪௮)

பண்ணே நீயோர்முலையாய்க்கீதம்பாலாய்ச்சுரந்தேன்
கண்ணேகாத்தகனிவா லூட்டிக்காமக்குழவி [ன்
பெண்ணேயறியாவளர்த்தேன் பெரிதாய்க்கணையாற்சுடுமெ
றெண்ணேனிதற்கேயினஞ்செய் திருந்தாய்நீயென்றொடித்
தாள்.

உரை.—வீணையேயுன்னை யோர்முலையாகக்கொண்டு சங்கீதத்தைப்பாலாகச்சுரந்தேன் சுரந்தபாலை நானென்கண்ணைக்காத்த வன்போலூட்டிக் குழந்தையாய்நின்றமன்மதனைப் பெண்புத்தியாகவறியாமல்வளர்த்தே னவன்பெரியவனாய் வளர்ந்தபின் றன்கணையாலென்னைச் சுடுமென்றெண்ணாதே போனே னிதுக்கெல்லா மினஞ்செய்தாய்நீயே யென்றதை யொடித்தாளென்க. (௪௯)

வாயேகரமேசெவியே மருளுங்கண்ணேமூக்கே [ள்
போயேவினைகொண்டுள்ளே புகுமைம்பகையாம்பொறிகா
நீயேகொணர்ந்தீரெனவுட் சிறைசெய்தொழுப்பேனொழுத்
கோயேனோயேனெனவுள் ளூக்கங்காவற்கொண்டாள். [தற்

உரை.—வாய் கை செவி கண் மூக்கென்று நீங்கள்நியாயத்தைக்கேளாமற்போய்த்திரிந்துகொடியவினைகளைக்கொண்டு திரும்பியுளத்தினுழையு மைந்துபகையாகிய வைம்பொறிகளே யெனக்குத் தீயவற்றைக்கொண்டுவந்தனிரே·யினியுங்களைச் சிறைச்சாலையிலடைத்துவாதைசெய்வே னிதிலேயென்று மோயேனேயோயேனேயென் றதுகளைமனதிலடைத்தடக்கி மனவூக்கத்தைக் காவலாகவைத்தாளென்க. (௫௰)

மீனேகொடியாய்விதுவே குடையாய்வேலைமுரசாய்க்
கானேயுமிழ்பூக்கணையாய்க் கழையேதனுவாயுருவம்

நானேயெழுதிநாமம் வேளென்றேனென் னுயிரைத்
தானேயுண்டா னினிக்கொல் சமனுக்குவனென்றாள்.

உரை. — சுறாமீனைக்கொடியாகவுஞ் சந்திரனைக்குடையா கவுங் கடலைமுரசாகவும் வாசமலரையம்பாகவுங் கரும்பினை வில்லாகவும்வைத்து நானேயோருருவத்தையெழுதி யதற்கு மன்மதனென்னும் பெயரைவைத்தே னதின்பின்பவன்றானே யென்னுயிரையுண்டானாகையாலினிமேலவ்வுருவத்தை மாற்றியமனாகவெழுதுவேனென்றாள். (முன்காமம்வளரமன்மதனை யினிதாய்ப்பார்த்தவள் பின்பு ஞானம்வளரச் சாவைத்தியானிப்பளென்பது கருத்து.) (௫௧)

நின்னைமறந்தாய்நெஞ்சே நெடுங்கோனீதிவல்லோன்
றன்னைமறந்தாய்நெஞ்சே தழலத்தழல்கீழுலகுய்த்
தென்னைமறந்தாய்நெஞ்சே யினிமுன்விழைந்ததெல்லாம்
பின்னைமறப்பாய்நெஞ்சே யென்றுப்பெரிதார்த்தழுதாள்.

உரை. — என்னெஞ்சமே நீயுன்னைமறந்தாயே, எங்குஞ் செல்லும்படி நீடியகோலேந்திய நீதிபரனைமறந்தாயே, என்னைப் பாவத்தில்வீழ்த்தி யெக்காலமும்வேகாமல்வேகவு ழித்தீயெரியுநரகில் விழவேதுவாகியென்னைமறந்தாயே, அத்தனையுமறந்தபின்பு நீமுன்னேவிரும்பினதெல்லாத்தையு மினிமறப்பாயேயென்று மிகவுமுளைந்தலறியழுதாளென்க. (௫௨)

கண்ணீராடிக்கழுவுங் கசடற்றுணர்ந்தஞானத்
தெண்ணீராடித்தெளிந்தா ளளியுண்ணிறைதேவருளின்
றண்ணீராடிக்குளிர்ந்தா டவறுவறமாபுணரிக்
குண்ணீராடியுயர்ந்தா ளுருவேறியல்வேறானாள்.

உரை. — அழுதகண்ணீர்ப்புனலாடிக் கழுவினதன்குற்றங் களைத்துடைத் துணர்ந்தஞானமென்னுந் தெளிந்தபுனலைக் குளித்துத் தானுந்தெளிந்தாள், தெளிவடைந்தமனதிற்றோன்று தேவவருளென்னுங்குளிர்ந்தபுனலாடித் தானுமுட்குளிர்ந் தாள், தவறுந்நிலைபெற்றநல்லறமென்னு மாகடலினுள்ளே

குளித்துத் தானுயர்ந்தாள், மேனியுருவினால்வேறாகிக் குணத்தினாலும் வேறானாளென்க. (௫௩)

உள்ளங்கெடவுட் குடியா யுறைந்தகுணுங்கோட்டியழி
கள்ளங்கெடமெஞ்ஞானங் காட்டிக்கடந்தேகினுங்கான் [ன்
வெள்ளங்கெடமல்கருள்சேர் வியன்வான்கிழத்தி நிழலால்
வள்ளங்கெடவுள்வரமெய்தியவம் மடந்தையொசிந்தாள்.

உரை. — உளத்தைக்கெடுத் தங்கேகுடியாயிருந்தபேயை யோட்டினபின்பு பொய்யொழித்தமெய்ஞ்ஞானத்தை யிவட்குக்காட்டி யிவ்விருவரப்பாற்கடந்துபோனாலுங் காட்டு வெள்ளத்தினு நிறைந்தகயையுள்ள வகன்றவானரசாளாகிய மரியென்பவளிவட்குச்செய்த நிழலாதரவினா லுளவிறந்தவரங்களையடைந்துயர்ந்தா ளந்தமடந்தையென்க. (௫௪)

இவ்வாறெவ்வாறுள்ளங் கெட்டவெப்பொருளோவுதவிற்
றவ்வாறன்னுளகற்றி யட்டைம்பொறியைப்புதைத்து
வவ்வாதொருமாறின்றிப் பலநாள்வானோர்க்கரசாள்
செவ்வாறுளத்துத்திறன்செய் தறஞ்சேர்கதியேசேர்ந்தாள்.

உரை. — இத்தன்மையா லெம்முறையானு மெய்பொருளானுந் தன்னுளங்கெட வுதவிவந்ததென்றுகண்டாளோ வதெல்லாத்தையு மவள்கற்றி யைம்பொறிகளையுங்கொன்றுபுதைத்துப் பிடித்தஞானவழியை மாறாமற் பலநாளுமிருந்து வானவர்க்கரசாளாகிய மரியென்பவள் நீதியொழுக்கத்துநின்ற வப்பெண்ணுள்ளத்திற் கொடுத்ததிறத்தினால் நல்லறஞ்சேரும் பரமகதியைச்சென்றாளென்க. (௫௫)

அப்பால்நடந்தாரண்டத் திருவஞ்சுடரொத்தன்னா
ரொப்பாலனைத்துமியலுந் தயையால்லீர்கின்றெவர்க்கு
மொப்பாலடையாமரபா லியிசாயுடலாய்த்துயர்செய்
வெப்பாலயர்கின்றுயிர்கள் விரிவாய்நிழற்றிப்போனார்.

உரை. — வானிற்றிரியுமிருநற்சுடரை நிகர்த்தமரியுங்குகையு மப்பால்நடந்துபோன விடங்களெங்குந் தத்தயையைக்

கொண்டெதிர்ந்தயாவர்க்கு மொவ்வாதமுறைமையோ டுயிருமா யுடலுமாய்த்துயரமழலால்வெந்துநொந்தவுயிர்க்கெல்லாம் விரிவாகநிழல்செய்துபோனானென்க. (௫௬)

என்பாநிகராவின்பா லிவையாங்கங்காவிவரீஇ
மின்பால்வெயில்செய்மிடைவின் னவரீராயிரர்சூழ்ந்
தன்பானுகுந்தன்மைத் தைம்வைகலும்போயபின்
பொன்பாலுயர்பெத்திலேமாம் பொலிமாபுரமண்ணினனே.

உரை. — தான்பாவானிகரப்படாதவின்பத்தோடிவையெல்லா மப்பொழுதங்கேநடந்து மின்சாயலாய்விளங்கினவானவர் பதினாயிரருஞ்சூழ வன்போடணுகிவர வைந்துநாள் போனபின்னர் பொன்னால்விளங்கினபெத்திலேமென்னுமாநகரையடைந்தானென்க. (௫௭)

## வேறு.

ஓடையாய்ப்பெரிதொலித்துப்பெயர்ந்தவெள்ள மொழுகியபின்
கோடையாய்வற்றுமெனவழியிற்கொண்ட கூர்நயமே
மாடையாயிலங்குநகர்வந்துமாற்றி மருவியதோர்
பீடையாயுணங்கினார்வருந்தும்பெற்றி பெரிதெனவே.

உரை. — மாரிகாலத்தி லோடைகள்நிறைந்துமுழங்கியோட மலையினின் றுபெயர்ந்தவெள்ளமோடினபின்பு கோடைகாலமாகியதெல்லாம்வற்றிப்போந்தன்மையா லிவரும்வழியிலே யடைந்தமகிழ்ச்சியைப் பொன்னால்விளங்கினநகரில்வந்தபின்பு மாற்றி யடைந்தபீடையால் மனமுள்வாடியிவர்வருந்தினதன்மைபெரிதென்க. (௫௮)

எரிமாலைதாங்குடலாற்பகல்செய்விண்ணோ ரிருபுடையிற்
புரிமாலைகாண்டலிலர்ப்பொலிவான்மாட்சிப் புலமையினோ
ருரிமாலைகாண்டலிலாவெளிமைபோர்த்த வுருத்தோன்றத்
திரிமாலைகண்டவர்தாஞ்செய்தநித்தை செப்பலுற்றும்.

உரை. — ஒளியைமாலையாகச்சூழ்ந்தவுடலினாற் பகலைச் செய்யும்வானவ ரிருபுடையிற்செல்லு மொழுங்கினைக்காணா மலு முயர்ந்தவான்மாட்சிமையா லிவர்க்குரியதகைமை காணா மலு மெளிமையைப்போர்த்த வுருவேதோன்ற விவர் திரியு முறைமையொன்றினைக்கண்டவ ரிவர்க்குச்செய்த நிந்தை யையுணர்ப்பாமென்க. (௫௯)

மலர்சிறையையொழித்தவர்தம்வருத்தங்காணா வழிமுடு
கித் [ப
தண்சிறைசெய்கடன்மூழ்கிப்பருதியங்கண் டாழ்ந்தொளிப்
வொண்சிறையொய்யளிகளழமுளரிதன்று துடன்றடைப்பக்
கண்சிறைசெய்கங்குலிநகரிற்சென்றார் கருணைவலார்.

உரை. — பூவுலகத்தோர்க்குள்ளசிறையை நீக்கவந்தவிவ ரையும்வருத்தத்தைக்காணாதபடிக்கு முடுகிநடந்து தனக்குக் குளிர்ந்தசிறையைச்செய்யுங் கடலினுள்முழுகிச் சூரியனொ ளித்துப்போகவு நல்லிறகினைவிரித்துப் பொருந்துகின்ற வண் டுகளழவுஞ் சினந்ததாமரை தன்னிதழ்க்கதவினையடைக்கவுங் கண்ணுக்குச்சிறையாக விருண்டவிரா துவக்கும்போது ப ட்டணத்திற்சென்றார் கருணையின்வல்லோரென்க. (௬௰)

சாதியினனிகர்க்கரியமலர்மென்றாளின் றகுதிநலாள்
வீதியினலெய்தியநோயாற்றவெஃகி வெயில்மிடைந்த
வேதியினுளத்துயர்ந்தோனெனுங்குந்தன்மைத் துறையு
ளருட்
சோதியினலவிர்முகத்தி னறவோர்க்கேட்டுத் துருவினனால்.

உரை. — செண்பகத்தானிகராத மலர்ப்பாதத்தையுடைய கன்னி வழிநடந்தடைந்ததுயரையாற்ற வாசையினாற் றெளிந் தவுணர்வோ டுளத்துயர்ந்தகுருசை யொதுங்கியிருக்கும்படி யொருமனையிலிடந்தேடி யருளால்மலர்ந்தமுகத்தோ டுறவி ன்முறையாரைக்கேட்டானென்க. (௬௧)

அலைப்பதற்கேயருங்கடலாம்வரவுட்பொங்கி யாக்க
மிவன்

கிடைப்பதற்கேயுறவுகிளைதேடும்பாலாற் கிளர்நிரப்பிற்
படைப்பதற்கேயரியபொருட்கொண்டார்க்கல்லாற் பயன்ப
யவாத் [மதே.
துடைப்பதற்கேயருமவறுமையவர்க்கொன்றுண்டோ சற்ற

உரை.— அடைக்கப்படாதகடலாகியவாசமனதிற்பொங்கினதினா லிவ்வுலகினு டியங்கிடைக்க வுறவின்முறையை மனிதர்தேடினதினால் நிறையக்கொடுக்கப்பொருட்செல்வங்களையுடையார்க்கல்லாதே பிறர்க்குப்பயவாது மாற்றப்படாதவறுமையுள்ளோர்க் குறமுறையாரில்லையென்க. (௬௨)

நஞ்செஞ்சாக்காஞ்சிரங்காயழகென்றெண்ணி நச்சுவர்
போல்
விஞ்செஞ்சாவினைபயக்கும்பொருளேவெஃகி விழிகடந்த
மஞ்செஞ்சாவருட்செல்வமென்னாமூடர் வறியரொ
நெஞ்செஞ்சாத்திருவோரையெவரோவென்று நீக்கினரால்.

உரை.— குறையாமல்நஞ்சினைப்பொழிந்த வெட்டிப்பழத்தையழகென்றுவிரும்பினாரைப்போல வெப்பொழுதுந் துன்பங்களைமிகுதிசெய்யும் பொருளைவிரும்பிக் கண்ணைக்கடந்தவடிவுகுறையாமல் நிலைபெற்றவருளின்செல்வத்தைமதியாதவறிவில்லார் வறியரைப்போலத்தோன்றி நெஞ்சிலேநிறைந்தமாட்சிச்செல்வத்தையுடையவிவரைக்கண் டெவரோவென்றுதள்ளினாரென்ப. (௬௩)

பொன்னன்னபொலிந்தநகர்புடைகடோறும் புகுந்
தின்னார்
மின்னன்னவிரைந்திரியவுருமென்றனார் விடைந்துடற்றப்
பின்னன்னமுகிலுறைபெய்யன்னகுலைசை பெரிதழுந்து
முன்னன்னநகருதவியுணர்ந்தபாவால் முழுதுணர்ந்தான்.

உரை.— பொன்னொளியாலுயர்ந்த நகருள்ளவிடங்களையெல்லாம்புகுந் திவர்மின்களைப்போல விரைவிற்றிரியவே யவ்வூரா ரிடிகளைப்போலச் சினந்துசீறினதினால் மின்னியிடித்தமேகமழையைத்துளித்ததன்மையாற் குசைமிகவுமழுந்தா

ன்முன்னரந்நகராதரவாகுமென்றுநினைத்தனா. விப்பொழுது மிகவும் வருந்தினானென்ப. (௬௪)

நான்செய்தகுறைதானோநகரோசெய்த் நவைதானோ
தான்செய்தவிதிதானோதரணிகாக்கத் தற்பரனீங்
கூன்செய்தவுடலொடெழவிடமொன்றில்லை யுலகிலெனாத்
தேன்செய்தபூவூர்த்தோனரற்றிவிம்மித் திரிவானும்.

உரை.— நான்செய்தகுறையினாலோ விதிகள்செய்தபாவத்தினாலோ தான்செய்தகட்டளையினாலோ வாண்டவன் பூவுலகத்தையிரட்சிக்கவெடுத்தமேனியோடுபிறக்க விங்கேயிடமொன்றுமில்லையென்று மதுவைப்பொழிந்த பூங்கொடியோன்குசை யழுதுவிம்மி யங்கங்கேதிரிவானென்ப. (௬௫)

இகழுவரொன்றிகழ்வின்றியருளாற்றின்னா ரிகழ்ந்தாரும்
புகழுவரொன்றாசிநலம்புகன்றுவாழ்த்திப் புரையெண்ணா
நிகழுவரோநெகிழுவரோவணங்கிக்கேட்கி னிந்தையுறி
மகிழ்வரோமருட்டும்வசவரிந்துவாய்ந்த மாட்சிநலோர்.

உரை.—எல்லாருமிகழ்ந்தாலுந் தாமிகழாமற் றலைகொண்டிவர்தம்மையிகழ்ச்சியைச்சொன்னவரும் புகழ்ந்தாரொன்றெண்ணி பின்பமா யவரைத்துதித்துவாழ்த்தி யதுகுற்றமென்றெண்ணாமற்றிரிவார், குழைவார், தாம்பணிந்துகேட்குமிடத் தவர்சொன்னநிந்தைகளைக்கேட்டுமகிழ்வார்மயக்குவிக்கு மாசையெல்லாமறத் துயர்ந்த மாட்சிமையுடையோரென்ப. (௬௬)

தன்னுயிர்சேர் துயர்கண்டுமகிழ்ந்தநல்லோன் றன்னுயிரி
னின்னுயிர்சேர் துயராற்றவிரும்பியெங்கு மிரிந்திரப்ப
மன்னுயிர்சேருறவெமக்குச்சேராவென்னில் வறியனாத்
தன்னுயிர்சேரிரக்கமெமக்கிலதேனென்றுச் சொல்லுற்றான்.

உரை.— தானடைந்ததுயரால் மகிழ்ந்தகுசை தன்னுயிரினுமினியவுயிராகிய தன்றுணைவியடைந்ததுயரைப் பொறு

ம லாவலேமெடெங்குந்திரிந்திரந்ததன்மையால் மனிதர்க்குள்ளவுறவின்முறை நமக்கில்லாயினு மிரப்போரொன்று வந்தவர்க்குள்ளவிரக்கமாகிலு மெங்கள்மேலிராதோவென்று சொல்லத்துடங்கினனென்க. (௬௭)

அடுத்திரப்பார்க்கார்வமுறவளித்தநன்றி[illegible]ஞர்க்கட்லே
மடுத்திருப்பக்கணையன்றோவென்றுகூப்பி வணங்கிருகை
யெடுத்திருப்பக்காய்முகனேடெள்ளுந்தன்மைத் தெவரெவரும்
கடுத்திருப்பக்கண்ணருவிகடுகநொந்தான் கடிக்கொடியான்.

உரை:— அண்டினவிரப்போர்க் கன்போடுதந்தநன்மை தானே துன்பக்கடலைமறித்தடைக்குங் கணையாமல்லோவென் றுதொழுதிருகையைக்கூட்டித்தலைமேலெடுத் திவனிற்பவே சினத்தாற்காய்ந்தமுகத்தோடெல்லாரு மிகழ்ந்து கோபித்த தினு லாருகக்கண்ணீரைவிட்டழுதுநொந்தான் வாசப்பூங் கொடியையேந்தினசூசையென்க. (௬௮)

துன்புற்றகாலொருவர்க்கிரங்கிச்செய்த துணையுறுதி
பின்புற்றகாலொருவர்மறந்தாலஃதே யிவர்க்கிறுதி
பின்புற்றகா லுயர்வான்றரும்வித்தென்பான் பெரிதுவப்ப
முன்புற்றகால்மொழிவாய்ஞானமென்று முனிநகைத்தார்.

உரை.— ஒருவர் துன்பத்தையடைந்தபோ திவர்க்கிரங்கிச் செய்தவுதவியை யிவர்தாமின்பங்களையடைந்தபின்பு மறந் தாலு மந்தவுதவிதானே யொருநல்வித்தாகி நன்மைசெய்தவர்க்கிறுதிக்காலம்வந்தபோ துயர்ந்தவான்வீட்டைத்தருமென் பான்சூசை யப்போதவர் நாமிகவுங்களிகூர முன்னேவந் தாயாகி விந்தஞானங்களைச்சொல்லலாமேயென் றவனைநகைத்தாரென்க. (௬௯)

நலஞ்செய்வான்விருப்புற்றூர்நேரந்தேடார் நசையற்று
சலஞ்செய்வார்கிலஞ்செய்யார்வணிகராக்கம் வரல்வெஃகிர்
பலஞ்செய்வார்போ லுயர்வீடியற்று நன்றி யமைவதற்கே
நலஞ்செய்வார்திவுற்றொன்றுதாழ்ந்து பணிவானும்.

உரை. — நன்மைசெய்யவாசையுடையோ ரதற்குச்சம யத்தேடாரே யவ்வாசையில்லார் சலஞ்சாதித்தற்பமாகினுஞ் செய்யார், செட்டிகள்தமக் கூதியம்வரவாசையினா லதற்கு வக்கயமையவுஞ்செய்வா ரத்தன்மையா லறிவுடையோர் வர ன்வீட்டி னுள்ளநன்மைகிடைப்பதற் கிடஞ்செய்வாரொன் று விழுந்துதொழுவான் குசையென்ப. (௭௰)

பானேரப்படியபண்கோகிற்கின்பம் பயவாப்போல்
வேனேர்ப்பாய்துயர்கொண்டிவற்றைக்கொன்னே விளம்பி
யிவர்
நூனேரப்ப்ராய்நெடியமறுகிற்செல்லா நொந்தொழுகிற்
கோனேரப்பாவியகையிறையுமெண்ணுங் கொடுத்தனரே.

உரை. — இனியபால்போலப் பாடினவீணை கழுதைக்கின் பஞ்செய்யாததன்மையா லெறிவேல்போல வுளத்திற்பாய்ந் ததுயரைக்கொண் டிதெல்லாம்பயனின்றி யெவர்க்குஞ்சொ ல்லிக்கொண்டு நாவினும்வழாமலோடின நெடுந்தெருவெல் லா மிவர் நொந்துநடக்கும்போ தச்சமயம்விடாம லிராசா க்கட்டளையின்படி கையிறையுமெண்ணிக்கையுந்தந்து கட னைக்கழித்தாரென்ப. (௭௧)

செய்முறையாவையுந்திருந்தித்திறம்பா நீதிச் செழுந்
தகவோர்
கைமுறையாமிறைதந்துமலர்த்தாணல்லாள் கடிவருந்த
மெய்முறையாற்கடலெர்க்குநகரமெல்லா முடுகியபின்
மைமுறையாவிரவினடுமருவக்கண்டு வளன்சொல்வான்.

உரை. — வேண்டியமுறைமைதப்பாமற் றிருத்திக் குறை யாதநீதியின்மாட்சிமையுடையோர் கையிறைதந்து மலர்ப் பாதத்தையுடையகன்னித்தாய் மிகவும்வருந்தப் பொருந் சையுமுறையினாற் கடவின்சாயலாகியநகரெல்லாம் விரைவிற் றிரிந்தபின்ன ரிருண்டநடுச்சாமங்கிட்டினதாகக்கண்டு கு சைசொல்வானென்ப. (௭௨)

நிலத்தியல்பாற்றுளிநன்னீர்திரிந்ததோற்ற நிகரொன்ச்
சேர்

குலத்தியல்பாற்கிழமைநிலைதிரிகுமென்றார் குறைகளைவொன்
கிலத்தியல்பாற்கிளைத்தனவிக்கேதமெல்லாங் கிடைத்துளைய
நலத்தியல்பாற்றகைநல்லாய்வருந்தியென்னால் நகவானாய்.

உரை.—பெய்யுந்துளிநன்னீர் விழுந்தநிலத்தின்றன்மைக்குத்திரிந்தாகுமதுபோ லொருவன் சேருங்குலத்தின்றன்மையாற் குணமுமாறுமென்றாரோ, குறையுண்டவென்னற்பத்தினாலல்லோ விந்தத்துயரெல்லாம்வந்து நல்லறத்தினாற்பெருமையுடையவளே நீயென்னைச்சேர்ந்ததினாலல்லோ வருத்தமுநிந்தையு மடைந்தாயென்ப. (௭௫)

முற்செய்கையபத்ததுயரகற்றியெம்மை முயன்றளிக்குத்
தற்செய்கைதளிர்ப்பத்தாழ்ந்திறைவனிங்கண் டான்மகனாய்
நற்செய்கையொன்றுமிலாவடியன்றன்னை நண்ணியகால்
மற்செய்கைவீங்குவயத்துயர்ந்தோனேனும் வருந்தானே.

உரை.—ஆதியில்வந்தபாவம் பயத்ததுன்பங்களைத்தீர்த்து நம்மையிரட்சிக்கக் கடவுளிங்கேதாழ்ந்து மனிதனாயொருதருமமாகிலுஞ்செய்யாதவடியனை யண்டினபோ தவனளவிறந்தவல்லமையுடையோனாயினும் வருந்தாதிருப்பனோவென்க. (௭௪)

உடைநகர்கண்வாழரசன்வறுமைநாடி யுதிப்பச்சீர்
மிடைநகர்கண்பதியல்லதென்றேவின்னார் விலகியெமக்
கிடைநகர்கண்ணிடமின்றியிரிந்ததன்மை யிழிவினிப்
புடைநகர்கண்கண்டமுழைபுணரப்போகிற் புரிவென்றான்.

உரை.—செல்வவானகரில்வாழ்ந்தமன்னவனாகி யிங்கேவறுமையைத்தேட வந்துபிறக்கச் செல்வநக ரரியபதியல்லவென்றதினாலோ விவர் நம்மைத்தள்ளி நடுப்பட்டணத்திலிடங்கிடையாதேதிரிந்தோ மினிமே லிந்நகர்ப்புறத்தில்வரும்போது கண்டகுகையிலொடுங்கப்போனானல்லதென்றான் குசைச்செயன்ப. (௭௬)

## வேறு.

இத்தலையிவளுநன் றென்றபேரொளி
மொய்த்தலைபெருங்கடல் நிகர்மூற்றார்கடந்
தத்தலையிருமையோ ரமரர்செய்யொளி
மைத்தலைநடுநிசி மயங்கப்போயினார்.

உரை.— இத்தன்மையால் மரியென்பவளுநல்லதென்றறினால் மூழ்கினவலைமொய்த்த பெருங்கடலின்சாயலாய்நின்ற மூதாரைக்கடந் தந்தப்பெருமையோர் சூழவந்தவானவர் விட்டகதிர்களால் நடுச்சாமத்திருள்மயங்கி நீங்கிப்போனாரென்ப. (௭௬)

காயொளிகாண்கிலான் கையிற்காண்கினெல்
தோயொளிமணிநலந் தோன்றுமோவிவ
ராயொளிதெரிவதோ வறிவிலார்க்கென
வேயொளியமரர்சூழ் விரிப்பப்போயினார்.

உரை.— சூரியனைக்கர்ணமாட்டாதகுருடன் கையாற்றடவிப்பார்த்தா லொளிவிடுமணியின்குண மவற்குத்தோன்றுமோ வத்தன்மை யிவருடைய நுண்ணியமாட்சியினொளியறிவில்லா தமூடருக்குத்தெரியுமோவென்று சூழவானவர் தாமணிந்தகதிரைப்பரப்பிப்போனாரென்ப. (௭௭)

துறவினாவிரவல ராகித்தோன்றினா
ருறவினரினுமுற வெனினுமோர்வரோ
வறவினுவகன்றன ரென்னவண்டனர்
திறவினாவியம்பிடச் செறிந்துபோயினார்.

உரை.— துறவோராகவெல்லாத்தையும்வெறுத்துத் தாமிரப்போரானவரடுத்துவந்தா லுறமுறையாரினு மினியராவி ரென்றும் மறத்தின்மேலாசையில்லாதவ ரிதையாராய்ந்து பார்ப்பாரோவென்று வானவர் திறஞ்சொல்லி நெருங்கிவரப் போனாரென்க. (௭௮)

பூரியர்களுமுள பொருள்செய்செல்வநீத்
தாரியர்விரும்பிய வருளின்செல்வமாய்ச்

சீரியர்வழியிதே யென்னச்சேண்டன
வீரியர்விருப்பெழீ விளம்பிப்போயினார்.

உரை.—நீசரிடத்திலுமுள்ள பொருட்செல்வத்தைவெறுத்துப் பெரியோர்விரும்பினருட்செல்வத்தையடைந்த மாட்சிமையோர்வழி யிதுதானென்று வானிலுள்ளபடைவீரர் சொல்லி யாசையோடுபோனாரென்ப. (௭௯)

எல்லெனச்சுடரவி ழீராயிரம்
வில்லெனக்கவினுரு விரிவின்றேருழி
யல்லெனப்பகலென வறிகிலாதவான்
செல்லெனக்களிப்பெழீச் சிறந்துபோயினார்.

உரை.— சூரியன்றன்மையாற் கதிரைப்பரப்பி யொளிபொருந்தினவுருவோடு பதினாயிரம்வானவர்சூழவரப் பகலென்றுமிராவென்றுமறியாமல் வானுலகில்நடந்தாற்போல வினிதாய்ச்சிறந்துபோனாரென்க. (௮௰)

கோளவர்ப்புகழ்தரக் கோலவானவர்
பாளைவாய்க்கமுகுபாய் பலவின்காயறச்
சூளைவாய்ப்பொய்யெனத் துளித்ததேன்செயு
மூளைவாய்த்தண்பொழில் கடந்துமுன்னினார்.

உரை.—வடிவுளவானவர் பாடித்துதிகளைச்சொல்லப் பாளையைவிரித்தகமுகுபாய்ந்து பலாவின்கனிகளைக்கீறியறுத்து வேசியின்வாயினின்றுபுறப்படும்பொய்மிகுதிபோலத் துளித்ததேனினாலானசேறுபாய்ந்து குளுமைபொருந்தின சோலையைக்கடந்து முன்னேபோனாரென்ப. (௮௧)

கள்ளுடைக்கயத்தெழும் கமலப்பொய்கையும்
புள்ளுடைக்கனியினாற் பொலிந்தசோலையு
முள்ளுடைப்புடைகடந் துளத்திலுன்னிய
வெள்ளுடைப்புறநிலை யிமிழிலெய்தினார்.

உரை.—மதுக்கலந்த தண்ணீரொழுந்த தாமரைக்குளமும் ப்பறவைகளிருக்கும் கனிநிறைந்தசோலையும் பொருந்தினவி

டத்தைக்கடந்து தாமுன்னினைத்தவிகழ்ச்சியுள்ளவிடம் நகரின்புறத்திலே யினிதாயடைந்தாரென்க. (௮௨)

உயரியவரைபகி ருறுப்புப்போன்றெனப்
பெயரியகன்மிசை பெருங்கல்சேர்த்திய
துயரியரூன்றிடம் விலங்குதுன்னிட
மயரியவிடமொரு முழையஃதாமரோ.

உரை.— உயர்ந்தமலையிற் பிளந்தவுறுப்புப்போலப் பேர்ந்தகல்வின்மிசை பெருங்கல்லையேற்றிப்பொருத்தித் துன்பத்தியல்பினையுரிதாய்க்காட்டுமிடமென்னுமிருகங்களொதுங்குமிடமென்னும் வருத்தம்பொருந்தினவிடமென்னுமொருகுகையதென்ப. (௮௩)

வீசறைவளிமழை விளிப்பவாய்திறந்
தேசறைகிழவிதீ யெரிமுகத்தொடு
பாசறைபரிப்புநோய் பதிபயிற்றிய
வாசறையுருவெனு முழையஃதாமரோ.

உரை.— வீசியடிக்குங்காற்றையு மழையையு முள்ளழைப்ப வாய்திறந்து தீப்பறியக்கோபம்பொங்கிக் கிழவிகேள்சலைச்சொல்லும்போது காட்டினமுகத்தைக்காட்டித் துன்பமுமச்சமுநோய்களுங் குடியாயிருக்கப் பதியையமர்த்தினகுற்றத்துக்கோரறைச்சாயலாய்நின்றகுகையதென்ப. (௮௪)

கலங்கெழுந்திரையெறி கடலெனுநகர்
புலங்கெழுமிடைமனுப் புழங்கலாமையும்
விலங்கெழுமிடமெனு வெறுத்தவம்முழை
நலங்கெழுமிறையவன் பிறப்பநாடினன்.

உரை.— கலங்கியெழுந்ததிரைகளையெறிக்குங் கடலோடொத்தவந்நகரிடத்திலன்று கூடினமனிதர்நெருங்கிப் புழங்கவிடமில்லாயினு மிருகங்களொதுங்குமிடமென்றெல்லாரும்வெறுத்தவந்தக்குகைதன்னைச் சகலநன்மையுள்ளகடவுளேதான்பிறக்கத்தேடித்தெரிந்துகொண்டாரென்க. (௮௫)

ஒப்புடையுயரினோ ருவந்துபுக்கபின்
னப்புடைவிளக்கிட வருத்திகாண்மணித்
துப்புடையுருக்கொடு சூழ்ந்தவானவர்
வெப்புடைவிருப்பொடு விளக்கினாரரோ.

உரை.—ஒவ்வாதபெருமையுடைய விவருள்ளேய்புகுந்து போனபின்னை ரவ்விடத்தைவிளக்க வாசையைக்கண்டு தூய் மணிச்சாயலா யுருவோடுசூழநின்றவானவர் விரைந்தாசை யோடு விளக்கினாரென்க. (௮௬)

ஆவருள்தீதுள வகமும்வந்தடை
தேவருள்புக்கபின் சீர்த்தபான்மையா
னேவருள்முழையிவர் நுழைந்தகாலவர்க்
காவருள்வனப்பொடு களித்ததாமரோ.

உரை.—இச்சைதந்த பாவத்தையுள்ளநெஞ்சே யப்பாவ த்தைநீக்கியடைந்த தேவருள்தன்னிடத்திற்சென்றபின்பு தா ன். சிறப்படையுந்தன்மையால் நேசய்செய்தகுகையு மிவரு ள்நுழைந்தபேர்து பூந்தோட்டங்காட்டின வடிவினைக்காட் டிக் களிகூர்ந்ததென்க. (௮௭)

தணிவருஞ்சினத்தொடு தகைத்தகற்றினா
ரணிவருங்குணத்திலீங் கமலனுடிய
பணிவருமிடிநலம் பயக்கின்றானெனத்
துணிவருமன்பெழுந் தாசிசொற்றினர்.

உரை.—தணியாதகோபத்தோடு நகரிலிடங்கொடாமற்ற ம்மையகற்றினவரெல்லாரு மடைதற்கரியமுறையா லாண்டவ ன்வதரித் திங்கேதேடவந்த வருந்தாரித்திரத்தின் செல்வத் தையடையத்தந்தானென்று சூசையுமரியுந்தெளிந்தவன்போ ட்வனைத் துதித்தானென்க. (௮௮)

அருப்பயனுஞ்சினை யரக்கும்பாம்பெனு
விருப்பவர்நயன்செயப் பகைக்குமேல்லார்
நெருப்படத்துமிப்பனை நிழற்றுங்காவெனப்
பெருப்பகைசெய்வரைப் பேணுமாட்சியார்.

உரை.—இனியபாலையு நஞ்சாக்கும்பாம்புபோல வன்பு
டையோர்நன்மையைச்செய்ய வவரை நீசர்பகைப்பரோ, நெ
ருப்பிற்சுடத் தன்னைவெட்டினவர்க்கும் நிழல்செய்யுஞ்சோ
லைபோலப் பெரும்பகைசெய்தவனாயு மாட்சிமையுடையோ
ர்பேணுவரென்க. (௮௯)

எஃகென்பாய்ந்துள மிரிந்தவான் றுய
ரஃகெனக்கண்பட்டற் கமைதியென்றனள்
வெஃகெனத்துணைவியே விலகித்தானு நல்
விஃதெனத்தனித்திறை யிறைஞ்சிநின்றனன்.

உரை.—வேல்போலப்பாய்ந் துள்ளத்தையறுத்த துயர்க
ள்குறையுமென்று நித்திரைகொள்ளப்போவென்றுசையோ
டு துணைவிசொன்னாளவனு நல்லதிதென் றொருபக்கத்தில் வி
லகிப்போய்த் தனியே கத்தரைவணங்கிநின்றானென்க.
(௯௰)

அய்யனையிறைஞ்சிய வமையத்தொண்டவன்
பொய்யனையுடலினை மறந்துபொற்புறி
மெய்யனையுளம்வளர்ந் தேவல்மேவிவிண்
பெய்யனையருவிகண் பிளிர்ந்தின்போங்கினான்.

உரை.—கத்தரைவணங்கினபோது மாதவன்குலைசதான்
பொய்யையொழித்ததுபோலத் தன்னுடலையுமறந்து வடி
வொளிவீசி மெய்வளருந்தன்மையிற் றன்னுள்ளமும்வளர்ந்
து தேவதிருவுளத்தினேவலைமேவி மேகங்கள்துளித்தாற்போ
ல விருகண்ணினின் றிரண்டாறொழுக வின்பம்பொங்கிப்பு
றவேசமாயோங்கிநின்றானென்க. (௯௧)

## வேறு.

பொதிர்தருங்களி பொழிந்துவீரபீந்தருள்
முதிர்தருங்கணுள் முழந்தினின் றிவண்
ணெதிர்தரும்பொரு வின்றியின்புறக்
கதிர்தருஞ்சுத னசையக்கண்டனன்.

உரை.—நிறைந்தமனக்களிப்பு முகத்திற்றோன்றப்பொழி
ந்து முதிர்ந்ததயையைக்காட்டுங் கண்ணுடைய மரியென்ப

வள் முழந்தாளினின்று பூவுலகி லொவ்வாதவின்பத்தை நுகர்ந்து விளங்குந் தன்றிருக்குமாரன் றன்வயிற்றுள்ளசையக் கண்டாளென்ப. (௬௨)

திருமுகஞ்செறி சுடர்ச்சிறப்பினா
லொருமுகஞ்செறி யொளிகளாயிரந்
தருமுகம்படுகற் றருக்காலமாய்க்
குருமுகங்கொளுங் குணக்கொத்தாளரோ.

உரை.—இக்கன்னி தன்றிருமுகத்தி னிறைந்துமிழ்ந்தகாந்தியினா லாயிரங்கதிரோன் பகலைச்செய்ய வுதயகாலமாகிச் சிவந்தமுகமாயொளிரும் கீழ்த்திசைபோலநின்றாள். (௬௩)

உலகமூன்றினு முவமைநீக்கிய
விலையமூன்றினு மிழிவில்கன்னியா
யலகில்மூன்றினு ணடுவமைந்தனை
நிலவுமூன்றினு நிறப்பவீன்றனள்.

உரை.— மூவுலகினுமொவ்வாதமுறையாற் பிள்ளையைப் பெறுமுன்னும் பெறும்போதும் பெற்றபின்னு முக்காலத்துமழியாதகன்னியாகிப் பிதாச்சுதன் இஸ்பிரீத்துசாந்தென்னுமளவில்லாதகத்தாவாகிய மூன்றாட்களினிரண்டாமாளாகியசுதனைமுச்சுடரினும்விளங்கப்பெற்றாள் மரியென்பவளென்ப. (௬௪)

வாய்ப்படாநுழை பளிங்கின்வாய்கதிர்
போய்ப்படாவொளி படரும்போன்றுதாய்
நோய்ப்படாதருங் கன்னிநாக்கிலா
[illegible]ய்ப்படாவயத் தமலன்றோன்றினன்.

உரை.—வாசலைத்திறவாமற் றூயபளிங்கிடத்தினுழைந்த கதிர்புறப்பட்டுப்போய்ப் படாதகாந்தியை விரித்ததுபோலத் தன்றாய்நோகாமலு மவள்கன்னியழியாமலும் படாதவல்லமைகொண்டு கத்தாவே மகனாய்ப்பிறந்து தோன்றினா னென்க. (௬௫)

மாதமார்கழி வைகலையைந்தா
யேதிலாநிசிக் கிருத்தைமூவைந்தா
யாதிநாளென வாதிநாதனைக்
காதனாயகி களிப்பினல்கினாள்.

உரை.—மார்கழிமாதமிருபத்தைந்தாந்தேதி யிரவுபதினை
ந்தாநாழிகையாகி யாதிவாரத்தி லாதியாகியக்கர்த்தாவைத்தன்று
சைகளிகூர நாயகிதந்தாளென்க. (௩௬)

தீபமுற்றுமே லிலவுசெஞ்சுடர்
சாபமுற்றுழி சாபந்தீர்த்தெமை
யாபதத்திறை யளிப்பத்தாய்மடித்
தாபதத்தெழீத் தனையிரேன்றினான்.

உரை. — வானிலொளிர்ந்துலாவுஞ்சூரியன் தனுவிராசியி
னடக்கும்போ தவதரித்தகத்தா பாவத்தால்வந்தசாபத்தைத்தீ
ர்த்துத் துன்பத்தினின்று நம்மைபிரட்சிக்கத் தாய்வயிற்ற
னின்றுதித்துப் பூவுலகிற்றோன்றினானென்ப. (௩௭)

தோன்றினானென நசையுடேண்டினாற்
போன்றிவர்வுதேர் முடுக்கிப்போயொளி
கான்றிராசிவங் களிப்பமாவியெல்
லீன்றிராவன்று குறுகிற்றென்னவே.

உரை. — கடவுள்மகனாய்ப்பிறந்துதோன்றினனென் றவ
னைக்காண வாசையுளத்தைத்தூண்டினாற்போல வேறின
பொற்றேரை முடுக்கிவந்து கதிரைவீசித் தாமரைகளிகூரச்
சீக்கிரமா யன்று சூரியன்பகலைச்செய்ததின விராக்குறுகின
தென்க. (௩௮)

கதிர்செய்தேரொழக் கடியகோனிசி
பொதிர்செய்காரிருட் புதைப்பப்புக்கல்போற்
பிதிர்செய்பேயெலாம் பெயர்ந்துதீயுற
வெதிர்செய்யாதியீங் கிலங்கினனரோ.

உரை.— கதிரைப்பொழிந்த பருதியின்றேரெழுந்தபோது கொடுங்கோளாகியவிரவுபோய் நிறைந்தவிருளினுட்புதைக்கப்படப் புகுவதுபோலப் பூவுலகினின்றோடிப் பெயர்ந்தபேயெல்லாந் தீநரகத்திற்போக வெதிர்த்துவந்த நாதன்விளங்கினனென்க. (௧௧)

பேயும்போயின வமரர்பிந்தினர்
தீயும்போயின வறங்கடேறின
நோயும்போயின நூற்கடேர்ந்தன
தோயுமோகையிற் றுளங்கவையமே.

உரை.—பேய்கள்போயின வானவர்தொடுத்துவந்தனர், தீயவைபோயின வறங்கள்தேறிவளர்ந்தன, நோய்துன்பங்களொழிந்துபோயின கல்விகள்தெளிவடைந்தன வின்பத்திற்றோய்ந்த வுலகெல்லாம்விளங்கவேயென்ப. (௰)

இரவின்மீன்களு மிரவிபின்றையும்
பரவிறுலெனப் பரப்புந்தங்கதிர்
புரவினேழ்மடங் கொளிர்ந்தப்பொற்பினை
விரவின்காணக்கண் விளக்கல்மானுமே.

உரை.— இராக்காலத்தின் மீன்களும் பகவிற்சூரியனுந் தொழுததன்மையாற் பரப்பினதங்கதிர்களைத்தருகையின் மற்றநாளின்மே லெழுமடங்காய்விளங்கி யன்றுதோன்றின தேவழகின்சாயலை நன்றாய்க்காணத் தங்கண்களைத்துடைத்துவிளக்கினதுபோலத் தோன்றுமென்க. (௰௧)

பாய்ந்தவான்றருப் பருவமின்றியு
மீய்ந்ததீங்கனி யியையப்பூத்தலும்
வேய்ந்தநாயகன் விளைத்தநன்றியால்
வாய்ந்தவோகையின் முறுவல்மானுமே.

உரை:— வானிற்பாய்ந்தமரங்க ளதற்குப்பருவமில்லாயினுந் தந்தவினியகனிகளோடிசைபட மலரைப்பூத்தலு மனிதனாய்த்தோன்றினகடவுள் பயத்தநன்மை கண்டடைந்தகளிப்பினாற் சிரித்ததுபோலத்தோன்றுமென்க. (௰௨)

பொதிர்செய்மாட்சிகொண் டுயர்ந்தபூவெலாங்
கதிர்செய்வானநேர் களித்ததாமெனி
லெதிர்செய்பாப்புகழ்ந் திசைக்குந்தன்மையோ
முதிர்செய்மாண்புடை முழையின்றோற்றமே.

உரை.—மலிவுமாட்சிமைகொண்டுயர்ந்தபூவுலகெல்லாம் விளங்கும் வானுலகினொப்பாகக் களிகூர்ந்ததென்றால் முதிர்ந்தபெருமையடைந்த வந்தக்குகையிலுண்டாகிய வடிவின் றன்மை யுவமைகொண்டு பாவலர்புகழ்ந்து சொல்லிக்காட்டுந்தன்மையோவென்க. (௰௩)

வானுலாவ்னப் பெண்ணில்வானவர்
மீனுலாவடி யிறைஞ்சிமீதுபெய்
கானுலாமலர்க் கந்தமாரியாற்
றேனுலாமழை திளைத்தோர்பாலெலாம்.

உரை.—வான்வடிவுள்ளவெண்ணப்படாதவானோர் விளங்கினகடவுளின்பாதத்தைவணங்கி யதின்மேற்றூவின்வாசமலர்மாரியினாற் றேன்மழையு நிறைந்ததோர்பக்கமெல்லாமென்க. (௰௪)

பண்ணினோதையும் பண்ணிற்பாவிசைத்
தண்ணினோதையுந் தாழ்ந்துவாழ்த்தினர்
விண்ணினோதையும் வழங்கவேட்டுளங்
கண்ணினோகையிற் களித்தோர்பாலெலாம்.

உரை.—வீணைதந்தவோசையும் வீணையினுமினியபாப்பாடின குளிர்ந்தவோசையும் வான்மேற்கிளம்பும்படி வணங்கி வாழ்த்தினரோசையுங்கூடி வழங்கவில் விரும்பியுள்ளங்கொண்ட பிரியம்பொங்கிக் களித்ததோர்பக்கமெல்லாமென்ப. (௰௫)

பொன்னினொள்ளுருப் பொருவிப்பூணொடு
மின்னினுண்ணுதல் மின்னிவீழ்தரத்
துன்னின்புள்ளெழத் தொழுதபோற்றலி
னின்னின்பார்த்தன விளித்தோர்பாலெலாம்.

உரை:—பொன்னணிச்சாயலாயுருவங்காட்டி யணிந்தபூ
ண்களு மின்னின நுதலும்விளங்கித் தரையில்விழ வானவரு
ள்கொண்ட வின்பம்பொங்கித் தொழுதுபோற்றினதன்மை
யரவினிதாய்ப்பேரின்பநிறைந்ததோர்பக்கமெல்லாமென்ப. (௱௬)

சந்தநற்சுதை நானசாயலின்
வந்தநற்சுதை மணங்கொள்காழகில்
வெந்தநற்புகை கலந்துவீங்கின
கந்தநற்சுவை கனிவோர்பாலெலாம்.

உரை.—சந்தனமு நானத்தோடுகூட்டினசுதையும் வாச
ம்பொருந்தின வயிரவகிலங்கட்டைவெந்தபுகையுங் கலந்
துகூடி யினியவாசனைபொங்கி நிறைந்ததோர்பக்கமெல்லா
மென்ப. (௱௭)

மெய்த்திறத்தெழுந் துதித்தவேந்தனைக்
கைத்திறத்தெழுந் திறைஞ்சுங்காதலான்
மொய்த்திறத்தெழுங் கடவின்மொய்த்தவார்ப்
பித்திறத்தெழுந் தெல்லையில்லையே.

உரை.—உடலையுடுத்துப்பிறந்தநாதனைக் கையெடுத்துவா
னவர்வணங்குமாசையினால் மொய்கொண்டெழுந்த கடலைப்
போற்சூழ முழக்கமெழுந்ததன்மையால் முடியாதுநின்ற
தென்ப. (௱௮)

## வேறு.

சொக்களாவுருத்தோன்றியதோன்றலை
மிக்கயேலொடுகாபிரியேல்விழைந்
தொக்கவேந்தினரொத்தவுந்தாய்முனர்
மக்கணாதனைமாண்பெழக்காட்டினார்.

உரை.—இதெல்லாமெப்புறத்து மினிதாகவேக்கத்தாப்பிற
ந்தவுடனே தாயும்பிள்ளையுமிருவர் தம்முட்செய்ததேதோ
வென்னில் வடிவுள்ளவுருவத்தோடுபிறந்து தோன்றினதிருக்
குமாரனை, மிக்கயேலுங்காபிரியேலு மென்னுமிருவானவர்

கூடிக் கையிலேந்திக்கூடக்கன்னித்தாய்முன்னர் மக்கட்கு நாதனாகப்பிறந்தபிள்ளையை மாட்சிமைபெறக் காட்டினரென்ப. (௱௯)

பொதிர்கொள்பூமணம்போன்மகவீன்றனள்
கதிர்கொள்சேயொடுகண்கள்கலந்தகா
லெதிர்கொள்வெஞ்சுடர்காண்முழுவிந்தெனு
முதிர்கொள்ளின்பமுகத்துவிளங்கினள்.

உரை.—தான்குறைபடாமல் பூமுகைவாசனைவிட்டது போலக் கன்னியழியாமற் றிருமகனைப்பெற்றமரியென்பவள் விளங்கினதன்பிள்ளையின் கண்களோடு தன்கண்ணுங்கலந்து பார்த்தாள், பார்த்தபோது சூரியனையெதிராகக்கண்ட முழுமதிபோல விவளு முதிர்ந்தவின்பமுகத்தோடு விளங்கினின்றாளென்க. (௱௰)

தன்னையீன்றனதாய்தனைநோக்கலோ
டன்னை நீயுமென்சாயலினுகென
மின்னைவீறியதோன்றல்விளம்பின
னென்னையாள்பவளின்பலைமூழ்கவே.

உரை.—தன்னைப்பெற்றதாயை யினிதாய்நோக்கித் தாயே நீயுமென்னைப்போலிருவென்று மின்னிவிளங்கின திருக்குமாரன்சொன்னா னென்னையாளுந்தா யின்பக்கடலின்மூழ்கவேயென்க. (௱௰௧)

தந்தையீன்றனதாயுந்தன்சேயனை
யிந்தைநேர் நுதல்தாழ்ந்திறைஞ்சிட்டபின்
சிந்தையோங்கமாரவள்செங்கையின்
முந்தைதோன்றலைத்தந்துமுன்னேற்றினர்.

உரை.—தன்கடவுளாகிய தகப்பனைப்பெற்றதாயும் பிறையைநிகர்த்ததிருநுதலைத் தாழ்ந்து தன்றிருக்குமாரனை வணங்கினபின்ன ருணர்விற்பொங்கின முற்சொன்னவிருவரானவர் தாயின்செங்கையிலே பிதாவாகியகத்தாவின் றிருமகனைத் தந்து முன்னேவிழுந்து வணங்கினரென்ப. (௱௰௨)

காந்தணேரியசெங்கரத்தேந்தின
ளேந்தமார்பிறுகவுஞ்சேர்த்தனள்
வாய்ந்தபூம்பதநீவிவணங்கின
ளாய்ந்தநூற்கடந்தாருணர்வெய்தினாள்.

உரை.—தாயுங் கார்த்திகைப்பூநிகர்த்த தன்செங்கரத்தின் மேற் பிள்ளையையேந்தி யுயர்ந்தமார்போடிறுகச்சேர்த்து நன்மலர்ப்பாதத்தைத் தடவிப்போற்றியாராய்ந்தடைந்தகல் விகளைக்கடந்த ஞானமேயடைந்தாளென்க. (௱௰௩)

காவிமேற்கமழ்கஞ்சமமைந்தென
வாவியாமகவங்கையிலேந்தின
ளோவிமாழ்கியமன்னுயிரோர்ந்தருள்
மேவிமுந்தையைநோக்கிவிளம்புவாள்.

உரை.—ஆம்பல்மேலே வாசத்தாமரையைவைத்ததுபோலத் தனக்குயிராகியமகனைத் தாய்தன்கையிலேந்தித் துயர்கொண்டு மயங்கினமனிதரை நினைத் துணர்ந்ததயையோடு பிதாவாகியகர்த்தாவைநோக்கிச் சொல்வாளென்க. (௱௰௪)

உனக்குமாகியெனக்குமோர்பிள்ளையாய்த்
தனக்குநேரிழந்தார்தகவோன்றனை
நினக்குநானிவணேர்தலின்மற்றுயிர்க்
கெனக்குநேரருளீந்தளிப்பாயென்றாள்.

உரை.—பிதாவே! தெய்வத்துவத்தினா லுனக்குப்பிள்ளையாகி மனுத்துவத்தினா லெனக்குங்குமாரனாகி யொப்பில்லாதபெருமையுடையோனை யிதோவுனக்குநா னேருகின்றேனாலெனக்குச்செய்ததயையை மற்றமனிதர்க்குஞ்செய்திரட்சிப்பாயென்றாளென்க. (௱௰௫)

ஊக்கிவாழவுணர்ந்தறமாதியிற்
போக்கினார்புரைபொங்கிமலிந்ததீச்
நீக்கிவாழ்விடவெய்தியசேமுக
நோக்கினாற்சினநூக்கரிதோவென்றாள்.

உரை. — தந்நிலையின்மேலுயர்ந்துவாழுவேனென்று நி னைத் தாதியில் நல்லறத்தைப்போக்கினவர் செய்தபாவம்பொ ருந்தி யுலகெங்குமலிந்ததீமைகளை நீக்கிப் பேரின்பவீட்டின் வாழ்வுகளைக்கொடுக்கவந்த திருக்குமாரன்முகத்தைப் பார்த் தாயாகிற் பாவத்தா லுனக்குவந்தகோபத்தை. நீக்குவதரிதோ வென்றானென்க. (௩௰௩)

மறஞ்செய்வேடமெனுமனுவேடமே
நிறஞ்செய்தெய்வதமூடியநீர்மையா
லறஞ்செய்தானெமதார்துகள்மூடவிற்
றிறஞ்செய்காய்ந்தசினத்திடமேதென்றாள்.

உரை. — இவனவதரித்துமனிதனானதினாற் பாவரூபமாகிய மனுரூபமே விளங்கினதேவத்துவத்தை மூடினதன்மையா ற் றானுஞ்செய்ததருமங்களா னமதுபாவங்களைமூடினதினா ல் வல்லமையோடு காய்ந்தகோபத்திற் கின்னமிடமொன் று ண்டோவென்றானென்க. (௩௰௪)

தாய்விழைந்தநலந்தருசேயனே
நீய்விழைந்தவுன்பூட்டிடநேமியே
மீய்விழைந்தநலமிடைந்தூட்டிநீ
தீய்விழைந்தசெயிர்செகுப்பாயென்றாள்.

உரை. — தாயினாசையைப் பூரணமாய்த்தீர்க்கு மழகியமக னே! நீயிங்கே தேடவந்ததுன்பங்களைவிரும்பினவளவின்மே லு முனக்கிப்பூமியூட்டும்போது நீயோவென்னில் வானில் விரும்பப்பட்ட நன்மைகளை மனிதர்க்குமலியவூட்டித் தீங் குபொருந்தின பாவங்களை நீக்குவாயென்றானென்க. (௩௰௫)

என்னநல்லுயிர்காத்தமருந்தெனு
மன்னநல்லருள்வாய்ந்தனளின்னணஞ்
சொன்னநல்லுரைதேன்சுவையிற்சுவை
யின்னவுங்குழவிநகையாடினான்.

உரை. — இதைச்சொல்வி யுயிரைத்தருமருந்தினைப்போல நிலைபெற்றகருணையின்மாட்சிமையுடையகன்னி யித்தன்மை

யா லுணர்த்துமொழியைத் தேனினுமினியதாகச் செவியாலருந்தின குழந்தை புன்னகையைக்காட்டினனென்க. (௱௰௯)

நகைசெய்தன்மையினம்பெழீஇத்தாய்துகட்
பகைசெய்நெஞ்சமும்பற்றுமொன்றுற
முகைசெய்மேனிதழுவிமுத்திட்டலுங்
குகைசெய்யின்பெழக்கோலமிட்டொத்ததே.

உரை.—குழந்தைநகையைக்காட்டின தன்மையாலாசை பொங்கித் தாயும் பாவத்தைப்புகைத்த தன்னெஞ்சமு மார்வமுமொன்றாகப் பூவரும்பின்சாயலாகிய திருமேனியைக்கட்டிக்கொண்டு முத்தமிட்டா ளதுவந்தக்குகையிலே யின்பமெழுந்துபொங்க நற்கோலமிட்டதுபோலத் தோன்றினதென்க. (௱௨௰)

தெருள்சுரந்ததிரைப்புவியார்ந்துணப்
பொருள்சுரந்துயிர்க்குண்டிபொழிந்தனன்
மருள்சுரந்தவழுக்கெடமைந்தனு
யருள்சுரந்தமுலைத்தாய்தர நுங்கினான்.

உரை.—தெளிதிரை நீர்க்கடல்சூழ்ந்த பூமியெங்கும் பொருள்களைத் திரளாய்ச்சுரந்து பல்லுயிர்யாவு நிறையவுண்ணும்படி யவற்றிற்குரியவுணவுகளைப்பொழிந்து தருநாதன்றானே மயக்கத்தால்வந்த பாவங்களைத்தீர்ப்பதற்கு மனிதனாகி யன்பினாற் சுரந்தமுலைப்பாலைத் தாய்தரவே தானுண்டானென்க. (௱௨௧)

வேள்விமந்திரத்தீக்கொடிவேடமாய்க்
கேழ்வியொண்டவன்காட்சிகிளர்ப்பினால்
வாழ்வினின்றழிவாய்ந்திவையாவையுந்
தாழ்வின்புறக்கண்டருட்டாங்கினான்.

உரை.— வேள்வியில் மந்திரத்தீக்கொடிநின்ற சாயலாய்த் தியானத்தில் நின்றகேள்வி யுயர்ந்த மாதவன்சூசை யடைந்தகாட்சியினாற் பிறவேசமாய்வாழ்ந்திருக்கும்போ திதெல்லாங் குறையொன்றின்றி யினிதாய்க்கண் டருளின்வரங்களை யடைந்தானென்க. (௱௨௨)

வேதநின்றவுருத்தகுமேன்மையான்
காதனின்றிவைகாட்சியிற்காண்கினு
நாதனின்றநலம்விழியானுணச்
சீதணிந்தனள்வாவெனச்சென்றுளான்.

உரை.—வேதவடிவாய்நின்ற பெருமையோன்கூசை யா சையோடெல்லாங் காட்சியிலேகண்டானு நாதன்பிறந்து காட்டும்வடிவினைத் தன்விழியானுகரும்படி மீன்களைமுடி யாகச்சூழ்ந்தகன்னித்தா யழைத்தவுடனே வந்தானென்க.
(௱௨௩)

## வேறு

இந்துநேர் நுதல்மீன்கணேர்விழி யிண்டைநேர்முகநீ
ர்மையாற்
கந்தநேர் நளிர்தாதுநேருடல் காட்டுநாதனையம்புயச்
சந்தநேரியகன்னிநேர்கைபி ருமநேரியமுத்தெனச்
சிந்துநேர் நயமூழ்குசீர்மையி றேறநோக்கினன்கூசையே.

உரை.—பிறைநுதலும் விண்மீன்விழியுந் தாமரைமுகமு ம்பொருந்தி வாசமலருடலைக்காட்டினநாதனைக் கன்னித்தா யின் கைத்தாமரையின்மேல் விளங்கினமுத்தின்சாயலாக வி ண்பக்கடலின்முழுகி யுள்ளந்தேறக்கண்டான்கூசையென்ப.
(௱௨௪)

வீழ்ந்துவீழ்ந்தகனெற்றிபாரிடை மேவலோடுறவீழ்ந்
தனன்
றாழ்ந்துதாழ்ந்திருதாமரைக்கழ றாழ்தலார்தவிறாழ்ந்தனன்
சூழ்ந்துசூழ்ந்துளவின்பருமழை தூவநீண்விழிவாழ்ந்தனன்
வாழ்ந்துவாழ்ந்துயர்வானுளோர்யன .வாய்வியப்புறவோங்
கினான்.

உரை.—விழுந்துவிழுந்து தன்னெற்றிதரையிற்படவிழுந் தான், தாழத்தெண்டனிட் டிருதாமரைப்பாதத்தைத் தொழு தமிகுதியா லாசைபெருகிநின்றான், கண்டவையாராய்ந்தா ய்ந் துள்ளங்கொண்டவின்பத்தைக் கண்வழியால் மழையாக

க்கொம்புளித்துவாழ்ந்தான், வாழ்ந்ததன்மையைக்கண்டவா
னவரும்மதிசயிப்பவோங்கினான் சூசையென்ப. (௱௨௫)

அன்புறக்கடலென்றெலாவுயி ராண்டளித்தருணாயகி
தன்புறத்துணையாயமாண்பரு டேற்றுமார்புடைமாதவ
னின்புறத்துணையாத்லாமென வின்றெழுந்துறைநாதனை
யுன்புறத்திடையேந்துகென்றலரொத்தசெங்கரநீட்டினாள்.

உரை.— அன்பின்கடலா யெல்லாவுயிரையுமாண்டிரட்சிக்குந் தயையுள்ளநாயகி யருளின்மாட்சிமைநிறைந்த மார்புடையமாதவ னென்றன்பத்துக்குத் துணையாகியபின்ன தொன்னின்பத்துக்குந்துணையாகவேண்டுமென்று மனிதனாய்ப் பிறந் தின்றெழுந்தருளினநாதனை யுன்கையிலேந்திக்கொள்ளென்று தன்மலர்க்கரத்தைநீட்டினாளென்க. (௱௨௬)

விட்புலத்துயரோகவானையின் வேந்தர்வேந்தெனுந்தே
யுட்புலத்துவணக்கமிக்குற வுறவெடுத்திடநாணினான் [வனை
மட்புலத்திணையற்றமாதுரை வாய்ந்தசொற்கொடுதேறினன்
கட்புலத்துறுமாரியோடிரு கைத்தலங்களிலேந்தினான்.

உரை.—வானுலகிற்பொதுவறத் தனியே யராசர்க்கரசனுகவாளுங் கத்தாவாகியபாலனைத் தன்மனதில் மிகவும்வணங்கினதினால் வந்து தான்வனையெடுக்கநாணினானாகிலும் பூவுலகினிகரில்லாதமாமரிசொன்னமொழியினாற்றேறி யின்பத்தினாலழுது வணக்கத்தோடிருகையிலேந்தினானென்க. (௱௨௭)

கைத்தலத்திலெடுத்துமார்பொடு காதலோங்கவணைத்த
முத்தமிட்டனுநோக்கிநீட்டினு முற்றநீரினனைத்தனுஞ் [வு
சித்தமுற்றனுநாண்மலர்க்கழல் சென்னியின்மிசைவைத்தனு
மித்திறத்தினுமுண்மகிழ்ந்துறு மின்பமெல்லையுமில்லையே.

உரை.— கையிலேயிவ்விய்க்குழந்தையையேந்தி மார்பிலேயாசையோடணைத்து முத்துமுத்தமிட்டுக் கண்ணிலொற்றியழுதக்கண்ணீராற்கழுவிச் சித்தமோங்கி யவன்றிருமலர்ப்பாதத்தைச் சென்னியில்வைத்துச்சூடி யித்தன்மையானுளத்திலடைந்தவின்பமுடியாதுவாழ்ந்தானென்ப. (௱௨௮)

கோதைவாகையைநீழலாரடிகோதையாகவணிந்தகைத்
தாதையான்றனைநோக்குமன்பொடு தாவுளத்துலவின்பதி
னோதையார்கலியோடவோர்நகை யுற்றபாலகனொண்முகப்
பேதையாற்களியெய்திமொய்த்தன பாரோடும்பர்தன்பாலெ
லாம்.

உரை.—தன்மாலைக்கொடியை விளங்கினகுழந்தையின் பாதத்தில் மாலையாகவணிந்த கைத்தாதையாகியகுசையை யினித்தாய்நோக்கினவன்பினுளத்திற்பாய்ந்துலாவினவின்பக் கடல்பெருகி யுட்கொள்ளாமற் புறப்பட்டோட வொருபுன்னகையைக்காட்டின பாலன்றிருமுகத்தின்வழியாய்ப் பேரின்பம்வந்து பூவுலகமும்வானுலகமு நிறைந்தனவென்ப. (௱௨௧)

வேதணிந்தனபாலன்வீயணிவாகையான்றனைவீக்கலாற்
போதணிந்தனகோடுசூழ்படர் பூத்தபொற்கொடிபோலுமே
மீதணிந்தனநீவிபோர்த்தவிர் மேனியைத்தவன்வீக்கலுஞ்
சீதணிந்தனமேகமொண்சுடர் செவ்விமூடியபோலுமே.

உரை.—வேதவடிவராய்நின்றபாலன் பூமலர்ந்தகொடியுயர்த்தகுசையைக் கட்டிக்கொண்டதினாற் பூத்தகொம்பினைச் சுற்றிப்படர்ந்தமலர்க்கொடிபோலத்தோன்று மீளவு மாதவன்குசைமேலே தன்சீலையைப்போர்த்து விளங்கினதிருமேனியைத்தழுவிக்கட்டிக்கொள்ளவுங் குளிர்ச்சிபொருந்தினமேகஞ் சூரியனைமூடினதுபோலத்தோன்றுமென்க. (௱௨௨)

தீத்தெரிந்தனமீன்கள்சூடிய தன்மநாயகிதன்முகத்
தொத்தெரிந்தனகண்களிப்பெழ வுற்றுநோக்கியநோக்கரு
மொய்த்தெரிந்தனசேமுகத்தெள்ளிமுற்றுமுண்டனள்செஞ்
சுடர்
அய்த்தெரிந்தனதிங்கடேறிய தோற்றமொத்ததிலங்கினள்.

உரை.—பாய்ந்தவொளியைப்பரப்பு மீன்களை முடியாகச் சூடின தருமநாயகி யம்மீன்களையொப்பத் தன்றிருமுகத்தில்விளங்கின விருகண்களிப்ப வுற்றுப்பார்த்துப் பார்த்தபார்வையுமாறாமற் றன்றிருக்குமாரன் முகத்தினெருங்கி யுமிழ

ப்பட்ட கதிர்களைமுழுதுமூண்டு தானு மெதிர்நின்றசூரியன் கலையுண்ட சந்திரன்விளங்கினதுபோல வொளிர்ந்துநின் றாளென்ப. (௱௧௧)

மீன்வரம்பெனமின்னுநீண்விழி மீண்டிமைப்பிலகா
ண்வளன்
வான்வரம்பெனவாமவோவிய மானநின்றனளென்றெரீஇத்
தேன்வரம்பெனவின்புதேறிய வாவியாயினசேயனைக்
கான்வரம்பெனவிண்டதாயது கஞ்சவங்கையிலீந்தனன்.

உரை.—மீன்களுக்குவரம்பாகிய நீண்டதிருக்கண்ணிமை யாதென்று கண்டசூசை வானழகினெழுதப்பட்ட சித்திரம்போலநின்றாளென் றுணர்ந்து தேனினு மின்பத்தைச்செய்ய வவளுக்குயிராகநின்றதிருமகனை வாசம்பொருந்தி மலர்ந்ததாயின் றாமரைக்கையிலேதந்தானென்க. (௱௧௨)

காம்பிலங்கிளர்கால்பெயர்ந்தன காலையங்கலர்போர்ந்த
தாம்பிலங்கிளர்பூவிருஞ்சினை யாகநின்றனமாதவன் [தோ
சாம்பியங்கிளர்தாடுணர்த்துணை தாரதென்றணியோகையா
லோம்பியங்கிளர்வாகையொண்குடை யூசநன்னிழனீடினான்

உரை.—வாடாதவடிவுளதிருமகன் றன்னைவிட்டுப்பெயர்ந்தபோது மதுவைப்பொழிந்த பூமலர்ந்தவுயர்கொம்புதன் மலர்பெயர்ந்தகால் நிற்குஞ்சாயலாய் நின்றமாதவன்சாய்ந்து செவ்வியவிருமலர்ப்பாதத்தை மாலையாகவணிந்த வின்பத்திலேகுழந்தையைப்பேண வழகியதன்பூங்கொடியைக் குடையாக மேலாடப்பிடித்து நன்னிழலை விரவாகச்செய்து நின்றானென்ப. (௱௧௩)

ஊனசலம்புவியுற்றதொத்தென வொள்ளிரண்டுவெண்
காசலம்பியமேனிகாட்டிய காதல்வானவர்வீசவே [சாமரை
பாசலம்புரியாழிபற்றிய பள்ளிபண்பொடுவீங்கிலு
றாசலம்புரியாசையானிறை யாகுலக்கடலார்த்தனன்.

உரை.— இரண்டுசந்திர னாசலாடினதன்மைதோன்ற வி ளங்கின விரண்டுவெண்சாமரையை யசைவினொலிசெய்

யு மணியணிகளையணிந்தமேனியையெடுத்துக்காட்டின வி ருவானவ ராசையோடுவீசிக்கொண்டிருக்கப், பச்சைமாலை யாற்செய்யப்பட்ட படுக்கையைப்பற்றிவந்த நித்திரையை யினிதாய்க்கொண்டான் பாவங்களைக்கொண்டுவிடு மாசைப்பி ணினிறைந்த சித்தாகுலக்கடலைத் தீர்த்தநாதனென்க. (௱௩௪)

## வேறு.

விண்ணேபுரக்குமருட்டுஞ்சான் விரிசெவ்விதழ்த்தாம
 ரைத்தவிசின்
கண்ணேயன்னப்பார்ப்பன்ன கன்னிகரத்திற்றுஞ்சியகா
ருண்ணேருணர்வுய்த்துயர்வேதத் துரைமந்திரவாய்மொழி
 த்தவத்தோன்
பண்ணேர்பானேர்மாங்குயினேர் பாடிப்படர்நற்புகழுற்று [ன்.

. உரை.— வானுலகத்தைக்காத்தாளுந் தயையிற்றூங்காதவ ன் விரிந்தசெந்தாமரைமெத்தையின்மேலன்னக்குஞ்சுபோ லக் கன்னித்தாயின் கையிலே தூங்கினபோது வேதமந்திரவா ய்மொழியையுடைய மாதவன்குறைச மனதினேரிய வுணர்வுக ளைக்கொண்டு வீணையினிசையும் பாவின்சுவையு மாங்குயிற் கூவுமொப்பாகப்பாடி முடியாத்துதிகளைச் சொல்வானெ ன்ப. (௱௩௫)

இருளேயணுகாமறைவணுகா விரவிக்கொளியாந்திரு
 விழியை
மருளேயணுகாமூடுகின்றான் வானுமண்ணும்வழுவாதா
ளருளேமருளாவிவ்வுலகிற் கயர்வுமாறவயர்வில்லான் [ன்றான்.
றெருளேமருளாமனந்துயிலாத் தினைநான்களிப்பத்துயில்கி

உரை.— இருளுமறைவுங்கிட்டாமற் சூரியனுக்கொளியா ய்நின்றதிருவிழியை மயக்கமின்றிமூடினனே, வானுலகத்தை யும் பூவுலகத்தையும் வழுவின்றியாளுந் தயைமயங்காமற் பூ வுலகத்தோர்கொண்ட வயர்வினைத்தீர்க்க வயர்வில்லாதநாதன் றன்னறிவுமயங்காமலுந் தன்மனந்தூங்காமலு நான் பூரண மாய்க்களிகூரத் தூங்குகின்றானேயென்ப. (௱௩௬)

களித்தநாளிலரும்புந்தென் காலையினிதிங்கரும்புகியே
துளித்தநாணத்தேனரும்பத் துணர்நாண்மலர்காளரும்புதி
ரோ
விளித்தநாகுமாங்குயில்காள் விளைதேன்பாவையரும்புதிரோ
அளித்தநாதனன்கனிய வன்புதுயிலாத் துயில்கின்றான்.

உரை.—களித்தநாளிலேவீசுந்தென்றலே யினிதாயிங்கே வீசு, துளிதுளியாய்வாசமதுவைப்பொழிய நன்மலர்களே மலருங்கள், அழைத்தவிளங்குயில்களே யினிப்பாவிசையாற் பாடுங்கள், நம்மையிரட்சித்தநாதனே நான்களிகூரத் தன்னன்புதூங்காமற் றூங்குகின்றானென்க. (௱௬௭)

கண்பட்டுறங்கக்கண்டேனே கருணாகரனேகளிக்கடலே
புண்பட்டுளையுநெஞ்சிற்கோர் பொருவாமருந்தேயருளன்
பே
மண்பட்டலையுங்கடலன்ன மருளென்னெஞ்சிற்குயிர்நிலையே
யெண்பட்டுயர்ந்தசெல்வரசே யெம்மேலிரங்குந்தயையிது
வோ.

உரை.—கண்ணைமூடியுறங்க வுன்னைக்கண்டேனே கருணாகரனே யின்பக்கடலே! புண்ணாகத்துன்பப்பட்டுளைந்த யாவர்க்கு நிகராதவினியமருந்தே யருளாணிறைந்தவன்பே! பூவுலகத்தைச்சூழ்ந்தலையுங்கடலோடொப்ப மயங்குமென்னெஞ்சிற்குயிரே! எண்ணப்படாத வுயர்ந்த செல்வங்களையுடையவரசனே! எங்கள்மேலிரங்கிக்காட்டின தயையிதோவென்க. (௱௬௮)

வான்றோய்நயங்கள்பயந்தோய்நீ மண்டோய்துயர்நீ
த்தளித்தோய்நீ [வோய்நீ
தேன்றோயின்பத்தலைந்தோய்நீ சேண்மேற்புகழப்படு
நான்றோயுணர்வினுயர்ந்தோய்நீ நானென்றாகவவதரித்தே
யூன்றோயுடல்கொண்டன்னவன்பி னுணர்விட்டெனக்குப்ப
ணியாயோ.

உரை.—வான்வீட்டிலுள்ளவின்பங்களை யுளவாக்கித்தந்தவனீயே, பூவுலகிலுள்ளதுன்பங்களைத் தீர்த்திரட்சித்தவனீ

யே, அரியபேரின்பத்திலமர்ந்தவனீயே, வான்மேற்றுதிக்கப்பட்டவனீயே, நானூராய்ந்தவுணர்வின்மேலுயர்ந்தவனீயே, என்னைப்போலாக வவதரித் தூனுள்ளவுடலைக்கொண்ட வன்பின்றன்மையைக்கண்டுகொள்க வுணர்வினைத்தந் தெனக்குத் திருவுளம்பற்றாயோவென்க. (௱௩௯)

கோவீற்றிருந்துமகிழ்வோய்நீ குலையாவயத்தெர்ப்பிக
ழ்ந்தோய்நீ
நாவீற்றிருந்தபுகழ்மிக்க நணுகாக்காட்சிக்கிறையோய்நீ
பூவீற்றிருந்துநாம்வாழப் பூவந்திடருற்றழுவோய்நீ
யாவீற்றிராயோவென்னிதயத் ததற்கேயுறுதிபுரியாயோ.

உரை.—வான்மேல்வீற்றிருந்து மகிழ்ந்தவனீயே, குன்றுதவல்லமையானிகரற்றவனீயே, பாவலர்நாவில்வீற்றிருந்தபுகழ்களைக்கடந் தொருவனாலடையப்படாத காட்சியின்கத்தா நீயே, பூவுலகினுங்கள்வாழ்ந்திருக்கப் பூவுலகில்வந்து துயர்களைக்கொண் டழுகின்றவனீயே, ஆ! என்னிருதயத்திலும் வீற்றிராயோ வதற்குதவியைச்செய்யாயோவென்ப. (௱௪௰)

நூல்வாய்ப்புகழ்மேலுயர்ந்தோய்நீ நோய்வாய்மரு
ந்திற்கனிவோய்நீ [நீ
கோல்வாய்கோடாநீதிநெறி கொண்டெவ்வுலகும்புரந்தோய்
வேல்வாய்க்குருதிபாய்ந்திறப்ப மெய்கொண்டாயோவிதைய
றியாக் [தாயோ.
கால்வாயிலைப்போலியங்கியவென் கருத்திற்குணர்வையுணர்த்

உரை.—நூலின்படியேசொன்னபுகழ்ச்சியின்மேலுயர்ந்தவனீயே, புண்ணையாற்றுமருந்திலுங் கனிந்தவனீயே, செங்கோல்வளையாத நீதியின்முறையாலுலகங்களையெல்லாமாண்டவனீயே, வேல்முதற்பலகருவிகளாற் றிருவிரத்தத்தைச் சிந்தியிறக்கவோ விவ்வுடலைக்கொண்டாயிதைக்கண்டுகொள்ளாமற் காற்றின்முகத்திலிலைகளாடினதன்மையி னில்லாமலாடுமென்கருத்திற்கானவுணர்வுகளைப் படிப்பியாயோவென்க. (௱௪௧)

நீர்பாயுலகிற்குயிரோய்நீ நிமிர்வீட்டுலகிற்குயிரோய்நீ
சீர்பாய்பாவிற்குணையோய்நீ திறன்கொண்டாள்வார்க்கட
லோய்நீ [ஞ்
யேர்பாயிரவிக்கொளியோய்நீ யெம்மேலிரங்கிப்பிறந்தனைநா
ஞர்பாய்துகளற்றுய்வதற்குன் றுணைத்தாடொழும்பண்புணா
யாயோ.

உரை.— கடல்சூழ்ந்தபூவுலகத்தோர்க்கு முயர்வான்வீட்டு லகத்தோர்க்குமுயிர் நீயே, சீரைத்தொடுத்தபாவிற் குணம் நீயே, திறங்கொண்டாள்பவர்க்கு வல்லமைநீயே, அழகியபருதிக் கொளிநீயே, எங்கள்மேல்வைத்தவிரக்கத்தினால் மனிதனாய்ப் பிறந்தாயே, நாங்களுந் துன்பங்களைச்செய்யும்பாவங்களை யொழித்துவாழ வுன்றிருவடிகளைவணங்குமுறையை யுணர்த் தாயோவென்ப. (௱௪௨)

தேறுந்தையையின்முனிவோய்நீ, சினத்திற்கருள்செய்
கனிவோய்நீ [ய்நீ
கூறுங்கலையற்றுணர்வோய்நீ கூறுந்தொனியற்றுரைப்போ
மாறும்பொருள்யாவினுநின்றே மாறுநிலைகொள்மரபோய்நீ
யீறுந்தவிர்ந்துன்புகழ்க்கடலாழ்ந் தெனக்கேகரைகாட்டரு
ளாயோ.

உரை.— தேறினதையையோடுசினந்தவனீயே, கோபத்தி லேயு மினிதாயருளைச்செய்தவனீயே, ஒருவன்சொல்லக்க ல்வியைப்படியாமலெல்லாத்தையு மறிந்தவனீயே, சத்தப்ப டாமலெல்லாத்தையு முரைப்பவனீயே, மாறிவரும்பொருள் களெல்லாத்திற்குமுள்ளேநின் றதெல்லாமாறும்போது மாறு மனிலைபெற்றவனீயே, முடிவில்லாதவுன்புகழின்கடலுள் ளா ழ்ந்திருக்குமெனக் கதின்கரையைக்காட்டாயோவென்ப. (௱௪௩)

ஒளிநாக்கொடுவான்சுடர்புகழ வொளிநாக்கொடுபன்ம
ணிபுகழக்
களிநாக்கொடுபற்புள்புகழக் கமழ்நாக்கொடுகாமலர்புகழத்
தெளிநாக்கொடுநீர்ப்புனல்புகழத் தினமேபுகழப்படுவோ
ய்நீ
யளிநாக்கொடுநானுனைப்புகழ வறியாமூகையுணர்த்தாயோ.

உரை.— வானிற்றிரியும்பலசுடர்கள் தங்கதிராலு நவமணிகள் தம்மொளியாலும் பறவைகள் களித்ததந்நாவினாலும் பூமலர்கள் தம்வாசனையாலு மாறுகள் தெளிந்த தந்நிலையாலு முன்னைப்புகழ்ந்து தினமேபுகழப்பட்டவனீயே, நானு மென்னென்பினை நாக்காகக்கொண் டுன்னைப்புகழ்வதற்கறியா தலுத்தமையாகிவ்வடியேனைப்படிப்பியாயோவென்ப. (௱௪௪)

என்றும்போற்றப்படுவோய்நீ யெங்குநிழற்றோர்குடை
யோய்நீ [தோய்நீ
முன்றான்பொழுதற்றனனேய்நீ முக்காலத்தோர்பொழு
குன்றுந்தன்மைத்துரைபின்றக் குணியாவருள்செய்தாயதற்
கே [யோ.
யொன்றுந்தேறாவென்னிதயத் துணர்வின்காட்சியளியா

உரை.— எப்போதும்வணங்கப்பட்டவனீயே, எங்கு மொருகுடையாய்நின்று நிழலைச்செய்தவனீயே, உனக்குமுன்பொழுதில்லா வெப்போதுமிருந்தவனாகிநீயே, இறந்தகாலம் வருங்கால நிகழ்காலமென்னு மூன்றுகாலமு மின்றி யொருபொழுதாய்நின்றவனீயே, எங்கள்சொல்பத்தாமற் குறையாய்ப்பின்றிநிற்பச் சொல்லத்தக்கமுறையைக்கடந்து நாங்கள்நினையாத கிருபையைச்செய்தாயே, இதற்குநானொன்றுந்தேறாமலிருப்பதுகண் டென்னிருதயத்துக்குக்காட்சியைத்தாராயோவென்ப. (௱௪௫)

என்றானழுதானுள்ளுருகி யின்பக்கடலாழ்ந்தன்றாழ்ந்
தான் [ணான்
குன்றாவிறையோன்றயைக்கடலிற் குளித்தானீந்திக்கரைகா.
சென்றானென்னமெய்மறந்தே சிறிதோர்காலின்றுணர்ந்த
வைவா [பான்.
னின்றார்கண்டுள்ளதிசயிப்ப நிகரில்லன்பான் மீண்டுமொப்

உரை.— இதைச்சொல்லி யின்பத்தினாலழுதுள்ளுருகி யின்பக்கடலுள்ளமிழ்ந்தி யமிழ்ந்தினானே, கத்தாகுறையில்லா துசெய்யுந் தயையின்கடலினுள் குளித்து நீந்திநீந்திக்கரையைக்காணான், பிறகுகரையிற்சென்றவனைப்போல வ[illegible]

த் தன்மெய்மறந்து சிறிதுநேரமிருந்தப்பொழுது நினைத்த தெல்லாம் வல்லவர்கண் டுள்ளுவசியத்துநிற்ப நிகராதவன்பு டையகுசை மீளவுஞ்சொல்வானென்ப. (௱சஞ)

அறந்தாய்தந்தைசுற்றமுமற் றனைத்துநீயேகதிநீயே
நறுந்தருபுலகிற்குயிரன்னேய் பிறந்தெந் துயரு மெம்பகையுந்
துறந்தாயெங்கள்சிறைதீர்த்தாய் துகள்பூட்டியவீட்டுயர் வாயில் [யோ.
திறந்தாயிவையாவருமறியத் திறன்செய்தருள்செய்திரங்கா

உரை:—அறமுந்தாயுந்தந்தையுஞ் சுற்றத்தாரு மற்றதெல்லாமுநீயே, பரமகதியுநீயே, பூவுலகிற்குயிராகப்பிறந்தாயே, பிறந் தெங்கள் துன்பங்களையும்பகையையு மகற்றினையே, எங்கள்சிறையைமீட்டாயே, நாங்கள்செய்தபாவமடைத்தவான்வீட்டுவாசலைத்திறந்தாயே, இதெல்லாத்தையு மெல்லாருமறியும்படிக் குன்வல்லமையுந்தயையுங்கொண் டிரங்கிச்செய்யாயோவென்ப. (௱சஎ)

குருவாய்வந்தோயொளிப்பாயோ கோதாரிருடீர்வெஞ்சுடரின்
னுருவாய்வந்தோயொளியாயோ வுயர்வானிகரோமண்சனியக்
கருவாய்வந்தோயிக்கருணைக் கண்கொண்டெவருங்களித்தறியத் [முதான்.
தருவாய்வந்தோயிலவன்பின் மகவோய்திருவோயெனத்தொ

உரை.—குருவாகவந்தநீ யிங்கேயொளித்திருப்பாயோ, பாவத்தால்வந்த விருளைத்தீர்க்கு ஞானச்சுடருருவாகவந்தநீ யொளியாயோ, உயர்ந்தவானுலகிற்கொப்பாகப் பூவுலகுங் களிகூரக் கருப்பத்தின்மூலமா லவதரித்துவந்தநீ யிந்தக்கிருபையைக்கண்ணாலேகண் டெல்லாருமினிதாயறியும்படிசெய்வாயே, ஓயாத வன்பின்மாட்சிமையுடையோனே செல்வத்திருவோனேயென்று வணங்கினான்குசையென்ப. (௱சஅ)

துஞ்சுந்தன்மைத்தெவ்வுலகுந் துணையற்றுள்வோனிவைகேட்டு [த்தா
நீஞ்சுந்தன்மைத்தோங்கவலன் விறைவேவிளைக்கும்விழிவிழி

னெஞ்சுந்தன்மைத்துதவியதானியைந்ததன்மையுலகுணர்த்த
வஞ்சுந்தன்மைத்தெதிரிறைஞ்சு ம்மரர்க்குரையாதேவவிட்
டான்.

உரை.— தூங்கினதன்மையைக்காட்டி யுலகங்களெல்லா த்தையுமாளுங்கர்த்தா விதெல்லாங்கேட்டு மிகவுஞ்சூசைமன திலோங்க வாஞ்சையைவருத்துவிக்குந் தன்றிருவிழிவிழித் தானே, ஒருவன்சிறுமையைக்கொண்ட தன்மைக்குதவியை ச்செய்யுந்தா னிங்கேபிறந்தமைந்தசெய்தியையுலகிற்கறிவி க்க வஞ்சினதன்மையா லெதிராய்விழுந்து வணங்கிநின்றவா னவர்க்குரையைச்செய்யாமலுள்ளேவினனென்ப. (௱சகூ)

௱௫௰ ஏவும்பாலர்விண்ணவர்போ யிடையர்வந்தேத்திடுவா
றந்
தூவும்பாலாலொளிபகலிற் றுளங்குமீன்றோன்றியவாறும்
மேவும்பாலால்விரைந்திறைஞ்ச வேந்தர்மூன்றெய்தியவாறு
மர்வும்பாலால்வளனுணர்வொத் தாயதன்மையுரைசெய்வாம்.

உரை.— ஆண்டவனேவினபடிக்கு வானவர்போய்றிவித் ததினு விடையர்வந்துவணங்கினது மொளியைவிடுந்தன்மை யாற் பகலிலேயும்விளங்கினவொருமீன்றோன்றினது மாசை யோடிவனைவிரைவிற்போற்ற மூவரசர்வந்ததுமிவையெல்லா மாசையினாற் சூசைநினைத்தபடிக்காயினதன்மையை யினிச் சொல்வாமென்ப. (௱௫௰)

மகவருள்படல முற்றும்.

ஆகப்படலம் - ௰ - ௩ - விருத்தம் ௲௨.



## பதினோராவது.

# காட்சிப்படலம்.

### வேறு.

இன்னவாயினன்னதன்மை யின்னயாவுமாகையிற் [யீ
பொன்னநாடுதுன்னுறும்பர் பொன்னுருக்கொடாங்குபோ
மின்னனேருமன்னையீன்ற வேதநாதனைத்தொழ
வுன்னலாதகோவரின்ப முண்ணவுற்றழைத்தனர்.

உரை.—முற்சொன்னகுகைக்குள்ளே யிதெல்லாமித்தன்மையாலாகையில் வானுலகில்வாழும்வானோ ரழகியரூபத்தை யெடுத்துக்கொண்டுபோய் மின்னலோடொத்த கன்னித்தா யீன்றவேதநாதனை வணங்கவரச்செல்லி நினையாதமுறையா லிடையரின்பத்தை யுட்கொள்ளவங்கேவந்தழைத்தாரென்ப. (க)

கொழுந்துறுங்குளிர்ந்தமுல்லை கொண்டகோவர்கூட் [டமு
மெழுந்துறுங்குட்டியாரு மேகியாயகாட்சியால்
விழுந்துறுங்களிப்புவிஞ்சி வேதநாதன்மேற்பதந்
தொழுந்தொழுந்தொழுந்தொழுந் துளங்குகின்றதோற்றமே.

உரை.—கொழுந்துவிட்டுக்குளிர்ந்த முல்லைநிலத்தி லிருக்குமிடையர்கூட்டமு மிடைச்சிகளு மெழுந்துவந்து சம்பவித்ததெல்லாங்கண்டு விழுந்து மிகுந்தசந்தோஷத்தோடே பிறந்தவேதநாதனது திருப்பாதத்தை வணங்கியவொவ்வொருவனொவ்வொருத்தி துளங்கினாரென்ப. (உ)

மாலைமேவுவேங்கைபற்றி வண்டுணுதெனமனை
மாலைமேவுவேங்கைபற்றி வண்டுணுதெனமன
மாலையாகவீங்குவத்து வாசமாருமுல்லையார்
லையாகவீங்குவத்து வாசமாருமுல்லையார்.

உரை.— சாயுங்காலத்தில் மலர்ந்தவேங்கைமரத்தைப்பற்றியம்மலரைவண்டுண்ணாததுபோல மனமயக்கத்தைச்செய்யும் பொன்னைப்பற்றிவருங்குற்றங்களை யிடையர்மனதிலே கொள்ளாதகுணத்தினால் மிகவுமுவந்து மணக்குழலிலேப்பூமாலைகளைக்கொண் டிங்கேவந்து இடமெல்லாநிறைந்தாரிடையரென்ப. (௩)

பஞ்சரங்கிவின்பரங்கு பான்மையாலடைவரத்
தஞ்சலங்குழித்துவந் தமிழ்ந்தமிழ்ந்துளந்தனில்
விஞ்சவின்பநெஞ்சடங்கில் மேவலார்ந்ததம்முயி
ருஞ்சலாடிவாயின்வாயி லூற்றுரைத்த லுற்றனர்.

உரை.—பஞ்சேந்திரியங்களிற் பேரின்பத்தை நிறைவாவனுபவித்தடைந்த தேவவரங்களாகிற கடலைக்குழித்து மகிழ்ந்துள்ளேயமிழ்ந்தி யமிழ்ந்தினமனத்திலே மிஞ்சினவின்பமே நெஞ்சிலேகொள்ளாமல் வாயிலேவந்து தேவபத்திநிறைந்த தம்முயி ருடலினுள்ளேயுஞ்சலாடியிருக்கப் பேசத்துவக்கினாரென்ப. (௪)

எண்ணுளேயடங்கவின்றி யேந்தமாட்சிபூண்டுவான்
விண்ணுளேபொலித்துவந்த விண்ணவர்க்குவேந்தனே
புண்ணுளேமருந்துநீவிப் போனவாட்டைமீட்கவோ
மண்ணுளேயெழுந்துவந்து மண்ணனென்றுதித்தனை.

உரை.— எண்ணப்படாத வுயர்ந்தமாட்சிமைகொண்டு வானுலகி லுயர்ந்துவாழும் விண்ணோர்க்கிராசாவே! பாவத்தாலேவந்தபுண்ணுக்குமருந்துதடவி யிடையனைவிட்டுப்போன வாடாகிறபாவிகளை மீட்டிரட்சிக்கவோ பூமியிலேவந்து மனிதனாய்ப்பிறந்தாயென்ப. (௫)

ஒண்டலங்களண்டவும்ப ருந்தொழும்பராபரா
விண்டலங்கலந்திலங்கு வெண்களங்கனைப்பெறு
மண்டலங்களெங்கும்யாரும் வாழவீரவெண்குடை.
கொண்டலங்கல்கொண்டதேறல் கொண்டவன்புகொற்றவா.

உரை.— அழகியவானுலகத்தோரும் வணங்கும்பராபரனே, ஆகாயத்திற்றிரிந்துவிளங்கிய சந்திரனைப்போலவுங் கு

வகிலெல்வரும்வாழத் தலையுள்ள வெண்குடையைக்கொண்டு
தேனொழுகியுமாலையாக வன்பினையணிந்தவரசனேயென்ப.
(௬)

மணிக்கலத்தகத்தமைத்த வானமிர்தமார்பினோய்
பிணிக்குலத்தகத்துதித்த பெற்றியாய்ந்துவாழ்த்திடப்
பணிக்குலத்தகத்தடங்கி லாற்பணித்தநின்பணி
யணிக்குலத்தகத்தணிந்த வன்புபேர்கிலாகுமே.

உரை.—தேவவமிர்தத்தைக்கொண்ட மாணிக்கத்தாற்செய்தபாத்திரத்தைப்போலு மார்பினையுடையோய் நீபிணிக்குலமாகிறமனுக்குலத்தில் மனிதனாய்ப்பிறந்த வதிசயத்தையாராய்ந்து ஸ்துதிப்பது சொல்லிலடங்காமையால் நீயிட்ட கட்டளையை யாபரணமாகமார்பிலேயணிந்த பட்சமாயினுமெங்களைவிட்டுப்போகாதென்ப. (௭)

இரவிவேய்ந்தகஞ்சமீன்ற விலகுமுத்தமேய்த்துவெல்
புரவில்வேய்ந்தசேனையீன்ற பொருவிலன்னைவாழுதி
சுருதிவேய்ந்தமாட்சிபூண்ட துணைவனாயமாதவத்
துருவில்வேய்ந்தவேந்தவாழி யுறுதியென்றுவாழ்த்தினர்.

உரை.—சூரியனையுண்டதாமரை மலர்ந்தீன்ற முத்துப்போலத்துன்பமின்றிப்பிள்ளையையீன்றநிகராததாயேவாழி, வேதந்தோன்றின மாட்சிமையணிந்த துணைவனாகி மாதவரூபமாகத்தோன்றிய விராசாவாகிறகுசையே நன்றாய்வாழியென்றிவரைவாழ்த்தினாரென்ப. (௮)

இடத்திடத்தடத்தியுற்ற விக்குடைத்தவின்புசொற்
குடத்தியர்க்கமைத்தபற்றல் கூர்ந்துதோன்றருண்மிசை
தடத்துணர்க்கமைத்ததேறறூங்குமாலைசாத்தலு
முடித்ததிங்களைத்தொடுத்து துடுக்கடுற்றவொத்ததே.

உரை.—அங்கங்கேநெருங்கிவந்த தேனினுமினியசொல்லையுடையவிடைச்சிகள் தங்களாசைமிகுதியாய்த் திவ்வியகுழந்தைதிருவடிமேலே பெருமிதழ்மலர்ந்து தேனிறைந்தமாலைகளைச்சாத்தலே நிறைமதியை நட்சத்திரங்கள்சூழ்ந்ததுபோலத்தோன்றினதென்ப. (௯)

ஏதமின் றிமாவியீன்ற காந்தியென் றதோன்றலைக்
கோதகன் றுயிர்த்தகோதை தாண்முனன்னகேவலர்
சீதவின்பமோடிராங்கு தேனமிழ்த்தீகலும்
பாதமொன் றசோமனீன்ற பானிலாவைமானுமே.

உரை.— குறைபடாமற் சூரியன்விட்டதன்கதிரைப்போலக் குறையில்லாமற் பிள்ளையையீன்ற மரியென்கிறதாய்பாதத்திலே பந்தவிடைய ரிரங்கினபசுதந்த குளிர்ந்தினியபாலை வைத்ததே யவள்பாதத்திருக்குஞ்சந்திரன்விட்ட பாற்கதிரைப்போலத் தோன்றினதென்ப. (௰)

பானிலத்தமைத்தவன்பு பதுமநேருகண்செய்த்
தேனிலத்திணைநோக்கு சிறுவனின்புகாட்டலால்
மேனிலத்தினரினொத்த விரியுகாட்சியுற்றுளம்
வானிலத்தினார்ந்தவின்பு மலியவாழமாந்தினர்.

உரை.— அப்போதினியதயையைத் தாமரைக்கண்ணாற்காட்டித் திவ்வியகுழந்தையிடையரை நோக்கி யின்பங்காட்டினதினால் விண்ணோர்க்கொத்த விரிந்தஞானகாட்சி யவருமடைந்து மனதிலே வானுலகிலுள்ளபேரின்பத்தை நிறைந்து வாழவநுபவித்தாரென்ப. (௰௧)

கன்னியாயதாயுமோங்கு காவலானுமன்புற
வின்னிருவிலுங்கனிந்த வின்பவஞ்சொலோதலா
லுன்னமேவுமீரவன்பு முன்னமுள்ளுருண்மயான்
மின்னமாரி தூவலொத்த வீழ்நாட்டமாரியே.

உரை.— கன்னித்தாய்மரியு முயர்ந்தகாவலனுகிறசூசையுத்தயையோடு தேனினுமினியசொல்லை யவர்களுக்குக்கூறினதினால் மனதிற்கொண்ட வன்புள்ளடங்காம லினிதாய்க்கண்வழியேபுறப்பட்டு மின்னிப்பெய்தமழையைப்போலும் விட்டகண்ணினீர்மாரியென்ப. (௰௨)

ஏவலாளிருவரா யிறைஞ்சியேங்கியேகின
நாவலாகியாங்குவைத்த வாவியல்லதில்லதால்

மேவலாகியாவியாக வேய்ந்தவன்பிலாதெனி
னேவலாகிவெற்றுடற்க ளுலையுற்றவொத்ததே.

உரை.—செய்தகட்டளையினாலேகுழந்தை தாய் காவலனெ ன்னுமவரை யிடையருமிடைச்சிகளும்வணங்கித் அன்பத் தோடே பிரியமாட்டாமற்போ யாசையினாலங்கேவைத்த தம துயிரல்லாதேவேறில்லாமையா லுயிராகநின்றதமதுபத்திதா னேயில்லாவிட்டால் நொந்து வெற்றுடம்புகளாய்த் தம்மூ ருக்குச்சேருவாரென்ப. (௰௫)

ஏங்கவானையேகவெங்கு மேகனாகியாள்பவன்
மாகமேவுமாட நீக்கி மாடுமேவுழைக்குறைத்
தாகமாடைவேந்தர்நீக்கி யாயனைத்தெரிந்ததென்
னேழைகையாகவோகனோடு மோங்குதாயும்வாழ்த்தினாள்.

உரை.— மறுக்கப்படாதவாணையா லொருவனாயெங்குமா னுங்கடவுள் மனிதனாய்ப்பிறக்க வாகாயத்திற்பாய்ந்தநேற்றி மாளிகையைவிட்டு மாடுகளொதுங்கும்குகையில் வந்திருந்து செல்வவிராசாக்களைவிட்டுப் பலவிடையனைத்தெரிந்ததைத் தானென்றுமனதிலாராய்ந்து சந்தோஷமாய் மாதவனுசை யோடுபரமதாய்மரியேயாண்டவனைவாழ்த்தினாளென்ப (௰௪)

## வேறு.

முன்னருந்தியதீஞ்சுவைமுலையார்
பின்னருந்திடப்பெட்புறுநாடொறு
மின்னருந்தியமெல்லடியாட்கரத்
துன்னருந்திருச்சேதொழவண்ணுவார்.

உரை.—அவ்விடையரிராவென்றால் முன்னநுபவித்தபே ரின்பத்தைப் பின்னையுநுகர்வதற்காசைகொண்டு தினந்தின மின்னினும்விளங்கின மெல்லடியுடையதாய்கரத்தி லந்தத் திருமகனைவணங்கவண்டிவருவாரென்ப. (௰௬)

அண்ணிநீர்தவழ்தீயெனவம்புயக்
கண்ணிதாண்மிசைபெய்தழிகாதலன்

விண்ணினீர்முகில்மின்னெனநோக்கலோ
டுண்ணிலாவொடின்போர்மழை தூவினான்.

உரை.— இடையர்வந்து நீரிற்றவழுந் தீயொத்ததாமரை மாலையைக் குழந்தைபாதத்தில்வைத்தபோ தவனுகாயத்திலே நீர்கொண்டமேகமின்னினாற்போல வவரைப்பார்த்தினு ல வர்மனதிலே தெளிந்தஞானத்தையு மின்படிமழையையுந் தூ வித்தந்தானென்ப. (௰௬)

தூவியோடியவாரிதுவற்றொடு
காவிலோடியமுத்தெனக்காதலால்
நாவிலோடியநற்புகழ்சிந்துவா
ரேவியோடியகோல்விழியேத்தினார்.

உரை.— பெய்தோடின வெள்ளத்தின்மிகுதியாற் காட்டி லோடின முத்துகளைப்போல வாசைமிகுந்து நாவிலோடிவ ந்ததுதிகளைச்சொல்லுவார் வில்வினின்றெய்தவம்பினோடொ த்த விழியையுடைய விடைச்சிகளென்ப. (௰௭)

ஏந்தியோங்குளத்தின்பநெடுங்கடல்
நீந்திநீந்திநிலைக்கரைகாண்கிலாக்
காந்திவேய்த்தனளைக்கனிந்தோதுவாள்
சாந்திநாமந்தரித்தகுடத்தியே.

உரை.—ஞானத்தாலுயர்ந்த மனதிலுள்ளவின்பத்தின் க டலிலேநீந்திநீந்தி நிலைபெற்றகரையுங்காணாமற் சூரியனொளி வினையுடுத்தவளாகிற மரியென்றவளைப்பார்த்துச் சாந்தியெ ன்னுமோரிடைச்சி யினிதாய்ச்சொல்லுவாள். (௰௮)

குடத்திவாய்மொழிகோதென்றகோதையா
யுடத்திநீயொருவாதருளோர்ந்துகேள்
மடத்தியாதெனுங்கிள்ளைவகுத்தன
விடத்தியாவருங்கேட்பதிலாவதோ.

உரை.— இடைச்சிவாய்மொழிகோதென்ற தாயே நீகோ பித்துக்கொள்ளாமற் றயையோடுகேள், புத்தியறியாமற் கிளிப்பி

ள்ளையேதாகிலும்பேசும்போ தெல்லாருங்கேட்பாரல்லோ வென்க. (௰௯)

ஆவதேதமுனராயத்போலறிந்
தீவதேதநஸைசபின்றவளித்திடுங்
கோவதேமில்சயாள்தனிக்கோவினு
னேவதேயினிதென்றுதித்தான்கொலோ.

உரை.—வருங்காரியத்தை முன்னனதைப்போல மறைவின்றியறிந்து மனிதராசைக்குமேலேயு மீகைதந்திரட்சித்து வானுலகிலிருந்தாலும் பொதுவற்றவாண்டவ னிங்கேகஸ்திப்படுவது தனக்கின்பமென்று மனிதனுய்ப்பிறந்தானே வென்க. (உ௰)

தொல்லும்வேலொடுங்கூர்நெடும்வாளொடும்
வில்லும்வாளியுமாழியும்வில்செய
வொல்லுமாழியுருட்டிடக்கோன்றுணை
செல்லும்வீரவெஞ்சேனையிலாயதேன்.

உரை.—வேலும் வாளும்வில்லுமம்புஞ் சக்கராயுதமுமுதலியதொன்றின்றிக் கைக்கொண்ட விளங்கியநீதிசக்கரத்தை யுருட்டியாளும்படிக் கரசர்க்குத் துணையாய்நிற்கும் வீரசேனைகளு மிவற்கில்லாத தென்னவென்க. (உக)

ஆயவான்மணியார்ந்தணியுச்சியாற்
காயநெற்றிகடந்துயர்மாடமுந்
தூயபொன்னொடுசூழ்சுடர்பூணுமித்
தேயவேந்தர்தஞ்செல்வமொன்றில்லதேன்.

உரை.—தேர்ந்தநன்மணியால் அலங்கரித்தவுச்சியோடாகாயத்தி னுச்சியைக்கடந் துயர்ந்தவரண்மனையுந் தூயசெம்பொன்னும் விளங்கினபூணும்பரணங்களு மற்றதிங்குள்ளவரசர்கொண்டசெல்வங்களினுள் ளிவற்கொன்றுமில்லாத தென்னவென்க. (உஉ)

இல்லதேயிலவிவ்வழிவந்ததேன்
செல்லவ்ரன்வழிசெய்யவந்தானெனில்

வல்லவேடமணிந்துமறைவற
வெல்லவரனுருவேய்ந்தினன்றல்லதோ.

உரை. — இருக்குமனைமுதலின்றி யிவ்வழியிலேபிறந்ததென்ன? வான்வீட்டைச்செல்லும் வழிகாட்டவந்தானென்றால் வல்லமைகாட்டுங்கோலத்தையெடுத்து மறைவின்றிச் செயங்கொள்ளுதற்கான் ரூபத்தைக்காட்டினால் நல்லதல்லோவென்க. (உ௩)

ஓவுண்டாயவருக்கொடுவென்னுளத்
தாவுண்டாயினவையமிதேயினித்
தூவுண்டாதுவத்தூய்மலர்வாய்திறந்
தேவுண்டோதுதியாயிழையாவென்றாள்.

உரை.— துன்பரூபமா யென்மனதிலே யாசையினாலுட்கொண்ட சந்தேகமிதுதானே, இனிநீ தாயே மதுவைப்பொழியுமலர்வாய்திறந்து நல்லுணர்வினைக்கட்டளையிடுவாயென்றாளென்க. (உ௪).

என்றவாசகமெந்தைமனுக்குலஞ்
சென்றவாயருள்காட்டியசீருணர்
வொன்றவாகியுருகியதாய்ப்புனல்
மின்றவாவிழிதூவிவிளம்பினாள்.

உரை.—இடைச்சிசொன்னவாசகத்தோடு சுவாமிமனிதனாயருந்தயைகாட்டினதன்மையி னுணர்வு மிகவுந்தோன்றியதினால் தாயிரங்கிநொந்துருகி மின்னினகண்வழியே நீர்ப்புனலோடிச் சொல்வாளென்க. (உ௫).

அம்பினாலையர்செயுமத்துணை
நம்பினார்தனிநற்செய்கையீடிலார்
கொம்பிலேவுழுமிடைத்துவளுங்கொடி
யெம்பிரான்வலிக்கித்துணைவேண்டுமோ.

உரை.—அம்புமுதற் பலவாயுதங்கொண்டு படைவீரர்செய்யுந்துணையைத் தனியே காரியங்களைமுடிக்க வல்லமையில்

லாதவராக்குதம்புவார்; அப்படியே தனிநிற்கமாட்டாமலிடை யிற்றுவண்டகொடியாக்குங் கொழுகொம்பின்மேலேறிப்ப டரும், நம்முடைய சுவாமிவல்லமைக்கோவென்று லித்துணை வேண்டுமோ? வேண்டாதென்க. (உசு)

வேண்டுமோர்வினைவேண்டுமென்றல்முடித்
தாண்டுமோர்தனிக்கோவரசானெறி
தூண்டுமோர்சினந்தேர்ன் றழியப்பகை
தாண்டுமேர்வலிதங்குவர்யாவரோ.

உரை.—சுவாமி வேண்டுங்காரியத்தைவேணுமென்றமாத் திரத்திலே யதைமுடித் துலகமெல்லாந் தனியேயாளுமரசனு ய் வேகத்திற் கோபத்தைக்கொண்டபோ தப்பகையைக் கா க்க வல்லமையுடையவரெவருண்டோ வில்லையென்க. (உஎ)

யாவருங்கடிதஞ்சலோடெஞ்சுவான்
மீவருந்துளிமேதினிமொய்த்ததுந்
தீவருந்துளியம்புரந்தீந்ததுந்
தூவரும்பலவுந்தொகைசொற்றவோ.

உரை.— எல்லாருமஞ்சிமெலியுந்தன்மைக்கு முன்பெய் தசலப்பிரளயத்தா லுலகெல்லா மமிழ்ந்தினதும் பெய்த தீமழையா லந்துபுரங்கள்வெந்து தீர்ந்தது மித்தொகைப்ப ட்டபலவு நான்சொல்லவேணுமோவென்க. (உஅ)

சொற்றவிர்ந்தவருட்டொழிற்காவிதென்
றற்றவிர்ந்தவுடுமுடியாளுரைத்
திற்றவிர்ந்தவிடைச்சியுணர்ந்தபின்
பற்றவிர்ந்தவுரைப்பயன்கூறுவாள்.

உரை.— சொல்லில்டங்காத தயையின்காலமிக்காலமேயெ ன்று விளங்கியமீன்களைமுடியாகக்கொண்டதாய்சொல்ல, வி தை மிகவுணர்வினையுடையவிடைச்சிகேட்டுத் தன்னுசையை ப்பற்றிப் பின்னையுஞ்சொல்லுவளென்க. (உகூ)

கூறுவாள்செயுங்கொள்கையினென்னுளம்
தேறுவாளெனப்பின்னையோரையமூந்

தேறுவாய்மொழிகேட்டிடச்செப்புவே
னீறுவாயிலவெந்தையினன்னையே.

உரை. — அறுக்கும்வாளைப்போல வென்மனத்தையறுக்கு மின்னமொருசந்தேகத்தைத்தீர்க்க வுன்வாய்மொழிகேட்கச் சிறிதுகளைச்சொல்லுவேன் முடிவில்லர்தசுவாமியின்றாயேயென்க. (௫௰)

அன்னைதந்தையிலான்மறைநூற்படி
யென்னையிங்களித்தோன்வருமெல்லையின்
மின்னையொன்றியவேடமெடுத்தவன்
றன்னையாவருந்தாழவிறைஞ்சுவார்.

உரை.— சுவாமிதிருவுளம்பற்றின வேதநூலின்படியே நம்மையிரட்சிக்கிறவ னிங்கேமனிதனுய்வருந் தருணத்திலே விளங்கினவேஷத்தையெடுத்துத்தோன்றி யெல்லாரு மவனைத்தாழ்ந்துவணங்குவாரென்க. (௫௧)

அஞ்சுவாரவன்முன்னுலகாள்பவ
ரொஞ்சுவாரவனையிறைஞ்சாரென
விஞ்சுமாரணமாகவிளம்பினர்
துஞ்சுமாதவரேயெனச்சொல்லினள்.

உரை.— அவன்முன்பாகப் பூபதிகளனைவரு நடுங்கியஞ்சுவாரென்று மவனைவணங்காதவர் கெட்டுமெலிவாரென்றும் வேதத்திலெழுதினதாக முன்னிருந்தமாதவர்சொல்லக்கேட்டேனென்றாள் சாந்தியென்க. (௫௨)

சொல்லக்கேட்டனள்தொன்மொழித்தன்மையும்
வெல்லக்கேட்பரும்வெஞ்சினத்தெல்லை நா
ளொல்லக்கேட்டனருட்குறவாவதைப்
பல்லக்கேட்கிவியான்புகல்வேனென்றாள்.

உரை.— இடைச்சிசாந்திசொன்னதைக்கேட்ட மரியென்பவள் சொல்லுவாள்: பூருவகதைகளைமறைக்க மிகுந்தவெங்கோபத்தைக்காட்டற்குக்காரணமான கடையுகநாள் கிட்

டிற்றென்றுகேட்டயாவருநடுங்கிப்பஞ்சவட்போதுவரத்தக்
கதையுற்றுக்கேட்பீர்களாகில் நான்சொல்லுவேனென்றுளெ
ன்க. (௬௩)

தாளெழுங்கமலஞ்சுடர்தாவிய
கோளெழுங்கதிர்கொண்டெனக்கேட்டலும்
வாளெழுந்தகண்மாதொடியாவருஞ்
சூளெழுந்துறச்சொல்லெனச்சொல்லுவார்.

உரை.— தாளின்மேலெழும்பிய தாமரைமலர்ந்து சூரிய
ன்விட்டகதிரையுட்கொண்டதுபோல விவையெல்லாமாசை
யோடேகேட்டிருந்து வாட்கண்ணையுடைய மாதாகியசாந்தி
யு மற்றவெல்லாருமெங்களுக்குத்தெளிவாகும்படி சொல்ல
ம்மாவென்று சொன்னதினால் மரியென்பவளுஞ்சொல்லத்து
டங்குகின்றாளென்க. (௬௪)

## வேறு.

மற்செய்கைமுதிர்ந்துயர்ந்தோனிருகாலிங்கண் வந்து
திப்பானென்மறையாலறிந்தேமன்பி
னற்செய்கைதளிர்ப்பதற்கேமுன்னர்தோன்றிநயன்றருவான்
மீண்டரியதிறத்துநீதி
பற்செய்கைகாட்டவிருவினையால்யார்க்கும் பயன்றரநீமுன்
னுரைத்தவண்ணத்தெய்தி
முற்செய்கையருட்செய்கையிக்காலாய்ப்பின் முனிச்செய்
கையுலகஞ்சத்தோற்றுவிப்பான்.

உரை.—அளவில்லாதபெலனையுடையசுவாமி யிருவிசையி
வ்வுலகிலே வந்துதோன்றுவாரென்று வேதத்திலெழுதினதா
கவறிவோமே; தயையைக்காட்டமுன்னேவந்தெல்லாருக்கு ந
ன்மைசெய்வான், திரும்பிவந்து சர்வவல்லநீதியைக்காட்டி
யவனவன்செய்த நல்வினைதீவினையென் றிருவினைக்கேற்ப
வெவர்க்கும்பலனைக்கொடுக்க நீமுன்சொன்னபடிக்கு வந்
துதோன்றுவான், முன்செய்யுந்தொழில்தயைத்தொழிலாயி
க்காலத்தில்முடித்துப் பின்பு கோபத்தொழிலையெவருமஞ்ச
க்காட்டுவானென்க. (௬௫)

மண்கனியப்பொன்பொழிந்தமழையொத்தார்வம் வ
ழங்கவுரிப்பொழுதெனவின்றிறங்கிச்சேயாய்க்
கண்கனியப்பொற்கோலாலரிதிற்றீட்டிக் கதிர்தவழுமோவிய
நல்லுயிர்பெற்றன்ன
விண்கனியக்கவின்பூண்டவடிவங்காட்டி விழைவியற்றுங்கு
ழவியெனவிங்கண்டோன்றிப்
புண்கனியக்குளிர்ந்தாற்றுமருந்துபோன்றான் புலவரெலாம்
வருந்தினுந்தம்புகழின்மிக்கோன்.

உரை.— பூவுலகமுவப்பப் பெய்த பொன்மழைபோலச் சுவாமிதன்னுடையதயைவழங்குதற்கானபொழு திப்பொழுதென்றிந்நாளில் வானினின்றிறங்கிமனிதனாய்க் கண்ணுவப்பதற்குப் பொற்கோலினா லரிதாயெழுதப்பட்டுக்கதிர்களைவீசுகின்ற சித்திர நல்லுயிரைக்கொண்டதுபோல வானுலகுமுவப்பதற்குக்காரணமானவழகினையுடைய வடிவத்தைக்காட்டி யாசையைவருத்துவிக்குங்குழந்தையாகவிங்கேதோன்றிப்பாவத்தால்நாங்கொண்டபுண்ணைக் குளிர்ந்தினிதாயாற்றுமருந்தினைப்போலவானான் கவிஞரெல்லாருங்கூடிவருந்தி நினைத்த புகழ்ச்சியின்மேலான சுவாமியென்க. (௫௬)

அழுதார்ந்ததுயர்க்கரத்திற்பிறந்துலைக்கு மந்தையி
ன்பாலருந்திவளர்ந்தருள்வளர்ந்த
பொழுதார்ந்தவஞ்சகத்தார்பகைசெய்தார்ப்பப் பொறையே
ராய்ப்பூட்டிச்செம்புனற்சேறாக
வுழுதார்ந்தவார்வவிதைவித்திப்பின்னு முரியவாநீரிறைத்து
விளைந்தவின்பம்
வழுதார்ந்தவையகத்தாருய்தற்கீவான் மணிக்கலத்தூடமுதே
ந்துமருள்மொய்மார்போன்.

உரை.— சுவாமிதான்மனிதனா யழுதுநிறைந்ததுயர்களின் கையிலேபிறந்து கசக்குந்துன்பங்களினதுபாலையுண்டு வளர்ந்து அவனோடு தன்றயையும்வளர்ந்தபொழுது பாவிகள்வற்குப்பகைசெய்துமுழங்கவிற் றானேபொறுமையையேரொன்றாப்பூட்டிச் சிந்தியதன்னிரத்தத்தினாற்சேறாக்கியுழுது நிறை

தீத்தன்றயையைவித்தகவிரைத்தபின்ன ரவரவர்க்கானவரங்க
ளை நீராகவிறைத்து இதனால்விளையும்வீட்டுப்பேரின்பத்தையி
வ்வுலகத்தார்வாழ்வதற்குத்தருவான் மாணிக்கத்தாற்செய்த பா
த்திரத்தி லமுதினையேந்தினதுபோல நிறைந்தகருணையைக்
கொண்டமார்பினையுடையச்சுவாமியென்க. (௫௭)

பொய்ப்பொதுளுமைம்பொறிபின்மனமுஞ்செல்லப்
போக்கியகால்பொருள்புகழின்பவரும்வெஃகி
மைபொதுளும்வினைபொதுளவிளைந்தபாவ மருட்சீய்க்க
ப்பொறைமிடிதாழ்வுரியதல்லாற்
கைபொதுளுங்கனிவிடமென்றொருவுகென்றான், கனிவென்
னத்தானருந்திப்பொன்றற்போல
மெய்பொதுளுமறைதந்தோன்விலகுந்தீமை விழைந்துற்
றுலகிற்கும்பொருந்தும்பாலோ.

உரை.— பொய்யைக்காட்டும் பஞ்சேந்திரியங்களின்பி
ன்புமனமும்போகவிட்டுப் பொருள்புகழின்பமென் றிவற்
றையெல்லாரும்விரும்பிவந்தபாவங்களினால் விளைந்தமயக்கத்
தைத்தீர்க்கப் பொறுமை தரித்திரந் தாழ்ச்சி யென்றிவையு
ரியதல்லாம லொருவன்கையில்வைத்தபழத்தை நஞ்சென்று
தின்னாதேயென் றவன்றானே, யப்பழமினியதென்றுதான்
தையுண்டுசெத்தாற்போலச் சத்தியவேதத்தையுண்டாக்கி
னசுவாமி விலக்கினதின்மைகளைத் தானேவிரும்பிக்கொண்டா
லுலகியற்கைக்குமேற்குமோவென்க. (௫௮)

இக்காலந்தயைகாலமென்றுதோன்றி யெளியனெனத்
திரிந்தினியதெவர்க்குங்கூறி
முக்காலங்கடந்துணர்த்திச்சுருதிநன்னான் மொழிந்தருளை
க்காட்டியபின்முதிர்ந்தநீதி [லங்கிக்கூச
மிக்காலங்குறுகியகாநீர்வைதீர்க்க வாங்கிவன்றான்மூவுலகங்க
ளிக்காலங்காலுருவத்தெய்த்தாமுன்னர் விடுத்துதென்றெய்
துமெலாஞ்சொல்லும்பாலோ.

உரை.— இக்காலந் தயையின்காலமென்றெண்ணிவந் தெ
ளியனைப்போலத்திரிந் தெவர்க்குமினியவைசொல்லி நிகழ்

விறப் பெதிர்வென்னு மூன்றுகாலங்களையுங்கடந்த வுணர்வுகளைப்படிப்பித்து வேதத்தி னன்னூலைப்போதித்துக்காட்டுவர்னதின்பின்பு கடையுகத்தில் அளவில்லாதநீதிக்காலமாகித்தீர்வைதீர்ப்பதற் கிவன்றனே யுலகங்களெல்லாங் கலங்கிக்கூசுதற்குக்காரணமாகிய நஞ்சுமிழுமுருவத்தோடுவருவா னவன்வருமுன்னர் தூதாகவரவிடு மதிசயங்களையெல்லாஞ் சொல்லத்தகாதென்க. (௩௯)

தேரெழுந்தசெஞ்சுடரோனிருண்டுமாழ்கத் தெண்க
திர்கால்திங்கள்முகத்திரத்தஞ்சேப்பத்
தாரெழுந்தவம்பலரோமணியோநாறுந் தாரகைகளங்கண்
விட்டிரிந்துவீழ்கப்
போரெழுந்தகதத்துடன்றுதிரைகடாவப் புயல்பாய்ந்து
பொங்கியநீண்புணரியார்ப்பப்
பாரெழுந்தபருப்பதங்கணடுங்கிப்பேரப் படர்நிலத்தோர்
கடையுகமென்றஞ்சாநிற்பார்.

உரை.— சூரியனிருளாய்மயங்கச் சந்திரன்முகமேயிரத்தமாகச்சிவப்ப மாலையிற்கோர்த்தமலரைப்போலவு மணிகளைப்போலவும்விளங்கிய நட்சத்திரங்கள் வானினின்றுசரிந்துவீழப் போர்பொருதாற்போலக் கோபத்தைக்காட்டியலைகள்மேற்றாவி மேகமண்டலமட்டும்பாய்ந்து பொங்கினகடலேழுழங்கப் பூமியிலெழுந்தமலைகள் நடுநடுங்கிப் பெயரப் படர்ந்தபூவுலகத்தினோரெல்லாருங் கடையுகம்வந்ததென்று மிகுந்தவச்சத்தோடேநிற்பாரென்க. (௪௰)

கடுகியனவிடிச்சூல்கொள்கருங்கார்மொய்ப்பக் கனக
ணெனக்கடுஞ்செந்தீமாரிதூவ
வடுகியெனப்பெய்தவழல்திரண்டாங்கோட மண்டிருண்ட
புகையள்ளூர்ந்தன்மைமூய்ப்ப [டிகடாக்கக்
முடுகியனசாபமழைத்திரளின்விம்ம முகிற்கிறியிடியிடித்தவி
கிடுகிடெனப்பாருலகநடுங்கியாடக் கிளர்துயர்கொண்டுயிர
னைத்துமாழுமன்றே.

உரை.— கொடியவிடிகளைச்சூலாகக்கொண்ட கரியமேகங்கள் மேலேமொய்ப்பவுங் கணகணென்றெரிந்த செந்தீ

மாரிபெய்யவும் ஆறுபோலப்பெய்தவக்கினி திரண்டெ
ங்குமோடவுங் கையால்ள்ளிவாருதற்குக் காரணமாகியதன்
மையா விருண்ட்புகைமூடவும் விளைவில்விட்டவம்புகள் ம
ழையர்கமிகவு மேகங்களைக்கீறி யிடியிடித்தழுந்திவிழுமிடிக
டிரளாய்த்தாக்கவுங், கிடுகிடென்றுலகெல்லா நடுங்கியாடவுந்
துன்பங்கள்மிகுத் துயிரொன்னப்பட்டதெல்லா மன்றேயொ
ருமிக்கச்சாகுமென்க. (௪௧)

வெம்பிரமாசினத்தெரிந்தமண்ணோரெல்லாம் வெண்
பலியாயினபின்னர்வயத்திற்கெஞ்சா
தும்பரமாள்தனிக்கோலானேவுந்தன்மைத் தும்பர்பலர்வி
டுங்கணையில்விரைந்துசென்றே
யம்பரநான்கோடியெழுங்கடலுங்காரு மதிர்த்தரவமெஞ்
சிவிஞ்சக்காளமூதி
யெம்பரமாவிறைவனிடுந்தீர்வைகேட்ப வெழுமினெனவெ
ழுந்திருப்பர்மக்களெல்லாம்.

உரை. — மிகுந்தசினத்தோடு வேந்தெரிந்த மனிதரெல்லாருஞ்சாம்பலானபின்னர் குறையாதவல்லமையால்வானுலகிற்பொதுவறத்தனியேயாளுஞ்சுவாமி கட்டளையிட்டமாத்திரத்திலே பலவானோர் விட்டவம்பினும்விரைவா யிங்கேசென்று நாலுதிக்கிலுமோடிக் கடலுமேகங்களுஞ் செய்முழக்கத்திலுமிஞ்சியதொனியோடு காளங்களையூதி நமதுபரமகடவு ளிடப்போகிறதீர்வைகேட்க வெழுந்திருங்களென்பாரென்றவுடனேமனிதரெல்லாருமெழுந்திருப்பரென்க. (௪௨)

ஏவுகின்றவயத்துள்ளவிலகுமூன்று மெழிற்படமுன்
னென்றுமிலாதுளவாக்கின்றோன்
மேவுகின்றதிருவுளமாய்ச்சொல்லலாற்று மிடறன்னுலடலை
யென்ப்புழுதியென்னுத்
தூவுகின்றவுடலெல்லாமொன்றாய்ச்சேர்த்தித் தொல்லுலக
ந்துடங்கியிறாடடங்கியிங்கண்
டாவுகின்றமனுக்குலத்தோரொருவனீங்காத் தம்முடலைப்
போர்த்தெழுந்துகலந்துநிற்பார்.

உரை. — முன்னாளிலொன்றுமில்லாமலே வினைபெலத்தி
னாலே யுலகமூன்றினையுமுண்டாக்கினசுவாமி தான்றிருவுள
ம்பற்றின சொல்லிலடங்காதவல்லமையினாற் சாம்பலுமாய்
மண்ணுமாய்ச்சிதறினவுடல்க ளெல்லாத்தையும் பழைய
ரூபமாயொன்றுபடச்சேர்த்தி யுலகந்துவக்கினநாள் துவக்
கியநாள்மட்டும் பூமியிலிருந்த மனிதரெல்லாருமொருவ
னாத்தப்பாமற் றமதுடலைப்போர்த்துயிரோடெழுந்து நிற்
பரென்க. (௪௩)

குலமுறையுமினமுறையுமொன்றும்பாராக் குணத்
தொகையால்வேறுபடவினையைச்செய்த
நலமுறையும்பார்த்திருபால்பகுப்பவானோர் தம்பிதனில்
லாளைமகனைத்தந்தாய்
பலமுறையுமுதனைனத்தம்பியோர்தூர் பற்றியபற்கிளைதம்
முட்பிரிந்துநிற்கும்
வலமுறையுங்கண்டலறித்தளர்ந்துநோக வானவரீண்டெவு
ளையுமோரிடத்திட்டுய்ப்பார்.

உரை. — அன்றுகுலமுமினமும்பாராமற் குணங்களின்
முறைமையால்வேறுபட வவனவன்செய்தவினைகளின் மு
றையைமாத்திரம்பார்த்து நல்வினைதீவினையென் றிருவினை
பற்றி வந்தவானவர் மனிதரெல்லாரையு மிருபிரிவாக
ப்பகுப்பாராதலின் பூமான்றன்றேவியையுந் தாய்தன்மக
னையுந் தம்பிதன்னண்ணனையும்விட்டுப்பிரிய வொருதூரினி
ன்றுவளர்ந்த பலகிளைகள் தம்முட்பிரிந்ததைக்கண்டமையா
லழுதலறித் தயங்கி நொந்திருக்க வுடனே யவ்வானவரெல்
லாரையு மோரிடத்திலே கொண்டுவைப்பாரென்க. (௪௪)

இடியுண்டமுகிலொருபால்மின்னிவிம்ம விகன்முரசு
ம்பற்பறையுமொருபாலார்ப்பக்
கொடியுண்டவான்றளங்களொருபான்முன்னக் கோரக்கணம்
போன்மற்றமரரிருபாற்சூழத்
தடியுண்டவொலிக்கொடுஞ்சூழ்வெருவுய்த்தொல்கிச் சுடர்த
வழுந்தாய்முகிலிற்பொலிந்துதோன்றி

முடியுண்டவரசாரசெனமேனிற்பான் முருகுமுகைமுகத்
திங்களனிற்குமின்னான்.

உரை. — ஒருபக்கத்திடித்துமின்னி மேகங்கண்முழங்க வொருபக்கத்துப் போர்முரசும்பலபறைகளுமுழங்க வொருபக்கத்துக் கொடியேந்திப் வானவர்தளங்கள் முன்னே போக விருபக்கத்து மற்றவானவ ரரசர்கூட்டம்போலச் சூழ்ந்துவர வெங்கும்வெருவினைப்பரப்பிமுழங்கி மின்னிச் சுடருமொருமேகத்தின்மே லெழுந்தருளித்தோன்றி முடியைச்சூழ்ந் தரசர்க்கரசனாய்நிற்பான் மணத்தபூவரும்பி னோடொத்தமுகத்தோ டிங்கேகுழந்தையாய்நிற்குமிவன்றா னேயென்க. (௪௫)

குன்றெழுந்தசெஞ்சுடர்போன் முகின்மேறோன்றுங்
குணத்தொகையோன்வலத்திறைஞ்சியுயரவானோர்
சென்றெழுந்தநல்லோரைமுகமனோக்கித் தீயலகையினத்தி
னுடனிடத்திலஞ்சி
நின்றெழுந்ததுயரழற்றுமனத்தீயோரை நெடும்வேற்கண்
ணாற்சுளித்துநோக்கிநோக்கும்
நன்றெழுந்தவினைப்பயத்தால்விளக்கிட்டன்ன நவையெல்
லாமெல்லார்க்குந்தோற்றுவிப்பான்.

உரை. — மலைமேலெழுந்தசூரியனைப்போல மேகத்தின் மேலிருந்துதோன்றிய சகலநன்மைகளைப்பொருந்தியுடை யநாதன் றன்வலதுபக்கத்திலே யுயர்ந்தவானவரோடுகூட வெழுந்திருக்குநல்லவரை யினிதாய்நோக்கியபின்னர் நரக ப்பசாசுகளோ டிடதுபக்கத்திலேகீழஞ்சிநடுங்கித் துன்பத் தால்வெந்தமனத்தோடுநிற்கும்பாவிகளை நெடியவேலெறிந் ததுபோலக்கண்பார்வைவிட்டுக் கோபமாய்ப்பார்த்துப் பா ர்த்ததன்மையால் விளக்கைக்கொளுத்தியிட்டதுபோல வவ னவன்செய்தபாவமெல்லா மெல்லாருமறியக்காட்டுவா னெ ன்க. (௪௬)

முற்செய்கையனைத்துமவண்டோன்றித்தீமை முயன்
றதுமுள்விரும்பியதுமுரைத்தசொலலும்

நற்செய்கைநன்றாய்ச்செய்யாமற்செய்த நவையுமொளித்தி
ருட்டேடிமிரவிற்செய்த
தற்செய்கையாவுமன்றேநடுங்கிக்கூசத் தரணியெலாமுற்ற
றியத்தவம்பயக்கும்
மற்செய்கையுறுதியினுவிழிவிக்கால் மறைப்பவவைதுடை
யாதற்றேன்றுமன்றே.

உரை.— முன்செய்தகிரிகையெல்லா மங்கே வெளியாகி
யவன்வன்பாவத்தைச்செய்தது மிச்சித்ததுஞ் சொன்னதீ
யசொல்லும் புண்ணியங்களை நன்றாய்ச்செய்யாம லிதிலே
செய்தகுற்றங்களு மிருளைத்தேடியொளித் தகோரராத்திரி
யிலேமுடித்தபாவங்களுமெல்லாமு மன்று பாவிகள் நடுங்கி
க்கூசிநிற்ப வுலகமெல்லாமுழுதுமறிய வெளியாகு மிக்கால
த்திலே தவத்தினுறுதியாலே யதை யினிதாய்மறைப்பதற்
கு நன்றாய்த்துடையாதேபோனுமெலன்க. (௪எ)

மின்னிவீழுருமன்னசுளித்துநோக்கி வெருவுய்க்குமு
கத்தார்த்துவிமலன்சொல்வான்
றுன்னிவீழ்புனலன்னநிலையாச்செல்வத் தொகுதிவிழைந்தற
நீத்தபாவிகாள்விண்
சென்னிவீழ்துளியாகிசூழ்ந்தயாவுந் திளைப்பத்தந்தனனு
னுயென்னைநீக்கி
வன்னிவீழ்ந்தெரிவஞ்சப்பேய்கடம்மை வரக்கடவுளென்
றெண்ணித்தொழுதென்னே.

உரை.— மின்னினுற்போலக்கோபமாய்நோக்கி யிடியி
டித்தாற்போலப்பயம்வருத்துவிக்குமுகத்தோடு கூப்பிட்டுச்
சுவாமி திருவுளம்பற்றிச்சொல்வான்: பெய்மழையாற் கூ
டி மலையினின்றுவிழு மருவியைப்போல் நில்லாதசெல்வங்க
ளைவிரும்பிப் புண்ணியங்களைவெறுத்தபாவிகளே யாகாய
த்தினின்றுவிழுந்த மழைத்துளிமுத லுங்களைச்சூழ்ந்த ந
ன்மைகள்யாவையுந் தந்தவன் நானுகியென்னைவிட்டு நரகத்தி
ல்வீழ்ந்தெரியும் வஞ்சப்பசாசுகளை வரங்கொடுக்குந் தேவ
ர்களாகவெண்ணி யதுகளைவணங்கினதேதென்க. (௪அ)

நூல்வழியேவந்தமறைநீக்கிக்காம நுழைவழியாங்க
தைப்பலவுஞ்சுருதியென்றீர்
கோல்வழியேகோட்டமிலவென்னைப்போற்றுங் குணத்தவ
ரைக்குலமிலரோவென்றீர்நீங்கா
வேல்வழியேயிரத்தமுகவவரைக்கொன்றீர் வீட்டிலிவரொன்
றொடுவாழ்ந்துவப்பத்தீமை
கால்வழியேவணங்கியதீவஞ்சத்தேவர் கணத்தொடுநீரூழித்
தீமுழுகிவேவீர்.

உரை.— நானேறிய நூலின்படிவந்த சத்தியவேதத்தைவிட்டுக் காமப்பாவங்கள் நுழைதற்குவாசலாகிய பலகதைகளை வேதமென்றீர், இராசநீதியைத்தப்பாமலென்னைவணங்கின சனங்களைக் குலமில்லாதவரென்றுநிந்தித்தீர், வேலின்வழியாலிரத்தம்விடாமலோட வவர்களைக்கொன்றீரே, இப்போதிவரொன்றோடே மேல்வீட்டி லெஞ்ஞான்றும்வாழ்ந்திருப்பர், நீர்பாவவழியே வணங்கியவஞ்சத்தையுடைய பொய்யானதேவர்களோடு நரகத்திலே யூழித்தீமுழுகி வேவீரென்க. (௪௧)

நண்ணாநின்றுழிநான்றெரிந்தநீரோ நன்மறைநூ
லுணர்ந்துணராதவரைப்போன்றீ
ருண்ணாதுமீயாதும்பொருளீட்டிட்டீ ருள்பிறர்கைப்பொ
ருள்கொண்டிகழ்ந்தீர்பொய்த்தீ
ரெண்ணாதாய்தந்தையிறைஞ்சீர்கேளீ ரெதிர்த்துடன்றுப
கைத்தீர்பொய்யாணையிட்டீர்
கண்ணாதுபிறர்மனைபோய்க்காமத்தாழ்ந்தீர் கதிவழியெய்
தாரொடுதீநரகிற்றாழ்வீர்.

உரை. — என்னைப்பணுகாதிருக்கையில் நானேதெரிந்துகொண்டநீரோவென்றால் சத்தியவேதத்தையறிந்து மறியாதவர்களைப்போலநடந்தீர், நீருண்ணாமலும் பிறர்க்கீயாமலும்லோபிகளாய்ப் பொருளைக்குவித்தீர், பிறர்கைப்பொருளையுந்திருடிக்கொண்டீர், பிறர்க்குநிந்தைசொன்னீர், பொய்சொன்னீர், தாய்தகப்பனெண்ணாமல் வணங்காமற்கேளாமலிருந்தீர், சண்டையிட்டீர், பகையைவைத்தீர், பொய்யாணையி

ட்டீர், சற்றுமெண்ணமற் பிறதாரத்தையிச்சித்துக் காமத்தில
மிழ்ந்தினீ ராகையாற் பரமகதியைச்சேரும் வழியறியாதவ
ரோடு நீரதையறிந்திருந்துந் தீநரகத்திற் ருழவிழுவீரெ
ன்க. (௫௰)

என்றுணர்த்தசனியனுனென்றதன்மைத் தெவ்வுலகும
திர்த்தஞ்சவார்ப்பாரன்னர்
குன்றுதாங்குளசெல்வமிழந்தோநொந்தோம் குலைகிற்போ
ங்கரைகாணமருண்டோங்கெட்டோம்
பின்றுதார்த்தெரிவேவோமந்தோவந்தோ பேறில்லார்குல
மில்லாரவரையென்றோம்
பொன்றுதார்வாழ்வவர்பொன்றுதந்தோ புகைச்செந்தீ
வேவோநாமந்தோவென்பார்.

உரை.— இடியோடொப்பவாய்த் திவை சுவாமிசொன்ன
தினு லப்பாவிக ளுலகங்களெல்லாந்திர்த்தஞ்சுதற்குக் காரண
மாகியுமுழக்கத்தோ டார்த்துக்கூப்பிடுவார்: வான்மேலுள்
ளகெடாதசெல்வங்களை யிழந்தோமே, நொந்தோமே, எப்
போதுமஞ்சிக்குலைவோமே, மீட்பதற்குக்கரையைக்காணம
ல்மயங்கிக்கெட்டோமே, விடாமலார்த்தலறி நெருப்பிலே
வேவோமே, ஐயோ வையோ! நல்லவர்களைப் பேறுங்கு
மில்லாதவரென்று நிந்தித்தோம், இதோ சாகாமலவரெப்
போதும்வாழவே நாமு மையோ சாகாமற்புகைந்தெரியுஞ்
செந்தீயில்வேவோமையோவென்பாரென்க. (௫௧)

துடித்திடுவாருடல்பதைப்பார்மோதிவீழ்வார் சுழல்கி
ற்பார்புரள்வார்நொந்தழுவார்சோர்வார்
கடித்திடுவார்தம்முடலைமுனிவாரார்ப்பார் கலுழ்கிற்பார்கு
ருதிகடாவிடத்தாந்தம்மை
படித்திடுவாருடற்கீறியூனுண்டாற்று ரயர்ந்தேங்கித்தயங்குகி
ற்பார் துயரின்வெள்ளங்
குடித்திடுவார்தீக்கடலைநீந்தார்நீந்தார் குன்றுதெஞ்ஞான்று
மெரிபொன்றுவேவார்.

உரை.— துடிப்பப் பதைப்ப மோதிவிழச் சுழலப்புரள
நொந்தழச் சோர்வார், தாந் தமதுடலைக்கடிப்பச் சினந்தா

ர்த்துப்புலம்பி பிரத்தந்திரளாயோடத் தாந்தம்மை யடிப்
பார், தமதுடலைக்கீறி யூன்களையுண்டுண்டும்பசியாற்றார், அய
ர்ந்தேங்கித்தயங்கித் துன்பவெள்ளமுட்கொண்டுகுடிப்பார்,
ஆகிலு மினிக்கரையேறத் தீக்கடலை நீந்தாமல்நீந்தாமலெப்
பொழுதுங் குறையாத நெருப்பிலே சாகாமல் வேவா
ரென்க, (௫௨)

வானகத்தேபேருவகைபயக்கும்பாலால் வடிவமுகத்
திவனல்லோர்தம்மைநோக்கிக்
கானகத்தேதுயருண்டீர்நிந்தையுண்டீர் கசடற்றீரறம்பூண்
டீரினியெஞ்ஞான்றும்
மீனகத்தேமீன்களெனவொளிர்ந்தென்றேடோர் வீட்டி
டைவீற்றிருந்தாளவெந்தையாசி
மானகத்தேபெற்றீரோவம்மினென்று வரக்கடலின்மூழ்கு
வப்பிற்றொழுவார்நல்லோர்.

உரை.—வான்வீட்டிற் பேரின்பத்தைவருத்துவிக்குந் தன்
மையாலழகியமுகத்தோ டிவன்றானே நல்லவர்களைப்பா
ர்த்துச்சொல்லுவான்: என்னைக்குறித்துவனத்திலேபோய்ச்
சிலர்துயர்களைக்கொண்டீரோ, சிலர்பொறுமையோடுநிந்தை
பட்டீரோ, எல்லாரும்பாவத்தைநீக்கிப் புண்ணியங்களைச்
செய்தீரோ, இனியெப்பொழுதும் வான்மீன்களினுள் மீன்க
ளைப்போலவிளங்கி யென்றே டொருமோட்சவீட்டில்வீற்
றிருந்து மகாராச்சியமாண்டிருப்ப வென்பிதாவினு லாசீர்
வதிக்கப்பட்டவரோ வாருங்களென்று நல்லவரெல்லாரும்
அடைந்த வரங்களின்கடலிலே யமிழ்த்தியவுவகையோ டாண்
டவனை வணங்குவாரென்க. (௫௩)

மறநெஞ்சீர்போய்த்திருவென்முகத்தகன்றே மண்ணை
யுடனாழித்தீபோமினென்று
அறநெஞ்சாரொடுவானோர்புகழ்ந்துசூழ வாங்கிவன்றான்வா
னினுயர்செல்லுங்காலிற்
புறநெஞ்சீர்த்தனதுயரோடிவற்றைக்கண்ட பொதிர்தீயோ
ரயர்ந்தேங்கிப்புலம்பிச்சீறத்

திறநெஞ்சீர்த்தெனப்புவியுட்பிளந்தவாயிற் றிரண்டிருண்
டார்த்தலறித்தீநரகில்வீழ்வார்.

உரை.— பாவநிறைந்தநெஞ்சினையுடையநீசரே! எனது திருமுகத்தினின்றகன்று பசாசுகளோடு நரகத்தாழித்தீயிற்போங்களென்று வானவரும் புண்ணியாத்துமாக்களுந் துதித்துச்சூழ்ந்துவர விவன்றானே யங்கே வானின்மேலெழுந்தருளும்போ திப்பாலே நெஞ்சினையறுத்த துன்பத்தோ டிதைக்கண்டபாவிக ளயர்ந்தேங்கிப்புலம்பிச்சீறப் பூமி தன்னெஞ்சினையறுத்ததுபோல வுட்பிளந்தவாய்வழியாக வவரெல்லாருந் திரண்டிருண் டார்த்தலறித் தீநரகில்வீழ்வரென்க. (௫௪)

சுற்றத்தார்வேண்டுமென்றேமறையுட்கொள்ளாச் சுற்ற
த்தோடுங்கந்தோவென்றும்வேவோஞ்
செற்றத்தால்முந்தையர்தீவழியைநீங்காச் சிதைந்திவரோ
டார்ந்தெரிதீயாழ்ந்தோமந்தோ
குற்றத்தா லுலகியற்கைபிறழாதண்ணிக் கொண்டபயனிதோ
வந்தோவந்தோவின்பப்
பெற்றத்தாலிதோகெட்டோமந்தோவென்று பின்றுநச்சுயி
ர்பொன்றுதென்றும்வேவார்.

உரை.— உறமுறையாரை வேணுமென்றதினா லல்லோ சத்தியவேதத்தைக் கேளாதிருந்தோம், அவ்வினத்தோடையோ விங்கேவிழுந் தெப்போதும்வேவோம், சலஞ்சாதித் தெங்கள்முன்னோர்பிடித்தவழி தீயதென்றறிந்தாலும் விடமாட்டாமற் கெட்டு நாமுமிவ்ரோடேநெருங்கி நெருப்பிலே யமிழ்ந்தினோமையோ, உலகியற்கைதப்பாமற் பாவத்தோடே யிலவுகீகத்தையண்டித் தேடிவந்தபலனிதோ? ஐயையோ வின்பத்தினாசையா விதோ. கெட்டோமையோவென்று மாறாதநஞ்சினைக்குடித்த தம்முயிருஞ்சாகாம லெப்பொழுதும்வேவரென்க. (௫௫)

அன்றின்னானிருவினைக்கும்பயனுய்த்தெய்தற் கர
சொக்கும்வடிவொக்கப்பொலிந்துதோன்ற

வின்றன்னானீதிமுறைபிறழாநேர்சென் றிருபற்றற்றொழுகு
நெறியெவர்க்குங்காட்டச்
சென்றின்னாப்பயத்தபொருள்புகழின்பெல்லாஞ் செகுத்
தெம்மையளிப்பதற்கேயெளியவேடம்
நன்றென்னாமுகைமுகத்துக்குழவியானா னவைக்கிறுதிநவை
கொண்டோர்க்குறுதியன்னான்.

உரை.— அக்காலத்திலிவன்றானல்வினை தீவினை, யென்றிருவினைக்கும் பலனைக்கொடுக்கவரும்போ திராசாவின்கோலத்தைக்காட்டிவந்துதோன்றுவர்ன், இக்காலத்திலவன்றானே நீதிமுறைகளைத்தப்பாமல்நடந்து நானெனதென் றிருபற்றுதலையற்றுத்த வொழுக்கத்தை யெவர்க்குங்காட்டுதற்குவந்து பாவத்தைவருத்துவித்த பொருளும் புகழு மின்பமு மிவையெல்லாத்தையும்விட்டு நம்மையிரட்சிக்க வெளியவேடமேநல்லதென்று மலராத்வரும்பினோடொத்த முகத்தையுடையகுழந்தையானான் பாவங்களைக்கெடுத்துப் பாவிகளுக்காதரவுசெய்யுஞ்சுவாமியென்க. (௫௬)

இன்பருந்திநாமுண்டவிடத்தைத்தீர்க்க வியல்பாங்
கைப்பெனநாமேயுண்டானன்றே
துன்பருந்தித்தான்மருந்துநமக்கேயாகித் துயர்துய்த்தப
யனெல்லாநமக்கேயீவா
னன்பருந்தியமுதேந்துமணிக்கலத்தி னன்னானென்றிறை
ஞ்சினடாய்த் துயர்முனின்பம்
பின்பருந்திக்கேட்டெவரும்வணங்கிநிற்பப் பேரறிவோங்
கியசாந்திதொழுதுசொல்வாள்.

உரை.— ஆசைப்பட்டின்பத்தையுண்டு நாமுண்டநஞ்சினைத்தீர்ப்பதற்குரியமருந்து கசப்பென்று நாமே யதையுமுண்டால்நல்லதல்லோ? இப்படியல்ல, சுவாமிதானே துன்பங்களையுண்டு நமக்குத் தான்மருந்தாகி யத்துன்பங்களையுண்ட பலனெல்லாத்தையுநமக்கேதருவான், தான்கொண்டதயையினா லமிர்தத்தையேந்திய மாணிக்கப்பாத்திரத்தைப்போலுமிவனென்றுசொல்லித் திவ்வியகுழந்தையை வணங்கினேந்தாயே, அதெல்லாமின்பதுன்பத்தோடு கேட்டவரெ

ல்லாரும்விழுந்து தெண்டனிட்டிருக்கத் தெளிந்தவுணர்வி
னுயர்ந்த சாந்தியென்பவள் வணங்கிச்சொல்லத்துடங்கு
கின்றாளென்க. (௫௭)

## வேறு.

வழுதாயினவின்புணநான்மனமூட்
பழுதாயினபாவியினாலிறைவா
வழுதாய்கொளுளைந்தயர்வாய்கொலெனாத்
தொழுதாளழுதாள்பினைசொற்றுவளால்.

உரை.—பொய்யானவின்பத்தைவிரும்பிப் பொல்லாதபா
வியாகியவென்னாற் சுவாமியே யழுவாயோ நொந்தயர்வா
யோவென்று கும்பிட்டழுது பின்னையுஞ் சொல்லுவாளெ
ன்க. (௫௮)

மறமேவினர்கைவசமாகுபவீங்
குறமேவியகாதலுளாயினையோ
திறமேவியசீவனியேயமுதே
யறமேயருளேகருணாகரனே.

உரை.—பாவிகளுக்குக் கைவசமாக விவ்வுலகில்வர வாசை
கொண்டாயோ? உயிரைத்தருமருந்தே யமுதே யறமே யரு
ளே கருணாகரனேயென்க. (௫௯)

சிந்தாகுலவேலையுடைத்தசெயிர்
தந்தாகுலவாசைதகைத்தகரை
யுந்தாகுபநீயுலகோர்மகனாய்
வந்தாகுலமாகடல்மூழ்குவதோ.

உரை.—சிந்தாகுலக்கடலையுடைத் துலகெல்லாம்வெள்ள
மாக மூடுதற்குக்காரணமாகிய் பாவங்களைவருத்துவிக்கும்
பொல்லாவாசையைமறித்துத்தடுக்க வதற்கோர் கரையைப்
போட நீயேயிங்கேமனிதனாய்வந்து துன்பக்கடலிலேமூழ்
கியமிழ்ந்துவாயோவென்க. (௬௰)

தேன்றோய்தயிதாமுணவாஞ்செயிர்தீர்
வான்றோயமுதொத்தமருந்திடவோ
ஆன்றோயுடனோயுறுகைப்பயிர்வாய்
கான்றோய்மலரோயுயிர்செய்கனியே.

உரை.—தேனின்பத்தையுண்டு நாஞ்செய்தபாவத்தைத் தீர்க்க வானினின்றுவந்தவமுதினைப்போலு மருந்தினையிட வோ நீயெடுத்தசரீரத்தில்வரு நோய்துன்பங்களின் கசப்பி னையுண்பாய் வாசமலரோடு முயிர்தருங்கனியோடுமொத்த வனேயென்க. (௬௰௧)

மண்ணோர்கள்வருந்திலவாழ்வயிற
விண்ணோர்தொழுமோர்தனிவேந்தெனநீ
புண்ணோகவுடற்றுயர்பூத்திடவோ
கண்ணோர்மணியேகனிவாருயிரே.

உரை.—பூவுலகத்தார் துன்பமின்றிவாழ்வதற்கே வானுல கத்தாரால் வணங்கப்பட்டதனிவேந்தனாகியநீ யுன்னுடம்பி லே காயங்கள்பட்டுநொந்து துன்பங்களையடைவாயோ க ண்மணியே யெனக்கினியவுயிரேயென்க. (௬௰௨)

ஐயநாகமெனப்பலமின்னலெழீஇக்
கைநாகமெனக்கடிதார்த்துநிறை
பெய்நாகமெனப்பிதிர்வந்தனைகண்
மைநாகமெனவருகோமனநாம்.

உரை.—படம்விரித்தாடும்பாம்புபோலமின்னி மதயானை போலமுழங்கி நிறையப்பெய்கின்றமேகமேபோல நீவானி னின்றிறங்கிவந்தாய், நாமோவென்றால் கல்மலைபோல மன தினிலேயுருகாதிருக்கின்றோமேயென்க. (௬௰௩)

அறவீடிலாரறிவீடிலார்
இறவீடிலாரிடைசேர்பயனு
உறவீடிலர்வுறைவீடிலாப்
புறவீடிலாப்பிணிபூத்தழுவாய்.

உரை.—அறமுமறிவுந்திறமுமில்லாத மானிடரிடத்தே நீ சேர்ந்ததினாலல்லோ வுறமுறையாருதவியுமில்லாமற் புறவுத வியுமில்லாம லிருக்கும்வீடுமில்லாமல் நொந்தழுவாய்சுவாமி யென்க. (௬௪)

புகையாடியகாடெனுமிப்புவியே
பகையாடியதல்லதுபுண்புளதோ
நகையாடுவர்நாளியெனக்கருதி
மிகையாடுவர்நின்விழைவாற்றுவரோ.

உரை.—சுடுகாடாகிய விவ்வுலக முனக்குப்பகையைச்செய்வதொழிய நன்மைசெய்யாது, மானிடரெல்லாருமுன்னை நகைப்பார், நாய்கள்போலமேல்விழுந்துநெருங்கித் துன்பங்களைப்படுத்துவார், நீதுரிதங்களைப்படுதற்காசையோடே வந்தாயே யுன்னாசையை நன்றாயாற்றுவாரொன்க. (௬௫)

பிணியாசையிலெய்தினையோபிணியே
யணியாசையின்மேனிறையாக்குவரோ
கணியாவருள்மாகைகருத்திதுவோ
மணியாரணியேமறையின்றிருவே.

உரை.—துன்பங்களை யாசைப்பட்டுவந்தாயே? அவ்வாசையின்மேலுந் துன்பங்களைச்செய்வாருலகத்தார், வளாவறுக்கப்படாத தயையின்மாகையெடுத்த கருத்திதுவென்பவோ! மணியார்க்கோர்த்த வாபரணமே வேதத்திற்கொருசெல்வமேயென்க. (௬௬)

இடிமொய்த்தனவெல்லையிருங்கரிகள்
பிடியைத்தழுவிப்பிணியாற்றுவன
மடியுற்றிளங்குஞ்சுகள்மாழ்குமென
முடிமொய்த்துறைமுற்பெடைதாங்குவன.

நெடுமூவுலகாக்கியநீயெனினுஞ்
சுடுசூழழலாற்றிடவுஞ்சுழலப்

டுவிண்மழைதாங்கிடவும்பரிவற்
றிடுமொன்றிலதாமருமாங்கயிதே.

இவையிரண்டுமொருதொடர்.

உரை.—இடியிடிக்குங்காலத்துக் காட்டானைகள்முதலாய்த் தும்பிக்கையாலே பெண்ணானைகளைத்தழுவி யாறுதல்செய்யுமாம், மழைபெய்யுங்காலத்துத் தமதிளங்குஞ்சுகள்கெட்டுச்சாகுமென்று பேடைகள்மேல்நின்று மழையைத்தாங்குமாம். ஆகிலுலகமூன்றினையு நீயுண்டாக்கினனாயிருந்து முனக்குரைத்தகோடையின் வேகத்தையாற்றவுஞ் சுழன்று பெய்தம்மழையின்சாரலைத்தாங்கவு மாறுதலாகவொன்றுமில்லாமலாவதிது வரியமாகைதானேயென்க. (௬௮)

பொய்யாவிதியோய்பொருவாவருளோ
யுய்யாவுலகென்னிலுனக்கிழிவோ
வய்யாபயனிற்கிதனுகுவதோ
கொய்யாவவியேகுறையாத்திருவே.

உரை. — பொய்யைக்கொள்ளாத விதிகளையுடையவனே! ஒப்பில்லாத்தயாபரனே! இவ்வுலகெல்லாம் வாழாமற்கெட்டாலு மிதனா லுனக்குக்கேடுண்டோ வில்லையே, ஐயாவிதனா லுனக்கு மிலாபமொன்றுண்டோவில்லையே, கெடாதவல்லமையுங்குறையாத செல்வமுமுடையவனேயென்க. (௬௯)

விடியாவிருள்மூடியமேதினிமேன்
முடியாவொளிமுற்றியசெஞ்சுடரோ
யடியாருயிரேயணியேயெனமெற்
கொடியாடெனநொந்துகுழைந்தழுவாள்.

உரை. —என்றும்விடியாமலிருண்ட விரவுமூடின விப்பூமியிலுதித்த முடியாதவொளியால் விளங்கினசூரியன் நீயே, அடியார்க்குயிர் நீயே, ஆபரண நீயேயென்று மெல்லியகொடியாடினதுபோல நொந்துகுழைந்து சாந்தியழுவாளென்க. (௭௰)

அழுவாரொருவரும்மயர்வாரொருவருந்
தொழுவார்புகழ்வார்துணர்மெல்லடிமேல்

வீழுவார்சிரமேற்கொளுவார்பிடைவா-
ரொழுவார்நணுவார்பெயராரினிதே.

உரை.— அங்ஙன மங்கேயிருந்த விடையருமிடைச்சிகளு மெல்லாருமழுவ மயரவுந் தொழவும் புகழவுந் திவ்வியகுழந் தையினது மெல்லியபூவடியின்மேல்விழ்வு மவற்றைத்தலை மேற்கொள்ளவுந் தம்முள்நெருங்கவு மெழவு மணுகவுஞ் செய்/தினிதாய்ப் பெயராமலிருந்தாரென்க. (௭௧)

இன்றேநினையெள்ளினரெல்லையிரு
ளன்றேயறிவாரழுவாரருளைக்
கொன்றேடினர்வன்னிகுளிப்பவரோ
வென்றேதொழுவாரிளையோர்சிலரே.

உரை.— அவர்களினுட்சிலரே வணங்கிச்சொல்லுவாராம், இப்பொழு துன்னை நித்தித்தவர் கடையுகநாளிலே தாஞ்செ ய்த குறைகண்டறிவா ரறிந்தழுவார் கிடையாமல்வீணையுன்.ற யைத்தேடுவாராகி யூழித்தீக்குளிப்பாரோவென்பாரென்க. (௭௨)

மெய்யாகியநின்விதியேவிழையாப்
பொய்யாகியபுற்கதைபூத்தபயன்
மெய்யாகியநாள்மொழிவாரெனநீர்
மையாகியகண்வடிவார்சிலரே.

உரை.— நீபடிப்பித்த சத்தியவேதத்தைத்தேடாமற்பொ ய்யான பலபுற்கதைகளை யுட்கொண்டதினு லாயபலனேதெ ன்று மெய்நாளாகிய கடையுகத்திலே பாவிகள்தாமேசொ ல்லுவாரென்று கருங்கண்வழியாக நீர்வடியவழுவார் சிலரெ ன்க. (௭௩)

சிலர்நீதிசெழுந்திறல்பாடுவரே
சிலராரவிருந்திருவோதுவரே
சிலர்தீதுசெயும்பகைசெப்புவரே
சிலர்தேடியதீமைகளுழ்குவரே.

உரை.— சிலர்நீதியின்வல்லமைபாடச் சிலர் தயையின் செல்வத்தையுரைக்கச் சிலர்பாவத்தால்வரும்பகையைச்சொ

லைச் சிலர் தாமுன்செய்த பாவங்களைக்கழுவி யழுவரென்க. (௭௪)

சிலர்தாளிணைசென்னியிலேற்றுவரே
சிலரேத்தியசேவடிநீவுவரே
சிலர்பூவணிசீறடிசூடுவரே
சிலர்வான்விழிமுத்தணிசேர்க்குவரே.

உரை.— சிலரிருதிருவடியைத் தலைமேற்கொண்டுவணங்கச் சிலரவ்வடிகளைவணங்கித்தடவச் சிலரதின்மேற் பூமாலைகளைச்சூடச் சிலர்தங்கண்ணீர் முத்தாபரணமாக வணியவுஞ் செய்வரென்க. (௭௫)

சிலர்செய்துதிசீரியதோவதென
வலர்வைகியதேனளிபாடுவன
பலர்பெய்கமழ்நீர்ப்பனிகோத்தென
மலர்மல்கியதேன்மழைதூவுவன.

உரை. — இவர்களுட்சிலர் செய்யுந்துதிகள் நல்லதல்லவென்றதுபோலப் பூமலரினுள்ளிருக்கும் வண்டுகளினிதாய்ப்பாடப் பலர் தூற்றியபன்னீராகாதென்றதுபோல மலர்ந்தபூவினின்றொழுகிய மதுமழைபொழிந்ததென்க. (௭௬)

திருமுற்றுறைசிந்தியகாரிதென
வருபற்சிகிவால்கிறகாடுவன
பருவத்திருணீக்கியபானிதென
குருநற்குயில்கொம்புயர்கூவுவன.

உரை. — மேலானசெல்வங்களைத்துளியாகப்பொழியு மேகத்தையொப்பானிவனென்றதுபோல மகிழ்ச்சியோடுவந்தமயில்கள் தோகையைவிரித்தாட வேண்டியபொழுதே யிருளைநீக்கிய சூரியனிவனென்றதுபோல நிறக்குயில்கள்மகிழ்ந்து கொம்புகளின்மேற்கூவவுஞ்செய்ததென்க. (மயிற்கு மாரிகாலமுங் குயிற்குவெயிற்காலமு மின்புறுதற்குக்காரணமாதலைப்பற்றிக்கூறியது.) (௭௭)

"விரைமாறலதேன்விளைபூவிதென்
நிரைதேனிறைவண்டொடுபாடுவன
கரைநீத்தமுதின்கடலேயிதென
வுரையாற்றுதியொண்கிளிபேசுவன.

உரை.— மாருததேனை வாசனையோடுபொழிந்த பூமலரொப்பானிவனென்றதுபோல வின்புற்றுப் பெண்வண்டு மாண்வண்டுமொழுங்குபடப்பாடக் கரையில்லாதவமிர்தத்தின்கடலை யொப்பானிவனென்றதுபோலப் புகழ்ந்துகிளிகள் பேசவுஞ்செய்ததென்க. (௭௮)

இவ்வர்மிமிழெல்லையுமில்லையென
வவ்வாறணுகாயருமன்பினொடு
செவ்வாறுளமேவியசீர்பலநாள்
வவ்வாறுரைவவ்வியவாறதுவோ.

உரை.—இப்படியே யின்பத்திற்கு முடிவொன்றின்றி யவ்வழியணுகிவந்தவிடைய ரன்புமிகக் கசடற்றவொழுக்கத்தையுடையமனதிலே பலநாளுஞ் சீரியநன்மைகளையடைந் தமுறைமைசொல்லிக்காட்ட வென்னுரையினா லாகுங்கருமமோ வில்லையென்க. (௭௯)

## வேறு.

செல்லைத்தாராய்ச்சூடியகுன்றிற் றிரிகின்ற
முல்லைத்தாராரித்தலைபன்னாள் முறையெஞ்சா
தெல்லைத்தாராயேந்தியவெந்தை தொழவம்பூ
வில்லைத்தாராய்வேய்ந்தன்னன்பார் விதிசொல்வான்.

உரை.— தாராக மேகங்களைச்சூழ்ந்த மலையிற்றிரியு முல்லைமாலையைத்தரித்தவிடைய ரிவ்வண்ணமே பலநாள்தப்பாம லொளிவினை மாலையாகச்சூழ்ந்த திவ்வியகுழந்தையை வணங்கவருகையிற் பூவினழகினைக் கொடியாகவணிந்த சூசை யன்புநிறைந்த விதிகளைச்சொல்லுவானென்க. (௮௰)

சொல்லுந்தன்மைபொன்பொழிமாரித் துளிவெற்பி
புல்லுந்தன்மைதண்படவுள்ளம் பொலிவெய்திச் [illegible]ற்

செல்லுந்தன்மைத்தேழ்மடியோங்கத் தெளிஞான
மொல்லுந்தன்மைத்தொள்ளறமுற்றே கதியுற்றார்.

உரை.—குசையவ்விதிகளைச் சொன்னவளவிலே பெருன் மாரி மலையின்மேற்பெய்ததுபோல் வவர்கள்மனதிலே குளிர்ந்துயர்ந்து அவ்விதியின்படி யவர்நடந்தவளவிலெழுமடங்கா யுயர்ந்த தெளிந்தஞானத்தையடைந்து அடைந்தவளவிலே நல்லறங்களைமுடித்து வீட்டுக்கதியையடைந்தாரென்க. (௮௧)

மைமவிண்மேலாள்வோன்றனையேந்தும் வளனேங்க
மொய்வின்னேருட்டேவியஞான முறையெல்லாம்
பெய்விண்ணீருண்டேமலையாருய்ப் பிளிரன்ன
மெய்விண்டம்பூவாய்வழிகால்வான் வினைதீர்த்தான்.

உரை.—வானுலகினையாளுங்கடவுள் குழந்தையாகியவனை யேந்தியகுசையோங்க விவன்மனதிலேமழைபெய்ததுபோல் வவன்பொழிந்த ஞானமுறைகளெல்லாத்தையும் பெய்த துளிகளையுண் டாருகமலைகொப்புளித்ததுபோல மெய்மலர்ந்தவாய்வழியே கக்கிச்சொல்வான் வினைகளைத்தீர்த்தமாதவனாகியகுசையென்க. (௮௨)

செல்வாய்நின்றவம்முழைசென்றோவருண்டோ
வில்வாய்விண்டபூங்குழவிக்கண் விளைஞானம்
வல்வாயுண்டமாதவனன்னூன் மறைகூறுஞ்
சொல்வாய்மல்குந் தூயறமுற்றார் துகடீர்ந்தார்.

உரை. — விளங்கிமலர்ந்தபூவொத்த திவ்வியகுழந்தையிடத்தே விளைந்தஞானமே மிகவுமடைந்த மாதவன்குசை வேதத்தின் நல்விதிகளைவிரித்தோதுஞ்சொல்லினல் வழியடுத்திருந்த வக்குகையினுள்வந்த வெவருண்டோ வவரெல்லாருஞ்சுகிர்தபுண்ணியங்களையடைந்து தம்பாவங்களைத் துடைத்துத்தீர்த்தாரென்க. (௮௩)

புன்மைகொண்டாரவ்வழிபோய்ப் புடையார்ந்த
வின்மைகண்டாரெல்லுவொள்ளா திவர்நிற்குந்

தன்மைகண்டே நூல்வடிவோன் சொற் றகைகேட்டால்
நன்மைகொண்டே நற்புகழோதி நடைகொள்வார்.

உரை.—புல்லறிவாளரு மவ்வழியேபோ யந்தக்குகையினுள்ளுள்ள சரித்திரத்தைக்கண்டவளவி லிகழ்ச்சிசொல்லுவராயினு மிழிவுறு மிவர் மூவர்நிற்கும் மாட்சிமையின் றன்மை கண்டு வேதநூலுருவாய்நின்ற குருசையின் சொற்களையுங்கேட்டவளவிலே யவரெல்லாரு நன்மையுட்கொண்டு துதிகளைச்சொல்லிப்போவாரென்க. (௮௪)

பாரார்கங்குல்பரவொளிமுன்னர் பரவுண்டோ
வேரார்வில்செய்மூச்சுடரன்ன விவரைக்கண்
டாராருள்ளாரரிருணீங்கா தவனுண்டோ
தேராருண்டோதேர்ந்தடைவார்க்கோர் சிதைவுண்டோ.

உரை.—சூரியனொளியின்முன்பாக விரவினிருள்பரவாநிற்குமோ வதில்லையென்றதுபோல விளங்கியமூச்சுடராகிய விவர்மூவரையுங் கண்டவளவிலாராகிலுந் தானுட்கொண்டபாவத்தினிருளை நீங்காதவனுங்குண்டோ? மனதிற் றேராதவருந்தேர்ந்து கேட்டடைந்தவருமுண்டோவில்லையென்க. (௮௫)

துன்பாவிங்கண்ணுங்குலவெல்லாந் துகடீர்த்தோன்
றன்பாலென்றேதானயர்வுற்றான் றனையுற்றா
ரின்பாலெஞ்சாவாழ்வதுதம்பாலெனவிட்டா
னன்பாலல்காதோருயிரன்னா னமுதன்னான்.

உரை.—இவ்வண்ணமே நம்மையிரட்சித்த சுவாமிதுன்பத்தால் வருங்குலவெல்லாந் தன்பங்கென்று தானே துரிதங்களை நிறையக்கொண்டான், தன்னையடைந்தவரோவென்று வினிதாய்வாழ்தலே யவர்பங்கென்றுகவிட்டான் கருணையினாற் குறையாத வன்பினையுடைய நல்லுயிரையு மினியவமுதினையுமொத்தசுவாமியென்க. (௮௬)

## வேறு.

அணிக்கலத்தமு கழுந்தியவருக்கொடுவமரார்
மணிக்கலத்தமு தாய்த்தெனவணங்கியாங்குய்த்த

பிணிக்கலத்திடைக் கிடந்துறைகுழவிதன் பெயரைப்
பணிக்கலத்திடைப் படைத்துலகுய்ந்தெழப்பகர்வாம்.

உரை.—அழகிற்கழகெழுந்திறற்போல வுருவத்தையெடுத் துக்காட்டிய வானவர்வந்து மாணிக்கத்தாற்செய்த பாத்திரத் தி லமிர்தத்தையேந்திக் கொண்டுவந்தவாறுபோல வணக்கத் தோடு கொண்டுவந்த வன்பங்களிடத்தே பிறந்துகிடந்ததிவ் வியகுழந்தையின் றிருநாமத்தை யுலகமெல்லாம்வாழ்ந்துவ ப்பச் சொல்லாகியபாத்திரத்தி லெவர்க்கும்படைத்துச்சொ ல்வாமென்க. (அஎ)

மட்டுவாய்விளா மணிமுகைமணமுயிர்த்தன்ன
கட்டுவாய்விளாக் கன்னிதன்மகவினையீன்ற
வெட்டுநாளுமா யிரவியாயிரமெனவிரவி
கிட்டுவானெழா முன்னரங்கமரரே திளைத்தார்.

உரை.—தேனைப்பொழியும்வாய்மலராத பூவரும்புவாசனை விட்டதுபோலக் கன்னிமுத்திரைகெடாத்தாய் தன்றிருமக னையீன்ற வெட்டுநாளாகிச் சூரியனுதயத்திற்குமுன்னே யாயிரஞ்சூரியரைப்போல வானவர்வந் தெங்குநிறைந்தாரெ ன்க. (அஅ)

வம்பொன்னுடைமேற் செம்பொனூல்வரைந்தனவண்
ணத்
தம்பொன்மார்பின்மே லழற்கொழுந்தழற்றெனவணிந்த
செம்பொன்றிரு நாமமேசெறிந்தபேரணியாய்ப்
பைம்பொன்மேனியர் பரப்பொளிபருகிவில்செயுமால்.

உரை.—பொன்னுடையின்மேற் பொன்னெழுத்திட்டெ ழுதினாற்போல வந்தவானவர் தமதழகியமார்பிலே யழற்கொ ழுந் தொளிவாகச் செம்பொன்னு லமைத்தணிந்த வத்திரு நாமமே யொளிமிகவிளங்கி நிறைந்தபேரணியாக நெருங்கி வந்த பொன்மேனியையெடுத்தவானவர் பரப்பினகதிரையி ழுங்கிமறைக்குமென்க. (அகூ)

அங்களைத்தெளித் தகனமுமலங்கொடுமார்பிற்
பிங்களைத்தெளித் திட்டெனநாமப்பூண்டியங்க

வெங்களைத்தெளித் துயர்த்தியவிறைவனென்றிறைஞ்சி
மங்களத்தெளித் திரும்புகழ்வழங்குபுவதிந்தார்.

உ-ரை. — அவ்வண்ணமே யவ்வானவரழகினைத் தெளியக் கொண்டு தாரமணம்வீசியமாலையோடு சந்திரனொளியினைத் தெளித்தெழுதிய வத்திருநாமம் பூணுக மார்பிலே யசைந் தொளிரவே யெங்களையுணர்த்தி யுயர்த்தியகடவுளே யென்று சொல்லித் தெண்டனிட்டுத் திருமணத்துதிகளைப் பாடியிருந்தாரென்க. (கூ0)

ஆரணிக்கெழு மிக்கயேல்கபிரியேலன்ன
பேரணிக்கிரு தலைவரின்பெற்றியின்றேன்றித்
தேரணிக்கிருஞ் செஞ்சுடரழகுறத்தீட்டு
மேரணிக்கிணை யேம்மேற்றிருப்பெயரணிந்தார்.

உரை. — நிறைந்தவழகிறேடெழுந்த மிக்கயேலுங் கபிரியேலு மென்னுமிருவானவர் முற்சொன்ன பேரணிக் கெல்லாந் தாமிருதலைவராகத்தோன்றி யிட்டசுடர்களாற்றேர்ந்தபதக்க மழகினைமிகப்பெறவதிலே சூரியனையெழுதப்பட்ட வோரழகிய வணியைப்போலப் பொற்கேடயத்தின் மேலத்திருநாமத்தையணிந்துதோன்றினரென்க. (கூக)

நகடுவைத்தபொன் பரப்பின்வாய்முத்தணிதவழ
முகடுவைத்தபைம் மணியொடுகுருமணிமுடியா
யகடுவைத்தவான் மணியினல்லழகெழுத்தழுத்தித்
துகடுடைத்தவன் றாய்திருநாமம்வேய்ந்ததுவே.

உரை. — பொற்றகடாய்ப் பரந்த கேடயவிளிம்பிற்சூழ முத்துத்தாவடங்கள் தூங்கித்தவழ முகட்டிலே நீலமணியானுஞ் சிவந்தமணியானுமமைத்த முடிதோன்ற நடுவிலே வச்சிரமணியா லழகியவெழுத்தினையழுத்திப் பாவங்களைத் துடைத்து நம்மையிரட்சித்தவனது திருநாமம் விளங்கினதென்க. (கூ௨)

வருந்தமாசுடை மனுக்குலம்புரந்திடவினற்
பொருந்தலரமெனப் புரவலனென்றேக்குநாமத்

திருந்தயேசுவே செப்புதியென்மிக்கயேலாங்
கிருந்தவானவ ரிடைபிடைவிருப்பெழீத்தொழுதார்.

உரை. — வருந்துதற்குக் காரணமாகிய பாவங்களைக்கொண்டமானிடரையிரட்சிப்பதே யிவனாலமுடியுமென் றறினாற் புரவலனென்னுமர்த்தத்தைக்கொண்ட நாமமாகிய யேசுவென்றிவனைச் சொல்லுவீராகவென்று மிக்கயேல் சொல்லவங்கேயிருந்தவானவ ரங்கங்கே யாசையோடுவிழுந்துவணங்கினரென்க. (சஎ௫)

முருடொடுந்திசை முழுவதும்பல்லியமுழங்க
வருடொடுந்திசை யந்தரமளவிலகளிப்ப
மருடொடுந்திசை வையகமினிதயர்வுயிர்ப்ப
விருடொடுந்திசை யிடியொடுநடுநடுங்கினவே.

உரை. — முருடுமுதல்பலவாச்சியங்க ளத்திருநாமத்தையுரைத்தவளவிலெங்குமுழங்கவந் தேவவருளினா னிறைந்ததிசையாகியவானுலக மளவின்றிமகிழ்வும் பாவத்தால்மயக்கத்தையுடைய திசையாகியபூவுலக மயக்கறத் தன்வருத்தந்திரவு மிருள்மொய்த்ததிசையாகிய நரக மச்சத்தோடார்த்து நடுங்கினதென்க. (சஎ௬)

பிணத்தினங்களை நடுக்குறும்பெற்றிமாதவனும்
கணத்தினங்களை முடிபுனைகன்னியந்தாயுங்
குணத்திணங்கிய குருமணிதிருத்திய நாமம்
மணத்திணங்கினர் வணங்கவின்மிக்கயேலுரைப்பான்.

உரை. — பேயினங்களஞ்சி நடுங்குதற்குக்காரணமாகிய நலங்கொண்டமாதவனாகிய சூசையு மீன்களைமுடியாகச்சூடினகன்னித்தாயாகியமரியென்பவளும் குணம்பெறப்பயிற்றியிசைத்த பெருமணிகளாற் றிருத்திச்செய்த திருநாமத்தை யவரிருவருங்கூடிவணங்கின ரதின்பின்பு மிக்கயேலுரைப்பானென்க. (சஎ௭)

இத்திறத்தினு மித்தகையேந்தியநாமங்
கைத்திறத்தினுங் களிப்புறக் கூப்பியருளாப்ப

மைத்திறததினுண் மல்கியசிலைவெலாங்கடிந்து
மெய்த்திறத்திலும் விளைந்தநன்றியம்புதல்பாலோ.

உரை.— இவ்வண்ணமே யிப்பெருமையுடைய வித்திரு நாமத்தைக் கையுமினிதர்ப்பொருந்திக்கூப்பி யுரைத்தவ ருரைத்தவளவிலே பாவத்தாலுள்ளேநிறையக்கொண்ட கே டுகளையொழிந்து தம்முயிருக்கல்லாதே தம்முட்டுக்கும் வி ளைந்தாரு நன்மைகளையுரைப்பதுகூடுமோவென்க. (௩௬)

பொய்யும்போவன போவனபொருந்தியபுரைக
ளையும்போவன வாகுலம்போவனவலகை
மொய்யும்போவன முதிர்ந்தநோய்போவனமற்றும்
மையும்போவன வகுத்தவித்திருப்பெயர்வயத்தால்.

உரை.— உரைத்தவித்திருநாமப் பெலத்தினாலே பொய் யும்பாவமு மனுமானமுந் துன்பமும் பசாசு பகைப்பே ரும் நோய்களு மற்றமாசுகளெல்லாமும் போயொழியுமெ ன்க. (௩௭)

நோயுமொக்குமே னுகர்ந்துயிர்தருமருந்தொக்கும்
பேயுமொக்குமேல் வெற்றியைப்பெறும்படையொக்குந்
தீயுமொக்குமேற் றீர்த்தருஞ்செல்கதியுய்க்குந்
தாயுமொக்குமே தருமனன்புய்க்குமிந்நாமம்.

உரை.— நோய்வந்தாலுயிரைத்தருமருந்தாமே, பசாசு நம்மைக்கெடுக்கவடுத்தாலதைவெல்லுதற்கொரு படையா மே, தீமையைக்கொண்டாலதைத்தீர்த்துச்செல்லவேண்டி யவீட்டுக்கதியைத்தருவதாமே, நம்மைப்பேணுந் தாயதா மே, இதெல்லாமாகுந் தருமனாகிய கடவுளின்றயையைப்பெ றுதற்குக் காரணமாகிய வித்திருநாமமேயென்க. (௩௮)

இன்னவின்புறு மினியவித்திருப்பெயர்தன்னைப்
பன்னவின்புறும் பன்னியவராயுமுள்வணங்கி
யுன்னவின்புறு முன்னியவுன்னமுமதனைத்
துன்னவின்புறந் துன்னியதிசையெலாமன்றே.

உரை.—இவ்வண்ணமே யின்பத்தைப்பயக்கு மித்திருநாமத்தை யுச்சரித்தா லின்பங்கொள்ளுமுச்சரித்தவாயே, அதையுள்ளேவணங்கி நினைத்தா லின்பங்கொள்ளு நினைத்தமனமே, அதையடுத்திருந்தாலின்பங்கொள்ளு மடுத்ததிசையெல்லாமென்க. (கக)

வானமேலவர் வணங்கியவிப்பெயர்தன்னாற்
றானமேதவந் தகையருள்பொறைபுகழ்வளர்ந்து
ஞானமேபிற நன்றெலாமிகுத்துயிர்பிரித
வானவேலையி லனந்தவீடமைதலாமென்றான்.

உரை.—வானவரால்வணங்கப்பட்ட வித்திருநாமத்தினாலே தானமுதலியனவளர்ந்து ஞானத்தருநன்மையெல்லா மற்றாமமேதந்து மக்கட்குயிர்பிரிந்துபோங்காலத்தி லனந்த வீட்டுப்பேரின்பத்தை நுகர்வதற்குக்காரணமாமென்றானென்க. (ங)

என்றகாலையி லின்னிசைமகரயாழுளரி
நன்றளாவிய நய்த்தமிழ்ந்தாசியைநவின்று
குன்றளாவிய குன்றிலருகில்பொழிமழைபோன்
மன்றளாவிய மலர்மழைவழங்கினர்வானோர்.

உரை.—மிக்கயேவிவையெல்லாஞ் சொன்னவளவி லினிய வீணைகளிசைபாடி யின்பக்கடலில்மிழ்ந்திய துதிகளைச்சொல்லி மலையின்மேற்பொழிந்த மழைபோல வாசமலர்மழையைப்பொழிந்தார் வானோரென்க. (ஙக)

பின்னுமாமகன் மேனிகொண்டுதித்தவெண்பகலாய்
பன்னுமாமறை பயில்வளரவிளித்தருமன்பின் [ப்
மன்னுமாமறை வகுத்தநன்முறைகளைத்தவிராத்
தன்னுமாணுடை தூய்திருநாமமிட்டனரே.

உரை.—இங்ஙன்மாண்டவன் மகனுயுடலெடுத்துப் பிறந்தவெட்டாநாளிலே வேதத்தையுரைப்போரையழைத்துள்ளன்புமிக வவ்வேதங்கற்பித்த முறைகளி லொன்றுந்தப்பாம

உச

லரியமாட்சிமைகொண்ட யேசுவென்னுந்திருநாமத்தை த் திவ்வியகுழந்தைக்கிட்டானென்க. (௱௨)

## வேறு

வையத்தார்திருவிரும்பி மறுவற்றுறொன்றெளிமைவடி
வம்பூண்டு [யவேந்தன்
மெய்யைத்தானுலகுணர்த்த விருப்பமொடுமனுவாயவிசை
பொய்யற்றார்வலிதன்மை பூதலத்திற்றோற்றுவிப்பப்புகழுற்
றுய்ந்த [சொல்வாம்.
வையற்றுரறிவுடைமூ வரசரைத்தன்றுடொழுவானழைத்தல்

உரை.—பூவுலகத்தார் செல்வத்தினாசையினாற் பாவங்களை க்கொண்டாரென்றதினாற் சுவாமிதானெளியன்போலவந்து மெய்யையெவர்க்குமுணர்த்தும்படி மனிதனாகித்தான்விசையவேந்தனாகக்கொள்ளத் தன்வல்லமையிங்கேகாட்டும்படி புகழப்பட்ட நடுக்கற்றவறிவினையுடைய மூன்றிராசாக்களைத் தன்பாதத்தைச்சேவிக்க வழைத்தசெய்தியைச் சொல்லுற்றேனென்க. (௱௩)

விண்ணெழுந்தவெண்மதிய மிதித்தொளிறுமெல்லடி
யாள்விரும்பியீன்ற [றுரைத்தவண்ணம்
வொண்ணெழுந்ததிருமகற்கே யுரிகொடியாமெனமறையோ
கண்ணெழுந்தகவின்காட்டிக் கதிர்பொங்குநவமீனக்கடவு
டானே [ங்கல்செய்தான்.
மண்ணெழுந்தநாளிலரு மறைநாட்போற்றோற்றுவித்துவழ

உரை.—சந்திரனைமிதித்துவிளங்கிய வடிவையுடைய மரியென்பவ ளினிதிற்பெற்ற திருமகனுக்குரிய கொடியாகுமென்று வேதத்திலெழுதப்பட்டதன்மைக்குத் தான்பூமியிலெழுந்தருளினவன்றுதானே வேதத்திற்கொரு நாவைப்போலக் கண்கடந்தவழகினையுடைய கதிர்களைப்பரப்பிய வோர் புதுநட்சத்திரத்தையுண்டாக்கி யெங்கும்வழங்கும்படி செய்தானென்க. (௱௪)

நிருதானதபியபுக்கை நாதிதருமராபியநன்னாட்டுவேந்
துந் [ர்ந்தவேந்துஞ்
பெருமானமணிப்புனல்சேர் பேர்சியநாடாண்டருளேப்பினி.
செருவாகத்தரசன்னத் திளைத்தார்க்குஞ்சபநாட்டுச்சிறந்த
வேந்துந் [ய்யனுற்றார்.
துருவாமத்தொளிர்ந்ததவ [illegible]கைவெய்ப்போடுஞ்ஞ்வெய்தித்தொ

உரை. — ஞானமுதவியவாசனைவீசும் பண்டங்களால் மண
க்குநாடாகிய அராபியநாட்டுவேந்தனு மணிகளைக்கொழித்த
புனலையுடையநாடாகிய பேர்சிய்நாட்டையாண்டு தயையில்
விளங்கினவேந்தனும் அன்னங்கள்திரண்டார்க்கும் வயலையு
டையநாடாகிய சபநாட்டுவேந்தனு மிம்மூவரும் புதுவாய்
விளங்கித்தோன்றின மீனைக்கண்டதல்லா தாண்டவனப்பொ
ழு திவர்க்குத்தந்தவுணர்வினு லாயதெல்லாமறிந் துள்ளேமகி
ழ்ந்தானென்க. (௱௫)

திளைத்தினத்துத்துணிவெய்தித் தாரகையைக்கொடிகொ
ண்டதரணிவேந்தை [னத்திற்றேறி
மனத்தினத்துத்தொழுதடியை வணங்குவலென்றவனவனும
யினத்தினத்துக்கடருனை யிணைந்துவரக்கோவேந்தையிறைஞ்
சப்பேர்கிற் [ட்டுமென்றே.
கனத்தினத்துத்தாழ்ந்தொளியைக் கான்றுடுவேயரியசுரங்கா

உரை. — செல்வத்திற்கேற்பத் துணிவுங்கொண் டம்மூ
வ்றரசரொவ்வொருவன் றனியே மீனைக்கொடியாகக்கொண்
ட வேந்தனைத்தன் மனதிலுடனேவணங்கிப் பின்னையுமவன்
பாதத்திற்றெண்டனுகவிழுவேனென் றுதேறி யைந்துவகைத்
தானையு மினமினமாகப் புடையிற்சூழ்ந்துவரப்போகிறபோ
து மேகமண்டலத்திற்றாழ்ந்துவிளங்கு மப்புதுமீ னவர்க்கு
வழிகாட்டினதென்க. (௱௬)

மாறின்றியிரவுபகல் மல்கொளிகாலோருடுவேவ்வழியைக்
காட்ட [மோங்கிக்
வேறின்றித்தடமொன்றை மேவியமூவரசரொன்றிவிழுப்ப

காறின்றிக்களிப்புறத்தங் கருத்தெல்லாமுணர்ந்துணர்த்திக்க
ருணையார்ந்த [போனார்.
வீறின்றிவளம்பூத்த விறையோனையிறைஞ்சுவதற்கிளைந்து

உரை.—அவனவன்சில்தான் தனியேபோனபின்பு பகலு மிராவுமாய்மாறுதவிளங்கி வழியைக்காட்டியபின்றோரேயொருபீந்தக்கொள்ள வவரும்வெவ்வேறேவழிபோகாம லொருவழியாகப்போனதினாலோரிடத்தேசேர்ந்துமகிழ்ச்சிமிக் கவன்வன்கருதினவுணர்வினைச் சொல்லவுங்கேட்பவுஞ்செய் துகளிகூர்ந்து கருணையுமாட்சிமையு மட்டில்லாதுடையகட வுளைக்கண்டு தெண்டனிடக் கூடிப்போனாரென்க. (௱௭)

மிடையடைத்தமணிகுயிற்றி வெயிலெறிக்கும்பொற்
கொடிஞ்சிமின்றேரீட்டம் [ம்
குடையடைத்தபரிகளொடு குன்றருவிமதமாருக்கும்பியீட்ட
படையடைந்தபகைவருரம் பாய்ந்துனூனுமிழ்வெடிவே
ற்படையரீட்டம் [வையமெல்லாம்.
மடையுடைத்தகடலுடைத்த மயக்கடைந்துநெருங்கிற்றே

உரை.—நெருங்கிப்பதித்தமணிகளால் விளங்கியகொடி ஞ்சியையுடைய தேர்களின்றிரளும், குடையேந்திநிழற்ற வேறினகுதிரைகளோடு மலையினின்றிழிந்த வருவிபோல மா றுதமதத்தைப்பொழிந்தயானைகளின்றிரளும், பகைவரதுமா ர்பிலேபாய்ந் துண்டவூனையுமிழாநிற்குங் கூர்வேல்முதலிய வாயுதங்களையுடையகாவலரின்றிரளு மிவையெல்லாங்கூடிக் கடல்மடையுடைந்த வெள்ளம்போலப் படர்ந்துமயங்கிநடு ங்கின துலகெல்லாமென்க. (௱௮)

குழலெடுத்துமாகதர்தேன் பட்டப்பாடிப்பல்லியங்கார்
குரவினார்ப்ப [னெறிகணீக்கிச்.
நிழலெடுத்துச்சுடரிமைக்கு முடிவேந்தர்நெட்டிடைபன்
சுழலெடுத்துமுகிற்றலையீர் கொடிநகரைக்கடந்தேகிச்சோகி
னங்க [டைத்தாரன்றே.
ளழலெடுத்துச்செய்ததுய ராற்றிறையோனுறைந்தவிடம்

உரை.—புகழ்வோர்சூழ்ந்து வீணைகளிசையோடொத் தினிதிற்பாடவும் பலவாச்சியங்கள் மேகத்திடிபோல்முழங்கவும் விளங்கியபொன்முடியைச்சூழ்ந்த வம்மூவரசர்நெடும் வழிகடந்துபோய்ச் சுழன்றுமேகங்களையறக்கு முயர்ந்த கொடியையுடைய எருசலேமென்னுமாநகரையுங்கடந்து பசாசுகள் மனிதர்க்குச்செய்ததுயர்களையாற்றவந்த கடவுளிருந்தவிடத்தைச்சென்றடைந்தாரென்க. (௯௧)

மந்திரமேற்றாவொளிகால் வாகையெனவங்கணுவெதிர்
ந்துநிற்ப [மன்ன
வந்தரமேலவர்வணங்கு மரசர்பிரான்விலங்கினங்கள்டையு
கந்தரமேதெரிந்ததெனக் கண்டுளத்தில்வியப்பினொடுகளித்த
மூவ [ர்ளிறைஞ்சிப்புக்கார்.
ரொத்திரமேபொருக்கெனநின் றிழிந்தருத்தியெழுந்துவந்து

உரை.—இராசமாளிகையின்மேல் விளங்கியவொருவாலைக்கொடிபோல வவ்விடத்தேவந்த மீனின்றதினால் வானுலகத்தோர்வணங்கு மரசர்க்கரசனாகியசுவாமி மிருகங்களொதுங்குமிடமாகியவுந்தக்குகையைத்தான்பிறக்கத் தெரிந்துகொண்டானென்றுகண்டு மனதிலதிசயித்து மகிழ்ந்த மூவிராசாக்களுடனே தேரைவிட்டிறங்கி யச்சையுள்மிக்கவணக்கத்தோடுள்ளேபோனாரென்க. (௯௨)

அழிவின்றிக்கன்னித்தா யரிதிலவண்டிருமகவீன்றளித்
தவாற [வாறும்
மிழிவின்றியுலகளிப்ப விருதுவத்தையொன்றுபடவிசைத்த
பழியின்றியுருக்கொடுபற் பலவும்பர்புடைபுடைதாட்பணிந்
தவாறும் [ரே.
விழியின்றிமிறையீந்த மேதையினாலறிந்துளத்துவியப்புற்று

உரை.— அக்குகையினுட்புகுந்தவுடனே பாண்டவனிவரிக்குத் தந்தவுணர்வினாலேயழிவின்றிக் கன்னிமுத்திரைகெடாததாயாயங்கேயத்திருமகனையீன்றதன்மையுங் குறைவின்றிப் பூவுலகத்தைப் பிரட்சித்தற்பொருட்டு தேவசுபாவமு மனுச்சுபாவமுமென் றிருசுபாவங்களை யொன்றாகக்கட்டினதன்

மையும் நல்லுருவங்கொண்டு பற்பலவானவர்சூழவிழுந்து
பாதத்திற்றெண்டனிட்டிருந்ததன்மையுந் தெளிவாகக்கண்ட
திந் ததிசயித்து நின்றானென்க. (௱௰௧)

மும்மலைவீழ்ந்தெனவீழ்ந்து மூச்சுடர்போன்மும்மு
டிகள்முகிளந்தாளில் [நீராற்
விம்மலைவிலுறப்பெய்து மேவியநெஞ்சுருகிக்கண்விடுத்த
வெம்மலையிற்பெருங்கின்பப் புணரியினுண்மூவரங்கண்பெரி
விகமூழ்கி [கையிறைஞ்சிட்டாரே.
யிம்மலையிற்றொழத்தொழவீழ்ந் தெழுந்தெழுந்துகோவேந்

உரை.—மூன்றுமலைகள்விழுந்தாற்போல மூவரசர்விழுந்
து சந்திரன்சூரியனக்கினியென்னு மூச்சுடரைப்போலத் த
மது மூன்றுமுடிகளைக்கழற்றிக் குழந்தையினது விள்ளாமலை
ர்ப்பாதத்தில் விம்மிநிறைந்த வொளிபாயும்படிபோட்டு ம
னதிலுருகிவிட்டகண்ணீராற்பொங்கியவலையெழப் பெருகி
யவின்பக்கடலைமூழ்கி யிவ்வண்ணமே தெண்டனாகவிழுந்
தெழுந்து விழுந்தெழுந் தரசர்க்கரசனாகியதிவ்வியகுழந்தை
யைவணங்கினாரென்க. (௱௰௨)

ஓராழியுருட்டவின்மூ வுலகாளுந்தனிமன்னற்குரியமா
டை [றை
நீராழிநிலங்காக்க மாள்வனெனுமதற்குரியநெய்கொள்மீ
யாராழியறத்திறைவற் கருச்சனைசெய்வதற்குரியவரியதூபம்
பாராழியுடைமூவ ரிம்மூன்றும்பதமலர்முற்பணிந்துவைத்
தார்.

உரை.—உலகங்களெல்லாத்தையு மொருவனாயாளு மிரா
சாவிவனென்றதற்குப் பொன்னுங் கடல்சூழ்ந்த விவ்வுலகத்
தையிரட்சிக்க விவன்சாகமனிதனானானென்றதற்கு மடிந்தவு
டல்களுக்குப் பூசுதற்குரியநெய்யையுடைய வாசமீறையும்
நிறைந்தவறத்தினாழியையுடைய கடவுளிவனென்றதற்குப் பூ
சையாகும்படியுதவிய தூபமு மிம்மூன்றினையு மம்மூன்றி
ராசாக்களவன்பாதத்துக்குக் காணிக்கையாகத்தொழுதுவைத்
தாரென்க. (௱௰௩)

மண்களிப்பமனுவானாய் மன்ம்வருந்தவித்துயர்கொள்
வடிவுற்றாயோ [கொள்வாயோ
விண்களிப்ப்வ்வப்பானாய் வெயில்வடிவமறைற்தெஞ்சமிடி
கண்களிப்புபவுருவானாய் கசடொழிப்பவுள்ளிரங்கிக்கழுழ்கு
வாழியோ [லம்பிநின்றார்.
புண்களிப்பமருந்தானாய் புண்படமாள்வாய்கொலென்னப்பு

உரை.—சுவாமீ யிவ்வுலகெல்லாமகிழ்தற்பொருட்டு மனி தனானாயே, நீவருந்துதற்பொருட்டித் துன்பவேஷத்தையெ டுப்பாயோ? வானுலகமு மின்புறுதற்பொருட்டு நீயேயதற் குப்பேரின்பமாயிருக்கின்றாயே, விளங்கியவவ்வடிவத்தை ம றைவதற்பொருட் டித்தாரித்திரத்தைக்கொள்வாயோ? எங்கள் கண்களிகூரற்பொருட்டரூபியாய்நின்றநீயுருவானாயே, உன் கண்வருந்தற்பொருட் டெங்கள் பாவத்திரங்கியழுவாயோ? நாஞ்செய்தபாவத்தாற் கொண்டபுண் ணாகாமலாற்றுதற் பொருட்டு நமக்குமருந்தானாயே, நீ புண்பட்டுநோகுதற் பொருட்டுச் சாகவிருப்பாயோவென்று புலம்பிநொந்தழு துநின்றாரென்க. (௱௰௪)

மூவுலகும்பொதுவறவாள் முதிர்கருணைவேந்திவரைமு
கமனோக்கிப்
பூவுலகுங்களிகூரப் புகலாப்பூங்கரத்தாசிபுரிதலோடு [தந்தே
மேவலகுமொன்றின்றி வெள்ளமெனவரங்களெலாமிடையத்
தேவுலகுநிகர்நயத்திம் மூவருமெண்ணிலவாசிசெலுத்தினரோ.

உரை.—உலகங்களெல்லா மொருவனாயாளுமளவிறந்தகரு ணையுடையசுவாமி யங்கே குழந்தையாயிருந்து வந்தமூவிரா சாக்களை யினிதாய்நோக்கி யிவ்வுலகெல்லாங்களிகூரவாயினா ற்பேசாமற் பூங்கையாலாசீர்வாதந்தந்தான், தந்தவளவிலேம ட்டொன்றின்றி வெள்ளமாக வரங்களை நிறையச்சொரிந்தா ன், அவரும்வானுலகபேரின்பத்தை நுகர்ந்ததன்மைக் குளம கிழ்ந்தெண்ணப்படாததுதிகளைச்சொன்னாரென்க. (௱௰௫)

அருத்தியொடுமெனத்தோங்கியனிச்சையினெய்யடிசிர
மேலணுகிச்சேர்த்திக் [கழற்போன்மாற்றி
கருத்திறினுகெண்ணிலொற்றிக் கண்ணுகுநீர்மூத்தெனக்கார்

பிருத்தியொடுமுலைதழுவு பிள்ளையோர்போல்வாய்பொருத்தியி
ருமுத்தேற்றி [வாழ்ந்தார்.
வருத்தினுமெனத்தின்ப மகிழ்வெல்லையில்லையெனவனாவில்

உரை. — இவர்கொண்டவன்பின்னவிற்கு மனதிலேயோ
ங்கி யனிச்சம்பூவினுநொய்யடிகளைத் தலையின்மேற்கொண்
டாலசியோடுகண்ணிலேயொற்றிக் கண்விட்டகண்ணீராமு
த்தாக்கிக்கூலணியாய்ப்பூட்டி யினிதிற்றாய்முலைதழுவினகுழந்
தைகளைப்போல வப்பாதத்தில் வாய்பொருத்திமுத்தமிட்டு
மனதின்பமகிழ்ச்சி மட்டில்லாததாய் வாழ்ந்தாரென்க.

(௱௰௬)

கோதணிந்தவுலகளிக்குங் குணம்வேண்டினித்துய
ரோகுளித்தல்வேண்டும் [துவற்றுண்டு
போதணிந்தபுனல்தவழ்நாம் புரக்குகின்றநாட்டைந்துபொ
நீதணிந்தவிவன்பணித்த நெறியொடுநாம்பணிசெய்யாநின்
றுவென்றே [க்கேட்டார்.
வேதணிந்ததவம்பொய்யா விதிநல்லோரெனவளைவிரும்பி

உரை.— பாவத்தைக்கொண்டபூவுலகத்தையிரட்சிக்கவே
ண்டுமாயி னித்தனை துன்பங்களையநுபவிக்கவேண்டுமோ? ம
லர்சூழ்ந்தவாறொழுகி விளைவிக்குநாடாயநாமாண்டநாட்டி
ல்வந்து நீதிவடிவாய்நிற்கு மிவன்சொற்படிநாம்பணியூழிய
ஞ்செய்துகொண்டிருந்தாலென்னவேதவடிவாய்நின் றதவத்
தின்வல்லமையாற்றப்பாதவிதிகளையுடையோரென்று குசை
யையம்மூவரசர்கேட்டாரென்க.

(௱௰௭)

ஒன்றானவயத்துளமூ வுலகரசற்கித்திருவோவுலகில்வே
ண்டுங் [ன்றோர்ந்து
குன்றாதவறமொன்றே குணித்தெய்திமற்றவையுங்கோதெ
பின்றாதவிதிமுறையாற் பிறந்தபிரானுமதார்வப்பெற்றியொ
ன்றே [புரிந்தான்குசை.
பொன்றாதபொற்பெனக்கொண் டுவப்பனெனப்புகன்றுசி

உரை.— நிகராதவல்லமையால் மூவுலகத்தையுமாளுமதிபதி
யாகியசுவாமிக் கிவ்வுலகின்செல்வங்கள்வேண்டுவதோ? கெ

டாத நல்லறத்தினையொன்றினையுங்கருதிவந்து மற்றவெல்லா
ம் கோதாகவெண்ணித் தப்பாதவிம்முறையாற் பிறந்தசுவா
மி யுங்கள்பிணைமாத்திரமே கெடாதசெல்வமாகக்கொண்
டுங்கள்பேரிலே பிரியத்தைவைப்பானென்று சூசையவர்க
ளுக்குச்சொல்லியாசீர்வதித்தானென்க. (௭௰௮)

வீங்கொடியாவிம்மிதத்திவ் விதிகேட்டுப்புகழ்ந்திவரை
வேந்தரேற்றப் [ந்
பூங்கொடியாயிழிவின்றிப் பூவனையமகவீன்றபொருவில்தாயு
தேங்கொடியாவிம்மகற்குச் செகத்தமைத்தகைத்தாதைச்சிற
ப்புற்றோனு [னமுன்னோர்.
மாங்கொடியாவுறுதிச்சொல் லருத்தியினுவிருந்தியர்போலப

உரை. — மிகுந்தவதிசயத்துட னிவ்விதிகளைக்கேட்டமூ
வரசர் மரிசூசைகுழந்தையென்னு மூவரைப்புகழ்ந்துதொ
ழுதவளவிலே பூங்கொடி பூப்பூத்தாற்போலக் கன்னிக்கழிவி
ன்றித் தன்திருமகனையீன்றதாயும் வாசனைவிடும்பூங்கொடி
யையடைந் தத்திருமகற் கிங்கே யமைத்தகைத்தாதையின்சி
றப்பினையுடையசூசையு மங்கே யழிவில்லாதவுறுதிச்சொல்
லைச்சொல்ல வதுகளைக் கேட்டநுபவித்த வின்பத்தினுசை
யினுவிருந்தப்பட்டாற்போல விம்மூவரசர் மீள்வதற்குப்ப
யணநினையாதிருந்தாரென்க. (௭௰௯)

பணிப்பரியகுணத்தும்பர் பரமன்றன்பணியென்னப்
பயணங்கூறப் [ருகவோடு
பிணிப்பரியவுடம்புயிரைப் பிரிந்தாற்போ லுட்டுயரம்பெ
தணிப்பரியவிம்மூவர் தாள்தொழுதம்மூவரசர்தணந்துநீங்கி
யணிப்பரியநெறிவேறு காட்டுபின்சென்றுதமதகலுட்
சேர்ந்தார்.

உரை.— இங்ஙன மவர்போதனினையாதிருந்தவளவில் வா
னவர்சொல்லுதற்கரியமுறையோடு கடவுளேவினதாகப்பய
ணம்போகச்சொன்னதினு லடைதற்கரியவுயிர்பெற்றவு
டம் பவ்வுயிரைப்பிரிந்தாற்போல வுள்ளே துயரங்கொண்டு
தாழ்வின்றிவழங்கியகுழந்தையு மரியுஞ்சூசையுமென்னு மூ

வனைப் பாதத்தில்விழுந்து தெண்டனிட் டம்மூவரசர்பிரிந்துபோய் வந்தவழியைவிட்டு வேறுபட்ட வரியவழியைக்காட்டின மீனைப்பின்சென்று தமதுநாட்டிற்குச்சேர்ந்தாரென்க. (௱௨௰)

சேர்ந்தரிதோர்தெருளுடனச்செல்வரசரீந்தநிறைசெ
ம்பொன்யாவும் [யப்பிரிதல்செய்தே
பேர்ந்தரிதோர்பொறையென்னப் பேரருளோர்மூப்பாலா
யோர்ந்தரிதோர்முறையிறமக் கொன்றின்றிமெய்ம்மறையை
யோதினர்க்கு [விலீந்தார்.
மார்ந்தரிதொண்மணித்தேவா லயத்திற்குமிரப்போர்க்குமள

உரை.— தெளிந்தவுணர்வினே டம்மூவரசர்காணிக்கையாகத்தந்த நிறைசெம்பொன்னெல்லாம் பொறுத்தற்கரியபாரமென் றுடனேயருளினற்பெரியராகியமரியுஞ்சூசையு மப்பொன்னைமூன் றுபங்கள்கப்பிரித்து நினைப்பதரியமுறையோடதிலே தமக்கொன் றும்வையாமல் வேதத்தையுரைக்குங்குருக்களுக்கொருபங்குந் தேவாலயத்துக்கொருபங்கு மிரப்போர்க்கொருபங்குங்குறைவின்றிக்கொடுத்தாரென்க. (௱௨௧)

உடையொக்கநீருடுக்கு முலகறியமன்னவர்வந்தொழி
ந்தபின்னர் [யக்குழுவிற்கஞ்சி
கொடியொக்கமலருயர்த்தோன் குழவியெடுத்தரும்புகழ்செ
மிடியொக்கவெளிமையுற வெயிலார்ந்தகதிர்கரக்கும்விகத்த
ன்போலக் [க்கார்.
கடலொக்கப்பெத்திலேயெங் கடிநகருட்சிறுவீட்டிற்கரந்துப்

உரை.— சீலையாகக்கடலையுடுத்த் பூவுலகமெல்லா மறியும்படி மூவிராசாக்கள்வந்துபோனபின்பு பூங்கொடியையுடையசூசை திவ்வியகுழந்தையையெடுத்துக்கொண்டு புகழ்ந்துவரும்கூட்டத்திற்கஞ்சித் தரித்திரமுந்தாழ்ச்சியு மொன்றுபடத் தன்கதிரையனுதினஞ் சூரியன் கடலிலேயொளிக்குமாறுபோலக் கட்வினையொக்கும் பெத்திலேயெமென் னுமாநகருக்குப்போயொருசிறுவீட்டிலொளித்திருக்கப் புகுந்தாரென்க.
(௱௨௨)

ஆனகத்தார்ப்பல்லியஞ்சூ ழார்த்தெழவிம்முறைமூவரக
ன்றபோகிற் [தெஞ்ஞான்றும்
பானகத்தாரீசுடருமிழ்வேற் பற்றொருவானவனங்கண்பதித்
கானகத்தார்விலங்கினமக் கந்தரத்துட்புகல்செய்யாக்காவல்
செய்து [னேமாதோ.
வானகத்தாருறையுளென்று மன்னர்பிரான்பிறந்தமுழைவயி

உரை.—பிற்ரதியாமற் றுங்கேட் டின்புறுதற்குரியமுறை யோடு வான்வர் திண்டிமேளமுதலிய வாச்சியங்களைக்கொண் டார்ப்ப, மூவரோயக்குகைவிட்டுப்போகையிலாண்டவனேவ லினாற் சூரியனையொத்தகதிர்வீசும் வேலினையேந்தி யொரு வானவ னங்கேயிருந்து வாங்காமலெப்பொழுதுங் காட்டிற் றிரியு மிருகங்களந்தக்குகைக்குள்ளே புகாதபடிக்குக் காத்துக் கொண்டிருப்ப வானவரிருப்பிடமாயிற் றரசர்க்கரசனாகியசு வாமிபிறந்தவிடமேயென்க. (௱௨௫)

காட்சிப்படலமுற்றும்.

ஆகப்படலம் - ௰௧ - இ - விருத்தம்

௲௱௨௫.



## பன்னிரண்டாவது.

# மகனேர்ந்தபடலம்.

### வேறு:

இந்நீரன்னார்க்கெண்ணைந்தா ளினிதிலங்கட்போயின
பின் [றன்
மெய்ந்நிருடுத்தீங்கவதரித்து விள்ளாமுகையாந்திருமகன்
னந்நீர்முகத்திற்கட்டுடைத்து வவனிக்கெங்கும்பயன்பய
ப்ப [வாம்.
முந்நீரெழுந்தவிளங்கதிர்போன் மூதூர்புறம்வந்ததுசொல்

உரை.—இத்தன்மைத் தங்கே பெத்திலையேமென்னுமூரி. லேசூசையுமரியுந்திவ்வியகுழந்தையைவைத்துக்கொண்டினி தாய் நாற்பதுநாளிருந்தபின்னர் சரீரத்தையெடுத்தவதரித்து மலராதபூவரும்பின்றன்மைத்தாயதிருக்குமாரன் றனதழகிய முகத்தின்முன்பாகப்பாவங்கடிந்தொழித்த பூவுலகிற்கெல்லாம் பெரும்பயனாகும்படி கடலைவிட்டெழுந்தவிளஞ்சூரியனைப்போலத் தானுமவ்வூரைவிட்டுவெளிவந்தசெய்தியை யினிச்சொல்வாமென்க. (க)

நிறைநீத்தெசித்தார்பகைமுற்றி நெடுநாள்சிறைசெய்தி
யூதர்கடம் [றையோன்
யிறைநீத்துயர்ந்தகுலமெல்லாம் விடைத்தாரென்றுவிடைத்தி
குறைநீத்தெல்லாத்தலைமகனாக் குலையவெருன்றூர்தான்கொண்
று [ன்.
சிறைநீத்தியூதராமுதொழுகுந் திருநாடமைத்தியருள்செய்தா

உரை.—நீதிஞாயமொன்றின்றிமுன்னாளிலெசித்தார் யூதர்மேல்வைத்தபகைமுற்றி நெடுங்காலத்தவரைச்சிறைசெய்து குற்றமொன்றின்றி யுயர்ந்தயூதர்குலத்தைப் பகைத்தாரென்று கடவுள்தானேயெசித்தரைக்கோபித் தவர்கள்தலைச்சம்பி

ள்ளைகளெல்லாத்தையு மொன்றுங்குறையாம லெசித்தார்பய ந்துநடுங்கும்படி தானோரிராத்திரியிலேகொன்றான், கொன் று சிறையுநீக்கி யூதருக்கமுதினையொழுகியசெல்வநாட்டை த்தந் தருள்செய்தானென்க. (௨)

முன்னாட்செய்தவருள்மறவா முறைகொண்டொழுகுந்
தன்மையெனப் [ட்ப
பின்னாட்பெறுந்தந்தலைமகவைப் பிறழாமையினேர்ந்தவர்மீ
தன்னாட்சிறையைத்தீர்த்தபிரா னவர்க்கேவின்பாலரெலவர்க்
மின்னாட்சிறைதீர்தனிமகனை யிவருநேர்தற்கேகலுற்றார். [கு

உரை. — முன்சொன்னபடி கடவுள்தமக்குச்செய்ததயை யையூதர்மறவாம னடந்துகொள்ளும்படி யதின்பின்பு தாம் பெற்றதலைச்சம்பிள்ளைகளையெல்லாந் தப்பாம லாண்டவற்கு க்காணிக்கையாகநேர்ந்தபின்பு தாமவர்களைமீட்கும்படி யந் நாளிலே யவர்க்குச் சிறைதீர்த்தசுவாமிகட்டளையிட்டா னக் கட்டளையின்படி யிவரும் பாவத்தரெல்லாரும்பட்ட சிறை விட்டிரட்சிக்கவந்த தமதேககுமாரனைநேரும்படி கோயிலு க்குப்போகத் துடங்குகின்றாரென்க. (௩)

பிறையொண்வடிவந்தேய்த்தொளிசூழ் பிவிற்றுமணிச்
சப்பதத்தாளும் [தவனா
மறையொண்வடிவம்போர்த்திலங்கி மலர்க்கோலேந்துமா
நறையொண்வடிவந்துணர்ப்பதத்தை நண்ணியேற்றியாசி
யைக்கேட் [வனேந்தினரே.
டுறையொண்வடிவங்கொண்முகில்போ லுடல்கொள்ளிறை

உரை. — இளம்பிறைமிதித்தொளிரு மணிச்சமலனாயொ த்தபாதத்தையுடைய மரியென்பவளும்வேதவடிவினைப்போ ர்த்துவிளங்கி மலர்க்கொடியேந்திய மாதவனாகியசூசையு ம ழைத்துளிவடிவாகநின்ற மேகத்தைப்போலத், தயையைப் பொழியும்படி யுடலைக்கொண்டசுவாமி வாசனைவடிவாக ம லர்ந்தபூவின்றன்மைத்தாய வவனது திருப்பாதத்தை யணுகி த்தொழுது அவனாசீர்வாதத்தையுங்கேட் டவனையேந்தினாரெ ன்க. (௪)

விண்ணுமண்ணும்பொதுவற்ற விதித்துமருளாற்புரிந்
தளித்து [வான்
மென்னுமெள்ளுநீத்தகுணத் திருமையேர்துமெனையாள்
கண்ணுங்கையுமருட்புரியக் கருணைக்கடலோன்புறத்தேகி
மண்ணும்விண்ணுமுவந்தநிலை வகுத்தற்காற்றுப்பாநிலையே.

உரை. — வானுலகையும் பூவுலகையுந் தனித்துளவாக்கியு ங்காத்தளித்து மெண்ணிக்கையுங்குறையு மில்லாததன்மைத் துப்பெருமையிலோங்கிய வென்னையாளுஞ்சுவாமி தன் கண்ணுங்கையும் பட்டவிடமெல்லா தன்மைகளானிறையும்படித யைசெய்யக் கருணைக்கடலாக வெளியேபுறப்பட்டு வானுலகும்பூவுலகு முவந்ததன்மையைச்சொல்லிக்காட்டப் பாவின்றன்மையல்லவென்க. (௫)

கான்றேய்மலர்மேற்றேன்றுளியோ கதிர்தோய்வளை
மேன்முத்தணியோ [றுகிர்ச்செப்பேர்
தேன்றேய்கமலத்தனப்பார்ப்போ சீர்தோய்பொன்மேற்
மீன்றேய்முடிசூழ்தாய்கரத்தில் வேய்ந்தான்முகத்தில்வில்
வீசி [துதித்தபிரான்.
வான்றேய்முகில்தோய்சுடரன்ன மனுவின்னுடல்தோய்ந்.

உரை. — வானத்திற்றிரியு மேகத்துள்மறைந்தசூரியனைப் போல மனிதருடலைமறைவாகப்போர்த்து மனிதனுய்ப்பிறந்தசுவாமி வாசமலர்விரிந்தவிதழின்மேற் றிரண்டதேன்றுளிதோன்றியதன்மையோ? சங்கின்மேல்விளங்கிய முத்தின்றன்மையோ? தேனைப்பொழிந்த தாமரையின்மேலன்னத்தின்குஞ்சிருந்ததன்மையோ? ஒளிர்ந்த பொற்பரப்பின்மேல் வைத்தபவளச்செப்பின்றன்மையோ? மீன்முடியைச்சூழ்ந்ததாயினதுகையிலே யொளிவினைவீசிய முகத்தவன்றோன்றிய தன்மையென்க. (௬)

வேய்ந்தானன்றனெனவானின் விழிபோல்வேய்த்தா
னொளிவேந்த
னுய்ந்தான்கண்டானீத்தகட லாற்றுவின்பக்கடவினிதிற்

றேய்ந்தான்மலர்த்தாள்கதிர்க்கையாற் றெழுதான்றெழாம
ற்றவர்கண்டு
காய்ந்தானென்னக்கதிர்ச்சரங்கள் கடுகிவீசிக்கடுத்தனனே.

உரை.—முன்சொன்னதன்மையி லவதரித்தநாதன் புறப்பட்டுத் தோன்றினனென்று சூரியனும்வானத்திற் கொருகண்ணாகத்தோன்றி யாராய்ந்துபார்த்து நாதனைக்கண்டான், கண்டவளவிலே தானப்பொழுது நீங்கியகடலினும் பெரியவின்பக்கடலிலேமுழுகித் தன்கதிராகியகையாலே திருமலர்ப்பாதத்தைத்தடவிவணங்கினன், மீளவு மற்றவர் பூவுலகிலவனையறியாமல் வணங்காதிருப்பதுகண்டு கோபித்தாற்போலச்சிறிதுபொழுதுபோனபின்பு வெங்கதிர்களைச் சரமாகவிட்டானென்க. (௭)

மைந்தார்பூண்டபிறன்மனையாள் பற்றிச்சென்றகண்
மறுத்த
செந்தார்நல்லோர்மாட்சியெனச் சிறுவனேகத்தீண்டியதீ
வெந்தார்வெய்யோன்புழுங்கியதன் வில்லைச்சுருங்கிப்புதும
களிர்
தந்தார்மறைவினின்றதெனத் தண்கார்மறைவுற்றொளித்தன
[னே.

உரை.—உலகத்தாரைச்சினந்துவிட்ட கதிர்வெப்பினாற்குழந்தையாய்நின்றநாதன் வருந்தினனென்றுகண்டு பிறன்மனைவியைவிரும்பி யவள்மேற்போனகண்ணைப் பெரியோர்கள்மறுத்துத் திருப்பினதன்மையைப்போலச்சூரியனுந் தீப்போலவெகுண்டு சுடுந்தன்கதிரைமறுத்துச்சுருங்கிப் புதுமணஞ்செய்தமாதர் நாணித் தாமணிந்தமாலையை மறைவாகக்கொண்டுநின்றதன்மையின் றானுங் குளிர்ந்தமேகத்தின்மறைவிலே யொளித்தானென்க. (௮)

கடுத்தபருதிகதிர்ச்சரங்கள் காத்தவட்டத்திளமுகிலோ
டடுத்ததென்றல்சாமரையிட் டனையவீசநறும்பைம்பூ
வுடுத்தவண்ணத்துள்ளுளபே ருவகைபொறித்தமுகத்துலகந்
தொடுத்தவுவப்பிலின்பொழியாத் தோன்றிற்றன்றோர்விழாவ
ணியே.

உரை. — சினங்கொண்டுசூரியன்விட்ட தன்கதிராகிய வம்புகளைத் தாங்கினகேடகத்தின் றன்மையாற் றோன்றியவிளமேகத்தோடு தொடர்ந்துவந்ததென்றலும் வெண்சாமரைபோட்டதுபோலக்குளிரவீசிப் பூவுலகமெல்லாம் வாசனைபொழிந்த மலரைப்பூண்டதன்மையி னுள்ளே கொண்டபேருவகை முகத்திற்றோன்றும்படி யெழுதப்பட்டதுபோலவாகித்தொடுத்தவின்பமுமாறுமையி னன்றே யொருதிருவிழாவினலங்காரத்தோன்றிற்றெனக. (௧)

சிலைவாய்க்கனியாழ்தும்பிசெயச் சிகிகளாடுநாடகமு
மிலைவாய்க்குயில்கடீங்குரலு மிணர்வாய்ப்பொழில்கள்பெய்நறவுங்
கலைவாய்ப்பொய்கைமலர்க்கலத்திற் கனிந்தேந்தியதீந்தேன்மணமும்
விரைவாய்த்தடத்தார்ந்தெதிரெதிரே விருந்துசெய்யப்போயினரால்.

உரை. — வண்டுகளினிய நரம்பினையுடையவீணையின்றொனைப் பாற்பாடவு மயில்களாடிக்காட்டியநாடகமுங் குயில்களிசைபாடிய தீங்குரலு மலர்ந்தசோலைகள்பொழிந்ததேனு மகன்றதடாகங்கள்மலர்ந்த தம்பூந்தட்டுகள்மே லினிதாயேந்தியதேன்வீசும்வாசனையு மிவையெல்லாங்கூடிப் பரிமளநிறைந்தவழிகடோறு மிவர்க்கெதிர்கொண்டு விருந்துசெய்யும்படியாகி நடந்துபோனவென்க. (௨)

பில்கித்தீந்தேன் றுளிசுரக்கும் பிணையற்றிரளோர்மாரியென
நல்கித்தீஞ்சொற்பாவிசைகள் நயப்பிற்பாடிமின்னிறத்
தொல்கித்திண்டிற்கண்கனிய வெள்ளிசெய்தையாபிரத்திரட்டி
மல்கிக்காத்தவும்பரால் வந்தாரன்றேயெண்ணிலரே.

உரை. — எப்பொழுதுஞ்சேடிக்காவலராயிவரைச்சூழ்ந்தவானவர்பதினொபிருமன்றி யன்றுவிசேடமாயெண்ணப்படாத வேறேவானவரும்வந்து கொப்புளித்த தேன்றுளியைச் சுரக்கும்பூமாலைகளைமாரிமழையாகவிட்டுத் தாமுமினியபாவிசைகளுவந்துபாடாநின்று மின்னியமின்போலவொல்கிக் க

ங்களுக்கின்பத்தைப்பயக்கு மொளியினைப்பரப்பித் திரிந்
தாரென்க. (௰௧)

கற்பேயணியென்றோம்பிமதுக் கரையாந்தண்டார்மாத
ர்கடம் [பேரல்
பொற்பேகணவர்தமக்கல்லாற் புறத்துப்பயனேபயவாப்
வெற்பேயெழுஞ்செஞ்சுடர்நாண விண்ணோர்புடையின்
மொய்த்துற்ற
பற்பேருருவிம்மூவரலாற் பலருங்காணாத்தோன்றினரே.

உரை.—கற்பினலமொன்றே தமக்கழகென்று வாடாம லோம்பிக்காத் ததனை மதுச்சிந்தாததற்குக் கரையாகிய மாலை யாகவணிந்தமாதர் தமக்குள்ளவழகெல்லாந்தங்கணவர்க்கொ ழியப் பிறர்க்குப் பயனைக்கொடுக்கச்செய்யா ரதுபோல வு தயகிரிமேலெழுந்தசூரிய னாணும்படி வானவர்நெருங்கிவ ந்துகாட்டிய வழகிய பல்லுருவடிவ மிம்மூவர்கண்டதொழி யப் பிறரொருவருங்காணாமற்றோன்றினரென்க. (௰௨)

## வேறு.

ஈரவநீள்வேலிகோலுங் குடங்கையுட்டுஞ்சித்தன்னைக்
கரவநீள்பசும்பூநெற்றிக் கரும்புகணிறுவியூக்கி
விரவநீள்தலையின்வாழை விடுங்கனிநக்கித்தீங்கான்
பரவநீள்பலபூங்காவும் படுநெறிபோயினாரே.

உரை.— பேரீந்துவேலியாகநிற்க வவ்வேலி வளைந்தகுட ங்கையாகவுள்ளேதுஞ்சி யினிதாயொளித்திருந்த கரும்புகள் தலையெடுத்தோங்கித் தலைவிரிந்தவாழைகளின் பழங்களைநக்கி க்கொண்டிருக்க வினியவாசனைபரப்பின பலபூங்காவுகளுள் ளவழியேபோனாரென்க. (௰௫)

சண்பகப்பூம்பற்றொத்த தனையனையேந்திப்போய்த்தம்
பண்பகத்தனையநீழல் படர்ந்துகான்படரப்பூத்து
விண்பகப்பாய்ந்தகொம்பர் விட்டுகண்டுலவயூக
மொண்பகற்றகைத்தமேகத் துறைமருட்டிடும்வீழ்தேனே.

உரை.—பொன்மேனிநிறத்தாற் சண்பகமலராற்செய்த பூம்பந்தினையொத்த திருக்குமாரனை யிவரேந்திப்போ யிவர் தம்முதலையின்குணம்போல வெவர்க்குங் குளிர்ந்தநிழலைச் செய்து பரிமளமாகப்பூத்து வழியெங்குங்கிடந்தமரங்கள் மேகங்களைப் பிளக்கவிட்ட வுயர்ந்தகொம்புகளிலே யொன்றைவிட்டொன்றிலேபாய்த்துலாவுங்குரங்குகளதனாலசைந்த பூங்கொம்புகளினின்று வீழுந்தேன்றுளிகளே சூரியனைமறைத்த மேகங்கள் தூறின்துளியோவென்று மயங்கும்படியாகு மென்க. (௰௪)

புலைத்தளியிருபான்மலி மகரயாழிசைகள்செய்ய
விலைத்தளிரிரும்பூஞ்சோலை யிடத்திவிட்டேகிப்பின்னர்
கலைத்திரிபாகக்கோலிக் கதிர்மணியருவியார்ப்பச்
சிலைத்திரிசிகிகளாடுந் கிரியினலத்தைக்கண்டார்.

உரை.—இருபக்கத்தில்வண்டுகள் மொய்த்தொலித்து வீணையோசையாகப்பாடி நூற்சொன்ன தளிர்த்தபூஞ்சோலைகள்கிடந்தவழியிடத்தேநிற்சத் தாம்வலமாய்ப்போனபின்பு சிலையின்றன்மையாக மலையைச்சுற்றியோடிக் கதிர்மணிகளைக் கொழிக்கு மருவியார்ப்பக் கூப்பிட்டுத்திரியு மயில்களாடுமலையைக்கண்டாரென்க. (௰௫)

கண்டுளியுளத்திலோங்கக் களித்தபூங்கொடியோன்சொல்லுந்
தண்டுளிமுகில்சூழ்வெற்பைத் தருமறைவடிவாய்நோக்காய்
பண்டுளியனைத்துமெஞ்சாப் பசியினந்துயிர்கள்யாவு
முண்டுளியுமிழ்த்தந்த வுயர்மலைவனப்பிதென்றான்.

உரை.—அம்மலையைக்கண்டவளவிலே மனதிலோங்கும்படிகளிகூர்ந்த பூங்கொடியோன்குசை யிதனைச்சொல்வான்: வேதவடிவாய்நின்றவளே! பெய்யுமேகங்கள் சூழ்ந்தவும்மலையைநோக்காய், முன்னுளிலேயெங்குந்தணியாதபசிதானேசினங்கொண்டுயிர்கள்யாவையும் விழுங்கினவப்பொழுதுலகிற்குமீளத்தந்தமலையிதாகுமென்றானென்க. (௰௬)

கோலடிகோடியாய கொடுமையால்வருடமூன்றும்
மேலடிமழையுமின்றி மெலிந்துலகெஞ்சிநிற்பக்
காலடிதன்மைத்தோர்கார் காணத்தன்கோட்டிறந்தே
யாலடிநிழற்றும்பொச்சை யன்றுயிர்தந்ததென்றான்.

உரை.— இராசநீதியின்றிச் செங்கோல்கோணியந்நாளிலாயகொடுமையினால் மூன்றுவருடமுமாகாயத்திலொருமேகத்தினடியாகிலுங்காணும லுலகமெல்லாமெலிந்துவாடிநிற்கும்போது ஒருகாலடிபிரமாணத் தொருசின்னமேகத்தையிம்மலைதன்னுச்சியிலேகாணத்தந்ததினா லன்றெல்லாருக்குமுயிரைத்தந்ததன்மையா யிருந்ததென்றானென்க; (மலையடியிலிருந்தவாலமரமிகுதியா லாலடிநிழற்றும்பொச்சையென்றானென்க) (௬௭)

நூல்வழிப்புகழேபோன் றோடிப்பினிற்பரந்தமே
கம்
வேல்வழியொளியேபோன்று மின்னியார்த்திறைவனன்பின்
பால்வழிப்பயனேபோன்று பகவிராவளவிற்றாவிக்
கோல்வழிப்படமேபோன்று கூவெலாங்கேழ்த்ததென்றான்.

உரை.— படித்தநூலின்வழியாகவொருவர்க்குப்புகழ்வளருமாறுபோலக் காலடி தன்மையாய்த்தோன்றின மேகமுமொருகணத்தி லெங்கும்பரந்து வேலின்வழியாகக்கண்கூசும்படியொளிபாயுமாறுபோல வம்மேகமு மின்னியிடித்துச் சுவாமிதயையின்வழியாக மட்டில்லாதன்மைபொழியு மாறுபோல வம்மேகமும் பகலுமிராவு மட்டின்றி நிறையப்பெய்து சித்திரக்கோலின்வழியாக வெழுதினவாறுபோலவன்றுலகமெல்லாமழகுபெற்றுவிளங்கிற்றென்றானென்க. (௬அ)

ஊனிலைக்குழவிதோன்றி யுலகெலாமளிக்குமன்பின்
பானிலையிடமூன்றூற்றுப் பரிசுடையிவனைக்காட்டக்
கானிலைதோன்றியக்கார் கடனிலையயத்ததென்று
மீனிலைமுடிதாட்சேர்த்தி மெய்யனைத்தொழுதாடாயே.

உரை.— இவைகேட்டகன்னித்தாயாகியமரியென்பவள் உடலையெடுத்தவகையிலே குழந்தையாய்நின்று பூவுலகெல்லா

ம்புரந்தளிக்கும்படி கொண்டவன்பின்றன்மைவகையிலேமூவுலகமுநிகராதகுணத்தையுடைய் வித்தேவபாலனைக்காட்டும்படியல்லோ வம்மேகமு மொருகாலடியின்றன்மையாய்த் தோன்றிக் கடவின்றன்மைத்தே பெரும்பயனைத்தர்தலென்றுசொல்லிப் பின்னையுந்தான்சூழ்ந்த மீன்முடியையவன்பாதத்திற்சேர்த்தித் திருக்குமாரனைவணங்கினாளென்க. (௰௯)

சூளகொடுசவரம்வீசுந் தோற்றமேபோன்றுவேழம்
புளகொடுமதத்திற்சீறிப் புடைத்ததன்செவிகால்வீச
மிளகொடுபடர்ந்தமென்னீள் கொடியின்மேலூஞ்சலாடி
யளகொடுபொலிகூணர்க்கு மத்திரியணுகினாரே.

உரை.—இவையும்பலவுஞ் சொல்லிச் சுளகுகொண்டுசாமரையிட்டாற்போலக் களிகூர்ந்தமதத்தோடு சீறினயானைதன்செவிகளையசைத்துக் காற்றாகவீசிக்கொண்டுநிற்க மிளகுகாயோடுபடர்ந்த மெல்லிய நீண்டமிளகுகொடிமேனின் றூஞ்சலாடிய தன்பேடையோடுகூடிய வார்த்தைகூவாநிற்கு மம்மலைக்கருகே சேர்ந்தாரென்க. (௨௰)

நாகநீனெற்றிதூங்கு நன்மணிபோலப்போன்று
நாகநீனெற்றிநாறு நன்மலரணியாய்ச்சூழ்ந்த
நாகநீனெற்றிதோன்றி நயன்றருமறையிற்சிந்தும்
நாகநீனெற்றிமீன்போ னன்மணியருவிகண்டார்.

உரை.—யானைக் கரியநெற்றியிலே தூங்கியமணியாற்செய்தபட்டம்போலப் புன்னைமரங்கள் புதுத்தளிராலேநீலநிறத்தன தமதுச்சிக்கொம்புகளிற் பூத்தமலர்களையணியாகக்கொண்டவம்மலையுச்சியேதோன்று மத்தன்மைதோன்றியமலையுச்சி யெவர்க்கும்பயனைத்தரும் வேதம்போல வெங்கும் பயன்றரும்படிகொப்புளித்துச்சித்தினவருவி விண்ணில்விளங்கின மீன்களைப்போல வொளிசெயுமணிகளைக்கொழித்த வருவியாகக்கண்டாரென்க. (௨௧)

நிறைதவிர்ந்துணர்ந்தகாம நெறியிற்கைப்பொருளேபோன்றும்
முறைதவிர்ந்தடைசீர்போன்றும் முனிகடம்முனிவுபோன் [றும்

பொறைதவிர்ந்திழிந்தீண்டோடும் புனலமெதிர்கொண்
டாங்கத்
துறைதவிர்ந்திடத்திட்டேகித் துளித்ததேன்முல்லைசேர்ந்தார்.

உரை. — தன்றாரமொழியப் பிறர்தாரமாயினும் பரத்தையராயினும் பற்றியுணர்ந்தகாமமே, நிறைதவிர்ந்துணர்ந்தகாமம், அத்தன்மைகாமத்தினுட்பட்டவன்றன்கைப்பொருள் விரைந்தழிந்துபோமாறுபோலவு நீதிமுறைதப்பி யஞ்ஞாயங்களைச்செய்து தேடியடைந்த செல்வங்க ளழிந்துபோமாறுபோலவு மிருடிகள்கோபத்தைக்கொண்டாலுந்தாமசமின்றி யழிப்போமாறுபோலவு மிகுந்தவிசையோடேமலையினின்றிழிந்தோடினபுனலை யெதிர்கொண் டவர்த்துறையைவிட்டுவலங்கொண்டுபோய்த் தேனைப்பொழியுமுல்லைநிலத்திற்சேர்ந்தாரென்க. (௨௨)

நீழ்கிளர்மலரின் றண்பூ நிழல்கிளர்கொம்பிற்புல்விக்
கேழ்கிளர்பொறித்தமாமைக் கெழுஞ்சிறைவகிர்ந்துபேணி
வாழ்கிளரன் பினுவு மணிக்கிளர்வனப்பினுவுஞ்
சூழ்கிளர்காவிலெவ்வாத் துணைப்புறவிருந்ததம்மா.

உரை. — ஒழுங்கோடுவளர்ந்துமலர்களைப்பூத்துக் குளிர்ந்தநிழலைத்தரு மொருமரக்கொம்பிலிருந்து நன்னிறங்கொண் டெழுதப்பட்ட வழகிய விறகுகளைவகிர்ந்துபேணுநின்றதாமினிதாய்வாழும்படி தம்முள்வழங்கியவன்பினுவு மணிச்சாயலாய்க்கொண்ட வழகினுவுஞ் சூழகன்றகாவிலேநிகரில்லாதொருபுறாச்சோடிருந்ததென்க. (௨௩)

உலைவளரெரிச்செங்கண்ணு ளானெயிற்றாற்றுவாயா
கொலைவளர்புலிப்பாலுண்டு கொலையொடுவளர்ந்தவேடன்
னிலைவளர்நிழற்பூங்காவி லெய்தியப்பறவைகண்டே
சிலைவளர்கொலையீண்டுள்ளிச் சிலைவளைத்தணுகிச்சேர்ந்தான்.

உரை. — அத்தரவாயிலே நெருப்புப்போல்ச் சிவந்தகண்ணையுடையனு யூனையொழுகுமெயிற்றேறேற்றுவாயனுய்க் கொடியபுலியின்பாலுண்டவனுய்க் கொலைத்தொழிலோடுவ

ளர்ந்தவனு யொருவேடன்றலைப்பட்டுநிழலைப்பரப்பினவப்
பூங்காவிலேவந்து, சொன்னபுறங்களைக்கண்டான், கண்டவள
விலே தன்சிலையினாற்கொல்லுவேனென்று நினைத்துச் சிலை
யைவளைத்துக்கிட்டினனென்க. (௨௪)

ஓர்பகையிவன்கீழுள்ள வலிமேற்பருந்துதானுங்
கூர்பகையுகிர்வவ்வற்குறற் கொடியகண்ணிரையைவவ்விப் [ச்
பேர்பகையுணர்ந்துசூழப் பிறவொலாந்தமைப்போலெண்ணி
சேர்பகையுணராவப்புட் சிறுமைகண்டினைந்தான்சூசை.

உரை. — இத்தன்மைத் தவ்வேடன் கீழிருந்து நினைத்த
வொருபகையன்றி மேலேபறக்கும் பருந்து தானுமப்புறவு
களைக்கண்டு கூர்மையுள்ள தன்னுகிரால்துகளைப்பிடிக்குமு
ன்னேகொடியகண்ணால்வ்விரையைக்கவ்வியுண்டதுபோலப்
பார்த்துப் பெரும்பகைநினைத்துச் சூழப்பறந்திருக்க விருப
கைநடுவேநின்றபுறவுகள் வஞ்சத்தொழிலையறியாததினாற் ற
ம்மைப்போலே மற்றவெல்லாரையுமெண்ணித் தம்மேல்வ
ந்தபகையைக்கண்டுபிடியாதிருந்த வெளிமைக்கண்டதற்கிரங்
கியிருந்தான்சூசையென்க. (௨௫)

சிட்டமிட்டெழுதப்பட்ட சிறகொளிசெகுப்பப்பாறு
வட்டமிட்டிழிந்துபாய வருகையில்வேடன்வாளிச் [ம்
சட்டமிட்டெய்யச்சர்ப்பந் தனைமிதித்திடுங்காநீண்டித் [தே.
தட்டமிட்டவனுமாய்ந்தான் றவிர்ந்தகோல்பருந்துங்கொய்

உரை. — சிவப்பினாலெழுதப்பட்ட வப்புறவிறகினொ
ளியைக்கெடுக்கும்படி பருந்து மேல்வட்டமிட்டு விழுந்து
பாய்தற்குச் சமயமென்றுவரும்போது வேடனு மம்பைவி
ட்டெய்தான், எய்யும்போதுணராம லொருசர்ப்பத்தைமிதி
த்தான், மிதிபட்டசர்ப்பமு மவனைக்காலிலேதீண்டி விட்ட
தஞ்சினாலவனுஞ்செத்தா ன்தனால்விட்டவம்புதப்பிப் பரு
ந்தினைக்கொன்றதென்க. (௨௬)

வினையதுவிளைவுநோக்காய் வினைபிறர்க்குணர்ந்தபாவ
தனையதுசொல்கூற்றுதல் தகவினாருளாயிற்கேட்டேம் [ந்

பிணையதுவின்றுகாணப் பெற்றனமென்றுசூசை
யணையதுவிளம்பிப்போன வணிவளர்முல்லைசொல்வாம்.

உரை.— பாவத்தினால்வினையும்பயனை நோக்காய்? பிறர்க்கொருவன், பொல்லாங்குநினைத்தப்பாவந்தானே யவனைக்கொல்லும்படி கூற்றமுமென்று பெரியோர்சொல்லக்கேட்டிருந்தோம், இன்று பின்னையுமதைக் கண்ணிலேகண்டோமேயென்றுசூசை மரியென்பவளைநோக்கிச் சொல்லிநடந்துபோனார் போயடைந்தமுல்லைநிலத்தி லன்றுதோன்றியவ்வலங்காரத்தை யினிச்சொல்வாமென்க. (௨௭)

## வேறு.

புதுப்படவேந்துறீப் பொலிதெருத்தொறுஞ்
சதுப்படநகரெலாஞ் சிறந்ததன்மைபோல்
விதுப்படமுகத்துவான் வேந்தனெய்தலான்
மதுப்படமலர்ந்தன முல்லைவாயெலாம்.

உரை.— புத்திரராசா தனதிராசதானியின் முந்திப்புகும்போது பொலிவுபெற்ற தெருக்கடோறு நகரெல்லாநாலுதிக்கிலுஞ் சிறப்புசெய் தலங்கரித்தாற்போலச் சந்திரனொளியினைமறைக்கும்படி விளங்கியமுகத்தோடெழுந்தருளிய வான்வேந்தனாகிய தேவகுமாரனங்கேவருவதைக்கண்டு மதுப்பொழிந்து முல்லைநிலமெங்குமலர்ந்ததென்க. (௨௮)

வானகத்தகவினோர் மகிழவேய்ந்தென
மீனகத்தருவெலா முகைகள்விள்ளவே
கானகத்தவத்தினோன் மணத்திற்கானொடு
தேனகத்தலர்ந்தகோற் சிறப்புகாட்டுமே.

உரை.— வானுலகின்நன்மைத்தாய பெருமையுடையவிம்மூவர்மகிழும்படி யிருந்தாற்போலே மரங்களெல்லாம் வான்மீனினுமழகிய மலர்களைப்பூத்ததன்மை மாதவனாகிய சூசைமணஞ்செய்தநாளிலே யவனேந்தியகோல் வாசனையையு மதுவையும்பொழியும்படி மலர்ந்ததன்மைபோலே தோன்

றினதென்க. (நாட்டிவிருந்து சூசையில்லறத்தோடு துறவறத்தைச்சேர்த்தித் தவஞ்செய்தானென்றதனாற் கானகத்தைநகும்படி தவத்தையுடையோனவனையென்றானென்க.) (௨௯)

சென்னியாரிளமது திருந்தும்பூமலர்
துன்னியார் நறவியு கனிகடோற்றமு
மின்னியாருமுடி வேய்ந்தநாயகி
கன்னியாய்மகற்பெறு மாட்சிகாட்டுமே.

உரை.— இளமதுவினைப்பொழிந்து மரங்களுச்சிக்கொம்புகளிலேநிறையப் பூத்தமலரோடுகலந்துநின்று வாசனைவீசியகனிகளின்றோற்றமே விளங்கியமீன்முடியைச் சூழ்ந்த நாயகியாகிய மரியென்பவள் கன்னியாயிருந்து புருடனுதவியின்றித் திருக்குமாரனைப்பெற்ற வரியமாட்சிமையின் றன்மையைக்காட்டுமென்க. (மலருங்கனிகளுமொன்றாயிருந்ததன்மை பூவாகியகன்னிமையுங் கனியாகிய பெற்றமகனுமிவ்விடத்தொன்றாயிருந்ததன்மையொக்குமென்க.) (௩௰)

பருவிலார்மனமென முகில்பரந்துநாற்
கருவிலார்மனமெனக் கருகவந்தரந்
திருவிலார்மனமெனத் தேம்பமாங்குயில்
மருவிலார்மனமென மஞ்ஞையாடுமால்.

உரை.—அத்தரவாயிலேபருவமில்லாதசிறுவர்மன மொன்றிலேநிலைகொள்ளாம லங்கங்கேயோடுமாறுபோல மேகங்களு மங்கங்கேபரந்து படியாதமூடர்நெஞ்சினைப்போல வாகாயமுமிருண்டு தாரித்திரர் மனதிலேவாடுமாறுபோலக் குயில்களுமெலியாநிற்க மாற்றானுக்குவந்த மெலிவினைக்கண்டபகைவர் மகிழ்ந்ததுபோல மயில்களினிதாயாடினவென்க. (௩௧)

ஏர்முகம்புதைத்தவில் விவர்செய்தெய்தலாற்
கார்முகம்புதைத்தவெங் கதிருதித்ததென்
றூர்முகம்புதைத்தவின் பருந்திக்கூய்க்குயில்
சூர்முகம்புதைத்தன தோகைநாணியே.

உரை. — அப்பொழு தழகியமுகத்தோ டிம்மூவர் வில்வீ
சிவந்ததினான் மேகத்தின்முகத்திற் புதைத்திருந்த சூரியன்
வந்துதோன்றிற்றென் றெண்ணி யின்பநிறைந்த முகத்தோடு
மகிழ்ந்தகுயில்கள் கூவியிருக்கத் துன்பமடைந்தமயில்கள் நா
ணித் தந்தோகைமுகத்தைப் புதைத்தொளித்தனவென்க. (௩௨)

பொய்மறுத்திவரெனப் பொலிந்தவோகையா
லைமறுத்திரிமயி லாடிமற்றையு
மைமறுத்துளத்தெழீஇ மகிழ்ந்துபாடவே
கைமறுத்ததிசயித் தலர்ந்தகாவெலாம்.

உரை. — சூரியன்வந்ததென்றது பொய்யென்றுகண் டி
ம்மூவர்வந்ததென்று தெளிந்ததினால் மிகுந்தவுவகையோடு
முன் றந்தோகையழகினை மறைத் தொளித்துப்போனமயில்
கள் திரும்பியாடவுங் கூடவேறுபாடின்றிமற்றப்பறவையெ
ல்லாமு மயக்கமின்றி மகிழ்ந்துபாடவுங் கைவிரித்ததிசயித்
தாற்போலக் காவெல்லாமலர்ந்ததென்க. (௩௩)

புல்லியபொழிற்கிடைப் புறப்பட்டெய்திய
மெல்லியதோர்வளி விருந்தெதிர்கொளக்
சொல்லிய தூதுபோற் சுருங்கிவீசியங்
கல்லியமலர்மணம் வாரிக்கக்குமால்.

உரை. — இவர் நுழையுஞ் சோலையினின்று புறப்பட்டுவந்
த மெல்லியதோர்காற்று விருந்தாடவந்தவர்க் கெதிர்வந்த
ழைக்கும்படி தூதுசொன்னாற்போல வினிதாய்மெள்ளவீசி
மதுவைப்பொழிந்த வழகியமலர்விட்ட வாசனை தான்வாரிக்
கொண்டு முன்னேகொப்புளித்தாற்போலத் தோன்றிற்றெ
ன்க. (௩௪)

சூழிஞ்சமேல்வளி துதைந்தங்காடிய
காழிசைதருத்தழை கணியப்பாடலுங்
கேழிசைமூவரை வாழ்த்தக்கின்னர
யாழிசையின்னரம் புளரவென்பவே.

உரை. — முற்சொன்னகாற்றுச்சூழவடித்தலால் வயிரமர
ங்களின் றழைகளாடி யினிதாய்ப்பாடினதன்மைத்தாகியொளி

வீசிவந்த விம்மூவனைவாழ்த்தும்படி கின்னரயாழி னினியநரம்பினைத்தடவினதன்மைபோலத்தோன்றிற்றென்க. (௬௫)

ஆயருழலவுதீங் குழலினூர்ப்பெழ
வாயருமுறவினோ டாவுமானுமொன்
றாயருமறிவென வமர்ந்துநோக்கவி
னூயருமறந்தகன் றடிதுடர்ந்தவே.

உரை.— முற்சொன்னவோசையுமன்றி யிடையருமவாசிக்குமினியகுழலினோசையெழும்ப வாராய்தற்கரியவுறவினைக்கொண்டபசுக்களு மான்களு மொன்றாய்நின்றே யறிவினைப்பெற்றாற்போல விவனையன்போடேமகிழ்ந்துநோக்காநிற்க வவை கன்றுகள் தந்தாயரையுமறந்து இவரடிபின்சென்றுதுடர்ந்தனவென்க. (௬௬)

அம்புகைவில்லென வடிவணங்கின
வம்புகைத்துகிலென வலர்ந்தபூந்தரு
வம்புகைமுளரிகொண் டடிவணங்கின
வம்புகையொலியென வார்ப்பவண்டரோ.

உரை.— அம்பையுதைத்த வில்லுவளைந்ததுபோல வனைத்திவர்பாதத்தைவணங்கின வழகியபுகைசூடிய நல்லாடைபோலக் கருந்தளிரோடு மலரைவிரித்தமரமெல்லாம், பின்னையுந் தடாகநீர்தன்கையாகியதாமரையா லவர்பாதத்தைவணங்கின, மேகங்கள்விட்டமுழக்கம்போல வண்டுகளுமப்பொழுது முழங்காநிற்கவென்க. (௬௭)

தழீயினகலன்பொறுத் தளர்நுசுப்பெனக்
குழீயினமலர்பொறுக் கொடிகளூசலாண்
டெழீயினகனிபொறு வளையிபங்கள்மேல்
விழீயினவிணைபொறு விளங்கமுல்லையே.

உரை.— சூடினவணிகலங்களின்பாரத்தைப்பொறுக்கலாகா மாதரிடைதளர்ந்தாற்போல வந்நேரத்து மிகுதியாய்விரிந்துதிரண்டமலரின்பாரத்தைப்பொறுக்கலாகாத பூங்கொடிகளு மூஞ்சலாடினாற்போலத்துவண்டு மேலெழுந்தகனிகனி

ன்பாரத்தைப்பொறுக்கலாகாது வளைந்தகொம்புகள்மேல்க் கொடிகள் விழுந்துசாய்ந்தன; அதனுவமையின்றிவிளங்கி ற்றம்முல்லைநிலமெல்லாமென்க. (௩௮)

கார்வின்மீதாடிய கனத்தினார்ப்பெனப்
பாவின்மீதாடிய பரிசினாரவண்
மேவின்மீதாடிய மிஞிறுவிம்மின
பூவின்மீதாடிய புதுக்கண்ணாடியே.

உரை.— அச்சோலையினுச்சிமேலாடின மேகங்கள்முழக்கம்போலக் கற்றோர்சொல்லும் பாவிசைகளினுள்ளடங்காமல் மேலாய்நிற்குநற்குணங்களையுடையவிம்மூவ ரங்கேவருதலின்மேலாடாநின்ற வண்டுமுழங்கின மலர்ந்தபூவிதழ்களிலடங்காமல் மேலாடிப்பிரண்டுவிழும் புதுக்கள்ளைநாடிவந்தவண்டுகளென்க. (௩௯)

ஏய்ந்தகண்ணாடிவண் டியாழ்செய்தார்நிழற்
றோய்ந்தகண்ணாடியொண் மயில்தன்றோகைகள்
வாய்ந்தகண்ணாடிகள் வனப்பென்றாயிர
மாய்ந்தகண்ணாடிவந் தவர்கண்டாடுமால்.

உரை.—மலர்த்ந்ததேனை நாடி வண்டுகள்வீணை,யோசையிற்பாடாநிற்க நிறைந்தநிழலுள்ளவிடத்தைநாடிவந்த வழகிய மயில்கள் நல்லகண்ணாடிகள்வடிவாகத் தந்தோகைகள் விரித்ததினா லாயிரங்கண்களைக்கொண்டு நாடிவந்த விம்மூவரை நோக்காநின்றாடினவென்க. (௪௰)

பைங்கயற்றிசைத்தபொற் றூவிபற்றெனக்
கொங்கயற்றிமிசுசூழ்க்குளிரப்பூத்தன
செங்கயற்றடியுறை திரண்டமுத்தென
வங்கயற்றிராமர முகைத்ததாமரோ.

உரை.— பச்சைக்கயிற்றிற்கட்டின பொற்றூவிபோலத் தோன்றும்படி வாசனையோடு திமிசாகியவேங்கைமரங்கள் சூழக்குளிரும்படிமலர்ந்தன, அதினருகேசிவந்தகயிற்றநுனி

யிற்றாங்குந் திரண்டமுத்துபோலத்தோன்றும்படி திராம ரமாகிய பவளமல்லிகைக வரும்புகொண்டனவென்க. (சக)

சிந்துரம்விழித்தெனச் சினைத்தபாடலஞ்
சிந்துரமுகைமணித் துகளிற்றீர்ந்தன
சிந்துரமணந்தநீர் குளித்தசீர்மைபோற்
சிந்துரமணத்தொடு முகைத்தசீலமே.

உரை.—யானைவிழித்ததுபோலப் பாதிரியரும்புகள்தோன்றின, அரும்புநிறையப்பூத்த புளியமரங்கள் பலநிறமணிப் பொடிகளைப்போர்த்தனபோலத்தோன்றின, சிந்துரப்பொடியோடுகலந்த நீரிற்குளித்த தன்மையேதோன்றுஞ் சிந்துரமாகிய வெட்சிமலர்ந்த தன்மையென்க. (சஉ)

மீன்பரப்பெனமுகை விண்டமற்றையும்
வான்பரப்பெனவிரி வனத்திலெங்கணுந்
தேன்பரப்பெனக்குளிர் செலவைச்சென்றுசெல்
கான்பரப்பனைத்தையுங் கடந்துபோயினார்.

உரை.—மற்றமரங்களும் விரித்தமலர்பரப்பினமீன்களைப்போலத்தோன்றி வானத்தின்பரப்புபோலத்தோன்றும்பூங்காவனமெல்லாம், அதிலேயெங்குந் தேனைப்பரப்பினாற்போலக் குளுமைபெற்றவழியே யிவர்போய்க்காவனத்தைக்கடந்தாரென்க. (சஙு)

## வேறு.

வீங்குதங்குல மெலிவுறத்தாங்குயர்நீரா
ரோங்குதங்குணத் தொத்தசூழ்நிலத்திருழ்விழுதே
தாங்குதொன்மரத் தடிமணநிண்ணைபிற்றங்கி
யாங்குவெங்கதிர் சாய்ந்தபின்னின்றுசெல்வயர்ந்தார்.

உரை.—உயர்ந்தகுலத்திற்பிறந்தவ ரதற்கு மெலிவுவாராதபடி யதைத்தாங்காநிற்கு முயரியகுணத்தையுடைய பெரியோர்போலச் சூழநிலத்திற்றாழப்பாய்ந்தவிழுதுகளாற் றாங்கப்பட்ட வாலமரத்தினடியிலே மணத்திண்ணையாகக்கொ

ண்டிருந்தார், அங்கிருந்து சூரியன்சாய்ந்தபின் பவ்விடத்தி
னின்று வழிநடந்தாரென்க (௪௪)

விண்விளக்கொளி வேந்தனைப்பொற்புறத்தெளித்துக்
கண்விளக்கிய கவின்மணிமேனியைப்பூண்டு
மண்விளக்கிட வந்தநாதனைப்புகழ்ந்தும்பர்
பண்விளக்கிசை பாடிப்போய்மருதமேசேர்ந்தார்.

உரை.— விண்ணுலகின்விளக்காகியசூரியனை யதிகமாயழகு பெறும்படி தெளித்தற்குக்காரணமாகிக் கண்ணைவிளக்குமழகியமணியாய திருமேனியையெடுத்தணிந்து பூவுலகினையிரட்சிக்கும்படி மனிதனாய்வந்தநாதனைப்புகழ்ந்து வானவர் வீணையினு மினியவிசைகளைப்பாடிக்கொண்டுவர விவர்போய் மருதநிலத்தைச் சேர்ந்தாரென்க. (௪௫)

ஆறுபாயொலி படற்றகர்பாயொலி தெறிக்கொம்
பேறுபாயொலி யெருமைநீர்பாயொலிகரும்பின்
சாறுபாயொலி சங்கொலிவயிரொலிமற்ற
மாறுபாயொலி மயக்குறியெதிர்கொண்டார்த்தனவே.

உரை.—மருதநிலத்தைக்கண்டவளவிலே யதிலேவந்துபாயும் புனலினோசையு மெதிர்த்துப்பாயு முரத்தகிடாக்களினோசையுஞ் செவ்வியகொம்புடையகிடாக்கள் தம்முட்பாய்ந்தெழும்பியவோசையு மெருமைகள் நீரிலேபாய்ந்துகிளம்புமோசையுங் கருப்பஞ்சாறுபாயும்படி யாலைகள்செய்யுமோசையுஞ் சங்குகளினோசையு மூதியகொம்புகளினோசையு மற்றப்பலவோசைகளுந் தம்முள்மாறுபட மயங்கிக்கூடியிவரையெதிர்கொண்டதுபோல முழங்கினவென்க. (௪௬)

உறைசெய்காரணி யுயர்மலைமுலைபொழிபாலாய்
நறைசெய்தேனொடு நனிமலிபுனல்வயல்பாயச்
சிறைசெய்காலது சிலைத்தவேயிவரடிசேர்ந்தோர்
குறைசெய்நோயறக் கூவுகூப்பிடல்போன்றே.

உரை.—துளிமேகங்களை யணிந்தமலையே யோர்முலையாகக்கொப்புளித்த பால்போலவழிவரும்போது மலரினின்

றொழுகிய மதுவினாற்பெருகிய வாற்றுத்தண்ணீர்வயலிடத்தி ற்பாயும்படி மறித்தடைத் தலைச்சிறைசெய்யும்போ தத்த ண்ணீரிலெழுந்தவோசையே யிம்மூவர்பாதத்திலடைந்த பூ வுலகத்தோர் தங்குறையு நோயுந்தீரும்படி யவரையழைத்து க்கூப்பிட்டதன்மைபோலத்தோன் றுமென்க. (௪௭)

நடிப்பநாண்மலர் நறும்புனற்றடத்திலாங்குழுந
ரிடிப்பநீனிறத் தழும்பகடேரப்பலாவெழுமீன்
றடிப்பவாண்மக டேம்பிடைதலைசுரித்தொளிந்த்
அடிப்பமூவரே யுலகிடரொளிக்குவபோன்றே.

உரை.—அங்கோரிடத்துக் குளத்திலுள்ள பூவெல்லாமசை ந்தாடும்படி மள்ளரங்கேகிடந்த கிடாக்களையதட்டியுழும்ப டியோட்ட வுறக்கினதினால் மச்சங்களதிர்ந்து துடிப்ப வா ளைகள் தலையைச்சுருக்கி மடையின் றளைகளினுள்ளொளித்த ன, அதுவிம்மூவர்வந்தவளவிலே பூவுலகின் றுன்பங்களெல் லா மொளித்ததன்மைபோலத் தோன்றிற்றென்க. (௪௮)

கேழ்த்தபூவயல் கிழிபடச்சிலரவண்கிறி
வீழ்த்ததாமரை மெலிவொடுவரம்பின்மேல்வாடல்
நீழ்த்தமாண்பிவர் நிழலடிவணங்கிலா நீக்கி
வாழ்த்தமாண்பிலர் வருந்தியுள்வாடுவர்போன்றே.

உரை.—அங்கோரிடத்து நிறத்தமலரைப்பூத்த வயலைச்சில ருழும்போது தாளறுத்துவரப்பின்மேலெறிந்ததாமரைமெ லிந்துவாடியிருப்பதே யொழுக்கத்தின் மாட்சிமையுடைய விம்மூவர் தங்குளிர்ந்தபாதத்தைநீங்கிவணங்காம லவரைவாழ் த்தும்படி மாட்சிமையில்லாதவரெல்லாருந் துன்பங்களைய டைந்துவருந்தி வாடினதன்மைபோலத்தோன் றுமென்க. (௪௯)

புரிந்தவோகையிற் பொருவிலாவிவருட்போன்று
பிரிந்தமேதிதன் பிள்ளையையுள்ளவிற்கனைந்து
சொரிந்தபாலுண்டு துஞ்சியவோதிமம்வெருவி
பிரிந்ததாகவார்த் தெழுகெனவித்தினர்சிலரோ.

உரை.—உவமையின்றும்படி யிம்மூவராசையோடு நமக் குச்செய்யுத்தயையி னிரக்கம்போல வெருமை பிரிந்ததன்

கன்றைநினைத்துக்கனைந்து தானே சொரியும்பாலையுண்டு வய லிலே தூங்கியவன்னங்கள் வெருவிப்பறக்கும்படி சிலவயலி லேயார்த்துமுழங்கி நன்றாய்விளைவாகவென்று சிலர் விரைத் தாரென்க. (௫௰)

இங்கண்பரவியபாப் பிணிசபயன்விரித்துரைத்தென்ன
வங்கண்மாதர்கட் டவிழ்த்துச்செந்நென் முடிநடுவார்
திங்கணுண்முகத் திவர்க்கிணையலவெனச்சினந்தே
பங்கணாம்பமலர் டலொலாங்களையெனப்பறிப்பார்.

உரை.— இங்கேயோரிடத் துழச்சியர் கற்றோர்சொன்ன பாவின்கட்டுக்குள்ளேயடக்கினபயனை யவிழ்த்துவிரித்துப்ப லர்பயன்படும்படியுரைசெய்வாரைப்போலத் தாமுங்கட்டி னசெந்நெல்முடிகளையவிழ்த்து நன்றாய்விளையும்படி கலக்க நடுவார், அங்கேவேறோரிடத்துத் திங்களின்வடிவாக விம்மு வர்வரக்கண்டு இவரழகியமுகத்திற்கு நிகரல்லவென்றுகோபி த்துச் செவ்வாம்பல்முதல் மற்றநீர்ப்பூவெல்லாங் களையெ ன்றுபறிப்பாரென்க. (௫௧)

படியொருங்கிவர் பயத்தநன்றியல்பெனவொருபால்
நெடிதொருங்குசெந் நெல்வளர்ந்தவர்தொழுதொருபால்
கடிதொருங்குகை கூப்பெனக்கதிர்நெறித்தொருபா
லடியொருங்குற வளைதலைவிளைந்தனவகணி.

உரை.— பூவுலகமெங்கு மிவர்செய்யுநன்மைப்பரப்பு போலவோரிடத்து நெடியதோர்வயலெல்லாஞ் செந்நெல் வளர்ந்ததே, பின்னையோரிடத் திவரை வணங்கும்படியொரு மிக்கக்கடுகிக் கையைக்கூப்பினதுபோலப் பசுங்கதிர்கள் செம்மையின்றன, மீளவும் வேறோரிடத்திவர்பாதத்தில்வீ ழுந்துவணங்கினாற்போலக் கதிர்கள்கீழேசாய்ந்துவிளைந்தன சிலவயல்களென்க. (௫௨)

மீனிருங்கொடி வேந்துதன்னருள்வளங்காட்டத்
தேனிருந்தலைக் கரும்புறழாடியசெந்நெல்
வானிரும்புலத் தரிவைதாளணியிளமதியோற்
கூனிரும்பினிற் குறைத்தரிபகுத்தனரொருபால்.

உரை.—விண்மீனைக்கொடியாகக்கொண்ட வேந்தனுகிய விவேந்திய தேவகுழந்தைசெய்யுந் தயையின்வளர்ந்தமாட்சிமைகாட்டும்படி தேனைப்பொழியுமுயர்ந்தகரும்பின்காடுபோல வளர்ந்தாடாநின்ற செந்நெல்லை வானத்திற்கேற்றமுடைருமையுடைய மாதாகியமரியென்பவள். தன்பாதத்திலணியாகவைத்த விளம்பிறைபோலு மரிவாளைக்கொண்டோரேசரிடத்தறுத் தரியரியாகப்பகுத்தாளென்க. (௬௩)

குறைக்குவார்சிலர் கூடமகட்குழலெனச்சேர்த்தி
யிறுக்குவார்சில ரிவள்புணர்முலையெனப்பலபோர்
நிறைக்குவார்சிலர் நீணிறப்பகட்டினுறெளிப்ப
வுறுக்குவார்சில ருறைந்தவைநீக்குவார்சிலரே:

உரை.—சிலர்நெல்லையறுப்பார், சிலரறுத்தநெல்லைப்பெண்கள்மயிரெனச்சேர்த்திக்கட்டுவார், சில ரக்கட்டுக்களைப்பெண்கள்முலைபோலத்தோன்றும்படி பலபோராகவைப்பார், சிலர் கருங்கடாக்களைவிட்டுறுக்கிப்போரையடிப்பார், சிலர் கலந்தவைக்கோலைநீக்கித்தூற்றுவாரென்க. (௬௪)

மாரிமல்கிய மதிதொறுமும்மழைபொய்யா
வேரிமல்கிய விளைபுலத்தெனைப்பகருறும்
பூரிமல்கியத் தொழிலெலாம்பொருந்தியமூவர்
சீரின்மல்கிய செல்வநாட்டலர்ப்பணைகடந்தார்.

உரை.—இத்தன்மையே மாதந்தோறு மூன்றுமழைதப்பாமற்பெய்ததனுற் றினந்தோறும் வயல்களிலே யேரிடத்துழவுமேரிடத்துவிதைக்கவுமேரிடத்துநடவுமேரிடத்துக்களைபறிக்கவுமேரிடத்துப்பசுங்கதிரெழும்பவுமேரிடத்துவிளைந்ததறுக்கவு மற்றவுழுநர்தொழிலெல்லா. நாடோறும்பொருந்தியதனு லிம்மூவர் குறையின்றிச் சீர்த்ததன்மைபோலச் செல்வங்களையுடைய வந்நாட்டிலுள்ள வயலைக்கடந்தாரென்க. (௬௫)

காரிவாயென நிறுவியகமுகுயர்காவு
நாரிவாயென நனிநரல்தெங்கெழுங்காவும்
பூரிவாய்வனை புலவர்போலரம்பையின்காவும்
வேரிவாய்மலர்க் கரவுநீத்தணிநகர்மிடைந்தார்.

உரை. — அதின்பின்பு கீழ்மக்களின் றன்மையானெறித்து வளர்ந்தகமுகின்காவையு மார்வாயைப்போலேயாமற்சல சலவென் றெலிக்குந் தென்னமரத்தின்காவையுஞ் செல்வங் களைக்கொண்டபோது பெரிதறிவுடையோர் தணிமைகாட்டு மாறுபோலத் தலைகுனிந்துகாய்த்த வாழையின்காவையும் வாசனைகொப்புளிக்கும் பூங்காவையுங்கடந்தணிச்சாயலாய் நின்ற எருசலேமென்னுமாநகரைக்கிட்டினரென்க. (௫௬)

விருந்தினர்முகம் விரும்பினர்கண்டெனமலர்ந்து
வருந்தினார்முகங் கண்டழுநீரெனமதுப்பெய்
தருந்தினார்முகந் தவாவறக்கனிமலிகாவிற்
பொருந்தினார்முகம் பொலிநகர்ப்புரிசையைக்கண்டார்.

உரை. — அன்புடையோர் விருந்தினைக்கண்டவளவிலே முகமலர்ந்ததுபோலப் பூமலர்ந்து அவ்வன்புடையோர் வருத்தத்தைக்கொண்டவரைக் கண்டவளவிலே தாமுங்கூடவழுதன்மைபோல மலர்ந்தபூவு மதுவைப்பொழிந்து கனிகளைப்பறித்தருந்தினவ ராசைதீரும்படி நிறையப்பழங்களைக்காய்த்தசோலையிலேவந்தார், வந்தங்கேநின் றுயர்ந்தமுகத் தந்நகரின்மதில்களைக்கண்டாரென்க. (௫௭)

## வேறு.

மின்னியமுகில்சூழ்பொன்மலைதழுவி வேய்ந்தெனவி
சும்பினைத்தாவுங் [றரசன்
கன்னியபுரிசைசூழ்தரத்தோன்றிக் கசடுறுமெரோதனென்
றுன்னியகொடுங்கோல்துயர்செயுவளைந்து தொன்மறைவ
ழுவிலகாத்து [தன்றே.
மன்னியவளங்கொள்ளெருசலேமென்னு மாநகர்தோன்றிய

உரை. — மின்னியமேகத்தாற்சூழப்பட்ட பொன்மலைபோல் வானத்திற்பாய்ந்த வழிவில்லாதமதில்களாற் சூழப்பட்டுத்தோன்றி எரோதனுகியவரசன்செய்யுங்கொடிமையால் வருந்திப் பழையவேதத்தை வழுவாமற்காத்ததனுல் நிலை

கொண்ட மாட்சிமையுள்ள வெருசலேமென்னு மாநகரந்தோன்றிற்றென்க. (௫௮)

அல்லுமிழிருளினிருண்டநெஞ்சவன்செய் யர்ந்தை
யின்வெவ்வழலாற்ற [கடம்மீட்ட
வில்லுமிழ்பசும்பொன்மாடங்கணெற்றி விரித்தபூங்கொடி
மெல்லுமிழ்மூவர்வருவகண்டரச னியற்றியவஞ்சனைக்கஞ்
சி [போன்றே.
நில்லுமினின்மினென்விடைவிடாது நீண்டகைகாட்டுவ

உரை.—இராவிற்றோன்றியவிருளின்றன்மைத்தே யிருண்டநெஞ்சினையுடைய கொடியமன்னன் செய்யுந்துன்பங்களின்வெப்பினையாற்றும்படி யெந்நேரமும் விளங்கியபொன்மாளிகையினுச்சியிலே யெங்கும்விரித்த கொடிகளெல்லாங் கதிர்முகத் திம்மூவர்வரக்கண் டவ்வரசன்கொடுமைக்கஞ்சி வாராதேநில்லுங்கள் நில்லுங்களென்றாற்போல விடைவிடாமற் றுநீண்ட தங்கைகளைக் காட்டினதன்மைபோலத் தோன்றிற்றென்க. (௫௯)

மண்புடைவர்னமன்னனைவணங்கி வளம்பெறும்பசி
யபொற்கோயில் [நின்றாட
விண்புடைதீண்டிமின்மணிக்கோட்டின் மீதொளிர்பதாகை
லொண்புடைக்கொடிகாணில்லுமினின்மி னுயிரடுந்துயரற
வந்த [போன்றே.
வெண்புடைகாக்குமருட்புரிநாத னிவனெனவமர்த்திடல்

உரை.— வானரசனாகியகடவுளைப் பூவுலகில்வணங்குமிடமாகி மாட்சிமைபெற்றபசும்பொற்கோயிலிலே வானத்தைத்தீண்டிவிளங்கிய மணியாற்செய்தசிகரத்தின்மேலுள்ளபெருங்கொடி யத்தரவாயிலே யாடியதன்மையோவென்னில் அழகியகொடிகளே நில்லுங்கள்நில்லுங்க ளுயிரைக்கொல்லுந் துன்பங்களைமாற்றும்படி வந்தவெட்டுத்திசைகளையுங்காக்குந் தயையுளநாதனிவன்றானே, வரட்டுங்களென்றவற்றைத் தானமர்த்தினதன்மைபோலத் தோன்றிற்றென்க. (௬௰)

சுதைநலம்ஞாயின்மூலைநிறைவரைந்து துகிலெனவகழி
யைச்சூடிப் [கோபுரமுகத்திற்
புதைநலவிருள்கொண்முகிலெனடுங்கூந்தல் பொறுத்துயர்
றதைநலங்கொண்டிம்மூவரைக்காணத் தடம்விழிதிறந்தென
த்திறந்த [ர்.
வதைநலமணிகள்குயிற்றியவாயி லருமறைவடிவினோர்புக்கா

உரை.—பொம்மையாகியமூலைகளை யழகிய சுதைகளாணி
றையைப்பூசி யகழியாகியபுடைவையையுடுத்து நெடியகூந்தலாகி
யவிருண்டமேகங்களை யுச்சியிலேசுமந்து கோபுரமாகியமு
கத்திலே நிறைந்தநன்மைகளைக்கொண்டு வந்தவிம்மூவரைக்
காணும்படி தடங்கண்களைத்திறந்தாற்போலத் திறந்தமணிக
ளாலலங்கரித்த வாசலிலே வேதவடிவாய்வந்தவிவர் புகுந்தா
ரென்க. (௬௧)

நாவினும்வழுவாச்செம்மையினொழுகி நோக்கினும
க்கன்றொளித்தோடி [சிவண்டேரும்
நாவினுமலிசீர்ச்சிறப்பணித்தெருவி னுண்மணிக்கொடிஞ்
காவினுங்கடுகிற்பாய்பரிமாவுங் கடாங்கழிகரிகளுநெருங்கக்
காவினும்பருஞ்சூழியாவையுநீக்கிக் கதிப்புரிவேந்தர்போயினா
ரே.

உரை.—இட்ட நாவினுந் தப்பாத செம்மையோடுபோ
ய்க் கண்பார்வைக்கெட்டாதகன்று கண்ணுக்கொளித்து நீ
ளமாயோடிப் படித்தநூல்செய்யுஞ்சிறப்பினுஞ் செல்வத்
திற்சிறந் தழகியதெருக்களிலே மணியாற்செய்த கொடிஞ்
சியையுடையதேர்களுங் காற்றினும்விரைந்து கான்மேற்று
ள்ளிப்பாயுங்குதிரைகளு மதத்தைப்பொழிந்த யானைகளு
நெருங்கிவர வழிசூழ வானவ்வொல்லாவற்றையும்விலகிப் பர
மகதியைக்கொடுத்தற்குரிய வேந்தராகியமூவரும் போனா
ரென்க. (௬௨)

அகிலடும்புகையும்வாசபூம்புகையு மடர்ந்துநல்விரு
ள்செயுந்தெருவின் [ந்து
முகிலடுங்குன்றிற்றுணைமயில்திரிந்த முகமெனவிருவரோடட

துகிலொடுமேந்துங்குழவியம்முகிலுட் டோன்றியமதியெ
னத்தோன்றி [னூர்.
யிகலுடுமின்பத்தெவருமுட்குளிர விளங்கதிர்பரப்பியேபோ

உரை.—அகிற்புகையும் பூம்புகையுநெருங்கி..யினியவிருளைக்கொண்ட தெருவிலே சூசையுமரியு மிருவர்மேகங்கள்சூழப்பொருது மலையிலே யிருமயில்களைப்போலநடந்து தாங்கள் நல்லாடையுளேந்திய தேவகுழந்தையோவென்னில்ம்மேகத்துட்டோன்றிய சந்திரனைப்போலத்தோன்றி நிகராதவின்பத்தோ டெவருமுள்ளேகுளிரும்படி யிளங்கதிரைவீசிப்போனாரென்க. (௬௩)

தேனலம்பயின்றுநறுமழைதுளித்துச் சீர்கெழுதூங்
கிசைதிருத்திப்
பானலம்பயின்றுபாடியவண்டின் பல்வினமூசலாடுதற்கே
கானலம்பயின்றமலர்கடோரணத்திற் கதிர்மணித்தோரணந்
தயங்க [ப்போன்றே.
வானலம்பயின்றவேந்துவந்தமையால் வானவில்வீழ்ந்தென

உரை.—தேனைப்பொழிந்து வாசமழைதுளித்தினிய தூங்கிசைகளைத்திருத்திப் பாவினிமையிற்பாடிய வண்டினங்களூஞ்சலாடும்படி மேற்கட்டிய வாசமலர்த்தோரணங்களோடு விளங்கியமணித்தோரணங்கள்மேலாடாநிற்க வானத்தினன்மைகளையிடும்படி வான்வேந்தனாகிய வத்தேவகுழந்தையந்நகரில்வந்ததனால் வானவில்லு மங்கே விழுந்ததுபோலத்தோன்றிற்றென்க. (௬௪)

தூமமேய்ந்திருண்டகுழலினார்மார்பிற் றுளங்கிய முத்
தணிவடமேற்
காமனேகளிப்புற்றூசலாடியகால் கசடறுமிவர்வரக்கண்டு
வீமமேயுற்றுநடுக்கொடுவழுவி வீழ்ந்துளத்தழற்றழலாறித்
தாமமேயளிபோற்குளிரவுட்களித்துத் தயவொடுதீத்றப்புக
ழ்ந்தார்.

உரை. — அகிற்புகைமுதலியவற்றை மேய்தவி விருளைக் கொண்டகூந்தலையுடையமாதர் மார்பிலேயணிந்த முத்தா

பரணங்களைக் கயிறாகக்கொண் டதின்மேற் காமனேயின்ப
மா யூஞ்சலாடிக்கொண்டிருக்கும்போது பாவத்தைப்பகை
த்தவிம்மூவர் வருவதைக்கண்டு வெருவிநடுங்கிக் கால்வழுவி
யக்கயிற்றினின்றுவிழுந்து விழுந்ததன்மையா லம்மாதர்தம்
மனதிலேமுன்பற்றியகாமத்தீ யவிந்தாறிப் பூமாலையில்வண்
டுகள் தேனையுண்டுபாடுமாப்போலே, தாமுமுட்குளிரக்களி
கூர்த்து தயவோடு தந்தீதெல்லாந்தீர்ந்ததென்று புகழ்ந்தா
ரென்க. (இம்மூவரைக்கண்டவளவிலே காமநோயவர்க்கு
த்தீருமென்பதுகருத்து.) (சுரு)

விடுந்திரைகொழித்தவிம்மொழிபோன்ற விற்பவர்
கொள்பவரொலியு [ணிபலவும்
நெடுந்திரைகொழித்ததிருத்திரள்போன்ற நிதியொடுநிறம
படுந்திரைகொழித்தமயங்கலைபோன்ற பரிகரியீட்டமும்
மையின் [மாதோ.
கடுந்திரைகொழித்தகருங்கடல்போன்ற கடைவழிபோயினார்

உரை.—கடலினோசைபோல விற்பவர்கொள்பவரோசை
யுங் கடலினுள்ள திரவியம்போல விற்பதற்கிருந்த பொன்
னும் மணிகளின்றிரளுங் கடலின்மயங்கியவலைகளைப்போல
வந்தேதிரியுங் குதிரைகளும்யானைகளு மிவையெல்லாமித்தன்
மைத்தாகையிற் கடலைப்போலுங் கடைவீதிவழியாகப்போ
னாரென்க. (சுசு)

மோயிசன்றன்கைச்சூரவிற்பிரிந்த மொய்கடல்வழி
விடுத்தன்ன [நெறியாற்
றீயிசைதளங்களியாவருங்காண மிடைந்துசூழ்வந்துசெய்.
போயிசைபொருட்சேர்நசைசெய்னுந்திரையுட் புக்கிலர்மூ
ழ்கிலர்கடந்து [குதித்தார்.
சேயிசைசுடர்போன்றக்கடனீக்கிச் செயிரிருட்சீக்கவாங்

உரை.—முன்னாளிலே மோயிசனென்பவனேந்தியபிரம்
பினாற்கடலைப்பிரித்து வழிசெய்ததுபோல வானத்தின்றளங்
களாகியவரானவர் புறத்தொருவருங்காணாம லிம்மூவரை நெ
ருங்கிச்சூழ்ந்து கடலாகியகடைவீதியிலே செய்தவழியாலவ

ர்போய்ப் பொருளைப்பற்றிவருமாசையாகிய வலைகளினுட்
படாமலு முழுகாமலுங் கடந்துபோய்ச் செஞ்சுடர்கடலை
விட்டுதயஞ்செய்ததுபோலத் தாமு மக்கடைக்கடலைநீங்கி
ப் பாவமாகியவிருளைநீக்கும்படி. யப்பாலுதித்தாரென்க.
(மோயிசன்கதையை விரிவாக வினிச்சொல்லுத்தகு மிளவன்
மாட்சிப்படலத்திற்காண்க.) (௬௭)

உதித்தனரென்னவாயிரங்கதிரோ னுவமையிற்றோர்த்
தெனவொளித்துக் [முந்தவத்தவனும்
குதித்தனன்கருந்தண்புணரியுட்புதைப்பக் கோதையுங்கொ
புதித்தனமிழைத்தமணிக்கலத்துயிரைப் புரியமுதேந்திய
போன்றே [கார்.
விதித்தநன்மறையினுதனையேந்தி விருப்பொடுசிறுமனைபுக்

உரை. — இவர்கடைக்கடலைவிட்டுதித்தாரென்று சூரியன
வரோடேயுவமியாமற்றோர்த்து நாணினாற்போல வொளித்
துப்போய் நீர்க்கடலிலே, தன்னுருவத்தைப்புதைப்பக் குதி
த் தத்தமித்ததாயிற்று, அப்பொழுது மரியுஞ்சூசையுந் தங்க
த்தாலிழைத்தமணிகள்குயிற்றிய பொற்பாத்திரத்தி லுயிரைக்
கொடுக்கு நல்லமிர்தத்தையேந்தினாற்போல வேதத்தைக்கற்
பித்தநாதனைக் குழந்தையாய்த் தாமேந்தி யாசையோடொ
ருசிறுவீட்டிலே புகுந்தாரென்க. (௬௮)

கோணிகருணர்விற்கைப்பொருட்டந்து குறும்புகழ்
கோடலேசிறிய [மாகச்
வாணிகர்தொழிலாமீங்குமாறுணரார் வழங்குமொன்றாயிர
சேணிகர்பயனைவிளைக்குமென்றுள்ளிச் செல்வர்மூன்றளித்
தவானிதியம் [த்தளித்தான்.
பூணிகர்மறைநூலணிவளனிருளின் போர்வைபோர்த்தாலய

உரை. — அறிவில்லாமற் றன்கைப்பொருளைக்கொடுத்து
ப் பிறரிடத்திற் சிறியதோர்புகழைக்கொள்வது வாணிகத்
தொழிலையறியாத சிறியோர்செய்யுந்தொழிலாமே, இவ்வுல
கிற் றனக்குக் கைம்மாறுவருமென்றுணராதவர் கொடுக்குங்
கொடையாக்குமொன்றாயிரமாகவானுலகிற்பயனைவிளைவிக்

குமென்றெண்ணி முன்னர்மூவரசரிறையாகக்கொடுத்தபொன்னெல்லாத்தையும் பூணைகவேதத்தையணித்தசூசை யங்கேசேர்த்த விராத்திரியிலே யிருளின் போர்வையைப்போர்த்தொளிப்பாகக் கோயிலுக்குக்கொண்டு கொடுத்தானென்க. (நிற்குநன்மையாகிய தருமத்தைப்பற்றிக்கொடாமற் சாற்றுக வழியும்புகழைப்பற்றிப் பொருளைக்கொடுப்பது அறிவில்லாதகொடையென்றார், சூசையோவென்னிற்புகழின்மேலாசை தோன்றாதபடி யொருவருமறியாம விராவிலேயொளித்துக் கொடுத்தானென்க.) (சுக)

வீண்டிறந்துதைந்தபூசனையன்றே விழிப்பதற்கருத்தி
யோடுயர்வான் [னிதாய்ப்
கண்டிறந்தெனக்கதிரவன்முந்நீர் கடந்தெழுங்காலையிவி
பண்டிறந்துவைப்பவார்க்குநற்சுடர்செய் பசியபொற்கோ
யிலைவிருப்பங் [ய்தினரே.
கொண்டிறந்திருவர்கோதறுபலியாய்க் குழவியையேற்றியெ

உரை. — மரியுஞ்சூசையுந் தேவதிருக்குமாரனைக் கோயிலிலேநேர்தலா லன்றங்கேவழங்கத்தகும் வானுலகிற்கேற்ற தேவபூசையைக்காண்டற்காசையால் வானங்கண்ணைத்திறந்தாற்போலச் சூரியன்கடலைவிட்டெழுந்தபோது குறையில்லாதபலியாகத் திவ்வியகுழந்தையையேற்றிக்கொண் டிருவருமாசையோடுபோ யந்நேரத்துப் பண்முதலியவாச்சியங்கள்முழங்கியார்ப்ப விளங்கியபொற்கோயிலிற் சேர்ந்தாரென்க. (எ௰)

மேனிலாவெறிக்குங்குருமணிகுயிற்றி விழுத்தகநிலா
நிலாதிட்டிப் [ள்
பானிலாவெறிக்கும்பளிக்குயர்கோயில் பற்பலசாளரவிழிக
வானிலாவெறிக்குமகவினைநோக்க மலர்ந்தபின்வம்பினென்
றழைப்பத் [க்கார்.
தூனிலாவெறிக்குமணிக்கதவகற்றிச் சுருதிவாய்திறந்திவர்பு

உரை. — ஒளிசெய்யும்பெருமணிகளைக்குயிற்றி யொழுங்குபடச் சித்திரங்களையெழுதிக் குளிர்ந்தசுடராவிடும் பளி

ங்கினாற்செய்தகோயில் விண்ணுலகிற்கேற்றசுடரையெறிக்குமு கத்தோடுவருகின்ற தேவகுழந்தையைநோக்கும்படி பலவி ழியாகப் பலசாளரங்களைத்திறந்து பின்னரவனை வாருங் களென்றழைக்கும்படி விளங்கியமணியாற்செய்த கதவினை நீக்கி வேதத்தின்வாயைத்திறந்ததுபோலநிற்க. வவருட்பு குந்தாரென்க. (௭௧)

## வேறு.

நோக்கிப்புகையும்வாமத் தெருட்சியுமருளினோக்கிற்
காக்கியவிருந்தின்விம்ம வணிமணிக்கோயிற்புக்கு
வீக்கியதுவங்கட்கொன்று மெய்யனைவினையின்றீமை
போக்கியபலியென்றாகப் போற்றிவைத்திருவர்நின்றார்.

உரை. — மரியுஞ்சூசையு மிருவரு நிறைந்ததூபமுதலிய புகைகளு மணிமுதலியுஞ் செய்தகார்த்தியொளிவுகளு மயங் கிக்கூடிக் கண்ணுக்கினியவிருந்தாகப்பொங்கி யழகியமணி க்கோயிலுட்புகுந்து தேவசுபாவமு மனுச்சுபாவமு மிர ண்டொன்றாகச்சேர்த்திய திருமகனை நம்முடையபாவவினை யின் தீமையைப்போக்கி நம்மையிரட்சிக்கும்படி யேற்ற பலியாகப் பாமநர்தன்முன்பாக நேர்ந்துவைத்துவணங்கி நின்றாரென்க. (௭௨)

வாய்மையோர்புகுங்கால்கோயில் வணக்குரிபணியில் வைகுந் [தோன்
தூய்மையோரெனவுட்கோட்டந் துறந்தனர்வையின்மூத்
மெய்மையோயர்ந்தவேதமேற்படர்கொழுகொம்பன்னான்
சீய்மையோனென்னும்வாய்ந்த சீர்கெழுமுனியும்வந்தான்.

உரை. — மாட்சிமையுடையவிவ ரங்கேபுகுந்தவளவிலே கோயிலருச்சனைக்குவேண்டியவேலைக் கங்கிருந்த தூய்மை யோராகிய மனக்கோட்டத்தைப்போக்கின முனிவர்சபைக் கெல்லா மூத்தோனாய்க் கருத்திற்குயர்ந்தவேதநூல் கொடி யாகமேற்படரும்படிவைத்த கொழுகொம்பினையொத்தவ னாய்ச் சீமையோனென்னு மாட்சிமைநிறைந்த முனிவனு மங்கேவந்தானென்க. (௭௩)

உணங்கியமரத்திற்கார்ந்த வுயிர்வருமாரியோன்று
மிணங்கியவிருளைச்சீக்கு மிரவியேபோன்றுநாதன்
பிணங்கியவினைகடீர்ப்பப் பிறந்திவண்மனுவாய்க்காண
வணங்கியமுனிவன்னாளும் வரந்தரவேண்டுவானே.

உரை.— சீமையோனாகியமுனிவன் காய்ந்துவாடினமரத்துக் குயிராகவருமழைபோலவு மூடினவிருளை நீக்கவருஞ் சூரியனைப்போலவு மவிழ்க்கப்படாதபடி நம்மோடேபின்னி நெருங்கினபாவவினைகளைத்தீர்க்கும்படி நாத னவதரித்து மனுவாயிங்கேபிறந்தவனைத் தான்கண்ணாற்காணும்படி வரந்தரவேணுமென்று நாடோறும் வணக்கத்தோடுமன்றாடி வேண்டுவானென்க. (௭௪)

வம்பலர்ச்சுனையினீருள் வலம்புரிபிறத்தல்போன்றுங்
கொம்பலர்த்தருவினுச்சி குவளையேபூத்தல்போன்று
மம்பலர்க்கன்னிவிள்ளா தளித்ததோர்மகவாய்நாதற் [னான்.
கம்பலர்க்கண்கள்பூப்பக் காண்பையென்றிறைவன்சொன்

உரை.—, கடலிலேவலம்புரிபிறப்பதியற்கை யவ்வியற்கை தவிர்ந்து கமழுமலரைப்பூத்த தடாகத்திடத்து வலம்புரிபிறந்ததுபோலவும், தடாகத்திடத்துக் குவளைமலர்வதியற்கையவ்வியற்கைதவிர்ந்து மரக்கொம்பினுச்சியிலே குவளைபூத்தது போலவும், புருடர்துணைகொண்டு கன்னியழிந்து மக்கள்பிறப்பதியற்கையாகையி லவ்வியற்கைதவிர்ந்து ஆண்டொழிவின்றி யற்புதமாகத்தாமரைமலரினொத்தகன்னிமலராமற் பிள்ளையாகப்பிறக்குநாதன், அத்தன்மையாற் பிறந்தநாதனை நீசாகுமுன்னே கொம்பிற்பூத்தபூப்போல வுன்கண்மலர்ந் துவப்பக்காண்பாயென்று, சுவாமியம்முனிவனுக்கு முன்னறிவித்திருந்தானென்க. (௭௫)

நம்பியன்னவாய்மை நல்லுயிராகநின்று
னம்பியமலரின்சாய லவதரித்துதித்தநாதன்
கொம்பியவினைகடீர்ப்பக் கோயில்வந்தடைந்தானென்னப்
பம்பியகாட்சிதோன்றிப் பறந்தெனவன்றுவந்தான்.

உரை.— ஆண்டவன் றிருவுளம்பற்றித் தப்பாதவிச்சொல்லைநம்பி யத்தைத்தனக்குயிராகக்கொண்டு நெடுநாள்சாகாதிருந்தமூப்பினையுடைய சிமையோனென்பவன் மதுவைப் பொழியு மலரின்சாயலாக வவதரித்து மனிதனாயநாத னம்மைக்கோபித் துறுத்தும்வினைகளைத் தீர்ப்ப விதோ கோயிலிலேவந்தானென் றோருயர்ந்தகாட்சியினாலறிந்து பறந்தாற்போலவிரைந் தன்று தானுங்கோயிலுக்குவந்தானென்க.

(௭௬)

விண்டனமலர்போல்விண்ட விருப்பினான்வெய்தென் றெய்திக்
கண்டனன்கனிந்தகண்ணாற் கறவைகாண்கன்றின்வெஃகி
யுண்டனவுருவிற்குன்று வுயர்குணத்திறைவன்றாளைக்
கொண்டனதலையிற்சூடிக் குணக்கடற்குளித்துத்தாழ்ந்தான்.

உரை.— அச்செய்தியினால் விரிந்தமலரைப்போல் மலர்ந்தவிருப்பத்தோடே சிமையோன்விரைந்துவந்து அவதரித்தநாதனைத் தன்கண்களிகூரக்கண்டான், கண்டவளவிலே கறவையைக்கண்டகன்றுபோல விரும்பி யோடியெடுத்த மனுக்கோலத்திற் குறைபடாதுயர்ந்த தேவசுபாவத்தின் மாட்சிமையறிந்து நாதனுடையபாதத்தைத் தன்றலைமேற்கொண்டணியாகச்சூடிக் குணக்கடலாகிய வத்தேவகுழந்தையின்மாட்சிமையாராய்த் துள்ளேமுழுகினாற்போல மகிழ்ந்துவணங்கினானென்க.

(௭௭)

தொழுதுதன்னுளத்தின்பாற்றுத் துணையடிமலரை யேற்றி
யழுதுதன்கண்ணீராட்டி யருட்கொழுந்துகிவினீவி
முழுதுதன்கண்கட்கையான் முகக்கவின்முகந்துண்டார்வத்
திழுதுதன்சுவையிற்காய்த்த விருங்கனிசுவைத்துவிள்ளான்.

உரை.— அங்ஙனந் தொழுதசிமையோன் றனுட்கொண்டவின்பத்திலாற்றாமற் பின்னையுமிருபாதத்தின்மலரை மீளவுமேற்றியழுது அழுதகண்ணீரா னனைப்பப் புனலாட்டியதனாகிய பூம்புடவையாற்றுடைத்துத் தடவித் தன்கண்ணு

கியகையா லவன்முகத்தினழகெல்லாமுகந் துய்க்கொள்ளவுண்டு தன்னன்பினினிமையாகிய தீஞ்சுவையோடு பழுத்ததோர் பேரின்பமாகியகனியையுண்டுண்டு நீங்கானென்க. (௭௮)

பாருடம்புயிராய்வந்த பரமனைக்கரத்திலேந்தி
யீருடம்புயிரொன்றாக வெழுந்தவன்புவப்பிற்பொங்கிச்
சேருடம்பிரண்டொன்றாகச் சேர்த்துத்தழுவியன்பின்
னேருடம்பொழிவீடுற்ற நிலைமையிற்பாடலுற்றான்.

உரை.— பூவுலகமாகியவுடம்பிற்கோருயிராக வவதரித்து வந்தநாதனைச் சீமையோன் கையிலேயேந்தி யிருவருடம்பிரண்டாயினு முயிரொன்றாம்படி தம்முளெழுந்தவன்பின்றன்மை மகிழ்ச்சியால்மிகுதியாகிச் சேர்ந்தவிரண்டுடம்பு மொன்றாம்படி யிறுகக் குழந்தையைமார்போடேசேர்த்தித் தழுவி மீளவுந் தன்னன்பின்றன்மைக்கு நேரே தன்னுடம்புமேறி வான்வீட்டைச்சேர்ந்தவனைப்போலப் பாடத்துடங்கினானென்க. (௭௯)

## வேறு.

பாற்கடலென்னுள்ளப் பதுமமலரும்ப
நூற்கடலேயீங்குதித்தாய் நும்மலர்க்கண்முத்தரும்ப
நும்மலர்க்கண்முத்தரும்ப நோய்செய்வினைசெய்தே
மெம்மலர்க்கண்முத்தரும்ப வின்றவினைதீர்த்தாய்.

உரை.—பாற்கடலிலேமலர்ந்ததாமரைபோல வென்னுள்ள மினிதாய்மலரும்படி வேதநூல்முதலிய நூலெல்லா மடங்கக்கொண்டகடலாகியநீ யுன்கண்மலர்முத்தாகிய கண்ணீரைப்பொழியத் துன்பமடைதற்குமனுவாய்த்தோன்றினாயே, நீ யக்கண்ணீரையழும்படி யுனக்குநோக நாமெல்லாரும்வினை செய்தோமின்றோவென்னி லின்பமிகுதியால் நாமுங்கண்ணீரைவிடும்படி நம்முடையவினையெல்லா நீயேயின்றுதீர்த்தாயென்றானென்க. (௮௰)

இச்செய்யுள்முதன்மூன்றும் வெண்பாவிற்கேற்றசெப்பலோசையால்வருவனவென்றறிக.

வினைதீர்ப்பவெய்தி வினைகொண்டாய்பாவப்
புனைதீர்ப்பவீந்துமனுப் பூட்சிச்சிறைகொண்டாய்
பூட்சிச்சிறைகொண்ட புல்லென் னுயிர்போயுன்
காட்சிச்சிறைகொண்டு கண்டேன்கதிநிலையே.

உரை.—என்வினையைத்தீர்க்கும்படிவந்து நீ துன்பங்களைக்கொண்டாயே, பாவமெனக்கிட்ட தளைகளையறுத் தென்னை மீட்கும்படி நீமனுவுடலைச்சிறையாகக்கொண்டாயே, நானித்தயையையாராய்ந் தடைந்தவின்பமிகுதியாலென்புல்லுயிருந் தன்னுடற்சிறையைவிட்டுன்னைக் கண்டகாட்சியேசிறகாகக்கொண்டுபோய்ப் பரமகதியினிலையைக்கண்ட தன்மைபோலவாயிற்றென்றானென்க. (௮௧)

கண்டேன்கதிநிலையே கண்டுயிரொன் பூண்பவினி
யுண்டேனுயிராயன் புன்னடியைச்சூடினே
னுன்னடியைச்சூடி யுனையணுகான் றன்வினையே
தன்னடியைச்சூழ்ந்துதைப்பச் சுட்டெரிவீழ்ந்தாழ்வானே.

உரை. — உன்னைக்கண்டு பரமகதியைக்கண்டதன்மை போலாகிக் கண்டபின்பு நானிவ்வுயிரையினியேன் வைத்துக் கொண்டிருப்பேன், உன்றிருப்பாதத்தைத் தலையணியாகச் சூடி யுன்னன்பினையுயிராகவுட்கொண்டேனே யித்தன்மைத் துன்றிருப்பாதத்தைச்சூடி யுன்னையணுகாதவன் றன்வினையே தன்னடியைவிடாதுகட்டிக்கொண்டு அவ்வினைதானே யவனையுதைத்துத்தள்ளுதலி னவன் சுடுமெரிநரகில்விழுந் தாங்கமிழ்ந் துவானேயென்றானென்க. (௮௨)

## வேறு.

ஆசையெழுமின்னவை யருந்தவனும்பாடி
யோசையெழும்வீணைகுழல் யாழொடிசைபாடப்
பூசையெழும்பூம்புகை பொலிந்தினிதுற
மாசையெழுமாலயமும் வானுலகுபோல்வாம்.

உரை. — ஆசையோ டிவற்றை யருந்தவனாகிய சீமையோன்பாடி வீணையுங் குழலும் யாழு மதற்கினியவிசைகள்

பாடாநிற்கப் பூஞ்சமுகத்திலெழுந்த பலபூம்புகைக்க ளினிதாய்த்திரண்டு மணஞ்செய்ய வுந்தப்பொற்கோயி லன்றவானுலகினோடொத்ததென்க. (அங)

கொங்கடரும்பூமழையும் பாமழையுங்கூர்ப்பச்
சங்கடரும்வாய்த்தரள வெண்குடைகடாங்கத்
திங்கடருந்திங்கதிரின் சேர்கவரிபொங்க
வங்கடரும்யாவரு மருச்சனையின்மிக்கார்.

உரை.— நிறையவாசனைகொப்புளிக்கும் பூமழையும் பாடினர் பாமழையு மிகுதியாய்ச்சிலர்பொழியவுஞ் சங்கின்வாய் திரளாய்ப்பிறந்தமுத்துக்களாற்செய்த வெண்குடைகளைச் சிலர்மேற்றாங்கியிருக்கவுஞ் சந்திரன்கதிர்களைப்போலச் சேர்ந்த பலவெண்சாமரை சிலர்வீசவு மங்கேதிரண்டிருந்த யாவரு மிகவு மருச்சனைசெய்தாரென்க. (அச)

ஒருவரடியேற்றிமல ரொள்ளொளியல்சூட
வொருவரகிலோடுமல ரூறுபுகைகாட்ட
வொருவர்புகழ்த்தொடை யுணர்ந்தவிசைபாட
வொருவர்வியப்போடுருக வாழுவரொருங்கே.

உரை.— சிலர்வணங்கியவடிமேலே பூமாலைகளைச்சூடவுஞ் சிலரகிற்புகையும் பூம்புகையுங்காட்டவுஞ் சிலர்பாவின்றொடையாற் றுதிகளையுணர்ந்த விசைகளைப்பாடவுஞ் சிலரதிசயத்தோடுருகாநிற்கவு மெல்லாருமொருப்பட்டுவாழ்ந்திருப்பரென்க. (அரு)

வான்றவழுமீன்கடிரள் பூத்ததெனமல்கிக்
கான்றவழுமாலையொடு கன்மணிகள்கண்பூத்
தூன்றவழும்யாக்கையுடை நாயகனைநோக்க
மீன்றவழும்வெண்மதியின் மெய்யனுருமிக்கான்.

உரை.— வானத்திலுலாவுகின்ற மீன்கள்பூத்ததுபோலநிறைந்தவாசனைவிடும்பூமாலைகளுங் கோயிலெங்கும்பதித்திருந்தபலமணிகளுங் கண்டிறந்து மனுவுடலையுடைத்துவந்த ந[illegible]

ளை நோக்காநிற்க வத்திவ்வியகுழந்தை மீன்களாலே சூழப்ப ட்ட சந்திரன்வடிவாகத் தோன்றினனென்க. (௮௬)

தும்மியபொறிச்சுடர் துதைந்தெரியுஞ்செந்தீ
விம்மியவிருட்புகை விளைத்தநரகெய்தாப்
பம்மியவினைப்பகை பரிந்துயிர்கள்காப்பப்
வெம்மியதுயர்க்கின்றவ பொன்றுவைகொலென்பார்:

உரை.— சூழநின்றாரவருட் சிலர்திசயித்துச்சொல்லுவ ராம்: என்னாண்டவனே! புறப்படவிட்டபொறிகள்நெருங்கு ம்படி கொழுந்துவிட்டெரியுஞ்செந்தீயோ டடர்ந்தெழுந் திருண்டபுகையைவிடுநரகத்திலே நாஞ்செல்லாதபடி நாஞ் செய்தபாவத்தாற்படர்ந்தவினைகளை நீயறுத்து நம்முயிர்களை யிரட்சிக்கும்படி மிக்கதுயரைக்கொண்டுநீசாகவந்தாயோ வென்பாரென்க. (௮௭)

தீய்வினைசெய்நாமகிழ வும்பர்தொழுசெல்வா
நீய்வினைசெய்மெய்க்கொடு நிலத்திலுலவாயோ
வீய்வினைசெய்மெய்யுளைய விண்ணிலெமையுய்க்குந்
தாய்வினைசெய்யுன்றயையை யாரறிவரென்பார்:

உரை.— தீவினையைச்செய்தநாமே மகிழும்படி வானவ ரால்வணங்கப்பட்டசெல்வனே! நீதுன்பத்துக்கேதுவாகிய வுடலைக்கொண் டிந்நிலத்திலேசாவாயோ? சாகமாட்டாதவ[illegible] சாதற்கேற்ப வெடுத்ததிருமேனி யுளைந்துமெலிய நம்மை வானத்தின்மேற்சேர்க்கும்படி யன்புடைய தாயின்றன்மை யாகிய வுன்றயையை யாரிங்கேயறிவாரென்பார் சிலரென்க. (௮௮)

தீயவமைதீயரெரி சென்றெறிவதன்றாற்
காயவமையோர்குறைநின் கண்ணமைவதுண்டோ
தூயவமைவீட்டுவகை தோய்ந்தனுவாழ்த
லாயவமைதிக்குநயன் யாதுநினக்கென்பார்.

உரை.— தீயவைசெய்தபாவிகள் தீயெரிநரகத்தில் விழுந் தாலுங் காய்ந்துநோம்படி யுனக்கதனாற் குறையொன்றன்

டோ தூயவீட்டின் பேரின்பக்கடலைமூழ்கிய முனிதரெல்லா
ரும் வாழ்ந்தபருவத்துக்கு மூனக்குவரும்பயனேதென்பார்
சிலரென்க. (௮௯)

வெவ்வினையறுத்துயிர் விளைத்தகனியாக
வுய்வ்வினைபெமக்கருள வுற்றனைபிரானை
யெவ்வினையமற்றமுறை யீன்றவருடாயே
மைவ்வினையைமாங்கழிய வாழிநனியென்பார்.

உரை.— தீவினையையறுத் துயிரைக்கொடுக்குங் கனியின்
றன்மைத்தாகி நமக்குய்யும்வழியைத்தர வெழுந்தருளினநா
தனைப் புறத்துமுதவுதவியொன்றின்றிக் கன்னியாய்ப்பெற்
றவருளாவிறைந்ததாயே! நம்முடையபாவவினைகளை நாங்க
ழியும்படி மிகவும்வாழியென்பாரென்க. (௯௰)

ஆரணமெழுந்துபடர் கொம்பனையமார்ப
காரணமேனோர்மைந்தனை வளர்த்திடுகைத்தாதைப்
பூரணவருத்தமார் நிற்புகழவின்ப
வாரணமமிழ்ந்தீநனி வாழிநெடிதென்பார்.

உரை. — வேதநூல் கொழுந்தாக மேற்படர்தற் கமைந்த
கொழுகொம்பினையொத்த மார்பினையுடையசூசையே யெல்
லாத்திற்குங்காரணமாகியகடவுளை யொருமகனாகவளர்க்கும்
படி கைத்தாதையென்னுநீ பெற்றபூரணவரத்தினாலே வா
னவருன்னைப்புகழாநிற்க வின்பக்கடலிலேயமிழ்ந்தி நெடு
நாளுமிகுதியே வாழியென்பாரென்க. (௯௧)

## வேறு.

ஏமஞ்சாவின்பத்தங்க ளின்னவையாகிமூத்தோன்
சேமஞ்சால்வரங்கண்மிக்குத் தெளிந்தமுப்பொழுதுந்தாவி
வாமஞ்சால்காட்டிவாய்ந்த வரும்பொருளுணர்த்தித்தாயுஞ்
சோமஞ்சால்கொடிவல்லோனுந் துயருறச்சொற்றினனே.

உரை. — மிக்குள்ளங்களித்தவின்பத்தோடிவையெல்லாம
ங்கேயாயபின்பு மூத்தோனாகிய சீமையோன் மிக்கவனேர்

செய்ததவத்தினு லடைந்தவரங்களின்மிகுதியால் நிக ழிறப்பெதிரென்னு முக்காலங்களைக்கடந்து தெளிந்தவொளியின்மிக்ககாட்சியினால்.வரும்பொருளையறிந்து சொல்லிக்காட்டிக் கன்னித்தாயாகியமரியு மதுவைப்பொழிந்த பூங்கொடியையொத்தகுசையுந் துயரையடைந்துவருந்தும்படிசொன்னானென்க. (௯௨)

திருக்கிளரின்றோன்றல் சிலர்க்குயிர்சிலர்க்குக்கேடா
யச்
செருக்கினர்பகைவரேவுஞ் சினக்கணைக்குறியென்றுயா [து
னுருக்கினர்நெஞ்சம்போழ்தற் கூருகண்வாளுருவப்பாய்ந்
தருக்கினர்தருமதாயே தளர்ந்திடர்குளிப்பாயென்றான்.

உரை.— இத்திருக்குமாரன்றானே பூவுலகத்திற்சிலர்க்குயிராக நிற்பான், சிலர்க்குக்கேடாகநிற்பான், இவனைப்பலரும்பகைத்துக் கணைகளையெய்தற்குவைத்தகுறிபோல்வைத்து மிகவுமிவனைவருத்துவ ரப்பொழுது தருமதாயே. நீயதைக்கண்டுன்னெஞ்சத்தைப்பிளந்த துன்பவா ளுருவப்பாய்தலின் றுன்பசாகரத்தைக்குளித்து வருந்துவாயென்றானென்க. (௯௩)

என்றனகடுஞ்சொல்வாளா விருசெவிமுதலீர்த்தங்கண்
ணின்றனவிருவர்நோக நிலத்திலெம்வினைகடீர்ப்பச்
சென்றனநாதன்றன்றாய் செம்புனற்சிந்திமாள்வான்
பின்றனவுளத்திலோர்ந்தார் பீடைநீண்புணரிதாழ்ந்தே.

உரை.— மரியுஞ்சூசையுமென்றிருவ ரங்கிருந்து சீமையோன்சொன்னசொல்லாகிய கொடியவாளாலே தங்களிரு செவிமுதனெஞ்சுமுயிருமறுக்கப்பட்டதென்னும்படிநோகாநிற்க வினிநம்முடையவினைகளையறுக்கும்படி யவதரித்துப் பூவுலகி லவர்க்கு மகனாய்வந்தநாதன் றன்றிவ்வியவிரத்தத்தைச்சிந்திச் சாகவந்தானென்று முனிவன்சொன்னவாசகத்தாற்கண்டறிந்து துன்பக்கடலிலேயமிழ்ந்தினரென்க. (௯௪)

நாணிலங்காட்சிமூத்தோ னுதவியாங்குரைத்தசொல்லை
தெனிலதுகையினின்ற திருதரதேவன்கேட்டுக் [த்

களெல்லாருமன் பேர்பேசாரங்களைக்கூறவும் வானவரிரூப
க்கத்துச்சூழ்வரவு மரியபெருமையுடைய மரியத்குசைய ம
றாகிய பூவரும்பினைநேர்ந்த திருக்குமரனை யேந்திக்கொ
ண்டு கோயிலைநீங்கிப்போனானென்க. (௩)

மகனேர்ந்தபடலமுற்றும்.

ஆகப்படலம் - ௩௨ - இ விருத்தம்

௲௨௨௫.



## [illegible]த்துப்பதவுரைவரலாகும்

# வேறுவிதமாவது.

வடநூலோர்கள் - வடநூலோர், நவின்று (பெயர்) சொல்லி, இவன்-இவனை, குசை-குசை, [illegible]ன்பது-என்பது, அளஞ்செய்யும்-நிறைந்த, தமிழ்ச்சொல்லாலும்...

பூத்து-அடைந்த, நீர்மையோடு-குணத்தோடு...

எந்தை-ஆண்டவன், அண்டமீது-மோட்சத்தில், அருள்-தந்தருளும், காட்சி - காட்சியை, பூத்து - அடைந்து...

வருந்திய நசையால்-ஆசையோடேவருந்தி, நானும்...

பைம்பூ-பசியமலரை...

வெள்ளுலாம-வெண்மையுடைய...

தெள்ளுலாம்-தெளிவுடைத்தான...

வள்ளுலாம்-பலமுள்ள...

மழையில்-மழைபோல், தாவிய-ஒழுகிய...

இழையில்-ஆபரணத்திலும், தாவு-மேற்பட்ட, அழகு-அழகுடைய, இளம்...

நிழல்-நிழலானது, சூழ்கும்-அழுந்திநிறைந்திருக்கும், பூம்பொழில்கண்-பூஞ்சோலைகளிடத்து, நிறம் - கண்ணுக்குநிறமும், மது-வாய்க்[illegible]வும், கான்-மூக்குக்கு வாசமும், இன்பம்-[illegible]க்கின்பமும், அலால்-அல்லாமல், குழல்-ஊதுகுழல்வீணைமுதலிய வாத்தியத்தின்னிசை, சூழ்கும்-தாழ, இசல்-(பறவைகளின்) ஓசை, அவைப்ப-காதுக்குக்கிளம்பவே...

[illegible]கரது-குறை, என-என்று, கோள்-விண்மீன்கள், புறத்து-புறத்தில், இமைப்ப-விளங்க, வாடும்...

இன்-இன்பமுள்ள, புனல்-ஆறு, பாய...

[illegible]ம்-இனிப்பான, பாவல்-நதிகள், செறி-மிகுந்த, தரளம்-முத்துக்களை, சிந்திய-சிந்தின...

[illegible]ரவையும்-செல்வங்களெல்லாம், செறியார்-நிறைந்திருக்கும், பொழில்-அந்நாடு, சிந்தியதே-(அதுகளைப்பொழிந்து) சிந்தினது.

அருந்-தயை, அகன்று-ஒழிந்து, அகைப்பாரும்-முறிப்பாரும், இலாமையால்-இல்லாமையால், அருள்-(கை) கொடுக்கும், அகன்-மனம்(உடைய), தகைப்பார்-பெருமையோர், அலது...

| படலம். | விருத்தம். | பதவுரைவரி. |  |
|---|---|---|---|
| உ | ௯ | க | தேன்-தேனை, நக-மழிக்கும், இனிய... |
| ״ | ״ | ௫. | இருளை-இருளை, சீய்க்கி-நீக்கி, வெயில்-ஒளியின், குழாம்-திரளை, உயிர்த்த-ஈசினை, செத்தீர்... |
| ״ | ״ | எ | வானகம்-வானத்தை, நக-மழிக்க, ஒன்... |
| ״ | ௨௰ | க | வயிர்-ஊதுகொம்பின், ஒலி-ஒலியும், வல்-வன்மையுடைய, முரசொடு... |
| ௫ | ௨௩ | உ | உளியமும்-கரடிகளும், பாய்ந்து-பாய்ந்து, மறம்-கடுங்கோபமாய், கடுத்து-சினந்து, அதிர்-கர்ச்சிக்கும், வல்லியத்து-புலிகளின், இனங்களும்-கூட்டங்களும், எதிர்ந்து-எதிர்த்து, கறங்கு-சுற்றிலும், அடுத்தகால்-நெருங்கினபொழுது, கழுத்தினை... |
| ௬ | உ௮ | ௯ | இறையாக-இறையாக, ஒல்-இந்நேரமே, செய்வேன்... (ஒல்லையென்பது-ஒல்-எனக்கடைக்குறையாயிற்று.) |
| ״ | உ௯ | ௪ | சிலை-கல, நுதல-(இராக்கதனது) கண்ணுதலை, பாய்ந்தும்-பாய்வும்... |
| ௭ | உ௰ | க | கான்-கானகம், இறைஞ்சிய-வணங்கிய, நல்... |
| ״ | ״ | ௪ | ஊன்-தசை, இறைஞ்சிய-பணிந்த, வேலினை... |

# விவரங்கள்.

## விருத்தத்துக்கடுத்தவிவரம்.

சத்தியவேதாகமங்களைப் பெயர்த்தெழுதினவர்களின்பிசகி னாலேயாக்குஞ் சிலவிடங்களிலே எபிறையபாஷைப்பிரதிகளுக்கும் கிறேக்குபாஷைப்பிரதிகளுக்கும் வருஷக்கணக்கில் வித்தியாசமுண்டு. அவைகளின் பலவிடத்துள்ள வருஷக்கணக்குகளைத்தொகுத்து உலகமுண்டானநாள்முதற் பரமகர்த்தனவதரிக்குமட்டுஞ் சிலசாஸ்திரிகள் கிறேக்குபிரதிகளைப்பற்றி-ருஅ௲கூ௱- வருஷநடந்ததெனவென்றும், வேறதேகர் எபிறையபிரதிகளைப்பற்றி-சதச - வருஷநடந்ததெனவென்றுமெண்ணுகிறதுண்டு. திருச்சபையிவ்விஷயத்திலேதீர்மானஞ்செய்யாததினால் அவரவ ரிதிலே தமக்கிஷ்டமானதை

விவரங்கள்.

[illegible] வைத்துக்கொண்டனுசரிக்கலாம். இவ்விருத்தத்தில் வீ[illegible]மாமு
னிவர் [illegible] பிரதிக்கணக்கைத்தந்தார், ௩ச-ம். படலத்தி
[illegible] விருத்தத்திலோவென்றால் எபின்றைய பிரதிக்கணக்கை
த்தந்[illegible]சொல்தநிக.

---

[illegible] பக்கம் [illegible]ம். படலத்து-௬௭ம். வி[illegible]த்தைத் வீர
மாமுனிவர் [illegible] கையெழுத்துப்பிரதியிலே[illegible] உரைமா
த்[illegible] ஆகலாலதற்குரையைப்பொருத்தி [illegible]
லத்தி [illegible] ப்பித்தோம். [illegible] விருத்தமோ [illegible] ல் ம
ற்றைச்சில கையெழுத்துப்பிரதிகளிவிருக்கிறபடியால் அதி
[illegible] னையிவ்விடத்திற் றருகின்றோம்.

பகரப்பாறு பர் பகல்செய்தேரொழி
மகரத்தேகையின் மகர்யாழ்மொழிப்
புகரந்றாயினன் பொழிந்தபாலக
னிகரீற்றுதை னிகரத்தேரின் திறுன்.

உரை. — பகலைச்செய்யுந் தேரிலெழுந்தசூரி[illegible] மகரரா
சியிணடக்கும்போது மகரயாழி[illegible] வினி[illegible]மொழியைக்
கொண்ட குறைவில்லாதகன்னித்[illegible]தை நீதா[illegible]
[illegible]
றதெனப்ப[illegible]



922a